சதுரகராதி ஆராய்ச்சி

கு. இன்னாசி

T
5990

5990
02D06

பதிப்புத்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

சதுரகராதி ஆராய்ச்சி

சூ. இன்னாசி

பதிப்புத் துறை

மதுரை காமராசர் பல்கலைக் கழகம்

© பதிப்புத் துறை,
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்,
மதுரை - 625 021.

பதிப்பு விவரங்கள் :

(Bibliographical Data)

1	நூலின் பெயர் (Title of the Book)	:	சதுரகராதி ஆராய்ச்சி (Caturakaraati Aaraaicci)
2	நூலாசிரியர் (Author)	:	அறிஞர் சூ. இன்னாசி, முதுகலைப் பேராசிரியர், தூயசவேரியர் கல்லூரி, பாளையங்கோட்டை. **Dr. S. INNASI**, Pos graduate Professor, St. Xavier's College, PALAYAMKOTTAI.
3	பதிப்பு எண் (Publication No)	:	55
4	நூலின் அளவு (Size of the Book)	:	1/8 டெமி (Demy 1/8)
5	பக்கங்கள் : 346+8 (No. of pages)		
6	பொருள் (Subject)	:	பெஸ்கி அடிகளாரின் சதுரகராதி பற்றிய ஆய்வு Studies in Fr. Beschi's Caturakaraati)
7	விலை (Price)	:	ரூ **20/-**

நன்றியுரை

'சதுரகராதி ஆராய்ச்சி' என்னும் பெயரிய இந்நூல், அறிஞர் பட்டத்திற்காக யான் ஆய்வு செய்து 1976, அக்டோபரில் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்திற்கு வழங்கியதாகும். ஆய்வு செய்ய அனுமதியளித்த பல்கலைக் கழகமே தற்பொழுது வெளியிடவும் முன்வந்துள்ளது. இவ்வகையில் ஊக்கியருளிய மதுரை காமராசர் பல்கலைக் கழகத்திற்கும் தொடர்புடைய துறையினருக்கும் கடப்பாடுடையேன்.

ஆய்வினை மதிப்பிட்ட அறிஞர்களின் அறவுரைகளையும், கருத்துக்களையும், இடைவெளிக் காலத்தையும் மனத்துட் கொண்டு சிற்சில திருத்தங்களுடன் வெளி வருகிறது. அறிஞர் தம் கருத்துரைகட்கு மிக்க நன்றியன்.

என் ஆய்வு, அறிஞர் இராசமாணிக்கம் அடிகளார் மேற்பார்வையில் தொடங்கப்பெற்று அறிஞர் ஞானப்பிரகாசம் அடிகளார் மேற்பார்வையில் தொடரப்பெற்றுப் பின் அறிஞர் காமாட்சிநாதன் அவர்கள் மேற்பார்வையில் நிறைவுற்றது. இவ்வாய்வில் ஈடுபட ஊக்கம் தந்தவர்கள் எம் கல்லூரி மேலாளர்கள்; அவர்களுள் குறிப்பிடத் தக்கவர் வர்க்கி அடிகளார். பிறமொழி நூல்களை மொழிபெயர்த்து அருளாளர் சிலர் உதவினர். இவ்வகையாகப் பன்னிலையில் வழிகாட்டியருளிய மேற்பார்வையாளர்கட்கும் பிறருக்கும் என்றும் நன்றியன்.

அன்பன்,

சூ. இன்னாசி

இதில் அடங்கியவை

நன்றியுரை ... 3

இதில் அடங்கியவை ... 5
Summary of Fr. Beschi's Caturakaraati ... 7

முன்னுரை ... ௧

1 பெஸ்கி அடிகளார் வாழ்வு ... ௮
2 அகராதியியல் வளர்ச்சியில் சதுரகராதி ... ௩௪
3 சதுரகராதியின் அமைப்பு ... ௬௩
4 பெயரகராதி ... ௮௯
5 பொருளகராதி ... ௧௧௫
6 தொகையகராதி ... ௧௩௩
7 தொடையகராதி ... ௧௬௮
8 சதுரகராதியின் சிறப்பியல்புகள் ... ௧௯௨
9 அடிகளார் அகராதிகளுள் சதுரகராதி ... ௨௩௭
10 சதுரகராதியின் செல்வாக்கு ... ௨௬௩

முடிவுரை ... ௨௮௪

தமிழ்-பிறமொழிச் சொற்பட்டியல் ... ௨௮௬
கருவி நூற்பட்டியல் ... ௨௯௧
பின்னிணைப்பு ... ௩௦௧
சிறப்புப் பெயர் அகர நிரல் ... ௩௩௭

Summary of Fr. Beschi's Caturakaraati

Dictionary is essential for any one to have a thorough knowledge of a language. Fr. Beschi's Tamil to Tamil Dictionary, Caturakaraati comes first in the history of systematized Tamil Lexicography. It is the root and base of all kinds of dictionaries compiled subsequently in Tamil. A detailed study of the first such dictionary in ten chapters forms this Ph. D. Thesis.

The life of Fr. Beschi, the author of Caturakaraati is dealt with in the first chapter. The popular name Viiramaamunivar traditionally claimed to be given by the then Tamil Cankam is questioned. Similarly the popular misconception about Fr. Beschi's contact with Cupratiipa Kaviraayar is also unequivocally disproved. The other works of Fr. Beschi are also discussed as to whether they are written by him or not.

The place of Caturakaraati in the development of Tamil Lexicography forms the second chapter. Since the development of Tamil Lexicography is based upon the traditions of both the western languages and Tamil, they are dealt with stage by stage. The development of Tamil Lexicography is divided into five stages. The western, especially English development in this field is compared with all these stages and proved that Tamil language reached the final stage even before the development of English.

The construction and formation of Caturakaraati are explained in the third chapter. Its various editions are compared with one another and the commissions and omissions are pointed out. Moreover it is confirmed that the first printed edition of 1824 would have been more or less his original. Also the Preface of Caturakaraati has been translated from Latin original and given for the first time. The aims and values, the reasons for the fourfold divisions and the problems in compilation of Caturakaraati found in the preface are shown.

The first part of the fourfold Caturakaraati named 'Peyarakaraati' is discussed in detail in the fourth chapter. The evolution of Peyarakarati commencing from the chapter 'Uriyiyal' of Tolkaappiyam to Catur akaraati through nikantus is meticulously analysed.

The second part 'Porulakaraati' and the third part 'Tokaiyakaraati' and their evolution are shown in the fifth and the sixth chapters respectively. The procedures adopted to give the meanings and special features are explained in detail in every part.

The seventh chapter contains the fourth part 'Totaiyakaraati'. The origin of 'totai' words from the ancient classics is pointed out and their place in a lexicography due to Fr. Beschi is shown separately.

In the eighth chapter "Caturakaraatiyin Cirappiyalpukal", the special features are discussed in length in the three angles i. e. from the point of view of grammar, literature and linguistics. The point to be noted here is that Fr. Beschi would have been the fore-runner of Tamil linguistics.

The number of dictionaries assigned to Fr. Beschi is analysed in the ninth chapter and contended at the end that he is the author only of the three dictionaries i. e. Caturakaraati, Tamil - Latin Dictionary, Portuguese - Latin - Tamil Dictionary. A comparative study of the three also finds place in this chapter.

The last chapter depicts the impact and influence of Caturakaraati on all later nikantus, dictionaries and even Tamil Encvclopaedia. Dictionaries compiled after Caturakaraati are mentioned and shown how much they are indebted to it for their growth.

Though some passages of this work seem to be the explanations of words, they have a new approach. Diagrams and graphs are frequently used to give a clear idea for the readers. At the end some of the new findings are pointed out. Statistical details are appended to in the form of statements.

On the whole, any one who goes through this work will be fully convinced that Caturakaraati is the First Tamil Dictionary even as Johnson's Dictionary is the fore - runner in the filed of English Lexicography.

சதுரகராதி ஆராய்ச்சி

முன்னுரை

ஓரகராதியோ, இலக்கணமோ இல்லாமல் எம்மொழியினையும் முழுமையாகக் கற்றுவிட இயலாது[1]. பெஸ்கி அடிகள் நம்பகரமான அகராதி ஒன்றின் தேவையை உணர்ந்து சதுரகராதியைப் படைத்தார்[2]. அயல் நாட்டாருள் முதனிலை பெறத்தக்க தமிழறிஞரும், கவிஞரும், உரை நடையாளருமாகிய இத்தாலி நாட்டுப் பெஸ்கி அடிகள் தொகுத்த சதுரகராதி ஐரோப்பியர்தம் நவீன முறைப்படி அமைந்த முதல் தமிழ் அகராதியாயிற்று.[3] சதுரகராதியின் ஓலைச்சுவடிகள் எங்கணும் பரவலாகக் காணப் பட்டமை அதன் செல்வாக்கைக் காட்டும்[4]. சென்ற நூற்றாண்டில் கல்வித்துறை ஈடுபாடு கொண்டோர் பல பதிப்புக்களில் அதனை வெளியிட்டனர். இந்நூற்றாண்டில் எழுந்த பேரகராதிகட்கெல்லாம் அது மூலமாயிற்று. எனினும் அந்நூல் பற்றிய விளக்கமான ஆய்வினை இதுவரை எவரும் மேற்கொண்டதாகத் தெரிந்திலது. எனவே, அவ்வகராதியியல்பினை விரிவாக வகைப்படுத்திக் காட்டுவதே ஆய்வின் நோக்கமாகியது.

சதுரகராதி பற்றிய விரிந்த ஆய்வு இதற்குமுன் செய்யப்படவில்லையெனினும், அதனை ஆக்கிய பெஸ்கி அடிகள் வாழ்வு பற்றியும் அவர்தம் படைப்புக்கள் பற்றியும் பொதுவாக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. பெஸ்கி அடிகளது 'பெஸ்கி அடிகள் வாழ்வும் அவர்தம் படைப்புக்களும்'[5] என்னும் நூல் பெஸ்கி அடிகள் வாழ்வு பற்றிக்கூறும் விரிந்த முதல் ஆராய்ச்சி நூலாகும். அதனுள் சதுரகராதி பற்றி ஆசிரியர் அறிந்திருக்கும் பதிப்புக்கள் மட்டுமே சுட்டப்பட்டிருக்கின்றன. 'தமிழ் மொழிக்குப் பெஸ்கி அடிகளார் பங்கு'[6] என்னும் தலைப்பில் டாக்டர் லி. மி. ஞானப் பிரகாசம் அடிகள் ஆய்வு செய்துள்ளார். பெஸ்கி அடிகள் படைப்பனைத்தும் அவர்தம் ஆய்வுப் பொருளாதலின், சதுரகராதி பற்றி விளக்கிக் கூறமுற்பட்டிலர். சதுரகராதியின் முன்னுரைக் குறிப்புக்கள் சிலவற்றைத் தந்து நிகண்டுகளிலும் மேம்பட்டது சதுரகராதி என

மட்டும் காட்ட முற்படுகிறார். 'தமிழ் மொழிக்கு ஐரோப்பிய அறிஞர்களின் பங்கு'[7] என்னுந் தலைப்பில் டாக்டர் கா. மீனாட்சி சுந்தரத்தின் ஆய்வு நூல் வெளிவந்துள்ளது. ஐரோப்பிய அறிஞர்கள் அனைவர்தம் வாழ்வும் ஆக்கமும் அதனுள் இடம் பெறுதலின், பெஸ்கி அடிகள்தம் படைப்புக்கள் பற்றி விரித்துக்கூற வாய்ப்பில்லை. எனவே, முன்னுரைக் குறிப்புக்கள் சில. முதற்பதிப்பின் அமைப்பு முறை சிலசொற்களைக் கொண்டு சூடாமணி நிகண்டுகளுடன் ஒப்பீடு போன்ற செய்திகளே சுருங்கிய அளவில் இடம் பெறுகின்றன.

சதுரகராதிக்குமுன் தோன்றிய அகராதிக் கூறு கொண்ட நிகண்டுகள், அகராதிக்கலை வளர்ச்சி பற்றிய கட்டுரைகள். பதிப்புரைக் குறிப்புக்கள் பேராசிரியர் வையாபுரி பிள்ளையால் எழுதப்பட்டுள்ளன.[8] அவற்றின் அடிப்படையில், சுந்தரசண்முகம் தமிழ் அகராதிக்கலை 'என்னும் நூல் எழுதியுள்ளார். அவற்றுள்' நிகண்டுகளை மூலமாகக் கொண்டு மேனாட்டு முறையில் சதுரகராதி உருவான வகை காட்டப்படவில்லை. சதுரகராதியின் உள்ளமைப்புப் பிரிவுகளையோ, பொருட் புலப்பாட்டுக் கூறுகளையோ, சிறப்புத் தன்மைகளையோ இதுகாறும் எவரும் விளக்கிலர். எனவே தொல்காப்பிய உரியியல் தொடங்கி நிகண்டுகள் வழிக் கொண்டு சதுரகராதியின் அமைப்பு எவ்வாறு உருவாயிற்று, எவ்வியல்புகள் மறைந்து கிடக்கின்றன என்பனவற்றைப் புலப்படுத்த வேண்டும் என்பது ஆய்வின் குறிக்கோளாயிற்று. தற்காலத்தில் மொழியியலின் ஒரு பிரிவாக அகராதியியல் கருதப்படும். நிலைக்கு ஏற்பட்டுவிட்டதெனினும், இவ்வாய்வில். அது கருத்திற் கொள்ளப்படவில்லை.

ஆய்வின் அடிப்படையாகச் சதுரகராதியின் பதிப்புக்கள் அனைத்தையும் பார்வையிடும் முயற்சி மேற்கொள்ளப் பெற்றது. ஞானப்பிரகாசம் அடிகள் தந்துதவிய முதற்பதிப்பு, மூலமாய் அமைந்தது. திருநெல்வேலிச் சிவஞான முனிவர் நூல் நிலையம், பாண்டிச்சேரி மிஷன் அச்சகம், சென்னை மறைமலையடிகள் நூல் நிலையம், ஷெண்பகனூர் பழஞ்சுவடிக் காப்பகம் ஆகிய இடங்களில்பிற பதிப்புக்கள் கிடைத்தன. அடிகளாரது பிற அகராதிகள் அவற்றின் கையெழுத்துப்படிகள் ஆகியவற்றைக் காணவும், ஒப்பிட்டு நோக்கவும் வாய்ப்புக் கிட்டியது. அடிகளது கொடுந்தமிழ் இலக்கணம்போன்ற பிற நூல்களின் பல பதிப்புக்களை ஒப்பு நோக்கியதால் தெளிவேற்பட்டது. இண்டிகா போன்ற ஆய்வு நிறுவன வெளியீடுகள், தினமணிச்சுடர் போன்றவற்றில் வெளியான கட்டுரைகள், சின்னக் குறிப்பிடம் போன்ற சிறு கையேடுகள்

ஆகியவற்றிற்கூட ஆய்வுப் பொருள் பற்றிய குறிப்புகட்காகக் கவனம் செலுத்தப்பட்டது. பார்வையிட்ட நூல்களில் அமைந்த லத்தீன், போர்த்கீஸ், பிரெஞ்ச் பகுதிகளின் பொருளுணர ஷெண்பகனூர் பூஜோ அடிகள், பாளையங்காட்டை அடைக்கலம் அடிகள், திருச்சி ஹியாசிந்த் சகோதரி போன்றோர் உதவியருளினர். முதற்பதிப்பின் சில பகுதிகளைப் புகைப்படம் எடுக்கப் பேராசிரியர் ஜே. ஏக்ந் ஆராய்ச்சித் துணைபுரிந்தார்.

சதுரகராதிக்கு முன்னூல்களாகத் திவாகரம், பிங்கலம், சூடாமணி ஆகிய மூன்று நிகண்டுகளை அறிஞர்கள் சுட்டுவதால்[9] அவை மூன்று மட்டுமே இவ்வாய்விற்குரிய அடிப்படை நிகண்டுகளாய் அமைந்தன. எனினும், பிற நிகண்டுகளும் ஆங்காங்கே இணைத்துக் காணத் துணையாயின. அவற்றுள் திவாகரம், சூடாமணி போன்றவற்றிற்கு ஒன்றுக்கு மேற்பட்ட பதிப்புக்கள் கூர்ந்து கவனம் செலுத்தப்படலாயின. சூடாமணியின் பதினோராம் தொகுதி மட்டும் தனித்து வெளியான பல பதிப்புக்கள் பார்வையிடப்பட்டன.

ஆய்வுத் தொடர்பாகச் சென்னை, பாண்டிச்சேரி, ஷெண்பகனூர் ஆகிய இடங்கட்குப் பலமுறை செல்லும்படி ஆயிற்று. அடிகள் வாழ்ந்த இடங்களான ஊர், திருக்காவலூர் போன்ற இடங்கட்குச் சென்று செவிவழிச் செய்திகள் தொகுக்கப் பெற்றன. அவை ஆய்வில் இடம்பெற வில்லையெனினும், ஆய்வு முடிவுகட்குத் துணையாயின. ஆய்வுக்குத்துணை நல்கும் வகையில் சில கட்டுரைகள் கருத்தரங்குகளில் படிக்கப்பெற்றன.

ஆய்வுப் பொருள் பத்து இயல்களாகப் பகுத்துக் கொள்ளப் பெற்றது; பெஸ்கி அடிகள் வாழ்வுபற்றியதே முதல் இயலாய் அமைந்தது; அடிகளின் வாழ்க்கைக்குறிப்பு முதலில் இடம் பெறுகிறது. தற்காலத்தில் அனைவரும் அறிந்துள்ள வீரமா முனிவர் என்னும் சிறப்புப்பெயரினை விடுத்துப் பெஸ்கி என்னும் இயற்பெயர் சுட்டுதல் சாலநன்று. இவை பற்றிய கருத்துக்கள் 'வீரமாமுனிவரும் தமிழ்ச் சங்கமும்' என்னும் பகுதியில் இடம் பெறுகின்றன. வீரமாமுனிவர் என்னும் பட்டம் தமிழ்ச் சங்கத்தால் வழங்கப்பட்டது. அன்று என அதில் காட்டப்படுகிறது. 'அடிகள் படைப்பிற்கெல்லாம் காரணர் சுப்பிரதீபக்கவிராயரே' என்பது போன்ற செவிவழிச் செய்திகளைத் தெரிவிக்க, 'அடிகளும் சுப்பிரதீபக் கவிராயரும்' என்னும் பகுதி இடம் பெறுகிறது. அதில் சுப்பிரதீபக் கவிராயர் அடிகளின் ஆசிரியரல்லர் என நிறுவப்படுகிறது. அடுத்து அடிகளார்

படைப்புக்கள் அறுதியிடப் பெறுகின்றன. தொண்டுகளும் குறித்துக்காட்டப் படுகின்றன.

மேலை நாட்டு முறையும், தமிழ் நாட்டு மரபும் இரண்டறக் கலந்த சதுரகராதிப் படைப்பிற்கு அவ்விரு நாட்டு அகராதியியல் வளர்ச்சியும் அறியப்படவேண்டும் என்னும் கருத்தில். 'அகராதியியல் வளர்ச்சியில் சதுரகராதி' என்னும் இரண்டாம் இயல் இடம் பெறுகிறது. தமிழ் நாட்டு அகராதியியல் வளர்ச்சியினை ஐந்து நிலைகளாகப் பகுத்துக்கொண்டு, அவற்றுக்கிணையான மேனாட்டு வளர்ச்சி நிலைகளை ஒப்புநோக்கி, ஐந்தாம் நிலையில் தமிழ் நாட்டு வளர்ச்சி முந்திக் கொண்டது எனக் காட்டப்படுகிறது. மேலும் தமிழ் நாட்டு அகர நிரன்முறை தொல்காப்பியத்தினின்று எவ்வாறு பெறப்படுகிறது, அஃது எவ்வெவ்வாறு படிப்படியாக அகராதியியலில் இடம் பெற்றது எனச் சுட்டப்படுகிறது. அகராதியை அடிகள் படைப்பதற்குத் தூண்டு கோல்களாக எவையெவை யெல்லாம் அமைந்தன எனக் குறிக்கப் படுகின்றன.

மூன்றாம் இயலாகிய 'சதுரகராதியின் அமைப்பு, என்பதில் அடிகள் எவ்வகையாக அகராதியைப் பகுத்திருக்கிறார் எனக் காட்டிப் பல்வேறு பதிப்புக்கள் ஒப்பிட்டு ஆராயப்படுகின்றன. பதிப்புக்கள் பற்றிய குறிப்புக்களில் எண்ணிக்கை வேறுபடுவதால், அவற்றுள் உண்மைப் பதிப்புக்கள் வரையறுக்கப் படுகின்றன. அவற்றுள், அடிகளின் மூலத்திற்கு ஒத்ததாக எப்பதிப்பைக் கொள்ளலாம் எனக்காட்டப்படுகிறது. அடிகள் சதுரகராதிக்கு எழுதிய முன்னுரை முழுவதும், முதன்முறையாக லத்தீன் மொழியினின்றும் மொழி பெயர்த்துக் காட்டப்பட்டு அதனுற் கொள்ளப்பெறும் அடிகளின் எண்ணங்கள், நோக்கங்கள் குறித்தும் ஆயப்படுகிறது.

நான்காம் இயல் சதுரகராதியின் முதற்பிரிவான பெயரகராதி பற்றி விளக்க முற்படுகிறது. பெயரகராதியில் உள்ள சொற்கள் எத்தனை, எவ்வகைச் சொற்கள் இடம்பெறுகின்றன எனவும், பெயரகராதி, தொல்காப்பிய உரியியல் தொடங்கி எவ்வாறு நிகண்டுகள் வழி வளர்ந்து சதுரகராதியில் விரிந்துள்ளது எனவும் காட்டப்படுகின்றன. சொற்களுக்கான பொருட்களை விளக்குங்கால், என்னென்ன முறைகள் மேற்கொள்ளப்படுகின்றன எனக் கூறி, அப்பிரிவில் அமைந்துள்ள சிறப்புக் குறிப்புக்கள் யாவை என விளக்குகிறது.

ஐந்தாம் இயலான பொருளகராதி, தொல்காப்பிய உரியியலினின்று பெற்ற படிப்படியான வளர்ச்சி நிலையில்

பொருளகராதி பெயரகராதியினின்று எவ்வாறு வேறுபடுகிறது எனக் கூறப்படுகிறது. பொருளகராதியில் பெயருக்குரிய பொருள்களை விளக்குங்கால், எவ்வெவ் வகையான முறைகள் மேற்கொள்ளப் படுகின்றன எனக் காட்டி, அப்பிரிவில் அமைந்து கிடக்கும் சிறப்புச் செய்திகள் யாவை என விளக்கப்படுகின்றன.

ஆறாம் இயலான தொகையகராதியில், தொகைக் குறிப்பு தொல்காப்பியம் தொடங்கி வளர்ந்த வகை இடம் பெறுகிறது. வளர்ச்சியைக் காட்டுங்கால் நிகண்டுகட்கும் சதுரகராதிக்கும் உள்ள வளர்ச்சி ஒப்பிட்டுக்காட்டப் படுகிறது. தொகை அகராதியில் அமைந்த விளக்கத்தின் மூலங்கள் விளக்கமுறைகள் புலப் படுத்தப்படுகின்றன. சிறப்புச் செய்திகள் என்னும் பகுதியில் அமைந்து உள்ள பிரபந்தங்களின் எண்ணிக்கை வரையறை போன்ற குறிப்புக்கள். இலக்கிய வரலாற்றில் புதிய சிந்தனையைத் தருவனவாய் அமைகின்றன.

ஏழாம் இயலான தொடையகராதியில், தொடைகளின் தொடக்கத்தைப் பழந்தமிழ் நூல்களினின்று விளக்கித் தனிச்சொற்களாகச் சதுரகராதியில் எவ்வாறு இடம் பெறுகின்றன எனக்காட்டப்படுகின்றது. தொடையகராதியின் சிறப்புக்களைப் பொதுப்படக்காட்டி. நூலின் இறுதியில் அமைந்துள்ள சிறப்புள தொடைப் பதங்கள் பற்றி ஆய்வு செய்யப்படுகிறது.

சதுரகராதியின் சிறப்பியல்புகள் என்னும் எட்டாம் இயல், மூன்று பகுதிகளாக ஆயப்படுகிறது. அடிகள் கொண்டிருந்த இலக்கணக் கோட்பாடுகள் அகராதியில் எவ்வாறு அமைந்து கிடக் கின்றன என முதற் பகுதி காட்டுகிறது. அடிகளது இலக்கியப் புலமை அகராதியில் எவ்வாறு வெளிப்படுகிறது என்பது இரண்டாம் பகுதியில் விளக்கப்படுகிறது. அடிகளை ஒரு மொழியியல் முன்னோடி எனக் கொள்ளக் கொடுந்தமிழ் இலக்கணத்தைப் போன்று அகராதியும் எவ்வாறு இடந்தருகிறது என்பதனை மூன்றாம் பகுதியால் அறியலாம்.

'அடிகள் அகராதிகளுள் சதுரகராதி' என்னும் ஒன்பதாம் இயல் அடிகள் படைத்த அகராதிகளின் எண்ணிக்கை வேறுபாடுகளைக் காட்டி, உண்மையிற் படைத்தவை இவையென வரையறை செய்கிறது. பின் சதுர்கராதி, தமிழ்-லத்தீன்-பேச்சுமொழி அகராதி, போர்த்கீஸ் - லத்தீன் - தமிழ் அகராதி ஆகியவற்றின் அமைப்பு. ஒப்புமை முதலியனஆய்வு செய்யப்படுகின்றன. பிற அகராதி களில் அடங்கியுள்ள பழமொழி, மருத்துவம் பற்றிய செய்திகள்

போன்றவற்றால் அவற்றினின்று அகராதி வேறுபடுகின்ற தன்மைகளும் காட்டப்படுகின்றன.

'சதுரகராதியில் செல்வாக்கு' என்பது இறுதி இயலாய் அமைகிறது. சதுரகராதிக்குப் பின்னரெழுந்த பொருள் விளக்க நூல்களை நிகண்டுகள், அகராதிகள் என இருவகையாகப் பாகுபாடு செய்துகொண்டு சதுரகராதியின் நால்வகைப் பகுப்புக்களின் தாக்கமும் அவற்றில் எவ்வாறு படிந்து கிடக்கின்றது எனக் காட்டப்படுகிறது. அகராதிகளின் அடிப்படையில் எழுந்த கலைக்களஞ்சியம் போன்றவற்றில் கூடச் சதுரகராதித் தாக்கம் படிந்து கிடப்பது சுட்டப்படுகிறது. முதற்றமிழ் அகராதி என்பது முழுதும் பொருந்தும் எனக் காட்டி முடிவு பெறுகிறது.

இவ்வாய்வின் சில பகுதிகள் சதுரகராதியிற் பொதிந்து உள்ள சொற்களின் விளக்கங்களாக அமையினும், புதுமுறையில் அணுகப்பட்டிருக்கின்றன. அவற்றை விளக்க வரைகோடுகளும் வரை படங்களும் ஆங்காங்கே ஆளப்படுகின்றன. புதிய கண்டு பிடிப்புகளில் இன்றியமையாதன தொகுக்கப்பெற்று, ஆய்வின் முடிவிற் கூறப் படுகின்றன. சில குறிப்புக்கள் தெளிவுபெற அவற்றின் விரிவு பின்னிணைப்புக்களாய் அமைந்துள்ளன. பிறமொழிச் சொற்கள் இடம் பெறுங்கால் இயன்ற அளவில் அவ்வம்மொழி ஒலியியல்பிற்கு ஏற்றவாறே எழுதப்பெற்றுள்ளன. அவ்வகைச் சொற்கட்கு இணையான ஆங்கிலச் சொற்களின் பட்டியலும் இணைக்கப்பட்டிருக் கிறது. ஒவ்வோர் இயலின் இறுதியிலும் இடம்பெறும் மேற்கோட் குறிப்புக்களில் ஆசிரியர் பெயர் அல்லது நூல், அவற்றின் பக்க எண் ஆகியவை மட்டும் குறிக்கப்பெறினும், அவற்றின் முழு விவரம் கருவிநூற் பட்டியலில் காட்டப்பெறுகின்றது. அடிகளது பிறமொழி அகராதிகளுள் **'Vulgaris Tamulicae Linguae Dictionarium'. 'Tamu lica-Latinum'** என்பது தமிழ்-லத்தின் பேச்சுமொழி அகராதி எனவும், **'Vulgaris Tamulicae Linguac Dictionarium, Pars secunda, miqua, Lusitains Vocibus Latine explicatis'** என்பது போர்த்கீஸ்-லத்தீன்-தமிழ் அகராதி எனவும் வழக்கு நோக்கு ஆளப்படுகிறது. பிற நூல்களிலிருந்து மேற்கோள்களை எடுத்து ஆளுங்கால், புணர்மொழி களாயினும், பிழைபட அச்சிற் காணப்படுபவையாயினும் நூல்களில் உள்ளவாறே காட்டப்படுகின்றன. சதுரகராதி, சூடாமணி போன்ற வற்றில் உள்ள பக்க எண்கள் **க, உ, ங, ச, ரு, சு, எ, அ, கூ,** என்னும் குறியீடுகளில் அமைந்திருப்பின் அவற்றை விடுத்து, வழக்கில் உள்ள வடிவங்களாகிய 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, ஆகியனவே ஆளப்படுகின்றன. தொல்காப்பிய நூற்பாக்களின் எண்களோ

அவற்றின் உரைகளோ சுட்டப்படுமெனில், சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகத்தின் கையடக்கப் பதிப்பாகிய தொல்காப்பிய மூலத்தின் எண்களையே அவை குறிக்கும்.

''ஆய்ந்துணரும் உண்மைகளில் எதுவும் நிலையானதன்று. ஒவ்வொன்றும் மீண்டும் மீண்டும் ஆய்ந்து காண வேண்டிய இயல்பினதே''[10]. அது போன்று சதுரகராதியின் குணம் குறைகள், மொழியியல் நோக்கில் ஆய்ந்தால் காணக் கிடைக்கும் வன்மை மென்மைகள் போன்றன பின்வருவோர்க்கு ஆய்வுப் பொருளாக அமைதற்கு இவ்வாய்வு வழிகாட்டக் கூடும் என்ற அளவில் இவ்வாய்வு அமைகிறது எனலாம். ஆங்கில அகராதியியலில் பின் வந்தவைகட்கெல்லாம் ஜான்ஸனின் விளக்கங்களே அடிப்படையாயின[11]. அத்தகு தன்மையினைத் தமிழகராதியியலில் சதுரகராதி பெற்றுள்ளது இவ்வாய்வாற் புலப்படக்கூடும்.

அடிக்குறிப்பு:

1 நானார்த்த தீபிகை, Foreword.
2 Tamil Lexicon, p , XXXVI
3 தமிழ்ச் சொல்லகராதி 1. பக்., 5.
4 Tamil Lexicon, p , XXXVI
5 Fr Beschi, S. J. His Times and His writings.
6 The Contribution of Fr-Beschi to Tamil.
7 The Contribution of European Scholars to Tamil.
8 பொதிகை நிகண்டு, அரும்பொருள் விளக்க நிகண்டு, நாமதீப நிகண்டு, தமிழ் லெக்ஸிகன் ஆகியவற்றின் முன்னுரைகள்.
9 (1) சுந்தரசண்முகம், பக்., 10 (2) பிங்கல நிகண்டு, பக். 7 (3) சதுரகராதி - 6, பக். 5.
10 William Bridgewater, Preface.
11 Ibid, p., 439.

இயல் 1

பெஸ்கி அடிகளார் வாழ்வு

1. வாழ்க்கைக் குறிப்பு

இறையருட் பணியினைக் குறைவற நிறைவேற்றத் தமிழகத்தில் முற்பட்ட சமயங்கள் அனைத்திற்கும் தமிழுக்கு வளம் சேர்த்த பெருமையில் உரிமை கொள்ள இடமுண்டு. அவ்வகை உரிமையினைக் கிறித்தவமறை பெற முழுமைக்காரணரானவர் பெஸ்கி அடிகளாரேயாவர்.[1] இவ்வித்தகரின் வாழ்க்கை வரலாற்றினையும், தொண்டுகளையும் முன்னைப் பலர்விரித்துரைத்திருக்கின்றனர்.[2] எனினும், வாழ்க்கை வரலாற்றுச் சிறப்பிற்கு மெருகேற்ற மிகைப் படவும் பெருமைக்கு ஊறும், புகழுக்கு இழுக்கும் நேரும் நிலையான் இட்டுக்கட்டிக் கூறப்பட்டனவுமாய செய்திகளைக் களைந்து தெளிவு படுத்த முயலும் ஆய்வில், வாழ்க்கை வரலாற்றைத் திட்பமாகக் குறிப்பது தக்கதாகும்.

அடிகளின் வரலாற்றினை அனைவரும் உணர விடிவெள்ளி போன்று அறிகுறி காட்டிக் கி. பி. 1798-இல் முதற்கோடிட முனைந்தவர் சாமினாதபிள்ளை என்பாராவர்.[3] அவர்தம் குறிப்புக்கள் கைக்குக்கிடைத்தில. அவர் நீங்கலாக, அடிகளின் வாழ்க்கையினை எழுதியோருள் முன்னோடி முத்துச்சாமி பிள்ளையேயாவார்.[4] அடிகள் தம் கைப்பட எழுதப்பட்ட கடிதங்களையும், அந்நாளில் சேசு சபை சமயத்தொண்டர்கள் மேலாண்மையருக்கு எழுதிய ஆண்டுக்கடிதங் களையும் ஆய்ந்து, கேட்டறிந்த வரலாற்றுச் செய்திகளையும், கண்டறிந்த நூல்களையும் ஒப்பு நோக்கித் தெளிந்து, தக்க சான்றுகளோடு முறைப்படி வரைந்த பெருமை பெஸ்கி அடிகளையே சாரும்[5]. மற்றோரெல்லாம் முன்னோரைப் பற்றும் பின்னோரைப் போன்று அவரதுகுறிப்புக்களின் அடிப்படையில் எழுதியோரே ஆவார்.

இத்தாலி நாட்டில், வெனிஸ் மாநிலத்தின்கண் காஸ்திக்கிளியோனே என்னும் ஊரில், கவுண்ட் கொண்டல்போ பெஸ்கி என்பாருக்கும், எலிஸபெத் பெஸ்கி என்னும் அம்மையாருக்கும் மகவாக, கி. பி. 1680-ஆம் ஆண்டு நவம்பர்த்திங்கள் 8-ஆம் நாள் அடிகள் தோன்றி 13-ஆம் நாளில், கான்ஸ்டண்ட் ஜோசப் பெஸ்கி என்னும் பெயரோடு ஞானஸ்நானம் பெற்றார் என்பதன்றி, இளமைக் காலவரலாற்றினைத் தெளிவுற அறிதற்குத் துணைபுரியும் சான்றொன்றும் கிடைத்திலது.[6] பதினெட்டாம்வயதில், 1698-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 21-ஆம் நாள் துறவறம் வேண்டிச் சேசு சபையிற் சேர்ந்தார். தொடக்கத்தில் இத்தாலி, லத்தீன், பிரெஞ்ச், கிரீக் ஆகிய மொழிகளின் இலக்கியங்களைக் கற்றுப் புலமை பெற்றபின் தத்துவம் ஓராண்டு பயின்றார். ஓராண்டு இடைவெளிக்குப் பின் போலோக்னாவில் மீண்டும் தத்துவம் கற்றார். 1706-ஆம் ஆண்டு மறையியற் பயிலத் தொடங்கி, 1709-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் குருத்துவப் பட்டம் பெற்றார்.

இந்தியாவில் பணியாற்ற விரும்பி 1710 -இல் லிஸ்பனிலிருந்து கோவாவுக்கு வந்த போர்த்துக்கீஸியக் கப்பலில் வந்திறங்கிக் கொச்சியையடுத்த அம்பலக்காடு என்னுமிடத்துக் குருமடத்தையடைந்தார். அங்கிருந்து புறப்பட்டுத் தூத்துக்குடியைச் சார்ந்த கடற்கரைப்பகுதிகளில் சில திங்கள் கழித்து மதுரை மறைப்பரப்புப் பகுதியைச் சேர்ந்த காமநாயக்கன்பட்டியை 1711- ஆம் ஆண்டு மேத் திங்கள் 8-ஆம் நாள் அடைந்தபொழுது, ராபர்ட் டி நோபிலி அடிகளின் வழியொற்றித் தம் நடையுடை முறைகளை மாற்றிக்கொண்டு தமிழ்த் துறவியாய் அடியெடுத்து வைத்தார்[7].

1711- இல், திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த புதுப்பட்டி குருக்கள்பட்டியில் பொறுப்பேற்றார். அவ்வாண்டு நவம்பர்த் திங்கள் திருச்சிராப்பள்ளியையடுத்த ஆலூரில் இருந்திருக்கிறார். 1711, 13 - ஆம் ஆண்டுகளில் தஞ்சாவூர் அரசுக்குட்பட்ட அய்யம்பட்டிப் பகுதியில் வாழ்ந்துள்ளார். மீண்டும், 1713 - இல் திருநெல்வேலியைச் சேர்ந்த குருக்கள்பட்டியின் பொறுப்பேற்றுக் கயத்தாறு, காமநாயக்கன்பட்டி ஆகிய இடங்களை மேற்பார்த்து வந்துள்ளார். மறவ நாட்டுப் பொருப்பினை 1716 - இல் ஏற்றதாகத் தெரிகிறது. பின்னர், ஏலாக்குறிச்சியில் இருந்து அவ்வாண்டு சூலைத் திங்கள் 15- ஆம் நாளுக்குப்பின் மதுரையில் பொறுப்பேற்றிருக்கிறார். இவ்வாறு, அவ்வக்காலத்தில் மதுரை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூரைச்

சார்ந்த பகுதிகளில் எழுந்த அரசியல் கொந்தளிப்பைப் போல அடிக ளின் வாழ்வும் அங்கும் இங்கும் அலைமோதலாயிற்று.

இந்நிலையில் அடிகட்கு உடல் நலம் குன்றியது. புதுச்சேரி சென்று நலம் பெற்று 1717-ஆம் ஆண்டு, டிசம்பர்த் திங்கள் தொடக்கத்தில், காவிரியின் வடகரையிலமைந்த வடுகர்பட்டியை அடைந்து, 1720-ஆம் ஆண்டு வரையில் அங்குத் தங்கியுள்ளார் என்பது ஆண்டுக் கடிதத்தால் உறுதியாகிறது.[8] 1720, 21-ஆம் ஆண்டுகளில் மீண்டும் ஏலாக்குறிச்சி சென்றிருத்தல் கூடும். 1726-இல் மறவநாட்டுப் பகுதியில் வேதசாட்சியாக மரித்த அருளானந்தருக்கு முத்திப்பேறு பெற்ற பட்டங் கொடுப்பது குறித்து ஆய்ந்தறியச் சென்ற மயிலை ஆயருக்குத் துணைபுரியச் சென்றுள்ளார்.

அடிகளின் சிறப்பு வானளாவ வோங்கி வளர்ந்த காலம் 1727-ஆம் ஆண்டு முதல் 1740-ஆம் ஆண்டு வரை எனலாம். தேம்பாவணி காப்பியமும், பல்வகைச் சிற்றிலக்கிய வகைகளும் இலக்கண நூல்களும் உரைநடை நூல்களும் படைத்தளித்த காலம் இஃதேயாம். ஏலாக்குறிச்சியில் அடைக்கல நாயகிக்கு ஆலயம் எழுப்பியதும், மானியம் பெற்றதும், சந்தாசாகிப் போன்ற பெரு மக்களின் நட்புறவு கிடைக்கப் பெற்றதும் இக்காலத்தேயாம்.

1740-இல், நடந்த மராட்டியப் போரையொட்டிய சந்தா சாகிப்பின் வீழ்ச்சியோடிணைந்து அடிகள் வாழ்விலும், அல்லல் தோன்றலாயிற்று[9]. எனவே, 1742- இல் அப்பகுதியினின்றும் புறப்பட்டுத் தூத்துக்குடி, மணப்பாடு, ஆகிய பகுதிகட்கு வந்து வாழ்ந்து இறுதியில் 1746- இல் அப்பலக்காட்டுக் குரு மடத்திற்குப் பார்வையாளராகச் சென்றார். அங்கு 1747 இல் பிப்ரவரித் திங்கள், 4-ஆம் நாள் இறைவன் திருவடி யடைந்தார்.

தமிழகத்தில் அடிகள் வாழ்ந்த முப்பத்தாறாண்டுக் கால வாழ்க்கையில், தமிழகத்தில் பெரும்பகுதியினை நேரில் கண்டு அறிந்த உண்மையினை இவ்வியல் இறுதியில் இணைக்கப்பட்டுள்ள நிலப்படம் புலப்படுத்தும்.

2 வீரமாமுனிவரும் தமிழ்ச்சங்கமும்

வீரமாமுனிவரென அனைவராலும் போற்றப்படுகின்ற அடிகள் தைரியநாதர், வீரஆரியன், செந்தமிழ்த் தேசிகர் தத்துவ போதகர், இஸ்மாத்திய சந்நியாசி போன்ற பெயர்களாலும், வழங்கப்பட்டிருத்தலைக் காணலாம். இவற்றுள் தத்துவ போதகர்

என்பது மதுரை மறைப்பரப்புப் பகுதியை உருவாக்கிய ராபர்ட் டி நோபிலிக்கு உரியதாகும். இருவரும் ஒருவரேயென மயங்கியோரால் தவறுபட அடிகட்கு அப்பெயர் வழங்கப்பட்டதெனக் கொள்ள வேண்டும்.[10] தமிழில் அவருக்கிருந்த அளப்பரும் புலமையால் செந்தமிழ்த் தேசிகரென அழைக்கப்பட்டார்.[11] அடிகள் சந்தா-சாகிபைச் சந்தித்த காலை, அவர்தம் அரிய பண்புகளைப் பாராட்டி, உயரிய சமயத்தொண்டர் என்னும் பொருளில் வழங்கப்பட்டதே இஸ்மாத்தி சந்நியாசி என்னும் பெயராகும்.[12] பிற பெயர்களாகிய தைரிய நாதர், வீரஆரியன், வீரமாமுனிவர் என்பன இவரது இயற்பெயராய கான்ஸ்டன்ட் ஜோசப் பெஸ்கி என்பதன் தமிழாக்கம் மட்டும் இல்லாமல் தமிழ்ப் படுத்த விரும்பியவரும் அடிகளேயாவர் என்பது கருத்தாகும்.

அடிகள் தேம்பாவணிக் காப்பியத்தை மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் அரங்கேற்றியபொழுது வீரமாமுனிவர் என்னும் பட்டம் வழங்கப்பட்டதாகக் கூறுவர். பிறமொழியாளர் ஒருவர் இவ்வழகிய இலக்கியத்தை எழுதியிருப்பார் என்பது நம்புதற்கரிதென வியந்து பாராட்டிப் பட்டம் வழங்குங்கால், அடிகள் நகையுணர்வு தோன்ற 'வீரன் என்பது என் இயற்பெயராய கான்ஸ்டண்ட் என்பதைக் குறிக்கும்: முனிவர் என்பது துறவறப்பணியினைச் சுட்டும்: இவற்றை விடுத்தால் மா என்பது மட்டுமே உங்களால் வழங்கப்பட்டு உள்ளதால், அஃதொன்றிற்கே கடப்பாடுடையேன்' எனக்கூறியதாகப் பெருமை கொள்வர்.[13]

அவ்வகைப்பட்டம் பெறுதற்கு முழுத் தகுதியும் அடிகட்குண்டு என்பதில் அணுவளவும் ஐயமின்று. ஏனெனில், தமிழை மிகத் திறமாக அறிந்துணர்ந்து அழகொளிரும் இலக்கியங்களைப் படைத்தளித்த முதற் பிறநாட்டுச் சமயத் தொண்டர் என இன்றும் போற்றப்பெறும் சிறப்புக்குரியவர் அவரே.[14] எனினும், தமிழ்ச் சங்கப் புலவர்கள்தாம் வீரமாமுனிவர் என்னும் பட்டத்தை வழங்கினார்கள் என்பதற்குத் தக்க சான்றொன்றும் இன்மை சிந்திக்கத்தக்கது.

முதலாவது, மதுரையின்கண், அடிகள் காலத்தில் ஏதேனும் தமிழ்ச் சங்கம் இருந்ததா என்பது வினவுதற்குரியது. பழஞ் செய்யுட்களில் காணப்படும் சிற்சில குறிப்புக்களைக் கொண்டும், அடியார்க்கு நல்லார், இறையனார் களவியல் உரையினைக் கொண்டும், முற்காலத்தில் மூன்று தமிழ்ச் சங்கங்கள் இருந்தன வென்றும், அவற்றுள் இறுதிச் சங்கம் தற்கால மதுரையில் அமைந்திருந்ததென்றும், கொள்கிறோம். கி. பி. 1901-இல் தான்

பாண்டித்துரைத் தேவரால் நான்காம் தமிழ்ச் சங்கம் மதுரையில் நிறுவப்பட்டது[15]. இவை தவிர, மதுரையம்பதியில் நாயக்கர் காலத்திய ஆட்சியின் பொழுது, வேறு தமிழ்ச் சங்கம் எதுவும் இயங்கி வந்ததாகத் தெரிந்திலது.

இரண்டாவதாக, அடிகளின் வரலாற்றை எழுதியோர் அனைவரும் 1726 அல்லது 1727-ஆம் ஆண்டிலேயே தேம் பாவணி எழுதப்பட்டிருத்தல் வேண்டும் என்பதில் கருத்து மாறுபாடு கொண்டிலர். அடிகளோ மதுரையில் 1712, 1716-ஆம் ஆண்டு களிலேயே வாழ்ந்துள்ளார். 1732-ஆம் ஆண்டிற்குப் பின்னரே மீண்டும் அடிகள் மதுரைக்கு வந்திருத்தல் கூடும். அவ்வாறிருக்க, 1726 அல்லது 1927-இல் எழுதப்பட்ட காப்பியம் ஐந்து ஆண்டுகட்குப் பின் அரங்கேற்றப்பட்டது என்பது நம்புதற்குரியதன்று.

கத்தோலிக்கராகவிருந்து லூத்தரன் சபையிற் சேர்ந்த ஒருவர், தரங்கம்பாடிச் சமயப்பரப்புப் பகுதியைச் சார்ந் தோருக்கு 1729-ஆம் ஆண்டு, மார்ச்சுத் திங்கள் 18-ஆம் நாள் எழுதிய கடிதத்தில் ''ஏலாக்குறிச்சியில் உள்ள ரோமன் சபையைச் சார்ந்த தைரியநாதர் என்னும் குரு, நம் கிறிஸ்தவர்களிடையே குழப்பம் ஏற்படுத்தும் வகையில், அவர்கள் கிறிஸ்தவர்கட்கு ஊக்கம் ஊட்டும் நிலையில் அவருடைய உபதேசியர்கட்கு எழுதிக் கொடுத்துள்ளார்'' எனக் குறிப்பிட்டுள்ளார்.[16] இதனின்று கி. பி. 1729-ஆம் ஆண்டிலும், அஃதாவது தேம்பாவணி இயற்றி. இரண்டு. மூன்று, ஆண்டுகட்குப் பின்னரும் அடிகள் தைரியநாதர் என்றே அழைக்கப் பட்டிருக்கிறார் என அறியலாம்.

சமயத்தொண்டர்கள், தங்கள் மேலாண்மையருக்கு அவ்வப்பொழுது எழுதிய ஆண்டுக்கடிதங்கள் அடிகளின் திறன் களையும், மொழியாற்றலையும் வெளிப்படுத்தத் தவறவில்லை. டிபோர்ஸிஸ் அடிகள் 1721-ஆம் ஆண்டு, ஜனவரித் திங்கள் 12-ஆம் நாள் எழுதியுள்ள கடிதத்தில் ''அன்புள்ள கார்கம் [அடிகளார் மலர்களின் தந்தை எனத்தகும் பெஸ்கி அடிகளுடன் தற்பொழுது இருந்து வருவதாக அறிகிறேன். இவரினும் சிறந்த மொழியறிஞரைக் கார்கம் அடிகள் காண்பது அரிது. ஏனெனில், இதுகாறும் எத்துறைவிக்கும் கைவரப்பெறாத சிறந்த மொழியாற்றலை அழகுமிகு கவிதைகளைப் புனையும் அளவிற்கு அடிகள் பெற்றுள்ளார் என'' எழுதியுள்ளார்.[17]

பிராஸ்பர் குயுஸியானி 1728-ஆம் ஆண்டு, சூலைத்திங்கள், 16-ஆம் நாள் எழுதிய 1727-ஆம் ஆண்டுக்குரிய கடிதத்தின் கண்

தரங்கம்பாடிச் சமயப்பரப்புப் பகுதியினருக்கு எதிரான அடிகளின் எழுத்துவன்மைபற்றி ''இடைப்பட்ட காலத்தில் இம் மாவட்டப் பொறுப்பில் உள்ள கான்ஸ்டண்ட் பெஸ்கி தரங்கம் பாடியினரால் அச்சுறுத்தப்படுகின்றனர். தமிழில் புகழத்தக்க புலமை பெற்றுள்ள அடிகள் மேலாளராகிய டொமினிக் மைடைரா அடிகளிடமிருந்து, அவர்களது தவறுகளைச் சுட்டி நூல் எழுத அனுமதி பெற்றுள்ளார். அடிகளின் நுண்மாண் நுழைபுலமிக்க கல்வி, ஆற்றல், செயல், மொழிவளம், ஆகியன அவர்தம் கருத்தினை முற்றுவிக்கப் பெரிதும் உதவும் என்பதில் சிறிதும் ஐயமின்று'' என எழுதுகிறார்.[18] இவ்வாறு அடிகளின் பெருமையும், புலமையும் பல்லிடங்களில் சுட்டப்பட்டிருக்கும் ஆண்டுக் கடிதங்களில் தமிழ்ச் சங்கத்தால், வீரமாமுனிவர் என்னும் பட்டம் வழங்கப்பட்டிருக்கு மாயின் அக்குறிப்பும் இடம் பெற்றிருக்குமன்றோ?

சதுரகராதியின் இறுதியில், ஆக்கியோன் வரலாறு எனக் கூறப்பட்டிருக்கும் ஆசிரியப்பாவில், வீர ஆரியன் என்னும் பெயர் இடம் பெறுகிறது.[19] இவ்வியல் இறுதியில் இணைக்கப்பட்டிருக்கும் புகைப்படம் காட்டும் அவ்வரலாறு 1824-ஆம் ஆண்டில் அச்சான முதற் பதிப்பிலேயே காணப்பட, வரலாற்றாசிரியர் எவரும் குறிப்பிடாமை வியப்பிற்குரியதாகிறது. சதுரகராதி எழுதப்பட்ட ஆண்டு 1732 என அது சுட்டுவதால் அவ்வரலாற்றுக் குறிப்பு ஒதுக்கி விடக்கூடியதன்று. ''வீராரியனெனும் வேதியன்'' என்ற தொடரில் இடம் பெறும் ஆரியன் என்னும் சொல், அடிகள் தம் காப்பியத் தலைவனைத் தேம்பாவணிப் பாயிரத்தில் குறிக்கும் ''ஆரியலவன்''[20] என்னும் தொடரோடு ஒப்பு நோக்கும் தன்மையது.

பெஸ்கி அடிகளின் சிறப்புக்களைப் பலபட விரித்து உரைக்க முன்வந்த முத்துச்சாமி பிள்ளை, மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவர்களால்பட்டம் வழங்கப்பட்டதென்பது குறித்து யாதொன்றும் கூறினரல்லர். மேலும், தைரியநாதசாமி என வழங்கி வந்ததன் மாற்றுப் பெயரே வீரமாமுனிவரென்பதென்றும், அடிகளின் மாணவர்கள் குரு வணக்கம் பாட முனைந்தபொழுது, அடிகளின் அனுமதியோடு மாற்றியமைத்தனரென்றும், ''வீரமாமுனிவர் பாடிய பெருங்காப்பியத்தைக் கண்டு வியந்த வித்வான்களும், அவருடைய மாணவர்களும், அவர் பாடிய பிரபந்தங்களுக்குக் குரு வணக்கம் சொல்லவேண்டுமென்று விரும்பி அவரனுமதிப்படி அந்நாள் வரைக்கும் வழங்கிவந்த தைரியநாத சுவாமியென்கிற பெயரில், தைரியத்துக்கு... வீரமென்றும்...காமாதிகளை முனிந்து வென்றவராதலின் முனிவர்

என்றும்...மா என்பது பெருமையைக் குறித்த அடைமொழியாக முனிவரென்பதோடு கூட்டி வீரமாமுனிவரெனக் காரணப்பெயர் அமைத்து வணக்கம் கூறலாயினார்'' எனச் சுட்டுகிறுர்.[21]

அதன் பின்னரே, பாயிரம் பாட முற்பட்டவர்கள் வீரமா முனிவரென அடிகளை அழைக்கத் தலைப்பட்டனர் என்பதனைத் தேம்பாவணிச் சிறப்புப் பாயிரத்தில் வரும்,

''மறைமொழி வாயினன் மலிதவத் திறைவன்
நிறைமொழிக் குரவன் நிகரில் கேள்வியன்
வீரமா முனியென்போன் வியன்றமி ழாக''[22]

என்னும் பகுதியும், தொன்னூல் விளக்கச் சிறப்புப் பாயிரத்தில் உள்ள,

''அருந்தமிழ் இலக்கணம் ஐந்தையும்
விரித்து விளக்கினன் வீரமா முனியே''[23]

என்னும் பகுதியும் விளக்கும்.

மேற்கண்டவற்றினின்றும், மதுரைத் தமிழ்ச் சங்கம் அடிகட்கு வீரமாமுனிவர் என்னும் பட்டத்தினை வழங்கியதாகக் கூறப்படும் செய்தி ஐயுறத்தக்கது என்பது உறுதி. தேம்பாவணியைப் படிப்போர் தமிழ்க் காப்பியப் புலவர்களாய கம்பன், திருத்தக்கதேவர் போன்றாரோடு ஒப்பிடத் தக்கவர் என்பதனை உணர்வர். புலவர்கள் தங்கள் படைப்புக்களைப் புலவோர் குழுமிய அவையில் அரங்-கேற்றுவது மரபு. பழங்காலத்தில், மதுரைப் பாண்டியர்களால் புரக்கப்பட்ட புலவர் குழு தமிழ்ச் சங்கம் என அழைக்கப்பட்டது. அரங்கேற்றம், தமிழ்ச் சங்கம் ஆகியஇரண்டனையும் இணைத்தெண்ணி அடிகளின் புலமைக்குப் பெருமை சேர்க்கப் பிற்கால மதுரைத் தமிழ்ச் சங்கம் ஒன்று வீரமாமுனிவர் என்னும் பட்டத்தினை வழங்கியதாகக் கருதினர் போலும்.

ஐயுறவிற் கிடமாய செய்திகளை மிகுதிப்படுத்திச் சிறப்பேற்ற முற்படுதல் அரும்பெரும் புலவர்களின் ஆற்றலைக் குறைத்துச் சிலர் மதிப்பிட்டுவிட இடந்தருதல் கூடும். புலவர்களைப் போற்றுங்கால், புனைந்துரைகளைக் கூறுவது தவிர்க்கப்படவேண்டும். அடிகள் இலத்தீன் மொழியிலமைந்த இயற்பெயரை, வடமொழிக் கலப்புடைய தைரியநாதர், வீர ஆரியன் போன்ற சொற்களால் தொடக்கத்தில் மாற்ற முற்பட்டார். பிற்காலத்தில், அவ்வடமொழிச் சாயல் மிகுதியும் உள்ளதெனக் கருதியவற்றை நீக்கி வீரமாமுனிவரென அழைக்க இசைந்தார் என்பதே உண்மையாம். இதனின்று அடிகளின்

தமிழ்உள்ளம் எத்தகையதென உணர நமக்கு வாய்ப்புக் கிட்டியது எனக் கொள்வதே பொருந்தும்.

3. அடிகளும் சுப்பிரதீபக் கவிராயரும்

அறிஞர் பெருமக்களின் ஆற்றல் குறித்து மிகுத்துச் சொல்லுகின்ற கருத்துக்கள் பாமரர்களிடையே வழங்குவதுண்டு. அதற்கு மாறாக அவ்வறிஞர்தம் ஆற்றல் குறித்து அறிஞர் சிலர் பரப்பி வரும் கருத்துக்கள் அவரைக் குறைத்து மதிப்பிட வழியாகிவிடுமோ என்னுமளவிற்கு அச்சம் விளைவிக்கின்றன.[24] அவற்றுள் ஒன்று அடிகட்கும் சுப்பிரதீபக் கவிராயருக்குமிடையே இருந்து வந்ததாகக் கருதப்படுகின்ற தொடர்பாகும். அறிஞர் சிலர், சுப்பிரதீபக்கவிராயரே தாம் அடிகளின் ஆசிரியர் என்றும் எண்ணங்கொண்டுள்ளார்[25]. இன்னுஞ் சிலர், அடிகளின் நூலாக்கத்திற்குக் கவிராயரே துணைநின்றார் எனவும் சொல்லி வருகின்றனர். அடிகளாரது சதுரகராதிப்படைப் பிற்கும் அவர் உதவியிருக்கிறார்.[26] எனக் கூறத்தலைப்படுவதைக் காணுங்கால், இருவருக்குமிடையே தொடர்புண்டா என்னுஞ் சிந்தனை இவ்வாய்வில் இன்றியமையாததாகிறது. அவற்றுள் எதுவும் உண்மையென ஆய்வில் காணக் கிடைத்திலது.

ஜே. லோக்மன் என்பவர் கருத்துப்படி நாட்டின் நிலைமையினை விளக்குதற்குச் சேசு சபையினரைத் தவிரத் தகுதி வாய்ந்தவர் வேறொருவரும் இலர்.[27] பெட்ராஸ்ட் அடிகள், ''சேசு சபையினர் மேலாண்மையருக்கும், பிற அடியார்க்கும், பின்னர் வெளியிடப்படக்கூடும் என நினையாமல் எழுதிய மறைபொருள் கடிதங்கள். எவ்வகையான மிகைக் கூற்றுமின்றி உள்ளதை உள்ளவாறு விளக்கும் தனிச்சிறப்பு வாய்ந்தன'' என்பர்.[28] வரலாற்றாசிரியர்கள், சேசு சபையினரின் குறிப்புச்சான்றுகட்கு முதலிடம் தருகின்றனர். நாயக்கர் ஆட்சியிலிருந்த மதுரை நாட்டு வரலாற்றிற்குச் சேசு சபையினரின் சான்றுகள் இன்றியமையாதன.[29] சேசு சபையினர் மேலாண்மையருக்கு எழுதிய மடல்களினின்று அடிகளின் மொழி கற்கும் கூர்மையினையும்,[30] கற்பிக்கும் திறனையும்[31] அறியலாம் அவ்வகைக் குறிப்புக்களில் சுப்பிரதீபக் கவிராயர் அடிகளின் ஆசிரியர் எனத் தெரியவந்திலது.

அடிகள் எளிமையான இயல்பு கொண்டவர், பிறரிடம் பெற்ற பயன்களை உணரும் பான்மையர்; பிறரிடம் கற்றவற்றைப் புகறல் தந்தகுதியைக் குறைத்துக் காட்டும் எனக் கருதியவரல்லர்; மாறாக, அவர்களை நினைவு கூர்தல் கடனெனக் கொண்டாடும் தகைமையாளர். தம் செந்தமிழ் இலக்கண

முன்னுரையில், ''கற்றல் கடினம் என்பதனை மறைக்க முயன்றிலேன். ஆயினும் உழைப்பு, பயனை எதிர்ப்பார்த்ததன்று. தாய்நாட்டவ-ருள்ளும் மிகச் சில்லோரே செந்தமிழ் வல்லாராய்த் திகழ்கின்றனர். அவருள் செவ்வனுற மொழி நெறிகளையறிந்தோன், சிறப்புற மதிக்கப் படுகின்றான். ஆனல், அவனும் கற்றறிந்த நூல்களை மேற்கோள் காட்டுவதற்கேற்பவே பாராட்டப்படுகின்ருன்.''[82] எனக் கூறி அவரே இலக்கண நூல்களில் திருவள்ளுவர் ஔவை, கம்பன், சிந்தாமணி ஆசிரியர் போன்ற புலவர் பெருமக்களைக் குறித்துச் சொல்கிருர். அவ்வாறிருக்க, கவிராயர் தமக்குத் துணையாய் இருந்திருப்பின், நன்றிக் கடனாகக் காப்பியப் புலவர்கள் புலவரைப் பாராட்டும் மரபைப் போன்று, தேம்பாவணியில் குறித்திருப்பாரல்லரோ?

அகராதியில் வால்மீகி, வியாசர் போன்ற வடமொழிப் புலவர்களையும், கம்பன், ஔவை போன்ற தமிழ்ப்புலவர்களையும் குறித்துப் புலவர் என விளக்கந்தருபவர், ''சுப்பிரம்-மிகுமொனி, வெண்மை''. ''சுப்பிரதீபம்-மிகுமொழி, வடகீழ்த்திசையானை'' என விளக்கங்காட்டுபவர்.[33] அச்சொற்களைப் பெயராகவுடைய புலவர் தம் ஆசிரியராயிருந்திருப்பின் ''ஓர் புலவர்'' என விளக்கந்தந்திருப்பார் அல்லரோ !.

சுப்பிரதீபக் கவிராயரது வாழ்க்கை பற்றிய குறிப்புக்களில் போதிய தெளிவில்லை. தமிழ்ப்புலவர் சரித்திரம் என்னும் நூலில், சுன்னாகம் அ. குமாரசாமி புலவர் என்பார், மிகப் பழங்காலத்தில் இருந்து தம் காலம் வரை வாழ்ந்த தமிழ்ப்புலவர்கள் வரலாற்றை விரித்துரைக்கிறார். அவ்வரலாற்றில் சுப்பிர தீபக் கவிராயர் இடம் பெற்றிலர். நூலின் இறுதியில் எஞ்சிய புலவர்களின் பெயர்களை மட்டும் சுட்டும் பட்டியலில்[34] கவிராயர் இடம் பெறுவதால், தெளிவான வரலாறு அவர்க்கும் கிட்டாமற் போயிற்று எனத் தெரிகிறது. சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகத்தினர், தமிழ்ப் புலவர்களின் வாழ்க்கை வரலாற்றைத் தொடர் நூல்களாக வெளியிட்டனர். பதினைந்தாம் தொடர் நூல் வரை முந்நூற்றெண்பது புலவர்கள் வரலாறு எழுதியும் கவிராயர் வரலாறு எழுதப்படவில்லை. அதற்குக் காரணம் கவிராயர் வரலாற்றைத் தெளிவாக அறியக்கூடாமையே எனலாம். ஆறும் நூலிலேயே அடிகளின் வரலாற்றை எழுத முனைந்தோர் அவர்தம் ஆசிரியராகக் கருதப்படுவோரை பதினாறாம் நூலில் தான் எழுத முயன்றுள்ளனர். அதுவும் தெளிவாக அமைந்திலது.

கவிராயரின் வரலாறு பற்றிக் கூற வந்த சிலருடைய குறிப்புக்கள் ஒன்றற்கொன்று முரணாகின்றன. கவிராயரின் நூலெனக் கருதப்படும் விறலிவிடுதூதினை வெளியிட்ட இராய. சொக்கலிங்கம், திருமங்கலம் பகுதியில் அவர் தோன்றியவர் என்கிறார்[35]. மதுரை நாயக்கர் வரலாற்றினை எழுதப் புகுந்த அ. கி. பரந்தாமனார் பழனியில் வாழ்ந்தவர் என்கிறார்[36]. அபிதான சிந்தாமணி சிவகங்கைச் சமீனைச் சார்ந்த பழையனூரை அடுத்த கொழுனை என்னும் ஊரினராகக் குறிக்கிறது.[37]

இராய. சொக்கலிங்கம் விசயரெங்க சொக்கநாதர் காலமாகிய 1706 - 1732 ஆகிய ஆண்டுகட்கிடையே வாழ்ந்திருத்தல் வேண்டும் என்கிறார்.[38] மற்றொருவர், திருமலை நாயக்கர் காலமாகிய 1623 - 1659 ஆகிய ஆண்டுகட்கிடையே வாழ்ந்திருக்கலாம் என்கிறார்.[39] அ கி பரந்தாமனார் சுப்பிரதீபக் கவிராயர் நெடுநாள் வாழ்ந்திருக்கலாம் என்றும் பதினேழாம் நூற்றாண்டினராகக் கருதத் தக்கவரென்றும் குறிப்பார். பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த நாற்பத்தாறு புலவர்களைப் பற்றிய வரலாற்றைத் தமிழ்ப்புலவர்கள் வரலாறு என்னும் நூல் குறிக்கின்றது.[40] அவர்களுள் கவிராயர் குறிக்கப்பட்டிலர்

அ. கி. பரந்தாமனார் நாயக்கர் ஆட்சிக் காலத்தில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களின் காலத்தைச் சுட்டிக் காட்டுகிறார். அதிவீரராம பாண்டியர், 1564 - 1604 ஆம் ஆண்டுகளில் வாழ்ந்தவரென்கிறார். அனதாரி என்பார் காலம் 1572 - 1595 என்கிறார், இஸ்லாமியப் புலவராகிய உமறுப்புலவர் 1674 - 1710-ஆம் ஆண்டுகளில் வாழ்ந்தவராகக் குறிக்கிறார்.[41] அடிகளின் வாழ்க்கைக் குறிப்புக்களைத் தக்க ஆண்டுகளோடு தருகிற அவ்வாசிரியர் சுப்பிர தீபக் கவிராயர் காலத்தை அறுதியிட்டிலர்.

இராய. சொக்கலிங்கம் கவிராயர் வாணாள் குறித்துக் கூறும் கருத்துக்கள் ஒன்றினின்று ஒன்று மாறுபடுகின்றன. விசயரெங்க சொக்கநாதர் காலத்தவரெனக் கூறும் அவரே, திருவிளையாடற் புராணம் இயற்றிய பரஞ்சோதி முனிவரின் மாணவரெனவும் குறித்துச் சான்றாகக் கூளப்பன் நாயக்கன் காதல் என்னும் நூலினின்று இருவரிகளை மேற்கோள் காட்டுகிறார்[42] தமிழ் இலக்கிய வரலாற்று ஆசிரியர் எவரும் பரஞ்சோதி முனிவர் 17-ஆம் நூற்றாண்டினர் என்பதனை ஒப்புவதாகத் தெரியவில்லை.

கவிராயர், கூளப்ப நாயக்கன் காதல், விறலிவிடுதூது ஆகிய இருநூல்களுக்கும் ஆசிரியர் ஆவர் எனக் கலைக்களஞ்சியம்

கூறுகிறது.[43] இராய. சொக்கலிங்கம் கருத்துப்படி, கூளப்ப நாயக்கனே இரு பிரபந்தங்கட்கும் தலைவனாவான்.[44] அ. கி. பரந்தாமனார், கூளப்ப நாயக்கன் காதல் திருமலை நாயக்கர் பெயரால் முதலில் எழுதப்பட்டுத் திருமலை நாயக்கர் திறமறிந்து பாராட்டாமையான் கூளப்ப நாயக்கர் பெயரால் மாற்றப்பட்டதென்பர்.[45] கா. சுப்பிரமணிய பிள்ளை, திருச்சி நாயக்க மன்னரை மகிழ்விக்கக் கவிராயரால் நாமகூளப்ப நாயக்கன் என்னும் நூல் எழுதப்பட்டதென்றும், விறலிவிடு தூது திருவரங்கத்தைச் சார்ந்த ஒரு பிராமண அட்டாவதானியால் எழுதப்பட்டு நாமகூளப்ப நாயக்கனுக்குக் கொடுக்கப் பட்டதென்றும் கூறுவர்.[46]

எவ்வாறாயினும், பலபட்டடைச் சொக்கனாதர் என்னும் புலவர்,

''நின்மலனார் வெண்ணீற்று நெற்றிக்கண் காணாத
மன்மதன் காண்''[47]

என்னும் விறலிவிடு தூது வரிகளைக் கவிராயர் இறப்பினையொட்டிப் பாடிய வெண்பாவில்,

''செய்ய கொழுநைச் சிவசுப் பிரதீபா
வெய்ய கொழுந்தழலில் வேவதே - ஐயகோ
நின்மலனார் வெண்ணீற்று நெற்றிக்கண் காணாத
மன்மதன்காண் என்றுசொன்ன வாய்''[48]

என அமைத்துப் பாடுவது கொண்டு விறலிவிடு தூதினைக் கவிராயர் இயற்றியதாகக் கொள்ளலாம்.

தம் ஆசிரியரின் நூல்களை முதற்கண் அறிந்திருப்பது நன்மாணவர்க்கு அறிகுறி. விறலிவிடு தூதினைச் சுப்பிரதீபக் கவிராயர் படைப்பென முடிவு செய்யின் அதுவே, அவர் அடிகளின் ஆசிரியரல்லர் என்னும் கருத்து உறுதி பெற வழி வகுத்துவிடுகிறது. ஏனெனில், விறலிவிடு தூதினை அடிகள் அறிந்திலர் என்பது தெளிவாயிருக்கிறது. செந்தமிழ் இலக்கணத்தில், உயர்வுப் பன்மை யொருமை (**Honorific singular**) பற்றிக் குறிப்பிடுங்கால், ''என்றான், சொன்னான் என்பவற்றுக்குப் பதில் உயர்வாக என்றார், சொன்னார் போன்று வழங்குவதை மிக அரிதாகவே கண்டிருக்கிறேன். கவிஞர் களிடத்திலே கூட இவ்வடிவத்தைக் காண்பது கடினம். சிந்தாமணிப் பாடலில், மிகுதியான அன்பு மகிழ்வு ஆகியவற்றைப் புலப்படுத்தப் பயன்படும் முறையில் ஒரே இடம் மட்டுமே இதுவரையிலும் என் பார்வையிற்

பட்டிருக்கிறது"[49] என அடிகள் கூறுகிறார். இக்குறிப்பிற்கு மாறாக உயர்வுப் பன்மை விறலிவிடு தூதில் பயன்படுத்தப்படுவதை,

''வந்தார்நம் ஐயர்என்னை வாவென்றார் காவிரியில்
சந்திபன்னி இக்கரையில் தாண்டினார் — இந்த ஊர்க்கு
என்மார்க்கம் சொல்லாதே என்றுசொன்னார்''[50]

என்ற வரிகளில் காண்கிறோம். அடிகட்கும் கவிராயருக்கும் தொடர் பேற்பட்டிருப்பின் இவ்வழக்கினை அறிந்திருக்கும் வாய்ப்புக் கிட்டியிருக்கும். செந்தமிழ் இலக்கணத்தில் கூறும் உயர்வுப்பன்மை குறித்த கூற்றுக்கு இடமேற்பட்டிராது.

சுப்பிரதீபக் கவிராயர் தமிழில் எழுதியதை ஏன் அடிகள் லத்தீனில் எழுதியிருத்தல் சாலாது என எண்ணக்கூடும். ஆயின், நாய் ஆற்றைக் கடத்தல், மாட்டின் நிழலுக்கு வாடகை கேட்டல் ஆகியவை யூசோப் கதைகளினின்று எடுக்கப்பட்டுச் சிறிது மாற்றம் பெற்றுள்ளனவெனவும், பண ஆசை மிகுந்த அரசன் சிறுநீர்வரி போட்டது லத்தீன் எழுத்தாளர் பூவனல் என்பாரின் அங்கத நூலினின்று எடுக்கப்பட்டதெனவும் கூறி, இவற்றையெல்லாம் கவிராயர் எவ்வாறறிந்திருத்தல் இயலும் என வினவுவர்.[51] கிறித்தவர்கள் மட்டுமே பயன்படுத்துகின்ற இராப்போசனம், பரிசேயனும் ஆயக்காரனும், தின்மை, மாங்கிஷத்துண்டு போன்ற பல சொற்களும் சொற்றொடர்களும் கிறித்தவரான அடிகளே எழுதினர் என்பதற்குச் சான்றாகும்.[52] இச்சொற்றொடர்கள் ஆளப்படுவதால்-தானோ கவிராயர் கிறித்தவ சமயம் தழுவியவர் என்னும் கதையும் நிலவுகிறது.

கவிராயர் பற்றியும் அவர்தம் நூல்கள் பற்றியும் தெளிவு பெற இயலா நிலையில், அவர் அடிகளின் ஆசிரியர் என்றும், அடிகளின் சதுரகராதி போன்ற நூல்கட்கு அவரே தோன்றாத்துணையென்றும் பரமார்த்த குருகதை போன்றவற்றைப் படைத்தவரும் அவரே-யென்றும் கதை கூறுதல் தவறாகும். கவிராயரை அடிகளின் ஆசிரியர் எனக் குறிப்பிடுவோரும், ஐயத்திற்கேதுவாகும் வகையில், 'ஆசிரியர் என்பர்' என்றே சொல்லிச் சென்றனர்.[53] கலைக்களஞ்சியத்திலும், சற்றுச் சொற்களை மாற்றி 'வீரமாமுனிவருக்கு உதவியாயிருந்தவரென்றும், கிறித்தவ சமயத்தைச் சார்ந்தவரென்றும் கூறுவர்'[54] எனவே காணப்படுகிறது.

4. அடிகளாரது படைப்புக்கள்

அடிகளாரது நூல்களுக்கு ஆசிரியர் வேறொருவர் என்ற தவறான கருத்து தலையெடுக்கத் தொடங்கியது போன்று, அவர் படைக்காத நூல்கள் சிலவற்றிற்கு அவரே ஆசிரியர் என்ற கருத்தும் அண்மைக் காலமாகத் தோன்றியுள்ளது. அதனையொட்டி அவரது படைப்புக்களின் எண்ணிக்கையை முப்பத்தாறு என முடிவிடவும் சிலர் முனைந்துள்ளனர். அம்முடிபு மேடைகளில் வெளிப்படுத்தப்படுவதை, 'முனிவர் முப்பத்தாறாண்டுகள் வாழ்ந்தார்; முப்பத்தாறு நூல்கள் யாத்தார். அவரன்றி வேறெவரால் ஆண்டுக்கு ஒரு நூலைப் படைக்க இயலும்? எனப் பெருமிதத்தோடு முழங்கப்படுவதைக் காண நேரிடுகிறது.[55] மேடைப் பேச்சுக்களோடு நின்று விடாமல், கட்டுரைகளிலும் இடம்பிடித்து விடுவதால் அக்கருத்தின் வன்மை மென்மைகளை ஆய்வது ஓர் ஆய்வாளனுக்குக் கடனாகிறது.

வீரமாமுனிவர் மூன்றாம் நூற்றாண்டு விழாக் குழுவினரால் வெளியிடப்பட்ட சிறப்பு மலரில்தான் அக்கருத்து தொடக்கம் பெறுகிறது.[56] அம்மலரின் இறுதி அட்டை வெளிப்புறத்தில், 'அறிந்த மொழிகள் 13, எழுதிய நூற்கள் 36, என்று தொகை காட்டி மேற்குறியீட்டின் விளக்கமாக நூல்களின் எண்ணிக்கையினைச் செய்யுள் 13, உரைநடை 9, அகராதி 6, இலக்கணம் 4, மருத்துவம் 3, மொழி பெயர்ப்பு 1 என வகையும் காட்டப்பட்டிருக்கிறது.

சிறப்பு மலரின் பதிப்பாசிரியரே, மலரினுள் 'காப்பிய ஆசிரியர் வீரமாமுனிவர்' என்னும் தலைப்பில் கட்டுரை ஒன்று வரைந்து உள்ளார்.[57] அதிலும் தொகைவகை கூறி அடிகளாரது படைப்புக்களை அறுதியிடுகிறார். தொகை எண்ணிக்கை 36 என்பதில் வேறுபாடின்றெனினும் வகை எண்ணிக்கையில் வேறுபாடு தோன்றுகிறது. செய்யுள் நூல்கள், உரைநடை நூல்கள் ஆகிய வகைகளின் மொத்த எண்ணிக்கையில் முறையே பதின்மூன்றுக்குப் பதிலாகப் பதினொன்றும் ஒன்பதுக்குப் பதிலாகப் பதினொன்றுமாக வேறுபாடு காணப்படுகிறது. பிறவகைகளின் மொத்த எண்ணிக்கையில் மாற்றமில்லை. செய்யுள், உரைநடை நூல்களின் மொத்த எண்ணிக்கைகளை $13+9 = 22$ அல்லது $11 + 11 + 22$ என ஆக்கியிருப்பது மொத்த எண்ணிக்கை 36 என்பதனைப் பாதிக்காமல் இருப்பதற்குத்தான் என்று எண்ண இடம் ஏற்படுகிறது. மேலும், பதிப்பாசிரியரும் கட்டுரையாசிரியரும் ஒருவராகவே இருப்பதால் இவ்விரண்டு வகையுள் எவ்வெண்ணிக்கையை அவர் உறுதிப்படுத்துகிறார் என மயக்கம் ஏற்படுகிறது. அம்மயக்கத்தை, ஆசிரியர் வேறொரு இதழில் எழுதிய கட்டுரை தெளிவிக்கிறது. அதன்கண் செய்யுள் ஏடுகள் பதினொன்று;

உரைநடை நூற்கள் பதினொன்று; இலக்கணப் பனுவல்கள் நான்கு; அகராதி அமைப்புகள் ஆறு; மருத்துவக் கோட்பாடு மூன்று; மொழி பெயர்ப்பு ஆக்கம் ஒன்று; ஆகிய முப்பத்தாறு எழுத்தோவியங்களை இயற்றியுள்ளார்[58] எனக் குறிப்பிடுகிறார். எனவே, கட்டுரையாளர் அடிகளாரது படைப்புக்களில் செய்யுள் நூல்கள் 11 ஆகவும், உரை நடை நூல்கள் 11 ஆகவும் உறுதியாகக் கருவது தெளிவாகிறது.

இதழின்கண் ஆசிரியர் எழுதியுள்ள இரண்டாம் கட்டுரையில் ஒவ்வொரு வகையிலும் அடங்கியுள்ள நூல்களின் பெயர்களையும் கூறியிருப்பது குறிப்பிடத்தகுந்தது. அக்கட்டுரையில் தேம்பாவணி, திருக்காவலூர்க் கலம்பகம், கித்தேரியம்மாள் அம்மானை, அடைக்கலமாலை, அன்னை அழுங்கல் அந்தாதி, அடைக்கல நாயகி வெண்கலிப்பா, கருணாம்பரப்பதிகம், தேவாரப்பதிகம், வண்ணக் கலைகள், தேவமாதா அந்தாதி, பூம்பாவணி ஆகிய பதினொரு செய்யுள் நூல்கள் குறிக்கப்படுகின்றன. உரைநடை நூல்களாகப் பரமார்த்த குருகதை, வாமன்கதை, வேதவிளக்கம், வேதியர் ஒழுக்கம், லூத்தரினத்தியல்பு, பேதகமறுத்தல், திருச்சபைக் கணிதம், திருக்கடவூர் நாட்டுத் திருச்சபைக்கு எழுதிய நிருபம், ஞானக் கண்ணாடி, ஞானம் உணர்தல் ஆகிய பத்து நூல்கள் சுட்டப் படுகின்றன. பதினோராவது நூலாக ஆசிரியர் எதனைக் கருதுகிறார் எனக் கோடுகூடக் காட்டவில்லை. அதே கட்டுரையில் பிற இடங்களில், 'எழுதியதாகக் கூறுவர்', 'எழுதியதாகவும் நவில்வர்' 'எழுதியதுதானா என்று வினாவப்படுகின்றது' என்றெல்லாம் ஆசிரியர் தாமே ஐயப்படுவது போன்ற குறிப்பு எதுவும் பதினோராம் நூல்பற்றி இல்லை. இதனினின்று பெயர் சுட்டப்பட்ட நூல்கள் தவிர உரைநடை நூல்கள் வேறு எதுவும் இருப்பதாக ஆசிரியர் நினைக்கவில்லை என்பது தெளிவாகிறது. இருந்தும், மொத்த எண்ணிக்கை 36 ஆகக்காட்டத் துணைபுரியும் வகையில், உரைநடை நூல்களின் எண்ணிக்கை 11 என்பதினின்றும் குறைந்து விடக்கூடாது எனக் கருதி, உரைநடை நூற்கள் பதினொன்று எனக் குறித்திருப்பாரோ என எண்ணத் தோன்றுகிறது.

வேறொரு சிறப்பிதழில், மற்றொரு கட்டுரையாசிரியர், 'முனிவரின் நூல்கள் மொத்தம் 36 ஆகும்'[59] எனக் குறிப்பிடுகிறார். வகைகளைச் செய்யுள் நூல்கள் 13 என்றும், உரைநடை நூல்கள் 9 என்றும், அகராதிகள் 6 என்றும், இலக்கணங்கள் 4 என்றும், மருத்துவ நூல்கள் 4 என்றும், குறிப்பிடுவதோடு திருக்குறள் மொழி பெயர்ப்பையும் சுட்டுகிறார். இவற்றைக் கூட்டினால் $13 + 9 + 4 + 6 + 4 + 1 = 37$ ஆகிறதே என்பது பற்றிச் சிந்தித்திலர். மேலும் அவர், ''வேத விளக்கம், வேதியர் ஒழுக்கம், ஞானக்கண்ணாடி,

பேதக மறுத்தல், லுத்தர் இனத்தார் இயல்பு, ஞானமுணர்த்துதல், வாமன் கதை, பரமார்த்த குருகதை, திருச்சபைக் கணிதம், குறள் ஆகிய 9 உரைநடை நூல்களை யாத்தார்,[௬௦] எனக் குறிக்கிறார். அவற்றைக் கூட்டினால் பத்து நூல்கள் வருகிறது என்பது கட்டுரையாளருக்குப் புலப்படாதது ஏன் என்று தெரியவில்லை. எனினும் திருக்குறள் மொழி பெயர்ப்பினைக் குறள் எனத் தவறி உரைநடைநூல்களில் சேர்த்துவிட்டார் என அமைதி காணலாம்.

முதற்கட்டுரையாளர் உரைநடை நூலாகக் குறித்த திருக்கடையூர் நாட்டுத் திருச்சபைக்கு எழுதிய நிருபத்தை விட்டு விட்டார். அதற்கு ஈடுகட்டுவான்வேண்டி, மருத்துவ நூல்களில் நவகாண்டம் ஒன்றைப் புதிதாகச் சேர்த்து நான்காக்கியிருப்பார் போலும். எவ்வாறேனும் இரு கட்டுரையாளரும் அடிகளார் நூல்கள் முப்பத்தாறு எனக்காட்டுவதில் கொண்ட முனைப்பு ஏன், எவ்வாறு முப்பத்தாறாம், என்ற சிந்தனையில் காட்டாதது வியப்பிற்கிட மாகிறது.

கட்டுரையாளர்கள் இருவரும் குறிப்பிட்டுள்ள நூல்களுள் எவையெவைதாம் அடிகளாரால் ஆக்கப்பட்டவை என்பதனை வரையறுக்க ஒருவாறு முயலலாம்.

முதற் கட்டுரையாளர் குறித்துள்ள செய்யுள் நூல்களுள் தேம்பாவணி, கித்தேரியம்மாள் அம்மானை, திருக்காவலூர்க் கலம்பகம், அன்னை அழுங்கல் அந்தாதி, அடைக்கல மாலை, அடைக்கல நாயகி வெண்கலிப்பா, கருணாம்பரப்பதிகம், வண்ணம் ஆகிய படைப்புக்களும், உரைநடை நூல்களுள் பரமார்த்த குருகதை, வேதியர் ஒழுக்கம், வேதவிளக்கம், பேதகம் மறுத்தல், லூத்தர் இனத்தியல்பு, வாமன் சரித்திரம், திருச்சபைக் கணிதம், திருக்கடையூர் நாட்டுத் திருச்சபைக்கு எழுதிய நிருபம் ஆகிய படைப்புக்களும், இலக்கண நூல்களுள் தொன்னூல் விளக்கம், இலக்கணத்திறவுகோல், செந்தமிழ் இலக்கணம், கொடுந்தமிழ் இலக்கணம் ஆகிய படைப்புக்களும், அகராதிகளுள் சதுரகராதி, தமிழ் - இலத்தின் அகராதி, போர்த்துகீஸ் - இலத்தீன் - தமிழ் அகராதி ஆகிய படைப்புக்களும், திருக்குறள்- இலத்தீன் மொழி பெயர்ப்பும் அடிகளாரால் ஆக்கம் பெற்றன என்பதில் யாதொரு ஐயமுமின்று.

முதற்கட்டுரையாளர்கள் குறித்த செய்யுள் நூல்களுள் தேவாரப் பதிகம், தேவமாதா அந்தாதி, பூம்பாவணி ஆகியனவும், உரைநடை நூல்களுள் ஞானக் கண்ணாடி, ஞானம் உணர்தல்

ஆகியனவும், அகராதிகளுள் பொதுத்தமிழ் அகராதி தமிழ்-பிரெஞ்சு அகராதி, இலத்தீன்-தமிழ் அகராதி ஆகியனவும், மருத்துவ நூல்களும் அடிகளார் படைப்புக்கள் எனலாமா என்பது ஐயத்திற்குரியது.

செய்யுள் நூல்களில் தேவாரப் பதிகம் என இடம்பெறுவதும் கருணாம்பரப் பதிகம் எனக் கூறப்படுவதும் ஒன்றே. அதனாற்றான் 'திருப்பாடல்கள்' என்னும் தொகுப்பில், அடைக்கலமாலை, அடைக்கல நாயகி மேல் வெண்கலிப்பா, தேவாரம் - கருணாம்பரப் பதிகம். என வெளிப்புறத் தலைப்பிட்டும், நூலினுள் தேவாரம் எனத் தலைப்பிட்டும் தமிழ் இலக்கியக் கழகம் பதிப்பித்திருக்கிறது. அஃதோடன்றி இறுதியில் பதிகப்பாடல்களைக் குறித்து, ''இத் தேவாரப் பாடல்கள் பன்னிரண்டனுள் 1 முதல் 5; 8 முதல் 12 ஆகிய பாடல்கள் பத்தினையும் (6-ம் 7-ம் நீங்கலாகவுள்ள ஏனைய பத்துப் பாடல்கள்) இறந்தோரைக் கல்லறைக்கு எடுத்துச் செல்வோருள் ஒருவர் உருக்கமாக இசையோடு பாடுவர்; அவர் ஒவ்வொரு பாடலையும் பாடி முடித்ததும் தாம் வைத்திருக்கும் கைம்மணியில் ஓசை எழுப்புவர். உடனே, எல்லோரும் 'கருணாம்பரம்' என முழங்குவர். இவ்வாறு, 'கருணாம்பரம்' என முடிக்கப் பெறும் பத்துப் பாடல்களும் கருணாம்பரப் பதிகம் என வழங்கப்பெறும்''[61] எனவும் விளக்கப்பெறுவதால், தேவாரப் பதிகம் என்பதும் கருணாம் பரப்பதிகம் என்பதும், 12 பாடல்கள் அடங்கிய ஒன்றைத்தான் குறிக்கும் என்பது வெளிப்படை. எனவே கருணாம்பரப்பதிகம் என்பதனைப் படைப்பின் எண்ணிக்கையில் சேர்த்தால் தேவாரப் பதிகத்தை விட்டு விடுதலே முறை.

தேவமாதா அந்தாதியும் அன்னை அழுங்கல் அந்தாதியும் ஒன்றெனக் கொள்ள வேண்டி உள்ளது. முதற் கட்டுரையாளர், 'வேதநாயகர் எழுதிய தேவமாதா அந்தாதி போன்று வீரமாமுனிவரும் ஓர் அந்தாதி எழுதியதாகக் கூறுவர்' என்று குறிப்பதிலிருந்து ஓர் அந்தாதி அடிகளாரால் எழுதப்பட்டது எனக் கருதுகிறாரன்றி அதன் பெயர் அறியவந்ததாகக் காட்டிலர். அவரே அந்நூல் கிட்டிலது எனவும் கூறுகிறார். பெஸ் அடிகளார், அடிகளார் படைப்பாகத் தேவமாதா அந்தாதியைக் குறித்து அது இறைவன்றாயின் துயரப் பாக்களைக் கொண்டது எனச் சுட்டுகிறார்.[62] அன்னை அழுங்கல் அந்தாதியின் கருப்பொருளும் அன்னையின் துயர்தான். எனவே, தேவமாதாவின் துயரைக்காட்டும் அன்னை அழுங்கல் அந்தாதியே தேவமாதா அந்தாதி என வழங்கப்பட்டிருக்க வேண்டும் எனக் கருத இடமளிக்கிறது.

'பூம்பாவணி என்ற நூல் எழுதியதாகவும் நவில்வர்' என்ற முதற் கட்டுரையாளர்' கிடைக்கவில்லை என்பதையும் ஒப்புக்

கொள்கிறார்.[63] அடிகளார் பாடல்கள், படைப்புக்கள் சில தொகுக்கப்பெற்றுத் திருப்பாவணி, தேம்பாமாலை என்னும் பெயர்களில் வெளியிடப்பட்டுள்ளன.[64] அவ்வாறே பூம்பாவணியும் அடிகளார் பாக்களின் தொகுப்பாக ஒருக்கால் அழைக்கப்பட்டிருக்கலாமன்றித் தனி நூலெனக் கருதுதற்கு எவ்விதச் சான்றும் இல்லை.

உரைநடை நூல்களுள் ஞானக் கண்ணாடி கட்டுரையாளர் குறிப்பிட்டுள்ளதுபோல் வேதவிளக்கத்தின் பிற்சேர்க்கையாகப் பதிப்பிக்கப் பட்டிருப்பினும் அடிகளாரது எனக் கூறுவது ஐயத்திற்கு இடந்தரும் எனக்கூறுகிறார் பெஸ் அடிகள்.[65] ஒரு நூலின் பிற்சேர்க்கையாக அந்நூலாசிரியரல்லாத மற்றொருவர் படைப்பையும் இணைத்துப் பயன்கருதிப் பதிப்பிப்பது அக்காலத்தில் தவறாக எண்ணிலர் போலும். மயிலை. சீனி. வேங்கடசாமி அவர்கள் கி. பி. 1750-இல் ஷுல்ஸ் ஐயர் என்பவர், 'உண்மைக்கிறித்துவம்' என்னும் நூலை ஞானக்கண்ணாடி என்னும் பெயருடன் தமிழில் மொழிபெயர்த்தெழுதி அச்சிட்டார் எனக் கூறுகிறார்.[66] அதனைப் பயன்படுத்தும் நோக்கத்தில் வேத விளக்கத்தோடு இணைத்துப் பதிப்பித்திருக்கலாம்.

ஞானம் உணர்தல் என்றொரு நூல் முதற் கட்டுரையாளரால் குறிக்கப்படுகிறது. ஞானம் உணர்த்துதல் என்னும் நூலைத்தான் ஞானம் உணர்தல் என மயங்கிக் கூறுகிறார் எனத் தெரிகிறது. அடிகளார் பெயரில் அந்நூல் பதிப்பிக்கப்பட்டிருப்பினும் அது தவறு எனவும், அந்நூல் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கொன்சால்வஸ் அடிகளாருடையதென்றும், 'ஞான அஞ்சனாயா' என்று சிங்கள மொழியிலும் அதைக் கொன்சால்வஸ் அடிகளார் எழுதியுள்ளார் என்றும் பெஸ் அடிகள் நிறுவியிருக்கிறார்.[67]

அடிகளார் அகராதிகள் மூன்றுதாம் என்பது இவ்வாய்வின் 9-ஆம் இயலில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

மருத்துவம் பற்றிய அனுபவம் அடிகளாருக்கு இருந்திருப்பது அவரது தமிழ்-இலத்தீன் அகராதியால் தெரியவருகிறது. எனினும் அவர் மருத்துவ நூல் எழுதினார் என்பதற்குத் தெளிவான சான்று கிடைத்திலது. சான்று கிடைக்கும்வரை அவரது மருத்துவ நூல்கள் இவையென அறுதியிடத் துணிதல் முறையன்று.

மருத்துவ நூல்களாக அவர் பெயரில் இரண்டு கட்டுரையாளர்களும் குறிக்காத வைத்தியமுறை, நிலக்கண்டி, வீரமெழுகு, இரத்தினச் சுருக்கம், மேகனாதி எண்ணெய் போன்ற நூல்களும், உரைநடை நூல்களாக ஞானமுயற்சி, ஞானவிளக்கம் போன்றனவும்[68] வழங்கப் படுகின்றன. ஐயத்திற் கிடமானவற்றையெல்லாம் ஆசிரியர்

படைப்புக்கள் எனச் சிலவற்றை ஏற்றவர்கள், இவற்றையெல்லாம் விட்டுவிடக் காரணம் மொத்தம் முப்பத்தாறு என்பதை விஞ்சி விடலாம் என்ற காரணத்தாலோ. என வினவ இடந்தருகிறது.

இதுகாறும் கூறியவற்றால் அடிகளார் படைப்புக்கள் என உறுதிபெறக் கூறத்தக்க செய்யுள் நூல்கள் தேம்பாவணி, கித்தேரியம்மாள் அம்மானை, திருக்காவலூர்க் கலம்பகம், அன்னை அழுங்கல் அந்தாதி, அடைக்கலமாலை, அடைக்கல நாயகி மேல் வெண்கலிப்பா, பதிகம், வண்ணம் ஆகிய எட்டேயாகும். அகராதிகள் சதுரகராதி, தமிழ்-இலத்தீன் அகராதி, போர்த்துகீஸ்-இலத்தீன்-தமிழ் அகராதி ஆகிய மூன்றேயாகும். உரைநடை நூல்கள் பரமார்த்த குருகதை, வேதியர் ஒழுக்கம், வேதவிளக்கம். லூத்தர் இனத்தியல்பு, பேதகம் மறுத்தல், வாமன் சரித்திரம் ஆகிய ஆறேயாம். திருநாட்கணக்கீடாகிய திருச்சபைக் கணிதமும் அடிகளார் படைப்பே. செந்தமிழ் இலக்கணத்தில் காட்டப்பட்டிருக்கின்ற தாவிதன் முதல் சங்கீத மொழி பெயர்ப்பைத்[69] தனிப்படைப்பாகக் கொள்ள வேண்டியதில்லை.

எனவே, உறுதியான சான்றுகள் கிடைக்கப்பெறும்வரை, செய்யுள் நூல்கள் 8, உரைநடை நூல்கள் 6, இலக்கணங்கள் 4, அகராதிகள் 3, திருப்பம் 1, மொழிபெயர்ப்பு 1, நாட்கணக்கீடு 1, ஆக 24 படைப்புக்களையும் அடிகளாருக்குரியனவாகத் துணியலாம்.

5. அடிகளார் ஆற்றிய தொண்டு

கத்தோலிக்க கிறிஸ்தவ மறைபரப்பும் நோக்கங் கொண்டே தமிழகம் போந்தார் அடிகளார். அந்நோக்கத்தைக் குறைவற நிறைவேற்றியதோடிருந்திருப்பின், பிறமறையினரும் போற்றுகின்ற அளவிற்குப் பெருமை பெற்றிருக்கவியலாது.

பல்சமயத்தினரும் போற்றுவதற்கும் பாராட்டுவதற்கும் காரணம், அவரது பணி பரந்துபட்டதாக அமைந்ததேயாகும். அப்பணியினைச் சமயப்பணி, சமுதாயப்பணி, தமிழ்ப்பணி எனப் பாகுபாடு செய்யலாம்.

அடிகளாரது அனைத்துப் பணிகட்கும் அடிப்படை சமயப்பணி தான். 'தமிழை நேசித்தார். தமிழர்களை அன்பு செய்தார். ஆனால் தமிழர்களை அன்பு செய்ததைவிடத் தனது தலைவர் கிறித்துவை அன்பு செய்தார்'[70], என்னும்கூற்று முற்றிலும் உண்மையே. தம் சமயக் கொள்கைகளை விளக்கவும், தம் சமயத்தின்மீது சுமத்தப்படும் தப்பறையான கொள்கைகளைப் போக்கடிக்கவும் நூல்களைப் படைத்தார்.

தரங்கம்பாடியில் லூத்தர் சபையினர் அச்சு வெளியீடுகளின் வழியாகத் தம் மறைப்பணியினை ஆற்றினர். கத்தோலிக்க மறையிலிருந்து பலர் விலகத் தொடங்கினர். எனவே, லூத்தர் கொள்கைகட்குத் தக்க மறுப்பு நூல்கள் எழுதித் தம் மறைக் கொள்கைகளை நிலைநிறுத்த முற்பட்டார். அதன் பயனாய் எழுந்ததே வேத விளக்கம். வேத விளக்கத்திற்கு மறுப்பு நூலாக லூத்தர் சபையினரால் திருச்சபை பேதகம் என்னும் நூல் வெளியிடப்பட்டது. அதற்கு எதிர் மறுப்பாகவே பேதகமறுத்தல், லூத்தர் இனத்தியல்பு ஆகிய நூல்கள் எழுந்தன.

அடிகளார் ஏலாக்குறிச்சியில் வாழ்ந்த காலை அப்பகுதிவாழ் கத்தோலிக்கர் படும் அல்லல்களைக் கண்டு நொந்தார். அவர்களது வேதனையைப் போக்க அன்னையிடம் வேண்டினார். தாம் சரணடைந்த அன்னையை அடைக்கல நாயகி என்றழைத்தார். அவளுக்கு ஆலயம் ஒன்றெழுப்பி, அவ்விடத்திற்கு அன்னையின் காவல் என்றென்றும் உண்டு என்ற எண்ணத்தில், திருக்காவலூர் எனப் பெயரிட்டார். அவளுக்காகவும், அவளது பெருமைகளைப் பறைசாற்றவும் படைக்கப்பட்டனவே திருக்காவலூர்க்கலம்பகம், அடைக்கலமாலை, அன்னையழுங்கல் அந்தாதி போன்ற பிரபந்தங்கள். தம் நாட்டு வேத சாட்சியான புனிதை கித்தேரியம்மாள்மீது மக்களுக்குப் பத்தி ஏற்பாடு செய்ய எழுதியதே கித்தேரியம்மாள் அம்மானை.

அடிகளார் ஏலாக்குறிச்சியை விடுத்து வெளியே பணியாற்றிய இடங்களுள் ஒன்றாக விருத்தாசலத்திற்கு அருகிலுள்ள கோனான் குப்பம் என்னும் சிற்றூர் கருதப்படுகிறது. அங்கு ஓர் ஆலயம் எழுப்பினார். அடிகளார் எழுப்பிய முதல் ஆலயம் அதுவே. அன்னையின் திருவுருவைத் தமிழ்ப் பெண்ணாக உருவகித்துத் தம் கைப்பட ஓவியமாக வரைந்தார். அதனை மணிலாவிற்கு அனுப்பி அதற்கொத்த திருவுருவச் சிலையை அங்கிருந்து தருவித்துக் கோனான்குப்பத்தில் தாம் கட்டுவித்த கோவிலில் எழுந்தருளுவித்தார். அவ்வன்னைக்குப் பெரிய நாயகி அம்மாள் எனப் பெயரிட்டார்.[71] அவ்வன்னையின் துணைக்கொண்டே தேம்பாவணிக் காப்பியம் புனைந்தார். அறிஞர் தனிநாயக அடிகள், ''தேம்பாவணி கிறித்தவ நீதி நூலாக விளங்குகிறது'' என்றும், ''இக்காப்பியம் திருமறையின் கோட்பாடுகளும், வரலாறுகளும், தத்துவங்களும், நீதிகளும், வழிபாட்டு முறைகளும் அடங்கிய பெருங்களஞ்சியம்''[72] என்றும் குறிப்பிடுகிறார்.

செய்யுள் நூல்கள், உரைநடை நூல்கள் மட்டுமல்ல; ஏனைய இலக்கண நூல்கள், அகராதிகள் போன்றனவும் தம்மைப் போன்ற

சமயப்பரப்புநர்க்கு, அவர்தம் பணிகட்குத் துணைபுரியப் பயனாகும் பொருட்டுப் படைக்கப்பட்டனவேயாம் என்பது அந்நூல்களின் முன்னுரைகளால் தெளியலாம்.

அடிகளார் செய்த மறைப்பணியின் பயனாக, ஆண்டுதோறும் சராசரி 214 பேர் கத்தோலிக்க மறை தழுவினரென்றும், 721 குழந்தைகள் திருநீராட்டுப் பெற்றனர் என்றும் தெரியவருகின்றது.[73]

அடிகளாரது சமயப்பணி சமுதாயப் பணியுடன் பின்னிப் பிணைந்தது. தம் சமயம் சார்ந்தோருக்காகவும், தம் மறை பரப்புவதற்காகவும் தாம் எத்தகைய தொல்லைகளையும் எதிர் நோக்கச் சித்தமானார். தமிழகச் சமுதாய மக்களுக்காக, அவர்கள் தம் நல்வாழ்விற்காக எவரையும் சந்திக்கத் தயங்கினாரல்லர்.

1713 - ஆம் ஆண்டில் குருக்கள்பட்டியில் பணியாற்றிக் கொண்டிருந்தார். வஞ்சகன் ஒருவன் அப்பகுதியில் வந்திருந்த நாயக்கர் படையிடம் ஏராளமான பணத்தை அடிகளார் புதைத்து வைத்திருப்பதாகக் கூறினான். படைகள் ஊரைச் சூழ்ந்தன. அடிகளாரும் இரு உபதேசியார்களும் கைது செய்யப்பட்டுப், படைத்தலைவனிடம் கொண்டு நிறுத்தப்பட்டனர். அவன் அடிகளாரைச் சில கேள்விகள் கேட்டான். அவரது அமைதியான பதில் அவனுக்கு மனநிறைவு தரவில்லை; மாறாகச் சினத்தை மூட்டியது. அடிகளாரை விலங்குகளால் பிணிக்கப்பணித்தான். மறுநாட்காலை கொல்லவும் முடிவெடுத்து விட்டான். ஆனால், அடிகளாரது மறைப்பணி வீணாகி விடவில்லை. அரசகுலம் சார்ந்த கிறிஸ்தவர்கள் செய்தியறிந்து அங்கு வந்தனர். படைத்தலைவனிடம் அடிகளார் விடுதலையை வேண்டினர். இல்லையேல் விபரீதம் நேரலாம் என்ற அச்சத்தில் பயந்து விடுதலையளித்தான். புதைத்து வைத்திருந்தாகக் கருதப்பட்ட பணப்பை கொண்டுவரப்பட்டது. அதில் இருந்தவை பொற்காசுகள் அல்ல, பொன்முலாம் பூசப்பட்ட வட்டவடிவமான சுரூபங்களே எனத் தெரியவந்தது. பின்னர், இந்நிகழ்ச்சி குறித்துத் தம் உரோமைத் தலைவருக்கு அடிகளாரே எழுதியுள்ளார். வேதத்திற்காய் உயிர்விட இருந்த நல்வாய்ப்பு, தம் பவவினையால் பாழாயிற்றே என்ற ஏக்கம் அதில் தொனிக்கிறது.[74]

ஒரு முறை ஆவூரை அடுத்த கள்ளர்கள் சிலர் முகமதியப் படைவீரர் தங்கியிருந்த பாளையத்துட் சென்று மாடுகளைக் கவர்ந்து கொண்டனர். உண்மை அறியாத வீரர்கள் ஆவூர் குடிகட்காகப் பரிந்து பேசிய அடிகளாரைக் கைதிபோல் கருதிப் படைத்தலைவனிடம் இட்டுச் சென்றனர். உண்மையறிந்த படைத்தலைவன் அடிகளாரை

விடுவித்தான்; அடிகளாருக்குப் பரிசில் அளித்துப் பெருமைப் படுத்தினான்.[75]

படைத்தலைவன் வழியாகத் தஞ்சையை ஆண்டுவந்த சந்தாசாகிபைச் சந்திக்கும் வாய்ப்பினை அடிகளார் பெற்றார். அடிக்கடி உரையாடினார். அவர் மனமகிழுமாறு விரைவிலேயே இந்துஸ்தானி, பாரசீக மொழிகளைக் கற்று வல்லரானார் இருவருக்குமிடையே இடையறா நட்பு ஏற்பட்டது. அவர்தம் ஆளுகைக்குட்பட்ட பகுதியெங்கணும் தமக்கும், தம் சமயத்தாருக்கும் எவ்வித இன்னலும் ஏற்படாவாறு உறுதி மொழிகளையும் ஆணைகளையும் அடிகளார் பெற்றார்.[76] அவ்வாறே அவர் ஆளுகை உள்ளவரை அடிகளார் வாழ்வு மட்டுமன்று, அவர்தம் மறைமக்கள் வாழ்வும் இனிது நடக்கவும், அவர்தம் மறை செழிப்புற்று வளரவும் அடிகோலினார்.

அடிகளாரது அருந்தமிழ்ப்பணி அளவிடற்கரியது. தமிழக வரலாற்றில் மொழித் தொண்டாற்றிய முனிவரர் பலரெனினும், தமிழ் முனிவர் என்னும் சிறப்பு விருதோடு அழைத்தற்குரியார் அடிகள் ஒருவரே என்றும், தமிழ் முனிவருள் இவர் ஒரு தனி முனிவர் என்றும் கூறப்படும் கருத்து சிந்தனைக்குரியது.[77]

பிறநாட்டு நல்லறிஞர் ஒருவர் தமிழ் மொழியில் காப்பியம் படைத்த பெருமை இவருக்கே உரியது. முறையான அகரநிரல் பெற்ற முழுமையான முதற்றமிழ் அகராதியைத் தந்தவர் இவரே. பரமார்த்த குருகதை வழியாக ஏளன இலக்கியத்திற்குத் தோற்றுவாய் தந்தவர், தமிழ் மொழியின் இருவேறு நிலைகட்குச் செந்தமிழ், கொடுந்தமிழ் இலக்கணங்களைத் தந்தவர், முதன்முதல் திருக்குறளை மொழி பெயர்ப்புச் செய்தவர், எழுத்துச் சீர்திருத்தம் புரியத் துணிந்தவர்,[78] தமிழ் மொழி வரலாற்றில் இவர் ஒருவரே.

அடிகளார் தமிழ் மொழிக்குத் தொண்டாற்றினார் என்பதினும் தமிழராகவே மாறிவிட்டார் என்பதே பொருந்தும். தம் துறவற நெறிக்கேற்பக் குறித்த உடையிருந்தும், தத்துவ போதகரைப் பின்பற்றித் தமிழ்த்துறவியாக மாறினார்; காவியுடை தரித்தார்; குண்டலம் பூண்டார்; பாதக் குறடுடன் நடமாடினார்; புலித் தோலில் அமர்ந்து தமிழ்ச் சித்தரானார்; உணவில் புலாலை மறந்தார். இவர்தம் இயற்பெயரான கான்ஸ்டன்டைன் ஜோசப் பெஸ்கி என்பது வீரமாமுனிவரென மாறிவிட்டதொன்றே, இவரே தமிழ் முனிவரென எடுத்தியம்பப் போதுமான தொன்றாம்.[79]

அடிக்குறிப்பு

1 Julein Vinson, M. P., 323.
2 (i) Besse, Fr. L. (ii) Gnanapragasam, Fr. V. M. (iii) Meenakshisundaram, K. (iv) பண்டாரம் நம்பியார். ஈ. (v) ரம்போலா மாஸ்கரனேஸ். (vi) சேதுப்பிள்ளை, இரா பி. (vii) வேங்கடசாமி, மயிலை. சீனி. (viii) சுந்தரம், ஜே. ஜீ.
3 முத்துச்சாமி பிள்ளை, பக். 1.
4 ....
5 Besse Fr. L. P. 3 ,
6 Meenakshisundaram, K. P., 28.
7 Besse, Fr. L. P., 16.
8 Besse, Fr. L. P., 77
9 பரந்தாமனார், அ. கி. பக்., 446.
10 (1) சிங்காரவேலு முதலியார், ஆ. 1. பக். 1495 (2) குமாரசுவாமிப் புலவர், சுன்னாகம். ஆ. பக்., 177
11 தொன்னூல் விளக்கம், முன்னுரை.
12 Besse Fr. L. P., 8.
13 Feroli D. P., 310
14 Meenakshisundaram K. P., 30.
15 கலைக்களஞ்சியம், தொகுதி, 7. பக்.,136.
16 Gnanapragasam Fr. V.M.P., 49.
17 Besse, Fr. L. P., 81.
18 ....P., 85
19 சதுரகராதி-1, தொடை, பக். 139.
20 தேம்பாவணி, பாயிரம், முதற்பாடல்.
21 முத்துச்சாமிப்பிள்ளை, பக்., 8.
22 தேம்பாவணி, சிறப்புப்பாயிரம், முதற்பாடல்.
23 தொன்னூல் விளக்கம், 268
24 நாகசாமி, இரா. பக்., 18.
25 தமிழ்ப்புலவர் வரிசை, 6-ஆம் தொகுதி, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.
26 Subramania Iyer, A. V. P., 79.
27 Sathianatha Iyer, R. P., 36.
28 ....37.
29 Sathianatha Aiyar. R. P., XI.
30 Besse K. L. P., 67,
31 Feroli. D. P., 311.
32 A grammar of High Tamil, Babington B. G. (Ed) P., 8.
33 சதுரகராதி-1, பெயர், பக்.81.

34 குமாரசுவாமிப்புலவர், சுன்னாகம், அ. பக்கம். 192.
35 சொக்கலிங்கம், இராய. நூல்முகம், பக்., 5.
36 பரந்தாமனார், அ.கி. பக். 437.
37 சிங்காரவேல் முதலியார் 1, பக். 700
38 சொக்கலிங்கம், இராய. நூல்முகம், பக்., 6
39 பரந்தாமனார், அ.கி. பக். 437
40 சோமசுந்தர தேசிகர்.
41 பரந்தாமனார், அ.கி. பக்., 439 - 449
42 சொக்கலிங்கம், இராய. நூல்முகம், பக்., 4
43 கலைக்களஞ்சியம், தொகுதி-5, பக்., 63
44 சொக்கலிங்கம், இராய. (நூல்முகம்) பக்., 4.
45 பரந்தாமனார், அ.கி. பக்., 437.
46 சுப்பிரமணிய பிள்ளை, கா. பக். 394.
47 சொக்கலிங்கம், இராய. பக்., 13.
48 சிங்காரவேல் முதலியார், ஆ.2 பக்., 1049.
49 A Grammar of High Tamil, Babington B.G. (Ed). p., 62.
50 சொக்கலிங்கம், இராய. பக்., 18. 11.
51 பரமார்த்த குருவின் கதை, முன்னுரை, பக். ii
52 ...., iii
53 (1) பரந்தாமனார், அ. கி. பக்., 445. (2) நாகசாமி, இரா. பக். 8
54 கலைக்களஞ்சியம், தொகுதி, 5. பக்., 63
55 ஆய்வாளர் நேரில் சொற்பொழிவுகளில் கேட்டவை.
56 சிறப்புமலர், வளனரசு, பா. (பதிப்பு)
57 சிறப்புமலர், பக்., 44
58 தோழன், பக்., 73
59 ஆரியனூர் அமுதம், பக்., 5
60 ...., பக்., 12
61 திருப்பாடல்கள், பக்., 44
62 Besse, Fr. L. P., 102
63 தோழன், பக்., 76
64 Besse, Fr. L. P., 190, 191
65 ...., P., 198
66 கிறிஸ்துவமும் தமிழும், பக்., 33

67 Besse, Fr. L. P., 238.
68 .... P., 237, 245
69 A Grammar of High Tamil, Babington, B. G. (Ed.), P., 146
70 சிறப்பு மலர், பக்., 41
71 Besse, Fr. L. P., 3
72 சிறப்பு மலர், பக் 427
73 .... பக்.
74 Besse, Fr L. P. 44 43
75 சுந்தரம், ஜே. ஜி. பக்.44
76 .... பக். 48, 49.
77 இன்னாசி, சூ. - 3 பக்., 27
78 வேங்கடசாமி, மயிலை. சீனி. பக். 76
79 இன்னாசி, சூ-3 பக்., 32

தமிழகத்தில் அடிகள் பணியாற்றிய இடங்கள்



1. கோவா
2. அம்பலக்காடு.
3. மணப்பாடு
4. தூத்துக்குடி
5. காமநாயக்கன்பட்டி
6. குருக்கள்பட்டி
7. அய்யம்பட்டி
8. கயத்தாறு
9. மறவநாடு
10. ஏலாக்குறிச்சி
11. மதுரை
12. பாண்டிச்சேரி
13. வடுகர்பட்டி
14. கோனான்குப்பம்
15. ஓரியூர்
16. ஆவூர்



இயல் 2

அகராதியியல் வளர்ச்சியில் சதுரகராதி

1. அகராதிப் பெயர்

சொற்கட்குப் பொருள்தரும் நூலினுக்கு அகராதி என்னும் பெயர் அமைந்ததன் காரணம் ஆய்விற்குரியது. அகராதி என்னுஞ் சொல் அகரம், ஆதி என்னும் இரு சொற்களின் ஒட்டாகும். 'அ' என்னும் உயிர் கரம் என்னும் சாரியை பெற்று அகரமாயிற்று. ஆதி என்பது தொடக்கம் என்னும் பொருள் கொண்டது. ஆதலின், அகரத்தைத் தொடக்கமாகக் கொண்டு நிரல்படுத்திப் பொருள் கூறுவது-அஃதாவது, அ, ஆ, இ, ஈ என்னும் முறையில் சொற்களுக்குப் பொருள் தருவது என்னுந் தன்மையில் ஆளப்பட்டுள்ளது. ஏலம் முதலான பொருள்களைக் குறிக்க ஏலாதி என்னுஞ் சொல் ஆளப் படுவது போல் ஆகுபெயராய் அகர முதலான சொற்களின் பொருள் தருவது அகராதி எனினும் அமையும்.

இச்சொல் அகர முதலான நிரல் எனப் பொருள் தரும் 'Alphabetical Order' என்னும் ஆங்கிலச் சொல்லினை யொட்டியது. அவ் ஆங்கிலச் சொல் கிரீக் மொழியினின்று வந்ததென்பர்.[1] கிரீக் மொழியில் 'Alpha' 'Beta' என்பன A, B எழுத்துக்களைச் சுட்டும் இருவேறு சொற்களாகும். எனவே A, B, C, D என்னும் நிரல் முறையினை, அவ்வெழுத்துக்களைக் கொண்டுள்ள சொற்களையே இணைத்து ''Alphabetical Order" என்றனர்.

சிறுவர்கட்கு நெடுங்கணக்கைக் கற்றுக் கொடுக்குங்கால் அவை யமைந்த சொற்களை, அணில், ஆடு என்றாற்போன்று கூறிக் கற்றுக் கொடுப்பதால், ஆங்கிலத் தொடரைப்போன்று அகரநிரலைக் குறிக்க 'அணிலாடுவரிசை' என்ப் புதுப்பெயர் படைக்கலாம் என்பார் உண்டு.[2]

கூர்ந்து நோக்கின் அகராதி என்பதும் அவ்வடிப்படை கொண்டதே. அகரம், ஆதி ஆகிய இரு சொற்களின் முதல் எழுத்துக்கள் அ, ஆ நிரன்முறையைக் குறிக்க அகராதி எனப் பெயர் அமைந்தது முற்றிலும் பொருத்தமே. இப்பெயரைப் படைத்த முன்னோருக்கு,

> ''அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
> பகவன் முதற்றே உலகு''[3]

என்னும் திருக்குறளிலுள்ள அகரம், ஆதி என்னும் ஒரே வரியில் அமைந்த சொற்கள் வழிகாட்டியிருக்கலாம். எழுத்தின் தொடக்கமான அகரமும், அதைப் போன்று உலகின் தொடக்கத்தைச் சுட்டும் ஆதியும் ஒன்றாகத் திருக்குறளின் தொடக்கமான குறளில் அமைந்து மொழியறிவையும், இறையுணர்வையும் ஒருங்கிணைத்து எண்ணத் தூண்டுதலின் அவ்வெண்ணங்கொண்டு நூல்களை எழுதத் தொடங்கிய முன்னோருக்கு அக்குறட்டொடர்களின் அடிப்படையில் பெயர் சூட்டும் வேட்கை தோன்றியிருப்பின் வியப்பின்று.

அகராதி என்னும் பெயரை அறிமுகப்படுத்தியோர் 'அகரமுதல' எனத் திருக்குறளிலும், 'அகரமுதல் னகர இறுவாய்,[4] எனத் தொல்காப்பியத்திலும் வரும் தொடர்களின் அடிப்படையில் 'அகரமுதல்' என்னும் அழகிய தூய தமிழ்ப் பெயரைத் தம் நூலிற்கு வைத்திருந்தால் இன்னும் நன்றாக இருக்கும் எனக்கருதுவர்[5]. ஆதி என்னும் சொல் தூய் தமிழ் அன்று என்பது அவர்தம் எண்ணம். அந்நாற்றான் தற்காலத்தில் அகராதி என்பதனை விடுத்து அகரமுதலி என வழங்கத் தலைப்படுவாராயினர்.[6]

அகராதியின் முழுமுதல் நோக்குச் சொற்கட்குப் பொருள் கூற லாகும். ஆயின், தொடக்கத்தில் பொருள் கூறத்தலைப்பட்ட நூல்கள் அந்நோக்கில் எழுந்தனவல்ல; அகர முதல் நிரலை முறையாகக் கொண்டனவல்ல. காலந்தோறும் மாறி வந்த பிற அறிவியற்றுறை-களைப் போன்றே அகராதித்துறையும் படிப்படியான வளர்ச்சியைப் பெற்றுப் பல்வேறு பிரிவுகளையும், பல்லாயிரக்கணக்கான சொற்களையும் கொண்டு தற்காலத்து வழங்குகிறது.

இலக்கியங்களைக் கற்போர் அவற்றில் வரும் அருஞ்சொற்களின் பொருளையோ, சிறப்புக் குறிப்புக்களையோ அச்சொற்களின் அருகில் வரிகளின் ஓரத்திலோ அன்றி வரிகட்கிடையிலோ குறித்து வைத்துப் பயன்படுத்துவதைத் தற்காலத்தில் காணலாம். அடிகளார், தம் காப்பியத்தில், பின்னர்ப் படிக்குங்கால் இடையிடையே அவ்வகைக் குறிப்புக்களையும், படியெடுப்போர் பிழைகளையும் குறித்து வைத்தனர் எனக் கருதுவர்.[7] இப்பழக்கம் மேலை நாடுகளில் பழங்கால

முதல் இருந்து வந்துள்ளது. கிரீஸிலும், ரோமிலும் கையெழுத்து மூலங்களைப் படியெடுப்போர் இடையிலோ, ஓரத்திலோ கடினமானவற்றின் பொருள் விளக்கங்களைக் குறித்து வைத்திருந்தது காணப்படுகிறது.[8] ஏழாம் நூற்றாண்டில், இங்கிலாந்திலுள்ள மாணவர்கள் பயன்படுத்திய கையெழுத்துப் பிரதிகளில் பெரும் பகுதி லத்தீனிலும், சிறுபகுதி லத்தீன் அல்லது ஆங்கிலோ - சாக்ஸனிலும் இவ்வகைக் குறிப்புக்கள் இடம் பெறுகின்றன.[9]

எட்டாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் இவ்வகைக் குறிப்புகட்கு இலக்கான சொற்களைத் தொகுக்கத் தொடங்கினர். அத்தொகுதிகள் அதிகமாகக் குருமடங்களில் இடம் பெற்றன. அங்குள்ள ஆசிரியர்களும் மாணவர்களும் தொகுப்பில் உள்ள சொற்களை வரிசைப்படுத்தினர்[10]. இத்தொகுப்புக்கள் மாணவர்கட்குப் பயன் நல்கும் ஒரு வகை அகராதி போலாயின. இவையே பிற்காலத்தில் முறையான அகராதிகள் மேலை நாடுகளில் உருப்பெற அடிப்படையாயின.

இந்தியாவில், வேதத்தோடு தொடர்புடைய இலக்கியங்களில் ஒரு துணைப்பகுதியாக நிகண்டுகள் என்பன தொகுக்கப் பெற்றன. குறித்த இன்றியமையாத எண்ணத்தொடர்புடைய சொற்களே அவற்றில் இடம் பெற்றன. சான்றாக உலகம் என்பதற்கு 21 பெயர்களும், நீர் என்பதற்கு 101 பெயர்களும், காற்று என்பதற்கு 16 பெயர்களும், செல் என்னும் வினைக்கு 122 சொற்களும் கொண்டுள்ளன. ஆனால் இவை முறையான வேதக் கல்விக் கூடங்களில், வாய்மொழியாகவே ஒருவரால் பிறருக்கு அறிவிக்கப்பட்டு வேதாங்க நிருக்தாவில் தற்பொழுதுள்ள ஒரே பகுதியான யாஸ்காவின் நிருக்தா அடிப்படையான் அமைந்தன.[11]

நிருக்தாவிற்கு அடுத்தபடியாக அமரஸிம்ஹாவின் நாமலிங்கானுசாசனா என்பதே முழுமையான அகராதியாகக் கருதப்படுகிறது[12] அது கி. பி. ஏழாம் நூற்றாண்டில் தோன்றியதால். கி. பி. 1300இல் புருஷோத்தம் தேவா என்பவர் அவரது த்ரிகண்டசேஷாவில் நிருக்தாவிற்கு ஒரு பிற்சேர்க்கையை இணைத்தார். கி. பி. 10ஆம் நூற்றாண்டில் தோன்றிய ஹலாயுதாவின் அபிதான ரத்னமாலா, அதற்கு ஒரு நூற்றாண்டிற்குப்பின் தோன்றிய யாதவப்ரகாஸாவின் வைஜயந்தி, ஹேமச்சந்திராவின் அபிதான சிந்தாமணி, மஹேஸ்வராவின் விஸ்வப்ரகாஸா, கி. பி. 12ஆம் நூற்றாண்டைச் சார்ந்த மங்காவின் மங்ககோஸா ஆகியவை சமஸ்கிருத மொழியில் அகராதித் துறையில் பழைமையுடையனவாகக் குறிப்பிடத்தக்கவை.

தமிழில் வழங்கும் மிகப் பழம் நூலாகிய தொல்காப்பிய இலக்கணத்தில் சொற்பொருள் விளக்கக்கூறுகள் நிறைய இடம்

பெற்றுள்ளன. குறிப்பாக 'உரியியல்' அந்நோக்கிற்கே உரித்தாக்கப் பட்டு, 120 சொற்கட்குப் பொருள் கூறப்படுகின்றன. அகர நிரன் முறையினை உரியியலில் பயன்படுத்தவில்லை. எனினும் உலக மொழிகளுள், வாய்மொழியானன்றி எழுத்துருப்பெற்ற நூல்வடிவான் சொற்பொருள் விளக்க முன்னின்றது தமிழே எனக் கொள்ள இடமிருக்கின்றது.

ஆங்கிலத்தில் சொற்பொருள்விளக்க அடிப்படையில் படைக்கப் பட்ட நூல்கள் சொற்றொகுதி[13], சொற்றோட்டம்[14], சொற் கிடங்கு[15], சொற்கருவூலம்[16], சொற்றேன்கூடு[17], அரிச்சுவடி[18], வெளிக்காட்டி[19], அருஞ்சொற்காட்டி[20], கையடக்கச் சொற்கள்[21], செம்மொழி அகராதி[22] போன்ற பற்பல பெயர்களால் வழங்கப் பட்டுள்ளன. இந்திய நாட்டில் திராவிட மொழிகளாகிய தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற மொழிகளில், நிகண்டு, நாம சங்கரகம், இரத்தினாகரம், நாமசேசம், பாஷார்னவம், அமரகோசம், தீபிகை, சப்தார்த்தம் போன்ற பெயர்களால்[23] சொற்பொருள்விளக்க நூல்கள் அமைந்துள்ளன. தமிழில் சொற்பொருள் கூறும் நூல்கள் நிகண்டு, கூட்டம்[24], உரிச்சொல்[25], உரிச்சொற்பனுவல்[26], நாம தீபம், நானார்த்த தீபிகை, அரும்பொருள் விளக்கம், பல்பொருள் சூடாமணி போன்ற பெயர்களால்[27] அழைக்கப்பட்டிருக்கின்றன. வேறுபடுபெயரெல்லாம் பார்க்கின் அவற்றின் ஊடுபொருள் பொருட் புலப்பாடன்றி வேறின்று. தெரிவு செய்த சொற்களுக்குக்கேற்ப, தெரிவிக்க முயன்ற நெறிகளுக்கேற்ப அவை பற்பல பெயரால் அழைக்கப்பட்டன.

2 அகரநிரன்முறை

அகராதியியலின் உயிர்க்கூறு அகர நிரல் முறையாகும்.[28] தற்காலத்தில் வழங்கிவரும் அகரநிரலே பழங்கால முதல் வழங்கி வந்திருக்கிறதா என்பது கேள்விக்குரியது. தமிழலக்கண நூல்கள் அம்முறையைத் தெளிவுபடச் சுட்டவில்லை. எனினும் தொல் காப்பியத்தில் இலைமறைகாயென அகரநிரல் அமைந்து கிடக்கின்றது. எழுத்து இலக்கணத்தில் ஒரு கூறாய முறையினை[29] விளக்க வந்த நன்னூல், முறை வைப்பில் முன்னுற அமைவன சிறப்பிற்குரியனவா கவும், பின்னர் வருவன முன்னையவற்றை நோக்கச் சிறப்பில்லனவா கவும் கருதுவதாகக் கொள்ளலாம்.[30] இஃது எவ்வளவில் பொருந்தும் என்பதும் சிந்தனைக்குரியது.

தொல்காப்பியம் முதல் நூற்பாவில் 'அகர முதல்' எனக் குறித்துப் பின் எட்டாம் நூற்பாவில் ''ஔகார இறுவாய்

பன்னீரெழுத்தும் உயிரென மொழிப'' எனக் கூறுவதால், பன்னீரெழுத்து உயிரெனவும், அவை அகர முதல் ஔகார இறுவாயாக அமைவனவெனவும் பெறப்படுகின்றன. இடையில் உள்ள 3,4—ஆம் நூற்பாக்களில் ஏனைய உயிர்கள் பத்தன் முறை சிந்தித் துணரும் வகையான் அமைந்துள்ளது. இந்நூற்பாக்களில் குற்றெழுத்து, நெட்டெழுத்துக்கள் பாகுபாடு செய்யப்படுகின்றன. அ, இ, உ, எ, ஒ ஆகியனவற்றைக் குறிலென்ப எனக்கூறி, அடுத்த நூற்பாவில் ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ ஆகியனவற்றை நெடிலென்ப எனச் சுட்டுவதால், அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஒ, ஓ என்ற முறையும் அவற்றுக்கிடையே உள்ள வேறுபாடு மாத்திரை அளவு என்ற தன்மையும் பெறப்படுகின்றன. இவ்வளவில் அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஒ, ஓ, ஔ என்னும் முறை தெளிவாயினும் ஐகாரத்தின் நிலை யாதென்னும் வினா எழுகிறது. ஐகாரம் ஏகாரத்திற்குப் பின்னரும், ஓகாரத்திற்கு முன்னரும் 3—ஆம் நூற்பாவிற் கூறப் படுவதையொட்டி, ஐகாரத்தை ஓகாரத்தை யொத்த குறிலான ஒகாரத்தின் முன்னரும் ஏகாரத்தின் பின்னரும் அமைவதாகக் கொள்ளலாம். எனவே, தொல்காப்பியத்தின்படி அமைந்த உயிர் எழுத்துக்களின் நிரல் அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ ஒ, ஓ, ஔ என்பது தெரிகிறது. தொடக்கத்தில் குறிப்பாகக் காட்டப்பட்ட உயிர் நிரல் முறை, பின்னர் வெளிப்படையாக உயிர் மயங்கியலில், அகரந் தொடங்கி ஔகார முடிய ஈறுகளையமைத்து விதிகள் சுட்டப் படுவதால் தெளிவாகிறது.

மெய்யெழுத்துகளைத் தொல்காப்பியர் மூவகையாகப் பகுத்துக் க ச ட த ப ற, ஙஞணநமன, யரலவழள என முறைப் படுத்துகிறார்.[31] இம்முறை அவ்வவ்வின எழுத்துக்கட்கு காணப் படுகின்ற முறையன்றிப் பதினெண் மெய்களையும் ஒன்றாக நோக்குங்கால் பொருந்தாது. ஏனெனில்,

''னகார இறுவாய்
பதினெண் எழுத்தும் மெய்யென மொழிப''[32]

எனக்கூறுவதினின்று மெல்லெழுத்தின் ஈற்றில் அமைந்த னகரம் மெய்ம் முறையில் இறுதி என்பது தெளிவு. அவ்வாறாயின், பிறமெய்களின் முறைவைப்பினை எவ்வகையான் உணரலாம் என்பதும் பிறப்பு, முயற்சி அதற்குத் துணைபுரியுமா என்பதும் சிந்தனைக்குரியன வாகின்றன. வல்லெழுத்துக்களைக் ககரத்தினின்று தொடங்கியது போன்றே பிறப்பு முயற்சி கூறும்பொழுதும் ககரத்தையே முதலில் கூறுகின்றார்[33]. அஃதோடன்றியும் பிறவெழுத்துக்களோடு ககரம் சேர்த்து வருகின்ற இடங்களிலும் ககரமே முதன்மை பெறுகிறது. ககர முதல் னகர இறுவாய் எனின் இடையில் உள்ளவற்றின் இடம்

யாதென்னும் வினா எழும். பிறப்பு முயற்சி ஒவ்வொரு வல்லெழுத்திற்கும் அவ்வவற்றின் இனமான மெல்லெழுத்துடன் சேர்த்துக் கூறப்படுகிறது. எனவே வன்மை மென்மை காரணமாகக் கசடதபற, ஙஞணநமன என வேறு வேறாக முறைப்படுத்தினும், மெய்யென்னும் பொதுநோக்கில் அவ்வவற்றின் இனத்தோடிணைத்து கங, சஞ, டண, பம, றன என அமைவதே முறை எனத் தெரிகிறது. ஆயின் னகரத்தை இறுதியாகக் கூறினமையின் அதனினமாகிய றகரம் அதனையொட்டி அமைதல் வேண்டும். எனவே கஙசஞடணதநபம ஆகியவற்றை அடுத்து வேறு ஆறு எழுத்துக்கள் அமைய, அவற்றை அடுத்து றன அமையும். இடையில் அமையவேண்டியவை எஞ்சி நிற்கும் இடையெழுத்துக்களாகும். இடையெழுத்துக்கட்கான முறை பிறப்பு முயற்சிக்கேற்ப பிறப்பியலில் சிற்சில இடங்களில் மாறி யிருப்பினும், பிற விடங்களில் யரலவழள என்னும் முறைப்படியே அமைந்துள்ளன. எனவே இடையெழுத்துக்களை, இம்முறையில் பிற மெய்களோடு இடையில் சேர்த்து நோக்கும்பொழுது, க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் என்பதே மெய்களின் முறைவைப்பென உறுதியாகும்.

க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம் ஆகியவற்றின் முறை வைப்புக்குப் பிறப்பும் செய்கையும் ஒத்திருத்தலே காரணமென 'இனிக் ககார ஙகாரமுஞ் சகார ஞகாரமும் டகார ணகாரமும் தகார நகாரமும் பகார மகாரமுந் தமக்குப் பிறப்புஞ் செய்கையும் ஒத்தலின் வல்லொற்றிடையே மெல்லொற்றுக் கலந்து வைத்தார்" என நச்சினார்க்கினியர் விளக்குவர். ''பிறப்பு ஒப்புமையானும் னகரம் றகரமாய்த் திரிதலானும் றகரமும் னகரமுஞ் சேர வைத்தார்'' என றகர னகரங்கள் இணைந்து அமைந்ததன் காரணத்தைப் பின்னும் நச்சினார்க்கினியர் விளக்குவதற்கு இயையவே சிவஞான முனிவரும், 'மெய்களுள், வலியாரை முன்வைத்து மெலியாரைப் பின் வைத்தல் மரபாகலின், அச்சிறப்பு நோக்கி, வல்லெழுத்துக்கள் முன்னும் அவ்வவற்றிற்கு இனமொத்த மெல்லெழுத்துக்கள் அவ்வவற்றின் பின்னும் வைக்கப்பட்டன'' எனக் கூறுவர். வல்லொற்றையடுத்த மெல்லொற்று அமைவதுபற்றிக் கருத்து வேறுபாட்டிற்கு இடமின்றெனினும் றகர னகரங்கள் மட்டும் ஈற்றில் ஏன் அமைய வேண்டும் என்பது வினவுதற்கிடனாகின்றது. தமிழ் எழுத்தென்பதை அறிவித்தெற்கென உரையாசிரியர்கள் கூறுவது ஓராற்றான் பொருந்துமெனினும், 'சிறப்புடைப் பொருளை முந்துறக் கிளத்தலே'' சிறப்பென்பாராகலின் சிறப்புடையனவற்றை முன்னர்க் கூறிப் பின்னர்ப் பொதுவானவற்றைக் கூறவேண்டும் என்பதும், சிறப்பெழுத்துக்கள் இறுதியில் அமையவேண்டுமெனினும், பவணந்தியார் தமிழுக்குச் சிறப்புடைய மெய்களாகச் சுட்டும் மெய்கள்

ழறன என்னும் முறையில் அமையாமல் அவற்றுக்கிடையே சிறப்பில்லா ளகரம் 'ழளறன' என்னுமாறு இடம் பெறுகின்றது என்பதும் அவ்விளக்கத்திற்குத் தடைகளாகின்றன. மேலும் இடையெழுத்துக்கள் யரலவழள என்னும் வகையில் அமைந்ததற்குப் பிறப்புஞ் செய்கையும் ஒவ்வாவேனும் ''சந்தவின்பத்திற்கு இயையுடைமை கருதிச் சேர வைத்தார் போலும்'' என்னும் நச்சினார்க்கினியர் குறிப்பால் ஒரு வகையான் அமைதி பெறலாமன்றித் தெளிவு பெறுமாறில்லை.

தமிழ் எழுத்து முறையில் தமிழுக்கும் வடமொழிக்கும் பொதுவான எழுத்துக்கள் முன்னரும் ஈற்றில் சிறப்பெழுத்துக்களும் இயல்பிலேயே அமைந்து கிடக்குந் தன்மையையும், வடமொழி வர்க்க எழுத்துக்களில் முதலில் நிற்கும் க, ச, ட, த, ப என்னும் எழுத்துக்களும் ஈற்றில் நிற்கும் அவற்றின் இனங்களும் வருகின்ற நிலையையும், பின்னர் யரலவ ஆகியவற்றின் முறையும் எண்ணித் தமிழ் முறை வடமொழியினையொட்டியது எனக் கால்டுவேல் போன்றோர்[36] கருதத் தலைப்பட்டனர். அதற்கு மறுப்புரைக்கும் வகையில் தமிழ் எழுத்து முறையையே மாற்றி, ஒலியியல் மரபிற்கு ஏற்ப, ய, ர, ல, வ, ழ, ள, க, ங, ச, ஞ, ட, ண, த, ந, ப, ம, ற, ன என்றே முன்னர் அமைந்திருத்தல் கூடுமென்றும் ஆய்ந்து கூறியவர் உளர்.[37] தொல்காப்பியர் இயன்றஅளவில் எழுத்து முறைகளைத் தவறவிடாமல் கையாளுவதைப் பல இடங்களில் காண முடிகிறது. ஓரின எழுத்துக்கள் மிகுதியாக வருங்கால் அவ்வெழுத்துக்களை ஒருங்கே கூறிப் பிறவின எழுத்துக்களைப் பின்னர்ச் சேர்த்துக் கூறும் மரபினை,

> ''யரழ என்னும் மூன்றும் ஒற்றக்
> கசதப ஙஞநம ஈரொற் றாகும்''

என்றாற்போன்று[38] பின்பற்றுகிறார். அவ்வாறன்றிப் பலவின எழுத்துக்களும் பயின்று வருங்கால்,

> ''ஞனஃகான் முன்னர்க்
> கசஞப மயவவ் ஏழும் உரிய''

என்றாற்போன்று க, ங, ச, ஞ, ட, ண, த, ந, ப, ம, ய, ர, ல, வ, ழ, ள, ற, ன என்றமையத் தற்பொழுது வழங்கி வருகின்ற முறையினையே பயன்படுத்தி வருகின்றார். க, ங, ச, ஞ, ட, ண, த, ந, ப, ம ஆகிய எழுத்துக்கட்கும் முந்திய நிலையில் ய, ர, ல, வ, ழ, ள ஆகியனவற்றை யாண்டும் கூறவில்லை. மேலும் புள்ளி மயங்கியலில் மெல்லொற்று ஈறுகட்கான விதிகளைக் கூறிப் பின்னரே இடையொற்றுகட்கான விதிகளைக் கூறுகிறார். எங்கும் இடையெழுத்துக்களை வல்லெழுத்து, மெல்லெழுத்துக்கட்கு முன்னர்க்

கூறாமையான் தற்பொழுது வழங்கியிருக்கின்ற முறை தொல்காப்பியர்க்கு முன்னைக் காலந்தொட்டே உள்ளது என்பது உறுதியாம்.

பவணந்தியார் தொல்காப்பியம் உணர்த்துவனவற்றைத் தெளிந்தமையான் மெய்யெழுத்துக்களின் பிறப்பினை விளக்கும்பொழுது கங, சஞ, டண, தந, பம ஆகியவற்றை விளக்கிப் பின் யகரத்தைக் கூறுகிறார். அதன்பின் ரகரத்தைக் கூறுங்கால் அதனோடு வருடல் முயற்சியான் இணைந்த ழகரத்தைச் சேர்க்கும்படியாயிற்று. எனவே 'லவழள' என்ற முறையில் மட்டுமே பிறப்பு முயற்சியான் மாறுபாடுகள் ஏற்படினும் இறுதியில் றன ஆகியவற்றைக் கூறி எழுத்து முறையினை ஒருவாறு விளக்கிவிடுகிறார்.

தற்கால மொழியியலார் ஒலியன்களைப் பிறப்பிடம் நோக்கி வகைப்படுத்தும் நெறியினைத் தழுவித் தமிழ் எழுத்து முறை ஓரளவு அமைந்துள்ள தெனலாம். முதலண்ணம், இடையண்ணம், நுனியண்ணம், பல், இதழ், ஆகிய இடங்களில் பிறப்பதற்கேற்ப க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், என்று அமைந்திருக்கின்றன. நச்சினார்க்கினியரின் ''முதல் நாவும் முதல் அண்ணமும், இடை நாவும் இடையண்ணமும், நுனிநாவும் நுனி அண்ணமும், இதழியைதலுமாகிப் பிறக்கின்ற இடத்தின் முறைமை நோக்கி அவ்வெழுத்துக்களைக் க, ச, ட, த, ப, ங, ஞ, ண, ந, ம என அம்முறையே வைத்தார்[40] என்னுங் குறிப்பும் இதனைப் புலப்படுத்தும். முதலண்ணந் தொடங்கி இதழ் முடிய அமைந்து கிடக்கும் இம்முறைக்கு மாறாக, இதழ் தொடங்கி முதலண்ணம் முடியப் பிறப்பிடம் நோக்கி ஒலியன்கள் மொழியியலாரால் வகைப்படுத்தப்படுகின்றன. பிறவெழுத்துக்களின் முறையில் மொழியியற் பிரிவுகளோடு பெருமளவில் பொருத்தம் காண இயலவில்லை.

3. அகராதியியல் வளர்ச்சி

அகராதித்துறை பல்வேறு காலங்களில் மெதுவாக விரிந்து வளர்ந்து வந்த துறை என அறிஞர் கருதுவர்[41]. அவ்வளர்ச்சி ஓர் ஆற்றைப் போன்றது. வான்துளிகள் பலவாகச் சிற்றோடையாகிப் பின்னர்ப் பேராறாகி வையத்தை வாழ்விக்கிறது. ஆற்றின் அணை உரிய விளைநிலத்திற்கு, உரிய மதகுகளின் வழியாக நீரை நல்க வேண்டற்பாலது. தமிழில், தொல்காப்பியமாகிய வான் வழங்கிய சொற்றுளிகள் உரியியல் என்னும் சிற்றோடையாகிப் பின்னர் நிகண்டுகள் என்னும் பேராறாயின. உரிய சொல்லை உரிய நிரலிற் றருவதில் முன்னின்ற சதுரகராதி செவ்விய பயன் நல்கும் அணையாயிற்று.

அடிகளார் காப்பியத்தைப் பாராட்டுங்கால், மேனாட்டுக் கலையாறும் தமிழ்நாட்டுக் கலையாறும் கலக்கும் ஏரி தேம்பாவணி என்பர்[42]. அக்கூற்று அடிகளது அகராதிக்கும் பொருந்தற்பாலது. மேனாட்டு அகராதி வளர்ச்சி, தமிழ்நாட்டு அகராதி வளர்ச்சி இவற்றின் அடிப்படையில் உருவாயதே அடிகளது அகராதி எனலாம். எனவே, மேனாடு, தமிழ்நாடு ஆகியவற்றில் வளர்ந்த அகராதியியலைப் படிப்படியாக ஆய்தல் அவ்வளர்ச்சியின் சிறப்புப் படியான சதுரகராதியின் தனித்தன்மையை அறிதற்குத் துணையாகும்.

உலகின்கண், சுமேரியாவில் கி. மு.2500, சைனாவில் கி.மு. 2000 எகிப்தில் கி. மு. 1750, வட இந்தியாவில் கி மு. 1000, கிரீஸில் கி. மு. 500ஆகிய காலகட்டங்களிலேயே அகராதியியல் பற்றிய சொற்பொருள் விளக்கச் சிந்தனை இருந்து வந்திருக்கிறது.[43] ஆயினும் ''டிக்ஷனரி'' என நாம் இன்று கருதும் முறையில் அவை அமையவில்லை. மேலும் வழக்கில் இல்லாத சொற்கள், சொற்றொடர்கள் அடங்கிய சொற்றொகுதிகள் பழங்காலத்தில் அமைந்துள்ளன. அவ்வகையில் அகஸ்டஸ் காலத்திய அலெக்ஸாண்டிரிய இலக்கணி அப்போல்லோனியஸ் என்பாரது 'ஹோமரிக் லெக்ஸிகன்' மிகப் பழையது எனலாம்.[44]

டிக்ஷனரி என்னும் சொல் இடைக்கால லத்தீன் சொல்லான டிக்ஷனரியம் என்பதிலிருந்து தோன்றியது.அச்சொல்லுக்குச் சொல்லுதல் என்பது பொருள். பழங்கால கிரேக்க, லத்தீன் டிக்ஷனரிகள் அரிதானவும், கடினமானவும், சிறப்புடையனவுமான சொற்களின் பட்டியல்களாகவே அமைந்தன. இடைக்கால அறிஞர் கடினமான லத்தீன் சொற்களை எளிதான லத்தீன் சொற்களால் விளக்கும் டிக்ஷனரிகளைப் பயன்படுத்தினர். இடைக்கால இறுதியில் லத்தீன் தன்னிடத்தை இங்கிலீஷ், ப்ரெஞ்ச், ஜெர்மன் ஆகிய ஐரோப்பிய மொழிகளுக்கு விட்டுவிட்டது. அறிஞர்கள் லத்தீன் கையெழுத்துப் படிகளைப் புரிந்துகொள்வதற்குச் சொற்றொகுதிகளை நம்ப வேண்டியவராயினர். அத்தொகுதிகள் லத்தின் கடின சொற்களை அவரவர் மொழியில் விளக்குவனவாய் அமைந்தன. ஒவ்வொரு நாட்டிலும் அவரவர் மொழிகள் நன்னிலையடைந்து ஏற்றுக்கொள்ளப் பட்டதும் கடினசொற்களுக்கு எளிய சொற்களால் பொருள் விளக்கும் புது அகராதிகளை அவரவர் மொழிகளில் படைக்கத்தொடங்கினர்.[45]

மேனாட்டில், தரமான அகராதிகளுள் பழைமையானது கி. பி. 1612 இல் தோன்றிய 'வெகாபுலேரியோ டிக்லி அக்கடெமிஸி டில்லாக்ரூஸ்கா' என்பதாம். அதனையடுத்து கி. பி. 1604 இல் தோன்றிய ப்ரெஞ்ச் அகெடமியின் அகராதி எனலாம்.[46] மேனாட்டு மொழிகள் அனைத்தோடும் தமிழ்மொழி அகராதியியலை ஒப்பு

நோக்குதல் சிறப்பெனினும் விரிவஞ்சி, ஏதேனும் அவற்றுள் ஒரு மொழியோடு ஒப்பிட்டுக் காண்டல், தமிழ் அகராதியியல் வளர்ச்சி நிலையினை உணரத் துணைபுரியும்.

மேனாட்டு மொழிகளுள் இற்றை நாளில் மேம்பாடுற்றுத் திகழ்வது ஆங்கிலமே. வின்சுலோ, 'செய்யுள் வடிவில் கிரீக்மொழியை விடத் தமிழ் மெருகேறியிருக்கிறது. பிறவற்றினின்று பெற்றுச் சேர்ந் திருக்கின்ற கருவூலங்களால், இலக்கிய மொழி, பேச்சு மொழி ஆகிய இருவகை மொழிகளிலும் லத்தீனைவிட நிரம்பியிருக்கிறது. வழங்கி வருகின்ற மொழிகளுள், முழுமையிலும், ஆற்றலிலும், ஆங்கிலத்தையும் ஜெர்மன் மொழியையும் ஒத்திருக்கிறது"[47] என்பர். ஆதலின் மேனாட்டு அகராதியியலோடு ஆங்கிலத்தைச் சிறப்பாகவும், பிறமொழிகளைப் பொதுவாகவும் கொண்டு தமிழின் அகராதியியல் வளர்ச்சியை ஆராயலாம்.

தமிழில் வழங்கும் தொன்னூல்களுள் முன்னூலாய தொல்-காப்பியம் முழுவதும் அகராதியியற் கூறு பரந்து கிடக்கிறது. 1-ஆம் நூற்பா, எழுத்து-அகரமுதல் னகர இறுவாய் முப்பது, 2-ஆம் நூற்பா, சார்ந்து வரல் மரபின-குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என்ற முப்பாற் புள்ளி, 3-ஆம் நூற்பா, குற்றெழுத்து-ஓரளபு இசைக்கும் அ, இ, உ, எ, ஒ என்னும் ஐந்து, 4-ஆம் நூற்பா, நெட்டெழுத்து-ஈரளபு இசைக்கும் ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்னும் ஏழு ஆகிய விளக்கங்களைக் கொண்டிருக்கின்றன. சொல்லதிகாரத்தில் முதன் நூற்பா உயர்திணை மக்கட்சுட்டு, அஃறிணை மக்களல்லாத பிற எனவும், பொருளதிகார முதன் நூற்பா, அகத்திணை கைக்கிளை முதலாப் பெருந்திணையீறாகச் சொல்லப்பட்ட ஏழு எனவும் காட்டுகின்றன. இவையெல்லாம் ஒருவகையான் அகராதி தரும் சொற்பொருள் முறைகட்கு நிகராவன.

தெரிபு வேறு நிலையில், குறிப்பில் தோன்றல் என்னும் இரு பாலவாகச் சொற்களின் பொருண்மைநிலை தொல்காப்பியரால் சுட்டப்படுகின்றது.[48] குறிப்பில் தோன்றலாகப் பொருண்மை நிலையை நூலெங்கணும் பரக்கப்பேசும் தொல்காப்பியர் வெளிப்படத் தோன்றும் தெரிபு வேறு நிலையாகச் சில இயல்களில் சொற்பொருள் கூறுகிறார். இடையியல், மரபியல் ஆகியன அவற்றிற்கு நிலைகளன்களாகின்றன. அவற்றின் பெரும்பான்மை நூற்பாக்கள் சொற்பொருள் விளக்கும் நோக்க அடிப்படையில் கூறப்பட்டவை. இடையியலில் மட்டும் 46 சொற்கட்கு உரியவாக 32 பொருள்கள் கூறப்படுகின்றன.[49]

மரபியலின் முதன் மூன்று நூற்பாக்கல்[50] இளமைப் பெயர்கள், ஆண்பாற் பெயர்கள், பெண்மைப் பெயர்கள் ஆகியவற்றைச்

சுட்டுகின்றன. அவற்றின் பின்னர் வரும் நூற்பாக்கள் ஒவ்வோர் உயிர்க்கும் உரிய இளமைப் பெயர், ஆண்பாற்பெயர், பெண்மைப் பெயர் இவையிவை எனக் காட்டுகின்றன. அவ்வியலில் ஏறத்தாழ அரைப்பகுதி நூற்பாக்கள் இவற்றை விளக்கவே அமைந்துள்ளன. சான்றாக இளமைப்பெயர்களுள், எவ்வெவ் வகை உயிர்கட்கு எவ் வெப்பெயர்கள் உரியன என்பதனைப் பின்வரும் பட்டியல் காட்டும்.

இளமைப் பெயர்கள்	உரிய உயிர்களும் விளக்கும் நூற்பாக்களும்
1 பார்ப்பு	பறவை, தவழ்பவை (1503), குரங்கு (1513)
2 பறழ்	மூங்கா, வெருகு, எலி, அணில் (1506) பன்றி, புலி, முயல், நரி (1509) குரங்கு (1513)
3 குட்டி	மூங்கா, வெருகு, எலி, அணில் (1505) நாய், பன்றி, புலி, முயல், நரி (1509) குரங்கு (1512)
4 குருளை	நாய், பன்றி, புலி. முயல் (1507) நரி (1508)
5 கன்று	யானை, குதிரை, கழுதை, கடமை, ஆண் (1514), எருமை, மரை, (1515) கவரி, கராம் (1516), ஒட்டகம் (1717), ஓரறிவுயிர் (1523)
6 பிள்ளை	பறவை, தவழ்பவை (1503), பன்றி, புலி, முயல், நரி, (1510), குரங்கு (1513), ஓரறிவுயிர் (1523)
7 மக(வு)	குரங்கு (1513), மக்கள் (1522)
8 மறி	யாடு, குதிரை, நவ்வி, உழை, புல்வாய் (1511)
9 குழவி	குஞ்சரம் (1518), ஆ, எருமை (1519), கடமை, மரை (1520), குரங்கு முசு, ஊகம் (1521), மக்கள் (1522), ஓரறிவுயிர் (1523)

தொல்காப்பிய உரியியல் தமிழ் நிலத்தில் அகராதியியல் என்னும் எழிலகம் எழுப்பப்பட இடப்பட்ட அடிப்படைக்கல் எனலாம். அவ்வியலே பிற்கால அகராதிக்கூறு கொண்டெழுந்த நூல்கட்குத் தோற்றுவாயாகி, இயல் முற்றுமாகச் சொற்பொருள் கூற முற் பட்டது. உறு என்னுஞ்சொல் தொடங்கி எறுழ் என்னும் சொல்முடிய நூற்றுக்கு மேற்பட்ட சொற்கட்குப் பொருள் கூறப்பட்டுள்ளன.

இயலின் தொடக்கத்தில் அமைந்துள்ள நூற்பாக்கள்[51] சொற் பொருள் கூறவில்லை யெனினும், கூறப்படும் சொற்களின் வரையறை இலக்கணத்தையும், வெளிப்படப் பொருள் புலப்படாத சொற்கள் மட்டுமே தேர்ந்தெடுத்துக் கூறப்பட்டுள்ளன என்பதையும் கூறுகின்றன. சொற்களின் பொருள் கூறும் நூற்பாக்களையடுத்து இறுதியில் அமைந்துள்ள நூற்பாக்களில்[52]. முற் கூறப்பட்ட சொற் களின் மரபினையொட்டி வேறு பொருளும் உணர்த்தலாம் என்பதும், அவற்றை விரித்துரைப்பின் வரம்பின்றிப் பெருகும் என்பதும், உணர்வோரின் உணர்ச்சி வலிமையைப் பொறுத்து அறிய வேண்டும் என்பதும், இவற்றைப் போன்ற பலவாறாகப் பரந்து வழங்கும் சொற்களுள் கிளந்தவற்றின் அடிப்படையில் கிளவாதவற்றை அறிய வேண்டும் என்பதும் கூறப்படுகின்றன. உலகத்தில் தோன்றியுள்ள எம்மொழி அகராதியும், மொழியுள் வழங்கும் அனைத்துச் சொற்கட்கும் பொருள்காணுதல் அரிதே. தொடக்கக் காலத்தில் அவை அரிய கடின சொற்கட்குப் பொருள் காணமுற்பட்டன[53]. எளிதாக விளங்கிக் கொள்ளக் கூடிய சொற்கட்கு விளக்கங்கள் தேவையில்லை.[54] இவ்வகராதித் தன்மைகளை உரியியலும் கொண்டுள்ளது.

ஆலின் விழுது நிலத்தில் ஊன்றியபின் அஃதேஅடிமரமாய்விடல் போல், முருங்கையில் கிளையாம் போத்துத் துண்டிக்கப்பட்டுப் பின்னர் நட்ட பொழுது தனிமரமாகிவிடல்போல், தொல் காப்பியத்தின் ஓர் இயலான உரியியல் பிற்காலத்துத் தனியே வளர்ந்து சொற்பொருள் கூறும் முழு நூல் ஆகி உரிச்சொல், உரிச் சொற்பனுவல், கூட்டம், நிகண்டு என்னும் பெயரால் வளர்ந்தன.

பிற்காலத்தோர் இவ்வகைத்தாய நூல்களனைத்தையும் நிகண்டுகள் எனப் பொதுப்படக் குறிப்பினும் முற்காலத்தோர் அவ்வாறு வழங்கவில்லை. நன்னூல் ஆசிரியர் உரியியலின் இறுதி நூற்பாவில் ''பிங்கலம் முதலா நல்லோர் உரிச் சொல்லின்'' என்றும், அதற்கு உரைகண்ட மயிலை நாதர் 'அவை பிங்கல முதலான புலவர்களாற் செய்யப்பட்ட உரிச் சொற்பனுவல்களுள்'' என்றும் குறிக்கின்றனர். பிங்கலத்தின் சிறப்புப்பாயிரம் ''உரிச்சொற் கிளவி விரிக்குங்காலை'' எனவும், கயாதரத்தின் பாயிரம் ''வேதியன்

சொற்ற உரிச்சொற்பனுவலும் மேம்படுமே” எனவும் குறிப்பிடுகின்றன. நன்னூல் உரையாசிரியராகிய சங்கர நமச்சிவாயர் தம் உரையில் அந்நூல்களைக் குறிக்கக் கூட்டம், நிகண்டு ஆகிய சொற்களைப் பயன்படுத்துகிறார். பாயிரப் பகுதியில் சூடாமணியின் ஆசிரியர், ''மன்னிய நிகண்டு சூடாமணியென ஒன்று சொல்வன்'' எனச் சொல்வதால், நிகண்டு என்னும் பெயர் தாங்கிய முதனூல் அதுவேயெனினும், வடமொழியின் செல்வாக்கால் புராணம், பிரபந்தம் ஆகியவற்றைப் போல் தொகுதி என்னும் பொருள் படைத்த நிகண்டு அவ்வகைப்பட்ட அனைத்து நூல்கட்கும் பின்னோர் வழங்கும் பொதுப்பெயராயிற்று.[55]

நிகண்டு நூல், கலைக்கோட்டுத்தண்டுபோன்றன வழங்கி வந்த தாக உரைக் குறிப்புக்களால் அறியக் கிடைப்ப நூல்கள் இதுகாறும் கிடைத்தில.[56] தமிழகத்தில் வழங்கும் நிகண்டுகளுள் காலத்தால் முன்னையது திவாகரமாகும். இந்நூலின் ஆசிரியர் இயற்றக் காரணமான சேந்தன் பெயரால் சேந்தன் திவாகரம் எனவும் பெயர் பெறும் இந்நூலின் காலம் கி. பி. எட்டாம் நூற்றாண்டாகும்.[57] பன்னிரண்டு தொகுதிகளுள், ஏறத்தாழ 9500 சொற்களுக்குப் பொருள் கூறுகிறது. தொல்காப்பிய உரியியலைக் காட்டிலும் ஏறத்தாழ 80 மடங்கு அதிகச் சொற்களுக்குப் பொருள் கூறப்பட்டிருப்பினும் அமைப்பும் போக்கும் உரியியலை அடியொற்றியனவே.

உரியியலில் ஒரு சொற்கு ஒரு பொருள், ஒரு சொற்குப் பல பொருள் என்னும் முறையில் குறிக்கப்பட்டிருக்கின்றது.[58] இவற்றை ஒருசொல் பலபொருளைத் தருவது, பல சொற்கள் ஒரு பொருளைத் தருவது என்னும் இரு கூறுபடுத்தலாம். இவ்வாறன்றிச் சொற்களையும், அவற்றின் பொருள்களையும் ஒரே முறையில் கூறியிருத்தலாகாதா என்னும் ஐயம் எழும். அவ்வாறு கூறின் பொருள் மாறுபாட்டிற்கு இடமுண்டு. உறு, தவ, நனி ஆகிய மூன்று சொற்களும் மிகுதிப் பொருளை உணர்த்தும். கடி என்னும் சொல்லும் மிகுதிப்பொருளை உணர்த்தும் எனினும் நான்கு சொற்களும் ஒரே தன்மையனவல்ல. உறு, தவ, நனி, ஆகியன மிகுதி என்ற ஒரு பொருளையே தரும்.[59] கடி என்னும் சொல்லோ மிகுதிப் பொருளோடு வேறு பதினொரு பொருளையும் தரவல்லது.[60] அவ்வாறே தட, கய, நளி என்னுஞ் சொற்கள் பெருமைப் பொருள் வழங்கினும், தனித்தனியே கோட்டம், மென்மை, செறிவு என்னும் பொருள்களையும் முறையே தரவல்லன.[61] அவற்றைப் பின்வரும் வரை கோட்டால் தெளியலாம்.

கோட்டம் → தட
மென்மை → கய } ⟶ பெருமை
செறிவு → நளி

எனவே, பொருட் டெளிவிற்காக இருவகைப்பாகுபாடு பொருந்தும். இப்பாகுபாடு உரியியலின் தொடக்கத்தே நூற்பாவில் வருகின்ற,

''ஒருசொற் பலபொருட் குரிமை தோன்றினும்
பலசொல் ஒருபொருட் குரிமை தோன்றினும்"[62]

என்னும் பகுதியால் குறிப்பாகச் சுட்டப்படுகிறது. பின்வந்த நிகண்டுகள் இப்பாகுபாட்டின் அடிப்படை கொண்டே பொருள்கூறின.

திவாகரம் வகுத்த பன்னிரு பகுதிகளுள் முதற் பத்துத் தொகுதிகள் பல சொற்கு ஒருபொருள் என்னும் பகுதியிலும், பதினொன்றாம் தொகுதி ஒரு சொற்குப் பல பொருள் என்னும் பகுதியிலும் அடங்கும். ஆயினும் அப்பகுதிகளின் பெயர்களில் சிறு மாறுபட்டிற்கிடனுண்டு. தொல்காப்பியம் இசையிலும், குறிப்பிலும், பண்பிலும் தோன்றிய உரிச்சொற்கட்கே விளக்கந்தரப் பின்னரெழுந்த திவாகரத்தில் தெய்வப்பெயர், மக்கள் பெயர், விலங்கின் பெயர், இடப்பெயர், மரப்பெயர், பொருட்பெயர், செயற்கை வடிவப் பெயர், பண்புபற்றிய பெயர், செயல் பற்றிய பெயர், ஒலிபற்றிய பெயர் என அனைத்துப் பெயர்களைக் குறிக்க வழங்கும் பல பெயர்கள் குறிக்கப்படுகின்றன. முதலாம் தொகுதியில் முதலாவதாகச் சிவனைக் குறிக்கும் பல்பெயர்களும், இரண்டாம் தொகுதியில் முதலாவதாக அருந்தவரைக் குறிக்கும் பல பெயர்களும், இவ்வாறே பிறவும் கூறப்படுகின்றன. எனவே அவை பத்தும் ஒரு பொருள் பல்பெயர்த்தொகுதி யெனப்படும். பதினொன்றாம் தொகுதியில் கூறப்படும் பெயர்கள், ஒரு சொற்குப் பல பொருள் தருவதால் ஒரு சொற்பல்பொருட்பெயர்த் தொகுதி எனப்படும்.

உரியியலில் ஒன்றைக் குறிக்கப் பல சொற்களோ, பொருட்களோ அமையுமாயின் அவற்றைக் குறித்து அவற்றின் மொத்தத் தொகைகள் ஆயிரண்டும், மூன்றும், நான்கு எனச் சுட்டப்படுகின்றன[63]. இத்தொகைகளைப் பல்பொருட் கூட்டம் எனக்கூறி அவ்வகைத் தொகைகளாக உள்ளனவற்றை ஒருங்கமைத்துப் பொருள் வகைகளை விளக்கிப் பல்பொருட்கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதி எனத் திவாகரம் கூறியது.

தொல்காப்பிய உரியியலின் விரிவு திவாகரம் என்பதனைப் பல

நூற்பாக்கள் காட்டுகின்றன. 'அலமரல் தெருமரல் ஆயிரண்டும் சுழற்சி,[64] என உரியியல் கூறத் திவாகரம் அவற்றோடு கோட்பு, கறங்கு, சுழல்வு ஆகியவற்றைச் சேர்த்து ஐந்தும் சுழற்சி எனக்கூறும்[65]. 'குருவும் கெழுவும் நிறனாகும்,' என உரியியல் சுட்டத்திவாகரம் புகார் மேனி, மாயை, கேழ், வண்ணம், கொழுமை, சந்தம், உரு ஆகிய எட்டனைச் சேர்த்துப் பத்தனைக் குறிக்கும்[66] 'தடவும் கயவும் நளியும் பெருமை' என உரியியல் காட்டத் திவாகரம் 39 பொருள்களைக் காட்டும்[67]. இவ்வாறே தொல்காப்பியத்தில் இடையியல், உரியியல், மரபியல் நூற்பாக்கள் மட்டுமன்றிப் பொருட்கூற்று அடிப்படைக் கருத்துக்களையுடைய பிற பகுதி நூற்பாக்களும் திவாகரத்தில் ஆட்சி பெற்று விரித்துரைக்கப்படுகின்றன.[68] மேலும் தொல்காப்பியம் போன்று நூற்பா யாப்பிலேயே திவாகரமும் பொருள் தருகிறது.

நூற்களிற் காணப்படும் அரிய சொற்கட்கும் கடினமான சொற்கட்கும் அவற்றின் அருகில் பொருள் எழுதி வைக்கப்பட்ட ஏழாம் நூற்றாண்டைச் சார்ந்த கையெழுத்துப்படிகள் இங்கிலாந்தில் உள்ளன. அவை பெரும்பாலும் லத்தீனிலும், அவற்றின் பொருள் லத்தீனிலும் ஆங்கிலோ சாக்ஸனிலும் அமைந்துள்ளன[69]. இப்பொருள் விளக்கங்களை நூலெங்கணும் ஆங்காங்குப் பொருள் விளக்கம் செய்யும் தொல்காப்பியத்திற்கு ஈடாகக் கருதலாம். எனினும் இவற்றிற்குக் குறைந்த அளவு ஆயிரம் ஆண்டுகள் முன்னையது தொல்காப்பியம் என்பது குறிப்பிடத்தகுந்தது. ஆயின் மேனாட்டு வளர்ச்சி மிக விரைவானது. எட்டாம் நூற்றாண்டிலேயே நூல்களில் காணப்படும் அச்சொற்களைத்தனித்துத் தொகுக்கத் தொடங்கினர். அவற்றைத் தொல்காப்பியத்தினின்று உருவான உரிச்சொற்பனுவல்களாகிய நிகண்டுகட்கு நிகரானவையாகக் கொள்ளவேண்டும்

திவாகரத்தையொட்டி எட்டாம் நூற்றாண்டிலேயே, அதன் பின்னர் பிங்கலம் என்னும் நிகண்டு தோன்றிற்று நூற்பா யாப்பால் பிங்கல முனிவரால் இயற்றப்பட்டது. அளவில் திவாகரத்திலும் விரிந்து 4121 நூற்பாக்களில் ஏறக்குறைய 15800 சொற்கட்குப் பொருள் தருகிறது.[70] உட்பிரிவுகளைத் தொகுதி எனத் திவாகரம் குறிக்கப் பிங்கலம் வகை எனக்கூறும். வான்வகை, வானவர்வகை, ஐயர்வகை, அவனிவகை, ஆடவர்வகை, அனுபோகவகை, பண்பிற் செயலின்வகை, மாப்பெயர்வகை, மரப்பெயர்வகை ஆகிய முதல் ஒன்பதும் ஒரு பொருள் பல்பெயர்த் தொகுதியுள் அடங்கும். இறுதியில் அமைந்த ஒரு சொல் பல்பொருள் வகை ஒரு சொல் பல்பொருள் பெயர்த் தொகுதியில் அடங்கும். திவாகரத்தின் இறுதியில் உள்ள பல்பொருள் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதி, தனி வகையாகச் சுட்டப்படவில்லை. ஏனெனில் அத்தொகுதிக்கூறும் பிறவகைகளோடு இணைந்து அமைந்துள்ளதெனலாம்.

திவாகரத்தைப் போன்று பிங்கலமும் அறிஞர்களால் போற்றப் பட்டது. பவணந்தியார் பிங்கல முதலான உரிச்சொல் நூல்களில் அறிந்து கொள்ளுமாறு கூறுகிறார்.[71] மண்டல புருடர் தம் சூடாமணி நிகண்டின் தொடக்கத்தில் ''சிறப்பின் மிக்க பிங்கலர் உரை நூற்பாவில் பேணினர்'' என்கிறார். அகராதி நிகண்டாசிரியர், தற்சிறப்புப் பாயிரச் செய்யுளில் ''தெரிந்த பிங்கலம் திவாகரம் முதலாய்ப் பரவிய நிகண்டு பலவெடுத்து'' எனச் சுட்டுகிறார். ஆசிரிய நிகண்டாசிரியர், பாயிரத்தில் ''முந்துள திவாகரம் பிங்கல நிகண்டு'' எனக் குறிக்கிறார். எனவே, திவாகரத்தைப் போன்றே பிங்கலமும் பின்னோரால் மதிக்கப்பட்டது தெளிவாகிறது.

திவாகரம், பிங்கலத்தையடுத்துத் தோன்றிய நிகண்டுகளுள் சிறப்பிற்குரியது சூடாமணி நிகண்டாகும். அதன் காலம் கி.பி. 1520 என்பர்.[72] இடைப்பட்ட 8 நூற்றாண்டுகட்கிடையே சில நிகண்டுகள் எழுந்திருத்தல் வேண்டும் என உரையாசிரியர்களின் குறிப்புக்களால் உணரக்கிடக்கிறதென்றும், அவை நமக்குக் கிட்டாது போயின என்றும் அறிஞர் கருதுவர்.[73] குணபத்திரரது மாணவராகிய மண்டலபுருடர், முன்னோர் புனைந்த நூற்பா நடையினின்று மாறி, விருத்தப்பாவில் தம் சூடாமணி நிகண்டினை இயற்றியுள்ளார்.

திவாகரம் போன்று பன்னிரண்டு தொகுதிகளையுடையது. தொகுதிகளின் பெயர்களும் அதனை ஒட்டியனவே. முதல் பத்துத் தொகுதிகளில் 11,000 சொற்கள் இடம் பெற்றுள்ளன. இந்நிகண்டு எழுந்ததும் திவாகரம், பிங்கல நிகண்டுகளின் பெருமை கூட மங்கத் தொடங்கிவிட்டதென்றும், சூடாமணியின் இடத்தைப் பிடிக்க இயலவில்லையென்றும், நிகண்டு என்றால் சூடாமணிதான் என்று பொருள் கொள்ளுமளவிற்குத் தமிழ் மக்களிடையே பரவிச் செல்வாக்குப் பெற்றுவிட்டதென்றும் கூறுவர்.

சூடாமணி நிகண்டின் பதினோராம் தொகுதி தனிச்சிறப்புடையது. இத்தொகுதியில் கூறப்படும் 1575 சொற்களைப் பதினெட்டு மெய்யெழுத்துக்களின் அடிப்படையில் எதுகைச்சொற்களாகப் பிரித்து, க, ங, ச, ஞ, ட, ண, த, ந, ப, ம, ய, ர, ல, வ, ழ, ள, ற, னகர எதுகை முறையில் கூறுகிறார். இப்பகுதியில் பொருள் காண்பது மற்றப் பகுதியிற் காண்பதிலும் எளிதாயிற்று. அச்சொல் எவ்வெதுகையில் அடங்குகிறதெனக் கண்டு அவ்வெதுகைப் பகுதியில் மட்டும் பார்த்தால் கண்டு விடலாம். எதுகை நயமிக்க சொற்களைக் கொண்டு செய்யுள் இயற்ற ஓரளவு உதவுவதாய் அமைந்தது.

ஆக்ஸ்போர்டு, மக்டாலென் கல்லூரியைச் சார்ந்த பீட்டர் லெவின்ஸ் என்பவரால் 1570ல் இயற்றப்பட்ட கையடக்கச் சொற்-

றொகுப்பு இவ்வகைக்கு நிகரெனலாம். அது a, e, i, o, u, ஆகிய ஐந்து அடிப்படை உயிரொலிகள் ay, ae, oy, ou ஆகிய நான்கு கூட்டொலிகள்; மொத்தம் ஒன்பது உயிரொலிகளுக்கேற்ப ஒன்பது பகுதிகளாகப் பாகுபாடு செய்யப்பட்டது.[75] ஆயின் சொற்களின் ஈற்றசைகளில் மெய்யெழுத்திற்கு முன் உள்ள உயிரொலிகளின் அடிப்படையில் பிரிவுகள் அமையச் சூடாமணி நிகண்டின் பதினோராம் தொகுதியோ சொல்லின் முதலெழுத்தை அடுத்திருக்கின்ற மெய்யொலிக்கேற்பப் பிரிக்கப்பட்டுள்ளது.

நிகண்டுகளின் வரிசையில் அடுத்துச் சிறப்புறுவது சிதம்பர இரேவணசித்தர் இயற்றிய அகராதி நிகண்டாகும். அந்நூலின் பாயிரப் பகுதியால் கி. பி. 1594-ஆம் ஆண்டு, 3334 நூற்பாக்களால் அஃது இயற்றப்பட்டதெனத் தெரிகிறது, திவாகரம், சூடாமணி நிகண்டுகளிலடங்கிய பதினோராம் தொகுதியைமட்டுமே இந்நூல் கூறுகிறது. சூடாமணிக்குப் பின் தோன்றியதெனினும், சூடாமணிக்கும் முன்னெழுந்த நிகண்டுகளைப் போன்று நூற்பா யாப்பால் அமைந்தது. அகராதிப் பேர்த்தொகுதி, ககராதிப் பேர்த்தொகுதி தகராதிப் பேர்த்தொகுதி, பகராதிப் பேர்த்தொகுதி, மகராதிப் பேர்த்தொகுதி, யகராதிப் பேர்த்தொகுதி, வகராதிப்பேர்த் தொகுதி போன்ற பத்துப் பிரிவுகள் உடையது.

நிகண்டுகளின் வரலாற்றில் அகராதி நிரலுக்குத் தோற்றுவாயாகவமைந்தது இந்நிகண்டாகும். ஏனெனில், அகராதிப்பிரிவில் 'அ' தொடங்கி 'ஔ' வரையில் உள்ள சொற்களும், ககராதிப்பிரிவில் 'க' தொடங்கி 'கௌ' முடிய உள்ள சொற்களும், இவ்வாறே பிற பிரிவுகளும் அமைந்துள்ளன. ஆயின் சொற்களின் முதல் எழுத்து மட்டுமே அகரநிரலைக் கொண்டதன்றி இரண்டாம் எழுத்தோ, அதற்குப் பின்னர் வரும் எழுத்துக்களோ அம்முறையில் அமையவில்லை. மேலும் சொற்களைக் கூறும்பொழுது அம்முதல் ஒருபெயர், அம்முதல் இருபெயர், அம்முதல் முப்பெயர் என்றின்னவாறு அம்முதல் நாற்பத்தாறு பெயர் வரையிலும் சிற்றெண்டொடங்கிப் பேரெண் முடியக் கூறுவதும் இந்நிகண்டின் சிறப்பெனலாம்.

அகராதி நிகண்டுகளின் இச்சிறப்புக் கூறுகளைக் கொண்டு உலகிலேயே முதல் முதலாக இந்த அகராதி நிகண்டே அ, ஆ என்ற வரிசையில் ஆசிரியரால் நிரல் செய்யப்பட்டு இயற்றப்பட்டது என்றும், இந்நூலுக்குப் பிறகே மேலைநாட்டில் அகர வரிசையில் அகராதிகள் தோன்றினவென்றும் கருதுவர்.[76] இக்கருத்துப் பொருத்தமாகப்பட்டிலது. ஏனெனில் 15-ஆம் நூற்றாண்டிலேயே இங்கிலாந்தில் அகராதிகள் தோன்றலாயின.[77] கேம்பிரிட்ஜிலுள்ள கையெழுத்துச் சுவடியொன்றில் 2000 சொற்கள் உள்ளன. அது, கி. பி. 725-ஆம் ஆண்டைச் சார்ந்ததெனக் கருதப்படுகிறது. அதில் சொற்கள்

முதலெழுத்துமட்டுமன்றி முதலிரண்டு எழுத்துக்கள் அகர நிரன் முறை கொண்டுள்ளன.[78] நாணார்த்தானவ சங்க்ஷேப, நானார்த்த சங்கிரஹ போன்ற 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த நிகண்டுகளில் அகராதி முறை காணப்படுகிறது.[79]

இரேவண சித்தருக்கு இவ்வாறு அகர நிரன் முறையினைப் பின்பற்றப் பிற்கால ஔவையாரின் நீதி நூல்கள் தூண்டுகோலாய் அமைந்திருக்கக்கூடும். ஔவையார் இயற்றியுள்ள ஆத்திசூடி, கொன்றைவேந்தன் முதலியன நூற்பாக்களால் அமைந்தவையே. அந் நூற்பாக்களின் முதலெழுத்துக்கள் அகர நிரன் முறையினைப் பின் பற்றியே அமைக்கப்பட்டுள்ளன. அக்கால இலக்கண நெறிக்கேற்ப மொழி முதலாகா எழுத்துக்கள் தொடக்கமாக வரின் தமிழ் மரபிற்கியைய மொழி முதல் அவ்வவற்றிற்குரிய, அ, இ, உ ஆகிய எழுத்துக்களை முன்னர்ப் பெற்றுள்ளன.[80] அகராதி நிகண்டு அவ்வகைச் சொற்களை எடுத்தாளாமல், மொழி முதலாந் தன்மையை முழுவதும் உடைய க, ச, ஞ, த, ந, ப, ம, ய ஆகிய மெய்களையும் அகர முதலான உயிர்களையும் முதலாகக் கொண்டு தொடங்குகின்றது. எவ்வாறேனும் அகராதி என்னும் பெயரைத் தமிழுலகிற்குத் தந்த சிறப்பு அகராதி நிகண்டிற்கே உரியது.

இரேவண சித்தருக்குப் பின் அகரநிரலைத் தமிழகத்தில் பின் பற்றத் தலைப்பட்டனர். முன்னை நிகண்டு நூற்பாக்களை அகர நிரலில் மாற்ற முற்பட்டனர். 1762-ஆம் ஆண்டைச் சார்ந்த திவாகரக் கையெழுத்துச் சுவடியில் பதினொன்றாம் தொகுதி இரு பிரிவாக்கப் பட்டது. ஒவ்வொரு பிரிவும் அகர நிரலில் அமைக்கப்பட்டுள்ளது.[81] அகராதிக்கு முன்னையதாகக் கருதப்படும் அகராதி மோனைக்கு அகராதி எதுகை என்னும் நிகண்டின் முதலிரண்டு எழுத்துக்கள் அகர நிரல் பெற்றுள்ளன.[82] எனினும் சொல் முழுதும்அகர நிரல்பெற்றிலது.

தமிழில் வழங்கிய நிகண்டுகள் செய்யுள் வடிவின. அவற்றின் பொருளினை அறிவில் எளியோர் உணர்தல் அரிது. ஒரு சொல்லின் பொருள் தேட வேண்டுமாயின் உடனே அகர நிரன் முறை அடிப்படையில் காண இயலாது. எனவே, அந்நூல்களில் பொரு-ணோக்கு நிறைவு பெறவேண்டுமாயின், எளிதில், பொருளினைக் கண்டுணருமாறு அமைக்கப்படவேண்டும். மொழியின் சொற்பரப்பு மிகவும் பெரியது. நிகண்டு கூறிய சொற்களோ விரிந்த அளவினவல்ல. ஆதலின் முழுமையான அகர நிரன்முறை, செய்யுள் வடிவினின்று மாற்றம், சொற்பரப்புப் பெருக்கம் ஆகியன இன்றியமையாதன வாயின. இவ்வின்றியமையாச் சிறப்புக்களைக் கொண்டு 1732-இல் உருவானதே அடிகள் ஆக்கிய சதுரகராதியாம். சதுரகராதி தோற்றங் கொண்ட இந்நிலையினை அகராதியியலின் ஐந்தாம் நிலையெனலாம்.

இங்கிலாந்தில் தோன்றிய அகராதிகள் முதலில் ஒரு மொழிப் பொருளைப் பிறமொழியில் கூறுவனவாக அமைந்திருந்தன. தம் மொழியைத்தாமுணர அவை பயனற்றனவாயின. அந்நிலை குறித்து வில்சன் என்பார், அணிக்கலை அன்னும் நூலில் ''தங்கள் தாய் மொழியையே மறந்துவிட்டது போன்று சிலர் காணப்படுகின்றனர். சிலரின் தாயார் உயிரோடிருந்தால் அவர்கள் நினைப்பதைப் பேசிப் புரிய வைக்க இயலாது''[83] எனக்குறித்து வருந்துகிறார். அதன் பின் ஆங்கில மொழியின் கடின சொற்கட்கு ஆங்கில மொழியிலேயே பொருள்விளக்கும் அகராதிகள் தோன்றின. அவற்றுள்ளும் அகரநிரன் முறை முழுதுமாகப் பின்பற்றப் படவில்லை. அகரநிரன் முறைச் சிறப்பும் மொழியின் கடின சொற்களை எளிய சொற்களால் விளக்குந் தன்மையும் ஒருங்கே அமையப்பெற்ற அகராதியை, ஆங்கிலமொழியில் முதன் முதன் உருவாக்கியவர் ராபர்ட் காட்ரே ஆவார். நூலின் முன்னுரையில் அந்நூலினை நன்கு பயன்படுத்திப் பொருள் உணர வேண்டுமாயின் அகர நிரன் முறையினைத் தெளிவாகக் கற்றிருக்க வேண்டுமென்கிறார்[84]. எனினும், சொற்பரப்புச் சுருங்கியது. மூவாயிரம் சொற்களே இடம் பெற்றுள்ளன. ஆதலின் அந்நூலினைத் தமிழ் அகராதியியலில் சதுரகராதி அமைந்த ஐந்தாம் நிலைக்கு நிகரெனக் கொள்ளலாகாது.

சிறப்புடைய முதல் ஆங்கில அகராதி சாமுவேல் ஜான்ஸனால் கி.பி. 1755 இல் தொகுக்கப்பட்டதே[85]. இதற்கு முன் படைடுக்கப் பெற்ற அகராதிகள் அனைத்திலும், முழுமை பெற்றதும், 19 - ஆம் நூற்றாண்டின் முடிவுவரை இணையற்று விளங்கியதும் அவ்வகராதி யேயாம்[86]. இச்சிறப்பனைத்தும் சதுரகராதிக்கும் உண்டு. எனவே, ஆங்கில அகராதியியலின் ஐந்தாம் நிலையினை அவ்வகராதித்தோற்ற மாகக் கொள்ளலாம்.

பிறபல அறிவியற்றுறைகளைப் போன்று அகராதியியற்று-றையிலும் பழங்காலத்தில் கிரேக்கர்கள் ஈடுபட்டிருக்கின்றனர் அலெக்ஸாண்டிரியாவின் பெரும் நூலகத் தலைவரான அரிஸ்டோபேன்ஸ் கி. மு. 2-ஆம் நூற்றாண்டில் அத்துறையில் ஈடுபட்டதற்குச் சான்றுண்டு. கி. பி. 2-ஆம் நூற்றாண்டில் ஜூலியஸ் போலக்ஸ் அட்டைச் சொற்களை விளக்கங்களோடு கூடிய பட்டியலில் அமைத்தார். சில நூற்றாண்டுகள் இது பின்பற்றப்பட்டது. எனினும், தற்காலப்போக்கில் அமைந்த முதல் கிரேக்க அகராதி கிரேக்கமொழிக் கருவூலம் என்பதாகும். அது ஐந்து தொகுதிகளாக கி. பி. 1572-இல் ஈன்ஸ்டினால் இயற்றப்பட்டது.[87] லத்தீன் மொழியில் பழங்காலச் சொற்பொருள் காண்டலில் ஈடுபட்டோருள் குறிப்பிடத் தக்கோர் மார்க்குஸ் டெரின்டஸ்வேரோ, வெரியூஸ் பிளாக்கஸ் ஆகியோராவர். வெரியூஸ் பிளாக்கஸ் எழுதிய சொற்களின் பொருள் கூறும் நூல்

செக்ஸ்டஸ் பாம்பேயூஸ் என்பாரால் 2-ஆம் நூற்றாண்டில் சுருக்கித் தரப்பட்டது. 1532-இல் ஹென்றி ஈன்ஸ்டீனின் தந்தையாரான ராபர்ட் ஈன்ஸ்டீனால் லத்தீன் சொற்களஞ்சியம் உருவானது.[88] இத்தாலிய மொழியின் தரமான அகராதி கி. பி. 1612-இல் உருவானதென்றும், பிரெஞ்ச் அகாடமியின் அகராதி கி பி. 1694-இல் தோன்றியதென்றும் கூறப்படுகிறது.[89] இம்மொழிகளின் குடும்பத்துள் தற்காலத்துச் சிறந்து விளங்கும் ஆங்கிலமொழியின் அகராதியியற்றன்மைகள், பிற மொழி அகராதியியற் கூறுகளை உள்ளடக்கியிருக்க வாய்ப்பிருக்கின்றமையான் அதனை மட்டும், தமிழ் அகராதியியலோடு ஒப்பிட்டுப் பார்த்தலே போதும். இயலின் இறுதியில் உள்ள தமிழ் வரைபடம், அகராதியியல் ஆங்கில அகராதியியல் ஆகியவற்றின் படிப்படியானவளர்ச்சியைக் காட்டும்.

4. சதுரகராதியின் பின்புலம்

அடிகளாருக்கு இளமை தொட்டே மொழித்துறையில் ஈடுபாடு இருந்தது போலும், தம் இருபதாம் வயதிலேயே ரேவன்னாவில் இலக்கணம் போதிக்கும் வாய்ப்பினைப் பெற்றார். இத்தாலி, லத்தீன், பிரெஞ்ச், கிரீக், ஹீப்ரு, போர்த்கீஸ் போன்ற மொழிகளிற் புலமையுடையவராயிருந்தமையின் அம்மொழிகளில் ஏற்பட்டிருந்த பல்துறை வளர்ச்சிகளையும் அறிந்திருந்தார்.

அடிகளாரிடம் அமைந்திருந்த மொழி ஈடுபாடு தமிழகம் போந்ததும் தமிழ் மொழியைக் கற்று அதிலுள்ள பல்துறைக் கூறுகளையும் அறியும் ஆவலைத் தூண்டியிருத்தல் கூடும். தமிழில் பல்வகையான செய்யுள் இலக்கியங்கள் இருப்பினும் கிறிஸ்தவ சமயத் தொடர்பான இலக்கியமின்மையை உணர்ந்து அக்குறை போக்க பல்வேறு வகையான செய்யுள் இலக்கியங்களைப் படைத்துள்ளார். அவ்வாறே தாமறிந்த மொழிகளிற்றோன்றியிருந்த சிலவகை நூல்கள் தமிழில் அமையாமை கண்டு, அக்குறை போக்கும் நோக்கினில், பிற துறை மொழியியல் நூல்களை இயற்றியுள்ளார்.

அடிகளுக்கு முன்னரே அவர்தம் சபையைச் சார்ந்தோரால் உரைநடையில் நூல்கள் பல எழுதப்பட்டுள்ளன. செய்யுள் நடையினின்று உரைநடைக்குத் தமிழ் இலக்கியப் போக்கினை விடுவித்த முன்னோடிகளுள் ஒருவராகக் கருதத்தகும்[90] ராபர்ட் டி நோபிலி அவருள் குறிப்பிடத்தக்கவர். அவரைப் பின்பற்றி தமிழ்த் துறவிகளைப் போல் உடை, உணவு, வாழ்க்கை முறைகளை மாற்றிக் கொண்ட அடிகள்[91] உரைநடை நூல்கள் படைத்ததில் வியப்பின்று. தரங்கம்பாடிச் சமயத்தொண்டரின் கொள்கைகளை மறுத்தெழுதியனவும், தம் கத்தோலிக்க மக்களுக்குரிய அறவுரைகளை உள்ளடக்கி

எழுதியனவும் பாராட்டற்குரியன. பரமார்த்த குருகதை தனித்தன்மையுடையது. ஏனெனில், எள்ளல் நகைச்சுவை இலக்கியவகையில் அது புதுப்படைப்பாக அமைகிறது. அடிகளார்க்கு முன்னரே மேலை நாட்டினரால் தமிழ் இலக்கணம் பற்றிய நூல்கள் சில எழுந்திருப்பினும் செந்தமிழ், கொடுந்தமிழ் ஆகியவற்றிற்கு என வெவ்வேறு இலக்கண நூல்களை எழுதிய சிறப்பு அடிகளுக்கே உண்டு. மேனாட்டு முறையில் தமிழில் அகராதி ராபர்ட் டி நோபிலியின் உடன் காலத்தவரான அந்தோணி டி பிரோயன்ஸா அடிகளால் கி. பி. 1679-இல் படைக்கப்பட்டது. எனினும், செவ்விய முறையில் அகராதி அமைக்கப்பட வேண்டும் என்னும் எண்ணம் தூண்டுகோலாய் இருந்து, மேனாட்டு விளக்கு என்னும் உருவில் தமிழகத்தின் எண்ணெய் என்னும் நிகண்டு முதலாய நூல்களைப் பெய்து தமிழ் இலக்கிய ஒளி தர அடிகளாருடைய ஆர்வத்தீ செயல் பட்டதால் சதுரகராதி உருவாயிற்றெனலாம்.

அந்தோணி டி பிரோயன்சாவின் அகராதி தமிழ் போர்த்கீஸ் அகராதியாகும். கி. பி. 1679-இல் அம்பலக்காட்டில் அச்சிடப்பட்டது. 16,546 சொற்கட்குப் பொருள் கூறப்பட்டிருக்கிறதெனினும் அவற்றின் பொருள் போர்த்கீஸ் அல்லது லத்தீன் மொழியில் கூறப்பட்டுள்ளது. தனிநாயகம் அடிகளால்1966-இல் மலேயாப் பல்கலைக்கழகத்தில் மறுபதிப்பு அச்சிடப்பட்டுள்ளது. அவ்வகராதியில் முதலில் தமிழ்ச் சொற்களை யமைத்து அவற்றிற்குப் பொருள் கூறியிருப்பினும் அச்சொற்கள் தமிழ் அகர நிரன்முறையில் செம்மையாக அமையவில்லை. தமிழ்ச் சொற்களுக்குப் போர்த்கீஸிய அகரநிரன் முறை பின்பற்றப்பட்டுள்ளது. அதன்படி A யை முதலாகக் கொண்ட சொற்களுள் ab ஒலிகளையுடையவை முதலிலும் ach ஒலிகளையுடையவை அடுத்தும், பின் ag, al, am ஆகிய ஒலிகளையுடையவையும் பிறவும் அமைக்கப்பட்டிருக்கின்றன.[29] சான்றாக, A ஒலியுடையவற்றுள் ab ஒலிகளைக் கொண்ட (1) அபாரணம் (2) அபத்தம் (3) அபவாதம் (4) அபசானம் (5) அபாயதந்திரம் (6) அபசக்கியம் (7) அபாயம் (8) அபையம் (9) அபெக்ஷை (10) அபேக்ஷிக்குகை (12) அபிமந்திரியாத (13) அபிமந்திரிப்பிக்கிறது என்பன தொடக்கத்தில் இடம்பெறுகின்றன. தமிழ் அகர நிரற்படி அமையவேண்டுமாயின் அபசக்கியம், அபசானம், அபத்தம், அபவாதம், அபாய தந்திரம், அபாயம், அபாரணம், அபிமந்திரியாத, அபிமந்திரிப்பிக்கிறது, அபெக்ஷை, அபேக்ஷிக்கிறது, அபேக்ஷிக்குகை, அபையம் என நிற்கவேண்டும். இவ்வாறே Ach ஒலிகளையுடைய அச்சம், அச்சாம், அச்சானியம் Pro அக்கியானம், அச்சாரம் போன்றவை முதலில் இடம் பெற்றபின் A-g ஒலிகளையுடைய அகல், அகலம் போன்றவை பின்னர் இடம் பெறுகின்றன. தமிழ் நிரற்படி அகரத்தை முதலாகவும் ககரத்தை இரண்டாவதாகவும் உடையசொற்கள் இடம் பெற்ற பின்னரே, அகரமும் சகரமும்

சேர்ந்த சொற்கள் இடம்பெற்றிருத்தல் முறை. பின்னர் A·y, A·g, A·l என்ற ஒலிகளையுடைய சொற்கள் ஒவ்வொன்றின் பகுதியிலும் இடம் பெறுகின்றன.

தமிழ் அகராதிபடைக்க முற்பட்ட மேலை நாட்டுத் துறவியார் அவற்றில் தமிழ் அகரநிரலைப் பயன்படுத்தி முழுவெற்றி காணவில்லை. தமிழ் அகராதியியலுக்கு முழு நிறைவு அளிக்கும் வாய்ப்பும் கிட்டவில்லை தமிழ்நாட்டில் சமயம் பரப்புவோர் தமிழ்த்துறவிகளாய்த் திகழ வேண்டுமென எண்ணங்கொண்ட அடிகட்கு மேலைநாட்டுக் காப்பியம் மூலமாயினும், தமிழ் மரபிற்கியைந்த காப்பியமாகப் படைத்து வெற்றி கண்டவருக்குத் தமிழில் படைக்கும் அகராதி தமிழ் அகர நிரலை அடிப்படையாகக் கொண்டு முழுநிறைவு பெற்ற'தாக அமைய வேண்டும் என்னும் எண்ணம் எழுவது இயற்கையே. எனவே தமிழில் நிறைவு பெறாத மொழியியற்றுறைகளில் புதுவகை நூல்களைப் படைக்க வேண்டும் என்னும் உணர்வு கொண்ட அடிகளுக்கு மேலைநாட்டில் முழுமை பெற்ற அகராதித் துறையினைத் தாமறிந்த மொழிகளில் கண்டிருந் ததால் தமிழில் அகராதியொன்றை அம்மொழி மரபு மாறாமல் படைக்க வேண்டும் என்றெழுந்த வேட்கை அகராதியின் அடித்தளமாய் அமைந்ததெனக் கருதலாம்.

தமிழல்லாத பிற இந்திய மொழிகளில் சேசுசபையினர் படைத் தளித்த நூல்கள் அடிகளுக்கு முன்வழிகாட்டி, ஆர்வத்தை எழுப்பி யிருத்தல் கூடும். சமயப் பணியின் வரலாற்றில் சேசுசபையினரின் மொழித்தொண்டு தூய சவேரியாரிடமிருந்தே தொடங்கிற்றெனக் கொள்வர்.[93] மொழித்துறையில் சிறப்பான நூல்களெதுவும் அவர் படைக்காவிட்டாலும், வளமான மொழியாற்றலை உணரும் திறனு டையாராய்ச் சமயத்தொண்டர் விளங்க வேண்டும் என்னும் அவர்தம் உள்ளக் கிடக்கையைக் கடிதக் குறிப்புப் புலப்படுத்தும்[94]. அவருடன் வாழ்ந்த ஹென்றிக்கஸ் அடிகளது நூல் முதலில் அச்சான தமிழ் நூலாயிற்று. கோவா, ராச்சால், அம்பலக்காடு ஆகிய இடங்களில் அமைக்கப்பட்ட அச்சகங்களின் வழியாக இந்திய மொழிகட்கு வளம் சேர்க்கும் நூல்களைப் பலர் ஆக்கியருளினர்.

கி. பி' 1559 முதல் அம்பலக்காடு இன்றியமையாத சமயப்பணி நிலையமாகியது. சேசுசபையினர், வடமொழி, தமிழ், மலையாளம் போன்ற மொழிகளை நன்கு கற்றனர். பல நூல்கள் அங்கு அச்சிட்டு வெளியிடப்பட்டன.[95] வடமொழி அகர நிரல்பற்றிய சுவையான குறிப்புக்கள் ஹென்றிச்ரோத் என்பவரால் ரோமில் கி. பி. 1666-இல் விளக்கப்பட்டது.[96] மலபார் மறை பரப்புப் பகுதியில் 1699 முதல் 1732 வரை தொண்டாற்றியவரும் ஜெர்மானியரும் பிடெரிக் வான்

ஷ்லெகெலால் பாராட்டப்பட்டவருமாகிய ஹாங்ஸ்லெண்டன் வடமொழியில் இலக்கணம் செய்ததோடன்றிப் பிமென்டெல் அடிகளோடிணைந்து வடமொழி அகராதியும் இயற்றியுள்ளார். தமிழகராதிபிற்கூட ஈடுபட்டதாகத் தெரிகிறது.[97] பதினான்காம் லூயி மன்னரால் 1697 - ஆம் ஆண்டிற்குப்பின் அனுப்பப்பட்ட பிரெஞ்ச் சேசு சபையினருக்கும், பிரெஞ்ச் நிறுவனத்திற்கும் தொடர்பு உண்டு.[98] இவற்றால் அடிகள் காலத்தினை யொட்டிய வடமொழி அகராதித் துறையின் வளர்ச்சிநிலை தெரிய வருகிறது.

ஹாங்ஸ்லெண்டன் 1701-இல் கோவாவில் இறங்கிச் சில ஆண்டுகளில் மலபாருக்கு வந்தார். வடமொழியில் மட்டுமின்றி மலையாளத்திலும் புலமைபெற்றார். மலையாளத்திலும் அகராதி படைத்திருக்கிறார்.[99] ஆந்திரப் பகுதியில் வாழ்ந்த பிரெஞ்ச் நாட்டுச் சேசுசபையினைச் சார்ந்த பீட்டர் லாலேன் தெலுங்கு மொழியில் 1727-இல் இலக்கணமும் அகராதியும் படைத்துள்ளார். சபையினரிடையே அவை நெடுங்காலம் பாடநூல்களாக இருந்துள்ளன.[100] வடமொழி, தெலுங்கு ஆகியவற்றில் புலமை பெற்றிருந்த அடிகளுக்கு அவற்றில் ஈடுபட்ட அடியார்கள் பற்றியும், அவர்கள் ஆக்கிய அகராதிகள் பற்றியும் தெரிந்திருக்கும். கோவாவில் வந்திறங்கி மலையாளக் கடற்கரையோரம் வந்து, அம்பலக்காட்டில் தங்கிப் பின்னர்த் தமிழகத்தில் வாழ்ந்த அடிகளுக்கு அவ்விடங்களில் அச்சான அகராதிகள் பற்றியும் தெரிந்திருக்கும். அவற்றைப்போலத் தாம் பணியாற்றிய பகுதி மக்கள் பயன்பெற அவர்தம்மொழியில் அகராதி இயற்ற வேண்டும் என்னும் விருப்பும் அகராதியின் படைப்புக்கான காரணங்களுள் ஒன்றாக அமைந்திருத்தல் சாலும்.

மேனாட்டுத் துறவியரால் ஏற்பட்ட அச்சுக்கலை வளர்ச்சி நூணடை மாற்றத்திற்கு ஒருவகையான் வழியாயிற்று. தமிழகத்தில் சொற்பொருள் காண விழைந்த நிகண்டுகள் அனைத்தும் செய்யுள் வடிவு கொண்டன. பழங்கால நூல்கள் ஓலைச்சுவடிகளில் எழுதப்பட்டமையான் படி எடுப்பதும் போற்றிப் பாதுகாப்பதும் கடினம். எனவே, நூலைக் கற்கவேண்டுமாயின் மனனம் செய்து கற்பதே வழக்கமாயிருந்தது. என்றும் மனதில் தங்கும்படி மனனம் செய்வதற்குச் செய்யுள் வடிவம் துணை செய்யும். ஆதலின் அவ்வடிவாலேயே நூல்கள் எழுந்தன எனலாம். அடிகளார் காலத்தில் அச்சுக்கலை பரவத் தலைப்பட்டமையான் சொற்பின் சொல்லாக நிரலில் அமைத்து, அவற்றின் பொருளைத் தரும் சொற்களை எதிராக அமைத்துப் பொருள் விளக்கம் செய்தாலும், அவை அச்சிடப்படுதற்கும், அச்சிட்ட நூல்களை வேண்டுவோர் படியெடுக்கும் சிரமமின்றிப் பெறுதற்கும் வாய்ப்பிருக்கிறது. எனவே நிகண்டுகள் போலமைந்த செய்யுள் நடையினை மாற்றிப் புதுமுறையில் உரையிற்

பொருள் கூறும் முறையை அடிகள் பின்பற்றியதற்கு, அச்சுக்கலை வளர்ச்சியும் ஒரு காரணமாகலாம்,

தூய சவேரியாரது கடிதங்களிலிருந்து இந்தியாவிற்கு வருகின்ற சமயத்தொண்டருடைய நிலைபற்றிப் பெண்பே, கிறித்தவ சமயம் பரப்ப இந்தியாவிற்கு வருகின்றவர்கள், இங்கேயுள்ள சிறந்து விளங்குகின்றனவும் ஆவலைத் தூண்டுகின்றனவுமான இலக்கியங்க-ளோடிணைந்த சமயத்திற்கும் நாகரிகத்திற்கும் ஈடு கொடுக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள் என்றும், அவ்விலக்கியங்கள் எழுதப்பட்டிருக்கின்ற மொழியினை அறிந்திருந்தாலொழிய அவர்கள் பணியைச் செய்ய இயலாதென உயர்கிறார்களென்றும் கூறுகிறார்.[101] இக்கூற்றிலிருந்து மொழியின் இலக்கியங்களை நன்குணரும் திறம் சமயத்தொண்டருக்கு இன்றியமையாததென்பது புலனாகிறது. மொழித்திறம் முட்டறுத்துணர அவற்றின் பொருள்திறம் அறிதல் வேண்டும். அதற்கு உலக வழக்கினதாகிய பேச்சு மொழி மட்டும் பயன் தராது. செய்யுள் நலன்கெழுமிய செந்தமிழ்ச் சொற்றிறமும் அறிதல் வேண்டும். அத்திறம் உணரச் செய்யும் மொழியிலுள்ள அரிதுணர் பொருளனவாய திரிசொற்களின் பொருளை யாவருமுணரத் தெளிந்த தமிழில் தருதல் வேண்டற்பாலதென்னும் எண்ணமும் அகராதிப் படைப்புக்குத் தூண்டுகோலாய் அமைந்திருத்தல் சாலும்.

அடிகள் காலத்தில் தரங்கம்பாடிச் சமயத் தொண்டருக்கும் அவருக்கும் கருத்து மோதல் ஏற்பட்டதின் பயனாகச் சமயக் கோட்-பாடுகளை விளக்கி நூல்கள் எழுதவேண்டியதாயிற்று. 1727-ஆம் ஆண்டிற்கான மடலில் அந்நூல்கள் எழுதுவதில் நேர்ந்த போட்டி மனப்பான்மையும், வசதிக்குறைவும் இடம் பெறுகின்றன. 1728-ஆம் ஆண்டு ஜூலைத்திங்கள் 16-ஆம் நாளிட்ட அக்கடிதத்தில் பிராஸ்பர் குயுஸியானி, 'தரங்கம்பாடிச் சமயத்தொண்டர் புனிதமான நற்செய்தி வசனங்களை மோசமான தமிழில் உரைகூறி அச்சிட்டு வெளியிட்டிருக்கின்றனர். அவை பிழை மலிந்தவையாகவும், உண்மையான பற்றுறுதிக்கு மாறானவையாகவும் உள்ளன. ஆனால் அந்நூல்களிலமைந்த எழுத்துக்களின் அச்சு மிக அழகாகவும், தெளிவாகவும், வடிவிலும், உருவிலும் ஏழெட்டு வகையில் பெரியனவும் சிறியனவுமாக இருக்கின்றன. நாம் அவர்களை நூலுக்கு நூல் என்ற வகையில் மறுக்க உள்ளோம். எனினும் அதற்கான வசதி இல்லை'[102] எனக் குறிக்கிறார். இந்நிலை உணர்ந்த அடிகளுக்குத் தரங்கம்பாடிச் சமயத் தொண்டரைவிடத் தாம் மொழியாற்றல் நிறைந்தவர் என்பதைப் புலப்படுத்தவும், வகைவகையான எழுத்து வடிவங்களால் கண்கவர் வனப்பில் நூல்களைப் படைக்க முடியாவிட்டாலும் வகை வகையான துறைகளில் ஈடுபட்டு நூல்களை ஆக்கமுடியும் என

எடுத்துக்காட்டவும் அகராதி படைக்கவேண்டும் என்னும் எண்ணமும் தோன்றியிருத்தல் கூடும்.

சமயக் கொள்கைகளின் கொள்கலன்களாகத் தாம் படைத்த இலக்கிய வகைகளை அறிவு முதிர்ச்சி பெற்றோர் மட்டும் படித்துணர் வாராயின் பெரும் பயனில்லையாம். ஓரளவு கற்றவரும் அவற்றைக் கற்றுணர வேண்டுமெனின் அவற்றின் சொற்பொருளுணரத் தக்க வழிகாட்ட வேண்டும். அகராதியாற் கடின செற்கட்குப் பொருளுணரின் பிறருதவியின்றி ஓரளவு கற்றாரும் தாமே கற்றுணர வாய்ப்புக் கிட்டும். எனவே, தாம் படைத்த இலக்கியங்கள் முழுப் பயனுற அகராதியொன்று செவ்விய முறையில் வேண்டும் என்பதும் ஏதுவாயிருந்திருக்கலாம்.

மேனாட்டுத் துறவியர்க்குத் தமிழ் வேற்று மொழியாதலின் தமிழிலுள்ள பல சொற்களுக்கும் பொருளுணர வேண்டியது இன்றி-யமையாததாயிற்று. அருஞ்சொல், எளியசொல் என்ற வேற்றுமை-யின்றி எளிய சொற்களுக்கும் பொருள் விளக்கம் செய்ய வேண்டி-யிருந்தது.[103] எனவே அருஞ்சொற்கட்குப் பொருள் கூறிய நிகண்டுகளி-னின்று அனைத்துச் சொற்கட்கும் பொருள்தரும் அகராதி உருப்பெறும் நிலை நேர்ந்திருக்கலாம்.

துறவியர் கல்வி பெறாத கீழ்த்தர மக்களோடும் பழகி வந்தார்கள். அம்மக்கள் பேசுவதை உணரவேண்டும். எனவே வழக்குச் சொற்களையும் அகராதியிற் காணுதல் வேண்டும் என்ற நிலை உண்டாயிற்று.[104] இவ்வாறாகத் தமிழ் மக்களுள் பல இனத்தவர்களும் வழங்கும் சொற்க்ள் எல்லாம் அகராதியில் அமைவதற்கு வழிகாட்டியாத் திகழ வேண்டும் என்னும் சிந்தனை அடிகளது உள்ளத்தே தோன்றி அகராதியினை உருவாக்க அடிகளாரை ஊக்கியிருக்கலாம்.

அடிக்குறிப்பு

1 சுந்தரசண்முகம், பக், 2.
2 ………–…… பக்., 3.
3 திருக்குறள், 1.
4 தொல்காப்பியம், நூற்பா, 1.
5 சுந்தரசண்முகம், பக்., 23.
6 செந்தமிழ்ச்செல்வி, 1975, டிசம்பர், பக்., 219.
7 தேம்பாவணி - 2, பக், முகவுரை.
8 **Katre, 8. S. M. p, 3.**

9 Mathews, M. M. p , 8.
10 ....
11 Katre, S. M. p., 2.
12 Vasudeva Sarma, R. p., 56
13 Funk and Wagnulls p., 705.
14 Encylopaedia Britannica, p. 338.
15 ....
16 Mathews, M M. p. 11.
17 Encyclopaedia Britannica, p., 339.
18 ....
19 Mathews M, M. p., 331.
20 Encyclopaedia Britannica, p., 339.
21 ....
22 Murray, A. M. p., 331.
23 செந்தமிழ்ச் செல்வி., பக்., 230, 221.
24 நன்னூல், நூற்பா, 460 சங்கரநமச்சிவாயார் உரை.
25 நன்னூல், நூற்பா, 560.
26 நன்னூல், நூற்பா, 388, மயிலைநாதர் உரை.
27 சுந்தரசண்முகம், பக்., 25.
28 தமிழாய்வு, பக், 33.
29 நன்னூல், நூற்பா, 57.
30 ...., 73.
31 தொல்காப்பியம், நூற்பா, 19, 20, 21,
32 ...., 9,
33 89,
34 ...., 23, 36, 48, 61.
35 நன்னூல், நூற்பா, 150.
37 அறவாணன், க. ப., பக்., 293.
36 அறவாணன் க. ப. பக். 297.
38 தொல்காப்பியம், நூற்பா, 48, 61, 78, 114.
39 ...., 26, 152, 170.
40 ...., 1 உரை.
41 Tamil Lexicon, p., XXV.
42 பண்டாரம் நம்பியார், ஈ. பக், 134
43 Extracts from the remarks of Dr. M. Andronov
44 Chambers Encyclopacdia, Volume IV, P, 499.
45 The World Book Encyclopaedia Volume V, p. 160
46 Chambers Encyclapeadia Volume IV, p, 500.
47 தமிழாய்வு, பக்., 36.
48 தொல்காப்பியம், நூற்பா, 641.
49 பின்னிணைப்பு -1.

50 தொல்காப்பியம், நூற்பா. 1501-1502.
51 ...., 782, 783.
52 ...., 872, 879.
53 தமிழாய்வு. பக்., 45.
54 The Coloumbia Encyclopaedia, p., 499.
55 சுந்தரசண்முகம், பக்., 12.
56 ...., 47.
57 Tamil Lexicon, p., XXVII.
58 பின்னிணைப்பு - 2.
59 தொல்காப்பியம், நூற்பா, 784.
60 ...., 866, 867.
61 ...., 803 -- 806.
62 ...., 782.
63 ...., 794, 784, 813.
64 ....,794.
65 திவாகரம், பக்., 95.
66 தொல்காப்பியம், நூற்பா, 76., திவாகரம்,பக்., 91,
67 ...., 803,................, 88,
68 பின்னிணைப்பு - 3.
69 Mathews, M. M p., 8.
70 சுந்தரசண்முகம், பக்., 175.
71 நன்னூல், நூற்பா, 460.
72 சுந்தரசண்முகம், பக்., 164.
73 Tamil Lexicon, p., XXVII.
74 சுந்தரசண்முகம். பக்., 190.
75 Mathews, M. M., p., 13
76 கலைக்கலஞ்சியம், தொகுதி, 10, பக்., 42
77 Katre, S. M. p., 1, 2.
78 Mathews, M. M.p., 8,9
79 Tamil Lexicon, p , xxxiii
80 நீதிநூற்கொத்து, ஆத்திச்சூடி, பாடல், 12, 19; 25.
81 Tamil Lexicon p , xxxiv
82 xxxv
83 Mathews, M. M.p.,15,16
84 18
85 Oxford Juniors Encyclopedia, vol., p., 365
86 ....V., p, 248
87 Everyaman's Encyclopadeia, vol. 4., p., 390
88 ....
89 Chambers Encyclopedia, vol. IV., p. 499

90 **Joseph Dahlman, S. J. p ,** 8
91 இன்னாசி, . சூ. 3, பக்., 32
92 **Thaninayagam, Xavier, S, (Ed) p.,** 2.
93 **Joseph Dahlman, S. J., p ,** 3
94 ....—........................
95 ...., 6
96 ...., 24, 25
97 .... ‘ 25
98 ...., 26
99 ...., 34
100 ...., 36
101 4
102 **Besse, Fr. L. P.,** 84, 85
103 கலைக்களஞ்சியம், தொகுதி 1, பக்., 15
104 ....


ஐந்தாம் நிலை
நான்காம் நிலை
மூன்றாம் நிலை
இரண்டாம் நிலை
முதனிலை
500 0 500 1000 1500 1800
கி.மு. ← → கி.பி.
1 செ.மீ = 100 ஆண்டுகள்
A — தமிழ் அகராதி வளர்ச்சி
B — ஆங்கில அகராதி வளர்ச்சி

இயல் 3

சதுரகராதியின் அமைப்பு

1. நோக்கமும் ஆதாரமும்

நூலெழுத நினைத்த நோக்கத்தை ஆசிரியருடைய முன்னுரை கொண்டு அறியலாம். அகராதியின் எப்பதிப்பிலும் அடிகளார் எழுதிய முன்னுரை காணப்பட்டிலது. எனவே, முன்னுரையின்றி நூல் வெளியிட்டிருப்பாரோ என எண்ண இடமுண்டு. ஆயின் அடிகளார் எழுதிய முன்னுரை நூலின் கையெழுத்துப்படி யொன்றில் இருந்ததாகக் கூறப்படுறது.

பாரிஸிலுள்ள தேசீய நூலகத்தில் கையெழுத்துப் படிகளைப் பற்றிக் குறிப்பிடும் வின்சான் என்பவர் சதுரகராதியின் மிகப் பழைய கையெழுத்துப்படி பற்றிச் சுட்டுகிறார்.[1] நூலகத்தின் 1739 - ஆம் ஆண்டின் நூற்பட்டியலில் 448 -ஆம் பக்கத்தில் தமிழ் மொழிக் களஞ்சியம் என்னும் பெயரோடு இருந்ததால், 1738-ஆம் ஆண்டிற்கு முன்னதாக அக்கையெழுத்துப்படி அந்நூலகத்திற்கு வந்து சேர்ந்திருக்க வேண்டும் எனக் கருதுகிறார். நூலின் தலைப்புப்பக்கம் பின்வருமாறு

தமிழ் மொழிக் களஞ்சியம்
தமிழ் எழுதுவோர் தமிழைப் பிழையறத் தெளிந்துணரத் துணையாகுமாறு தொகுக்கப்பட்டு நான்கு பகுதிகளாக அமைக்கப்பட்டது.
மதுரை மறைப்பரப்புப்பகுதி சேசுசபையைச் சார்ந்த ஜோசப் கான்ஸ்டண்ட் பெஸ்கியால் அச்சபையைச் சார்ந்த சமயத் தொண்டருக்காகப் படைக்கப்பட்டது.
கி. பி. 1732

இத்தலைப்புப் பக்கத்தின்பின்புறம் ஒன்றும் எழுதப்படவில்லை. அடுத்த தாளில் அடிகளார் எழுதிய முன்னுரை தொடங்குகிறது. இத்தலைப்பும் முன்னுரையும் லத்தீன் மொழியில் அமைந்துள்ளன.[2]

நூலின் தலைப்புப் பக்கச் செய்தியால் அடிகளார் ஆக்கி- யருளிய அகராதியின் கையெழுத்துப்படி அதுவேயாம் என்பது தெளிவு. இந்தப் படியே உண்மையானதாகவும் அடிகளார் மேற்பார்வையில் உருவான முதற்படியாகவும் இருத்தல் கூடும். பாரீஸுக்கும் பாண்டிச் சேரிக்குமிடையே நடைபெற்ற கடிதப் போக்கு வரத்துக்களினாலும் இக்கையெழுத்துப்படி பற்றிய செய்திகள் தெரியவருகின்றன. 1768-ஆம் ஆண்டு, ஜூலைத் திங்கள், 28-ஆம் நாள் ஆங்குவெட்டில், பாரிஸிலிருந்து பாண்டிச்சேரியிலுள்ள பி. கார்டோஸ் என்பாருக்கு எழுதியுள்ள மடலில், அடிகளது செந்தமிழ்ச் சொற்களுக்குத் தமிழில் பொருள்கூறும் அகராதியின் கையெழுத்துப்படி பற்றிக் குறிப்பிட்டு உள்ளார். இக்கையெழுத்துப்படி மிகக் கவனமாக உருவாக்கப் பட்டிருப்பதாகவும், 348 பக்கங்களில் இரண்டு பத்திகளில் மிகஅழகாக எழுதப்பட்டிருப்பதாகவும் தற்பொழுதைய தமிழ் நூற்பட்டியலில் 227-ஆம் எண்ணில் உள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது.[3]

லத்தீன் மொழியிலுள்ள அம்முன்னுரையின்[4] தமிழாக்கம் பின் வருமாறு :

தமிழ் மொழிக் களஞ்சியம்

தமிழ் எழுதுவோர் தமிழை முழுதும் தெளிந்துணரத் துணைபுரிவது

கி. பி. 1732

முன்னுரை

ஒவ்வோர் அறிவுத் துறைக்கும் இன்றியமையாதது தெளிவு மிகுந்த இலக்கண விதிமுறைகளை அமைத்துக் கோடலே ஆகும். எனினும் அத்துறைகட்கு மூலமான பொருள்களைச் சிந்தித்து, அவற்றுள் விதிமுறைகளை அடக்கிச் செயல்படுத்தாவிடின் அவ்விதி முறைகளால் பயனில்லை. ஓவியருக்கு வண்ணங்களைப் போல், வீரர்க்குப் படைக்கருவிகள் போல், கட்டிடம் கட்டுவோர்க்குச் சுண்ணாம்பு செங்கற்களைப் போல். அயன்மொழி கற்போர்க்குச் சொற்கள் இன்றியமையாதனவாகும். எனவே அனைத்துச் சொற் களையும் கொண்டுள்ள அகராதியைப் படைக்காமல், செந்தமிழ் கொடுந்தமிழ் ஆகியவற்றின் சொன்மரபுகள் பற்றி எவ்வளவு விரித்துரைப்பினும் வேண்டியது செய்துவிட்டோம் என நம்பிக்கை கொள்ளேன். இதனை மனத்துட்கொண்டே, இருவகை மொழிகளிலும் இலக்கணமும் அகராதியும் தருவதாக உறுதி தந்திருந்தேன். தாமதமாகிவிட்டாலும் என் உறுதிமொழியை நிறைவேற்ற விரைகிறேன். லத்தீன், பிரெஞ்ச், போர்த்கீஸ் சொற்றொடர்களால், பொருள் விளக்கும் பேச்சுமொழி அகராதியல்லாமல் செந்தமிழ் எழுதுவோர்களால் பயன்படுத்தப்பட்டனவும், பல பொருள் கொண்டனவும், பொருள்மயக்க முடையனவுமாகிய சொற்களின்

பொருள்களை விளக்கமுற உணர்த்தும் அகராதியை வெளியிடுகிறேன். அவர்களால் பயன்படுத்தப்பட்ட ஒருசொல் பல்பொருள், ஒருபொருள் பல்பெயர் ஆகியவற்றை விளக்கியுள்ளேன். மேலும் மரபுத் தொடர்களில் உள்ள இரு நலம், மூவுலகம், நாலரண், ஐம்புலன்கள், அறுசுவை, எழு கடல்கள், எட்டு மலைகள் என்றாற் போன்று ஆசிரியர்களால் ஆங்காங்கே கையாளப்பட்டுச் சிதறிக் கிடக்கின்ற வற்றைக் காணலாம். இறுதியாகச் செய்யுட்களில் பயன்படும் சொற்கள் இடம்பெறுகின்றன. அப்பகுதியில் ஓசை, ஒலிப்பு, அசை ஆகியவற்றில் ஒத்திருந்து ஓரெழுத்தால் மட்டும் வேறுபடக்கூடிய எதுகைத் தொடைச் சொற்களைத் தொகுத்திருக்கிறேன். எனவே, இத்தொகுப்பைத் தமிழ் மொழிக் களஞ்சியம் என விளக்குவதில் மகிழ்ச்சியடைகிறேன். இவ்வகைச் சொற்களையெல்லாம் ஒன்றாகத் தொகுத்து அவற்றைத் தமிழ் நெடுங்கணக்கு முறைப்படி நான்கு பகுதிகளாக அமைத்திருப்பதால் இத்தமிழ் நூலுக்குச் சதுரகராதி எனப்பெயரிட்டிருக்கிறேன். இந்நாட்டாருக்கு உதவும் வகையில் தமிழ்ச் சொற்களின் பொருள்களைத் தமிழிலேயே, இயன்ற அளவில் இயல்பாகப் பேசும் தமிழிலேயே விளக்கியிருக்கிறேன். இவ்வியல்பான தமிழை ஐரோப்பியர்கள் அறிந்திருப்பாராயின் மேலும் முயன்று விரைவாகவும் அழகாகவும் செந்தமிழ் மொழியினை உணரமுடியும்.

ஓரெழுத்து வடிவே இரண்டெழுத்தைச் சுட்டுவது போன்றமைந்து மயக்கத்திற்கிடந்தருமாயின் அதனை நீக்கக் கொடுந்தமிழ் இலக்கணத்தில் கூறியுள்ள விதிமுறைகட்கேற்ப மெய்யெழுத்துக்களையோ, குறியீடுகளையோ பயன்படுத்தியுள்ளேன். மேலும் நெடில் எகர ஒகரங்களைத் தெளிவாக விளங்குமாறு கொம்பு அடையாளத்தை நீட்டியிருக்கிறேன். எ-டு. செடி-சேடி, கொடி-கோடி போன்றன.

செந்தமிழ் மொழி இறந்துபட்டதாகப் பொதுப்படப் பேசப்படுவதால் இந்த யுகத்தில் உள்ளவரை நம்பாமல், திவாகரம், நிகண்டு, பிங்கலந்தை, கையாகாதி போன்ற பழம் நூல்களைக் கவனமாகப் பார்வையிட்டேன். ஆனால் அவைகளெல்லாம் அகராதிகளல்ல. அந்நூல்களை ஆழ்ந்து கற்று எடுத்துச் சொல்லும் அறிஞர்களைக் கலந்து பேசினேன். படியெடுப்போரின் கவனக் குறைவால் பிழைகள் மலிந்திருந்தமையின் பல படிகளை ஒப்பிட்டேன். இறுதியாகப் பல சொற்கள் அந்நூல்களில் கிரந்தத் தமிழாயிருந்தமையின் கிரந்தம் அறிந்த ஆசிரியர்களைக் கண்டு உண்மைக் கொள்கைக்கட்கு ஏற்பப் பிழைகளைத் திருத்தியுள்ளேன். கிரந்தக் கருவூலத்திலிருந்து அனேகச் சொற்களையும் பொருள் விளக்கங்களையும் எடுத்தாண்டு தமிழ்க்கருவூலத்தை வளம்பெறச் செய்தேன்.

சேசு சமயத் தொண்டர்கட்காக மிகுந்த கவனத்தோடும் முயற்சியோடும் இந்நூற் கருவூலத்தைப் படைக்கிறேன். இப்பகுதியில் வழங்கும் தெய்வங்கள், புராணக்கதைகள், விஞ்ஞான நெறிகள், புலவர்கள் பாடல்கள், வானிலைக்கணக்கீடுகள், மருத்துவமுறைகள் இசை நுணுக்கங்கள் ஆகியவற்றைப் படிப்படியாக அறியவருங்கால், இவ்வகராதியின் பயனை எளிதாக உணர்வர். எல்லாவற்றின் அடிப்படை இலக்கண நெறிகளும் பழங்கால ஆசிரியர்களால் செந்தமிழில் எழுதப்பட்டுள்ளன. எனவே உயர்ந்த தமிழ் நடையை முன்னதாகவே அறிந்திராவிட்டால், தெய்வங்கள், புராணங்கள், கலைகள், விஞ்ஞானம் ஆகியவற்றைப் பற்றி எதுவுமே அவர்களால் உணர முடியாது. மேலும் அறியாதாராயினும், அபத்தங்களைக் கூறுவோராயினும் இந்நாட்டாரையே, குறிப்பாகப் பிராமணர்களையே சமயத் தொண்டர் நம்ப வேண்டியவர்களாகி விடுகிறார்கள். மாறாக, அவர்கள்தம் படைப்புக்களைப் படித்து உணர இயலுமாயின் அவர்களுடைய கூற்றுக்கள் எவ்வளவு தவறானவை; தெய்வங்கள், புராணங்கள் பற்றிக் கூறுவது எவ்வளவு பொருத்தமில்லாதது எனக் காட்டமுடியும். அதுவரை அவர்கள் கொண்டிருந்த எண்ணங்கள் எவ்வளவு தவறானவை என்பதனைக் காரணத்தோடு கூறுங்கால், அவர்களால் மறுக்க இயலாது. பழமையான நூல்களை அடிப்படையாகக் கொண்டு எதிர்த்தால் அல்லது மறுத்தால் எல்லாக் கட்டுக்கதைகளையும் ஒதுக்கித் தள்ளும் நிலைக்கு வந்துவிடுவர். இந்தியர்கள் அனைவரும் காரணகாரியத்தோடு நம்புவதைவிட இலக்கிய பிராமாணங்களையே நம்புபவர்களாக இருக்கின்றமையான் பழங்கால ஆசிரியர்களின் எழுத்துச் சான்றுகளாலும் இலக்கிய மேற்கோள்களாலும் நம்பவைப்பதே சரியானதாகும். பழந்தமிழர்கள் நற்பண்புகள் பற்றித் தெளிந்த உண்மைகளை எங்கே கூறி இருக்கிறார்களென அறிய, அந்நூல்களின் செந்தமிழ் நடையும், சொன்மரபுகளும் தெரியாமல் என்ன செய்ய இயலும்? இதிலிருந்து இப்பணி எவ்வளவு பயனுள்ளது என்பதும் சமயத்தொண்டருக்கும் பிறருக்கும், இந்தியர்களை அவர்களது பழமையான தவறுபட்ட சிந்தனையிலிருந்து குறைந்த பட்சம் பழங்கட்டுக் கதைகள் முழுதும் பயனற்றவை என வெறுக்குமாறு செய்வதற்கு எவ்வளவு இன்றியமையாதது என்பதும் தெளிவாகிறது. நல்லவரும் வல்லவருமாகிய கடவுள் இப்படைப்பிற்குத் துணை நின்றார் அவரது பெரும் மகிமையால் கடின உழைப்பிற்கும் களைப்பிற்கு மிடையே இது வெளியிடப்படுகிறது. இவற்றை மனத்திருத்தி ஆன்ம உணர்வோடு இதனைப் பயன்படுத்துவோருக்கு அளவிறந்த இனிய பலன்கள் உண்டாகும்.

இம்முன்னுரை ஆசிரியர் உள்ளக்கிடக்கையையும் அதனை வெளியிட மேற்கொண்ட அயரா உழைப்பையும் நூலெழுதுவோர் மேற்

கொள்ள வேண்டிய நெறிகள் பற்றியும் புலப்படுத்துவதாய் அமைந்துள்ளது. தாம் இத்தன்மைத்தான நூல் வெளியிட முன்னரே திட்டமிட்டுச் செயல்படுத்தினார் என்பது புலனாகிறது. முன்னரே செந்தமிழ் மொழிக்கான இலக்கணமும் அகராதியும் தருவேன்[5] எனக் கூறியிருந்த உறுதிமொழியை நிறைவேற்றுவதாகக் கூறுகிறபடியால் தொடக்கமுதலே மொழியின் இயல்பைப் பிரித்துத் தெளிந்து, ஒவ்வொன்றின் அமைப்பும் நெறியும் தனித்தன்மை கொண்டவை எனக் கொண்டு, அவற்றை அனைவரும் உணருமாறு செய்யவேண்டும் என்ற எண்ணம் வேரூன்றியிருந்ததைக் காண்கிறோம். 1728 -ஆம் ஆண்டு தாம் எழுதிய கொடுந்தமிழ் இலக்கண முன்னுரையில், செந்தமிழுக்கு ஓர் இலக்கணமும், அகராதியும் தருவதாகக் கூறியிருந்ததை நான்-காண்டுகளில் நிறைவேற்றுகிறார். அவ்விடைக் காலத்தையே தாமதமாகிவிட்டதாக அடிகளார் கருதுகிறபடியால் 1732-ஆம் ஆண்டிற்கு முன்னரே வெளியிடத்திட்டமிட்டிருப்பார் எனத் தெரிகிறது. அவ்வாறாயின் பல ஆண்டுகட்கு முன்னரிருந்தே அகராதிப் பணியில் ஈடுபட்டு இவ்வகராதிகட்கான சொற்களைச் சேர்த்து வந்திருத்தல் வேண்டும்

முன்னுரையின் தொடக்கம் இலக்கணமும் அகராதியும் ஒன்றோடொன்று தொடர்புடையன என்பதைக்காட்டுகிறது. எத்துறைக்கும் மூலப்பொருள்கள் இன்றியமையாதது போல் மொழிக்கு அடிப்படை இலக்கண நெறிகளாம். மூலப்பொருளைத் தக்க கருவிகளைப் பயன்படுத்தி உருப்பெறச் செய்யாதொழியின் பயனின்றாம். அவ்வாறே சொற்களாம் கருவி கொண்டே, இலக்கண நெறிகளை உட்படுத்தி மொழியாக உருவாக்க இயலும். கருவிகளாம் சொற்கள் இல்லையேல் பயனின்றாம். தாய் நாட்டாருக்கு இச்சொற்கள் இயல்பாக ஓரளவு கைவரப் பெற்றிருப்பினும் பிறமொழியாளருக்கு அவற்றை அறிந்திருக்க வாய்ப்பில்லை. எனவே சொற்களனைத்தையும் ஒன்றாகத் தொகுத்துத் தரும் அகராதி வேண்டற்பாலது. அதனாற்றான், ஓவியருக்கு வண்ணம் போல், வீரர்க்குப் படைக்கருவிபோல், கட்டிடக் கலைஞர்க்குச் சுண்ணாம்பு செங்கற்கள் போல் பிற மொழியாளருக்குச் சொற்கள் இன்றியமையாதனவெனக் குறிப்பிடுகிறார்.

தலைப்புப்பக்கம் அகராதி சேசு சபையைச் சார்ந்த சமயப்பரப்புநருக்காகப் படைக்கப்பட்டதெனக் கூறுகிறது. முன்னுரை சமயப் பரப்புநருக்கு இவ்வகராதியின் இன்றியமையாமையைத் தெளிவாக்குகிறது. அடிகளார் தம் நூலாக்கத்திற்கு அடிப்படை, அப்பணியில் ஈடுபட்டோர்க்குத் தம்மாலான வகையில் உதவ வேண்டும் என்னும் விழுமிய நோக்கம் எனலாம். அடிகளாருக்கு அப்பணியில் ஈடுபடுங்கால் ஏற்படும் இன்னல்கள் தெரியும். ஒருசமயத்தை முன்னரே பின்பற்றி வருவோரைப் பிறிதொரு சமயத்தைப் பின்பற்றுமாறு மாற்ற வேண்டுமாயின் முன்னர்க் கைக்கொண்டிருந்த சமயத்தில் உள்ள குறைகள்

சுட்டிக்காட்டப்பட வேண்டும். அச்சமயம் காட்டும் கொள்கை, கலை கலாச்சாரத்தினும் தம் சமயம் காட்டுவது எவ்வகையில் உயர்ந்தது, குறைபாடற்றது எனத் தெளிவாக்கப்பட வேண்டும். அதற்கு இங்குள்ள சமயக் கொள்கைகள், புராணங்கள், கலைகள் பற்றி ஒன்றும் அறியாவிட்டால் பயனின்று. அவை அமைந்துள்ள பழம்நூல்களைப் படித்துணர அவற்றில் அடங்கிய சொற்பரப்பினையும் பொருள்களையும் அறிந்திருத்தல் வேண்டும். அதற்கு உதவ வேண்டும் என்னும் சீரிய நோக்கத்தில்தான் இந்நூல் எழுந்ததென்பதனையும் முன்னுரை காட்டுகிறது.

எனினும், இதனால் பயனடைய இருப்போர், பிறநாட்டைச் சார்ந்த சமயத் தொண்டர் மட்டுமல்லர்; இந்நாட்டோரும் ஆவர் என்பது முன்னுரையில் கோடிட்டுக் காட்டப்படுகிறது. இந்நாட்டில் வாழ்வோர் அனைவரும் பழந்தமிழ் நூல்களைப் படித்துப் புரிந்து கொள்ள முடியாத நிலையில், அவை செந்தமிழ் நடையில் அமைந்துள்ளன. அவற்றில் அடங்கியுள்ள சொற்பொருளைத் தாமறிந்த எளிய தமிழில் புரிந்திருப்பாராயின் பழமையான நூல்களைக் கற்பது எளிதாகும். எனவே அவர்கட்கு உதவும் வகையில் தமிழ்ச் சொற்களின் பொருள்கள் சமயத் தொண்டர் அறிந்திருந்த லத்தீன், போர்த்கீஸ், பிரெஞ்ச் போன்ற மொழிகளிற் கூறப்படாமல் தமிழ் நாட்டார் எல்லோருக்கும் தெரிந்த எளிய தமிழில் விளக்கப்பட்டுள்ளன. பிறநாட்டைச் சார்ந்த சமயத் தொண்டருக்கும் எளிய தமிழிலிருந்து படிப்படியாகச் செந்தமிழ் அறிவதற்கு அத்தமிழ் விளக்கம் வழித்துணையாயமைந்தது. எனவே, தம் அகராதி சமயத் தொண்டர், தமிழ் நாட்டார் ஆகிய இரு சாராருக்கும் ஒருங்கே பயனளிக்க வல்லதாய் அமைந்துள்ளதென முன்னுரை காட்டுகிறது.

நூலைப் படைப்பதற்கு முன் எவ்வகை முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என்பதனையும் முன்னுரை கூறுகிறது. படைக்கவிருக்கும் நூலினுக்கு முன்னோடிகளாய் விளங்கும் நூல்கள் அனைத்தையும் பார்வையிட வேண்டும். அந்நூல்களில் ஐயுறவிற்கிடமானவற்றில் அவற்றைக் கற்றுத் துறைபோகிய அறிஞர்களைக் கலந்துரையாடித் தெளிவு பெறுதல் வேண்டும். படிசெய்வோர் அனைவரும் கற்றிருந்தவர்களாக இருத்தல் சாலாது. அவர்தம் கவனக் குறைவால் பிழைகள் மலிந்திருக்க வாய்ப்புண்டு. எனவே பல படிகளை ஒப்பு நோக்கி முடிவு பெறுதல் வேண்டும். இம்முறைகளை யெல்லாம் அடிகளார் மேற்கொண்டு நூலினை வெளியிட்டிருப்பதாக முன்னுரையில் தெரியவருவதால் அடிகளார்தம் கடின உழைப்பையும் அரியமுயற்சியையும் உணர முடிகிறது.

தாமறியாத பிறமொழிச் சொற்கள் தாமறிந்த மொழியில் கலந்திருப்பின் அவற்றைக் கூர்ந்து நோக்கிப் பொருள் உணர்தல் வேண்டும். அவற்றின் மூலக்கூறும் பொருளும் தம் மொழியில் பயின்று வரும் தன்மைக்கு மாறாக இருந்திருத்தல் கூடும். அவற்றின் மூலம் அறிய அம்மொழியில் வல்லாரையே நாடவேண்டும். தமிழ்ச் சொற்பொருள் காண வந்த நூல்களில் கிரந்தத்தமிழ்ச் சொற்கள் கலந்திருந்ததாக முன்னுரை கூறுகிறது. தமிழில் கலந்திருந்த வடசொற்களையே கிரந்தத் தமிழ் என அடிகளார் சுட்டுவதாகத் தெரிகிறது. அடிகளாருக்கு வடமொழிப் பயிற்சி உண்டென்றாலும் அம்மொழியில் வல்லாரை நாடித் தெளிந்து அகராதியில் சேர்த்துள்ளார் என்பதினின்று, தம்மறிவினை மட்டும் பெரிதாக எண்ணாமல் தம்மினும் வல்லாரை மதித்த பண்பும், சிறு பிழைகூட ஏற்படாது நூலினை வெளியிடவேண்டும் என்று எண்ணிய சிந்தனையும் புலப்படுகின்றன.

அச்சுக்கலை வளராத அக்காலத்தில் ஒருவர் எழுத்தைப்போன்று பிறிதொருவர் எழுத்தினைப் படித்தறிய இயலாது. மெய் உயிர்மெய் வேறுபாடு, குறில் நெடில் வேறுபாடு தெளிவாக வரிவடிவில் புரிந்து கொள்ள இயலாத அந்நாளைய நிலை அடிகள் தம் கொடுந்தமிழ் இலக்கணத்தில் குறிப்பிடப்படுகிறது.[6] தொடராக இருப்பின் அருகிலிருக்கும் சொல் கொண்டு இவ்வேறுபாடுகளை உணர இயலும். பொருள் மட்டும் சுட்டப்படுகின்ற அகராதியில் அவ்வாறு உணர்தற்கு வழியில்லை. எனவே அவ்வேறுபாட்டினை வரிவடிவில் தெளிவுபடுத்தித் தம் நூலைஆக்கித் தந்திருப்பதாகச் செடி-சேடி, கொடி-கோடி ஆகிய எடுத்துக்காட்டுகளோடு முன்னுரையில் விளக்கியிருப்பதினின்று படிப்போர்க்கு மயக்கமறத் தெளிவு பெறச் சொற்களும் பொருள்களும் அமையவேண்டும் என்பதில் எவ்வளவு முன்னுணர்வோடு அடிகளார் அகராதியைப் படைத்துள்ளார் என்பது தெளிவாகிறது.

முன்னுரையின் இறுதிப் பகுதி அடிகளாருடைய சமயக் குறிக்கோளையும், இறைப்பற்றையும் வெளிக்காட்டுவதாய் உள்ளது. இலக்கியங்களை ஆதாரமாகக் கொண்டு சமய நம்பிக்கையில் ஊறியிருப்பவர்களை இலக்கிய நூல்களை மையமாகக் கொண்டு மாற்ற முயல்வதே சிறந்த வழி எனத் தம் சமயத் தொண்டருக்கு அறவுரை தந்து, அதற்கு உறுதுணையாக அகராதி அமைந்துள்ளதென்று காட்டுவதும், இந்நூற் படைப்பிற்குக் கடவுளின் அருளும், மகிமையும் துணை நின்றனவென்று கூறுவதும் அவரது சமயப்பற்றையும் சமயம் பரப்பும் குறிக்கோளையும் காட்டவல்லன.

நூலின்கண்ணுள்ள சொற்றொகுதிக்குப் பழந்தமிழ் நூல்களையே ஆதாரமாகக் கொண்டதாக முன்னுரையின் இடையில் உள்ள ''இக்காலத்தில் வாழ்வோரை நம்பாமல், திவாகரம், நிகண்டு, பிங்கலந்தை, கையாகாடி போன்ற பழமையான நூல்களைப் பார்வையிட்டேன்'' என்னும் குறிப்பால் கொள்ளலாம். அவ்வாறாயின் எவ்வெவ்வகைத்தாய நூல்கள் அகராதிப் படைப்பிற்கு மூலமாய் அமைந்திருக்கலாம் என்பது ஆராய்தற் குரித்தாகின்றது.

பழங்காலத்தில் சொற்பொருள் விளக்குதற்குச் செய்யுள் நடையால் எழுந்த நிகண்டு நூல்கள் சிலவற்றை முன்னுரையில் குறித்து அவை அகராதிகளல்ல என வேறுபடுத்துகிறார். அவ்வாறு குறிப்பிடும் திவாகரம், நிகண்டு, பிங்கலந்தை, உரிச்சொல், கையாகாடி ஆகியவற்றுள் கையாகாடி என்னும் நூல் பற்றி ஒன்றும் தெரிந்திலது. பிற நிகண்டுகளோடு சேர்த்து ஆசிரியரால் குறிப்பிடப்படுவதால் அதுவும் நிகண்டாயிருக்கலாம். அடிகளார் பார்வையிற்பட்டுப் பிறகு மறைந்து போயிருத்தல் கூடும். திவாகரம், திவாகர முனிவரால் இயற்றப்பட்டது. பிங்கலந்தை பிங்கலம் என்னும் பெயராலும் அழைக்கப்படுகிறது. நிகண்டு, உரிச்சொல் என்பன நிகண்டு நூல்களின் பொதுப் பெயராயினும் சூடாமணி நிகண்டு என்னும் நூல் சிறப்புக் காரணமாக நிகண்டு என்றே அழைக்கப்படும் தகுதி பெற்றதாகக் கருதப்படுவதால்[7] அடிகளார் நிகண்டு எனக்குறிப்பது சூடாமணி நிகண்டையே எனக் கொள்ளலாம். உரிச்சொல் என்பது சூடா மணிக்குப் பின்னும், அகராதிக்கு முன்னும் காங்கேயரால் இயற்றப் பட்ட உரிச்சொல் நிகண்டெனக் கொள்ளலாம். புதுச்சேரியில் பிரெஞ்சுக்காரர் மேற்பார்வையில் நடைபெற்ற அரசினர் பள்ளிகளில் நூறாண்டுகட்கு முன்னரே பாடமாகப் பயிலப்பட்டிருக்கிறதெனில்[8] அதற்குமுன் அந்நூல் பெருவழக்காக அமைந்திருத்தல் வேண்டும். எனவே, தற்பொழுது வழங்கிவரும் நிகண்டு நூல்களுள் திவாகரம், பிங்கலம், சூடாமணி, உரிச்சொல் நிகண்டு ஆகியன அடிகளாருக்கு மூல நூல்களாயின என்பது உறுதிப்படுகிறது. இவற்றுள் உரிச்சொல் நிகண்டு மற்றவற்றை நோக்க அளவில் மிகச் சிறியது. 287 வெண்பாக்களால் ஆயது. பல்லாயிரக்கணக்கான சொற்களைக் கொண்ட அகராதிக்குப் பெருமளவில் உதவியிருக்கும் எனக் கருதுவதற்கில்லை. நிறையச் சொற்களுக்கு விளக்கத் தருவனவும், பிற்கால உரையாசிரியர்களால் தம் உரைகளில் மேற்கோளாக ஆளப்படுவனவுமான[9] திவாகரம், பிங்கலம், சூடாமணி ஆகிய மூன்றும் பேரளவில் அகராதிக்குத் துணை புரிந்திருக்கின்றன எனக் கொள்ளலாம்.

நிகண்டுகளில் உள்ள சொற்களை மட்டும் எடுத்தாண்டிருந்தால் சொற்களின் எண்ணிக்கையும் பொருளும் அவ்வாறே இருந்திருக்க வேண்டும். அவ்வாறன்றிச் சொற்களின் எண்ணிக்கை மிகுதியும்

பொருள் வேறுபாடுகளும் அகராதியில் அமைந்துள்ளன. செய்யுளுக்குரிய எதுகைச் சொற்கள் காட்டப்பட்டுள்ளனவாக முன்னுரை கூறுகிறது. எனவே, வேறு பல இலக்கியங்களை மூலங்களாகக் கொண்டிருக்க வேண்டும். அவர் என்னென்ன இலக்கியங்களைப் பார்வையிட்டுள்ளார் என்பதனை வரையறுக்க இயலாவிட்டாலும் ஓரளவு அனுமானிக்க முடிகிறது. அதற்கு அடிகளார் இயற்றிய தொன்னூல் விளக்கம் ஓரளவு பயன்தருகிறது.

முன்னுரையின் தொடக்கம் இலக்கணத்திற்கும் அகராதிக்கும் உள்ள தொடர்பினைக் கூறுகிறது. அவ்வகைத் தொடர்பு செந்தமிழ் அகராதிக்கும் செந்தமிழ் இலக்கணமாகிய தொன்னூல் விளக்கத்திற்கும் மிகவும் பொருந்தும். அகராதியின் பாயிரமும் அத்தொடர்பினை ஒருவாறு நினைவூட்டுகிறது. தமிழ்ப் பதிப்புகளில் முதலாவதாகக் காணப்பெறும் பாயிரப் பாடலில்,

''முன்னூற் றெளிந்து முன்னர்த் தந்த
தொன்னூல் விளக்கந் துதித்துக் கொண்டனர்''

என்றும், அவர்தம் வேண்டுதலால் சதுரகராதி சாற்றுதும் என்றும் கூறுவதால், அகராதிக்கு முன்னர்த் தொன்னூல் விளக்கம் இயற்றப்பட்டதென்றும், தொன்னூல் விளக்கம் இயற்றுவதற்கு முன், முன்னூல்களைத் தெளிந்துள்ளார் என்றும் புலனாகிறது. ஆதலின் தொன்னூல் விளக்கத்தில் மேற்கோளாக ஆளப்படும் பிற நூல்கள் அனைத்தும் மூலங்களாக அகராதிக்கு அமைந்தன என உறுதி பெறலாம்.

தொன்னூல் விளக்கவுரையில் அகராதி முன்னுரை சுட்டாத ஆசிரிய நிகண்டிலிருந்து மேற்கோள் காட்டப்படுகிறது.[10] அகத்தியம், அகப்பொருள் விளக்கம், அமுதசாகரம், இலக்கணத்திரட்டு, இலக்கண விளக்கம், தண்டியலங்காரம், தொல்காப்பியம், நன்னூல், நேமிநாதம், பாட்டியல், புறப்பொருள் வெண்பாமாலை, பேரகத்தியம், பொருத்தவியல், மயேச்சரர் யாப்பு, யாப்பெருங் கலக்காரிகை, யாப்பருங்கலம், விருத்தப்பாட்டியல், வீரசோழியம், வெண்பாப்பாட்டியல் முதலிய இலக்கண நூல்கள் எடுத்துக்காட்டப் படுகின்றன. காக்கைப்பாடினியார், கையடனார், நத்தத்தனார், பல்காயனார் போன்ற இலக்கண ஆசிரியர்களின் நூற்பாக்கள் எடுத்துக்காட்டாகத் தரப்படுகின்றன.

இருமொழிமாலை,[11] கம்பராமாயணம்,[12] காசி காண்டம்,[13] சிந்தாமணி,[14] சிலப்பதிகாரம்,[15] திரிகடுகம்,[16] திருக்குறள்,[17] நாலடியார்,[18] நைடதம்,[19] பாரதம்[20] போன்ற இலக்கியங்களின்

பாடல்கள் ஆளப்படுகின்றன. உபதேச காண்டம்,[21] நியாய சூடா-மணி,[22] புதிய நுட்பம்[23] போன்ற நூல்களும் மெய்ம்மறை-யாசாரியனார்[24] போன்றோர் கருத்துக்களும் சுட்டப்படுகின்றன. இவ்வகைப்பட்ட நூல்களெல்லாம் அகராதியின் சொற்றொகுப்பிற்குத் துணை புரிந்திருக்க வாய்ப்புண்டு.

சென்னைப் பல்கலைக் கழக அகராதி உருவாக்கத் துணை நின்ற மூலங்கள் பற்றி, ''மிகப் பழங்காலம் முதல் அண்மைக்காலம் வரை எழுந்துள்ள தமிழ் இலக்கியங்களில் கிடைத்த அனைத்தும் பார்வை-யிடப்பட்டு, அவற்றின் சொற்கள் தொகுக்கப்பட்டுப் பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. கையெழுத்துப்படிகளின் சொற்களும் சிலவிடங்களில் பயனாயின. சிறந்த நிகண்டுகளின் சொற்கள் விரிவாகத் தொகுக்கப்பட்டு பரந்த அளவில் இவ்வகராதியின் ஆக்கத்-திற்குப் பயன்படுத்தப்பட்டன''[25] எனக் குறிக்கப்படுகிறது. அடிகளார் படைத்த அகராதிப் பணிக்கும் அக்குறிப்புப் பொருந்தும் எனலாம். அக்காலச் சூழ்நிலையில் உள்ளன கொண்டு நல்லன செய்யும் உயர்ந்த நோக்கில், கிடைத்த அனைத்து நூல்களையும் மூலமாகக் கொண்டு இயன்ற அளவில் சொற்களைத் தொகுத்து, அவற்றின் இன்றியமை-யாதனவற்றை அகர முதலிய நிரலில் அமைத்து அகராதி உருவாக்கப்-பட்டது எனலாம்.

2 பகுப்பும் பதிப்பும்

அகராதி வெளியிடப்பட்ட ஆண்டு கி. பி. 1732 என்பதை வின்சான் என்பார் குறிப்பிடும் கையெழுத்துப்படியின் முன்னுரைத் தலைப்புத் தெளிவுபடுத்துகிறது. அச்சுப்பதிப்புகளின் இறுதியில் அமைந்துள்ள ஆசிரியப்பாவும் சாலிவாகன சகாத்தம் எண்ணான்-கைம்பது மெண்ணாறுமாறும் (1654) ஆகிய கிறித்து பிறந்த 1732 ஆம் ஆண்டு சதுரகராதி முடிக்கப்பட்டதாகக் கூறுகிறது. எனவே, கி. பி. 1732-ஆம் ஆண்டு நூலின் காலம் என்பது உறுதி பெறுகின்றது.

கையெழுத்துப்படியின் முதற்றாள் முதற்பக்கத்தலைப்பு இவ்-வகராதி நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளதாகக் காட்டுகிறது.[26] முன்னுரையினுள்ளே, ஒருசொல் பல்பொருள், ஒருபொருள் பல்பெயர், தொகைச் சொற்கள், தொடைச் சொற்கள் ஆகியவற்றைத் தொகுத்துப் பொருள் விளக்கி, நான்கு பகுதிகளாக அமைத்திருப்பதால் சதுரகராதி என்னும் பெயரிட்டிருக்கிறேன் என அடிகள் கூறுகிறார். அச்சுப் பதிப்புக்களில் நூலின் முதலிலுள்ள பாயிரமும் நூற்பதக் கருவியாகவுள்ள நாற்பத விளக்கமும் நவில்கென வேண்டத் தனித் தனியே அவ்வவற்றிற்குரிய பெயர்ப்பொருள், அவ்வவற்றிற்குரிய பொருட்பெயர் காட்டி, மீண்டும் வழக்கிலுள்ள தொகைகளில்

அமைந்தனவற்றின் வகைகளைப் பெயர், பொருள், தொகை, தொடை என நான்முகமாகப் பிரித்துச் சதுரகராதி எனச் சாற்றியதாகக் கூறுகிறது. இவற்றினின்று சொற்களின் தன்மைகளுக்கேற்ப நான்கு வகையாகப் பாகுபாடு செய்யப்பட்டு ஒவ்வொரு பிரிவிலும் சொற்கள் அகரநிரல் முறையாக அமைக்கப்பட்டுள்ளனவென விளங்கும்.

சதுர் என்பது நான்கு என்னும் பொருள் கொண்ட வடசொல்லாகும். எனவே நால்வகைப்பாகுபாடு செய்தமைத்த அகராதி சதுரகராதி என்னும் பெயர்பெறலாயிற்று. அடிகளார் காலத்திய வடமொழிச் செல்வாக்கே சதுர் என்னும் பெயரிடக் காரணமாயிருத்தல் கூடும். முன்னுரையில் கிரந்தச் சொற்களைச் சேர்த்துத் தமிழ்க் கருவூலத்தை மேன்மையடையச் செய்திருப்பதாகக் கூறுவதினின்று வடசொல்லைச் சேர்ப்பது தமிழுக்குப் பெருமை எனக் கொண்டிருந்த எண்ணம் புலனாகிறது. தம் பெயரை அகராதி இறுதியிலமைந்த ஆசிரியப்பாவில் குறிப்பிடுங்கால் வீர ஆரியன் என்பதும், தம்பெயரை தமிழில் மாற்றுங்கால் தைரிய நாதன் என மாற்றிக் கொண்டதும் அவ்வெண்ணத்திற்கு அரணாகின்றன. அடிகளாருடைய இறுதிக் காலத்தில் இந்நூல் உருவாகியிருப்பின் தைரியநாதன் என்பதனை வீரமாமுனிவர் என அழைக்கப்படுவதை விரும்பியது போல் நூலிற்கும் செந்தமிழில் பெயரிட்டிருக்க வாய்ப்புண்டு.

அடிகளார் காலத்தில் தமிழகச் சமயப் பரப்புநரிடையே அச்சுக் கலை வசதி உண்டெனினும் அக்காலத்தில் அகராதி அச்சுருப் பெற்றிலது. அம்பலக் காட்டில் வேறு பலருடைய அகராதிகள் அச்சுருப்பெற்றும், அடிகளார்தம் கொடுந்தமிழ் இலக்கணம் வாழ்நாளிலேயே பிற சமயப்பிரிவினரால் அச்சுக்குக் கொணரப் பெற்றும் அகராதி அச்சுருக் கொள்ளாததற்கு அதன் சிறப்பு உடன் உணரப்படவில்லைபோலும். நூல் படைக்கப்பட்டு 92 ஆண்டுகட்குப் பின்னரே, 1824-இல் முதற்பதிப்பு அச்சில் வெளிவரலாயிற்று. முதற் பதிப்பு வந்தபின் பலருக்கும் அதன் சிறப்பு தெரியவந்தது. அடுத்தடுத்துப் பலபதிப்புக்கள் வெளிவரலாயின. இந்நூலின் அளவிற்குப் பிற சமயப் பரப்புநரின் நூல்களோ, அடிகளாருடைய பிறநூல்களோ அதிகப் பதிப்புக்கள் அச்சில் வரவில்லை என்றே கூறலாம். அந்த அளவிற்கு மக்களிடையே செல்வாக்குப் பெற்று விட்டது.

வின்சான் நான்கு பதிப்புக்கள் பற்றிக் குறிப்பிடுகிறார்.[27] 550 பக்கங்களில் சென்னையில் முதற்பதிப்பு 1819-இல் வெளியானது என்றும், மறுபதிப்புக்களாக 335 பக்க அளவில் 1845-ஆம்ஆண்டிலும், 1860-ஆம் ஆண்டிலும் வெளிவந்ததென்றும், பாண்டிச்சேரியினின்று 1872-இல் 357 பக்கங்களில் ஒரு பதிப்பு வெளியானதென்றும்

கூறுகிறார். பெஸ் அடிகள் 9 பதிப்புக்கள் பற்றிச் சுட்டுகிறார். சென்னையில் 1824-இல் வெளியான பதிப்பு, கிரியர்சனின் இந்திய மொழித்தொகை நான்காம் பகுதியில் குறிப்பிடப்படுகின்ற 1827-இல் வெளியானதென்னும் பதிப்பு, ஜே. ஸ்மித் என்பவரால் 1824-ஆம் ஆண்டுப் பதிப்பின் மறுப்பதிப்பாக வெளியிடப்பட்ட 1835-ஆம் ஆண்டுப் பதிப்பு, 1845-ஆம் ஆண்டு ஸ்மித்தால் வெளியிடப்பட்ட பதிப்பு, 1848-இல் வெளியான பதிப்பு, சென்னைக் கல்வித்துறையால் 1860-இல் வெளியான பதிப்பு, சென்னையில் வெளியான பிறிதொரு புராட்டெஸ்டண்ட் சமயத்தொண்டர் பதிப்பு ஆகியன அவரால் சுட்டப்படுவன.[28] இவையேயன்றி 1876-இல் சென்னையிலிருந்து ஒரு பதிப்பும் 1928-இல் மதுரையிலிருந்து ஒரு பதிப்பும்வெளியாகிஉள்ளன.

வின்சானும் பெஸ் அடிகளும் அவரவர் கைக்குக் கிட்டிய பதிப்புக்கள் பற்றிக் குறிக்கிறார்கள். அவர்கள் அறியாமலேயே அவர்கள் காலத்தில் வேறுபதிப்புக்கள் வழங்கின. 1928-ஆம் பதிப்பைத் தவிரப் பிறவெல்லாம் அவர்தம் காலத்திற்குமுன் வெளி-யாயினவேயாம். வின்சான் முதற்பதிப்பு 1819 என்றும், பெஸ் முதற்பதிப்பு 1824 என்றும் குறிக்கிறார். 1819-இல் முயற்சி மேற்-கொள்ளப்பட்டு முதற் பகுதிமட்டும் வெளியாயிற்று. 1824-இல் அத்துடன் பிறபகுதிகளும் அச்சிடப்பட்டு ஒன்றாக வெளியிடப்பட்ட-தென அப்பதிப்பின் முன்னுரையால் தெரியவருகிறது. எனவே, 1824-ஆம் ஆண்டிலேயே முழுவதுமாக முதற்பதிப்பு வெளிவந்ததெனக் கொள்ளவேண்டும். 1827-இல் வெளிவந்ததாக இந்திய மொழித் தொகையினின்று எடுத்துக்காட்டும் பதிப்பு 1824 ஆம் ஆண்டில் வெளி வந்ததாகவே இருத்தல் வேண்டும். ஏனெனில் 1827 ஆம் ஆண்டுப் பதிப்புப்பற்றிப் பின்னர் வந்த பதிப்பாசிரியர்களோ, வின்சானோ குறிக்கவில்லை. மேலும் பெஸ் அடிகளின் குறிப்புகளினின்று அவர் நேரிற் கண்டதாகத் தெரிந்திலது. அவ்வாறிருப்பின் அப்பதிப்பின் பக்கம், அளவு முதலியவவற்றைப் பிற பதிப்புகளுக்குக் குறிப்பிடுவது போலக் குறித்திருப்பார். 1845, 1860, 1872, ஆகிய ஆண்டுகளில் வெளியான மூன்று பதிப்புக்களும் வின்சான், பெஸ் ஆகியஇருவராலும் சுட்டப்படுகின்றன. 1835 ஆம் ஆண்டுப் பதிப்புப்பற்றி வின்சான் குறித்திலர் எனினும், அப்பதிப்பு இன்னும் உள்ளது.[29] 1848-இல் வெளிவந்தது 1845-இன் மறுபதிப்பு ஆகலாம். 1875-இல் வெளி வந்ததாக பெஸ் அடிகள் கருதும் இரு பதிப்புகளும் 1872-ஆம் ஆண்டின் மறு பதிப்புக்கள் ஆக இருக்கலாம். இவர்கள் இருவராலும் சுட்டப்படாத சென்னை 1876-ஆம் ஆண்டுப் பதிப்பு, மதுரை 1928-ஆம் ஆண்டுப்பதிப்பு ஆகியவற்றையும் சேர்த்தால் 1824, 1827, 1835, 1845, 1848, 1860, 1872, 1875, 1876, 1928 ஆகிய பத்துப்பதிப்புக்கள் வெளிவந்துள்ளன.

இவற்றுள் முதற்பதிப்பும் இறுதிப்பதிப்பும் இடைப்பட்டன-வற்றுள் 1835, 1845, 1860, 1876 ஆகிய பதிப்புக்களுமாக ஆறு பதிப்புக்கள் பார்வையிடப்பட்டன. இவற்றுள் 1835, 1845, 1860-ஆம் ஆண்டுப் பதிப்புக்களில் தலைப்பு, முன்னுரை ஆகியவற்றில் சிறு மாற்றங்கள் உள்ளனவேயன்றி, அகராதியில் உள்ள சொற்களிலோ, பொருள்களிலோ மாற்றங்களில்லை. எனவே அவை மூன்றனையும் ஒன்றின் மறுபதிப்புக்களாவே கருதலாம். அவ்வாறாயின் முதற்பதிப்பு, 1835, 1845,1860-ஆம் ஆண்டுகளின் பதிப்புக்களில் ஒன்று, 1876-ஆம் ஆண்டின் பதிப்பு, 1928-ஆம் ஆண்டின் பதிப்பு ஆகிய நான்கு வேறுபாடான பதிப்புக்கள் ஆராய்தற்குரியவாயின.

முதற் பதிப்பின் முதற்றாளில் இஃது வீரமாமுனிவர் செய்த சதுரகராதி சென்னைச் சங்கத்தில் அச்சுப்பதித்தது என்னுந் தலைப்பிடப்பட்டுள்ளது. அடுத்த தாளில், வீரமாமுனிவர் பாயிரம் என்னுந் தலைப்பிட்டு, மூவுலகனைத்தும் முயன்றடியேத்த எனத் தொடங்கிச் சதுரகராதி சாற்றுதுமன்றே என முடியும் பத்தொன்பது அடிகளையுடைய ஆசிரியப்பா இடம் பெறுகிறது. 1819-ஆம் ஆண்டு சென்னப்பட்டணங் கல்விச் சங்கத்துத் தலைவராகிய பிராஞ்சிஸ்-உவைத்து-எல்லிசதுரையவர்களனுமதிப்படி தமிழ்ச் சங்கத்தலைமைப் புலமைத் திருச்சிற்றம்பலையரால், பொருளகராதி பரிசோதிக்கப்பட்டு அச்சிற் பதிக்கப்பட்டது. பின்னர் 1824 ஆம் ஆண்டு மேற்சொல்லிய சங்கத்துத் தலைவராகிய ரிச்சார்டு கிளார்க்குத் துரையவர்கள் அனுமதிப்படி தமிழ்ச்சங்கப் புலமை நடாத்திய தமிழ்ப் பண்டிதர்களாகியதாண்டவராய முதலியார், இராமச்சந்திரகவிராயர் இவர்களால் மற்றைப்பெயர், தொகை, தொடை, என்னுமிவ் மூன்ற-கராதிகளும் பரிசோதிக்கப்பட்டுக் கல்விச் சங்கத்துரைகளால் மேற் சொல்லிய சென்னைச் சங்கத்திலச்சிற் பதிப்பிக்கப்பட்டன என்னும் செய்திகள் தெரிய வருகின்றன.

சதுரகராதியின் நான்கு பிரிவுகளும் இரண்டு நிலையங்களில் அச்சிற்பதிப்பிக்கப்பட்டன எனத் தெரியவரினும், அவை ஒன்றாக இணைக்கப்பட்டு 1824-ல் வெளியிடப்பட்டிருத்தல்வேண்டும்.ஏனெனில் இப்பதிப்பில் நான்கு பிரிவுகளுமே அடங்கியுள்ளன. இப்பதிப்பில் ஒவ்வொரு பகுதியும் முடிவுறுவதைக் குறிக்க முற்றிற்று எனக் குறிக்கப் படுகிறது. பொருளகராதி முடிவுறுங்கால் 'முற்றிற்று' எனக்கூறப் படாமல் அதே பொருளுடைய 'முற்றும்' என முடிக்கப்படுகிறது. பிற பிரிவுள்ள தாள்களின் பக்கங்கள் மேற்புறத்தின் மூலையில் சுட்டப் படுகின்றன. ஒவ்வோர் பக்கத்திலும் நடுக்கோடிட்டு இருபத்திகளில் சொற்கள் அமைந்திருக்கப் பொருளகராதிப் பகுதியில் மட்டும் அவ்வாறின்றி ஒரே வரிசையில் அமைக்கப்பட்டுள்ளன. எனவே

பொருளகராதிப் பிரிவுப் பதிப்பு அமைப்பும், பிற பிரிவுகளின் பதிப்பு அமைப்பும் சிறு வேறுபாட்டினைக் கொண்டிருப்பதால் இருவேறு பகுதியினரால் அச்சிற்பதிக்கப்பட்டிருக்கலாம் என எண்ண இடமுண்டு. ஒவ்வொரு பிரிவின் இறுதியிலும் மேலும் பல சொற்கள் சேர்க்கப் படுகின்றன. அவ்வாறு சேர்க்கப்படுங்கால் பெயரகராதியிற் சேர்க்கப் படுவன, தொகையகராதியிற் சேர்க்கப்படுவன, தொடையகராதியிற் சேர்க்கப்படுவன என்னுந்தலைப்புக்களின் கீழ்ச் சொற்கள் கூறப்படப் பொருளகராதியின் பின்னர் மட்டும் பொருளகராதியில் விடுபட்ட சொற்கள் என்னுந் தலைப்பிட்டுக் கூறப்படுகிறது. சேர்க்கப்படுவன என்னுங்கால் தம்மாற் சேர்க்கப்படுவனவாகவும், விடுபட்ட சொற்கள் என்னுந் தலைப்பில் கீழ் உள்ள சொற்கள் பிறரால் விடுபட்டுத் தம்மால் காட்டப்படுவனவாகவும் கொள்ள இடமாகின்றது. இரு நிலைகளில் சோதித்து அச்சிடப்பெற்று வெளியிடும் பொழுது ஒன்றாக இணைத்ததே இப்பதிப்பு என்பதற்கு இவை அரணாகின்றன.

முன்னுரையை அடுத்துப் பெயரகராதி, பொருளகராதி, தொகையகராதி, தொடையகராதி ஆகியவை முறையாக அமைந்து உள்ளன. பொருளகராதி தவிரப் பிறவெல்லாம் ஒவ்வொரு பக்கமும் இருபகுதிகளாக செங்குத்துக் கோடிட்டுப் பிரிக்கப்பட்டுச் சொற்கள் நிரன் முறையாக அமைக்கப்பட்டிருக்கின்றன. பெயரகராதியில் சொற்கள்189 பக்கங்களில் முதலில் கூறப்பட்டுப் பின்னர்ச் சேர்க்கப் படுவன என்னும் தலைப்பிட்டு 33 பக்கங்களில் கூறப்படுகின்றன. அவற்றை அடுத்துத் திருத்தமும், தள்ளல் பகுதியும் 20 பக்கங்களில் கூறப்படுகின்றன. எனவே பெயரகராதி மட்டும் 189+33+20=242 பக்கங்களிற் கூறப்படுகிறதெனலாம். அடுத்துப் பொருளகராதி அவ்வாறே 86+12+31=129 பக்கங்களிலும், தொகையகராதி, 36+1+1=38 பக்கங்களிலும், தொடையகராதி 139+2+6=147 பக்கங்களிலும் உள்ளன. எனவே தலைப்பு, பாயிரம், முன்னுரை நீங்கலாக அகராதிச் சொற்களும் அவை தொடர்பானவை மட்டும் 556 பக்கங்கள் உள்ளன.

ஒவ்வொரு பிரிவும் ஏன் தனித்தனியாக எண்முறை கொண்டுள்ளன என்னும் ஐயம் எழுகிறது. முதலில் பதிப்பித்த பொருளகராதிக்கு 1 முதல் 86 வரை எண் கொடுக்கப்பட்டிருக்கும். நான்கு பிரிவினையும் ஒன்றாக இணைக்குங்கால், பக்கம் ஒன்று எனத் தொடங்கும் பொருளகராதி, பெயரகராதியையடுத்து அமைக்க வேண்டியிருந்ததால் எண் தொடர்ச்சி பொருந்தாது. எனவே ஒவ்வொரு பிரிவிற்கும் தனித்தனிப்பக்கத்தொடர் எண் தந்து அச்சிற் பதிக்க முன் வந்திருப்பர். ஒவ்வொரு பிரிவையும் தொடங்கும் முன் அவ்வவற்றிற்குரிய காப்புப் பாடல்கள் அமைந்துள்ளன. இறுதியில்

தொடையகராதியின் முடிவில் 14 அடிகளில் அகராதி முடிக்கப்பட்ட நாளும் துணை நின்ற நாயகி அருளும் பற்றிய ஆசிரியப்பா இடம் பெறுகிறது. முன்னுரை அமைந்துள்ள தாளின் பின்புறத்தில், ''பெயரகராதி தொடையகராதிகளில் — ஏவல் — வினைமுற்று வினையெச்சம், வியங்கோண்முற்றெனக் காட்டியிருக்குஞ் சிலவற்றை வழியாகக் கொண்டு இலக்கண நூல்களில் வினைச்சொற்களுக்குக் கூறிய விகுதிநிலையையுடையவேனைய சொற்களையுமவ்வச் சொல்லெனக் கண்டுணர்க'' என அமைந்திருக்கும் குறிப்பு அகராதிச் சொற்களுக்குரிய இலக்கண வழிகாட்டியாக உள்ளது.

அகராதியின் ஒவ்வொரு பிரிவின் முடிவிலும் அமைந்துள்ள பிற் சேர்க்கை, பிழைத்திருத்தம் ஆகியன நூலினைப் பதிப்பித்தவர்கள் தாமாகச் சேர்த்தவையா அல்லது அடிகளாரே செய்தவையா என்பது ஆராய்ச்சிக்குரியது. பெயாகராதி, தொகையகராதி, தொடையகராதி ஆகியவற்றின் இறுதியில் சொற்களைச் சேர்க்குங்கால் சேர்க்கப்படுவன என்னும் தலைப்புக் காணப்படுகிறது. பதிப்பாளர்களால் அகராதியிற் சேர்க்கப்பட்ட குறிப்பை அத்தலைப்புக் காட்டுகிறது. மேலும் தொடையகராதியின் இறுதியில் நூல் முடிந்த ஆண்டைக்குறிக்கும் ஆசிரியப்பாவிற்குப் பின் சேர்க்கப்படுவன என்னும் பகுதி இடம் பெறுகிறது. எனவே, அடிகளார் படைப்பு ஆசிரியப்பாவுடன் முடிந்த பகுதியாகவும் அதற்குப் பின் அமைந்த சேர்க்கப்படுவன என்னும் பகுதி பதிப்பாளருடையதாகவும் கருத இடமுண்டு. அவ்வாறே பெயர், தொகை அகராதிகளில் பின்னரமைந்த சேர்க்கப்படுவன என்னும் பகுதியும் பதிப்பாளருடையதென்று கொள்ள இடனாகின்றது.

பொருளகராதியின் இறுதியில் மட்டும் விடுபட்ட சொற்கள் என்னும் தலைப்பிட்டு மேலும் பல சொற்கள் சேர்க்கப்படுகின்றன. இப்பகுதி பொருளகராதியை மட்டும் அச்சிற்பதித்தவர்களுடையதன்று. ஏனெனில் பொருளகராதி ஒரே பத்தியாய் ஒவ்வொரு பக்கத்திலும், அச்சிடப்பட்டிருக்க விடுபட்ட சொற்கள் என்னும் பிற் சேர்க்கை அகராதியின் பிற பிரிவுகளில் உள்ளவை போன்று ஒவ்வொரு பக்கத்திலும் இரு பத்திகளில் சொற்களைக் கொண்டுள்ளது. அதன் பின்னமைந்த பிழைத்திருத்தமும், பிற பகுதிப்பிழைத்திருத்தங்களைப் போன்று ஆறு கட்டங்களில் அமைந்துள்ளது. எனவே பொருளகராதியின் பின்னரமைந்த விடுபட்ட சொற்கள் என்னும் பகுதி, பிழைத் திருத்தம் ஆகியன பெயர், தொகை, தொடை ஆகியவற்றைப் பதிப்பித்து, முன்னர்ப் பதிப்பித்திருந்த பொருளகராதியையும் ஒன்று சேர்த்து நூலினை முழுமையாக வெளியிட்ட பதிப்பாளர்களுடையதே எனலாம்.

மூன்று பகுதிகளுக்குச் சேர்க்கப்படுவன என்றும் ஒரு பகுதிக்கு விடுபட்ட சொற்கள் என்றும் கூறுவதால் சேர்க்கப்படுவன ஆசிரியரால் அகராதியில் சேர்க்கப்படாமல் இருந்து தம்மால் சேர்க்கப்படுவனவாக-வும், விடுபட்ட சொற்கள் என்பன ஆசிரியரால் சேர்க்கப்பட்டிருந்தும் பொருளகராதியைப் பதிப்பித்தவர்களால் விடுபட்டனவாகவும் கொள்ளக் கிடக்கின்றது. எனவே அடிகளார் படைத்த அகராதியின் மூலம் முதற்பதிப்பிலமைந்த சேர்க்கப்படுவன பிழைத்திருத்தம் ஆகியன நீங்கிய பெயரகராதி, பொருளகராதி, பொருளகராதியில் விடுபட்ட சொற்கள், தொகையகராதி, தொடையகராதி ஆகியன எனக்கொள்ளலாமா என்பது சிந்தனைக்குரியதாயிற்று.

வின்சான் தேசிய நூலகத்தின் கையெழுத்துப்படியையும் 1824-ஆம் ஆண்டு முதற்பதிப்பையும் ஒப்பிட்டுப் பார்த்துள்ளார்.[80] முதற்-பதிப்பின் முதற்பகுதியான பெயரகராதியில் உள்ள சொற்களிற் பல கையெழுத்துப்படியில் இல்லை எனக்கூறுகின்றார். எனவே சேர்க்கப்-படுவன என்னும் பகுதியிலமைந்தவை கையெழுத்துப்படியில் இல்லா-திருந்திருக்கலாம். இரண்டாவது பகுதியில் முதற்பதிப்பில் உள்ளவற்றைவிடக் கையெழுத்துப் படியில் அதிகம் உள்ளவெனக் கூறுவதால் விடுபட்டசொற்கள் பகுதியில் உள்ளவை கையெழுத்துப் படியில் அமைந்திருக்கலாம். தொகையகராதிப் பகுதி கையெழுத்துப் படியில் குறைவாகவே உள்ளனவெனக் கூறுவதால் சேர்க்கப்படுவன என்னும் பகுதியில் உள்ளவை கையெழுத்துப்படியில் இல்லாதிருக்க வாய்ப்புண்டு.

ஆனால் தொடையகராதிப்பகுதி ஒன்றுக்கொன்று முரணாகிறது. முதற்பதிப்பில் சேர்க்கப்படுவன என்னுந் தலைப்பில் பல சொற்கள் உள்ளன. எனவே அப்பகுதிச் சொற்களை நீக்கி மூலத்தின் தொடையகராதியாகக் கொள்ளலாமெனின் கையெழுத்துப் படியில் சொற்கள் அதிகமாக உள்ளதாக வின்சான் கூறுகிறார். எனவே முதற்பதிப்பில் சில பகுதிகளை நீக்கி மூலமெனக் கொள்ளவும் வழியில்லை. கையெழுத்துப்படி 1732-இல் எழுதப்பட்டதெனினும் அதற்குப்பின் 15 ஆண்டுகள் அடிகளார் வாழ்ந்திருந்தார். அவ்வப் பொழுது தாமே அகராதியில் சொற்சேர்க்கைகளையும் பிழைத் திருத்தங்களையும் பின்னர் ஆக்கியிருத்தல் கூடும். அவை முதலில் வந்த கையெழுத்துப்படியில் இடம் பெறாதிருந்து, பின்னர் பலரால் எடுக்கப்பட்ட படிகளில் இடம் பெற்றிருத்தல் கூடும். அச்சிற்பதிக்க முன்வந்தோர் அத்தகைய படிகளைக் கண்டிருந்து அவற்றிற்கினைய பிற்சேர்க்கை, பிழைத்திருத்தங்களைத் தனித்து அமைத்திருக்க வேண்டும். ஆதலின் பிற்சேர்க்கை, பிழைத்திருத்தம் உள்ளிட்ட முதற் பதிப்பில் உள்ளவையனைத்தும் அடிகளார் படைப்பே எனக் கொள்ளலாம்.

அடுத்த பதிப்பு 1835-ஆம் ஆண்டு சென்னையில் அச்சிடப் பட்டது. தலைப்புப் பக்கத்தில் வீரமாமுனிவர் செய்த சதுரகராதி, இரண்டாம் பதிப்பு, இலண்டன் மிசியோனைச் சேர்ந்த ஜே. இஸ்மித்தையரால் அச்சிற் பதிக்கப் பட்டது எனக் கூறி கி. பி. 1835-ஆம் ஆண்டிற்குச் சரியான சாலிவாகன ஆண்டு 1758-ல் நிகழ்கின்ற மன்மத வருஷம் எனச் சுட்டுகிறது. பின்னர் பாயிரச் செய்யுளும் முன்னுரையும் அமைந்துள்ளன. முன்னுரையின், தொடக்கத்தில் முன்னைப் பதிப்பின் வரலாறும், இறுதியில் இப் பதிப்பு ஜே. இஸ்மித்தையரவர்கள் அனுமதிப்படி இவர் தமிழு-வாத்தியாராகிய-சாரம் குமரப்ப முதலியாராற் றெளிவுறச் செய்யப் பட்டது என முடிகிறது.

முன்னைப் பதிப்பிற்கும் இப்பதிப்பிற்கும் உள்ள வேறுபாடு முன்னுரையால் உணரக்கிடக்கின்றது. அஃதாவது, ''மேற்படி தாண்டவராய முதலியாரால் ஆராய்ச்சிசெய்து அவ்வகராதியின், பின் சேர்த்து ''வைக்கப்பட்ட, சேர்க்கப்படுவனவுமாகிய இவற்றை அவ்விடங்களிற் சேர்த்தும் முறைப்படுத்தியும் திருத்தியும் தள்ளியும் எனவரும் குறிப்புக்களால் 1824-ஆம் ஆண்டுப் பதிப்பில் ஒவ்வொரு பகுதியின் இறுதியிலும் உள்ள பிற்சேர்க்கை, பிழைத்திருத்தம் அனைத்தும் ஏற்றுக் கொள்ளப்பட்டுத் தனியாக அமைக்கப்படாமல் இடை இடையே புகுத்தப்பட்டுவிட்டன என அறியலாம்.

பெயரகராதியின் பகுதியில் அதற்குரிய நிரன் முறையில் அகத்தி அகனம், அகில், அக்கினி, அங்கர் போன்ற சொற்கள் இல்லை. பெயரகராதியிற் சேர்க்கப்படுவன என்னும் பகுதியில் அமைந்து இருக்கின்றன. 1835-ஆம் ஆண்டுப்பதிப்பில் அச்சொற்கள் உரிய நிரலில் இடம் பெறுகின்றன. முதற்பதிப்பில், அகம், அகமம், அகமலர்ச்சி, என்னும் முறையில் உள்ள சொற்கள் அகரநிரற்படி அகமம், அகமலர்ச்சி, அகம் என்றே அமையவேண்டும். திருத்தப் பகுதியில் இம்முறை, பெயர்முறைப்பிறழ்வு திருத்தல் என்னும் தலைப்பில் அகமலர்ச்சி, அகம் எனக் காட்டப்படுகிறது. அஃதாவது அகமலர்ச்சியை அடுத்து அகம் இடம் பெறவேண்டும் என்பது குறிப்பு. அவ்வாறே உரிய நிரன்முறையில் இரண்டாம் பதிப்பில் இடம் பெறுகிறது. சொற்கட்கான பொருள்களிலும் கூட நிரன்முறை மாறியுள்ளதை அணங்கு என்னும் பெயர்க்குரிய பொருள்களில் காணலாம். அதற்கான ஒன்பது பொருள்களில் இடையில் வரும் இரண்டு தெய்வம், தெய்வப்பெண் என்பன. திருத்தப்பகுதியில் பொருள் முறைப்பிறழ்வு திருத்தல்என்னுந் தலைப்பில்தெய்வப்பெண், தெய்வம் எனக்காட்டப்படுகிறது. அத்திருத்தம் இரண்டாம் பதிப்பில், இடம் பெற்றுள்ளது. சில சொற்கள் திருத்தம் பெற்றிருக்கின்றன.

அசவல் என்னும் சொல் அசல்என முதற்பதிப்பில் இடம்பெற்றுள்ளது திருத்தப் பகுதியில் இது சுட்டப்படுகிறது. இரண்டாம் பதிப்பில் அசவல் என்றுஇடம் பெறுகிறது. இவ்வாறே, ஒவ்வொரு பகுதியின் திருத்தப்பகுதிக்குறிப்புக்களை மனதுட்கொண்டு செவ்வனே இரண்டாம் பதிப்பு அச்சிடப்பட்டுள்ளது. இப்பதிப்பில் ஏற்பட்டுள்ள அச்சுப்பிழைகளின் திருத்தம் இறுதிப்பக்கத்தில் காணப்படுகிறது.

1845-ஆம் ஆண்டு வெளிவந்த பதிப்பு 1835-ஆம் ஆண்டின் மறு பதிப்பு எனலாம். ஏனெனில், தலைப்பில், கிறிஸ்து பிறந்த 1845-ஆம் ஆண்டிற்குச் சாலிவாகன ஆண்டு 1768-ல் நிகழ்கின்ற விசுவாவசு என்று அச்சிற் பதிப்பிக்கப்பட்ட ஆண்டு வேறுபாடு தவிர வேறு மாற்றம் இல்லை எனலாம். முன்னுரை, உள்ளமைந்த சொற்கள், பொருள்கள் அனைத்திலும் 1835-ஆம் ஆண்டுப் பதிப்பினின்று வேறுபாடாக எதுவுமில்லை. 1860-ஆம் ஆண்டுப் பதிப்பின் தலைப்புப் பக்கத்தில், **TAMIL DICTIONARY** வீரமாமுனிவர் செய்த சதுரகராதி என்னும் தலைப்பும், இஃது தமிழ் கற்கிற மாணாக்கர் முதலானவர்களுக்கு உபயோகமாகத் துரைத்தன வித்தியாவிசாரணைத்தலைவர் உத்தரவின்படிப் பரிசோதிப்பித்து அச்சிற் பதிப்பிக்கப்பட்டது என்ற குறிப்பும், சென்னையில் அச்சிடப் பட்ட அச்சகமும் ஆண்டும் 'Madras Public Institution Press, 1860 எனக் குறிப்பிடுகின்றன. அடுத்த தாளில், அச்சிற்பதிப்பித்தலின் வரலாறு கூறப்படுகிறது. முன்னைய பதிப்புக்களின் வரலாறு கூறி, இறுதியில் இப்பதிப்பின் வரலாறு கி. பி. 1860-ஆம் ஆண்டில் சான்றோரால் ஆன்றோரென மதிக்கத்தகும் பெர்சிவலையனால் சதுரகராதி சென்னை இராஜாதானி வித்தியாசாலைத் தமிழ்த் தலைமைப் புலவராகிய திருத்தணிகை விசாகப்பெருமாளையரையும், மேற்படி வித்தியாசாலைத் தமிழ்ப் புலவராகிய புரசைப்பாக்கம்-பொன்னம்பல முதலியாரையும் கொண்டு தள்ளப்படுவனவற்றைத் தள்ளிச் சேர்க்கப்படுவனவற்றைச் சேர்த்துத் திருத்தமுற ஆராய்ச்சி செய்வித்து அச்சிற்பதிப்பிக்கப்பட்டது என்று கூறப்படுகிறது. 1835-ஆம் ஆண்டுப் பதிப்பில் உள்ள சொற்கள் பொருள்களே 1845, 1860-ஆம் ஆண்டுப் பதிப்புக்களில் உள்ளன.

இம்மூன்று பதிப்புக்களுக்கும் முதற்பதிப்புக்கும் சொற்களின் எண்ணிக்கையில் வேறுபாடு உண்டு. சான்றாக முதற்பதிப்பின் பெயரகராதியின் பகுதியில் அகரத்தைத் தொடக்கமாகக் கொண்டு 808 சொற்கள் உள்ளன. பெயரகராதி பதிப்பிற் சேர்க்கையின்படி அகரத்தொடக்கச் சொற்கள் 79 தள்ளல் பகுதியில் 6 மொத்தம் பெயரகராதிச் சொற்கள் 808+79-6=883 ஆகும். 1835, 1845, 1860-ஆண்டுப் பதிப்புக்களில் அகரத் தொடக்கச் சொற்கள் 883 உள்ளன.

1876-ஆம் ஆண்டுப் பதிப்புத் தலைப்பு 1860-ஆம் ஆண்டுப் பதிப்பைப் போன்றே உள்ளது. அத்துடன் சென்னையில் 1876- ஆம் ஆண்டில் அச்சிடப்பட்ட அச்சகம், விலை ஆகியன குறிக்கப்பட்டுள்ளன. முன்னுரை முதற்பதிப்பில் உள்ளவாறு உள்ளது. பிற பதிப்புக்களில் காணப்படாத அடிக்குறிப்புக்கள் சில பக்கங்களில் உள்ளன. அவையும் இலக்கணக் குறிப்புக்களாய் காணப்படுகின்றன. சான்றாக முதற் பக்கத்தின் இறுதியில், அகல்-அல்குல், தகழி, நீங்கென்னுமேவல் என அமைந்துள்ளது. அப்பக்கத்தின் அடிக்குறிப்பில் அல்குல் என்னும் சொல்லின் மேல் இட்டுள்ள குறியின் விளக்கமாக, "*ஏவலென்று சொல்லப்படும் சொல்லை முதனிலைத் தனிவினைப் பெயரெனவுங் கொள்ளலாம்" எனக் கூறப்பட்டுள்ளது. அவ்வாறே, 4-ஆம் பக்கத் தொடக்கத்தில், அஞ்சல்-தோல்வி, பயப்படல், வியங்கோண்முற்று* என அமைந்துள்ளது. அப்பக்கத்தின் அடிக்குறிப்பில் உடுஉக்குறியின் விளக்கமாக* இவ்வாறு வருஞ் சொற்களை வியங்கோளென்னும்போது, ஏவலொருமை எதிர்மறையெனவும் கொள்க எனக் கூறப்பட்டுள்ளது.

சொற்களின் எண்ணிக்கையில் பிறவற்றினின்று வேறுபட்டு உள்ளது. அகரத் தொடக்கத்தில் 1860-ஆம் ஆண்டுப்பதிப்பிலுள்ள சொற்களோடு, அடா-முன்னிலை ஒருமைப்பெயர், அண்ணித்தல்-சுவைத்தல் என்னும் இரு சொற்கள் அதிகமாகச் சேர்த்துள்ளமையான் அகரத் தொடக்கச் சொற்கள் மட்டும் 883+2=885 ஆயின. சொற்களுக்கான பொருள்களிலும் முன்னைப் பதிப்புக்களில் கூறப்பட்டவற்றினின்று மாறுபாடுகள் உள்ளன. சான்றாக, என்று-அசைச் சொல் (உ-ம். உயிரெனவுலாயதன்றே) அந்நாள், வினைக்குறிப்புமுற்று என முன்னைய பதிப்புக்கள் குறிப்பிட, 1876-ஆம் ஆண்டுப் பதிப்பு அவற்றுடன் பகை என்ற பொருளையும் சேர்த்துக் கூறுகிறது. அரையன் என்பதற்கு முன்னைப் பதிப்புக்கள் அரசன் என்று மட்டும் கூற 1876-ஆம் ஆண்டுப் பதிப்பு அரசன், வைணவப் பிராமணர்களில் ஒரு பிரிவான் என இரு பொருள்களைக் கூறுகின்றது. அணங்கு என்னும் சொல்லுக்குரிய பொருள்களுள் ஒன்றாக முந்திய வெல்லாம் தெய்வமென்றுமட்டும் கூற, 1876-ஆம் ஆண்டுப் பதிப்பு மட்டும் 'தின்டி உயிர்க்கவருந் தெய்வம்' என்கிறது. 'அ' என்பதற்கு உரியவற்றுள் முந்தியவற்றுள் உள்ளவற்றோடு பெயரெச்ச விகுதி, உ-ம். வாழ்ந்த, செய என் வினையெச்சவிகுதி உ-ம். வர என்பனவற்றையும் சேர்த்துக் கூறுகிறது. முந்தியவற்றிலும் குறைவாகப் பொருள் சொல்லும் இடங்களும் உண்டு. சான்றாக 'அவ்' என்பதற்கு முந்தியவெல்லாம் அவை, சுட்டுச் சொல் என இருபொருள் கூற, 1876-ஆம் ஆண்டுப் பதிப்பு அவை என்னும் ஒரு பொருளைத் தருகிறது. தொடையகராதி இறுதியில் சிறப்புத் தொடைப் பதங்களைக் குறித்துச், 'சிந்தாமணி முதலிய பல் இலக்கியங்களில்

வரும்படி'' என முந்தியவெல்லாங்கூற, இப்பதிப்புச் ''சிந்தாமணி, கம்பராமாயணம் முதலிய பல இலக்கியங்களில்'' எனக் கூறுகிறது.

இதுகாறும் வந்துள்ள பதிப்புக்களுள் இறுதியாக வந்துள்ளது 1928-ஆம் ஆண்டில் மதுரை நா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்களால் பரிசோதித்து வெளியிடப்பட்டது. அதன் தலைப்புப் பக்கம் அதனைச் சுத்தப்பதிப்பு எனச் சுட்டுகிறது. பாயிரத்தின் தலைப்பை ஆக்கியோனருளிய பாயிரப்பனுவல் என்கிறது. முகவுரையில் அடிகளார் வரலாறு சுருக்கித் தரப்படுகிறது. இப் பதிப்புச் சுத்தப்பதிப்பு எனக் காரணங்காட்டுகிறது. பெயரகராதியின் தலைப்பில் அடிகளாருக்கு அடைமொழி தந்து இராஜரிஷி வீரமா முனிவர் அருளிச்செய்த சதுரகராதி எனக் கூறித் தொடங்குகிறது. பெயரகராதியின் இறுதியில் அடிகளாரால் சேர்க்கப்படாத, பிற எப்பதிப்பிலும் காணப்படாத மூன்று பாடல்கள் சேர்க்கப் பட்டிருக்கின்றன. தொடையகராதியின் இறுதியிலமைந்த பகுதியைச் சிறப்புத் தொடைப்பதம் என்னும் தலைப்பிட்டுக் கூறுகிறது. அகராதி நிறைவுற்ற நாளைக் குறிக்கும் இறுதியிலமைந்த ஆசிரியப் பாவிற்கு ஆக்கியோன் வரலாறு என்னும் தலைப்பிட்டுள்ளது. அதன்பின் சதுரகராதியுடன் சேர்ந்த அனுபந்த அகராதி என்னும் தலைப்பில், 30 பக்கங்களில்[31] 1500 சொற்களுக்கு மேல் புதிதாக அமைத்துப் பொருள் சொல்லப்பட்டிருக்கிறது. இவை அடிகளாருடையனவல்ல.

முன்னைப் பதிப்புக்களுக்கும், இப்பதிப்பிற்கும் சொற்களில் எண்ணிக்கையில் வேறுபாடுண்டு. சான்றாக, முன்னைப்பதிப்புக்களில் இல்லாமல் 1876-ஆம் ஆண்டுப் பதிப்பில் மட்டும் அகரத் தொடக்கச் சொற்களில் உள்ள அடா, அண்ணித்தல் ஆகிய சொற்கள் இப்பதிப்பில் இல்லை. 1860-ஆம் ஆண்டுப் பதிப்பின் அகரத் தொடக்கச் சொற்களில் உள்ள அகரம், அந்தா, அநுகரணவோசை, அலந்தலை, அவ் ஆகிய சொற்கள் காணப்படவில்லை. எனவே அகரத் தொடக்கச் சொற்கள் 883—5=878 ஆயின.

இவ்வாறு, பதிப்புக்களிடையே ஒவ்வொரு பகுதியிலும் எண்ணிக்கை வேறுபாடுகள், பொருள் வேறுபாடுகள் உண்டெனினும் அவை பெரும் அளவில் இல்லை. ஒரு பதிப்பில் உள்ள சொற்கள் அடுத்தபதிப்பில் விடுபடுவதற்கு அச்சுக்கோப்போர், ஒப்புநோக்கியோர் ஆகியோருடைய கவனக்குறைவு ஓரளவு காரணமாகலாம். முன்னைப் பதிப்புக்களைப் பயன் படுத்தியோர், தத்தம் சிந்தையிற்பட்ட சொற்களை அப்பதிப்புக்களில் ஓரங்களில் அல்லது சொற்களின் இடையில் குறித்திருக்கலாம். பின்னால் அச்சிற் பதித்தோர் அவற்றையும் சேர்த்துப் பதிப்பித்து இருத்தல் வேண்டும். எனவே சில சொற்கள் அதிகமாக அடுத்த பதிப்பில் சேர்ந்திருத்தல் வேண்டும். அவ்வா-

றன்றித் தாமாகச் சொற்களைச் சேர்க்க வேண்டுமென எண்ணி யிருப்பரேல், அதிகமான சொற்களைச் சேர்த்திருத்தல் கூடும். அன்றேல், 1928 - ஆம் ஆண்டுப் பதிப்பில் காணப்படுவது போன்று அநுபந்த அகராதி சேர்த்திருத்தல் கூடும். ஆகவே, அச்சில் வெளிவந்த அனைத்துப் பதிப்புக்களிலும் முழுமையான அளவில் முதற்பதிப்பாக வந்ததே அடிகளார் படைத்த அகராதியின் உண்மைப் பதிப்பு எனக் கொண்டு ஆய்தல் தக்கதாம்.

3. மதிப்பீடு

அகராதியைப் பதிப்பித்தோர் அதன் பயனையும், அதனைப் படைத்த அடிகளார் ஆற்றலையும் உவமை காட்டிப் பலபடப் புகழ்ந்துள்ளனர். முதற்பதிப்பு முன்னுரை. ''நூற்பாவாற் செய்த பெயரகராதி போலாது யாவர்க்கும் விளங்கச் சொற்சொல்லாகத் தமிழ் பெருங்கடற்கோர் மரக்கலனாகத் தந்த சதுரகராதி'' எனக் கூறுகிறது. தமிழ்ச் சொற்பரப்பு அளப்பெருங்கடல், அதனைக் கடக்க மரக்கலம் கிடைப்பின் அனைவராலும் கடக்க இயலும். அவ்வாறன்றி நீந்திக் கடக்க வேண்டிய நிலை ஏற்படின் ஒரு சிலரே கடக்க இயலும். சொற்பொருள் தரும் பழங்கால நிகண்டுகள் செய்யுள் நடை கொண்டன. செய்யுள் பொருளை அனைவரும் உணரவியலாது. பொருள் உணரினும் ஒரு சொல்லைத் தேடிக் கண்டு பிடிக்க நூல் முழுதும் படிக்க நேரிடலாம். ஆனால், அகர நிரன் முறை கொண்டதனால் அகராதியில் குறித்த இடத்தில் எளிதில் கண்டு உணரலாம். நீந்திக் கடலைக் கடக்கும் நிலைகொண்டவனுக்கு மரக் கலம் கிடைப்பின் எவ்வளவு பயனுடைத்தாகுமோ அவ்வளவு பயனை அகராதி அளித்தது.

இறுதிப்பதிப்பு மரக்கல உவமையோடு கணக்கு முறையையும் கூட்டி ''கணக்கெழுதிப் பாராமலே வியாபாரம் நடத்தி வருகின்ற வர்த்தகன் ஒருவனுக்குப் பின்னர் கணக்குமுறை கிடைத்தாற் போன்றும், கருங்கடலைக் கடந்து கரைகாண்பேனெனக் கையானீந்திச் செல்லும் ஒருவனுக்கு ஓர் கவின் மரக்கலம் கிடைத்தாற்போன்றும் இவர் வெளியிட்ட இந்நூல் நந்தமிழ் நாட்டிற்கு உதவி வருகிறது'', எனக் கூறுகிறது. வாணிகத்தில் ஈடுபட்டான் ஒருவன் அதற்குரிய பயன் கிட்டிற்றா என அறியவேண்டுமெனில், கொள்முதல், விற்று வரவு, ஈட்டிய பொருள் ஆகியவற்றைக் கணக்கிட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும். சொற்களின் உண்மைப் பொருளினை உணர்ந்து கொண்டாலொழிய அவற்றை மொழியில் தகுந்தவாறு இடமறிந்து பயன்படுத் தஇயலாது. சொற்கள் பொருள் அரிதில் உணரத்தக்கன-வாக நிகண்டுகளில் அமைந்து கிடந்தமையால் எளிதில் காண இயலாவாயின. அகராதியில் எளிதில் கண்டுணர வாய்ப்பு ஏற்பட்டு

விட்டமையான், கணக்கு முறை அறியாதானுக்குக் கணக்குமுறை எளிதாகக் கிட்டியதுபோலாயிற்று.

அடிகளார் வரலாற்றை யாவரும் அறியுமாறு செய்த முத்துச் சாமிப்பிள்ளை, ''சதுரகராதியென்று பெயரிட்டுச் செறிந்த காட்டுக்குச் சமானமாய்த் தமிழ்ப் பாஷையிலிருந்த திவாகர நிகண்டுகளைச் சிறந்த சிங்காரத் தோட்டம் போலத் திருந்தத் தோன்றும்படிக்குத் தெளிவாகச் செய்தார்.''[32] எனக் குறிப்பிடுகிறார். காட்டிலும்தோட்டத்திலும் செடி கொடி மரங்கள் செறிந்திருப்பினும் தோட்டத்தில் உள்ளவை மக்கள் கண்டு களித்து மகிழும்வண்ணம் ஒழுங்குபடுத்தப் படுகின்றன. பொழிலிடை நிழலில் பொழுதைக் கழிக்கவும், அவற்றின் பூவுங்கனியும் பிறவும் மக்கட்குப் பயனாகுமாறு முறைப்படுத்தப்படவும் இடனாகின்றன. காட்டின் பயனை ஒரு சிலரே அடைதல் கூடும். அவ்வாறே, நிகண்டுகளும் அரிதின் முயலும் அறிஞர் சிலர்க்கே பயனாயிருந்த நிலைமை மாறி அடிகளார் அகராதியில் எல்லார்க்கும் எல்லாச் சொற்பொருளையும் எளிதில் உணரும் நிலை ஏற்பட்டது.

கற்றறிந்த பெருமக்கள், அகராதி ஆக்கம் மிகவும் வியக்கத்தகுந்த நேர்த்தியானதென்றும், மொழியிலும் அதன் இலக்கியங்களிலும் அடிகளாருக்கிருந்த பரந்த வியத்தகு அறிவைப் புலப்படுத்துகிற தென்றும் கருதுகிறார்கள்.[33] அடிகளாருடைய படைப்புக்களுள் நினைவு கூறத்தக்க வகையில் நீடுபுகழையும் தகுதியையும் பயனையும் தரவல்லதும் இதுவே என்பர்.[34] அகராதித் துறையில் ஈடுபட்ட அறிஞர்களுள் ஒருவராகிய நல்லூர் ஞானப்பிரகாச சுவாமிகள், ஜோசப் கான்ஸ்டண்ட் பெஸ்கி என்னும் வீரமாமுனிவர் நமது நாட்டில் முன்னில்லாததாகிய தமிழ் அகராதியையியற்றித் தமிழ் அகராதிக்குப் பிதாவானார் எனச் சிறப்பிக்கிறார்.[35] சென்னைப் பல்கலைக்கழக அகராதிப்பணியாற்றிய வையாபுரிப்பிள்ளை, ''இவ்வகராதி நம் நாட்டுப் பழைமையான பொருள் கூறும் முறைகளை முற்றிலும் மாற்றிவிட்டது. பொருட்டெளிவைவிட பொருள்மயக்கமே தருமாறு அமைந்திருந்த தொடக்க கால நிகண்டுகளின் செய்யுள் நடை வேண்டுமென்றே ஒதுக்கப்பட்டதெனத் தொடக்கப்பாடல் அறிவிக்கிறது. சரியாக அகராதிநிரன் முறை பின்பற்றப்படுகிறது. பொருள் கூறுவதிலும் கடின சொற்களுக்கு மட்டும் பொருள்கூறும் பழமையான மரபு முதன்முறையாக நீக்கப்பட்டுப் பல எளிய சொற்களும் சேர்க்கப்பட்டுள்ளன.[36]

அடிகளார் காலத்துப் புலவர்கள் இவ்வகராதியைப் புகழ்ந்து பாடியவையென இரண்டு வெண்பாக்கள் காட்டப்படுகின்றன. அவற்றுள்,[37]

''பெயரக ராதிப் பிரித்துணர் விராகில்
பயனாய்ந்துணர்வீரே பாரீர் — நியமாகச்
சொன்னூற்கும் நன்னூற்கும் தொன்னூற்கும் முன்னூற்கும்
பன்னூற்கும் ஓதும் பயன்''

என்பது பெயரகராதி பற்றியதாகும். அனைத்து நூற்கும் பயன் தர வல்லது அவ்வகராதிப் பிரிவு என்னுங் கருத்து ஆய்விற்குரியது. தொடையகராதியில் உள்ள சொற்களைக் கற்போர் அடிதொடை மோனை வழுவாமல் நொடியிற் பேசவும் படிக்கவும் இயலுமென,

''தொடையக ராதியுள் சொற்றவை கற்கில்
அடிதொடை மோனை வழுவா — நொடியில்
கடகடெனச் சொல்லித் தடதடெனப் பேசிப்
படபடென வாசிப்பாய் பார்''

என்னும் பாடல் கூறுவதினின்று தொடையகராதித் தன்மை புலப்படுகின்றது. முப்பாலுள் பொருட்பாலுக்குரிய இடம், அடிகளார்தம் நூல்களுள் அகராதிக்கு உண்டு என வேறொரு வெண்பா கூறுகின்றது.[38] இவையனைத்தும் அடிகளார் காலத்துப் புலவராற் பாடப்பட்டவையென அறுதியிட்டுக் கூறவியலாது. எனினும், அகராதிப் பயனை உணர்ந்தோனின் அனுபவ மொழிகள் எனக் கொள்ளத்தகும்.

அடிகளார் படைப்புக்களை ஆய்வு செய்தோர் அதன் தகுதியை மதிப்பிட முயன்றுள்ளனர். முன்னை நிகண்டுகளில் பொருள் கூறப்படும் சொற்கள் முறைபடச் சொற்சொல்லாகத் தொகுத்ததே அகராதி எனக் கூறப்படுங் கருத்துத்[39] தவறென நிலை நாட்ட முற்படுகிறார் மறைத்திரு ஞானப்பிரகாசம் அடிகளார். சூடாமணி நிகண்டில் கூறப்படும் பொருள்களைக் காட்டிலும் அதிகப் பொருள்களை அடிகளார் கூறுகிறார் எனப் பல சொற்பொருள்களை எடுத்துக் காட்டுகிறார். சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகராதி இறுதித் தொகுப்பின் பிற்சேர்க்கையில் எடுத்துக்காட்டாகக் கொடுக்கப்பட்டிருக்கும் தாரம், வரி ஆகிய இரு சொற் பொருள்களில் முன்னைய நிகண்டுகள், அனைத்திலும் அதிகப் பொருள்களை அகராதி காட்டுவதை விளக்குகிறார். மேலும், செந்தமிழ்ச் சொற்களை எளிதில் உணர்வதிலும், செய்யுள் படைப்புக்குத் துணையாகும் சொற்களைத் தருவதிலும், சதுரகராதிக்கு உரிய பங்கினை, நிகண்டு சொற்களின் முறையான சொற்றொகுப்பு அகராதி எனக்கூறுவது மறக்கடிப்பதாகும் என்று சுட்டுகிறார்.[40]

கா. மீனாட்சிசுந்தரம் அவர்கள் பழங்கால நிகண்டுகளினினும் மிகுந்த முன்னேற்றமும் மதிப்பும் கொண்டெனக் கூறிச் சூடாமணியை-

யும் அகராதியையும் ஒப்புமைப்படுத்திக் காட்டுகிறார்.[41] அடிகளார் படைப்பும் தமிழ் அகராதி வரலாற்றில் இன்றியமையாத திருப்பத்தினைத் தந்தது என்பதும் குறிப்பிடத் தக்கது என்கிறார்.[42] அடிகளார் வரலாற்றை இந்நூற்றாண்டில் வரையப் புகுந்தோர் அகராதிப் படைப்பால் அவர்க்குரிய புகழினைக் குறிப்பிட மறந்தாரல்லர். பெரோலி, அறிவியன் முறையான முதற்றமிழ் அகராதிப் படைப்பாளி அடிகளார்''[43] என்பர். மா. இராசமாணிக்கனார், ''அவ்வகராதியேதமிழ் அகராதிகட்கெல்லாம் தாய் போன்றது. பின்னர் அகராதி வெளியிட்ட அறிஞர்கள் அடிகளது முதல்முயற்சியை மனமாரப் பாராட்டிப் புகழ்ந்துள்ளனர்''[44] எனக் கூறுவர். பண்டாரம் நம்பியார், ''தமிழ்ப் புலவர்கள் இல்லங்களிலெல்லாம் அவ்வகராதி ஏட்டு வடிவில் வீற்றிருந்தது. பின்னர் அச்சிடப்பட்டு நூல்வடிவில் தமிழ்ப்புலவர் கரங்களை அலங்கரித்தது. அவ்வகராதியால் தமிழகத்தில் புதிய ஓர் ஆற்றலே தோன்றி உலவியது''[45] என்பர். ''அளவில் சிறியதும் பயனில் பெரியதுமான முதல் தமிழ் அகராதி வீரமாமுனிவர் தொகுத்த சதுரகராதி''[46] எனச் சுட்டுவர் ரம்போலோ மாஸ்கரேனஸ். இவர் தம் மதிப்பீட்டு உண்மைகளின் வன்மை, மென்மைகள் அகராதியின் ஒவ்வோர் உட்பிரிவையும் தனித்தனி ஆராய்ந்து உணரத்தகும்.

மேற்கோள்கள்

1 **Julien Vinson, M., p., 328**
2 பின்னிணைப்பு-4
3 **Julien Vinson, M., p., 330**
4 ………………………, 331, 332, 333
5 **A Grammar of the common dialect of the Tamil Language, p.,2.**
6 ………………………, 6
7 சுந்தரசண்முகம், பக்., 190
8 ………………………, 235
9 உரிச்சொல் நிகண்டு. பக்., 4
10 தொன்னூல் விளக்கம், நூற்பா, 248, உரை
11 ………………………, 22, 356, உரை
12 ……………………… 113, 153, 162, உரை
13 ………………………, 356., உரை
14 ………………………, 91, 107, 113, 152, 154, 155, 162, 164, உரை
15 ………………………, 113, உரை

16 ...., 356, உரை
17 ... . , 14, 102, 123, 124, 155, 158, 160, 162, உரை
18 ...., 215, உரை
19 ...., 93, 299. உரை
20 ...., 356, உரை
21 ....,213, உரை
22 ...., 299, உரை
23 ....
24 ...., 183, உரை
25 Tamil Lexicon, p., 1ii
26 Tamil Lexicon, p., 1 ii.
27 ...., 328.
28 Besse, Fr., L. P., 222 - 225.
29 Archieves, Sacred Heart's College, **Shenbaganur.**
30 Besse, Fr., L. p., 225,
31 சதுரகராதி — 6, பக்., 467— 496.
32 முத்துச்சாமிபிள்ளை, அ. பக்., 11.
33 Besse, Fr., L. p., 222, 223.
34 ....
35 சாமா சுவாமிகள், ஜி வி ஐ பக்., 1
36 Tamil Lexicon, p., xxxvi,
37 சாமா சுவாமிகள், ஜி. வி. ஐ. பக்., 22
38 ....,25.
39 Tamil Lexicon. p., XXXVII.
40 Gnanapragasam, Fr., V. M. p., 356.
41 Meenakshisundaram, K p.. 249.
42 ...., 251.
43 Ferroli, S. J. p., 312.
44 பண்டாரம், நம்பியார், ஈ. பக்., 167.
45 இராசமாணிக்கனார், மா. பக்., 29.
46 ரம்போலோ மாஸ்கரனேஸ். பக் , 143, 144.



இயல் 4

பெயரகராதி

1. முன்னூல்களும் பெயரகராதியும்

சொற்பொருள் விளக்கத்திற்கென்றே தொல்காப்பியத்தில் அமைந்துள்ள உரியியல் உரிச்சொற்கள் எனக் கருதப்பட்டவற்றிற்கு மட்டும் பொருள் தருகிறது. உரிச்சொல் இலக்கணம் கூறும் நூற்பா[1] உரையில் சேனாவரையார், ''மெய்தடுமாறுதலும், ஒரு சொற் பல பொருட்குரிமையும், பலசொல் ஒரு பொருட்குரிமையும் உரிச்சொற்கு உண்மையான் ஓதினாரேனும், உரிச்சொற்கு இலக்கணமாவது இசை, குறிப்பு, பண்பென்னும் பொருட்குரியவாய் வருதலேயாம்'' எனக் கூறுவதால் இசை, குறிப்பு, பண்புகட்கு உரியவாதலே இன்றியமையாதது எனப் பெறப்படுன்றது. நன்னூல், அவ்வகைப் பண்புகளை உணர்த்தும் பெயராக அமைய வேண்டும் என்றும், செய்யுட்கு உரியதாக இருத்தல் வேண்டும் என்றும் உரிச்சொல் இலக்கணத்தின் சிறப்புச் செய்திகளாகக் கூறுகிறது.[2] உரியெனப்படுவன பலவகைக் குணங்களை யறிவிக்கும் பெயர்ச் சொற்களாம் என அடிகள் கருதுகிறார்.[3] இவ்விலக்கணக் கொள்கைகளின் படி செய்யுளில் பயின்று வரும் உரிச்சொற்கள் பெயர்த் தன்மையுடையன எனத் தெரிகிறது, அவ்வகைச் சொற்கட்கு உரியியல் பொருள் கூறுகிறது எனப் பெறப் படுகிறது.

உரிச்சொற்கள் பெயராகவே அமையும் என்பதில் ஐயம் உண்டாகிறது.[4] பெயரும் ஆகாமல், வினையும் ஆகாமல் தனித் தன்மை கொண்டதாற்றான் நால்வகைப் பகுப்பில் ஒன்றாகக் கொண்டனர். ஆயினும் தொல்காப்பியத்தில் கூறப்பட்டிருக்கின்ற சொற்களை நோக்கின், கமம், யாண் போன்ற பெயர்ச் சொற்களாக 30, ஏற்றம், சிறுமை, சீர்த்தி போன்ற ஆக்கப் பெயர்களாக 58, சேர், மேவு, பாய்தல், இயைபு போன்ற தொழிற்பெயர்களாக 10, உறு, நனி போன்ற அடைகளாக 10, ஆக 120 உரிச்சொற்கள் என்பர்.[5] இவற்றுள்

உறு, நனி போன்ற அடைகளின் மூலம் அறியப்படாமையானும், பிற வெல்லாம் பெயர்களாகவே அமைந்திருக்கின்றமையானும், பல்வேறு பட்ட பண்புகளை உணர்த்தும் பெயர்ச் சொற்களே பெரும்பான்மை உரிச் சொற்கள் ஆயின எனக் கொள்வதே பொருந்தும். எனவே, தொல்காப்பிய உரியியலைப் பெரும்பான்மை நோக்கிப் பண்புப் பெயர்ச் சொற்கட்குப் பொருள் கூறும் ஓர் அகராதி போன்றது எனலாம்.

பின்னரெழுந்த நிகண்டுகள் பண்புப் பெயர்கள் மட்டுமின்றிப் பல்வகைப் பெயர்கட்கும் பொருள் கூறத் தொடங்கின. அடுதல்[6] போன்ற தொழில் பெயர், அணி[7] போன்ற ஆகுபெயர், குவலயம்[8] போன்ற இடப்பெயர் முதலிய பல்வகைப் பெயர்கள் இடம் பெறலாயின. வகை எதுவாயினும் பெயர்களே அவற்றில் அமைந்துள்ளன என்பதைத் திவாகரம் தன் உட்பிரிவாகிய பன்னிரு தொகுதிகட்கும் பெயர்த் தொகுதி எனப் பெயரிட்டிருப்பதால் உணரலாம். திவாகரத்தின் பதினோராம் தொகுதி தன்னுடைய பிற தொகுதிகளினின்று சற்று மாறுபட்டது. ஒருசொற் பல்பொருட் பெயர்த் தொகுதி என்னுந் தலைப்பிற்கேற்ப, அப்பகுதியில் ஒவ்வொரு பெயர்ச் சொல்லுக்கும் உரிய பல பொருள்கள் கூறப்படுகின்றன. அப்பகுதியில் ஆதியிற் பொருளாக 234 சொற்களும், அந்தத்துப் பொருளாக 142 சொற்களும் ஆக 376 சொற்கள் விளக்கப்படுகின்றன.

ஆதியிற் பொருள் என்பது கூறப்படுகின்ற பெயர் முன்னர் அமைந்து, அது தரும் பொருள்கள் இறுதியில் வருவதாகும். 'அங்கதந் தோளணி அரவுமாகும்'[9] என்னும் நூற்பாவில், அங்கதம் என்னும் பெயர்ச்சொல் தோளணி, அரவு ஆகிய இரு பொருள்களை உடையது எனக் கூறப்படுவது அவ்வகைத்தாயது. அந்தத்துப் பொருள் என்பது விளக்கப் பொருள்கள் முன்னர் அமைந்து, அவற்றைத் தரும் பெயர்ச் சொல் இறுதியில் அமைவது. "நெய்தலும் நிலனுங் குவலய மென்ப"[10] என்னும் நூற்பாவில், நெய்தல், நிலன் ஆகிய பொருள்களைத் தருவது குவலயம் என்னும் பெயர்ச்சொல்லாகும் என அமைவது அந்தத்துப் பொருள். இதனைப் பின்வரும் வரைகோட்டால் உணரலாம்.

	ஆதி	அந்தம்	
அங்கதம் {	தோளணி	நெய்தல்	} குவலயம்
	அரவு	நிலன்	

தற்காலப் பதிப்புக்களில் திவாகரத்தின் பதினோராம் தொகுதி இவ்வாறு ஆதியிற் பொருள், அந்தத்துப் பொருள் எனப் பாகுபாடு பெற்றுக் காணப்படுகிறது. ஒவ்வொரு பிரிவிலும் உள்ள நூற்பாக்களும் அகர நிரன்முறை பெற்று அமைந்திருக்கின்றன. இப்பகுப்பும்,

முறையும் ஆசிரியருடையதன்று என்பதனை அப்பகுதி நூற்பாக்கள் மட்டும் அகர நிரன்முறைபெற்று அமைந்திருப்பது காட்டும். ஏனெனில் திவாகரம் எழுந்த காலத்தில் அகர நிரன்முறை பின்பற்றப் பட்டிலது. பிற பகுதியில் அமையாமல் இப்பகுதி நூற்பாக்கள் மட்டும் பாகுபாடும் முறையும் பெற்றிருப்பது இப்பகுதியின் சிறப்பினைக் காட்டுகிறது. பிறபகுதிகளை நோக்க, இப்பகுதி பலராலும் மிகுதியாகப் பயன் படுத்தப்பட்டிருப்பதை உணர்ந்த பதிப்பாசிரியர்களே, பயன் படுத்துவோர் நலனுக்காக அவ்வகை மாற்றங்களைச் செய்திருத்தல் வேண்டும்.

திவாகரம் பன்னிரு தொகுதிகளாகப் பகுத்ததைப் பத்து வகைகளாகப் பகுத்த பிங்கலம், பத்தாவதாகிய ஒருசொற் பல் பொருள்வகையில் ஒவ்வொரு சொல்லுக்கும் உரிய பல பொருள்களைக் கூறுகிறது. திவாகரம் ஒவ்வொன்றையும் பெயர்த் தொகுதி எனக் குறிப்பிடப் பிங்கலம் மா, மரம் ஆகிய இரண்டனுக்கு மட்டும் பெயர்வகை எனக் குறிக்கிறது. எனவே ஒருசொற் பல் பொருட்பெயர் எனத் திவாகரம் சுட்டிய பகுதியை ஒருசொற் பல்பொருள் என்று பிங்கலம் சுட்டியது. பெயரின் தன்மைக்குத் திவாகரம் சிறப்பளிக்கப் பிங்கலம் சொல்லின் தன்மைக்குச் சிறப்பு அளித்ததாகத் தெரிகிறது. இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் ஆகிய நால்வகைச் சொற்களையும் விளக்க இந்நூல் இயற்றப்பட்டதென்றும், அந்நால்வகைச் சொற்களின் தன்மைகள் இவையெனவும் பிங்கலத்தின் சிறப்புப் பாயிரம் கூறுவது இக் கருத்திற்குத் துணையாகிறது.[11] ஒருசொல் பல்பொருள் எனத் தலைப்பிட்டுக்கூறுவது தற்கால அகராதிகள் கூறும் சொற்கட்கும் அவற்றின் பொருள்களுக்கும் பொருந்தும்.

பிங்கலத்தின் பத்தாம்வகை பெரிதும் பயிலப்பட்டிருத்தல் வேண்டும். ஏனெனில் திவாகரத்தின் பதினோராம் தொகுதியைப் போன்று, இவ்வகை மட்டும் பதிப்பாளர்களால் அகர நிரன்முறையில் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் ஆதியிற் பொருள், அந்தத்துப் பொருள் எனப் பாகுபாடு செய்யப்பெறாமல் அகரவருக்கம், ககர வருக்கம், பகரவருக்கம், மகர வருக்கம், யகர வருக்கம், வகரவருக்கம், எனப் பகுக்கப்பட்டுள்ளது. அவற்றுள் முறையே 225, 202, 126, 4, 103, 44, 165, 94, 4, 110 சொற்களாக மொத்தம் 1077 சொற்கள் இடம் பெறுகின்றன.[12]

சிலரால் 1091 சொற்கள் இடம்பெற்றுள்ளதாகக் கூறப் படுகிறது.[13] பத்தாம் வகையில் 1091 நூற்பாக்கள் கூறப்பட்டுள்ளன. ஒவ்வொரு நூற்பாவும் ஒவ்வொரு சொல்லை விளக்குவதாக எண்ணி 1091 சொற்கள் கூறுவதாகக் கருதிவிட்டனர் போலும். திங்கள், மதி,

ஆகிய சொற்களை விளக்கும் ஒரே நூற்பா தகரவருக்கம், மகர வருக்கம், ஆகிய இரண்டிடங்களிலும் இடம் பெறுகிறது. இரண்டு நூற்பாக்களாக எண்ணுவதற்குப் பதில் ஒன்றாக எண்ணினால் மொத்த நூற்பாக்கள் 1090 ஆகும். அவற்றுள்ளும் ஆர், இறும்பு, கார், கோடரம், சுரன், சேக்கை, சௌரி, தூரியம், பிறங்கல், பொங்கர், வஞ்சி, வறிது, வாரணம், விசும்பு ஆகிய 14 சொற்கள் ஒவ்வொன்றும் இரண்டிரண்டு நூற்பாக்களில் இடம் பெறுவதால், ஒவ்வொரு சொல் கூறும் நூற்பாக்கள் 1090-14 × 2 = 1062 எனக் குறையலாம். ஒரு நூற்பாவில் ஆரி, நேமி, என இரு சொற்கள் கூறப் படுகின்றன. எனவே, ஒரு நூற்பாவில் ஒவ்வொரு சொல் விளக்கு முறை 1061 நூற்பாக்களில் ஆளப்பட்டு 1061 சொற்கள் கூறப் படுகின்றன. இரண்டு நூற்பாக்களில் இடம் பெறும் சொற்கள் 14 சேரின் சொற்கள் 1061+14=1075 ஆகும். இரண்டு சொற்கள் கூறும் ஒரு நூற்பாவால் பெறப்படும் சொற்கள் 2. எனவே, மொத்தம் கூறப்படும் சொற்கள் 1075 + 2 = 1077 என்பதே சரியாகத் தோன்றுகிறது.

இவற்றிற்குப் பின்னரெழுந்த சூடாமணி நிகண்டு திவாகரம் போலப் பன்னிரு பெயர்த்தொகுதிகளாகப் பாகுபாடு செய்து இருப்பினும் பதினோராம் தொகுதியான பல்பொருள் பெயர்த் தொகுதியினை மட்டும் எதுகை முறையில் அமைத்திருக்கிறது. அவ்வாறு ஒரு தொகுதிக்கு மட்டும் அச்சிறப்பினை அளித்ததற்கு ஒரு சொல் பல்பொருள் கொண்ட பெயர்களின் சிறப்புக் கருதி எனலாம். இந்நிகண்டின் பதினோராம் தொகுதிமட்டும் தனித்துப் பலபதிப்புக்கள் வெளிவந்திருப்பதும் அச்சிறப்பினை எடுத்துக் காட்டும். நிகண்டு படித்தவர்கள் என்றால் சூடாமணியின் பதினோராவது தொகுதியைப் படித்தவர்கள் என்று பொருள் கொள்ளும் அளவுக்கு இத்தொகுதி உயர்ந்திருந்ததென்றும் அவ்வுயர்வு காரணமாக இத்தொகுதி, 'பதினோராவது நிகண்டு' என ஒரு தனிநிகண்டு நூல்போல் அழைக்கப் பட்டு வந்ததென்றும் தெரிகிறது.[14] பதினோராவது நிகண்டு என்பது சூடாமணியின் ஒரு பகுதி என்பதை அறியாமல், அதனை ஒரு தனி நிகண்டாகச் சிலர் கருதினர். பதினோராம் தொகுதியினை மட்டும் தனி நூலாக அச்சிடப்பட்டுள்ள புதுவை நயநப்ப முதலியாரின் பதிப்பில், ''ஒரு சொல் பல பொருட்டொகுதி' என்பது நூற் பெயர் ஆகவும், நடராச சுவாமி பதிப்பில், 'பதினோராவது நிகண்டு' என்பது நூற்பெயராகவும் குறிப்பிட்டிருப்பது நோக்கத்தக்கது. முனிசாமி முதலியாரவர்களாற் பார்வையிடப்பட்டுச் சிதம்பர முதலியாரால் பதிப்பிக்கப்பட்டதில் பதினோராவது நிகண்டு என்கிற ஒரு சொல் பலபொருட் பெயர்த்தொகுதி என்றே தலைப்பிடப்பட்டுள்ளது. ஒரு சொல்லுக்குரிய பல பொருள்களைக் கூறும் தற்கால அகராதிகளைப்

போல இப்பகுதி அமைந்திருப்பதும் இப்பகுதிச் சிறப்பிற்கு மற்றுமொரு காரணமாகலாம்.

முன் நிகண்டுகளில் காணப்படும் ஒருசொல் பல்பொருள் பெயர்த் தொகுதி தனி நிகண்டாக உருவாகியதே அகராதி நிகண்டாகும். பிற நிகண்டு நூல்களுள் கூறப்படும் ஒருபொருட் பலபெயர்களை யுணர்த்தா தொழிந்த ஒவ்வொன்றொரு பொருளும், பல பொருளுமுணர்த்தும் சொற்களையே தொகுத்துப் பேர்த்தொகுதிகளாகப் பகுத்திருக்கிறது. இதன்கண் பிற நிகண்டிலுள்ள சொற்களும் பொருளும் பெரும் பாகம் காணப்படினும், அவற்றிலில்லாத சங்கம் மருவிய சான்றோர் செய்யுட்களிலும், அவற்றின் உரைகளிலும், பிற்காலத் தமிழ் நூல்களிலும் வழங்கப்பட்ட செந்தமிழ்ச் சொற்களும் உலக வழக்கிலுள்ள வெளிப்படைச் சொற்களும், தெலுங்கு, கன்னடம் முதலிய தமிழ்திரி பிறமொழித்திரி சொற்களும், ஆங்காங்குச் செந்தமிழ் நாட்டுள் வழங்கும் திசைச் சொற்களும், மருவியும் திரிந்தும் வழங்கும் வடசொற்களும் இடையிடையே மலிந்து கிடக்கின்றன.[15]

அகராதி நிகண்டு கூறும் ஒரு சொல் பல்பெயர்த்தொகுதி, முதலெழுத்தை அடிப்படையாகக் கொண்டு, அ, க, ச, ஞ, ந, ப, ம, ய, வ, பேர்த்தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது முதலெழுத்துமட்டும் அகரமுறை கொண்டிருப்பதைக் காட்டும். நூல் முழுதும் 3310 சொற்கட்குப் பொருள் தந்திருப்பது நிகண்டுகளில் அப்பகுதியின் வளர்ச்சியைக் காட்டும். எனினும் அவற்றில் முழுமை பெற்றதாகக் கூற இயலாது. அத்தொகுதியின் வளர்ச்சிப்படியில் அகர நிரன் முறையிலும், சொற்பரப்பிலும் நிறைவு காண முயன்றதே அகராதியின் முதற்பிரிவான பெயரகராதி எனலாம்.

2. பெயரகராதி

அகராதிப் பதிப்புரை, "இத்தமிழ் நாட்டில் தொன்று தொட்டு வழங்கும் பன்னிரு தொகுதித்தாய சேந்தன்றிவாகர முதலிய நிகண்டுகளுட் பத்துத் தொகுதியுட் கூறிய பொருள்களைப் பொருளகராதியாகவும், பதினொன்றாந் தொகுதியிலெதுகைத் தொடையாகக் கூறிய பெயர்களைத் தொடையகராதியாகவும், பெயரகராதியாகவும், பன்னிரெண்டாம் தொகுதியிற் கூறிய தொகைப் பொருள்களைத் தொகையகராதியாகவும் வகுத்து இரேவணாராத்திய ரொருபொருட் பெயரிருபொருட்பெயர் முதலாக முறை தெரிந்திங்கன நூற்பாவாற் செய்தபெயரகராதி போலாதியாவர்க்கும் விளங்கச் சொற் சொல்லாகத் தமிழ்ப் பெருங்கடற்கோர் மரக்கலனாகத் தந்த சதுரகராதி" எனக் கூறுகிறது.

ஒரு பொருட்பெயர், இருபொருட்பெயர் முதலியவற்றை முறையாக நூற்பாவாற்றந்தது அகராதி நிகண்டு. எனவே அந்நிகண்டாசிரியர் ஆகிய சிதம்பர இரேவண சித்தரே இரேவணாராத்தியர் எனச் சுட்டப்படுகின்றார். பதினொன்றாம் தொகுதியை எதுகைத் தொடையிலமைத்தது சூடாமணி நிகண்டாகும். பன்னிரண்டுதொகுதிகளை உடையநிகண்டுதொகுதிகளுள், பொருள் பெயர் எனப்பாகுபாடு செய்வதால் பத்துப் பகுதிகளையுடைய பிற்கால நூல் தனியாகக் கூறாது விடப்பட்டது. எனினும், திவாகர முதலிய நிகண்டுகள் என வருங் குறிப்புப் பிங்கலத்தையும் அடக்கியதாகக் கொள்ளலாம். எனவே, திவாகரம், பிங்கலம், சூடாமணி, அகராதி நிகண்டு ஆகியவற்றில் அடங்கிய ஒரு சொற் பல்பொருட்பகுதிகளின் விரிவு பெயரகராதி என்பது தெளிவாம்.

திவாகரத்தின் ஒருசொல் பல்பொருட்பெயர்த் தொகுதியில் 376 சொற்களும், பிங்கலத்தின் ஒருசொல் பல்பொருள் வகையில் 1077 சொற்களும், சூடாமணியின் ஒருசொல் பல்பொருள் பெயர்த் தொகுதியில் 1575 சொற்களும், அகராதி நிகண்டில் 3310 சொற்களும் இடம் பெறப் பெயரகராதியில் 12,187 சொற்கள் இடம் பெறுகின்றன.[16] காலவளர்ச்சியினைவிட விரைவான சொற்பெருக்கம் பெயரகராதியால் ஏற்பட்டது என்பதனை இயலிறுதி வரைபடம் விளக்கும். அகராதி நிகண்டிற்கும் அகராதிக்கும் உள்ள கால இடைவெளி 134 ஆண்டுகள்தான். சொற்பெருக்கமோ ஏறத்தாழ நான்கு மடங்கு ஆகும்.

நிகண்டுகள் பல்வேறு உட்பிரிவுகளிற் கூறிய பெயர்களை ஒரே பிரிவிற் பெயரகராதியாக அகராதி கூறுகிறது. அதனை முதற்பிரிவாக அமைத்துக் கொண்டது. 'நம்முத லவனடி யிறைஞ்சி' எனத் தொடங்கும் காப்புச் செய்யுளோடு தொடக்கம் பெறுகிறது. அச் செய்யுள் அகரமுதலாக எழுத்துமுறையைச் சார்ந்து நாவலர் தம் மொழிகளின் பயனை யடையப் பொருள்களைத் தரும் பெயரகராதி எனக் கூறுகிறது. பின்னர் 'அ' என்னும் எழுத்து முதலாக வௌவால் ஈறாக உள்ளசொற்கள் இடம் பெறுகின்றன. அகரம் முதல் ஔகாரம், ஈறாக உள்ள உயிர்முதற் சொற்கள், ககர வருக்கச் சொற்கள் சகர வருக்கச் சொற்கள், ஞகர வருக்கச் சொற்கள், தகரவருக்கச் சொற்கள், நகர வருக்கச் சொற்கள், பகர வருக்கச் சொற்கள், மகர வருக்கச் சொற்கள், யகர வருக்கச் சொற்கள், வகர வருக்கச் சொற்கட்குப் பொருள் கூறப்பட்டுள்ளன.

பெயரகராதி எனத் தலைப்பிட்டிருப்பினும் அப்பகுதியில் வருவன அனைத்தும் பெயர்ச் சொற்களல்ல. பாயிரத்தில் தொன்னூல்

விளக்கத்தைத் துதித்துக் கொண்டவர்கள் நூற்பதக் கருவியாக உள்ள நாற்பதவிளக்கமும் நவில்கென வேண்ட அகராதி படைத்ததாகக் கூறப் படுகிறது. நால்வகைச் சொற்கள் யாவையென "பெயரே வினையே இடையே உரியே என நூற் கூறுபாடாகச் சொல்லெலாம் வகுக்கப்படும்"[17] என்னும் தொன்னூல் விளக்க உரையால் அறியலாம். பதிப்புரைக்குப்பின், "பெயரகராதி தொடையகராதிகளில்-ஏவல்-வினைமுற்று வினையெச்சம் வியங்கோள் முற்றெனக் காட்டியிருக்குஞ் சிலவற்றைவழியாகக் கொண்டு இலக்கண நூல்களில் வினைச் சொற்குக் கூறிய விறுதிநிலையுடைய வேனைய சொற்களையுமவ்வச் சொல்லெனக் கண்டுணர்க" என்னுங் குறிப்பு அமைந்திருப்பதால் பெயரன்றி வினையும் இடம் பெறுவது பெறப்படுகிறது. "அதி-மிகுதிப் பொருள்களைத் தருமிடைச் சொல்". "அரோ-அசைச் சொல் (உ-ம். நன்றரோ)" போன்ற இடைச்சொற்கள், "உறு-உறுவென்னே வேல்-மிகுதி", "சால-மிகுதி-வினையெச்சம்" போன்ற உரிச்சொற்கள் பல விளக்கப்படுகின்றன.[18] எனவே, பெயரகராதியில் பெயர்கள் மட்டுமின்றி வினை, இடை, உரி, ஆகிய நால்வகைச் சொற்களும் இடம் பெறுகின்றன.

அகரத்தை முதலாகக் கொண்ட சொற்களில் ஓரெழுத்துச் சொல்லாம் தன்மைபெறும் 'அ' முதலில் வருகிறது. அடுத்து, அகரத்தோடு பிறவெழுத்துக்கள் சேர்ந்தமையும் சொற்கள் வருகின்றன. அவற்றுள்ளும் மெய்களின் முறைவைப்பில் முதலிடம் பெறும் ககரம் இரண்டாவதாக நிற்கும் அகரமுதற் சொற்கள் வருகின்றன. பின்னர் இரண்டாம் எழுத்தில் ககரத்தின் வருக்கங்-களாக கா, கி, போன்றவை நிற்கும் சொற்கள் இடம் பெற்று இறுதியில் ககர மெய் 'அக்கசாலையர்'[19] என இரண்டாவதாக வரும் சொற்கள் அமைகின்றன. அவ்வாறே இரண்டாவதாகச் சகரம் வரும் சொற்களிலும் 'அசங்கதம்'[20] போன்றவை அமைந்து, பின்னர் சா, சி, சு, போன்றவை இரண்டாவதாக அமைவன முறையே இடம்பெற்று, இறுதியிலேயே 'அச்சம்'[21] எனச் சகர மெய் இரண்டாவதாகவுள்ள சொற்கள் இடம்பெறுகின்றன, எனவே, அடிகள் மெய்களின் முறையினை அவற்றின் இனமான உயிர்களில் பின்னதாக, க, கா, கி, கீ, கு, கூ, கெ, கே, கை, கொ, கோ, கௌ, என்ற முறையில் கொண்டிருக்கிறார் என்பது புலனாகிறது,

மெய்ம்முறையில் ககரத்தை யடுத்து, ஙகரம் இடம் பெறல் வேண்டும். ககரத்தை இரண்டாவதாகவுள்ள சொற்களின் இறுதியாகிய அக்கோ என்பதனையடுத்து இஃகல், இஃகுல்லி, இஃபோதம் என்னும் ஆய்தம் இரண்டாவதாக வரும் சொற்கள் இடம் பெறுகின்றன.[22] எகரமுதலாகவுடைய எக்களித்தல் என்னும் சொல்லையடுத்து எஃகம், எஃகல், எஃகு முதலியனவும், ககர முதலாக

உடைய சொற்களில் கக்கல் என்னும் சொல்லையடுத்து கஃசு என்னும் சொல்லும், அவ்வாறே பிறவிடங்களிலும் ககரமெய்யடுத்து ஆய்தம் அமைகிறது.[23] இவ்வாறு ககரத்திற்கும் யகரத்திற்குமிடையில் ஆய்தம் பெறுதற்கு ககரத்தின் மெதுவொலி ஆய்தம் எனக் கொண்டமை காரணமாயிருக்கலாமோ என எண்ணத்தோன்றுகிறது. தொன்னூல்விளக்கத்தில். "ஆய்தமென்ற திடுகுறிப்பெயர். முதலெழுத்து முப்பத்தினொன்றல்லாது வேறாம் நிற்றலானும், உயிர்போலத் தனித் தொலியாதுமாய் மெய்போல உயிரேறப் பெறாதுமாய் முதலெழுத்தாந் தன்மை எய்தாமையானும், இருமருங்கும் வருமெழுத்தைச் சார்ந்தொலித்தலானுஞ் சார்பெழுத்தினொன்றாயின்''[24] எனக் கூறுகிறார். தனித்தொலிக்கும் உயிர்க்கூறில்லையாதலின் உயிரெனக் கொள்ள வியலாது; உயிரேறப் பெறாததால் மெய் எனக்கொள்ளவியலாது என்பது அடிகள் எண்ணம். பிறவியல்புகளில் மெய்யெழுத்தின்தன்மை ஆய்தத்திற்குண்டென அவர் கருதுவது ''இதனுருவோவெனில் முப்புள்ளி வடிவு; இது மெய்யெழுத்தின் தன்மைத்தாவதன்றி, அதன்மே லுயிரேறப் பெறாதெனக்கொள்க''[25] என்னும் குறிப்பால் அறியக்கிடக்கிறது. எனவே, ஆய்தம் மெய்க்கூற்று அடிப்படையில் வைக்கப்பட்டதாயினும், ககர மெய்யை யடுத்து அமைத்தற்குரிய காரணம் சிந்தித்தற்பாலது. "இருமருங்கும் வருமெழுத்தைச் சார்ந்தொலித்தலானுஞ் சார்பெழுத்தினொன்றாயின''[26] எனக் கூறுவதால், ஆய்தத்தின் முன்னுள்ள அகரம் பின்னருள்ள க, கு, போ, ஆகிய எழுத்துக்களின் ஒலியைச் சார்கின்றபொழுது அடிகளுக்குக் ககர ஒலி போலத் தோன்றிற்று போலும். எனவே, ககர மெய்க்கு இணையென ஆய்தத்தைக் கருதி அதனைச் சார்ந்து ஆய்தம் அமைந்த சொற்களைக் கூறினார் எனலாம்.

உயிர்முதற் சொற்களைக் கூறுதற்குமுன் உயிர்எழுத்துக்களைத் தனித்து நிறுத்தி, ''ஆ-ஆச்சாமரம், ஆதலைச் செய்யனேவல், இச்சை, இரக்கம், ஓரெழுத்து, சொல்லிசை, பசுப்பொது, பெண்பசு, பெண்ணெருமை, பெண்மரை, வியப்பு, விலங்கில் பெண்பொது, வினா''[27] எனப் பொருள் கூறுகிறார். ஆவிற்குரிய பொருள்களுள் ஓரெழுத்து என்பதும் காட்டப்படுகிறது. இவ்வாறே ஔகாரம் தவிரப் பிற உயிர்கள் அனைத்தும் ஓரெழுத்து எனக் காட்டப்படுகின்றன. மெய்களில் கா, கீ, கோ, சா, சி, சை, சோ, த, தா, தி, தீ, து, தூ, தே, தை, ந, நா, நி, நொ, நோ, ப, பா, பூ, பே, பை, ம, மா, மீ, மூ, மோ, வீ, வே, வை, ஆகியன ஓரெழுத்தெனச் சுட்டப்படுவதன்றிப் பிறமெய்கள் சுட்டப்படவில்லை. அவற்றுள் ஔகார உயிர், க, கி, கெ, கே, கை, கொ, கௌ, ச, சு, சூ, செ, சொ, சௌ, ஞ, ஞா, ஞி, ஞெ, ஞொ, தெ, தொ, தோ, தௌ, நீ, நு, நெ, நே, நை, பி, பீ, பு, பெ, பொ, போ, பௌ, மி, மு, மெ, மே, மொ, மௌ, ய, யா, யு, யூ, யோ, யௌ, வ, வா, வி, வெ, வௌ ஆகிய தலைப்புக்களில் அவ்வெழுத்துக்

களை மட்டும் உடைய சொற்கள் இடம் பெறவில்லை. ஆனால் கு, கூ, சி, சே, மை, ஆகியவை[28] ஓரெழுத்து ஒரு மொழிகளாக நிறுத்தப் பட்டு வேறு பொருள்கள் கூறியிருப்பினும் ஓரெழுத்து எனச் சுட்டப் படாதது சிந்தித்தற்குரியது.

உயிர்கள் பன்னிரண்டும் மெய்கள் க, ச, ஞ, த, ந, ப, ம, ய, வ ஆகிய ஒன்பதும் முதலாகவுடைய சொற்கள் மட்டும் இடம் பெறுகின்றன. ஏனெனில் அவையே மொழிமுதற்கண் வரத்தக்கன என்பது அடிகள் இலக்கணக் கொள்கையாகும்.[29] எவ்வெம் மெய் எவ்வெவ் உயிரோடிணைந்து முதலாகுமெனத் தொன்னூல் விளக்கம் சுட்டவில்லை. க, த, ந, ப, ம ஆகியவை எல்லா உயிர்களோடும் மொழிமுதலாகும் எனத் தொல்காப்பியம் கூறும்.[30] ஆனால் க, ச, த, ந, ப, ம ஆகிய ஆறும் அனைத்துயிர்களோடும் மொழிமுதலாகிய சொற்கள் இடம் பெறுகின்றன. ஔகாரத்தோடு சேர்ந்த நகரமாகிய நௌ முதலாகவுடைய சொற்கள் ஒன்றும் இடம் பெற்றிலது. ஞகரம், ஆ, எ, ஒ, ஆகிய மூவுயிர்களோடு முதலாகுமெனத் தொல்காப்பியம் கூற நன்னூல் அவற்றோடு அகரத்தையும் சேர்த்து நான்குயிர்களோடு முதலாகும் எனக் கூறும்[31] அகராதி அவ்விலக்கணங்கள் சுட்டாத இகரத்தோடு சேர்ந்த ஞகரத்தை முதலாகவுடைய ஞிமிர், ஞிமிறு ஆகியசொற்களைக்[32] கூறுகின்றது. யகரம் ஆகாரத்தோடு மட்டும் முதலாகும் எனத் தொல்காப்பியம் கூற நன்னூல் அ, ஆ, உ, ஊ, ஒ, ஔ ஆகிய ஆறுயிர்களோடு முதலாகும் எனக் கூறும்.[33] அகராதியில் அவ்வாறே ஆறுயிர்களோடு சேர்ந்து யகரம் முதலாகும் சொற்கள் இடம் பெறுகின்றன. வகரம், உ, ஊ, ஒ, ஓ தவிர்ந்த பிறவற்றோடு சேர்ந்து முதலாகும் என இலக்கணங்கள் கூறுவதற்கேற்ப[34] அவற்றை முதலாகவுடைய சொற்கள் அகராதியில் இடம் பெறுகின்றன. இவ்வாறு இலக்கண நெறிக்கேற்ப நௌகார முதற் சொற்கள் இடம் பெறாமைக்கும், இலக்கண நெறிகட்கு முரணாக ஞிகர முதற்சொற்கள் இடம் பெறுவதற்கும், அனைத்துயிர்களோடும் சேர்ந்த சகர முதற் சொற்கள் காணப்படுவதற்கும் பின்னூல்களிற் கண்டபடி, காலத்திற்-கேற்றவாறு சொற்கள் வழங்கும் தன்மைக்கேற்ப சொற்களைத் தொகுத்தது காரணமாகலாம்.

உயிர்முதலாகக் கொண்டு அ-886, ஆ-306, இ-471, ஈ-47, உ-435, ஊ-54, எ-145, ஏ-88, ஐ-27, ஒ-96, ஓ-54, ஔ-3, சொற்கள் உள்ளன. அகரமுதலாகக் கொண்டவை மிக அதிகமாகவும், ஔகாரம் முதலாகக் கொண்டவை மிகக் குறைவாகவும் உள்ளன. குறிலைவிட நெடில் முதற் சொற்கள் குறைவாகக் காணப்படுகின்றன. மெய்களில் ஔகாரத்தோடிணைந்த உயிர்மெய்ச் சொற்கள் கௌ தவிர மற்ற அனைத்திலும் குறைவாகக் காணப்படுகின்றன. ககர வருக்கத்தில் உள்ள ஔகாரம் அவ்வினத்தில் கெகர முதற்சொற்களை

விடச் சற்று அதிகமாகக் காணப்படுகிறது. இவை எவ்வெவ்வற்றை முதலாகவுடைய சொற்கள் மிகுதியான அளவில் வழங்கியுள்ளன என அறிதற்கு ஓரளவு உதவியாயுள்ளன. உயிரோ, மெய்யோ முதலாக உடைய சொற்களில் இரண்டாம் எழுத்தை நோக்கின் யகரம் மட்டும் மெய்யாகவே இடம் பெற்றுள்ளது. பிறவுயிர்களோடு சேர்ந்து இரண்டாவதெழுத்தாக உயிர்மெய் ஙகரம் இடம் பெறவில்லை. பிறவிடங்களிலும் அகரத்தோடு மட்டும் சேர்ந்து ஙகரம் இடம் பெறுகிறது, ஙகரத்தின் வழக்காற்றுக் குறைவே இதற்குக் காரணம் எனத்தெரிகிறது.

ஒருசொல்லுக்கு 'அகநிலை-கடவுள்'[35] என ஒரு பொருள் மட்டும் கூறப்படும் சொற்களே பெரும்பாலன. எனினும் 'அகப்பா-அகழிமதிலுண்மேடை' என இருபொருள்களும், 'அகணி-உள், மருத நிலம், வயல்' என முப்பொருள்களும், 'அகவல்-அழைத்தல், ஆசிரியப்பா, ஆடல், மயிற்குரல்' போன்று மூன்றுக்கு மேற்பட்டும், ஒரு சொல்லுக்குப் பல பொருள்கள் கூறப்படுகின்றன.[36] சான்றாக கலை என்னும் சொல்லுக்கு 18 பொருள்கள் தரப்படுகின்றன.[37] அரி என்னும் சொல்லுக்கே அடர்பு, அரிசி, அரித்தல், அரியென்னுமேவல், ஆயுதப்பொது, ஈர்வாள், உட்டுளைப் பொருள், ஐமைவடிவு, ஒளி, கடல், கட்டில், கண்வரி, கள், காற்று. கிள்ளை, குதிரை, குரங்கு, குற்றம், கூர்மை, சக்கரம், சந்திரன், சிங்கம், சிங்கவிராசி, சிலம்பின் பருக்கைக்கல், சிலம்பு, சூரியன், செம்மறியாட்டுக்கடாய், சோலை, தவளை, தீ, தேர், தேவேந்திரன், நமன், நிறம், நெருக்கம், நெற்கதிர், பகை, பச்சை, படுக்கை, பறை, பன்றி, பாம்பு, புகை, பொன், மரகதம், மரவயிரம், மலை, மழைத்துவல், மாலை, மூங்கில், வண்டு, வரி, வலி, விசி, விட்டுணு ஆகிய 55 பொருள்கள் கூறப்படுகின்றன.[38]

சொற்கட்குப் பொருள் தருங்கால் சொல்லுக்குரிய பொருள் களைச் சொற்சொல்லாக நிறுத்திக் கூறப்படுவதே பெரும்பான்மை எனினும் சிலவற்றிற்குப் பொருள் சொல்லாக மட்டும் அமையாமல், விளக்கங்களாகக் கூறப்படுகின்றன. 'அகலவுரை-இலக்கணமு மிலக்-கியமுமெடுத்துக்காட்டிப் பொருள் விரித்தல்', 'அண்டசம்-முட்டையிற் பிறப்பன, அவையாவன, அரணை, ஆமை, இப்பி, உடும்பு, ஓணான், தவளை, நண்டு, பல்லி, பறவை, பாம்பு, மீன், முதலை பிறவும்'', ''அந்தராளன்-அநுலோமத் தந்தைக்கும் பிரதிலொமத் தாய்க்கும் பிறந்த பிள்ளை'[39] போன்றவை அவ்வகைப்பட்டவை.

இலக்கணப் பொருள்கள் கூறப்படுமாயின் தக்க எடுத்துக்காட்டு களும் தரப்படுகின்றன.[40] கீழ் என்னுஞ் சொல்லுக்குக் கூறப்படும் ஏழு பொருள்களும் ஏழனுருபு என்பதும் ஒன்றாகும். அதற்குக் காட்டாக, 'ஆலநீழற் கீழன்றொரு நால்வருக்கும் நெறியுரைத்தானை', என்னும்

தொடர் காட்டப்படுகிறது. என்பதற்குக் கூறப்படும் இருபொருள்களுள் ஒன்றான நான்கனுருபினை விளக்க 'அறத்திற்குப் பொருள்' எனக் காட்டப்படுகிறது. கெழு என்பதற்குக் கூறப்படும் இரு பொருள்களுள் ஒன்றான இடைச்சொல் என்பதனை விளக்குதற்கு 'வேல்கெழு தடக்கை' எனச் சுட்டப்படுகிறது. ஒருசொல் பல இலக்கணப்பொருள் களையுடைத்தாயின் ஒவ்வோர் இலக்கணப்பொருளும் உரிய எடுத்துக் காட்டுடன் கூறப்படுகிறது. ஆண் என்னுஞ் சொல்லுக்கு ஆண்பால் விகுதி, சாரியை, பசுப்பொது, பெண்பசு, வேற்றுமையுருபு எனக்கூறப் படும்'[41] ஐந்து பொருள்களுள் மூன்று இலக்கணத் தொடர்புடையன. அவற்றுள் ஆண்பால் விகுதிக்கு 'வேளான்' என்றும், சாரியைக்கு 'ஒருபான்' என்றும், வேற்றுமையுருபிற்கு உரனென்னுந்தோட்டியா-னோரைந்துங்காப்பான்' என்னும் சான்றுகள் காட்டப்படுகின்றன,

பொருளின் விரிவு வேண்டின் இன்ன பகுதியிற் பார்க்க எனக் குறிப்புத் தருவதுபோல் ''அரும்பாலை- ஒரிராகமதை யெழுபாலையில் காண்க'[42] எனச் சுட்டிப் பொருள் தரப்படுகிறது. சொல்லுக்கும் பொருளுக்கும் பகுதியொன்றாயமைந்து வெவ்வேறு தொழிற்பெயர் விகுதிகொண்டதால் வெவ்வேறாகக் கொண்டு 'சுழல்வு-சுழற்சி,[43] என்றாற் போன்று ஒன்று சொல்லாகவும், ஒன்று பொருளாகவும் காட்டப்படுகின்றன. 'கரடி-கரடியென்னும் விலங்கு'[44] எனப் பெயரையே பொருளாகவும் வைத்துக் கூறப்படும் விளக்கமும் அமைந்து கிடக்கின்றது. ஈரடுக் கொலிக்குறிப்பு, என்பதைமட்டும் பொருளாகக் கொண்ட கொளகொளெனல், சளசளெனல் போன்ற சொற்களும்[45] காணப்படுகின்றன. பொருளை வரையறுக்குங்கால் திட்பநுட்பஞ் செறிந்தனவாக விளக்கம் தந்த பகுதியும் உண்டு. அதற்குச் சான்றாகச் ''சந்தை-பலவூர், மனித ரோரூரி லோர் தினத்திற் கொள்ளல் விற்றற் பொருட்டுக் கூடுங்கூட்டம்''[46] என்பதனைக் கூறலாம்.

சொற்கட்கான பொருள்களைக் கூறுங்கால் முன்னைய இலக்கண நூல்கள், நிகண்டுகள் கூறியனவற்றைச் சிந்தையிற் கொண்டு கூறியுள்ளார். எனினும், அவற்றில் உள்ளவற்றைத் தொகுத்துத் தந்துள்ளார் எனக் கூறுதற்கில்லை. கொள்ளுவன கொண்டு தள்ளுவன தள்ளினார். கடி என்னும் சொல், முன்னோர் இலக்கணங்-களிலும், நிகண்டுகளிலும் பொருள் விளக்கப்பட்ட சொல்லாகும். தொல்காப்பியம் வரைவு, கூர்மை, காப்பு, புதுமை, விரைவு, விளக்கம், மிகுதி, சிறப்பு, அச்சம், முன்றேற்று, ஐயம், கரிப்பு ஆகிய பன்னிரு பொருள்களைக் கூறுகிறது.[47] நேமிநாதமும் அப் பொருள்களையே கூறுகிறது.[48] நன்னூல் அவற்றுள் முன்றேற்று' ஐயம் ஆகிய இரு பொருள்களை விடுத்து, விரை, ஆர்த்தல், மன்றல் ஆகிய மூன்று பொருள்களைச் சேர்த்துப் பதின் மூன்றாகக்

கூறுகிறது.[49] முத்துவீரியம், காப்பு, கூர்மை, விரைவு, விளக்கம், மிகுதி ஆகிய ஐந்து பொருள்களை மட்டுமே கூறுகிறது.[50] தொன்னூல் விளக்கம் நன்னூல் கூறுவனவற்றையே கூறுகிறது.[51]

நிகண்டுகளில் முந்தியதான திவாகரம் பன்னிரு பொருள்களைக் கூறினும், முன்றேற்று என்பதற்கு மாறாகத் தோற்றம் எனச் சுட்டு கிறது.[52] பின்னர் எழுந்த பிங்கலம் தோற்றத்தை விடுத்து, மனத் தொழில், நாற்றம், காலம் பேய் ஆகிய நான்கனைப் புதிதாகச்சேர்த்து 15 ஆக்கிக் கூறுகிறது.[53] சூடாமணி சிலவற்றை விடுத்தும், சிலவற்றை சேர்த்தும் 13 பொருள்களைக் கூறுகிறது.[54] ஒரு சொற் பல்பொருள் தொகுதிக்கென்றே எழுந்த அகராதி நிகண்டு 22 பொருள்களைக் கூறு-கிறது.[55] முன்னூல்கள் சொல்லியவற்றின் பொருள்களுள் சிலவற்றை இரண்டாக்கியும், புதிதாகச் சிலவற்றைச் சேர்த்தும் அகராதி நிகண்டு கூறியது எனலாம்.[56]

அகராதி அச்சம், இன்பம், ஒளி, கடியென்னேவல், கரிப்பு, களிப்பு காலம், காவல், கூர்மை, கைப்பற்றல், சிறப்பு, சீக்கிரம்,, நந்தவனம், நிதம்பம், பிசாசம், புதுமணம், புதுமை, பொழுது, வாசனை விளக்கம் ஆகிய 20 பொருள்களைத் தருகிறது.[57] இவற்றுள் ஒளி, களிப்பு, நிதம்பம், பொழுது போன்ற பொருள்கள் முன்னோரால் கூறப் படாதவை. கடியென்னேவல் என்னும் வினைப்பொருண்மை காட்டப் படுகிறது. விரைவு என்னும் சொல்லுக்கு மாறாக அப்பொருளுடைய சீக்கிரம் என்னும் சொல் ஆளப்படுகிறது. எளிதில் பொருளுணர எளிய சொற்களை ஆளவேண்டும் என எண்ணிப் பயன்படுத்தியிருக்கலாம். எனவே, இலக்கணங்கள், நிகண்டுகளில் உள்ளசொற்களை மட்டும் தொகுத்து முறைப்படுத்திக் கூறாமல், அடிகள் காலத்தில் வழங்கிய எளிய சொற்கள், அவை தரும் பொருள்கள், ஆகியவற்றையும் மனத்துக் கொண்டு சொற்களையும் அவற்றின் பொருள்களையும் அடிகளார் கூறினார் எனலாம்.

சில சொற்கட்கு முன்னை நிகண்டுகள்கூறிய பொருள்கள் அனைத்தையும் குறிப்பிட்டு அவற்றுக்குமேல் தாமாகக் கண்ட சில பொருள்களைச் சேர்த்துள்ளார். அரி என்னும் சொல்லுக்குத் திவாகரம் 23 பொருள்களும்,[58] பிங்கலம் 41 பொருள்களும்,[59] சூடாமணி 47 பொருள்களும்[60] அகராதி நிகண்டு 46 பொருள்களும்[61] கூற, அகராதி 55பொருள்களைக்கூறுகிறது.[62] அப்பொருள்களுள், அடர்பு, சிங்கராசி, சிலம்பு, செம்மறியாட்டுக்கடா, நெருக்கம், மரகதம், மழைத்தூவல், விட்டுணு ஆகியன அடிகள் காட்டும் அப்பொருண்மைத் தொடர்-புடைய புதுச்சொற்களே.

இவற்றை நோக்க, நிகண்டுகளின் சொற்றொகுதிகள் அகராதிப் படைப்பிற்கு உதவின வெனினும் பிற இலக்கியச் சொல்வழக்காறு களும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. எனவே, 20-ஆம் நூற்றாண்டில் சென்னைப் பல்கலைக் கழக அகராதி படைத்தவர்கள் அப்படைப் பிற்குத் துணையானவை பற்றி, "மிகப் பழங்காலத்திலிருந்து அண்மைக் காலம் வரை எடுத்த இலக்கியங்களில் கிட்டியவையெல்லாம் ஏறத் தாழப் படித்துப் பார்த்து அவற்றினின்று சொற்கள் தொகுக்கப் பட்டன. கையெழுத்துப்படிகளும், அவ்வப்பொழுது பயன்பட்டன. இன்றியமையாத நிகண்டுகளின் சொற்றொகுதிகள் ஆக்கப்பட்டு அகராதிக்குப் பயன்படுத்தப்பட்டன''[63] எனக் கூறுவது போன்று, 18-ஆம்நூற்றாண்டில் அகராதி படைக்க முற்பட்ட அடிகளும் கிட்டிய இலக்கியங்கள், இன்றியமையா நிகண்டுகள், கையெழுத்துப் படிகள் ஆகியவற்றினின்று சொற்களையும் பொருள்களையும் தொகுத்தார் எனலாம்.

3. சிறப்புக்கூறுகள்

பெயர், வினை, இடை, உரி, ஆகிய நால்வகைச் சொற்களும் அடங்கிய பகுப்புக்குப் பெயரகராதி எனக் கூறியதற்கு முன்னை நூல் களே காரணம் போலும். தொல்காப்பிய உரியியலிற் காணப்படும் சொற்களிற் சில திவாகரத்தில் இடம் பெறுகின்றன. செழுமை, தவ, நனி, நன்வு, மாதர், வயா போன்றவை பதினோராம் தொகுதியிற் கூறப்படுகின்றன.[64] அத்தொகுதியின் தலைப்புப் பல்பொருட் பெயர்த் தொகுதியாகும். உரிச்சொற்களாயினும் பண்புப்பெயர் தன்மை யுடையவெனக் கொண்டு பல்பொருட் பெயர்த் தொகுதியில் அடக்கி னர் எனலாம்.

தொல்காப்பிய உரிச்சொற்கள் அல்லாத வேறு சொற்களும் திவாகரத்தில் உள்ளன. அன்று, இன்று, ஆம் ஆகிய அசைச்சொற்கள், கேட்பிக்கு முறையசைச் சொல், உரையசைச் சொல், முன்னிலையசைச் சொல், அசைநிலைச்சொல், இசைநிறையசைநிலை, உடனிகழ்விடைச் சொல், சாரியை மொழியின் பெயர், இடைச்சொல்லின் பெயர், எழுத் தின் சாரியைப் பெயர், வேற்றுமையின் பெயர் போன்றவை[65] ஒலி பற்றிய பெயர்த் தொகுதியில் இடம் பெறுகின்றன. இவை இடைச் சொற்களாயினும் சுட்டப்படும்பொழுது இன்ன சொற்கள் எனக் குறிக்கும் நிலை பெறுகின்றன. சொற்கள் என்ற நிலையில் பெயரா கின்றன. எனவே, திவாகரத்தில் வரும் எவ்வகைச் சொல்லும் பெயர்த் தன்மை பற்றிப் பல்வேறு பெயர்த் தொகுதிகளில் அடக்கப்படுகின்றன.

பிங்கலம், ஒருசொற் பல்பொருள்வகையில் ஏறும், பிறங்கல், போன்ற உரிச்சொற்களையும்,[66] அத்தை போன்ற இடைச்

சொற்களையும்,[67] உரிச்சொல், இடைச்சொல் எனக் குறிக்குங்கால் பெயரெனக்கொண்டு ஒருசொல் பல்பொருள்வகை என்னும் பிரிவில் அடக்கிக் கூறுகிறது. சூடாமணி உள்ளது சிறத்தற் பொருள்தரும் உரிச்சொற்களைப்[68] பண்புபற்றிய பெயர்த்தொகுதியிலும் விரைவுக் குறிப்பைத் தரும் உரிச்சொற்களைச்[69] செயல்பற்றிய பெயர்த் தொகுதியிலும், இவ்வாறே பிறவற்றை அவ்வவற்றிற்குரிய பெயர்த் தொகுதிகளிலும் அவற்றைச் சுட்டுங்கால் பெயர் என்னும் அளவில் கருதி அடக்குகிறது. அகராதி நிகண்டும் அக்கருத்தின் அடிப்படை-யிலேயே 'உயங்கல்தானே வருந்தலாகும்'[70] என உயங்கல் - என்னும் உரிச்சொல்லை உம்முதலொரு பெயரில் அடக்கியது போலப் பிற உரி, இடைச் சொற்களையும் பெயர்களில் அடக்குகிறது. நிகண்டுகளின் அடிப்படையில் சொற்பொருள் விளக்க அகராதி படைத்த அடிகள், அவை பல்வேறு சொற்களையும், சுட்டப்படுங்கால் பெயராதல் பற்றிப் பெயரெனக்கொண்டு பொருள்விளக்குவது போலத் தம்மகராதியில் பொருள் விளக்கம் பெறும் அனைத்துச் சொற்களையும் பெயரகராதி என்னும் தலைப்பில் அடக்கினார்.

அகராதியின் இறுதிப் பதிப்பு முகவுரை, ''இவர் எழுதி வெளியிட்ட இவ்வகராதிக்கு முதனூல்களாக யிருந்த பிங்கலந்தை, திவாகரம் நிகண்டு முதலினயவற்றில், 'பொருளிடங் காலம் சினை குணம் தொழிலின் வருபெயர்' என்ற விதிப்படியுள்ள அறுவகைப் பெயர்களில் ஒன்றாய தொழிற் பெயர்களில் தல், அல், அம், ஐ முதலிய விகுதிகளைப் பெற்றனவெல்லாம் ஒருபடித்தெனக் கொண்டு வினை முதற்பொருள், செயப்படுபொருள், கருவிப்பொருள், வினைநிகழ்ச்சி, வினையின் தன்மை முதலிய வேறுபாடின்றி, நூல் வகுத்துள்ள காரணத்தால் இவரும் மற்றை அகராதி ஆக்கியோர்களும் அவற்றின் முறைகளையே பின்பற்றித் தொகுத்திருக்கின்றனர்'' எனக்குறித்துப் பார்வை என்பதற்குப் பார்த்தல் என்றும், தெரிதல் என்பதற்கு ஆலோசனை என்றும். சிந்தனை என்பதற்குப் பொய்கூறல் என்றும் இன்னோரன்ன பிறவுமாம் எனச் சில சொற்களையும் அவற்றின் பொருள்களையும் கூறுகிறது.

காட்டப்படும் சொற்களின் பார்வை என்னுஞ் சொல்லுக்குக் கண், மதிப்பு என்ற பொருள்களைக்[71] கூறுகிறதன்றிப் பார்த்தல் என அகராதி முதற்பதிப்பு, 1860-ஆம் ஆண்டுப் பதிப்பு ஆகியன கூற வில்லை. இறுதிப்பதிப்பாசிரியர் வேறு ஏதேனும் பதிப்பை மூலமாகக் கொண்டிருத்தல் வேண்டும். அல்லது வேறு அகராதிகளில் கண்டி ருத்தல் வேண்டும். தெரிதல் என்பதற்கு ஆலோசனை, காணல் என இரு பொருள்களை[72] அகராதி கூறுவதில் ஆலோசனை என்பதும், சித்திரம் என்பதற்கு அகராதி கூறும் ஆறுபொருள்களில்[73] மெய்போற் பொய் கூறல் என்பதும் பொருந்துமா என்பது சிந்தித்தற்குரியது.

''தெரிதல் என்பதற்கு ஆலோசித்தல் என்றும் சித்திரம் என்பதற்குப் பொய் எனவும் கூறியிருப்பின் சிறப்பாக இருந்திருக்கும். ஏனெனில், தெரிதல் என்னும் தொழிற்பெயருக்கும் முற்றும் நிகரானது ஆலோசித்தல் என்னும் தொழிற்பெயரே. அவ்வாறே, சித்திரம் என்னும் பெயருக்குப் பொய் என்பதே நிகரன்றி மெய்போற்பொய் கூறல் என்னுந் தொழிற் பெயரன்று.

ஒரே வினையடியாகத் தோன்றும் இரு வேறு வடிவமுடைய தொழிற்பெயர்களிலும்கூட நுண்ணிய வேறுபாடுண்டென்பதனை இறுதிப்பதிப்பு முகவுரை விளக்குகிறது. கல்வி என்பதும் கற்றல் என்பதும் தொழிற்பெயர்களேயாயினும் ''நான் கல்வி கற்றேன்'' எனக் கூறும் வழக்கே உள்ளமையும், ''நான் கற்றல் கற்றேன்'' என்னும் வழக்கு இல்லாமையும் அவற்றுக்கிடையே நுண்ணிய வேறுபாடுண்டென்பதனைப் புலப்படுத்தும். எனவே, கல்வி என்பதற்குக் கற்றல் எனப் பொருள் கூறுவதினும் படிப்பு என பொருள் கூறுவதே பொருத்தமாகும். இவ்வகைப் பொருத்தமின்றிப் பல சொற் பொருள்கள் அகராதியில் காணக்கிடைக்கின்றன.

அகரமுதற் சொற்களில் மட்டும் அசைப்பு-சொல்லுதல், அஞ்சலி - கும்பிடல், அஞ்சிதமுகம் - தலையாட்டியிருதோண்மேல் சாய்தல், அபராதம்-தண்டித்தல், அருக்கல்-அச்சம், அலத்தல்-துன்பம், அவதாநம் - கிரகித்தல், அவரோகணம்-இறங்குதல், அவையல்-திரட்சி-அறிமடம்-அறிந்து மறியாமை போறல் ஆகியவை காணப்படுகின்றன.[74] இவற்றிற்கு முறையே சொல், கூப்பு, தலையாட்டியிருதோண் மேல் சாய்முகம், தண்டனை, அச்சமுறல், துன்புறல், கிரகிப்பு, இறக்கம், திரள்தல், அறிந்துமறியாத்தன்மை எனப்பொருள் கூறியிருப்பின் சிறப்பாக இருந்திருக்கும். அகைத்தல், அசதி, அச்சுதம், அஞ்சல், அடை, அணவுதல், அதம், அதிரல், அமுதம், அருந்தல். அலைப்பு அனித்தல், அறிக்கை ஆகிய சொற்களுக்குக் கூறப்படும் பல பொருள்களுள் ஒன்றாக முறையே எழுச்சி சிரித்துப்பேசல், அறுகு வெள்ளரிசி கூட்டியணிவது தோல்வி, அடுதல், புணர்ச்சி சங்கரித்தல், விரிநூறு, வேண்டல், அருமை, அலைத்தல், அலைதல், பாதீடு, அறிவித்தல் என்பன இடம் பெறுகின்றன.[75] இவற்றுக்கு மாறாக முறையே எழுதல், சிரித்தபேச்சு, அறுகு வெள்ளரிசி கூட்டியணியும் தன்மை, தோல்வியுறல், அடு, புணர்தல், சங்கரிப்பு, விரிதூறல், வேண்டும் பொருள், அருமையாதல், அலைவு, அலைப்பு, பாதீடு செய்தல், அறிவிப்பு என அமைத்திருக்கலாம். சில சொற்களில் கூறப்படும் பொருள்களுள் ஒன்றுக்கு மேற்பட்டவையும் இவ்வகையாகத் தோன்றுகின்றன. அஞ்சிதம்[76] என்பதற்குக்கூறப்படும் உண்டாதல், பொருந்தல் ஆகிய இருபொருள்களுக்கும் பதிலாக உளவாந்தன்மை, பொருத்தம் ஆகியவற்றை அமைந்திருக்கலாம். அமர்தல்[77]

என்பதற்குக் கூறப்படும் பெருமை, பொருத்தல், பொலிவு, மிகுதி, ஆகிய நான்கனுள் பெருமை, பொலிவு, மிகுதி ஆகியவற்றிற்கு மாறாகப் பெருமையுறல், பொலிவுறல், மிகுதியாதல் ஆகியன அமைந்திருக்கலாம். அல்கல்[78] என்பதற்குக் கூறப்படுவனவற்றுள் தரித்திரம், வறுமை இரண்டிற்கும் பதிலாகத் தரித்திரமுறல், வறுமையுறல் ஆகியன அமைந்திருக்கலாம். சில சொற்களுக்குக் கூறப்படும் பல பொருள்களைத் தவிர்த்திருக்கலாம். அறிவு[79] என்பதற்கு அறிதல், கல்வி என இரு பொருள்கள் தரப்படுகின்றன. அறிதல் என்பது சரிவரப் பொருந்தாநாதலின் தவிர்த்திருக்கலாம். அறை[80] என்பதற்குக் கூறப்படும் 12 பொருள்களுள் பறையடி, பறையடித்தல் ஆகிய இரண்டும் இடம்பெறுகின்றன. இப்பொருள்களுள் பறையடித்தல் முற்றும் பொருந்தாது. மேலும் அறைதல்[81] என்னுஞ் சொல்லுக்குக் கூறப்படும் பொருள்களுள் ஒன்றாகப் பறையடித்தல் என்னும் பொருள் பொருத்தமாக ஆளப்படுகிறது. எனவே அறை என்னுஞ் சொல்லுக்குரிய பொருளாகப் பறையடித்தல் எனக் கூறியிருப்பதை விடுத்திருக்கலாம்.

பொருள்களுக்கிடையே உள்ள நுண்ணிய வேறுபாடு சொற்களால் அறிய முடிகிறது. அகறல், அணிதல், அணுகல், அண்டல், அதர்கொளல், அதிர்த்தல் போன்ற பல சொற்கட்குப்[82] பொருத்தமாகப் பொருள் கூறப்படுகின்றன. தொழிற்பெயர், பிறவினை போன்ற சொற்களின் வேறுபாட்டிற்கேற்பவே பல இடங்களில் பொருள் காட்டப்படுகிறது. அடர்தல், அடர்த்தல், அடர்பு, ஆகிய சொற்கள்[83] அடுத்தடுத்து நிறுத்தப்பட்டு முறையே நெருங்கல், பொருதல், நெருக்கம் எனப் பொருள் காட்டப்படுகின்றன. அயர்தல் அயர்ப்பு,அயர்வு ஆகிய சொற்கள்[84] அடுத்தடுத்து நிறுத்தப்படுகின்றன. தல் விகுதியேற்ற தொழிற் பெயருக்கேற்ப அயர்தல் என்பதற்குச் செய்தல், தளர்தல் எனப் பொருள் கூறப்படுகிறது. அயர்ப்பு, என்னும் பெயருக்கேற்ப மறதி எனப் பொருள் காட்டப்படுகிறது. அயர்வு என்னும் சொல்லுக்கேற்ப அகலும், உந்மத்தம், சோம்பு, தளர்வு, வருத்தம், வெறுப்பு ஆகிய பொருள்கள் கூறப்பருகின்றன. அயர்வுக்கான பொருள்களிற் சோம்பு என்பது ஏவல்வினையாகும். அயர் என்னும் சொல்லுக்கே அப்பொருள் பொருந்தும். அயர்வு என்பதற்குச் சோம்பல் என்பதே சிறப்பு. அயர்வு என்னுஞ் சொல்லில் தல் விகுதியில்லை எனக் கருதிச் சோம்பு எனக் கூறியிருப்பார் போலும். தன்வினை, பிறவினை, அமைப்புக்களைக் கூடச் சொற்களும் பொருள்களும் தெளிவாக உணர்த்தும் வண்ணம் பல சொற்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதற்கு, அவிதல்-கெடுதல், அவித்தல்-கெடுத்தல் ஆகிய சொற்களை[85] அடுத்தடுத்துக் காட்டியிருத்தலே சான்றாகும்.

அகராதி இறுதிப்பதிப்பு முன்னுரை கூறுவதுபோன்று முன்னை நிகண்டுகள் தொழிற்பெயர், பிறபெயர் என்னும் வேறுபாடுகளின்றிச் சிலவற்றிற்குப் பொருள்கள் கூறுகின்றன. தொல்காப்பிய உரியியலில் செல்லல் இன்னல் ஆகிய சொற்களின் பொருளாக இன்னாமை கூறப் படுகிறது.[86] இன்னாமைக்குப் பதில் இன்னாமையுறல் என்பது சிறப்பு. 'அலமரல், தெருமரல் ஆயிரண்டும் சுழற்சி' என்பதற்கு மாறாகச்சுழலல் என்றும், 'முரஞ்சல் முதிர்வு' என்பதற்கு மாறாக முதிர்தல் என்றும் அமைந்திருப்பின் சிறப்பாகும்.[87] திவாகரம் ஒருசொற் பல்பொருட் பெயர்த் தொகுதியில், 'அமர்தல் மிகுதியும் பொலிவுமாகும்''[88] எனக் கூறுகிறது. இதற்கு மாறாக 'அமர்வு மிகுதியும் பொலிவுமாகும்' என்றோ, அன்றி, அமர்தல் மிகுதியுறல் பொலிவுறலுமாகும்' என்றோ அமைந்திருப்பின் பொருத்தமாக அமைந்திருக்கும். அருகல் என்பதற் குரிய பொருள்களுள் ஒன்றாகக் காதலையும் ஆய்தலுக்குரியனவற்றுள் ஒன்றாக நுணுக்கத்தையும், இரங்கலுக்குரியனவற்றுள் ஒன்றாக அரவத்தையும், உலர்தலுக்குரியவற்றுள் தெளிவையும் சுட்டுகிறது.[89] அவற்றிற்கு மாறாக முறையே காதலுறல், நுணுக்கமுறல், அரவமுறல், தெளிவுறல் எனக்கூறுவதே பொருந்தும். பிங்கலத்தில் அஞ்சலிக்குத் தொழுதலும், இழுக்குக்குப் பிழைத்தலும், உரைக்குச் சொல்லும், உள்ளலுக்கு மனம் நினைவு ஆகியனவும்'[90] அகராதி நிகண்டில், அலமரலுக்குச் சுழற்சியும்[91] அவிர்தலுக்கு ஒளியும்,[92] அச்சத்திற்கு அஞ்சலும்,[93] அஞ்சலிக்குக் கும்பிடலும்[94] அகைத்தலுக்கு வேதனையும்[95] பொருள்களாகக் காட்டப்பட்டிருக்கின்றன. சான்றுக் காகக் காட்டப்பட்ட இவையேயன்றி நிகண்டுகளில் இப்பொருன்- முறை விரவிக்கிடக்கின்றன. இவற்றை அறிந்த அடிகளார் மும்முறையிலேயே பொருள் வேறுபாட்டைத் தெளிவுறுத்துமாறு பொருள் வரையும் முயற்சியில்ஈடுபடாது விட்டுவிட்டார்போலும்.

மேலும் முன்னைப் புலவோர்தம் சொல்லாட்சியும் அதற்குத் துணையாகியிருக்கலாம். இறுதிப்பதிப்பின் முகவுரை இறுதியில் குறிப்பு என்னுந் தலைப்பில் சொற்களில் வழக்காறுகட்கு எடுத்துக்காட்டுகள் தந்து முடிவில் ''அடித்தல் என்கிற தொழிற்பெயர் தல் என்னும் விகுதி புணர்ந்து கெட்டு 'அடி' என்று முதனிலைத் தொழிற் பெயரான விடத்து 'ஒரு அடி அடித்தான்' என்று அது ஒரு பெயரைக் குறிப்பது போல் தல் விகுதி புணர்ந்து அடித்தல் என்றுநின்றவிடத்து அங்ஙனமே 'ஒரு அடித்தல் அடித்தான்' என்று வழக்கிலிருக்கின்றனவா என்றும் உற்று நோக்குக'' எனக் கூறுகிறது. வாக்கியத்தில் அமையா தெனினும் தனிச் சொல்லாகப் பார்க்கும் பொழுது, அடி என்னுஞ் சொல்லின் முழுத்தொழிற்பெயர் வடிவம் அடித்தல் என்பதே யாகும். எனவே, அடி, என்னும் தனிச்சொல்லிற்குப் பொருள் அடித்தல் என்பதும் பொருந்தும். 'கெடுவாக வைய்யாது' அறி கொன்று' என்னும் திருக்குறட் தொடர்களில்[96] உள்ள கெடு, அறி

ஆகியன முதனிலைத் தொழிற்பெயர்களே. அவற்றின் முழுவடிவம் கெடுதல், அறிதல், ஆகியனவே. எனவே தனிச்சொற்கள் என்னும் நிலையில் கெடு, கேடு, கெடுதி, கெடுதல் ஆகியவற்றையும் அறி, அறிவு அறிதல், ஆகியவற்றையும் ஒரு பொருளனவாகக் கொள்ளற்கு இடமுண்டு. இவ்வகைச்சிந்தனை பொருள் கூற முற்பட்டநிகண்டுகட்கும் அவற்றை நோக்கிய அடிகட்கும் ஏற்பட்டிருக்கலாம்.

இறுதிப் பதிப்பு முகவுரை ''அவியல், வற்றல், தோன்றல் என்னும் சிலபல தொழிற்பெயர்கள் தொன்றுதொட்ட ஆகுபெயராகக் கறி, வடகம், மகன் என்று வருவன போன்று அங்ஙனம் வரமுடியாத பல ஆயிரக்கணக்கான சொற்களுக்கும் அங்ஙனமே உரை வரைந்து கிடக்கின்றபடியால் அவற்றின் வேறுபாடு அறிவதற்கிடனின்றி முரணாகிறது'' என அகராதிகளின் பொருண்முறைபற்றிக் குறிப்பிடுகிறது. அகராதியில் அவ்வகையாகப் பொருள்தரும் சொற்கள் பல காணப்படுகின்றன. 'அங்கர் கோமான்-கன்னர்,[97] என அகராதி குறிக்கிறது. அங்கர்க்கு அரசன் என்பதே சரியான பொருளாகும். சிறப்புப் பெயராகக் கன்னனைக் கொள்ளலாம். இவ்வாறே அரவக் கொடியோன், அரவணைச் செல்வன், அலகைமுலையுண்டோன், அழலாடி[98] போன்ற சொற்களுக்கு நேர்ப் பொருள்களாகவுள்ள பாம்புக் கொடியையுடையவன், பாம்பணையையுடைய செல்வன், பேய்முலையையுண்டவன், அழலில் ஆடியவன் ஆகியவற்றைவிடுத்துச் சிறப்புப் பெயர்ப்பொருள்களாகவுள்ள துரியோதனன், விட்டுணு, கண்ணன், சிவன், என்பன கூறப்படுகின்றன. இவ்வாறே அங்குச பாதமேந்தி, அரவுயர்த்தோன், அழலேந்தி, அழற்கண்வந்தோன், கெடலணங்கு, வெஞ்சுடர்க்கிரணன்[99] போன்ற பல சொற்கட்குப் பொருள்கள் தரப்படுகின்றன. இவற்றையெல்லாம் தொன்றுதொட்டு வழங்கும் காரணச் சிறப்புப் பெயர்களெனக் கொள்ளலாமா என்பது சிந்தனைக்குரியது.

சிறப்புப் பெயர்களன்றித் தொன்றுதொட்டு வரும் ஆகுபெயர்ச் சொற்களும் இடம் பெறுகின்றன. சான்றாக உலகு, பாவை[100] ஆகியவற்றைக் குறிப்பிடலாம். உலகு என்பதற்குக் கூறப்படும் பொருள்களுள் உயர்ந்தோர் என்பது ஒன்று. அது ஆகுபெயராய் அமைந்து பொருள் தருவதாகும், சொல்லுக்குரிய பொருள் இடம் பற்றியே கொள்ள வேண்டும். உலகு புகழும் என்னுங்கால், ஆகுபெயராய் உயர்ந்தோர் புகழ்வர் எனப் பொருள்படுதலால் உலகு என்பதற்கு இவ்விடத்தில் மட்டுமே உயர்ந்தோர் என்பது பொருந்துமன்றி எல்லாவிடத்திலும் பொருந்தாது, இது பூவுலகு, உலகு பரந்துபட்டது என்றவிடங்களில் உயர்ந்தோர் எனப் பொருள் தாராது. அவ்வாறே பாவை என்பதற்குரிய பொருள்களுள் பெண் என்பதும் ஒன்று. உவமையாகு பெயராகப் 'பாவை வந்தாள்' என்ற பொழுதில் பாவை

போன்ற பெண் என்பதைக் குறிக்குமன்றி, கண்ணின் பாவை, பாவை செய்தான் என்ற இடங்களிற் அப்பொருள் பயலாது. எனவே ஆகு பெயர்ப் பொருள்களை நீக்கிப் இயற்பொருள்களை மட்டும் கொண்டிருந்தால் அப்பொருள்கள் எவ்விடத்தும் பொருந்துமாறு அமைந்திருக்கும். இவ்வாறு அடிகளார் ஆகு பெயர்ப் பொருள், சிறப்புப் பெயர்ப் பொருள்களைப் பொதுப் பொருள்கள் போல் கூறியதற்கு முன்னை நிகண்டுகள் வழி காட்டிகளாதல் வேண்டும்.

அடிகளார் அகராதி முன்னுரையில் தமிழ்க் கருவூலத்தை வளமாக்கக் கிரந்தச் சொற்களைச் சேர்த்திருக்கிறேன் எனக் கூறியதற்கு உரிய இடமாகப் பெயரகராதி திகழ்கிறது. பொருளகராதியில் வரும் சொற்களில் பெரும்பான்மையான பெயரகராதியில் இடம் பெறுவனவே; தொகையகராதியில் இடம் பெறுவன தமிழ் மொழியின் இலக்கிய, இலக்கண வழக்குகளில் அமைந்து கிடக்கும் தொகைகளே. தமிழ்ச் செய்யுட்களில் அமைந்து கிடந்த சொற்களே, தொகையகராதியில் நிரற்படுத்தப்பட்டன. எனவே கிரந்தச் சொற்களெனக் கூறிப் புதிதாக வடமொழியிலிருந்து கொண்டு வந்து சேர்த்த சொற்களுக்குக் கொள்கலனகப் பெயரகராதியே இடந்தந்தது.

பெயரகராதி எங்கணும் பரந்து கிடக்கின்ற வடசொற்கள் பல வடிவங்களில் உள்ளன. பகவதிடஞ்சம்[101] போன்ற தற்சம எழுத்துக்களாலாய சொற்களும் உண்டு; அக்கரம், இயசுரு[102] போன்று தற்பவச் சொற்களும் உண்டு. வட சொற்களுள்ளும், அ, அன், துர், நிர், வி, போன்ற முன்னொட்டுக்களைப் பெற்றவை பெரும்பான்மையன. அகர முதற்சொற்களுள் அதகம் முதல் அநூரு முடிய 41 சொற்கள்[103] அன் முன்னொட்டாகக் கொண்டவை. அபசவ்வியம் முதல் அபூபம்முடிய உள்ள 23 சொற்கள்[104] அ,ப,அ. முதலிய முன்னொட்டு. வடசொற்களே அவதாநம், அவப்பிரஞ்சம், அவமானம், அவரோகணம் ஆகியன[105] 'அவ' என்னும் முன்னொட்டுக் கொண்டன. நிகளம் முதல் நிசானம் முடிய 21 சொற்கள்[106] 'நி' முன்னொட்டுடையவை. நிகரத்தை முதன்மையாகவுடைய சொற்களுள் நூற்றுக்கு மேற்பட்டன வடசொற்களே.[107] அவற்றுள் நிராகாரம், நிராமயன், நிராயுதன், நிரியானம், நிருணாமன் ஆகியவை[108] 'நிர்' முன்னொட்டுப் பெற்றவை. விகரத்தை முதன்மையாக வுடைய சொற்களில் தமிழ்ச்சொற்களைக் காட்டிலும் வடசொற்களே அதிகமாகத் தோன்றுகின்றன. திவாகரத்தின் பெயரகராதிக்கு நிகரான பதினோராம் தொகுதி முழுதும் ஏறத்தாழ ஐம்பது சொற்களே வடசொற்களாக உள்ளன.[109] அகர முதற்சொற்களில் அங்கதம், அண்டர், அந்தம், அம்பரம், அரணம், அருணம், ஆளகம் ஆகிய மிகச் சிலவே வடசொற்களாக உள்ளன. அவற்றுள்ளும் சில வடசொல்-தாமா என்னும் ஐயத்திற்குரியன. நிகரத்தை முதலாகவுடைய சொல்

நியமம் ஒன்றே.[110] வகரத்தை முதலாக உடையவற்றுள் வநம் ஒன்றே [111]இவ்வாறே, பிற நிகண்டுகளிலும் சதுரகராதியை நோக்க வடசொற் கள் குறைவே.

சில. சொற்களையும் அவற்றின் பொருள்களையும் உற்று நோக்குங்கால் பொருளைவிடச் சொல் எளிதாக இருப்பது போல் தோன்றுகிறது. அது என்பதற்கு அஃது என்றும், இது என்பதற்கு இஃது என்றும், உது என்பதற்கு உஃது என்றும் பொருள்கள் கூறப்படு கின்றன,[112] அது, இது, உது, என்பன அவர்காலத்தில் புரிந்துகொள்ள அரிதாயிருந்தனவோ என எண்ண இடந்தருகிறது. ஏனெனில் விளங் காததற்கே விளக்கம் வேண்டும், விளக்கப்பயன் படுத்தும் பொருளாகிய சொல் அதனைவிட எளிதாகஇருத்தல் வேண்டும். ஒரு சொல் லுக்கு ஏதேனும் ஒரு சொல்லால் பொருள் விளக்க வேண்டும் என்பது கருத்தாய் இருப்பின், அஃது, இஃது, உஃது, ஆகியவற்றைச் சொற்க ளாக்கி அது, இது, உது, ஆகியிவற்றை பொருளாக்கி யிருக்கலாம். எனினும் சொல்லும், பொருளும் ஒன்றன் மாற்றுவடிவமாகப் பிறி தொன்று பயன்படுத்தப்பட்டதாகக் கொள்வதே பொருந்தும்.

சில சொற்களின் பழைய வடிவங்களைச் சொற்பொருளால் உணர முடிகிறது. 'பண்டி'[113] என்னும் சொல்லுக்குரிய மூன்று பொருள்களுள் பண்டி என்பதும் ஒன்றாகும். பண்டி எனில் என்னவென விளங்கிக் கொள்ள வேறொரு சொற்பொருள் துணையாகிறது. அச்சு[114] என்பதற்குரிய பொருள்கள் அடையாளம், உயிர், பண்டியச்சு என்பன வாம். எனவே, தற்காலத்தில் அச்சை உயிராகக் கொண்ட வண்டி என்பதே அக்காலத்தில் பண்டி என வழங்கியதென்பது தெளிவாகிறது. அது, வகு, பகு போன்று வகரத்திற்குப் பகரம் போலியாக வழங்கிய சொல்லாகியிருக்கலாம்.

ஒரு சொல்லின் இரு வடிவங்களை அவ்வவற்றின் நிரன் முறை யில் நிறுத்தி ஒரே பொருள் கூறப்படுவனவும் உண்டு. அகங்கை[115] என் பதன் மரூஉ வடிவே அங்கை[116] என்பது. இரண்டையும் ஈரிடங்களில் நிறுத்தி உள்ளங்கை எனப் பொருள் தரப்பட்டிருப்பது அவற்றிற்குச் சான்றாகும். ஒரு சொல்லின் வலித்தல் விகார வடிவத்தை நிறுத்திப் பொருளாக அச்சொல்லின் இயல்பான வடிவம் கூறப்படுவதை, 'ஊற்றுக்கோல்- ஊன்றுகோல்,[117] எனப் பிற்சேர்க்கைப் பகுதியில் உள்ள சொற்பொருள்களால் தெரியலாம்.

உணர்ச்சிக் குறிப்புகளின் நுண்ணிய வேறுபாட்டினைச் சில சொற்பொருள் காட்டுகின்றன. அக்கோ, அச்சோ, அத்தோ, அந்தோ, அன்னோ ஆகிய வியப்பு, இரக்கக் குறிப்பு இடைச்சொற்கட்குப்[118] பொருள் தருங்கால் அக்கோ, அச்சோ ஆகியவற்றிற்கு அதிசயச் சொல்,

இரக்கச்சொல் என்றும், அத்தோ, அந்தோ, அன்னோ ஆகியவற்றுக்கு அதிசய விரக்கச்சொல், இரக்கச் சொல் என்றும் கூறுவதால் அதிசயச் சொல், இரக்கச்சொல், அதிசய இரக்கச்சொல், என மூன்று வகையாகப் பொருட்பாகு பாடு அமைந்துள்ளது.

திருக்குறள் சமயப் பொது நூல் என்னும் அழுத்தமான கருத்துடையவர் அடிகளார் என்பது திருக்குறட்டொடர்கள் சிலவற்றிற்குத் தரும் பொருள்களால் அறியக்கிடக்கின்றது. அருளாழி வேந்தன், அறவாழியந்தணன், எண்குணம் ஆகிய பெயர்கள் அருகனுக்கு உரியன வாகத் திவாகரம் கூறுகிறது.[119] பிங்கலமும்[120] சூடாமணியும்[121] அருகனுக்குரியவற்றுள் அருளாழிவேந்தன், எண்குணம் ஆகியவற்றைச் சுட்டுகின்றன, எண்குணம் சிவனுக்கும் உரியதெனப் பிங்கலம் சுட்டுகிறது,[122] இப்பெயர்கள் அரிக்கு உரியவென அந்நிகண்டுகள் கூற வில்லை. இப்பெயர்கள் இரண்டும் அறவாழி அந்தணன், எண்குணத் தான் என்னும் திருக்குறட்டொடர்கள்[123] அடியொற்றியவை போல உள்ளன. அடிகளார் பொருள் கூறுங்கால் அறவாழி வேந்தன் என்ப தற்குக் கடவுள் எனமட்டும் பொருள் தருகிறார்.[124] அத்தொடருக்கு முந்தியதாகிய அறவாழி அந்தணன்[125] என்பதற்கு அரன், அரி, அருகன் என முச் சமயப் பரம் பொருள்களைக் கூறுகிறார். எண்குணன் என்பதற்கு அருகன், கடவுள், சிவன் என்கிறார்.[126]

பொருளுணர எளிதாகச் சொற்களைத் தொகுக்க வேண்டும் என எண்ணிய அடிகள் சொற்கள் திரும்பத் திரும்ப வருவதைத் தடுத்துச் சொற் சுருக்கத்தைக் கைக்கொள்ள வேண்டும் என எண்ணியதாகத் தெரியவில்லை. அகக்காழ்-உள்வயிரம், அகங்காழ்-உள்வயிரம், அகங்கை-உள்ளங்கை என அடுத்தடுத்து நிறுத்திப் பொருள் தரப்பட்டுள்ளது.[127] பிறிதோர் இடத்தில் புறக்காழ்-புறவயிரம், புறங்காழ்-புறவயிரம் எனகுறிக்கப்பட்டுள்ளன.[128] இவற்றுள் காழ்-வயிரம் என ஒரு சொல்லுக்குப் பொருள் கூறினால் மட்டும் போதுமே. ஏனெனில் அகம், கை, புறம்[129] ஆகியவற்றிற்குத் தனித்தனியே பொருள் கூறப்பட்டிருக்கிருக்கின்றன. தனிச் சொல்லுக்குப் பொருள் கூற வேண்டும் என்னும் வரையறையின்றித் தொடர்ச் சொற்கட்குப் பொருள் கூறியது, ஒரே சொல் பலவிடத்தும் வருமாறு அமைந்ததற்குக் காரணம் எனலாம்.

அஃறிணைச் சொற்களில் னகரமும் மகரமும் மயங்காத சொற்கள் ஒன்பதெனத் தொல்காப்பியர் கூறுவன யாவை என்பதில் உரையாசிரியர் வேறுபடுகின்றனர்.[130] வழக்கிழந்தனவாகக் கருதப்படும் அவற்றுள் அழன், எகின், கலுழன், குயின், பயின், வலியன் போன்றனவற்றைக்[131] காட்டிப் பொருள் கூறுவது குறிப்பிடத்தக்கது.

மேற்கோள்கள்

1 தொல்காப்பியம், நூற்பா138 உரை
2 நன்னூல், நூற்பா, 442
3 தொன்னூல் விளக்கம், நூற்பா, 138, உரை.
4 இன்னாசி, சூ. 2, பக்., 159
5 **Israel, M. P., 589**
6 திவாகரம், பக்., 128
7 ....
8 ...., 143
9 ...., 128.
10 143
11 பிங்கலம், சிறப்புப்பாயிரம்
12 பின்னிணைப்பு - 5
13 சுந்தரசண்முகம், பக்., 175
14 ...., 204
15 அகராதி நிகண்டு, முகவுரை.
16 பின்னிணைப்பு - 6
17 தொன்னூல் விளக்கம், நூற்பா, 42 வரை.
18 சதுரகராதி - 1, பெயர், பக். 4, 10; 32, 75.
19 ...., 2.
20 ....,
21 ...., 3
22 ...., 3.
23 ...., 33, 39
24 தொன்னூல் விளக்கம், நூற்பா, 13 உரை
25 ....
26 ....,
27 சதுரகராதி -- 1, பெயர், பக்., 14.
28 ....56, 61, 79, 85, 157.
29 தொன்னூல் விளக்கம், நூற்பா, 10.
30 தொல்காப்பியம், நூற்பா, 61,
31 ...., 64., நன்னூல், நூற்பா, 105.
32 சதுரகராதி -- 1, பெயர், பக்., 88.
33 தொல்காப்பியம், நூற்பா 65'; நன்னூல் நூற்பா, 104.
34 ...., 63,..................., 103.
35 சதுரகராதி - 1, பெயர், பக்., 1.
36 ...., , ,
37 ...., 47.
38 ...., 9.

39 .... 1, 4, 6.
40 ...., 55, 56, 62.
41 ...., 18.
42 ...., 10.
43 ...., 82.
44 ...., பெயர், பிற்சேர்க்கை, பக்., 8.
45 ...., 45, பெயர், பிற்சேர்க்கை பக்,. 13
46 ...., பெயர், பிற்சேர்க்கை, பக்., 13.
47 தொல்காப்பியம், நூற்கள், 866, 867
48 இலக்கணத்தொகை, சொல், பக்., 343
49 நன்னூல், நூற்பா, 457 உரை
50 இலக்கணத்தொகை, சொல்., பக்., 344
51 தொன்னூல் விளக்கம், நூற்பா, 138 உரை
52 திவாகரம், பக்., 130
53 பிங்கலம், நூற்பா, 3270
54 சூடாமணி, பகரவெதுகை, நூற்பா, 19.
55 அகராதி, நிகண்டு கம்முதலிருப்பத்திருபெயர்
56 பின்னிணைப்பு - 7
57 சதுரகராதி 1 - பெயர், பக்., 41.
58 திவாகரம், பக்., 141
59 பிங்கலம், நூற்பா, 3085
60 சூடாமணி, ரகரவெதுகை, பக் 53
61 அகராதி நிகண்டு, அம்முதல் நாற்பத்தாறு பெயர்.
62 சதுரகராதி - 1, பெயர், பக், 55
63 Tamil lexicon, p, Liii
64 திவாகரம், பக்., 134, 135, 136, 139
65 ...., 120
66 பிங்கலம், நூற்பா, 3226, 3839
67 ...., 3059
68 சூடாமணி, பதினோராம் தொகுதி, பக்., 149
69 ...., 177
70 அகராதி நிகண்டு, உம்முதலொருபெயர், நூற்பா, 16
71 சதுரகராதி-1, பெயர், பக்., 125
72 ...., 101
73 ...., 77
74 ...., 3, 3, 3, 6, 10, 11, 11, 11, 12, 13
75 ...., 2, 2, 3, 3, 4, 4, 5, 7, 10, 11, 11, 13, 13
76 ...., 3
77 ...., 7
78 ...., 11

79 ...., 13
80 ...., 13
81 ...., 13
82 ...., 1, 3, 4, 4, 4, 4, 4, 5
83 ...., 3
84 ...., 8
85 ...., 12
86 தொல் காப்பியம். நூற்பா, 787
87 ....,795, 816
88 திவாகரம், பக்., 128
89 ...., 128, 129, 129, 130
90 பிங்கலம், நூற்பா, 3043
91 அகராதி நிகண்டு, அம்முதலொருபேர், நூற்பா, 35
92 ...., அம்முதலிருபேர், நூற்பா. 125
93 ...., அம்முதல் முப்பேர், நூற்பா, 140
94 ...., 138
95 ...., அம்முதல் நாற்பேர், நூற்பா, 78
96 திருக்குறள், 117, 638
97 சதுரகராதி — 1, பெயர், பக்., 2
98 ...., 9, 9, 11, 12
99 ...., 2, 9, 12, 12, 62, 176
100 ...., 30, 125
101 ...., 106
102 ...., 2, 21
103 ...., 5, 6
104 ...., 6. 7
105 ...., 11
106 ...., 109
107 ...., 109, 110, 111
108 ...., 169, 170, 171, 172, 173, 174, 175
109 திவாகரம், பக்., 128, 141
110 ...., 136
111 ...., 139
112 சதுரகராதி-1, பெயர், பக்., 5, பிற்சேர்க்கை பக்., 4, 5
113 ...., 107
114 ...., 3
115 ...., 1
116 ...., 2
117 ...., 2
118 ...., 2, 2, 5, 6, 4

119 திவாகரம், பக்., 3
120 பிங்கலம், நூற்பா, 19
121 சூடாமணி, பக்., 7
122 பிங்கலம், நூற்பா, 93
123 திருக்குறள், 8, 9
124 சதுரகராதி-1, பெயர், பக்., 103
125 ...., 103
126 ...., 34
127 1
128 ...., 133
129 ...., 1, 63, 133
130 இன்னாசி, சூ. 1, பக்., 05
131 சதுரகராதி-1, பெயர், பக், 47, 58, 109, 164


Y
12500
12000
11500
11000
10500
10000
9500
9000
8500
8000
7500
7000
6500
6000
5500
5000
4500
4000
3500
3000
2500
2000
1500
1000
500
0

இயல் 5

பொருளகராதி

1. பெயரகராதியும் பொருளகராதியும்

தொல் காப்பிய உரியியலில் ஒரு பொருளைத் தரும் பல சொற்கள் ஒரே நூற்பாவில் பலவிடங்களில் அமைந்துகிடக்கின்றன. குரு, கெழு, ஆகிய இரு சொற்களும் நிறன் என்னும் பொருளை உணர்த்துவன.[1] மழவு, குழவு, ஆகிய இரு சொற்களும் இளமை என்னும் பொருளை உணர்த்துவன.[2] இவ்வாறே, இன்னாமை, சுழற்சி, சிறத்தல், விரைவு, நடுக்கம், விடல், விளையாட்டு, நசை, பெட்பு, நோய், வறுமை, பரத்தல், வெகுளி, வழுத்து ஆகிய பொருள்களுக்கு[3] இரண்டிரண்டு சொற்கள் உள்ளன. தனித்தனி நூற்பாக்களில் துவன்று என்னும் சொல்லும் கமம் என்னும் சொல்லும் நிறைவு என்னும் பொருளைத் தருமெனக் கூறப்படுகின்றன.[4]

மூன்று சொற்கள் ஒரே பொருளை உணர்த்துவனவாய் அமையும் நூற்பாக்கள் சில உண்டு. நொசிவு, நுழைவு, நுணங்கு, ஆகிய மூன்றும் நன்மை என்னும் பொருளை உணர்த்துவன.[5] இவ்வாறே, மிகுதி, பெருமை, செறிவு, அச்சம், ஆகிய பொருள்களை மும்மூன்று சொற்கள் உணர்த்துகின்றன.[6] ஒரு நூற்பாவில் நேர்பு என்னும் பொருளை உணர்த்தும் வார்தல், போகல், ஒழுகல் ஆகிய மூன்று சொற்கள் நீட்டம் என்னும் பொருளையும் உணர்த்தல்[7] கூறப்பட்டுள்ளது.

ஓய்தல், ஆய்தல், நிழத்தல், சாய் ஆகிய நான்கு சொற்களும் நுணுக்கம் என்னும் பொருளையும், கம்பலை, சும்மை, கலி, அழுங்கல் ஆகிய நான்கும் அரவம் என்னும் பொருளையும், துவைத்தல், சிலைத்தல், இயம்பல், இரங்கல் ஆகிய நான்கும் இசைப் பொருளையும் உணர்த்துவனவாகக் காட்டப்படுகின்றன.[8] இவ்வகையாகப் பல சொற்கள் ஒரு பொருளை உணர்த்துவனவாக 29 நூற்பாக்களில் 29 பொருள்கள் கூறப்படுகின்றன.[9]

சொற்பொருள் விளக்கத்தைப் பல்வேறு பெயர்த் தொகுதிகளாகப் பகுத்த நிகண்டுகள் உரியியலின் இவ்வமைப்பை ஒட்டி ஒரு பொருளைக் குறிக்கும் பல் பெயர்களைத் தொகுத்து அவற்றை வகைப்படுத்தி நூலின் பெரும்பான்மைத் தொகுதிகளாக அமைத்துக் கொண்டன. அத்தகைய தொகுதிகள் ஒரு பொருள் பல்பெயர்த் தொகுதி எனப் பொதுப்பட அழைக்கப் பெறும் தகுதியவாயின. திவாகரம், தன் பன்னிரண்டு தொகுதிகளில், முதற்பத்துத் தொகுதிகளை ஒரு பொருள் பல்பெயர்க்காகவே ஒதுக்கியுள்ளது.

முதலாவதாய தெய்வப் பெயர்த்தொகுதியுள் பல்சமயத் தெய்வங்கட்குரிய பல் பெயர்கள் கூறப்படுகின்றன. மானிடர் நீங்கிய தேவர்கள், அசுரர்கள், பேய் போன்றோர் பெயர்களும் உள்ளன. ஐம்பெரும் பூதங்களின் நுண்பிரிவுகளும் அவற்றின் பெயர்களும் இடம் பெறுகின்றன. இரண்டாவதாய மக்கட் பெயர்த் தொகுதியுள், மக்கட்டலைவர்கள், கலைவலார், ஐந்திணைமக்கள், உடலின் உறுப்புக்கள் ஆகியவற்றின் பெயர்கள் இடம் பெறுகின்றன. விலங்கின் பெயர்த் தொகுதியுள் விலங்குகள், நீர்வாழ்வன, பறவைகள் முதலியவற்றின் பெயர்களும், மரப்பெயர்த்தொகுதியுள் மரஞ்செடி கொடிகளின் பெயர்களும் இடப் பெயர்த் தொகுதியுள், தேவுலகம், பூவுலகம் முதலியவற்றின் உட்பிரிவுகளின் பெயர்களும், பல்பொருட் பெயர்த் தொகுதியுள் பல்வகைஉலோகங்கள், மணிகள், மணப்பொருள்கள், உணவுகள் முதலியவற்றின் பெயர்களும், செயற்கை வடிவப் பெயர்த் தொகுதியில் படைக்கருவிகள், அணிவகைகள், பல்வகைக் கருவிகள், ஆடைவகைகள் முதலியவற்றின் பெயர்களும், பண்பு பற்றிய பெயர்த் தொகுதியுள் பல்வடிவு, வண்ணம், பெருமை, சிறுமை, வேட்கை, ஊக்கம், எண்ணம், அறிவு, நிறை, எண், ஆகியவற்றின் பெயர்களும், ஒலி பற்றிய பெயர்த் தொகுதியுள் சொற்கள், நரம்பகுதிகள், இசைக் குறிப்புக்கள் ஆகியவற்றின் பெயர்களும் கூறப்படுகின்றன.

இப்பெயர்களோடு ஓரளவு தொடர்புடையனவே அடுத்த தொகுதியில் இடம்பெறினும் பதினோராம் தொகுதிக்கு இன்னவகைப் பெயர்த் தொகுதி எனப் பெயரிடாமையால் மற்றவற்றினின்று அது வேறுபடுகிறது. மேலும் அதன் தலைப்பில் ஒரு சொல் என்பது முன்னரமைந்து, ஒரு சொற் பல்பொருட் பெயர்த்தொகுதி எனப் பெயரிடப் பட்டிருப்பதும் அவற்றுக்கிடையே உள்ள வேறுபாட்டைத் தெளிவு படுத்தும். முன்னைப் பத்துத் தொகுதிகளிலும் பல்வேறு வகைப் பொருள்கள் அடங்கியிருப்பினும், அவை ஒவ்வொன்றுக்குமுரிய பல் வகைச்சொற்களே தொகுத்துத் தரப்படுகின்றன. இரண்டாம் தொகுதியின் இறுதியில் சிவன் என்பதற்குரிய பெயர்கள், மூன்றாம் தொகுதியின் இறுதியில் கோற்புழுவிற்குரிய பெயர்கள், நான்காம் தொகுதியின்

இறுதியில் வாசிகை என்பதற்குரிய பெயர்கள் ஆகியன கூறப்படுகின்றன. இவ்வாறே பத்துத் தொகுதிகளிலும் ஒன்றினைக் குறிக்கும் பல பொருள்களையும் ஒருங்கிணைத்துக் கூற, பதினோராம் தொகுதி அனைத்துத் தொகுதிகட்கும் தொடர்புடைய ஒரு சொல் சுட்டும் பல் பொருள்களை விரித்துக் கூறுகின்றது. பதினோராம் தொகுதியின் சொல் ஒவ்வொன்றையும் பல பொருள்களின் தோற்றுவாயாகவும், முதற்பத்துத் தொகுதிகளின் சொல் ஒவ்வொன்றையும் பல பெயர்களின் கொள்கலனாகவும் கொள்ளலாம். சான்றாகத் திவாகரம் பதினோராம் தொகுதியில் உள்ள இறையென்னுஞ் சொல்[10] (1) கடன், (2) இல்லிறைப்பு, (3) சிறுமை, (4) தங்கல், (5) உயர்ந்தோர் ஆகிய ஐந்து பொருள்களைத் தோற்றுவிப்பதாகவும், இரண்டாம் தொகுதியில் உள்ள (1) அண்ணல் (2) குரிசில், (3) ஏந்தல், (4) தோன்றல், (5) செம்மல் ஆகிய பொருள்களின் கொள்கலனாகப் பெருமையிற் சிறந்தோன்[11] என்பதையும் கொள்ளலாம். இதனைப் பின்வரும் வரைபடத்தால் தெளியலாம்.

	பதினோராம் தொகுதி	இரண்டாம் தொகுதி	
சொல் (இறை)	1 பொருள்	1 பொருள்	சொல் (பெருமையிற் சிறந்தோன்)
	2 பொருள்	2 பொருள்	
	3 பொருள்	3 பொருள்	
	4 பொருள்	4 பொருள்	
	5 பொருள்	5 பொருள்	

பின்னர்த் தோன்றிய நிகண்டுகளும் இம்முறையைப் பின்பற்றத் தொடங்கின. பத்து வகைகளை மட்டும் கொண்ட பிங்கலம் திவாகரத்தின் முதற் பத்துத் தொகுதியமைப்பு முறையினை ஒன்பதனுள் அடக்கித் திவாகரத்தின் பதினோராம் தொகுதியினைப் பத்தாவதாக ஆக்கிக் கொண்டது. சூடாமணி, திவாகரம் போலவே தொகுதிப்பாகுபாடுகளை அமைத்துக் கொண்டது. நிகண்டுகளின் சில தொகுதிகள் பெயரளவில் வேறுபட்டாலும் ஒரு சொல்லுக்குரிய பல பொருள்கள் ஒரு பொருளைச் சுட்டும் பல சொற்கள் ஆகிய இரண்டு தன்மை கொண்டனவாகவும் அவ்விருதன்மைக்கும் உரிய தொகுதி வரையறை கொண்டனவாகவும், அமைந்துள்ளன. அவ்வரையறைக்கு ஏற்ப முறையே ஒருசொல் பல்பொருள் பெயர்த்தொகுதி, ஒருபொருள் பல்பெயர்த்தொகுதி என அழைக்கப்பட்டன.

சொல் அதற்கான பொருள் எனக் கூறப்பட்டிருப்பின் தற்கால அகராதி முறைக்கு முற்றும் பொருந்தும். அவ்வாறின்றிப் பழங் காலத்தில் பொருளிற்குக்கூடப் பெயர் எனச் சுட்டப்பட்டதற்குக் காரணம் சொற்களும் பொருள்களும் பெயர்களாகப் பெரும்பான்மை அமைந்ததேயாகும். ஒருசொல் பல்பொருள் பெயர்த் தொகுதியில்

சொல்லே முதன்மை பெறுகிறது. ஒருபொருள் பல்பெயர்த் தொகுதியில் பொருளே முதன்மை பெறுகிறது. முன்னதில் கூறப்படும் சொல்லும்,பெயராகக் கருதப்படுமாயின் பெயர் முதன்மை, பொருள் முதன்மை என இருவகையாகக் கொள்ளலாம். பெயர் முதலாக அமைத்து அதுதரும் பல பொருள்கள் கொண்டதனைப் பெயரகராதி எனப் பகுத்தார் அடிகளார். பொருள் முதலாக அமைத்து அதனைச் சுட்டும் பெயர்கள் பலவாக வருவதனைப் பொருளகராதி என்னும் தலைப்பில் தந்தார்.

அடிகளது பெயரகராதியில் பெயர்கள் அடிமரமாகவும் பொருள் கள் கிளைகளாகவும் அமையப் பொருளகராதியில் பொருளாகிய பெயர் கோபுரக்கலசமாகவும், அதனைச் சுட்டும் பொருள்கள் கோபுரத்தைத் தாங்கும் தூண்களாகவும் உள்ளன. சான்றாகப் பெயரகராதியில் உள்ள அத்திரி[12] என்னும் பெயராகிய அடிமரத்தினின்று தோன்றிய எட்டுக் கிளைகளாக (1) உலைத்துருத்தி, (2) ஒட்டகம், (3) ஓரிருடி, (4)கணை, (5) கழுதை, (6) குதிரை, (7) மலை, (8) விண் ஆகிய பொருள்களையும், பொருளகராதியில் உள்ள (1) ஆச்சுவத்தம், (2)கணவம், (3)குஞ்சராசனம், (4)சுவலை, (5)திருமரம், (6)பனை, (7) பிப்பலம், (8) போதி ஆகிய பெயர்களாகிய தூண்களனைத்தும் சேர்ந்து தாங்குகின்ற கலசமாக அரசமரம்[13] என்னும் பொருளையும் கொள்ளலாம். இவற்றைப் பின்வரும் வரைகோடு விளக்கும்.



2. பொருளகராதி

பொருளகராதியின் காப்புப் பாடல், "நூற்படி தெருளகத் தொரு பொருட் செப்பும் பல்பெயர்ப் பொருளகராதியாம் புகலுவாம்'' எனக் கூறுகிறது. நூற்படி எனில் முன்னை நிகண்டு நூல்களின் வழி

என்பதும், ஒரு பொருட் செப்பும் பல் பெயர்ப் பொருளகராதியெனில், ஒரு பொருளைக் குறிக்கின்ற பல பெயர்கள் பொருளகராதியில் இடம் பெறுகின்றன வென்பதும் விளங்கும். ஆயின் முன்னை நிகண்டுகளைப் போல பல தொகுதிகளாகக் கூறப்படும் பொருள்களுக்கு ஏற்ப வகைகளாகப் பாகுபாடு செய்யாமல் பொருளகராதி என்னும் பொதுத் தலைப்பில் அடக்கினார். மேலும் பெயர் வகை எதுவாயினும் அகர நிரன்முறை ஒன்றனையே மனத்துட் கொண்டு பொருள்களையும் அவற்றிற்குரிய பெயர்களையும் தொகுத்துள்ளார்.

அகராதியின் பொருளகராதி முதற்சொல் அகத்தியன் என்பதாம். இது திவாகரத்தில் இடம் பெறவில்லை. பிங்கலத்தில் மூன்றாம் வகையாகிய ஐயர் வகையில் காணப்படுகிறது.[14] இரண்டாம் சொல்லாகிய அகத்தி திவாகரத்தின் நான்காம் தொகுதியாகிய மரப்பெயர்த் தொகுதியில் காணப்படுகிறது.[15] மூன்றாம் சொல் அகப்பை,திவாகரம் பிங்கலம் இரண்டிலும் இல்லையாயினும் சூடாமணி ஏழாவதாகிய செயற்கை வடிவப் பெயர்த் தொகுதியில் அமைந்துள்ளது.[16] நான்காவது சொல்லாகிய அகலம் திவாகரத்தின் எட்டாவது தொகுதியாகிய பண்பு பற்றிய பெயர்த்தொகுதியில் அடங்கியுள்ளது.[17] எனவே, நிகண்டுகளின் ஒருபொருள் பல்பெயர்த்தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டு அகர நிரன்முறையில் அமைந்ததே பொருளகராதி எனலாம்.

திவாகரத்தின் முதற்பத்துத் தொகுதிகளிலும் முறையே 159 + 232 + 21 + 256 + 231 + 122 + 302 + 239 + 249 + 157 ஆக 2168 சொற்கள் இடம் பெறுகின்றன. அகராதியில் உயிர் முதலாகக் கொண்டவை 431, ககரவருக்க முதலாகக் கொண்டவை 401, சகர வருக்க முதல் 207, ஞகரவருக்க முதல் 2, தகரவருக்க முதல் 200, நகர வருக்க முதல் 132, பகர வருக்க முதல் 285, மகர வருக்க முதல் 245, யகர வருக்க முதல் 39, வகர வருக்க முதல் 226, ஆக மொத்தம் 2168 சொற்கள் இடம் பெறுகின்றன.[18] எண்ணிக்கையில் ஏறத்தாழ திவாகரத்தின் அளவே சதுரகராதியிலும் உள்ளது. எனினும் திவாகரத்தின் தொகுதிகளுள் அடங்கிய சொற்கள் பெரும்பாலும் இடம் பெறுகின்றன எனக் கொள்ளற்கு இடமில்லை.

ஆகாரத்தை முதலாகவுடைய சொற்கள் 48 அகராதியில் இடம் பெறுகின்றன. திவாகரத்தின் முதற்பத்துத் தொகுதிகளிலும் ஆகாரம் முதற் சொற்களைத் தொகுத்தால் 42 இடம் பெறும். இரண்டிற்கும் பொதுவான சொற்கள் ஆகாயம், ஆக்கம், ஆசிரியப்பா, ஆச்சா-மரம், ஆடு, ஆட்டுக்குட்டி, ஆண்குறி, ஆண்மகன், ஆத்தி, ஆபரணப் பொது, ஆமணக்கு, ஆமை, ஆயிலியநாள், ஆயுதப்பொது, ஆயுத வெழுத்து, ஆராய்தல், ஆலமரம், ஆலங்கட்டி, ஆழம், ஆறு'

ஆற்றிடைக்குறை, ஆகிய 21 சொற்களேயாகும். ஆகாயம் முதலிய 27 சொற்கள் திவாகரத்தில் இடம் பெற்றில. திவாகரத்தில் உள்ள சொற்களில் 21 சொற்கள் சதுரகராதியில் இல்லை.[19] திவாகரத்தில் உள்ளவற்றோடு மேலும் 27 சொற்களை அடிகளார் பிற நிகண்டுகளினின்று பெற்றிருத்தல் கூடும்.

பிங்கலத்தில் முதல் ஒன்பது தொகுதிகளிலும் ஆகார முதற் சொற்கள் 65 இடம் பெறுகின்றன. திவாகரத்தில் காணப்படாத ஆடாதோடை, ஆதொண்டை, ஆந்தை, ஆரன்மீன் போன்ற சொற்கள் பிங்கலத்தில் காணப்படுகின்றன.[20] எனவே சதுரகராதிக்கும் பிங்கலத்திற்கும் பொதுவான சொற்கள் 25 ஆகும். சூடாமணியின் முதற் பத்துத் தொகுதிகளிலும் ஆகார முதலா 36 சொற்களே காணப்படுகின்றன. திவாகரம், பிங்கலம் இரண்டிலும் காணப்படாத சொல்லாக ஆசை மட்டும் காணப்படுகிறது.[21] சதுரகராதிக்கும், சூடாமணிக்கும் பொதுவான சொற்களாக ஆகாயம், ஆக்கம், ஆசை, ஆச்சாமரம், ஆடல், ஆடாதோடை, ஆடு, ஆட்டுக்குட்டி, ஆண்குறி, ஆத்தி, ஆந்தை ஆபரணம், ஆமணக்கு, ஆமை, ஆயிலியம், ஆயுதம், ஆரன்மீன், ஆலங்கட்டி, ஆலமரம், ஆழம் ஆகிய 20 காணப்படுகின்றன. இம்மூன்று நிகண்டுகளிலும் இடம்பெறாத ஆங்காரம், ஆசிரியவிருத்தம், ஆசைப்பெருக்கம், ஆணி, ஆணையிடல், ஆதி, ஆபரணக்கடைப்புணர்வு, ஆபரணத்தின் றாங்கனி, ஆபரணம் முதலியவைக்கும் வீடு, ஆபரணம் முதலியவைக்குஞ் செப்பு, ஆம்பற்பொது, ஆயம், ஆய்தவுறை, ஆராதனை, ஆலவட்டம், ஆலை, ஆலோசனை, ஆவணி, ஆனி ஆகிய சொற்கள் சதுரகராதியிற் புதிதாக இடம்பெறுகின்றன.[22] எனவே, நிகண்டுகளை அடிப்படையாகக் கொண்டு பொருளகராதிச் சொற்கள் தொகுக்கப்பட்டனவன்றி, அவற்றை முற்றிலும் பின்பற்றவில்லை. நிகண்டு சொற்கள் பலவற்றை நீக்கிவிட்டுப் புதுச் சொற்கள் பலவற்றைச் சேர்த்துக் கொண்டு பொருளகராதி அமைக்கப்பட்டுள்ளது.

எல்லாவற்றிலும் காணப்படும் பொருளின் பெயர்களிற் கூடச் சதுரகராதி நிகண்டுகளை முழுதும் பின்பற்றவில்லை. ஆகாயம் என்னுஞ் சொல்லை நிகண்டுகள் சதுரகராதி ஆகியன ஆளுகின்றன.[23] திவாகரம் அதற்குப் பொருளாக அந்தரம், ஆசினி, அம்பரம், மங்குல், அண்டம், வானம், ககனம், மீ, வெளி, விண், நாகம், மாகம், விசும்பு, தலை, உம்பர், இடம், குடில், ஆகிய 17 பெயர்களைக் கூறுகிறது.[24] பிங்கலம், திவாகரம் கூறியவற்றுள் தலை என்பதனை விடுத்து வேலி, கோ, மண்டிலம், கம், புட்கரம், வான், குண்டலம், உலகம், குழை, அகலம், ஆகியவற்றைச் சேர்த்து 27 பெயர்களைக் குறிப்பிடுகிறது.[25] சூடாமணி அப்பெயர்களில் உம்பர், இடம், வான், குழை, அகலம் ஆகியவற்றை விடுத்து, குடில் என்பதைக் குடிலமாக்கியது. புதிதாகக்

காயம், அநந்தம், நபம், விண்டலம் ஆகியவற்றைச் சேர்த்து 23 பெயர்களைக் கூறுகிறது.[26] சதுரகராதி, திவாகரம் பிங்கலம் கூறியனவும் சூடாமணியால் விடப்பட்டனவுமான விண், நாகம், உம்பர், இடம் ஆகியவற்றைச் சேர்த்துள்ளது. பிங்கலமும் சூடாமணியும் கூறிய கோ, குண்டலம் ஆசியவற்றையும், பிங்கலம் மட்டும் கூறிய மண்டிலம், குழை, அகலம் என்பனவற்றையும், திவாகரம் மட்டும் கூறிய தலை என்பதையும் விடுத்தது. சூடாமணியில் உள்ளவற்றோடு புதிததாகச் சேண், மாதிரம், மேல் ஆகியவற்றைச் சேர்த்து 29 பெயர்களைக் கூறுகிறது.[27]

பெயரகராதியில் வெவ்வேறிடங்களில் அகர நிரற்படி வரும் பெயர்கள் பொருளகராதியில் பொருளுக்குரிய பெயர்களாகச் சேர்த்து இடம் பெறுகின்றன. பெயரகராதியில் குகர முதற் சொற்களில் கும்பயோனி என்னும் பெயருக்கு அகத்தியன் எனப் பொருள் தரப்படுகிறது.[28] குறுமுனி என்னும் பெயருக்கு அகத்தியன் எனப் பொருள் தரப்படுகிறது.[29] முகர முதற் சொற்களில் முத்தமிழுரியோன் என்னும் பெயருக்குரிய பொருள்களுள் ஒன்றாக அகத்தியன் கூறப்படுகிறது.[30] இச்சொற்களே பொருளகராதியில் ஒரே இடத்தில் அகத்தியன் என்னும் பொருளுக்குரிய பெயர்களாக 'அகத்தியன், கும்பயோனி, குறுமுனி, முத்தமிழுரியோன்' எனக் குறிக்கப்படுகின்றன,[31] இதனைப் பின்வரும் வரை படமாகக் காட்டலாம்.

பெயரகராதி	
கும்பயோனி (பெயர்)	1 அகத்தியன்
குறுமுனி (பெயர்)	2 அகத்தியன்
முத்தமிழ் உரியோன் (பெயர்)	3 அகத்தியன்

பொருளகராதி	
அகத்தியன்	1 கும்பயோனி
	2 குறுமுனி
	3 முத்தமிழுரியோன்

பெயரகராதியில் உள்ள பெரும்பான்மைப் பெயர்கட்குரிய பொருள்கள் இவ்வாறு இடம் பெறுகின்றனவன்றி அனைத்துப் பொருள்களும் இடம் பெற்றில. பொருளகராதியின் அகர முதற் சொற்களில் இறுதியாக இடம் பெறுவது அன்னம் என்னும் சொல்லாகும்.[32] அதற்குரிய பெயர்களாக அஞ்சம், உன்னம், எகினம், ஓதிமம், மராளம், வக்கிராங்கம், விசங்கம் ஆகியன இடம் பெறுகின்றன. இப்பெயர்களுள் பெயரகராதியில் எகினம், விசங்கம் ஆகியவை இடம் பெற்றில. பொருளகராதியில் வாகாரத்தை முதலாக்வுடைய சொற்களில் முதற் சொல் வாகனம் என்பதாம்.[33] அதற்குரிய பெயர்களாக எருது, கரி, சிவிகை

தேர், பரி, வண்டில் போன்றன குறிக்கப்படுகின்றன. இவற்றுள் எருது, கரி, சிவிகை, தேர், பரி போன்றன பெயரகராதியில் இடம் பெறினும்[34] அவற்றுக்குரிய பொருள்களுள் வாகனம் இடம் பெற்றிலது. வண்டில் பெயரகராதியில் இடம் பெற்றிலது.

அகராதியில் பிற பிரிவுகளாகிய பெயர், தொகை, தொடை, ஆகியவற்றில் அமைந்துகிடக்கும் சொற்கள் அவற்றிற்குரிய பொருள், பெயர்த்தன்மைகட்கேற்பப் பொருளகராதியில் உள்ளன. பா என்னும் ஓரெழுத்து மொழி பெயரகராதியில், 'பா-ஓரெழுத்து, வெண்பா முதலிய பா''[35] என்றும், தொகையகராதியில், 'பா, 4 வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா; மருட்பாவொன்று கூட்டியைந் தென்பாருமுளர்''[36] என்றும், தொடையகராதியில், ''பா-ஓரெழுத்து, பாவெள்ளைவல், வெண்பா, முதலிய பா''[37] என்றும் பொருள் பெறுகிறது. அச்சொல்லே பொருளகராதியில், பா-கவி, கவிதை, செய்யுள், தமிழ், தூக்கு, தொடர்பு, பாட்டு, யாப்பு, அன்றியுந் தனிப்பாவாய் வருவது முத்தகம், பல பாவாற்பொருண் முடியும்பாக்கள் குளகம், இருபத்தாறெழுத்தடி நான்குள பா சந்தப் பாட்டு, அதின்மிகும்பா தாண்டகம்''[33] எனப் பெறுகிறது.

பெயர், தொடை, அகராதிகளிற் கண்டனவற்றுள் கை, தீ, நா, பா, யூ, ஆகிய ஓரெழுத்தொரு மொழிகளே பொருளகராதியில் இடம் பெற்றுள்ளன.[39] பொருளகராதி என்பதற்குப் பொருத்தமாக அகர நிரல் முதலாக நிறுத்தப்பட்ட சொற்கள் சில பொருள் விளக்கங்களைப் போன்றே அமைந்து கிடக்கின்றன. ஆபரண முதலியவைக்கும் வீடு, இலக்கியப் பொருட்டொடர் நிலைச்செய்யுட் கூறுபாடு, எப்பொருட்கு மிறையோன், நடத்தலின் பெயரும் வகுப்பும், பார்ப்பாரிடையிற்கட்டு நாணற்கயற்றின் பெயர் ஆகியவை [40] அத்தகையன.

பொருட்கான பெயர்களில் ஒரு பொருட்கு ஒரு பெயராக உள்ளவை குறைவு. ஒரு பொருட்குப் பல பெயர்கள் கொண்டனவே மிகுதி சான்றாக அழகு என்னுஞ் சொல்லுக்கு எண்பதுக்கு மேற்பட்ட பெயர்களும், கடவுள் என்னும் பொருளுக்கு நூற்றுக்கு மேற்பட்ட பெயர்களும் கூறப்படுகின்றன.[41] சில சொற்களுக்குரிய பெயர்களை விளக்கிவிட்டு அப்பெயர்கள் பற்றியதை அவ்வவற்றிற்குரிய வரிகளில் காணுமாறு குறிப்புத் தரப்படுகிறது. பறவை வகுப்பு, என்பதற்குரிய பெயர்களாக அண்டங் காக்கை முதல் வானம்பாடி யீறாகப் பலபெயர் களைக் குறித்து இறுதியில் 'இப்பெயர் கடத்தம் வரியிற் காண்க'[42] எனக் கூறப்படுகிறது. சில பெயர்களைக் குறிக்குங்கால் பெயர்களைக் கூறிமுடித்து இறுதியில் அவற்றின் இனங்களும் கூறப்படுகின்றன. ''பனைஎடக்கம், கரும்புறம், தாளம், தாளி, நிலம், புறபதி புற்றாளி,

பெண்ணை, பொந்து, பொந்தை, இவற்றுளினம் பனையின் பெயர் போந்தை''[43] என்பது அதற்குச் சான்றாகும்.

சிலவற்றின் பெயர்களைக் கூறுங்கால், அவற்றுள் சிறந்தனவும் சுட்டப்படுகின்றன. அடிமை என்பதற்குரிய பெயர்களைக் கூறி இறுதியில் இவற்றுட் சிறந்த பெயர் சேடர், சேடியர் என்பதும், "ஆண் மகன் - ஆடூ, காளை, குமரன். பூமான், புருடன், மாந்தர். மாணவர், மைந்தர் அன்றியும் ஆண்மகனுக்குச் சிறந்த பெயர் நம்பி'' என்பதும் அவ்வகைத்தானவை.[44] இவ்வாறே ஈகை என்பதற்குரிய பெயர்களைக் கூறி இறுதியில், 'அன்றியும் வரையாக் கொடையின் பெயர் கொடைமடம்''[45] என ஈகையுட் சிறந்ததெனக் குறிப்பதும் அவ்வகைப் பட்டது.

சில சொற்களின் பெயர்களைக் கூறி விட்டு அப்பெயர்களில் விரித்துரைக்கப்படும் முறையும் காணப்படுகிறது. மாதரிடையணி என்பதற்குரிய பெயர்களாக அரைப்பட்டிகை, சரமணிக்கோவை ஆகிய இரண்டும் கூறப்படுகின்றன.[46] "இவற்றின் பெயர் தத்தம் வரியிற் காண்க'' என்னுங் குறிப்புக் காட்டப்படுகிறது. அக்குறிப்புகளினின்று அரைப்பட்டிகையின் பெயர்கள் அத்து, கலை, மருவு எனவும், சரமணிக் கோவையின் பெயர்கள் கலாபம், தோரை எனவும் தெரியவருகின்றன.[47] சரமணிக் கோவையின் பிறவகைகள் ஆங்குக் குறிப்பிடப்படவில்லை. அவ்வகையினை மாதரிடையணியின் பெயர்களுள் ஒன்றாகச் சரமணிக் கோவை குறிப்பிடப்பட்டபின் அதனையொட்டியே, "எழு கோவை மணியணி மேகலை, எட்டுக்கோவை காஞ்சி, பதினாறு கோவை கலாபம், பதினெண் கோவை தாமம், பருமம், முப்பத்திரண்டு கோவை விரிசிகை''[48] என விளக்கப்படுகிறது.

சில சொற்களின் பெயர்களைக் குறிப்பிடுங்கால் முதற்கண் பொதுப்படப் பெயர்கள் சுட்டப்பட்டுப் பின்னர், ஆக்கம், இடம், தொழிற் சிறப்புக் காரணமாக உள்ள பெயர்களை ஒருங்கிணைத்துக் கூறுவதைக் காண முடிகிறது. மாலை என்பதற்கு அணி, அணியல், அலங்கல் போன்ற பெயர்கள் கூறப்படுகின்றன.[49] பின்னர் நுதலணி மாலையின் பெயர் இலம்பகம், சூட்டு எனவும், முடிமாலையின் பெயர் கரோடி, கரோடிகை, எனவும் கூறப்படுவனவற்றை மாலை அணியப்படும் இடத்தாற் பெயர் பெறும் வகையிலும், தொடுத்த மாலையின் பெயர் சிகழிகை, தொடையல், மாலை, வாசிகை எனவும், பின்னிய மாலையின் பெயர் பிணை, பிணையல் எனவும், கோத்த மாலையின் பெயர் கோவை, சிகழிகை, படலை, வாசிகை எனவும் கூறப்படுவனவற்றை ஆக்கப்படும் முறையாற் பெயர் பெறும் வகையிலும், பகைவர் நிரையோட்டுஞ் சேவர்கர்க்கு வெட்சி மாலை, பகைவரோட்டின தந் நிரை மீட்டவர்க்குக் கரந்தைமாலை, பகைவர் மேற்செல்லுஞ்

சேவர்க்கு வஞ்சிமாலை, திரண்டுவரும் பகைவர் முன்னெதிருன்றுஞ் சேவகர்க்குக் காஞ்சி மாலை, தன்னரண் காப்பார்க்கு நொச்சி மாலை, பகைவரரண் பிடிப்பார்க்கு உழிஞை மாலை, போர் வென்றோர்க்குத் தும்பை மாலை எனவும் கூறப்படுவனவற்றைச் செய்தொழில் முறை யாற் பெயர் பெறும் வகையிலும் அடக்கலாம். இயலிறுதியில் அமைந் துள்ள முதல் வரைகோட்டுப் படம் இப்பகுப்பினைத் தெளிவுறக் காட்டும்.

3. சிறப்புக் குறிப்புக்கள்

பெயரகராதியில் உள்ள அளவினுக்குப் பொருள்கராதியில் வட சொற்கள் மிகுதியாக இல்லையெனினும் தமிழில் நிகண்டுகள் வழங்கிய சொற்களுக்கு இணையான வட சொல்லை நிறுத்திப் பொருந்தும் பெயர்களைக் கூற அடிகளார் முனைந்திருக்கிறார். திவாகரம் அரசன் என்னும் பொருளுக்குரிய பெயர்களாகப் புரவலன், கொற்றவன், பெரு மான், காவலன், அரையன், ஏந்தல், கோ, குரிசில், தலைவன், மன்னவன், வேந்தன், முதல்வன், நிருபன், பூபாலன், நரபதி, பார்த் திவன், இறைவன், அண்ணல் ஆகிய 18 கூறுகிறது.[50] பிங்கலம் அர சன் என அச்சொல்லை நிறுத்தி, அதற்கான பெயர்களிற்சில கூட்டியும் குறைத்தும் 17 பெயர்களைக் கூறச்,[51] சூடாமணி 18 பெயர்களைக் கூறி அவற்றுக்கான பொருளாக அரசன் என்னும் சொல்லையே ஆளு கிறது.[52] ஆனால் அகராதி, அரசன் என்றோ அரசர் என்றோ சொல்லை நிறுத்தாமல் இராசா எனப் பொருளை நிறுத்தி அதற்கான பெயர் களாக 36 கூறி இவற்றுள் மற்றொருவரைப் பணியாது உலகாள்வோன் பெயர்கள் இவையென்றும், குறுநில மன்னர்கள் பெயர்கள் இறை யென்றும் கூறுகிறது.[53] இராசா என்னும் வடசொல்லைப் பொருளாக் கியது போல் கோவில், மன்னன்றேவியில்லம் என்றாற் போல் நிகண்டு கள் சுட்டிய சொற்களை[54] வட சொற்களாக்கி இராசமனை, இராச தேவிமனை என நிறுத்திப் பெயர்களைக் கூறுகிறது.[55]

அடிகளுடைய சமயப் பொது நோக்குச் சில சொற்களால் அறியக் கிடக்கின்றது. திவாகரம் கடவுளர் பொதுப் பெயர்களாகப் பண்ணவர், பகவர், தீர்த்தர், பட்டாரகர், புங்கவர் ஆகியவற்றைக் குறிக்கிறது.[56] பிங்கலமும் அவற்றையே கூறுகிறது.[57] சூடாமணி, கடவுளர் பொதுப்பெயர் கூறவில்லை. அகராதி, கடவுளுக்குரிய பெயர் களாக அசலன், அச்சுதன், அடிகள், அதிகுணன், அதுலன், அத்தன், அபயன், அமலன், அருட்கொடையோன், அருளாழிவேந்தன், அரூபி, அறக்கொடியோன், அறவாழிமன்னர், அறுகுணன், அனகன், அனந்தன், அனந்தஞானி, அனந்தலோசன், அனுதி, ஆதி, இறையோன், ஈசன், ஈச்சுரன், உளவழிக்கடந்தோன், உள்ளத்துறைவோன், எண்குணன், ஏகன், ஐ, ஏகதேவன் ஐம்புலத்தடங்கான், கருணாலயன், கருத்தா,

குணநிதி, குணபத்திரன், சகநாதன், சகலவியாபி, சதானந்தன், சயம்பு, சருவேச்சுரன், சச்சிதானந்தன், சரமி, சீபதி, சோதி, தற்பரன், தேவன், தேவாதி, நாயகன், நிதானன், நித்தன், நிமலன், நிரஞ்சனன், நிரந்தரன், நிரம்பரன், நிராமயன், நிருநாமன், நிருமலன், நிருபன், நீதிபரன், பகவன், பரஞ்சோதி, பரம்பிரமம், பரமம், பரமேச்சுரன், பரம், பராபரம், பிதா, பிரமம், பிரான், பிறப்பிறப்பில்லான், புங்கவன், பூரணன், மயேச்சுரன், மாசேனன், முக்குற்றங்கடிந்தோன், முதலோன், முத்தொழிற்பகவன், முழுதொருங்குணர்ந்தேயன், முன்னூற்கேள்வன், முன்னோன், மூவுலகாதாரன், மூவுலகாளி, மூவுலகேந்தி விதித்தோன், விமலன், வேதன், வேதா, வேதாந்தன், வேதார்த்தன் எனவும்,[58] பிற்சேர்க்கையில் அகண்டாகண்டன், அகநிலை, அகாரி அச்சயன், அந்தாரி, ஆதிபுங்கவன், ஈறிலி, தனிக்கோலான், தாபரன், பகாப்பொருள், பரதுக்கதுக்கன், வினைவிநாசன், எனவும்[59] நூறு பெயர்களைக் கூறுகின்றது.

இப்பெயர்களிற் சிலவற்றைத் தனிச் சமயக் கடவுளரைக் குறிக்கும் பெயர் களாக நிகண்டுகள் காட்டுகின்றன. சான்றாக முக்குற்றங் கடிந்தோன் என்பதனைப் புத்தனுக்குரியவற்றுள் ஒன்றாகத் திவாகரம் காட்டுகிறது.[60] அருகனுக்குரியவற்றுள் ஒன்றாக அருளாழி வேந்தன் என்பதனைக் காட்டுகிறது.[61] அரூபி என்பதைச் சிவனுக்குரியவற்றுள் ஒன்றாகப் பிங்கலம் காட்டுகிறது.[62] ஆதி என்பதைத் திருமாலுக்குரிய வற்றுள் ஒன்றாகக் காட்டுகிறது.[63] சூடாமணி, பிதா என்பதைப் பிரமனுக்குரியவற்றுள் ஒன்றாகக் காட்டுகிறது.[64] இப்பெயர்களெல்லாம் அவ்வக்கடவுளருக்கு மட்டும் உரியனவல்ல, அனைத்துச் சமயக் கடவுளருக்கும் ஏற்புடையனவே. எனவே, இத்தகு பெயர்களை அவ்வக் கடவுளருடைய பெயர்களுள் ஒன்றாகக் குறிக்காது அடிகளார் விடுத்தார். அவ்வக்கடவுளருக்குரிய பெயர்களைக் குறிக்கும் பொழுது, நிகண்டுகள் சுட்டியவற்றுள், ஒவ்வொரு சமயக்கடவுட்கும் காரணப் பெயர்களாக அமைவனவற்றை மட்டும் குறித்தார். அனைத்துக் கடவுளர்க்கும் பொதுவானவற்றைத் தனியே தொகுத்து, இலக்கியங்களிலும் வழக்கிலும் சமய வேறுபாடின்றிப் பொதுவாகக் கடவுளைக் குறிக்கும் பெயர்களையும் சேர்த்துத் தந்து கடவுள் என்னும் பொருளை அனைத்துச் சமயத்தாருக்கும் பொதுமையாக்கினார்.

சில பொருள்களின் பெயர்களைச் சுட்டும் பொழுது, அப்பொருட்டொடர்பான பலபகுதிகள் உறுப்புக்களின் பெயர்கள் முதலியன சுட்டப்படுகின்றன. யானை என்பதற்கான பெயர்களைச் சொல்லிமுடித்ததும், யானைக்கூட்டம், யானைக் கூட்டத்துத்தலை யானை, யானை யுறுப்பினுட்டுதிக்கை, யானைக்கொம்பு, யானைக் கதுப்பு, யானைக்கடைக்கண், யானைமத்தகம், யானைவால், யானைச்செவி, யானைமுன்கால், யானைமதம், யானைத்தொட்டி,

யானைநுதற்பட்டம், யானைமுகபடாம், யானைமேற்றவிசு, யானைமணி, யானைக்கச்சை, யானைக்கயிறு, யானைச் சங்கிலி, யானை கட்டுத்தறி, யானைசெல்வழி, யானைப் பாகர், யானைப்பாகர் தட்டுமோசை, யானையுண்ணுமுணவு, யானை துயிலிடம், யானை திரியுங்காடு, யானை நிற்குங்கூடம், யானை முதுகு, யானைபடுங்குழி, யானை நோய் இன்னோரன்னவற்றின் பெயர்கள் கூறப்படுகின்றன.[65] இவ்வாறே விட்டுணுவைக்கூறி, விட்டுணுக்கொடியும் வாகனமும், விட்டுணு மனைவிகள், விட்டுணுபதம், விட்டுணு பத்தவதாரம், விட்டுணுக்கத்து, விட்டுணுச்சமயத்தார் போன்றன குறிக்கப் படுகின்றன.[66]

இவ்வாறு, ஒன்றன் தொடர்பான பொருள்கள் கூறப்படும் பொழுது அச்சொற்களுக்கு அகரநிரன் முறை பின்பற்றப்படவில்லை. யானை, அதன் தொடர்பான பொருள்கள் ஆகியவற்றைக் கூறி வருங்கால் முதற்பொருளான யானை என்பது மட்டுமே அகரநிரன் முறையில் அமைந்துள்ளது. பிற அவ்வாறு அமையவில்லை. யானை என்பதனைத் தொடர்ந்து வரும் முதற்பத்துச் சொற்கள் அகரநிரற் படி அமைய வேண்டுமாயின், அமைந்துள்ள முறைக்கு மாறாக, யானைக் கடைக்கண், யானைக் கதுப்பு, யானைக் கூட்டத்துத் தலையானை, யானைக்கூட்டம், யானைக்கொம்பு, யானைச்செவி, யானை மத்தகம், யானை முன்கால், யானையுறுப்பினுட்டுதிக்கை, யானைவால் என அமைய வேண்டும். இவ்வாறே, முதற்பொருளும் துணைப் பொருளு மாயமைந்த விட்டுணு போன்ற பொருள்களுக்குரியனவும் அகரநிரன் முறை பின்பற்றப்படாமலே அமைந்துள்ளன. முதற் பொருளினை மட்டும் நிரலில் அமையத் தக்க சொல்லாகக் கருதிப் பிறவற்றையெல் லாம், பொருளுக்குரிய பெயர்களைச் சுட்டுங்கால், சிலவிடங்களில் அவற்றின் வகைகளை விளக்கியிருப்பதுபோலத் துணைப்பொருள் களையும் அவற்றின் பெயர்களையும் மூலத்தில் அடிகளார் குறித் திருக்கப் பதிப்பித்தோர் அவற்றைத் தனிப்பொருள் போலத் தெளிவாக விளங்கத்தக்க வகையில் அமைக்க வேண்டி ஒன்றன் பின் ஒன்றாக அமைத்து விட்டனரோ என எண்ணத் தோன்றுகிறது.

படைத்தொகையைச் சுட்டும் பெயர்களைக் குறிக்குங்கால் அவற்றின் கூட்டுத்தொகையுட்படக் கணக்கிட்டுக் காட்டுவது கணிதக் குறிப்பாய் அமைந்துகிடக்கின்றது. பிங்கலத்தின் அநுபோக வகை யின் உட்பிரிவான அக்குரோணி வகையில் இப்படைத் தொகைகளின் பெயர்கள் இடம் பெற்றிருப்பினும்[67] அகராதியில் பெயர் மாறுபாடு களும் எண்ணிக்கை வேறுபாடுகளும் காணப்படுகின்றன. ''அகராதி படைத்தொகை சேனாமுகம் மும்மடி கொண்டது குலுமம், குலுமம் மும்மடி கொண்டது கணம், கணம் மும்மடி கொண்டது வாகினி, வாகினி மும்மடி கொண்டது பிரதனை, பிரதனை மும்மடி கொண்டது

சமு, சமு மும்மடி கொண்டது அனீகம், அனிகம் பத்துக்கொண்டது அக்குரோணி''[68] எனக் கூறி அக்குரோணியென்பது தேர் 21870, களிறு 21870, குதிரை 65610, காலாள் 109350, ஆக 218700 எனக் கணக்கிட்டுக் காட்டப்படுகிறது. இதனை, இயலிறுதியில் அமைந்துள்ள இரண்டாம் வரைகோட்டுப் படத்தால் உணரலாம்.

எண் கூட்டிப் பெருக்கல் என்பதற்கான பெயர்களைக் கூறி அதனையொட்டி அதற்குப் பயன்படும் எண் வகுப்பு, தானங்கள் குறிப்பிடப்படுகின்றன.[69] ஒன்று முதல் 36 தானங்கள் வரை உள்ள எண்களுக்குரிய பெயர்கள் காட்டப்படுகின்றன. அவற்றை எண்குறியீட்டில் ஒன்று-1, பத்து-10, நூறு-100, ஆயிரம்-1000, பதினாயிரம்-10000 எனக் குறிக்கலாம். இவற்றுக்கு முறையே ஏகம், தசம், சதம், சகத்திரம், அயுதம் என்னும் சொற்கள் காட்டப்படுகின்றன. இவ்வெண்கள் முறையே 1, 2, 3, 4, 5, தானங்களைக் கொண்டன. இவ்வாறு 36 தானங்களையுடைய எண்ணின் சொல்லும் அவ்வியத்தம் எனக் காட்டப்படுகிறது. அதற்குரிய பெயராகக் கோடி கோடி கோடி கோடாகோடி எனக் காட்டப்படுகிறது. இதனைத் தற்கால எண் குறியீட்டில் காட்டவேண்டுமென்றால் முதலில் ஒன்றைக்குறிக்கும் '1' ஐ எழுதி, அதனைத் தொடர்ந்து 35 பூஜ்யங்களை இட வேண்டும். அனைத்துத்தான எண்களும் வடமொழிச் சொற்களாகவே காணப்படுகின்றன. ஒன்று பத்து இவற்றுக்கிடையேயுள்ள 2, 3, 4, 5, 6, 7, 8 9, ஆகியவற்றின் பெயர்களாகக் கூறப்படும் உபயம், துவத்துவம், துளி, மிதுனம், யுகளம், யுகளி, யுகம், திரி, சது, பஞ்சம், சடு, சத்தம், அட்டம், நவம் ஆகியன வடமொழிச் சொற்களாம். எனவே, எண் தானங்கள் பற்றிய குறிப்பினை ஆசிரியர் வடமொழி நூல்களினின்று எடுத்தாண்டிருத்தல் கூடும். இச்சொற்கள் திரிகடுகம், சதுர்முகன், பஞ்சபாண்டவர், அட்டமாலை, நவமணி என்றாற் போன்று தமிழில் வழங்கி வந்தனவே. மேலும், ஒன்று முதல் 36 வரிசைமுறை பின்பற்றப் பட்டதன்றி அப்பெயர்களில் அகரநிரன்முறை பின்பற்றப்படவில்லை.

பலபொருள்கள் கொண்ட ஒருசொல், பொருள்வேறுபாட்டைப் புலப்படுத்தும் வண்ணம் அச்சொல்லை முதலில் நிறுத்தி, அடுத்து அச்சொல்லோடு பிறிதொரு சொல்லையும் இணைத்து நிறுத்திப் பெயர் கூறும் இடங்கள் காணப்படுகின்றன. உரை என்னும் சொல்லுக்கு அத்தம், அருத்தம், சொற்பயன், பதம், பாழி. அது நால்வகையாம். கருத்துரை, பதவுரை, பொழிப்புரை, அகலவுரை எனக் கூறிவிட்டு, அச்சொல்லையடுத்து அதனோடு உரைத்தல் என்பதனையும் சேர்த்து உரையுரைத்தல் என நிறுத்தி, அதற்குரிய பெயர்களாகப் பயனுரைத்தல், மெய்யுரைத்தல், விரித்துரைத்தல், அன்றியும் பதவுரையுரைத்தலின் பெயர், கண்ணழித்தல், பொழிப்புரைத்தல், பொழிப்புத் திரட்டல் ஆகியன கூறப்படுகின்றன.[70]

நூல் என்பதற்கு இலக்கண முதலிய நூற்கள் எனக் கூறி அடுத்து நூற்கிற என்னுஞ் சொல்லைச் சேர்த்து நூற்கிற நூல் என நிறுத்தி, இழை, சூத்திரம், தாது, துவளை, பனுவல் ஆகிய பெயர்கள் கூறப் படுவதும்[71] ஒரு சொல்லின் பொருள் வேறுபாடுகளைத் தெளிவு படுத்தும் வகையில் நிறுத்தப்பட்டனவே எனலாம்.

இலக்கிய வழக்குகளே பொருளின் பெயராக அமைந்து கிடக்கின்ற இடமும் உண்டு. உரைகல் என்பதற்குரிய பெயராகக் கட்டளைக்கல் என்பது இடம் பெறுகிறது.[72] அத்தொடர் திருக்குறளில் வந்துள்ள தொடராகும்.[73]

பொருளகராதி பெயரகராதியினின்று, பெயர் பொருள் பொருள்பெயர் என்னும் முறையில் மாறுபடுவது மட்டுமின்றிச் சொற்கள் பொருள்கள் பெயர்களிலும், அவற்றின் நிறுத்த முறைகளிலும் விளக்க முறைகளிலும் வேறுபாடுகள் கொண்டதாக விளங்குகிறது. ஆயின் அவ்வகை வேறுபாடுகள் பெருமளவில் இல்லையெனக் கொள்ளலாம்.

மேற்கோள்கள்

1 தொல்காப்பியம், நூற்பா, 786
2 ... ..., 795
3 ... ..., 787, 794, 798, 799, 801, 802, 812, 821, 824, 843, 844, 855, 865
4 ...., 815, 838
5 ...., 857
6 ...., 784, 803, 830, 848
7 ...., 800
8 ...., 813, 832, 841
9 பின்னிணைப்பு 2 (இ)-இற் காண்க.
10 திவாகரம், பக்., 130
11 ....- 14
12 சதுரகராதி-1, பெயர், பக்., 5
13 .... , பொருள், பக்., 3
14 பிங்கலம், நூற்பா, 315
15 திவாகரம், பக்., 42
16 சூடாமணி, பக்., 139
17 திவாகரம், பக்., 89

18 பின்னிணைப்பு-8.
19 ....
20 பிங்கலம், நூற்பா, 2865, 2868, 2372, 2623.
21 சூடாமணி, பெயர்ப் பிரிவு, பக்., 163.
22 சதுரகராதி-1, பொருள், பக், 5, 6, 7.
23 பின்னிணைப்பு-9.
24 திவாகரம், பக்., 5.
25 பிங்கலம், நூற்பா, 5.
26 சூடாமணி, பெயர்ப்பிரிவு, பக்., 17.
27 சதுரகராதி-1, பொருள், பக்.,5.
28 ...., 58.
29 ...., 61.
30 ...., 103.
31 ...., 1.
32 ...., 5.
33 ...., 79.
34 ...., பெயர், 34, 45, 78, 102, 120.
35 ...., 123.
36 ...., தொகை, 20.
37 ...., தொகை, 97.
38 ...., பொருள், 56.
39 ...., 28, 42, 48, 56, 60.
40 ...., 6, 9, 14, 47, 57.
41 ...., 4, 18.
42 ...., 55.
43 ...., 56.
44 ...., 2, 6.
45 ...., 10.
46 ...., 70.
47 ...., 4, 31.
48 ...., 70.
49 ...., 70, பிற்சேர்க்கை, பக்., 10.
50 திவாகரம், பக்., 14.
51 பிங்கலம், நூற்பா, 733.
52 சூடாமணி, பெயர்ப்பிரிவு, பக்கம் 33.
53 சதுரகராதி-1, பொருள், பக், 8.
54 சூடாமணி, பெயர்ப்பிரிவு, 111.
55 சதுரகராதி-1, பொருள் பக்., 8.
56 திவாகரம், பக்., 4.
57 பிங்கலம், நூற்பா, 183.

58 சதுரகராதி-1, பொருள், பக்., 18.
59 .... பிற்சேர்க்கை, பக்., 3.
60 திவாகரம், பக்., 3.
61 ....
62 பிங்கலம், நூற்பா, 93.
63 ....
64 சூடாமணி, பெயர்ப் பிரிவு, பக்., 9.
65 சதுரகராதி-1, பொருள், பக்., 75, 76.
66 ...., 81, 82.
67 பிங்கலம், நூற்பா, 1641-1650.
68 சதுரகராதி-1, பொருள், பக்., 53.
69 ...., 13, 14.
70 ...., 11, 12.
71 ...., 51.
72 ...., 12.
73 திருக்குறள், 505.


பெயர்கள் 29
இடக்காரணம்
ஆக்கக் காரணம்
தொழிற் காரணம்
முடி
கோத்தல்
பின்னுதல்
தொடுத்தல்
இயம்பகம்
சூட்டு
கரோடி
கரோடிகை
சிகழிகை
தொடையல்
மாலை
வாசிகை
பிணை
பிணையல்
கோவை
சிகழிகை
படலை
வாசிகை
வெட்சி
கரந்தை
வஞ்சி
காஞ்சி
நொச்சி
உழிஞை
தும்பை

படைத்தொகைப் பெயர்கள் — எண்ணிக்கை



படைத்தொகைப் பெயர்கள்	எண்ணிக்கை			
ப	1	1	3	5
பத்தி × 3 = சேனாமுகம்	3	3	9	15
சேனாமுகம் × 3 = குலுமம்	9	9	27	45
குலுமம் × 3 = கணம்	27	27	81	135
கணம் × 3 = வாகினி	81	81	243	405
வாகினி × 3 = பிரதனை	243	243	729	1215
பிரதனை × 3 = சமு	729	729	2187	3645
சமு × 3 = அனீகம்	2187	2187	6561	10935
அனீகம் × 10 = அக்குரோணி	21870	21870	65610	109350

218700

இயல் 6

தொகையாகராதி

1 தொல்காப்பியமும் தொகையும்

தொகையென்னும் இலக்கணக் குறியீட்டுச் சொல் தொல் காப்பியத்தில், செறிந்து நிற்றல், ஒட்டிநிற்றல், சுருங்குதல், பலவற்றை அடக்கிய தொகுதியாய் நிற்றல், கட்புலனாகாது கருத்துக்குப் புலனாகி எஞ்சி நிற்றல் ஆகிய இயல்புகளைக் கொண்டதாக ஆளப்பட்டுள்ளது.[1] அச்சொல்லின் பொருள் தொகுப்பு என்பதேயாம்.[2] ''தொகையின்றியல'', ''தம்முன் தான் வரூஉம் எண்ணின் தொகுதி'' என்னுந் தொடர்கள்[3] அப்பொருளைத் தரவல்லன.

இரண்டுமுதல் எண்கள் அனைத்தும் ஓராற்றான் தொகுப்புப் பொருளைத் தருவன. ஒன்றும் ஒன்றும் எனத் திரும்பத் திரும்ப எண்ணுதலைத் தொகுத்து இரண்டு, மூன்று முதலியனவாகக் கூறப்படுகின்றன. எண்களைத் தொகைகளாகப் பயன் படுத்தும் வழக்காறு தொல்காப்பியத்தில் மிகுதியும் உள்ளது. உயர்திணை, அஃறிணை ஆகிய இரண்டனையும் ஒருங்கே சுட்ட இருதிணையெனவும், இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னும் மூன்று காலங்களைச் சுட்ட முக்காலம் எனவும் இவ்வாறே பிறவும் கூறப்படுகின்றன.[4]

முந்நூற்று எழுபதுக்கும் மேற்பட்ட இடங்களில் தொல் காப்பியத்தில் எண்தொகைகள் காணப்படுகின்றன.[5] ஆயிருவகை(2), மூவுயிர்(3), நான்மொழி(4), ஐந்நிலம்(5), ஆறறிவு(6), எழு திணை(7), எண்கிளவி(8), ஒன்பதிற்றெழுத்து(9), ஈரைங்குற்றம்(10), பதினோரெழுத்து(11), பன்னீரெழுத்து(12), பதின்மூன்றுகிளவி(13), ஈரேழ் துறை(14), அப்பதினைந்து(15), நால்நான்கு(16), பதினேழ் நிலம்(17), இருபாற்பட்ட ஒன்பது(18), நாலைந்து(20), எழுமூன்று

துறை(21), இரண்டு தலையிட்ட முதலாகிருபது(22), அந்நாலைந்தும் மூன்று தலையிட்ட ஈறு(23), அறுநான் கீறு(24), ஆறுதலையிட்ட அந்நாலைந்து வகை(26), மூப்பஃதெழுத்து(30), எண்ணான்கு பொருள்(32), முப்பதினொரு மூன்று கூற்று(33), எழுபது வகை(70), அறுநூற்றிருபத்தைந்து(625), ஐயீராயிரத் தாறைந் நூற்றொரு, தொண்டுதலை யிட்ட பத்துக்குறை எழுநூற் றொன்பஃது (13703) ஆகிய எண்கள் அவற்றுள் அடங்கியுள்ளன.[6] இவற்றுள் இரண்டு மட்டும் நூற்றுக்கு மேற்பட்ட இடங்களில் கையாளப்பட்டுள்ளது. ஒரு நூற்பாவில் ஒரு தொகையும் உண்டு; மூவகைக் காலமும், ஐவகை மரபின், இருமூன்று மரபின், அறுவகைய, எழுவகையின், நாலிரு வழக்கின் என ஆறு தொகைகளும் உண்டு.[7]

ஒன்றன் பொருள் திரும்பத் திரும்பப் பன்முறை கூறப்பட வேண்டுமாயின் எண்தொகையினைப் பயன்படுத்தல் எளிது. 3முதல் 8 ஈறாக உள்ள எண்கள் அந்நோக்கிலேயே அதிகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. சில அதிகமான இடங்களில் வாரா-தொழியினும் அதிகமான வகைப்பிரிவுகளைக் கொண்டிருத்தல் கூடும். சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் நூற்பாவில் முப்பத்து மூன்று எழுத்துக்களை ஒவ்வொன்றாகச் சொல்லாமல் தொகைமட்டும் குறிப்பின்[8] கற்றோர் உணர்ந்து கொள்வர். அவை போன்ற அதிக எண்ணிக்கையுடைய எழுத்துக்கள், பா அடிகள், தொடைகள் ஆகிய பிரிவுகளை விளக்குங்கால் மீண்டும் மீண்டும் வாராவிட்டாலும் எண் தொகை பயன்படுத்தப்படுகிறது. 16, 17, 20, 21, 22, 23, 26, 30, 70, 625, 13703 ஆகியவை அத்தகையனவே.[9]

தொகையையும் பொருளையும் விளக்குமுறை இருவகையாகக் காணப்படுகிறது. முதலில் தொகையினைக் கூறிப் பின்னர் பொருளைக் கூறல் ஒருமுறை. உவமப் போலி ஐந்தெனக் கூறிப் பின்னர் வினையினும் பயத்தினும் உறுப்பினும் உருவினும் பிறப்பினும் வரூஉம் என்பது அவ்வகைப்பட்டது.[10] முன்னர்ப் பொருள்வகைகளை விரித்துக்கூறி இறுதியில் தொகை சுட்டுவது பிறிதொரு முறை. உடனுறை, உவமம், சுட்டு, நகை, சிறப்பு என உள்ளுறை ஐந்து என்பது அவ்கைவப்பட்டது.[11] அம்முறைகளை அடுத்த பக்கத்தில் வரும் வரைகோடுகள் விளக்கும்.

தொகையும் வகையும் கூறிப்பின்னர் விளக்கம் வேண்டுவன வற்றிற்கு மேலும் விளக்கந்தருவதும் காணப்படுகிறது. வண்ணம் இருபதெனக்கூறி, அவற்றின் வகைகளைப் பாவண்ணம் முதல் முடுகு வண்ணம் ஈறாகக் கூறிப்பின்னர் பாவண்ணம் என்பது சொற்சீர்த்தாகி நூற்பாவிற் பயிலும் தன்மையதென்றும் கூறுவது போன்றே மற்றய வண்ணங்களும் விளக்கிக் காட்டப் படுகின்றன.[12]

தொகை போலி — பொருள்கள்	தொகை உள்ளுறை — பொருள்கள்
வினை	உடனுறை
பயன்	உவமம்
உறுப்பு	சுட்டு
உரு	நகை
பிறப்பு	சிறப்பு

தொகைகளின் வகைகளில் எண்ணிக்கை வேறுபாடுகட்கு இட மிருப்பதாகக் கொள்ளின் அவற்றுள் உறுதிபெறும் வகைகளை முற்கூறிப் பின் மற்றதைக் கூறி இணைத்துக் காட்டப்பட்டுள்ளது. 'வேற்றுமை தாமே ஏழென மொழிப' எனமுன்னர்க் கூறிப், பின்னர் 'விளிகொள் வதன்கண் விளியோடு எட்டே' எனவேற்றுமைகளின் எண்ணிக்கையைக் கூறுவது அவ்வகையேயாகும்.[13] தொடையின் வகைகளை மோனை, எதுகை, முரண், இயைபு என நானெறி என்ப எனக் கூறி அடுத்த நூற்பாவில் அளபெடை தலைப்பெய ஐந்துமாகும் என்பதும், உவமையின் நிலைக் களன்கள் சிறப்பு, நலன், காதல், வலி என்னும் நான்கெனக் கூறிக் கிழக்கிடு பொருளோடு ஐந்துமாகும் என்பதும் அம்முறையைச் சார்ந்தனவே யாம்.[14] அம்முறையைப் பின்வரும் வரைபடங்கள் தெளிவாக்கும்.

தொடை 5		உவமை நிலைக் களன்கள் 5	
மோனை	4	சிறப்பு	4
எதுகை	4	நலன்	4
முரண்	4	காதல்	4
இயைபு	4	வலி	4
அளபெடை		கிழக்கிடுபொருள்	

தொகைமட்டும் கூறிப்பொருள் விளக்காத இடங்கள் பலஉண்டு. முன்னர்க்கூறியன திரும்பக் கூறப்பெறின் பொருள்விளக்கம் வேண்டாது கற்போர் உணர்வர் என விடப்பட்டிருக்கலாம்.[15] அவ்வாறன்றியும் பொருள் விளக்கம் கூறப்பெறாத தொகைகள் உண்டு. 'வண்புகழ் மூவர்'[16] எனக்கூறி முன்னரோ பின்னரோ அவர் யாவரென விளக்கம் தரப்படவில்லை. மூவரென்ற அளவானே சேரர், சோழர் பாண்டியரென இலக்கியத்தில் கண்டிருப்பர் ஆதலின் அறிஞருக்கு

விளக்கம் வேண்டற்பாற்றன்று என விடுத்திடுத்தல் சாலும். சில தொகைகளை விரிக்கப்புகின் பரந்து பெருகிவிடு மென்றும் எண்ணி விடுத்திருக்கலாம். அவற்றைப் பின்னர் வந்த உரையாசிரியர்கள் விளக்கிக் காட்டுகின்றனர். அடிகளின் விரி 625, தொடைக...ன்விரி 13708 என்பன அவ்வகைப்பட்டன.[17]

ஒன்றன் வகைகளை முதலிற் சுருங்க விளக்கிப் பின்னர் விரித்துரைக்கும் முறை காணப்படுகிறது. அடிகளைக் குறளடி, சிந்தடி, நேரடி, நெடிலடி, கழிநெடிலடி எனக்கூறிப் பின்னர் ஐவகையென அவற்றைக் கொண்டு, அவற்றின் விரி 725 எனக் காட்டப்படுகிறது.[18] ஆயின் அவற்றின் விரி விரித்துரைக்கப்படவில்லை. உரைவிளக்கங் களாற் பெறப்படுகின்றது.[19]

குறளடி		சீர்கள்	5 × 5 × 5	
சிந்தடி		சீர்கள்	5 × 5 × 5	
நேரடி	அடி / 5	சீர்கள்	5 × 5 × 5	அடியின் விரி 625
நெடிலடி		சீர்கள்	5 × 5 × 5	
கழிநெடிலடி		சீர்கள்	5 × 5 × 5	

ஓர் எண்ணின் தொகை பல்வகைப் பொருளிலும் கையாளப் படுகிறது. ஐந்து என்னும் எண் திணை, பால், நிலம், எழுத்து, அடி, அறிவு ஆகியவற்றின் தொகைகளாகப் பயன்படுவது போன்றே[20] பிற எண்களும் பயன்படுகின்றன.[21] எண்கள் முழுமையாகச் சுட்டப் படுவதோடன்றி, மற்ற எண்களின் கூட்டுத் தொகையாகவும் சுட்டப்படுகின்றன. எட்டு என்பது நாலிரண்டு, இருநான்கு, எட்டு எனச் சுட்டப்படுவது போன்றே[22] பிறவும் சுட்டப்படுகின்றன.[32] இவற்றை ஓர்ந்துணர்ந்த நிகண்டாசிரியர்கள் இம்முறைகளைத் தெளிந்து பயன்படுத்தினர்.

2. தொகையும் நிகண்டுகளும்

தொல்காப்பியம், தொகைக்குறிப்புகட்கு எண்களைக் குறியீடு களாகக் கொண்டாற்போன்று சங்க நூல்களும் ஆங்காங்கே கைக்கொண்டதை 'இருமுந்நீர்த் துருத்தியுள்'[24], 'ஐந்துடன் போற்றி யவைதுணையாக'[25], 'இரண்டுடன் சுமழும் அடுநெய் ஆவுதி'[26] 'கடந்தடு முன்பொடு முக்கண்ணான் மூவெயிலும்'[27] 'ஏழ்புணர் இன்னிசை முரல்பவர்க் கல்லதை'[28] 'நாற்றிசையும் நடுக்குறூஉம் மடங்கற் காலை'[29] 'எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம்'[30], 'முந்நீர் வண்ணன் பிறங்கடை யந்நீர்'[31] 'ஈரைம்பதின்மரும் பொருதுகளத்

தொழிய'[32] 'முரசு முழங்குதானை மூவருள்ளும்'[33] போன்ற தொடர்கள் விளக்கும். திருக்குறளில் 'இருவினை', 'எழுபிறப்பு' என விளக்கம் பெறா வகையிலும், 'தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்', 'சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்ற ஐந்தின்'[34] என விளக்கம் பெறும் வகையிலும் தொகைகள் ஐம்பதிற்கு மேற்பட்ட இடங்களிற் பயன்படுத்தப்பட்டுள்ளன.[35]

தொல்காப்பியத்தில் சில பகுதிகள் பொருள் கூற முற்பட்டன வெனினும், முழுமை நோக்குப் பொருள் கூறுவதன்று. அவை இலக்கணக் குறியீடுகட்கும் நெறிகட்கும் நினைவிலிருத்த எளிதாம் பொருட்டு வேண்டுவனவற்றையெல்லாம் தொகையாற் குறிக்க முற்பட்டன. நிகண்டுகளின் முழுமுதன் நோக்குப் பொருள் கூறலே. எனவே, முதல் நிகண்டாய திவாகரம், தொல்காப்பியம் முதலிய வற்றுள் பொருள் விளக்க வகைகொண்ட தொகைகளை மட்டும் எடுத்து, அவற்றோடு இலக்கியம், வழக்கு ஆகியவற்றிற் கண்டனவற் றையும் சேர்த்துக் கொண்டு பொருள் விளக்கத் தலைப்பட்டது. அஃதோடன்றியும், தொகைகளையெல்லாம் ஒருங்கே தொகுத்துத் தன் பனிரெண்டு தொகுதிகளுள் தனியதொரு தொகுதியாக ஆக்கி, இறுதியில் அமைத்து அதற்குப் 'பல்பொருள் கூட்டத்து ஒருபெயர்த் தொகுதி' எனப் பெயரிட்டது.

அத்தொகுதியில் 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 18, 25, 28, 32, 33 ஆகிய எண்டொகைகளைக் கொண்ட 131 சொற்களும் ஒன்றுமுதல் ஆறறிவு உயிர்வகைப் பெயர்களும் விளக்கப்பெறுகின்றன. அவற்றுள் முக்காலம், மூவிடம், ஐந்திணை, ஐம்பால், பஞ்சபூதம் போன்ற[36] தொல்காப்பியத் தொகைகள், இருவினை,[37] நால்வகையரண்,[38] நாட்டமைதி,[39] அரசியல்[40] போன்ற திருக்குறள் தொடர்குறிப்புக்கள் அடங்கும் அவையேயன்றி, வழக்கிலும் இலக்கியங்களிலும் பயின்றன வற்றைத் தொகுத்துக் கூறினார் போலும்.

'இருசுடர் சந்திரர் சூரியராகும்' என்றாற் போன்று தொகையை முற்கூறி வகையைப்பிற்கூறும் முறையும், 'தலையிடைகடையென மூவகைத் தானம்' எனவகையை முற்கூறித் தொகையைப் பிற்கூறும் முறையும் பின்பற்றப்பட்டிருக்கின்றன.[41] தொகையும்வகையும் கூறிய தோடன்றி விளக்கங்களும் சிலவற்றிற்குத்தரப்பட்டுள்ளன. எனவே தொகைகளை விளக்குமுறை தொல்காப்பியம் போன்றே அமைந் துள்ளது எனினும் ஒருமை, இருமை, மும்மை எனச்சிற்றெண் டொடங்கிப் பேரெண் ஈறாக நிரல்பெறக் கூறுவது சிறப்புக் கூறாகும்.

தொகைகளைக் கூறுதற்கென்றே ஒதுக்கப்பட்ட பனிரெண்டாம் தொகுதியிற் சில குறைகள் காணப்படுகின்றன. தொகைத் தொடர்

பற்ற பேடியிலக்கணம், கரைந்துறைகோள், திருப்பொறி, கொடிபடை, ஊர்தி போன்றவற்றின் பெயர்கள் சுட்டப்படுகின்றன.[42] கார், கதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் எனப்படும் பருவம் ஆறு, குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என இசை எழுவகை போன்றன தெய்வப் பெயர், ஒலிப் பெயர்த் தொகுதி களில் குறிப்பிடப்பட்டு இங்கு விடப்பட்டுள்ளன.[43] ஒருமுறை கூறப் பட்டது பிறிதொருமுறை கூறப்படலாகாதென்பது ஆசிரியர் கருத்தன்று என்பதனை இத்தொகுதித் தொடக்கத்தில் கூறப்படும், 'கூறியது கூறினும் குற்றமில்லை, வேறொரு பொருளை விளைக்கு மாயின்' என்னும் பகுதி விளக்கும். மேலும், ஒன்று, பத்து, நூறு ஆயிரம் ஆகியவற்றின் பெயர் பண்புப் பெயர்த் தொகுதியிலும், ஐந்திணை இடப்பெயர்த் தொகுதியிலும் கூறப்பட்டிருப்பினும்[44] மீண்டும் இத்தொகுதியிலும் கூறப்பட்டிருக்குங்கால், மற்ற தொகை களும் இத்தொகுதியில் இடம் பெற்றிருத்தலே முறையாம். எனினும், தனித்தொகுதியமைத்ததோடன்றி சிற்றெண்டொடங்கிப் பேரெண் முடியக் கூறத்தொடங்கியவர் திவாகரரேயாவார்.

திவாகரத்திற்குப் பின்னரெழுந்த பிங்கலத்தில் பன்னிரண்டாம் தொகுதியாகிய பல்பொருள் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதி பேசப் பட்டிலது என்னும் கூற்று ஐய்யப்பாடுடையது.[45] திவாகரம் போன்ற தனிப்பிரிவு ஒதுக்கப்படவில்லையெனினும் அதன்கண்ணுள்ள தொகைகள் அனைத்தும் பிங்கலத்தின் மற்றைப்பிரிவுகளில் இடம் பெறுகின்றன. அவற்றுள்ளும் ஐயர்வகை என்னும் பிரிவில் மிகுதி யாகக் காணப்படுகின்றன. அப்பிரிவில் 135 நூற்பாக்களில் 125 நூற்பாக்கள் தொகைகளாகவே உள்ளன.[46] திவாகரம் போலவே ஒன்றுமுதல் பதினெட்டு முடிய சிற்றெண் பேரெண் முறையாக விளக்கப்படுகின்றன. முதற்பத்து நூற்பாக்களே[47] ஐயர்வகை என்பதற்குப் பொருத்தமானவை. இருசுடர், மூவிடம், நானிலம் ஐவகை வினா, அறுசுவை, எழுபிறப்பு, எண் கணிதம், நவமணி, போன்ற வற்றிற்கும்[48] ஐயருக்கும் யாதொரு தொடர்பும் இலது. திவாகரத்தில் தொகைக்குறிப்புப் பொருத்தமற்றனவும் பன்னி ரண்டாம் தொகுதியில் இடம் பெற்றமை போன்று இத்தொகைக் குறிப்புப் பகுதியிலும் முற்பத்து நூற்பாக்கள் இடம் பெற்றிருக்கலாம். வானவர் வகையின் இறுதி நூற்பா ஆன்மா பற்றியது.[49] அத்துடன் தொடர்பு கொண்டன சமயங்கள். முற்பத்து நூற்பாக் களும் பல்சமய முனிவர்கள் பற்றியவை. எனவே, வானவர் பகுதியின் இறுதியில் அமைந்த நூற்பாக்கள் பிற்காலத்தில் தொகைப் பகுதியில் முற்பகுதியாக அமைந்து விட்டனவோ என்னும் எண்ணமும் தோன்று கிறது. அவ்வாறாயின் இப்பகுதிக்கு முன்னர் வேறுபெயர் வழங்கி யிருத்தல் கூடும். பாயிரப்பாடலிலேயே ஐயர்வகை எனச் சுட்டப்

பட்டிருக்கிறதெனில் அது பின்வந்தோரால் இயற்றப்பட்டது எனக் கருதப்படுகிறது.[50] எனவே, தொகைகள் பிங்கலத்திலும் தனியாக இடம் பெற்றிருந்தன என்பது தெளிவு.

திவாகரம் ஒன்றென்னும் பொருள் மட்டும் கூறப் பிங்கலம் ஐயர் வகைப் பகுதியில் ஒருமைப்பொருளும் கூறுகிறது.[51] இருவகைப் பொருள் தொகைகளாகத் திவாகரம் பத்தினைக் கூறப் பிங்கலம் ஒன்பதனைக் கூறுகிறது. இரு வகையின்பம், இருவீடு ஆகிய-வற்றை விட்டுவிடுகிறது. இருவகைக் கூத்தினைச் சேர்க்கிறது.[52] மூவகைப் பொருள்களாகத் திவாகரம் கூறும் பதினாறு பொருள்களுள் பிங்கலம் பதின் மூன்று கூறி, முத்தீ, மூச்சீவவனல், சூரியன் மூவகை வீதி போன்றவற்றை விட்டு விடினும் மூவகைப்பாவ புண்ணிய வழக்கங்களைச் சேர்த்துப் பதினாறு ஆக்குகிறது.[53] வான்வகைப் பகுதியில் முத்தீயைக் கூறுகிறது.[54] வானவர் வகையில் மூவகை வீதியைக் கூறுகிறது.[55] மேலும் முப்புரத்தைக் கூறுகிறது.[56] மூவகைத் தமிழை அநுபோக வகையில் கூறுகிறது.[57] மொத்தத்தில் பதினெட்டாகிறது. இவ்வாறு ஒவ்வோர் எண்ணிலும் கணக்கிட்டால் மொத்தத்தில் திவாகரத்திலும் பிங்கலத் தொகைப் பொருள்களே மிகுதி.[58] திவாகரம் விளக்காத சில வகைப் பொருள்கட்கும் பிங்கலம் விளக்கம் தருகிறது. 'ஆதித்தர் பன்னிருவர் அச்சு விநிகளிருவர், ஈசர் பதினொருவர் எண்மர்வசுக்கள், ஆக முப்பத்து முத்தேவரென்ப', என்று மட்டும் திவாகரம் கூறப் பிங்கலம் அவ்விளக்கத்தோடமையாது ஆதித்தர் பன்னிருவரையும், அச்சுவினிகள் இருவரையும், உருத்திரர் பதினொருவரையும், எண்மர்வசுக்களையும் யார் யார் எனப் பெயர் கூறி விளக்குகிறது.[59] திவாகரத்திலும் பிங்கலம் தொகைப் பொருளை விளக்குவதில் மேலும் ஈடுபட்டிருக்கிறது.

எனினும், தக்கமுறையில் ஒரு நெறி பின்பற்றப்படவில்லை. தொகைப் பொருள் தருவனவற்றையெல்லாம் தொகுத்துத் தனிப் படக் கூறாது பல் பிரிவுகளிற் கூறுகிறார். மேலேழுலகம், ஏழு மேகம் ஏழு மழை, எண்டிக்கு, எண்டிசைப்பாலர், எண்டிசையானை போன்ற வற்றை வான்வகையிலும் முப்பத்திரண்டறம் போன்றவற்றை வானவர் வகையிலும், கீழேழுலகு போன்றவற்றை அவனிவகையிலும், அறுதொழிலை ஆடவர்வகையிலும் இவ்வாறே பிறவற்றையும் கூறுகிறார்.[60] இதுவே, திவாகரத்திற் கண்ட குறைபாடு. பிங் கலத்திலும் தொடர்ந்ததெனலாம்.

சூடாமணி நிகண்டு தன் பன்னிரண்டாவது பல்பெயர்க் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதியில் தொகைப் பொருள்வகைகளை விளக்குகிறது. 'ஏறியவூழும் சொல்வோம்' என்னும் அப்பகுதியின்

பாயிரத் தொடருக்கேற்ப, சிற்றெண் முதல் பேரெண் என்னும் ஏறிய முறையில் தொகை விளக்கம் செய்யமுற்படுகிறது. பிங்கலம் ஐயர் வகையில் ஒன்று, ஒருமை ஆகிய இரண்டனை விளக்கச் சூடாமணி ஒருமையை விட்டு விட்டு ஒன்று என்பதனை [61] மட்டும் கூறுகிறது. இரண்டு என்னும் தொகைப் பொருள் கூறுவனவற்றுள் பிங்கல ஐயர் வகைப்பகுதியில் உள்ளவற்றை வரிசை முறை மாறாமல் அப்படியே பின்பற்றுகிறது.[62] திவாகரத்தில் உள்ள இரு வகையின்பம், இருவகை வீடு கூறப்பெறவில்லை.[63] இருவகைக் கூத்தினையும் [64] அவ்வாறே மூன்று பொருள்களுள் பழம் என்பதனைச் சேர்க்கிறது.[65] பிங்கலத்தில் ஐயர்வகை விடுத்துப் பிறவகைகளில் கூறப்பட்டிருக்கும் முப்புரம் போன்றவை உரிய தொகுதியில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.[66] திவாகரம், பிங்கலம் ஆகியவற்றைக் காட்டிலும் தொகைப் பொருள்களை அதிக எண்ணிக்கையில் சூடாமணி கூறுகிறது.

எனினும், சூடாமணி நிகண்டிலும், சிற்சில குறைபாடுகள் இல்லாமலில்லை. திவாகரம் போன்ற பேடியிலக்கணம் முதலாயின இணைத்துக் கூறப்படுதலும், பிங்கல அநுபோகவகையிற் கூறப்படும் கவிபரங்கேறும் முறை,புலவன் பரிசு பெறாக்காற் செய்யும் வகை, காப்புக் கடவுள் போன்றவை இணைக்கப்படுதலும், பொருத்த முடையனவல்ல.[67] அவ்விலக்கணங்களில் எழுத்து, சொல், பொருள், யாப்பு ஆகியவற்றின் தொகை, முத்தமிழ் வகை போன்றன விளக்கப் படவில்லை.[68] இவைபோன்ற குறைகளிருப்பினும், தொகைப் பொருள்விளக்கத்தில் முன்னூல்களைக் காட்டிலும் சூடாமணி மிகுதி யாக ஈடுபட்டுள்ளது எனலாம்.

3 தொகையகராதி

நிகண்டுகள் பல்பொருள் கூட்டத்து ஒருபெயர்த் தொகுதி எனக்குறித்ததைச் சதுரகராதி தொகையகராதி என்னும் பெயரால் சுட்டியது. நிகண்டுகள் விளக்கிய தொகைப்பொருள் எண்ணிக்கையிலும் அதிகமானவற்றுக்குத் தொகையகராதி விளக்கம் தருகிறது. திவாகரத்தின் பனிரண்டாம் தொகுதி 130 பொருள்கட்குக் கூறச் சூடாமணியின் தொகுதி 160 பொருள்களை விளக்குகிறது ஐயர் வகையிலும் பிறவகைகளிலும் பிங்கலம்171 பொருள்கட்கு விளக்கு கிறது. தொகையகராதிபோ 293 பொருட்கட்கு விளக்கந்தருகிறது. நிகண்டுகளைக் காட்டிலும் ஏறத்தாழ இருமடங்குப் பொருள்கட்குக் கூறுகிறது [69]

எண்ணிக்கை மிகுதி வேறுபாடு மட்டுமன்றி வேறு சில வேறு பாடுகளும் நிகண்டுகட்கும் தொகையகராதிக்குமிடையே உண்டு. நிகண்டுகள் நூற்பாவிலும் விருத்தத்திலும் பொருள் கூறத்

தொகையகரர்தி உரை நடையான் முதன்முதல் விளக்கப் புகுந்தது. பிறவெல்லாம் சிற்றெண்டொடங்கிப் பேரெண் முறையில் பொருள் கூறத் தொகையகராதி அம்முறையினின்றும் மாறி அகரமுதல் முறையினைப் பின்பற்றியது.

எண்ணிக்கை மிகுதியினை மட்டும் நோக்காகக் கொண்டு இப் பகுதி அமைக்கப்பட்டிலது. அதுவே நோக்காயிருந்திருப்பின், நிகண்டுகளிற் கண்டவற்றையெல்லாம் தொகுத்துக் காட்டியிருக்கும். அவ்வாறன்றி, அவற்றுள் தள்ளுவன தள்ளி, கொள்ளுவன மட்டும் கொண்டு, புதியன ஏற்றுத் திகழ்கிறது. இசைக்கு அதன்கண் காணப் படும் குறிப்புக்கள் அதனைப் புலப்படுத்தவல்லன.

இசைத் தொகைக் குறிப்பில் மந்தரம், மத்திமம், தாரம், ஆகிய மூன்று அடிநிலை வகைகளை முதலிற் கூறிக் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் ஆகிய ஏழிசை வகைகளைப் பின்னர்க் கூறுகிறது.[70] இசை வகையினை விரித்துரைக்கும் திறத் தினைப் பின்பக்கத்தில் வருமாறு கட்டத்தில் அடக்கிக் காட்டலாம்.

இவையேழும் சுரமென்னும் வீணையில் ஏழ்நரம்பென்றும் அமையும் எனவும், இவற்றுள் எவை எவற்றைவிட வலியவெனவும், எவ்வெவற்றுள் எவை எவை பிறப்பது தகுதியெனவும், "இவற்றுட் செம்பாலைக்குக் கொடிப்பாலை வலிது, கொடிப்பாலைக்கு விளரிப் பாலையும் மேற்செம்பாலையும் வலிது, அன்றியுந் தாரத்துருழையு முழையுட் குரலும் குரலுளிளியு மிளியுட்டுத்தமுந் துத்தத்துள் விளரியும் விளரியுட் கைக்கிளையும், பிறப்பது தகுதி" என்னும் பகுதி விளக்கும் இவற்றிற்கு உயிர் ஈசன் என இறுதியிற் குறிப்பிடும்.

திவாகரத்துள் பெயர், பிறப்பிடம், ஓசை, மணம், எழுத்து, இறைவன் என்பன குறிப்பிடப்படுகின்றன.[71] அவற்றுள் ஓசையும் எழுத்தும் ஒவ்வொரு வகைக்கும் இரண்டிரண்டாக மொத்தம் பதினான்கு கூறப்படுகின்றன. சுவை யுவமை, இசை மாத்திரை, இசையிற் பிறக்கும் பாலை பற்றிய குறிப்புக்கள் ஆகியன இடம் பெற்றில. எனினும், யாழ்த்திறன் பாலைகளென ஏழ்வகைப் பாலைகள் சுட்டப்படுகின்றன.

தொகையகராதியின் இசைக் குறிப்புக்கள் பிங்கல நிகண்டின் அடிப்படை கொண்டதெனக் கொள்வதற்கு இடனுண்டு. ஏனெனில், 'குரலே குரலாகிற் செம்பாலை', 'துத்தமே குரலாகிற் படுமாலைப் பாலை' போன்ற பிங்கல நூற்பாக்களே[72] பொருள் விளக்கத்திற்கு எடுத்தாளப் பெறுகின்றன. ஓசையுவமையில் மட்டும் வண்டு, கிளி,

எண்	இசை வகை	பிறக்கும் இடம்	ஓசை உவமை	சுவை உவமை	வாசனை உவமை	அக்கரம்	மாத்திரை	பிறக்கும் பாலை	இறைவன்
1	குரல்	உண்மிடறு	மயில்	பால்	மௌவல்	ஆஅ	4	செம்பாலை	விசுவாமித்திரன்
2	துத்தம்	நா	இடபம்	தேன்	முல்லை	ஈஇ	4	படுமலைப்பாலை	சமதக்கினி
3	கைக்கிளை	அண்ணம்	ஆடு	கிழான்	கடம்பு	ஊஉ	2	செவ்வழிப்பாலை	சந்திரன்
4	உழை	சிரம்	கொக்கு	நெய்	வஞ்சி	ஏஎ	3	அரும்பாலை	சூரியன்
5	இளி	நெற்றி	குயில்	ஏலம்	நெய்தல்	ஐஇ	4	கொடிப்பாலை	கௌதமன்
6	விளரி	நெஞ்சு	குதிரை	வாழை	பொன்னாவிரை	ஓஒ	3	விளரிப்பாலை	காசிபன்
7	தாரம்	மூக்கு	யானை	மாதுளங்கனி	புன்னை	ஔஉ	2	மேற்செம்பாலை	ஈசன்

குதிரை, யானை, குயில், தேனு, ஆடு எனச் சிலவற்றை வேறாகவும், மாற்றியும் கூறிப் பிங்கலத்தினின்று வேறு படுகிறது.[73]

சூடாமணி நிகண்டில், பிங்கலத்தில் குறிக்கப்பட்டவாறே இசைப் பிரிவுக் குறிப்புக்கள் காணப்படுகின்றன.[74] இம்மூன்று நிகண்டுகளுள் காணப்பெறும் குறிப்புக்களையெல்லாம் ஒப்பு நோக்கி முறைப்படுத்தித் தொகையகராதி விளக்க முற்படுகிறது. இசைக்கான சுவையுவமை, இசைமாத்திரை, இசையிற் பிறக்கும் பாலை பற்றிய குறிப்புக்கள், திவாகரத்துள் காணப்படாதொழியினும், பிங்கலம் சூடாமணி போன்றவற்றுள் அடிகளார் கண்டார். ஓசை உவமை, இசைக்கான எழுத்து ஆகியவற்றிற்கு இரண்டிரண்டாகப் பதினான்கு திவாகரத்துள் காணப்படினும் பின்னவற்றுள் வகைக்கொன்றாய் ஏழே அமைந்திருத்தலைச் சிந்தித்தார். எனவே பழையன கழித்துப் புதியன புகுத்தித் தொகுத்துக் கூறி வகுத்துக் காட்டினார். நிகண்டுகளுள் இடம்பெறாத குறிப்புக்களும் சிலவுள. எழுத்துக்களாக நெடிலுயிர் ஏழையும் மற்றவர் குறிக்க இசையுணர்வினைப் புலப்படுத்தும் வகையான் அவ்வற்றோடு இனக்குறில்களை இணைத்து அளபெழக் காட்டியுள்ளமையும், இவற்றிற்குயிர் ஈசனென இறுதியில் சுட்டியுள்ளமையும் அடிகளாரது இசையுணர்வினையும் ''அருட்டொகை வகை வகுத்துலகனைத்தும் அங்கையில் ஏந்திய தயையினைப்''[75] போற்றுகின்ற இறையுணர்வினையும வெளிக்காட்டுகின்றன.

நிகண்டுகளிற் காணப்பட்ட குறைபாடுகளைக் களைவதிலும் அடிகளார் முயன்றுள்ளார். தொகையுள் அடங்காதனவற்றைப் பல்பொருள் கூட்டத்து ஒருபெயர்த் தொகுதியில் அடக்கியிருந்த பொருத்தமின்மையினை உணர்ந்து, அவற்றை அறவே களைந்து முற்றிலும் தொகையுள்ளவற்றையே தொகையகராதியில் இடம் பெறச் செய்தார். அவ்வாறே வேறு தொகுதிகளில் சுட்டி உரிய தொகுதியில் இடம் பெறாத தொகைகளையும் இடம் பெறச் செய்துள்ளார். நிகண்டுகளிற் காணப்பெறாத 13, 14, 15, 16, 20, 22, 27, 35, 56, 60, 63 போன்ற எண்டொகைகளை அறிந்து சேர்த்துள்ளார். இவ்வாறு, ''பொருட்டொகை வகைப்பட விரித்துணர்த்திப் புகலுதும், தொகையகராதி யென்றே''[76] எனக்கூறுவதற்கேற்ற முறையில், முற்றிலும் தொகைக்கென்றே வகுக்கப்பட்ட அகராதியாகவும், முழுமன நிறைவளிக்கும் வகையில் தொகைகளை வழங்கும் கருவூலமாகவும் தொகையகராதி விளங்குகிறது.

4. விளக்க முறை

அடிகள் தாம் கூறுகின்ற முன்னுரைக் குறிப்பிற்கேற்ப ஒரு பொருளை விளக்குதற்குமுன், அப்பொருள்பற்றி நிகண்டுகள் கூறி

யிருப்பவற்றைக் கண்டு, அவற்றுள் ஒன்றற்கொன்று முரணெனின் ஏற்புடையதனைத் தாம் கொண்டு விளக்குமுறையினை வரம்பாகக் கொண்டுள்ளார்.

திவாகரம் ''உயர்குடை வேந்தர்க்குப் பகுத்த பதினெண் கிளைப்பாலோரே''[77] எனக் கூறி, அப்பதினெண்மரையும் அமாத்தியர், புரோகிதர், சேநாபதியர், தூதர், சாரணர் ஆகியோர் ஐம்பெருங்குழு வென்றும், காரணக்கிளைஞர் கருமவிதிகாரர், கநகச் சுற்றம், கடைக்காப்பாளர், நகரமக்கள், நளிபடைத்தலைவர், இவுளி மறவர், யானைவீரர் ஆகியோர் அரசர்க்கு எண்டுணையென்றும், நட்பாளரும், அந்தணரும், மடைத்தொழிலாளரும், மருத்துவக் கலைஞரும், நிமித்தக்காரரும் வேந்தர்க்கு உறுதிச்சுற்றம் எனவும் ஒரே நூற்பாவில் சுட்டுகிறது.

பிங்கலம், தொகையடங்கிய ஐயர்வகையில் அடக்கா விட்டாலும், ஆடவர் வகையில் திவாகரம் குறித்த நூற்பாவினைப் பெருமளவில் கையாண்டு, ஓரிரு சொற்களை மாற்றி நான்கு நூற்பாக்களாக்கி, ஐம்பெருங்குழு, எண் பெருந்துணைவர், உறுதிச்சுற்றம் எனத் தனித்தனி விளக்கி இறுதியில் முப்பாலும் வேந்தர்க்குப் பதினெண்டொழிலுடையோர் எனக் காட்டுகிறது.[78]

சூடாமணி, எண்பேராயம், ஐம்பெருங்குழு, ஐவகையுறுதிச் சுற்றம்எனத் தனித்தனி இடங்களில் பிரித்துக்கூற,[79] அடிகளும் அரசர் குழு ஐந்து, அரசர்க்குத் துணைவர்எட்டு, அரசர்க்கு உறுதிச்சுற்றம் ஐந்து எனத் தனித்தனி 5, 8, 5, ஆகிய தொகைப் பொருளிலடங்கியன வாகக் கூறுகிறார்.[80] நிகண்டுகளுள் சூடாமணியின் பகுப்புப் பொருந்துவதாகக் கொண்டு ஆண்டமை புலப்படுகிறது.

முன்னோர் அனைவரும் தொகை வகைகளை எண்ணளவாகக் குறித்துச் சென்றதைப் பின்பற்றித் தாம் அவ்வெண்ணிக்கை வகைகளைக் கூறினும், பொருள் மயக்கத்திற்கு இடமுண்டோ என ஆய்ந்து அதனைத் தவிர்த்துப் புதுவகைப்பொருள் தந்து விளக்கவும் அடிகள் தயங்கவில்லை.

அங்கம் என்னுஞ்சொல் மூன்று வெவ்வேறு எண்ணிக்கை கொண்ட தொகைப்பொருள் கொண்டதாகக் காட்டப்படுகிறது. நால்வகைப்படும் அங்கவகைகளை நிகண்டுகள் யானை, தேர், பரி காலாள் என்னும் முறையில் கூற,[81] அடிகள் தேர், பரி, கரி, காலாள், என முறை மாற்றிக் கூறுகிறார்.[82] ஐவகைத்தாய அங்கங்களை விளக்கும் பொழுது நிகண்டுகள் திதி, வாரம், நாள், யோகம், கரணம் என்று கூற,[83] திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம் என அடிகள்

கூறுகிறார்.[84] முறைவைப்பு ஒன்றுபோலமையினும், நாள் என்பதனை மட்டும் நட்சத்திரம் எனக் கூறுதற்குப் பஞ்சாங்கம் என முதலிற் கூறியோர் நட்சத்திரம் என்றே வழங்கியிருத்தல் வேண்டும் எனக் கருதியிருக்கலாம். ஏனெனில் அவற்றில் அமைந்த பிற நான்கும் வட சொற்களாக அமையின் இஃதொன்று மட்டும் நாள் என அமைந் திருத்தல் ஐயமாகலாம்.

அங்கம் 10 என விளக்குகையில், திவாகரம் (1) ஆறு, (2) மலை, (3)யானை,(4) குதிரை,(5) நாடு,(6) ஊர்,(7) கொடி,(8) முரசு,(9) தார், (10) தேர் எனவும்,[85] சூடாமணி,(1)மலை,(2) யாறு,(3) நாடு,(4) ஊர், (5) தார்,(6) புரவி, (7) யானை, (8) கொடி, (9) முரசு, (10) தானை எனவும்[86] கூறுகின்றன. இவ்வங்கப் பிரிவுகளைப் பிங்கலம் விளக்க வில்லை. (1) மலை,(2) யாறு,(3)நாடு,(4)ஊர்,(5)மாலை,(6)பரி,(7) கரி, (8)முரசு, (9)கொடி, (10)செங்கோல் என அடிகள் கூறுகின்றார்.[87]

இவற்றை ஒப்பிட்டால், முறைவைப்பு மாறியுள்ளதோடன்றிப் பொருளிலும் வேறுபாடுளது. திவாகரம் பத்தாவது பொருளாகத் தேரைக் குறிக்கச் சூடாமணி தானை என்கிறது; அடிகள் செங்கோல் என்கிறார். திவாகரம், "தேரின் அதற்குச் சின்னமு மென்ப" என முடிப்பதால் பத்து அங்கங்களும் அரச சின்னங்களாக அமையுந் தன்மையெனப் பெறப்படுகின்றது. தேரைச் சின்னமாகக் கொண்ட குறிப்பொன்றும் தெரியவந்திலதாதலால் தேரைக் குறித்தது பொருத்தமாகாது. புரவி, யானை முதலியவற்றை முன்னர்க் குறித்து விட்டபடியால் மீண்டும் தானை எனச் சூடாமணி சுட்டுவதும் ஏற் புடைத்தன்று. தானை என்பதற்குக் காலாட்படை எனக்கொள்ளின் நால்வகைப் படையில் மூன்றனைக் கூறித் தேரினை மட்டும் விட்டு விடுவதும் பொருத்தமன்று. எனவே, பத்து அங்கங்களில் செங்கோலை ஒன்றாகக் கோடலே சாலும் எனத் தெளிந்து அடிகள் காட்டியுள்ளார். ஏனெனில் அரசரது ஆட்சிக்குரிய சின்னங்களுள் தலையாயது அஃதே யாகும். ஆட்சிமுறை திறம்பிற்று எனக்காட்ட "வளையாத செங்கோல் வளைந்ததிது வென்கொல்"[88] எனச் சுட்டும் சிலப்பதி காரத் தொடரும் இதனை உறுதிப்படுத்தும்.

அடிமரத்தினின்று கிளைகள் கிளைத்தெழுந்து விரிந்துநிற்றலைப் போல முனிவர் தரும் பொருள் விளக்கங்களும் ஒன்றினின்று பலவாக விரிந்து நிற்கும் இடங்கள் உண்டு. அவை அவர்தம் நுண்மாண்நுழை புலத்திறத்தை விளக்கிக் காட்டுவனவாய் அமைகின்றன. அங்க யோகம்: (1) இயமம், (2) நியமம், (3) ஆசனம், (4) பிராணாயாமம், (5) பிரத்தியாகாரம்,(6) தாரனை,(7)தியானம்,(8)சமாதி ஆகிய எண் வகை எனத் திவாகரம் கூறி,[89] அவற்றுள் இயமம், நியமம் ஆகிய

இரண்டன் வகைகளை விளக்கிக் கூறுகிறது. பிங்கலம், திவாகரம் கூறிய எட்டனையும் கூறி,[90] மூன்றன் வகைகளை விளக்கிக் காட்டி மற்ற ஐந்தன் தன்மைகளையும் கூறுகிறது. சூடாமணி எண் வகைகளை மட்டும்[91] கூறுகிறதன்றித் திவாகரம் போன்று விளக்கங் காட்ட முயன்றிலது. அகராதி, சூடாமணிபோல் அங்கயோகம் எட்டன் பெயர்களை முதலிற் கூறிப் பின்னர்த் திவாகரம் போல் ஒவ்வொன்றின் வகைகளை இயமம்: (9) கொல்லாமை, (10) மெய்ம்மை கூறல், (11) கள்ளாமை, (12) பொருளிச்சியாமை, (13) இந்திரிய மடக்கல் எனவும், நியமம்: (14) தவம், (15) தூய்மை, (16) தத்துவ நூலோர்தல், (17) மனமுவந்திருத்தல், (18) தெய்வம் வழிபடல் எனவும், அவற்றுக்கு மேலும் பிங்கலம் போல் ஆதனம்: (19) சுவத்திகம், (20) கோமுகம், (21) பதுமம், (22) வீரம், (23) கேசரி, (24) பத்திரம், (25) முத்தம், (26) மயூரம், (27) சுகம் எனவும், (28) பிராணாயாமம்—பிராணவாயுவை இரேசகபூரகக்கும்பகஞ்செய்தல், (29) பிரத்தியாகாரம்—உபாதியை நீக்கி யுண்ணோக்கல், (30) தாரணை—கண்டம் இதயம் நெற்றிகபாலம் நாபி இவற்றிலொன்றிற் சந்ததம் சிந்தை வைத்தல், (31) தியானம்—ஐம்புலமடக்கிச் சிவயோகஞ் சேர்த்தல், (32) சமாதி—இந்திரியம் முதலிய தத்துவச் சேட்டைகட்கு ஏதுவாய் யாக்கையினின்று அவற்றோடு கூடினும் அவற்றிற்பற்றின்றியிருக்கும் ஆன்மாவாகிய தன்னைத்தான் காண்டல் என விளக்கியதோடமையாமல் மேலும் அவற்றின் உட்பிரிவுகளையும் விளக்கிக் காட்டுகிறது.[92]

அவ்விளக்கப்படி ஆதனத்தின் உட்பிரிவான (33) சுவத்திகம்—தொடைக்கும் முழங்காற்கும் நடுவே இரண்டு உள்ளங்காலையும் செலுத்தி இறுமாந்திருத்தல், (34) கோமுகம்—சகனப்பக்கத்தில் இருகாற்பரட்டையும் மாறவைத்து அவ்விருகாற் பெருவிரலைக் கைப்பிடித்திருத்தல், (35) பதுமம்—இரு தொடைமேலும் இரண்டுள்ளங் காலையும் மாற்றித் தோன்றவைத்தல், (36) வீரம்-வலத்தொடையில் இடக்காற்பரட்டைச் சேர்த்து இறுமாப்புற்றிருத்தல், (37) கேசரி—பீசத்தின்கீழ் சிவனியிடத்தும் பரட்டை வைத்திட முழங்கையை முழந்தாளில் வைத்திங்குலி விரித்து நாசியைப் பார்த்திருத்தல், (38) பத்திரம்—பீசத்தின் கீழ் சிவனியிடத்திருகாற் பரட்டையும் வைத்து அவ்விரு பதத்தையும் இருகையாலிறுகப் பிடித்து அசையாதிருத்தல், (39) முத்தம்—இடக்காற்பரட்டாற் சிவனியை யழுத்தி வலக்காற் படரப் பரட்டின் கீழ் அழுந்தவிருத்தல், (40) மயூரம்—முழங்கையிலிரண்டு முந்திப் புறத்திலழுந்தப் புவியிற்கையூன்றிக் கால் நீட்டித் தலை நிமிர்ந்திருத்தல், (41) சுகம்—சுகமுந்திடமும் எவ்வாறிருக்கின் எய்துமோ அவ்வாறிருத்தல் எனவும் விளம்புகிறார்.

அவ்விளக்க முறையினை இயலிறுதி வரிப்படம் காட்டும்.

இலக்கியங்கள், உரையாசிரியர்களின் குறிப்புக்களைத் தக்க வாறு பயன்படுத்தி அடிகள் விளக்கிய இடங்கள் பல காணப் படுகின்றன. அளவை எட்டென்பது பற்றி நிகண்டுகள் குறித்தில. ஆயின், அடிகள், ''காட்சி, அனுமானம், ஆகமம், அருத்தாபத்தி, உவமானம், அபாவம், சம்பவம், ஐதிகம்; அவையாவன: காணல்-காட்சி, புகையைக் கண்டு நெருப்புண்டெனல்-அனுமானம், மரை பசுப் போலென்னல்-உவமானம், பெரியோர் வாய்ச்சொல்-ஆகமம், பகலுண்ணான் பருத்திருப்பான் என்புழி யிரவி லொழித்துண்பான் என உணர்தல்-அருத்தாபத்தி, முன்னுமில்லை பின்னுமில்லை யொரு காலத்துமில்லையெனல் பாவம், இம்மரத்திற் பேயுளதென்ப தைதீகம், ஆயிரத்தில் நூறுண்டெனல்-சம்பவம்''[93] என விளக்குவது மணிமேகலையின் கருத்துக்களைத் தழுவியே.[94]

இறையனாரகப் பொருளுரையில் பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தருவம், அசுரம், இராக்கதம், பைசாசம் ஆகிய எண்வகை மணங்கள் விளக்கப்படுகின்றன.[95] இவற்றைச் சுருக்கித் தம் தொன்னூல் விளக்கத்தில், ''இவற்றுள், பிரமசாரிக்குக் கன்னியைத் தீமுன்னர்க் கொடுப்பது பிரமமணம்; தலைமகன் இனத்தார் வேண்டத் தலைமகள் இனத்தார் உட்பட்டு அவளைத் தீ முன்னர்க் கொடுப்பது பிசாபத்திய மணம்; ஒன்றிரண்டு பசுவும் எருதும் வாங்கிக்கொண்டு கன்னியைத் தீ முன்னர்க் கொடுப்பது ஆரிடமணம்; வேள்வியால் வந்த கன்னியைத் தீ முன்னர்க் கொடுப்பது தெய்வமணம்; கொடுப்பாருங் கேட்பாருமின்றி யிருவருந் தனியிடத் தெதிர்ப்பட்டுத் தாமே கூடுவது காந்தருவ மணம்; பெண்ணுக்குப் பொன் பூட்டிச் சுற்றத்தார்க்குப் பொன் வேண்டுவன கொடுத்துக் கொள்வதசுர மணம்; பெண்ணும் பெண்ணினத்தாரும் உடன்படாமல் வலிதிற் கொள்வது இராக்கத மணம்; துயின்றாள்மாட்டுச் சென்று கூடுவது பைசாச மணம்'' எனக் கூறுகிறார்.[96] இக்குறிப்புச் சற்றும் மாறாமல் அகராதியில் எண் வகை மணமாக இடம் பெறுகிறது.[97]

உரைக்குறிப்புகளன்றி, இலக்கண நூற்பாக்களின் தொடர்களைக் கொண்டு விளக்கிய பொருள்கள் சில. ''நூல் 3: முதனூல், வழி நூல், சார்புநூல். இவற்றுளொருவன் முன்கண்டுரைத்தது முதனூல்; முதனூல் வழியே விகற்பித்துரைத்த நூலே வழிநூல்; அவ்விருநூல் பொருட்கூட்டித் திரிபுவேறுடைய நூலே சார்பு நூல்'' எனக் கூறுவதும், ''நூற்பயன் 4: அறம், பொருள், இன்பம், வீடு'' என்பதும், திணையிரண்டென உயர்திணை அஃறிணைகளைக் கூறுவதும்[98] நன்னூல் இலக்கண நூற்பாக்களின் அடிப்படையில் எழுந்தனவே யாம்.[99]

உரை நான்கெனக் கூறிச் ''செய்யுட் கருத்துரைத்தலே கருத்துரை, சொற்றோறும் பதப்பயனுரைத்தலே பதவுரை, பொருட் டொகுத்துரைத்தலே பொழிப்புரை, இலக்கணமும் இலக்கியமும் எடுத்துக்காட்டிப் பொருள் விரித்துரைத்தலே யகலவுரை''[100] என விளக்கிக் காட்டுவது இலக்கண நூற்பா வழியே.[101]

பிற இலக்கண நூற்பாக்களன்றித் தம் தொன்னூல் விளக்க நூற்பா அடிப்படையில் எழுந்த விளக்கங்களும் உண்டு. தமிழ் நாட்டின் பிரிவுகளாகப் பதின்மூன்றினைக் கூறி அவற்றுள் செந்தமிழ் நாடு ஒன்று, கொடுந்தமிழ்நாடு பன்னிரண்டு என்பதும், செந்தமிழ் நாட்டின் எல்லைகளாக, ''இதற்கெல்லை கருவூரின் கிழக்கு, மருவூரின் மேற்கு, வைகையாற்றின் தெற்கு, மருதயாற்றின் வடக்கு''[102] எனக் குறிப்பதும் தொன்னூல் விளக்க நூற்பாவில் கொண்ட கருத்துக்களே.[103]

முன்னோர் பாடிய பாக்களின் உட்பொருள் கொண்டு விளக்க முற்பட்டனவும் உண்டு. செந்தமிழ் நாட்டைச் சூழ்ந்த கொடுந்தமிழ் நாடுகள் பன்னிரண்டு எனத் தென்பாண்டி, குட்டம், குடம், கற்கா, வேண், பூழி, பன்றி, அருவா, அருவாவடதலை, சீதம், மலாடு, புனனாடு ஆகியவற்றைக் குறிப்பது தம் தொன்னூல் விளக்கத்தில் எடுத்துக் காட்டுகின்ற வெண்பா ஒன்றின் அடிப்படையேயாம்.[104]

வகைகளைத் தெளிவிக்கும் பொருட்டுக் கதைக் குறிப்புக்களைப் புகுத்தி விரித்துக்காட்டலும் உண்டு. திருமாலவதாரம் பத்தென்றும், பதினைந்தென்றும் இருவகையான் உரைக்கப்படுகிறது. பத்துவகை அவதாரங்களை நிகண்டுகளும் குறிக்கின்றனவெனினும், பெயர்களை மட்டும் சுட்டுகின்றன. சதுரகராதியோ, ''திருமாலவதாரம் பத்து: மச்சம், கூர்மை, வராகம், நரசிங்கம், வாமனன், பரசுராமன், இராமன், பலபத்திரன், கண்ணன், கற்கி. இவற்றிற்குக் காரணம், வேதத்தைத் திருடிக் கடலிலொளித்த சோமுகாசுரனெனும் இராக்கதனைக் கொல்ல மச்சாவதாரம், கடலைக்கடையும்போது மந்தரமலையைத் தாங்கக் கூர்மாவதாரம், பூமியைப் பாயாக இரணியாக்கன் சுருட்டினதை விரிக்கவும் அவனைக் கொல்லவும் வராகவதாரம், இப்பழிவாங்கி சருவதேவ வணக்கம் விலக்கின வவன் றம்பியிரணியாகசிவனைக்கொல்ல நரசிங்காவதாரம்; இந்நான்கவ தாரத்திற்கும் தாயாரில்லை. மாவலியை யடக்கக் காசிபனும், திதியும் தந்தைதாயாகக் கொண்டது வாமனவதாரம், அரசராற்றாழ்த்தப் பட்ட பார்ப்போர் நிமித்தம் அவ்வரசரைக் கொல்லச் சமதக்கினியும் இரேணுகையும் தந்தை தாயாகப் பெற்றது பரசுராமவதாரம், இராவணன் முதலிய விராக்கதரைக் கொல்லத் தசரதனும் கௌசலை

யும் தந்தைதாயாக விராமாவதாரம், பிரலம்பன்முதற் பல இராக்க-தரை கொல்ல வசுதேவனும்தேவகியும் உரோகணியும் தந்தைதாயாகப் பல பத்திர ராமாவதாரம், பாரத நடத்த வசுதேவனும் தேவகியும் தந்தை தாயாகக் கண்ணனவதாரம், உலகங்களைச் சங்கரிக்கக் கற்கியவதாரம் எனப்புராணக் குறிப்புகளைச் சுருங்க உரைக்கிறது.[105]

கருத்து வேறுபாடுகட்கு இடனாயவற்றை விளக்கும் பொழுது தம்முடையதே முடிவானது என வலிந்து நிலைநாட்ட அடிகள் முயன்றிலர். பலராற்போற்றப்பெறும் சான்றோர் தம் கருத்துக்கட்கு உயர்ந்த மதிப்பளிக்கிறார். தொன்னூல் விளக்க அணியதிகாரத் தொடக்கத்தில். ''இவ்வதிகார நூலைப் புலமையின் மிக்க தண்டியென்பவர் விதித்துரைத்தமையாலவர் பெயர்கொண்டு தண்டியலங்கார மென வழங்கும். என்னை மணமகளணிநறு மாலை போலவுங், கனமிக மார்புறை கலனணி போலவு, மணிசுவர்க்கெழுதிய வடிவுருப்போலவு, மற்புதத் தனுவுறுப் படைமரப் பாவை, பொற்புறத் தீர்ந்த பொற்சுதை போலவுங், கற்றோ ருரைக்குங் கருதரும் பொருட்கே, மற்றோ ரணிதான் வழங்குமென் றுணர்க'' எனத் தண்டியலங்கார ஆசிரியரைச் சுட்டுகிறார்.[106] அவ்வாசிரியர் தம் நூலில் 35 பொருள் அணிகளை விளக்கிச் செல்ல அடிகள், ''அன்றியும் மேனிறுத்த முறையான் முன்னோர் தந்தவற்றுள் சிலவொழித்து மிகவுணர வேண்டியவற்றை விளக்கிச் செந்தமிழுணர்ந்தோர் நூலிலொழிந்த சிற்சில கூட்டியுணர்த்தும்''[107] எனக் கூறி, தன்மை, உவமை, உருவகம், வேற்றுப் பொருள்வைப்பு, வேற்றுமை, ஒட்டு, அவநுதி, ஊகாஞ்சிதம், நுட்பம், புகழ்மாற்று, தன்மேம்பாட்டுரை, பின்வருநிலை, முன்னவிலக்கு, சொல்விளக்கு, இலேசம், சுவை, உதாத்தம், ஒப்புமைக் கூட்டம், ஒப்புமை யேற்றம், விபாவனை, விசேடம், விரோதம், பிறிதுரை, விடையில் வினா, வினாவில் விடை, சித்திரம், ஒழிப்பு, அமைவு, சிலேடை, சங்கீரணம் ஆகிய முப்பதாகக்[108] கொண்டு விளக்குகிறார்.

நிகண்டுகள் மூன்றும் அலங்காரங்களின் தொகை 28 எனக் குறித்து,[109] உருவகம், உவமை, வழிநிலை, மடங்குதனவிற்சி, தீவகம், வேற்றுமை, வெளிப்படை, கருத்துப்படை, குறிப்புநிலை, சுருங்கச் சொல்லல், மிகுதிநவிற்சி, சொற்பின் வருநிலை, தன்மை, வேற்றுமைப் பொருள், சிறப்பு, சிலேடை, எதிர்மறுத்தல், உடனிலைக் கூட்டம், உவமானவுருவகம், பிறிதினவிற்சி, ஒப்புமைக்கூட்டம், நிதரிசனம், புகழ்ச்சி, பலபொருட் சொற்றொடர், ஐயம், உயர்வுநவிற்சி, கலவை, வாழ்த்து ஆகியவற்றைக் கொள்கின்றன.

தொகையகராதியில் அலங்காரவகைகளை விளக்கும் பொழுது நிகண்டுகளின் தொகையினையும் சுட்டாது, தாம் தொன்னூல் விளக்

கத்தில் குறிப்பிட்ட தொகையினையும்கொள்ளாது, தண்டியலங்காரம் குறிக்கும் 35 அணிகளைத் ''தன்மை, உவமை, உருவகம், தீவகம், பின் வருநிலை, முன்னவிலக்கு, வேற்றுப் பொருள்வைப்பு, வேற்றுமை, விபாவனை, ஒட்டு, அதிசயம், தற்குறிப்பேற்றம், ஏது, நுட்பம், இலேசம், நிரனிரை, ஆர்வமொழி, சுவை, தன்மேம்பாட்டுரை, பரியா யம், சமாயுதம், உதாத்தம், அவநுதி, சிலேடை, விசேடம், ஒப்புமைக் கூட்டம், விரோதம், புகழ்நிலை, புகழாப்புகழ்ச்சி, நிதரிசனம், புணர் நிலை, பரிவருத்தனை, வாழ்த்து, சங்கீரணம், பாவிகம்''[110] எனச் சுட்டுவது சான்றோரது கருத்துக்கட்கு அளிக்கும் சிறப்பினைப் புலப் படுத்துகின்றது.

சிலவிடங்களில் தொகையின் வகைகளை விளக்கி மேலும் அவற்றின் விரியை யுணர்த்துவதும் உண்டு. அவைபற்றிக் கருத்து மாறுபாடுகட்கு இடமுண்டேல், அவற்றையும் தொட்டுக் காட்டு வதனைப் பிறப்பின் தொகைப் பொருளினை விளக்குவதால் அறிய லாம். பிறப்பு வகையும், விரியும் பின்வருமாறு அமையும்.

பிறப்பு7	தேவர்	—	14,00,000	84,00,000	16,00,000
	மக்கள்	—	9,00,000		
	விலங்கு	—	10,00,000		
	புள்	—	10,00,000		
	ஊர்வன	—	11,00,000		
	நீர்வாழ்வன	—	10,00,000		
	தாவரம்	—	20,00,000		18,00,000

வகையும் விரியுங் காட்டி இறுதியில், "அன்றி தேவர் பதினாறு நூறா யிரமெனவுந் தாவரம் பதினெட்டு நூறாயிரமெனவும் கூறுப''[111] என்று கருத்து வேறுபாடுங் காட்டப்படுகிறது.

தொகைப் பொருள் ஒன்றற்கே, ஒரே எண்ணிக்கை கொண்ட இருவேறு வகைப்பொருள்கள் உளவாயின், ஓரினமாகக் கருதி ஒரே இடத்தில் பொருள் விளக்கம் செய்யப்படுகிறது. மூலம் பத்தெனக் கூறிக் ''கண்டங்கத்திரி வேர், சிறுவழுதுணைவேர், சிறுமல்லிவேர், பெருமல்லிவேர், நெருஞ்சிவேர் - இவ்வைந்தும் சிறுபஞ்ச மூலமென்ப; வில்வவேர், பெருங்குமிழம்வேர், தழுதாழைவேர், பாதிவேர், வாகை வேர் - இவ்வைந்தும் பெரும்பஞ்சமூலம் என்ப''[112] எனக் காட்டப் படுகிறது.

மூலம் 10

- கண்டங்கத்திரிவேர்
- சிறுவழுதுணைவேர்
- சிறுமல்லிவேர்
- பெருமல்லிவேர்
- நெருஞ்சிவேர்

} சிறுபஞ்சமூலம் (5)

- வில்வவேர்
- பெருங்குமிழம்வேர்
- தழுதாழைவேர்
- பாதிரிவேர்
- வாகைவேர்

} பெரும்பஞ்சமூலம் (5)

சிலசொற்களுக்கு உரிய பிறமொழிச் சொற்களும் விளக்கமாகத் தரப்படுகின்றன. மாதம் 12: சைத்திரம், வைசாகம், கேட்டம், ஆசாடம், சிராவணம், பாத்திரபதம், ஆசுவீசம், கார்த்திகம், மார்க்கசீரம், புசியம், மாகம், பாற்குணம். இவை முறையே சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை, மாசி, பங்குனி எனப் பகரப்படுகின்றன.[113]

தொகைகளின் வகைப்பொருள்களை விளக்குவதில் தொல்காப்பியம் எவ்வெம் முறைகளைக் கொள்ளுகிறதோ, அவ்வம்முறைகளெல்லாம் அகராதியில் ஆளப்படுவதோடு, அதிற் காணப்பெறாத முறையும் இடம் பெறுகிறது. முன்னர்த் தொகைகூறிப்பின்னர் வகைகூறி இறுதியில் தொகையாக வழக்கில் உள்ள சொற்களைக் கூறி முடிக்கும் முறை அத்தகையது. கண்டம்9: கீழ்விதேகம், மேல்விதேகம், வடவிதேகம், தென்விதேகம், வடவிரேபதம், தென்னிரேபதம், வடபரதம், தென்பரதம், மத்திம கண்டம் என விளக்கி இறுதியில் ''நவகண்டம் எனப்படும்'' எனக் குறிக்கப்படுகிறது. அவ்வாறே, கடுகம் என்பது விளக்கப்படுகிறது.[114]

கடுகம்—3

- சுக்கு
- திப்பிலி
- மிளகு

} திரிகடுகம்

5. சிறப்புச் செய்திகள்

தொன்னூல் விளக்கத்தில் அடிகளார் பொருளதிகாரப்பகுதியின்கண், ''தன்பொருடோன்றப், பல காரணவகையால் விரித்தவற்றையீற்றின்கண்ணொருங்குடன் தொகுத்துக் காட்டல் தொகைவழியெனப்படும். ஆகையிற் பிரிந்த படையணி கூட்டிப் பகையைத்

தாக்குவார் போலவும், கணையேதைத் துள்ளுருவக் கூர்முனை கூட்டுரு வார் போலவு, மேற்றின கோபுரமழகு பெற மேற்சிகரம் பொருத்து வார் போலவும், பூங்காவனத்திற் பிரிந்து பூத்த பன்மலரொரு செண் டாகத் தொடுப்பவர் போலவும், தானு நினைத்த பயனையடைதற் பொருட்டுப் பலதினைவகையால் விரித்துக்காட்டிய நியாயங்களொருப் படச் சுருக்கிக் கேட்போர்மனத் துள்ளூறவுரைப்பது தொகையெனக் கொள்க'' எனக் கூறுகிறார்.[115]

அக்கூற்றுச் செய்யுட்கள் பொருளினைப் புலப்படுத்தலாகும் தொகையாற்றலைக் குறித்ததெனினும் தொகையகராதி கூறும் தொகைப் பொருள்களுக்கும் பொருந்தும். ஈற்றிலே செய்யுட்கள் கூறி வந்த பொருளினைத் தொகுத்துக் கூறுதற்கு மாறாகப் பெரும்பாலும் அகராதியிற் றொடக்கத்தே தொகை கூறிப் பின்னர் பொருள் விரித் துரைக்கப் படுகிறதெனினும் செய்யுட்குரிய பொருட்டொகைச் சிறப் புக்கள் அனைத்தும் அகராதித் தொகைப் பொருட்கும் ஏற்றனவே.

அகராதியின் பிற பிரிவுகளோடு ஒப்பிட்டுத் தொகையகராதி யைக் காணுங்கால் சில தனித் தன்மைகள் காணப்படுகின்றன. சொற் குரிய பொருட்கள் பலவாக இருப்பின் அவற்றையும் அகர நிரலிற் கூறும் முறை பிற பிரிவுகளிற் காணப்பட இவ்வொரு பிரிவில் மட்டும் அவ்வாறின்றி அவை வழங்கு முறை அடிப்படையில் கூறப்படுகின்றன.

தமிழ் என்னுஞ்சொல் நான்கு பிரிவுகளிலும் விளக்கம் பெறுகிறது.[116] பெயரகராதியில், 'தமிழ்-இனிமை, ஓர் பாடை, நீர்மை' என மூன்று பொருள்கள் கூறப்படுகின்றன. அப்பொருள்களைத் தரும் தொடர்களிலமைந்த முதல் எழுத்துக்களாகிய இ-ஓ-நீ என்பன அகர நிரற்படி அமைந்துள்ளன. பொருள் அகராதியில், ''தமிழ்-திரமிடம், திரவிடம், திராமிடம், திராவிடம்'' எனத் தரப்படுகின்றன. அப்பொருள் தரும் சொற்களில் ஈற்றிலமைந்த ஈரெழுத்துக்களும் ஒன்றானவையாதலின், முதன் மூன்றெழுத்துக்கள் திரமி, திரவி, திராமி, திராவி என அகர நிரல் அடிப்படையில் அமைந்துள்ளன. நான்காவதாக அமைந்திருக்கிற தொடையகராதியில், பெயரக ராதியில் வழங்கப்பட்டுள்ள மூன்று பொருள்களே அவ்வம் முறைகளில் தரப்பட்டுள்ளன.

தொகையகராதியில் தமிழ் என்னுந் தொகைச்சொல்லுக்கு இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ் என மூவகைகளைக் காட்டு கிறார். முச்சொற்களில் முதல் எழுத்துக்கள் இ, இ, நா என்பன. முதலிரு சொற்கள், முதலெழுத்துக்களில் ஒன்றுபோலமைதலின், இரண்டாம் எழுத்துக்களையொட்டி அமைக்கப்பெற வேண்டும். அவ்

வாறாயின், இரண்டாம் எழுத்துக்களாக இருக்கின்ற ய, சை, ஆகிய வற்றுள் சகர இனவெழுத்தாகி 'சை' யகரத்திற்கு முன் அமைதல் வேண்டும். எனவே, அகர நிரற்படி அமைய வேண்டுமாயின் இசைத் தமிழ், இயற்றமிழ், நாடகத் தமிழ் என இருக்க அவ்வாறன்றி வழக்கிற் பயின்ற முறைநோக்கி இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் எனப் பொருள் வகைகள் கூறப்பட்டுள்ளன. இவ்வாறே தொகையகராதியில் தொகைச் சொற்கட்குமட்டும் அகரநிரல் பின்பற்றப்பட்டிருக்கின்ற தன்றி அவை விளக்கும் வகைப் பொருள்களுக்குப் பின்பற்றப்படவில்லை.

தொகையகராதியின் இறுதியில் இலக்கத்தொகை முறை கொடுக்கப்பட்டிருப்பது இப்பிரிவிற்குச் சிறப்பளிக்கிறது. சிற்றெண் றொடங்கிப் பேறெண் முறையாக, ஒவ்வோர் எண் டொகையிலும் என்னென்ன தொகைச் சொற்களுக்குப் பொருள் வகைகள் விளக்கப் படுகின்றன, என்பதனைக் காட்டும் பட்டியல் அஃதாகும். ஓரேவகை கொண்டனவாக ஒருமை, வீடுபேறு, ஆகியனவும் அடுத்து இருவகை கொண்டனவாக அக்குனிவிதேவர், அறம், ஆயுதவகை, ஆன்மா, இதி காசம், இருமை, எச்சம், சந்தம், கூத்துவகை, சுடர், திணை, தோற்றம், பொருள், மரபு, வினை, வைணவாகமம் ஆகியனவும், அவ்வாறே மூவகை, நால்வகை, ஐவகை என்னும் முறையில் பிறவும் விளக்கப்படுகின்றன.[117]

தொகையகராதியின் வகைப்பொருள்களில் அகரநிரல் பின் பற்றப்படாதிருக்க இலக்கத்தொகை முறையில் கூறப்படும்எண்களைச் சிற்றெண் டொடங்கிப் பேரெண் ஈறாகக் கூறும் முறையும் வகைப் பொருள்களில் அகரநிரல்முறையும் பின்பற்றப் பெற்றிருக்கின்றன.

இலக்கத்தொகை முறையினை ஈற்றில் அமைத்ததற்கு அடிகளா ருக்கு நிகண்டுகள் வழிகாட்டியிருக்கலாம்எனக் கருதுதற்கு இடமுண்டு. ஏனெனில் அவற்றுள் தொகைப் பொருள்களின் வகைகளை விளக்கும் பொழுது இலக்கத்தொகை முறை காணப்படுகிறது. எனினும் தொகை எண்கள் அகர நிரலாக இடம் பெற்றில. திவாகரத்தில் மூவகைப் பொருட்டொகையில், மும்மை, முப்பொறி, முச்செய்கை முக்குற்றம், முக்காலம், மூவிடம், மூவுலகு, முச்சுடர், முத்தீ, முச்சிவ வனல், முக்குணம், மூவகைத்தானம் என்ற முறையில் விளக்கப்பட் டிருக்கின்றன.[118] அகர நிரற்படி முக்காலம், முக்குணம், முக்குற்றம், முச்சிவவனல், முச்சுடர், முச்செய்கை, முத்தீ, முப்பொறி, மும்மை, மூவகைத்தானம், மூவகை மொழி, மூவிடம், மூவுலகு, என அமைந் திருத்தல் வேண்டும். இவ்வாறே பிங்கலம்,[119] சூடாமணி,[120] ஆகியவற்றிலும் தொகை எண்களில் அகர நிரல் பின்பற்றப் படாதிருக்கத் தொகையகராதி அகரநிரலமைத்துப் பயனளிக்கிறது.

ஒருமுறை விளக்கப்பட்ட தொகைப் பொருள், மீண்டும் தொகைப் பொருளுள் உட்பிரிவுத் தொகைப் பொருளாய் கூறப்பட வேண்டியிருப்பின் அவற்றின் வகைப்பொருள்களை விளக்காமல்விட்டுத் தொகைகளை] மட்டும் விளக்கி, அவற்றின்] விளக்கத்தை அவ்வவ் வரிகளிற் காண்க எனக் குறிப்புத் தரப்படுகிறது. இக்குறிப்பால் படிப் போர் எளிதில் அவற்றின் விளக்கங்களை வெவ்வேறிடங்களில் கண்டுணர வாய்ப்பு ஏற்படுவது மட்டுமன்றி. கூறியது கூறல் என்னுங் குற்றம் நேராமலும் காக்கப்படுவதால் அகராதியின் சுருங்கச் சொல்லுந் தன்மை சிறப்புப் பெறுகிறது.

''தத்துவம்-96, ஆன்மதத்துவம்-24, நாடி-10, அவத்தை-5, மலம்-3, குணம்-3, மண்டலம்-3, பிணி-3, விகாரம்-8, ஆதாரம்-6, தாது-7, வாயு-10, கோசம்-5, வாயில்-9; இவற்றுள்ளான்ம தத்துவ மான பூதம்-5, புலன்-5, ஞானேந்திரியம்-5, கருமேந்திரியம்-5 கரணம்-4. இவை தத்தம் வரியிற் காண்க''[121] எனக் குறிக்கப்படுவது அவ்வகைக்குச் சான்றாகும். ஆன்ம தத்துவத்தில் அடங்கிய பூதம், புலன், ஞானேந்திரியம், கருமேந்திரியம், கரணம் ஆகிய தொகை களைக் கூறி, அவற்றின் பொருள்களை விளக்காமல் விட்டார். ஆயினும் பூதம்-5; நிலம், நீர், தீ, காற்று, விசும்பு எனப் பூதத்தொகை யினையும், அவ்வவற்றிக்குறிய இடங்களில் விரிக்கிறார்.[122] நாடி, அவத்தை போன்ற பிறவற்றின் தொகைப் பொருள் வகைகளையும் உரிய இடத்தில் விளக்கியிருக்கிறார்.[123]

சமயப்பரப்புநராய அடிகளார் இறையடி சார்தல்பற்றிய குறிப் புக்களில் மிகுந்த கவனம் செலுத்தியதற்கான அறிகுறிகள் தொகைய கராதியில் காணப்படுன்றன. ஆன்மாவின் பெயர்கள் பதின்மூன்று எனப் பிங்கலம் குறிக்கிறது.[124] அடிகளார் பெயர்கள் பற்றிக் கவலையுறாமல் ஆன்மாவின் நோக்கத்தைக் கருத்திருத்தி, ''ஆன்மா-2, சீவான்மா, பரமான்மா. அவையாவன: சரீராவச் சின்னவான்மா, சீவான்மா, இதரபதார்த்தாவைசின்னவன்மா, பரமான்மா[125]'' என வகைகளை விளக்குகிறார். ''நற்குணங்கள்-10, மெய்யுரை, நல்வார்த்தை, இனியவை கூறல், பயன்படுசொல், இந்நான்கும் வாக்கினற்குணம்; கோயில் வலம்வரல், தவம் புரிதல், தானஞ்செயல் இம்மூன்றும் காயநற் குணம்; அருணினைவு, ஆசையறுத்தல், தவப்பற்று இம்மூன்றும் மன நற்குணம்''[126] என விளங்கும் குணங்கள் அனைத்தும் இறையருளை நாடத்துணைபுரிவனவே. ''சத்தி-3இச்சாசத்தி, ஞானாசத்தி, கிரியா சத்தி. இவற்று ளிச்சா சத்தி உயிர்க்குருவேசம், ஞானாசத்தி கருமங் களை யறிந்தூட்டல், கிரியா சத்தி உலகங்களாக்கல்'' என்பதும், ''சுப்பிரமணியர் பிரதானத்தலம்-6, திருப்பரங்குன்றம், திருச்சீரலை வாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுகள், சோலைமலை எனக்

கூறுவதும் சைவ சமயப் பற்றுதிக்குத் துணை நிற்பன.[127] அவ்வாறே ''வைணவாகமம்-2, பாஞ்சராத்திரம், வைகாநசம்" எனக் குறிப்பதும், திருமாலவதாரங்களைச் சுட்டுவதும் வைணவ சமயக் குறிப்புகளே.[128] புராணங்களைக் குறிக்குங்கால், சிவபுராணம் இவையெனவும் விட்டுணுபுராணம் இவையெனவும் பிரித்துக்காட்டுவது[129] நிகண்டுகளிற் காணப்பட்டில. அடிகளார் கிறித்தவராயினும் பிற சமயக் குறிப்புகளைத் தெளிவுற அறிந்த தன்மைக்கு அவை சான்று பகர்கின்றன எனலாம்.

அகராதியின் பிற பகுதிகளில் தாம் சார்ந்த கிறித்தவ சமயக் கோட்பாடுகளைப் புகுத்த முயன்றிராத அடிகளார், தொகையகராதிப் பகுதியில் புகுத்துவதால் அவர்தம் கொள்கைப்பற்றை உணர இது வழியாகும். ''ஈச்சுரன் முக்கிய குணம்-6: சருவஞ்சத்துவம், சருவேச்சுரத்துவம், சருவ நியத்திருத்துவம், சருவாந்திரியாமித்துவம், சருவ கற்பிதத்துவம், சருவசத்தித்துவம்...'' எனக் கூறுதலோடமையாமல், ''அன்றியும் தன்வயத்தனாதல், முதலிலனாதல், உடம்பிலனாதல், எல்லா நலமுளனாதல், எங்கும் வியாபகனாதல், எவற்றிற்குங் காரணனாதல்'' என்று மேலும் விளக்கந்தருவது.[130] கிறித்தவ சமய அரிச்சுவடி எனக் கருதத்தகும். இறைவனின் தன்மைபற்றி ஆறு இலட்சண மந்திரமாகிற, ''சருவேசுரன் தாமாயிருக்கிறார், அநாதியாயிருக்கிறார், சரீரமில்லாமலிருக்கிறார், அனந்ததயை சுரூபியாயிருக்கிறார், எங்கும்வியாபித்திருக்கிறார், எல்லாவற்றிற்கும் ஆதிகாரணராயிருக்கிறார்'' என்பதன் பொருளேயாகும்.[131]

பஞ்சமாபாதகங்கள் என்பது தமிழுலகவழக்கு; தலையான பாவங்கள் ஏழு என்பது கிறித்தவ உலக வழக்கு. பாதகம் பற்றிய தொகையில் முதலிற் பஞ்சமா பாதகங்களைக் குறித்துப் பின்னர், ''பாதகம்-எ-சித்தசமுன்னதி, அருத்தலோபம், காமம், வைடம்மியம், அசனப்பிரியம், கோபம், அதுட்டணம். இவை முறையே அகங்காரம், உலோபம், காமம், பகை, போசனப்பிரியம், காய்தல், சோம்பல். இவையேழுந்தலைமையான பாதகமெனப்படும்''[132] எனக் குறிப்பது சமயப்பிடிப்பினைக் காட்டுகிறது.

அமரர், சித்தர், அசுரர், தைத்தியர், கருடர், கின்னரர், நிருதர், கிம்புருடர், காந்தருவர், இயக்கர், விஞ்சையர், பூதர், பாசாசர், அந்தரர், முனிவர், வரகர், ஆகாய வாசியர், போகபூமியர் ஆகியோரைப் பதினெண் வானோர் கணங்களாகப் பிங்கலமும், திவாகரமும் குறிக்கின்றன.[133] சூடாமணி அமரர், அசுரர், தைத்தியர் ஆகியோரை விடுத்து, சாரணர், சுரர், விண்மீன் ஆகியோரைச் சேர்த்துப் பதினெண் கணமாகவே குறிக்கிறது.[134] அதற்குமாறாக,

அடிகளார், ''வானோர் கணம் - (9) - அக்கணத்தோராவார், பத்திச் சுவாலகர், ஞானாதிக்கர், பத்திராசனர், நாதகிருத்தியர், சத்துவகர், பலவத்தர், பிராதமிகர், அதிதூதர், தூதர்; இவையே நவ விலாச சபையாம். அவையாவன பத்திச் சுவாலகர்-கடவுளைக் குறித்த பத்தியினாலேயே சுவாலிக்கிறவர், ஞானாதிக்கர்-கடவுளைக்குறித்த ஞானத்திலாதிக்கம் பெற்றவர், பத்திராசனர்-கடவுளெழுந்தருளி யிருக்குந் தேவ சிங்காதனத்தைப் புகழ்ந்திருப்பவர், இவர் முதலாம் அர்ச்சியப் பிரபுத்துவமுடையோராம்; நாதகிருத்தியர்-நாதனுடைய கிருத்தியத்தை யவனருளாற் புரிபவர், சத்துவகர்-கடவுளருளாற் பற் பலவற்புதங்களைச் செய்யும் சத்துவம் பெற்றவர்-சத்திகரென்றுமாம், பலவத்தர்-கடவுட்டிருவுளப்படி செய்துங் கருமங்கட்கு வருமிடை யூற்றை யவனருளாற் றடுக்கும் பலாத்காரம் பெற்றவர், இவரிரண் டாமர்ச்சியப் பிரடித்துவமுடையோராம்; பிராதமிகர் - கடவுற் றிருவுள்ளப்படியே இராச்சிய சம்பத்தமான சாதாரண நன்மைகளை நடத்துந் தலைமை பெற்றவர், அதிதூதர் - அதிகப்பிரதான விசேடங்களை யுலகத்திலறிவிக்கத் தானாதிபதியாக வருபவர்கள், தூதர்-மனிதர் பிறந்தகண முதலாகத் தனித்தனியே யவரவரைப் பாதுகாத்து நன்னெறியினடத்தி மற்றும் பிரதான விசேடங்கட் கனுப்பப்படுவர், இவர் மூன்றாம் அர்ச்சியப் பிரபுத்துவமுடையோர்; அர்ச்சியப் பிரபுத்துவத்திற்கு அதீச்சுர பதவியென்பாருமுளர்''[135] என வானோர் கணம் ஒன்பதென்று, அவற்றின் வகைகளையும் தொழில் நிலைகளையும் முறைப்படத் தொகுத்துக் கூறுவது கிறித்தவ சமயக் கோட்பாடுகளுக்குட்பட்டனவே.

அடிகளாரது கலையார்வத்தைக் கண்டு மகிழ இப்பகுதி களமாய் அமைகிறது. ஆயகலைகள் அறுபத்து நான்கு எனத் தமிழுலகம் சொல்லியதேயன்றி அவையாவையென விளக்கிலது. நிகண்டுகளும் குறித்தில. அகராதி, அக்கரவிலக்கணம் முதல், அவத்தைப்பிரயோகம் ஈறாகக் கலைஞானம் அறுபத்து நான்கெனக் குறிக்கிறது.[136]

கலைகளின் உட்பிரிவுகள் ஒவ்வொன்றைப் பற்றியும் அடிகளாருக்குப் பரந்த அறிவு உண்டென்பதை இப்பகுதி காட்டுகிறது. சிற்பசாத்திரம் அறுபத்து நான்கு கலைகளுள் ஒன்று. சிற்பத் தொழில் உறுப்புக்களென கல், உலோகம், செங்கல், மரம், மண், சுதை, தந்தம், வண்ணம், கண்ட சருக்கரை, மெழுகு ஆகிய பத்தினைப் பிங்கலம் குறிக்கிறது.[137] சிற்பநூல்கள் பற்றி அது குறித்திலது. அடிகளாரோ, சிற்ப நூல்கள் யாவையென அறிந்து, ''சிற்பநூல் விச்சுவதருமம், விச்சுவேசம், விச்சுவசாரம், விருத்தம், தாவட்டம், நளம், மயம், அனுமான், பானு, கற்பாரியம், சிருட்டம், மான சாரம், வத்துவித்தியாபதி. பாரசாரியம், அரிடிகம், சயித்தகம்,

வாத்துபோதம், வித்தாரம், இந்திரம், வச்சிரம், சவுமம், விச்சுவ காசிபம், மகதந்திரம், விசாலம், சித்திரம், காபிலகாலயூபம், நாம சங்கிதை சாத்திகம், விச்சுவபோதம், ஆதிசாரம், வெகுச்சுருதம், மானபேதம்''[138] எனக் கூறுகிறார்.

இசைக்கலையினை அடிகளார் தெளிவாக அறிந்திருக்கிறார். பழந்தமிழ் இசைத்திறங்களை விளக்குவதோடன்றிப் பிற்காலத்தில் தமிழகத்தில் பெருவழக்காகிவிட்ட இசைவகைகளையும், இராகத் தகுதிகளையும், தாளம் - தாளப்பிரமாணங்களையும், அவற்றை விளக்கும் நூல்களையும் ஆழ்ந்து கற்றுத் தெரிந்திருக்கிறார். ''இராகத் தகுதி-4: இடம், செய்யுள், குணம், காலம்; இவற்றுளிடம் பற்றிய விராக மைந்திணையிராகம்; செய்யுட் பற்றிய விராகத்துள் வெண்பாவி ராகஞ் சங்கராபரணம், அகவலிராகந் தோடி, கலியிராகம் பந்து-வராளி, கலித்துறையிராகம் பைரவி, தாழிசை யிராகந் தோடி, விருத்த விராகங்கலியாணி, காம்போதி, மத்யமாவதி பலவும், உலாவி ராகஞ் சௌராட்டிரப், தோடையவிராகம் சௌராட்டிரம், நாட்டை, மங்களராகம், மங்கள கௌசிகம், தேவாரத்திராகம் பூபாளம், பிள் ளைக்கவிராகம் கேதாரகௌளம்; பரணிராகங் கண்டாரவம்; குணம் பற்றிய இராகத்துள் இரக்கராகம் ஆகரி, கண்டாரவம், நீலாம்புரி, பியாகடம, புன்னாகவராளி, துக்கவராகம் இரக்கராகங்களன்றி, வராளியின் மேலாம் மகிழ்ச்சி யிராகம் காம்போதி, சாவேரி, தனியாசி, யுத்தவிராகம் நாட்டை; காலம் பற்றியவிராகத்துள் வசந்தகால விராகம் காம்போதி, அசாவேரி, தனியாசி, அன்றியு மாலைராகங் கல்யாணி, காபி, கன்னடம், காம்போதி, யாமராகம், ஆகரி, விடியலி ராகம் இந்தோளம், இராமமலி, தேசாட்சரி, நாட்டை, பூபாளம், உச்சியிராகம் சாதங்கம், பூபாள நீக்கி நின்றமற்றவை யெக்காலத்தும் பொதுமைய''[139] எனத் தமிழ்ப்பாவகை, இலக்கிய வகைகட்குரிய விராகங்களை வரையறுத்துக் கூறுவது ஒவ்வொன்றினையும் அவ்வ வற்றிற் குரியவற்றோடு இசைத்தனுபவித்த பான்மையைப் புலப் படுத்துகிறது. மேலும், இராகம்-32 என, அவற்றின் பெயர்கள், சாதிகள், மனைவிகள், தேவதைகள் ஆகியோரை விரித்துரைத்து, ''இவையன்றிப் பலவகைப்பட்ட வழங்குமிராகம் பலவுளவை கூறிற் பெருகும்''[140] எனச் சுட்டுவதால் இசை நுணுக்கத்தில் அடிகளாருக் கிருந்த பரந்த அறிவு புலனாகிறது.

இராகங்களோடு நின்று இசையைச் சிறப்பிக்கும் தாளத்தை 5, 7, 9, ஆகிய மூன்று வகைகளில் பாகுபாடு செய்கிறார். தாளம், ஐந்தென்பதில் சச்சற்புடம், சாசற்புடம், சட்பிதாபுத்திரிகம், சம்பத்து வேட்டம், உற்படிகம் ஆகியவற்றைக் குறித்து ஒவ்வொன்றிக்குமுரிய மாத்திரையளவு, ஒவ்வொன்றும் ஈசனிடத்துப் பிறந்த இடம், உரிய சாதி ஆகியவற்றைக் காட்டுகிறார்.[141] தாளம் ஏழென்பதில் துருவம்,

மட்டியம், உரூபகம், சம்பை, திரிபுடை, அடதாளம், ஏகதாளம் ஆகிய வற்றைக் காட்டி மாத்திரை கூறுவதோடன்றி, துருவத்திற்குச் சரிகம சரிசரிக ரிசரிகம, மட்டியத்திற்குச் சரிசரிசரி சரிகம, உரூபகத்திற்குச் சரிசரிகம,சம்பைக்குச் ச-ரிக சரிகரிகம, திரிபுடைக்குச் சரிகசரிகம, அடதாளத்திற்குச் சரிகா, சரிகா, சரிகா-மா-மா-ஏகதாளத்திற்குச் சரிகம எனச் சுரங்களையும் புலப்படுத்துகிறார், மேலும் ஒவ்வொரு சாதிக்குமுரிய கால அளவுகளையும் சுட்டுகிறார். தாளம் ஒன்பதில், அரிதாளம், அருமதாளம், சமதாளம், சயதாளம், சித்திரதாளம், துருவதாளம், நிவிரிததாளம், படிமதாளம், விடதாளம் ஆகியவற்றை நவசத்திதாளம் என்கிறார். இவ்வாறு தாளத்தின் வெவ்வேறு வகைகளையும் அறிந்து காட்டியிருப்பது அடிகட்கு அவற்றில் உள்ள ஆழ்ந்த பயிற்சியைக் காட்டுகிறது.

தாளத்தின் தொடர்புடைய தாளதசபிரமாணம் எனப்படும் பத்தினை விளக்குகிறார். காலம், மார்க்கம், கிரியை, அங்கம், கிரகம், சாதி, களை, இலயை, யதி, பிரதாரம் ஆகிய பத்துப் பிரமாணங்களின் வகைகளைக் கூறி அவற்றின் உட்பிரிவுகளையும் சுட்டி விளக்குகிறார்.[142] அவற்றின் படி தாளப்பிரமாணத்தின் உட்பிரிவுகளுள் ஒன்றாய காலம்-கணம், இலவம், காட்டை, நிமிடம், துடி, துரிதம், இலகு, குரு, புலுதம், காகபதம் ஆகியபத்தாம். மேலும், அவற்றின் அளவுகளைத் தாமரையிதழ் நூறடுக்கியதிலோரிதழி லூசி செலுத்துங் காலம் கணம், கணம் எட்டுக் கொண்டது இலவம், இலவம் எட்டுக் கொண்டது காட்டை, காட்டை எட்டுக்கொண்டது நிமிடம், நிமிடம் எட்டுக் கொண்டது துடி, துடியிரண்டு கொண்டது துரிதம், துரிதம் இரண்டு கொண்டது இலகு, இலகு இரண்டுகொண்டது குரு, இலகு மூன்று கொண்டது புலுதம், குரு இரண்டு கொண்டது காகபதம் எனக் கணக்கிட்டுக் காட்டுவதும் இவ்வாறே. பிற பிரமாணங்களின் உட்பிரிவுகளையும் விளக்கி, இறுதியில் எஞ்சியவற்றை அவ்வவ் ''விலக்கணத்தாற் கண்டுணர்க'' எனக் குறிப்புத் தருவதும் அடிகளாருக்கு இசை நூற்களிலிருந்த நுண்மான் நுழைபுலத்தை நமக்குக் காட்டுவனவாகின்றன.

தமிழ் இலக்கிய வரலாற்றுக்குப் புதுக் குறிப்பொன்றை நல்கித் தொகையகராதி சிறப்புப் பெறுகிறது. சிற்றிலக்கிய வகைகள் தொண்ணூற்றாறெனத் தற்காலத் தமிழ் இலக்கிய வரலாற்று ஆசிரியர்கள் குறிக்கின்றனர். சிற்றிலக்கிய வகைகள் என அவற்றைப் பெயரிட்டழைப்பது சிறிதும் பொருந்தாது.[143] இலக்கியவகைகள் எனலே சாறும். அவற்றைப் பிரபந்தம் எனக் குறித்து அவை தொண்ணூற்றாறென்று எண்ணிக்கையிட்டு முதன் முதல் சுட்டியவர் அடிகளாரேயாவர்.

செய்யுட்களையும், நூல்களையும் தொகுத்து எண்ணிக்கை யிட்டுத் தொகையாகக் கூறுவது முன்னோர் மரபென்பது எட்டுத் தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு ஆகிய சங்க நூற்களால் தெளியலாம். அவ்வாறு தொகுக்குங்கால் ஒருசார் ஒப்புடையனவற்றைக் கண்டே தொகுத்தனர். எனினும் தொகுப் போர்க்குக் கிட்டாமையாலோ அல்லது வேறு காரணம் பற்றியோ அத்தொகுப்பில் அடங்காமற் சில விடுபட்டிருத்தல் கூடும். ஐம்பெருங் காப்பியங்கள் என மயிலைநாதர் குறிப்பிடும் தொகை அவ்வகைக் குறைபாடுடையதே.[144] எனினும் அவற்றை இன்னும் இலக்கிய வரலாற்றாசிரியர்கள் பின்பற்றி வருகின்றனர்.

சாதகம் முதற் சிறுகாப்பியம் ஈறாகப் பிரபந்தம் தொண்ணூற் றாறு வகைப்படும் என விளக்கப்படுகிறது.[145] இவற்றுள் தொன்னூல் விளக்கச் செய்யுள் மரபியல் முப்பத்தெட்டனுக்கு இலக்கணம் கூறி விளக்குகிறது.[146] செய்யுட்கள் பாவாலும் பொருளாலும் அளவாலும் வேறுபடப் பெயர் பெறுவனவும் உள என உணர்த்தும் ''பாப்பொரு ளளவாதி பலபெயருளபிற''[147] என்ற நூற்பாவின் பிற என்னும் மிகையான் மற்றும் ஐம்பத்தாறு பிரபந்தங்கள் உரையால் விளக்கப் படுகின்றன. நூற்பாவாற் கூறப்படுவன, உரையால் விளக்கப் பெறுவன, அகராதியிற் கூறப்படுவன ஆகியவற்றை ஒப்பு நோக் கினால்[148] தொன்னூல் விளக்கமே பிரபந்தம் 96 என்பதற்கு அடிப் படை என்பது தெளிவு.

நூற்பா கூறும் இலக்கியங்களைக் கொண்ட பிரபந்தங்களில் முதலிற் காணப்படும் தொகைநிலைச் செய்யுள் இடையில் எண்செய் யுளையடுத்து 44-ஆம் பிரபந்தமாக அகராதியில் இடம் பெறுகிறது. 2, 3-ஆம் நிலைகளில் இலக்கணம் கூறப்படும் பெருங்காப்பியம், காப் பியம் இறுதியில் 95, 96-ஆம் பிரபந்தங்களாக இடம் பெறுகின்றன. எண்ணால் பெயர் பெறுந்தன்மை கொண்ட எண் செய்யுளோடு,[149] பொருளிடம் காலம் தொழில்களாலும் பாட்டாலும் அளவாலும் பெயர் பெறுந்தன்மை கொண்ட தொகை நிலைச்செய்யுள்[150] ஒருசார் ஒப்புமையுடைமையான் அவர்கள் அடுத்தடுத்துக் கூறியிருக்கலாம். பெருங்காப்பியம், காப்பியம் ஆகியன சிறப்பு நோக்கி ஈற்றில் அமைக்கப்பட்டிருக்கலாம். நூற்பாவான் இலக்கணம் கூறப்படுகின்ற பிற பிரபந்தங்களின் நிரன் முறையைப் பின்பற்றியும் உரையால் விளக்கந்தருகின்ற நிரன் முறையில் மாறாமலும் இடையிடையே தொடர்புடையனவற்றை ஒன்றோடொன்று இயைத்துப் பெரும் பாலும் அமைக்கப்பட்டுள்ளதே அகராதியிற் கூறப்படும் பிரபந்தங் களின்நிரன் முறையாகும்.

தொன்னூல் விளக்கத்தால் நூற்பாவான் முப்பத்தெட்டும், பிற என்னும் மிகையான் ஐம்பத்தாறும் கொள்ளப்படுவதால் இரண்டு வகைகளிலும் 94 பிரபந்தங்களே ஆகின்றன. அவற்றுள்ளும் வஞ்சி மாலை, தசாங்கம் ஆகியன அகராதியில் இடம் பெறவில்லை. அவற்றை நீக்கித் தொன்னூல் விளக்கத்தில் கூறப்பட்ட 92 பிரபந்தங்களோடு சாதகம், வாயுறை வாழ்த்து, புறநிலைவாழ்த்து, எழுகூற்றிருக்கை ஆகிய நான்கு பிரபந்தங்களைக் கூட்டி 96 பிரபந்தங்களாக அகராதியில் இடம் பெறுகின்றன.

அடிகளாருக்குப் பிரபந்தங்கள் தொன்னூற்றாறு என்னும் வரையறையோடமைய வேண்டும் என்பது உள்ளடக்கிக்கை போலும். எனவே சிலவற்றைச் சேர்க்க எண்ணினார். ''வாழ்த்திருவகைப்படும்– வாயுறை வாழ்த்தும், புறநிலை வாழ்த்தும்''[151] எனக் கவியியல்பு உணர்த்தும் நூற்பா உரையில் அடிகளார் விளக்குகிறார். நவநீதப் பாட்டியலின் செய்யுள் மரபியல் மருட்பாவான் அமையும் பிரபந்தங்கள் புறநிலை வாழ்த்து, வாயுறைவாழ்த்து, செவியறிவுறூஉ, கைக்கிளை ஆகிய நான்கனைக் கூறுவதில்,[152] செவியறிவுறூஉ, கைக்கிளை ஆகியவற்றை மட்டும் கூறி வாழ்த்து, புறநிலை வாழ்த்துக்களை கூறாது விடுத்தல் பொருத்தமன்று எனக் கருதி அவற்றைச் சேர்த்திருக்கலாம். வெண்பாப்பாட்டியல், நவநீதப்பாட்டியல் ஆகிய நூல்கள் பிரபந்தங்களுள் பிள்ளைக்கவிக்கு முதன்மைத் தன்மை தந்து இலக்கணங் கூறிப் பிறகே மற்றவற்றிற்கு இலக்கணம் கூறுகின்றன.[153] பிற பிரபந்தங்கட்கு இலக்கணம் கூறாதொழியினும் பிள்ளைக்கவிக்கு நிகண்டுகள் இலக்கணங்கூறுகின்றன.[154] அடிகளாரும் அதன் சிறப்பினையுணர்ந்து தொகைநிலைச் செய்யுள், பெருங்காப்பியம், காப்பியம் ஆகியவற்றின் இலக்கணம் கூறியவுடன் பிள்ளைக்கவிக்குரிய இலக்கணத்தை முன்னர்க் கூறிப் பிறவற்றைப் பின்னரே தம் தொன்னூல் விளக்கத்தில் கூறுகிறார்.[155] எனினும் அகராதி படைக்க முற்பட்டபொழுது பிரபந்த இலக்கணங்களைத் தொகுக்குங்கால், பாட்டியல் நூல்களுள் காலத்தால் முற்பட்டதெனத் தகும் பன்னிருபாட்டியலில், பிள்ளைக் கவிக்கும் முந்திய சிறப்புச் சாதகம் என்பதற்குத் தரப்பட்டுள்ளதையும் அடைகூட்டி மேதகு சாதகம்[156] எனக் கூறப்பட்டுள்ளதையும் மனத்துட் கொண்டு அதனையும் பிரபந்த வகையில் சேர்த்து முதலாவதாகத் தாமும் வைத்தார். சித்திரகவிகளுள் ஒன்றாக எழுகூற்றிருக்கையைப் பிங்கலமும் திவாகரமும் குறிக்கின்றன.[157] சித்திரகவிகளின் வகைகளையும் இலக்கணங்களையும் தொன்னூல் விளக்கத்திலும் காட்டுகிறார்.[158] அவற்றுள் விளையாடும் பெற்றியாற் பாடற்குரியது எழுகூற்றிருக்கையே. எனவே, அதனைப் பிரபந்த வகைகளுள் ஒன்றாகச் சேர்க்க எண்ணி, ஆடிரூசல், ஆடாமோஷசலென்றிடப்பாடும் ஊசலைச் சாரவைத்தார் எனலாம்.

தொன்னூல் விளக்கத்தில் 94 பிரபந்தங்களைக் கூறியுள்ளமையால் அவற்றோடு இந்நான்கனையும் சேர்ப்பின் 98 ஆகும். அடிகளாரது எண்ணம் பிரபந்தங்களைத் தொண்ணூற்றாறெண வரையறுக்கவேண்டும் என்பதே. பல நேரிசை யாசிரியப்பாவில் பகை, வரைத் தாக்கச் செல்லும் வீரத்தைப் புகழ்வது வஞ்சிமாலையெனவும் மாற்றார்மேற் போர்குறித்துப் போகின்ற வயவேந்தர்வஞ்சிப்பூமாலை சூடிப்புறப்படும் படையெழுச்சிச் சிறப்பை யாசிரியப்பாவாற் கூறுவது போர்க்கெழு வஞ்சியென்றும் அடிகள் தொன்னூல் விளக்கத்தில் கூறுகிறார்.[159] இரண்டன் அடிப்படைப் பொருள் நோக்கு ஒன்றாதலின், போர்க்கெழு வஞ்சியை வைத்துக் கொண்டு, வஞ்சி மாலையைப் பிரபந்த வகைகளுள் ஒன்றாகக் கூறாது விடுத்தார். தசாங்கத் தொவ்வொரு பொருளொவ்வொரு வெண்பாவாகப் பத்துப்பாடலுமாமங்களம் பாடிய செய்யுள் தசாங்க மெனப்படும்.[160] தசாங்கப்பத்து, நேரிசைவெண்பாவாலரசன் படைத்த தசாங்கத்தினைப் பத்துச் செய்யுளாற் கூறுவது.[161] தசாங்கம் மங்களமாக ஒவ்வோர் அங்கத்திற்கும் ஒருவெண்பாவாக அமையத் தசாங்கப்பத்துப் பத்து நேரிசை வெண்பாக்களால் அமைகின்றது. இரண்டும் மாறுபாடு கொண்டன வல்ல; சிறு வேறுபாடு கொண்டனவே. எனவே தசாங்கப்பத்து இடம்பெறும்பொழுது தசாங்கம் தேவையன்று என விடுத்தார்.

படிக்காசுப்புலவரது சிவந்தெழுந்த பல்லவராயன் உலா நூலில் வருகின்ற, 'தொன்னூற்றாறு கோலபிரபந்தங்கள் கொண்டபிரான்' என்னுந் தொடர் பிரபந்தங்கள் தொண்ணூற்றாறெனக் கூறக் காரணமாகியிருக்கலாம் எனக் கருதுவர் ந.வீ. செயராமன்.[162] தொண்ணூற்றாரென வரையறுக்க அடிகள் நினைத்ததற்குத் திவாகரமே காரணம் எனக்கொள்வதே முற்றிலும் பொருந்தும். காவிய இயற்கையை விரிக்கப்புகுந்த திவாகரம்,

"விளம்பின தியற்கை விரிக்குங் காலை
யாரியந் தமிழால் நேரிதி னடக்கி
உலகின் றோற்றமும் ஊழியி னிறுதியும்
வகைசா றொண்ணூ றாறுவா தியரும்
வேத நாவினர் வேதிய ரொழுக்கமும்
ஆதி காலத் தரசர் செய்தியும்
மவ்வளர் நாட்டால் அறியு மாற்றலும்
ஆடியும் பாடியும் அறிவுவரக் கிளத்தல்[163]

எனக் கூறுகிறது. இந்நூற்பா தொன்னூல் விளக்கத்தில் ஆளப்படுகிறது.[164] சிறுபாடபேதங்களுடன் காணப்படுகிறது எனினும், இந்நூற்பாவில் வரும், "வகைசாறொண்ணூறாறு" என்னுந் தொடரே பிரபந்தம் தொண்ணூற்றாறென வரையுறுக்க[165] அடிகளாருக்கு இட

மளித்தது எனத் துணியலாம். ஏனெனில், இதற்கு அடுத்த நூற்பா திவாகரத்தில் பிள்ளைப் பாட்டியல்பினைக் கூறுகிறது. வெண்பாப் பாட்டியல் நவநீதப்பாட்டியல் ஆகியனமுதன் முதலில் பிள்ளைக்கவி இலக்கணமே கூறுகின்றன. ஆனால் பன்னிருபாட்டியலைப் பின்பற்றி முதலிற் சாதகத்தைக் கூறி அடுத்துப் பிள்ளைக் கவியைஅகராதி கூறு கிறது. தொகையகராதி இவ்வாறு இலக்கிய வரலாற்றில் நிலைத்த இடம்பெறுதற்கு இவைபோன்ற செய்திகள் காரணங்களாகின்றன.

மேற்கோள்கள்

1 தொல்காப்பிய மொழியியல், பக். 318.
2 ...., 368.
3 தொல்காப்பியம், நூற்பா, 775, 482.
4 .... 686, 685.
5 பின்னிணைப்பு-10.
6 தொர்ல்காப்பியம், நூற்பா, 986, 64, 81, 1052, 1526, 947, 170 687, 1598, 493, 8, 1061, 1002, 647, 1195, 1307, 1022, 1468, 1006, 103, 693, 1259, 1, 1195, 1092, 1307, 1307, 1358.
7 ...., 1002, 1021.
8 ...., 33.
9 ...., 1195, 1307, 1468, 1006, 103, 693, 103, 1259, 1, 1307, 1358.
10 ....,1245, 1246.
11 ...., 1188.
12 ...., 1468, 1469, 1470, 1471,-1489.
13 ...., 546, 547.
14 ...., ,1345, 1346, 1225, 1226.
15 பின்னிணைப்பு-11.
16 தொல்காப்பியம், நூற்பா, 1336.
17 ...., 1307, 1358.
18 ...., 1293, 1294, 1295, 1296, 1297, 1307.
19 தொல்காப்பியம், நூற்பா, 1307, உரை.
20 தொல்காப்பியம், நூற்பா, 948, 493, 1052, 44, 1311, 1526.

21 பின்னிணைப்பு-12.
22 தொல்காப்பியம், நூற்பா, 1057, 1060, 1197.
23 பின்னிணைப்பு-13.
24 பதிற்றுப்பத்து, 20-2.
25 ...., 21-2.
26 ... ., 21-13.
27 பாலைக்கலி, 1-4.
28 ...., 8-18.
29 நெற்தற்கலி, 3-8.
30 சிறுபாணாற்றுப்படை, 113.
31 பெரும்பாணாற்றுப்படை, 30.
32 புறநானூறு, , 2-15.
33 பெரும்பாணாற்றுப்படை, 33.
34 திருக்குறள், 5,62,383,27.
35 பின்னிணைப்பு-14.
36 திவாகரம், பக். 151, 151, 154, 155.
37 திவாகரம், பக். , 150; திருக்குறள்;5.
38 ...., 152; ...., 731, 734, 735.
39 ...., 156; ...., 402.
40 ... ., 156, ... , 381.
41 ... ..., 15), 151
42 ...., 165, 166.
43 ... ..., 11, 125.
44 ... ..., 101, 56.
45 சுந்தரசண்முகம், பக். 173.
46 பிங்கலம், நூற்பா, 323-447.
47 ... ..., 313, 322.
48 ... ., 323, 338, 327, 331, 413, 406, 434, 436.
49 ....- 312.
50 திவாகரம், பக். , 150
51 ... ..,323 15.
52 . .. ., 333
53 ... .,15 , 152 பிங்கலம், நூற்பா 334-353.
54 பிங்கலம், நூற்பா ,55.
55 ... . , 274.
56 ...., 105.
57 .... , 1332.
58 பின்னிணைப்பு-15
59 திவாகரம், பக் 1 4; பிங்கலம், நூற்பா, 178-182.
60 பிங்கலம், நூற்பா, 2,71,72, 12,19,20,109,454,776.

61 .. .., 323, 324, சூடாமணி, 12- ஆம் தொகுதி, பாடல்,1.
62 சூடாமணி,12-ஆம் தொகுதி, பாடல், 2-4.
63 திவாகரம், பக். 150.
64 சூடாமணி, 12-ஆம் தொகுதி பாடல்,4.
65 ....
66 .... ,13.
67 ...., 122, 129, 130, 131, 132, 133, 139.
68 ...., 227, 128.
69 பின்னிணைப்பு -16.
70 சதுரகராதி- தொகை. பக். 3.
71 திவாகரம், பக். 125.
72 பிங்கலம்,நூற்பா, 1403, 1404.
73 சதுரகராதி-1, தொகை. பக். 3.
74 சூடாமணி, 12-ஆம் தொகுதி, பாடல்
75 சதுரகராதி-1, தொகை. காப்புப்பாடல்.
76 ....,
77 திவாகரம், பக். 162.
78 பிங்கலம், நூற்பா ,769-772.
79 சூடாமணி, 12-ஆம் தொகுதி, பாடல், 37,94.
80 சதுரகராதி-1, தொகை. பக். 2.
81 திவாகரம், பக். 152. பிங்கலம், நூற்பா 373, சூடாமணி, 12-ஆம் தொகுதி, பாடல், 14
82 சதுரகராதி-1. தொகை, பக். ,1.
83 திவாகரம், பக். 154. பிங்கலம், நூற்பா ,382; சூடாமணி,12-ஆம் தொகுதி, பாடல், 39.
84 சதுரகராதி-1, தொகை. பக். 1.
85 திவாகரம். பக். 161.
86 சூடாமணி, 12-ஆம் தொகுதி, பாடல்,106.
87 சதுரகராதி-1, தொகை. பக். 1.
88 சிலப்பதிகாரம், ஊர்சூழ்வரி, 18.
89 திவாகரம்,பக். 158.
90 பிங்கலம், நூற்பா, 419-427.
91 சூடாமணி, 12-ஆம் தொகுதி, பாடல், 83.
92 சதுரகராதி-1, தொகை. பக். 1.
93 ...., 3.
94, மணிமேகலை, சமயக் கணக்கர் தந்திறங்கேட்ட காதை.
95 இறையனாரகப் பொருள், நூற்பா, 1,உரை.
96 தொன்னூல் விளக்கம், நூற்பா,299, உரை.
97 சதுரகராதி-1, தொகை. பக். 29.
98 ....,

99 நன்னூல், நூற்பா, 5-8,10, 261.
100 சதுரகராதி-1, தொகை. பக். 6.
101 நன்னூல், நூற்பா, 21.
102 சதுரகராதி-1, தொகை. பக். 12.
103 தொன்னூல் விளக்கம், நூற்பா, 301, உரை
104 .. ..,
105 சதுரகராதி-1, தொகை. பக். 16.
106 தொன்னூல் விளக்கம், நூற்பா, 301, உரை.
107 ....,
108 ...., 326.
109 திவாகரம், பக். 163; பிங்கலம், நூற்பா, 1370; சூடாமணி, 12 ஆம் தொகுதி, நூற்பா , 125-127
110 சதுரகராதி-, தொகை. பக். 2.
111 ...., 27.
112 ...., பிற்சேர்க்கை.
113 ...., பக். 30.
114 ...., 8, 7
115 தொன்னூல் விளக்கம், நூற்பா, 163.
116 சதுரகராதி-1, பெயர். பக். 90; பொருள், பக். 39; தொகை. பக். 12. தொடை. பக். 38.
117 ...., தொகை. பக். 34, 35, 36.
118 திவாகரம், பக். 150,151.
119 பிங்கலம், நூற்பா, 334-341. 345,349-353.
120 சூடாமணி, 12-ஆம் தொகுதி, பாடல், 4-8,11,13.
121 சதுரகராதி,1 தொகை. பக். 12.
122 .... , 28, 28, 12, 8, 8.
123 ...., 18, 2.
124 பிங்கலம், நூற்பா, 312.
125 சதுரகராதி-1, தொகை. பக். 3.
126 ...., பிற்சேர்க்கை.
127 ...., 34, 16.
128 ...., 34, 16.
129 ...., 27.
130 ...., 5,
131 சின்னக் குறிப்பிடம் , பக். 1.
132 சதுரகராதி-1, தொகை. பக். 20.
133 பிங்கலம், நூற்பா, 92; திவாகரம், பக். 162.
134 சூடாமணி, 12-ஆம் தொகுதி, பக். 34 .
135 சதுரகராதி-1, தொகை. பக். 33.
136 பின்னிணைப்பு-17.

137 பிங்கலம், நூற்பா,141.
138 சதுரகராதி-1, தொகை. பக். 11.
139 ...., 4.
140 ...., 4.
141 ...., 13.
142 ...., 14.
143 இன்னாசி, சூ.3 பக். 52.
144 ....
145 சதுரகராதி-1, தொகை. பக். 20.
146 தொன்னூல் விளக்கம், நூற்பா, 253-282.
147 ...., 283.
148 பின்னிணைப்பு-18.
149 தொன்னூல் விளக்கம், நூற்பா, 283 உரை.
150 ...., நூற்பா, 253.
151 .... 299 உரை.
152 நவநீதப்பாட்டியல், நூற்பா, 55.
153 வெண்பாப்பாட்டியல், செய்யுளியல், நூற்பா, 6-8; நவநீதப் பாட்டியல் நூற்பா, 26-32.
154 திவாகரம், பக். 164; பிங்கலம், நூற்பா, 368, 1369; சூடாமணி 12-ஆம் தொகுதி, பாடல், 111-112.
155 தொன்னூல் விளக்கம், நூற்பா, 257.
156 பன்னிரு பாட்டியல், நூற்பா, 171.
157 பிங்கலம், நூற்பா, 368; திவாகரம், பக், 153.
158 தொன்னூல் விளக்கம், நூற்பா, 299, உரை.
159 ...., 199, 203.
160 ...., நூற்பா, 263, உரை.
161 ...., பக். 205.
162 செயராமன், ந. வீ. பக். 16.
163 திவாகரம், பக். 164.
164 தொன்னூல் விளக்கம், நூற்பா, 299 உரை.
165 பின்னிணைப்பு, 1-இல் காண்க.


A சூடாமணி [1 முதல் 8]
B திவாகரம் [1 முதல் 18]
C பிங்கலம் [1 முதல் 32]
D சதுரகராதி [1 முதல் 41]
அங்கயோகம்

இயல் 7

தொடையகராதி

1 தொடைகளுள் எதுகை

செய்யுள் யாப்பிற்கு நயமூட்டுவன தொடைகள் எனலாம். அவை மோனை, எதுகை, முரண், இயைபு, அளபெடை எனவும் அவற்றின் வகை இணை, பொழிப்பு, ஒரூஉ, நிரனிறை, இரட்டை எனவும் வேறு செந்தொடை எனவும் விரி 13708 எனவும் தொல்காப்பியம் கூறும்.[1] மேலும் விரிப்பின் வரம்பிலவாகும்[2] எனக் கூறுவதினின்று சீர்களில் எழுத்துக்கள் அமையும் இடம், அவ்வெழுத்துக்களுள் ஒன்றற்கொன்று உள்ள தொடர்பு இவையெதுவும் இல்லா திருப்பினும் விழுமிய பொருள் மட்டுமே கொண்டு அதனைச் செந்தொடையெனக் குறிப்பதினின்றும் செய்யுள் சொன்னயம் பெறத் தொடை விகற்பம் வேண்டியது என்பது புலப்படும்.

தொடைகளுள் சிறப்பாக அமைவன மோனையும் எதுகையும் ஆம். மோனையே முதலில் இடம் பெறுகிறது.[3] சங்க யாப்புடையாரும் 'முந்திய மோனை' எனக் குறிப்பர்.[4] எதுகையும் அதனின் சிறப்பாய் அமைந்துள்ளமை காண்கிறோம். பொதுவாகத் தொடையியல்புகளைக் குறிக்குங்கால் எதுகைக்குச் சார்த்தி அவ்வியல்புகளைப் பிறவற்றிற்கும் பெற வைக்குந் தன்மை காணப்படுகிறது. ''ஒரு சீர் இடையில் தொடைப்படாது நின்று எதுகைத்தொடை அமையுமெனில் அது பொழிப்பெதுகைத் தொடை எனக் கூறுதல் புலவரது நெறியாம்''[5] எனக் கூறப்படுகிறதன்றிப் பிற தொடைகளை முன்னிறுத்திக் கூறப்படவில்லை. ''எதுகை என ஓதினாராயினும், வந்தது கொண்டு வாராதது முடித்தல் என்பதனால் மோனை, இயைபு, முரன், அளபெடை என்பனவும் பொழிப்புத் தொடை பெறும் எனக் கொள்ளப்படும்'' என இளம்பூரணர் கூறுவது போன்று பிற தொடைக்கும் அக்குறிப்புப் பொருந்தும் எனினும் தலைமையிடம்

பெறுவது எதுகைத் தொடையே. ''இங்ஙனம் எதுகையைப் புலப் படவைத்து ஏனைய அருந்தா பத்தியாற் கூறியது, எல்லாவற்றிலும் எதுகை சிறந்து தோன்றுதல் கருதி''[6] என்னும் நச்சினார்க்கினியர் உரை அதனை உறுதிப்படுத்தும்.

மோனை எதுகைத் தொடைகளுள்ளும் அடிதோறும் அமைவனவே முதன்மையன வென்பது, அடிதொறும் தலையெழுத்து ஒப்பது மோனை, அஃதொழித்து ஒன்றின் எதுகை, ஆயிரு தொடைக்கும் கிளையெழுத்து உரிய என விதந்து கூறும் குறிப்புக் களால் பெறலாம்[7]. மேலும் செய்யுள் என்பது பல அடிகளால் அமைவது. ஓரடிக்குள்ள சீர்களைத் தொடுக்குந் தொடைகளிலும் அடிகளைத் தொடுப்பனவே செய்யுளுக்கு விழுமிய ஓசையை நல்க வல்லன. மனனம் செய்தற்கு உறுதுணையாவன.

தொல்காப்பியம் சூத்திர யாப்பால் அமைந்தது. பொருளினைத் தெளிவு பெற விளக்க யாப்பினுள் தோன்ற அமைப்பதே சூத்திர மாகும்[8]. அடிவரையறையை நீக்கிவிட்டால் ஆசிரியப்பாவிற்கு நிகரெனக் கொள்ளலாம்[9]. தொல்காப்பியச் சூத்திரங்கள் அனைத் தையும் ஆராய்ந்தால், பிறதொடைகளைக் காட்டிலும் மோனை, எதுகைத் தொடைகளே மிகுதியும் பெற்றுள்ளனவென்பதும்; மோனையினும் எதுகை மிகுந்துள்ளதென்பதுவும் காணப்படும்.

செய்யுளியலில் 241 நூற்பாக்கள் உள்ளன. அவற்றுள் ஓரடியால் 90 நூற்பாக்களும் ஈரடியால் 104 நூற்பாக்களும் அதற்கு மேற்பட்ட அடிகளால் 47 நூற்பாக்களும் இன்றைய பதிப்புகளில் அமைந்துள்ளன[10]. ஓரடியில் 34 நூற்பாக்களுள் மோனையும் 22 நூற்பாக்களுள் எதுகையும் இடம் பெறுகின்றன. பிற தொடைகள் இவைபோன்று பெருவரவிற்றில. மோனை, எதுகை இரண்டனுள்ளும் ஓரடி நூற்பாக்களுள் மோனையே மிகுதி.

பல அடிகளாலான நூற்பாக்களே அடிமோனை அடிஎதுகைக்கு இடந்தரும். ஈரடிகளாலானவற்றுள் 7 நூற்பாக்களுள் மோனையும், 32 நூற்பாக்களுள் எதுகையும் அமைந்துள்ளன. மூவடியும் அதற்கு மேற்பட்டும் அமைந்த நூற்பாக்களுள் அடிகள் முழுமையும் அமையா விட்டாலும் ஓரளவிற்கேனும் அடிமோனை 16 நூற்பாக்களிலும், அடி யெதுகை 21 நூற்பாக்களிலும் அமைந்துள்ளன.[11] இவற்றினின்று பலவற்றுள்ளும் பல வடிகளால் அமையும் செய்யுட்கட்கு எதுகைத் தொடையே மிகுதியும் சிறப்பளிப்பது எனத் தெரியலாம்.

சிறப்புடைய எதுகையும் பிற்காலத்தை நோக்கப் பழங்கா-லத்தில் பெருவழக்காக ஆளப்படவில்லை. தொல்காப்பியத்தில் இவ்-

வகைத் தொடை நயம் காணப்படாத நூற்பாக்கள் பலவாக உள்ளன. ஆயின் பொருட் கூற்றடிப் படையில் அமைந்து உரியியல் சற்று மாறுபட்டுத் தோன்றுகிறது. ஓரடி நூற்பாக்கள் 86, ஈரடி நூற்பாக்கள் 8, அதற்கு மேற்பட்ட அடிகளாலான நூற்பாக்கள் 4 கொண்ட உரியியலில்[12] அடிஎதுகைக்குப் பெரும் வாய்ப்பின் றென்னும் அத்தொடையின் சாயல் மிகுதியாகப் படிந்திருப்பதை நுணுகிக் காண முடிகிறது.

ஈரடி நூற்பாக்களுள், மூன்றனுள் அடிஎதுகை இடம் பெறு கின்றது.[13] இரண்டடிகட்கு மேற்பட்டமைந்த நூற்பாக்கள் மூன்றனுள் அடிஎதுகை ஓரளவு அமைந்துள்ளது.[14] ஆனால் ஓரடி நூற்பாக்களுள் ஒன்றனையடுத்து ஒன்றமைந்திருக்கும் நிரன்முறையில் எதுகை நயம் காணப்படுவது உரியியலின் தனிச் சிறப்பாகிறது.

''உருவுட் காகும்; புரை உயர்வாகும்''[15] என்னும் நூற்பாவினையடுத்து, ''குருவும் கெழுவும் நிறனாகும்மே'' என்னும் நூற்பா உள்ளது. இவற்றுள் உரு, குரு என்பன எதுகைத் தொடையமைப்புடையவை. இரண்டனையும் தனித்தனியாகக் காண்டற்கு மாறாக ஒன்றாக நோக்கினால் அடியெதுகையமைந்த ஈரடி நூற்பா போற்றோன்றும். இவ்வாறே செல்லல் மல்லல்,[16] சீர்த்தி கூர்ப்பு,[17] கதழ்வு அதிர்வு,[18] கெடவரல் தடவும்,[19] பிணையும் பணையே,[20] கழுமென் செழுமை விழுமம்,[21] கலவு துவைத்தல்[22] கறுப்பும் நிறத்துரு[23] எனத் தொடக்கம் பெறும் நூற்பாக்களை ஒன்றாகக் கருதினாலும் பொருள் மாறுபாடின்றி அடியெதுகைத் தொடை அமைந்தன போல் காணப்படுகின்றன.

நூற்பாக்களின் நிரன்முறைக்கு எதுகை நோக்கே காரணமாகலாம் எனத் தெரிகிறது. ஏனெனில் அச்சப் பொருள் பயக்கும் உருவோடு, நிறப்பொருள் பயக்கும் குருவுக்குப் பொருட்டொடர்பில்லை. இன்னாமையைக் குறிக்கும் செல்லலுக்கும் வளத்தைக் குறிக்கும் மல்லலுக்கும் பொருத்தம் வேறுவகையால் அமையவில்லை. மோனைத் தொடை நோக்கும் நூற்பாக்கள் தொடருங்கால் அமைந்திருக்கிற தெனினும் எதுகை அமைப்பை நோக்கக் குறைவே.[24] ஓரடி நூற்பாக்களுக்குள் நோக்கினும் எதுகையமைப்பினும் மோனை அமைப்பு நூற்பாக்கள் குறைவே. எனவே தொடைச் செல்வாக்குப் பெருகியிராத தொல்காப்பியத்துள், குறிப்பாக உரியியலுள் எதுகைத் தொடைச் செல்வாக்குக் காணப்படுகிறது தெளிவு.

2 எதுகையின் வளர்ச்சி

தொல்காப்பியத்திற்குப் பின்னரெழுந்த சங்கப்பாடல்கள் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு என வரையறை கொண்டன. எட்டுத் தொகையில் கலித்தொகை, பரிபாடல் நீங்கியபிறவும், பத்துப்பாடல் அடங்கிய பத்து நெடும் பாட்டுக்களும் ஆசிரியத்தால் அமைந்தவை. பாக்கட்குச் சொன்னயங் கூட்டும் எதுகை முதலிய தொடைகள் அப்பாடல்களில் ஆங்காங்கு அமைந்துள்ளனவெனினும் நிறைவாக இல்லையெனலாம்.

பிறதொடைகளோடு அடியெதுகையை ஒப்பிடுங்கால், சற்று மிகுதியாகக் காணலாமெனினும் அனைத்துப் பாடல்களிலும் அமைந்த தாகக் கொள்ளற்கிடமின்று. அடியெதுகையின்றியே அமைந்த பாடல்கள் உண்டு. கயமனார் பாடிய 'யாயாகியளே' எனத் தொடங்கும் குறுந்தொகைச் செய்யுள், இளநாகனார் பாடிய ''நன்னுதல் பசப்பினும்'' எனத் தொடங்கும் நற்றிணைப்பாடல், ,களம்புகல் ஓம்புமின்' எனத் தொடங்கும் புறநானூற்றின் 87-ஆம் பாடல் போன்ற பல பாடல்கள் அடியெதுகையின்றியமைந்துள்ளன. அமைந்துள்ள பாடல்களிலும் அடிதோறும் எதுகையுள்ளது எனச் சொல்லுதற்கில்லை. மேலும் ஒரு பாடலில் வருவன அனைத்தும் ஓரெழுத்தெதுகையான் இயன்றனவல்ல.

பத்துப்பாட்டுள்ளும் அடியெதுகை என்ற அளவில் ஆயத்தலைப் பட்டால், ஓரளவே அமைந்துள்ளது. முல்லைப்பாட்டு, சிறுபா- ணாற்றுப்படை போன்றவற்றில் பாதி அடிகட்குமேல் பல்வேறு எழுத்துக்களைக் கொண்ட எதுகைகளைக் காணலாம். பிறவற்றில் எதுகையின் வரவு குறைவே. தொல்காப்பியத்தில் ஒன்றுக்கு மேற் பட்ட அடிகளைக் கொண்ட நூற்பாக்களை நோக்க, எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகியவற்றுள் எதுகையின் வருகை மிகுதியாக இன்றேனும் ஓரளவு அதிகமெனலாம்.

பழங்காலச் செய்யுட் புலவர்கள் தம் பாக்கட்குச் சிறப்பளிப்பது சொன்னயத்திலும் பொருணயமே எனக்கொண்டிருந்த எண்ணம் பிற்- காலத்தை நோக்கக் குறைவான அளவில் தொடை நயங்கொண்டன- வாக அப்பாடல்கள் அமைந்ததற்குக் காரணமாகலாம். தொல்காப்பிய நூற்பாக்களை நோக்க, சற்று மிகுதியாக அமைந்ததற்குத் திட்ப நுட்பஞ் செறிந்தனவாக அமைய வேண்டுமென்னும் நூற்பாக்கட்டுப் பாடு ஆசிரியப்பாவிற்கு இன்மை ஏதுவாயிருத்தல் கூடும்.

பழங்கால நூல்களுள் பதினெண்கீழ்க்கணக்கில் அமைந்துள்ள பாடல்கள், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகியவற்றின் பாடல்-

களினின்று யாப்பமைதியில் வேறுபட்டு வெண்பாயாப்பினைப் பெரும்பான்மையும் மேற்கொண்டன. ஆசிரியப்பாக்களைப் போல மிகுதியான அடிகளின்றி, வெண்பா யாப்பில் நாலடிகளைக் கொண்டமைதலே பெருபான்மையாயினமையின், பொருணயத்தைப் போன்றே சொன்னயமும் அந்நான்கு அடிகளில் அமையுமாறுபாடுதலில் புலவர்கள் கருத்தைச் செலுத்தினர் எனலாம். எனவே, வெண்பா யாப்பில் தொடைவிகற்பங்களும், குறிப்பாக எதுகைத்தொடையும் அடிதோறும் அமைவதாயின, ஈரடிக்குறள் வெண்பாவில் அமைந்த திருக்குறள் அதற்குத் தக்க எடுத்துக்காட்டாம். திருக்குறட்பாக்களில் தலையாகு எதுகை அமையாதிருப்பின் யாப்பு நூல்கள் விளக்கும் இடையாகு, கடையாகு எதுகைகளேனும் அடியெதுகைகளாய் அமைந்துள்ளன.

எதுகையின் செல்வாக்கினைப் பிற்காலத்து ஔவையார் பாடல்கள் தெளிவாக்கும். கி.பி.110- ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவர் இவ்விரண்டாம் ஔவையார் என்பர்.[25] அவரது கொன்றை வேந்தன் ஓரடியால் ஆய 91 பாக்களைக் கொண்டது. தொல்காப்பிய உரை ஆசிரியர்களாலும், யாப்பருங்கலவிருத்திக்காரராலும் மேற்கோளாகக் காட்டப்பட்ட சிறப்புடையது.[26] ஓரடியால் ஆயதால் அவ்வடிக்குள்ளேயே எதுகையை நிலைநாட்டியுள்ளார். ஏழுநூற்பாக்களில் மட்டுமே எதுகை அமையவில்லை.[27] அமைந்தவற்றுள்ளும் மிகச் சிலவற்றுள்ளேயே [28] இடையாகு, கடையாகு எதுகைகள் அமைந்துள்ளனவேயன்றி பெரும்பாலானவற்றில் தலையாகு பொழிப்- எதுகைத் தொடைகள் அமைந்து நூலைச் சிறப்பிக்கின்றன.

தனிநிலைச் செய்யுளன்றித் தொடர்நிலைச் செய்யுள் நூலாய் முன்னரெழுந்த சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை போன்றன ஆசிரியப்பாவினைப் பெருமளவில் தழுவியதால் எதுகைக்கு மிகுந்த இடம் அளிக்கவில்லையெனினும் பின்னரெழுந்த சூடாமணி, சிந்தாமணி ஆகியன விருத்தப்பாவான் அமைந்தவையாதலின் மிகுந்த சிறப்பைத் தந்தன. ஏனெனில் விருத்தப்பாக்கள் நான்கடிகளும் எதுகை கொண்டமைந்தால் நினைவிற்கொள்ளுதற்கும் மனனம் செய்தற்கும் எளிதாகும் என எண்ணியிருப்பர் போலும். எனவே, காப்பியப் போக்கிலும் எதுகையின் செல்வாக்கு மிகுதியாயிற்று.

நிகண்டுகளுள் நூற்பாயாப்பினைக் கொண்ட திவாகரத்தில் அடியெதுகைத் தொடை கொண்ட நூற்பாக்கள் பல உள்ளன. முதலாவதாகிய தெய்வப் பெயர்த்தொகுதியுள் கார்த்திகையைச் சுட்டும், 'அங்கியாரல்' எனத்தொடங்கும் நூற்பா, இரண்டாவதாகிய மக்கட்பெயர்த் தொகுதியில் திரண்டோர் பெயர் சுட்டும் சங்கமும் எனத் தொடங்கும் நூற்பா, மயிர்முடியின் பெயர் குறிக்கும் பின்னகம்

பந்தம்[29] எனத் தொடங்கும் நூற்பா போன்றன மூன்று அடிக-ளாலானவை. மூன்று அடிகளிலும் எதுகைத்தொடை அமைந்துள்ளது. ஓரடியால் ஆன நூற்பாக்கள் பலவற்றுக்கிடையே பொருட்டொடர்பு காரணமாக அடுத்தடுத்து நிறுத்தப்படுவதால் எதுகைகள் அமைந்து கிடக்கின்றன. வாடை கோடை, திதியே மிதியே, தடி இடி, பைம்மை கைம்மை மைம்மை, எமி தமி, முன்னை பின்னை, அண்டம் துண்டம், அறை பொறை, முதை இதை, துற்றி திற்றி, எழு தொழு, எண்மை வெண்மை, கையறல் கையடை, உம்மை இம்மை அம்மை, செழுமை கொழுமை, உறவி துறவி, ஆற்றுப்படை ஆற்றலறுத்தல், மணத்தல் தணத்தல், ஊராண்மை பேராண்மை போன்றன[30] அவ்வகைப் பட்டவை.

திவாகரத்தின் பதினோராந் தொகுதியாகிய ஒருசொற் பல் பொருட் பெயர்தொகுதி எதுகைக்கு மிகுந்த சிறப்பு அளித்திருப்ப தாகத் தெரிகிறது. பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை கருத்துப்படி தற் பொழுது அச்சிற்பதிப்பித்து வெளிவந்துள்ள நூல்களிற் காணும் பதினோராந் தொகுதி நூற்பா நிரன்முறை ஆசிரியருடையதன்று.[30] ஆதியிற்பொருள், அந்தத்துப் பொருள் என்று இரு கூறாக்கி ஒவ் வொன்றன் கண்ணுமுள்ள சூத்திரங்களை அகராதிக் கிரமத்தில் பதிப் பித்து வெளியிட்டு விட்டனர். சில ஏட்டுப்படிகளில் இவ்வகராதி முறையன்றி ஆசிரியர் வைத்த முறையென்று கொள்ளக் கூடிய பிறிது ஒருமுறை காணப்படுகிறது. இவ்விரண்டாவது முறையில் வேறு-பாடுகள் ஏதும் அப்படிகளில் காணப்படவில்லை. அம்முறைப்படி, 280. ஊறே யிடையூறு முற்றறி புலனும், 281. நூறே பொடியு நூறு மாகும், 282. ஏனி யுலகு மெல்லையு மாகும் 283. சேணே யுயர்வு நீளமு மாகும், 284. ஆதுத லாடலு மொலிவுமாகும் 285. நூலே பெண்ணும் பனுவலு மாகும் என்றவாறு நூற்பாக்கள் அமைந்துள்ளன. இவ்வடிகளை நோக்க எதுகை நயமுறப் பல்பொருட் சொற்கள் அமைந்திருத்தல் புலனாகின்றது. இவ்வாறே இத்தொகுதியிலுள்ள சூத்திரங்கள் பெரும்பாலும் இயன்றுள்ளன. திவாகரத்தில் பிற தொகுதிகளெல்லாம் அவ்வத் தொகுதிக்குரிய பொருட்பாகு பாட்டினைப் பின்பற்றி அமைந்துள்ளன, பதினோராந் தொகுதியில் அவ்வகைப் பாகுபாட்டிற்கிடமில்லை. பல்வேறு பொருள்களுடைய சொற்களே ஈண்டு வேண்டியதன் நோக்கங்கொண்டு எதுகை நயத்தோடு இத்தொகுதி நூற்பாக்கள் வகுக்கப்பட்டிருத்தல் கூடும் என முடிவிடுவர்.[31]

பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை அவர்கள் கருத்திற்கிணங்க பதினோராந் தொகுதியின் நோக்கு எதுகை நோக்கு என்பது வெளிப் படை, ஆயினும் பிறதொகுதிகளிலும் அந்நோக்கு அருகிக் காணப்

படுகிறதென்பதைக் கூர்ந்து நோக்கின் உணரலாம். புலப்படுத்த வேண்டிய சொற்கள் அமையாவிட்டாலும், அவற்றைப் புலப்படுத்தும் நூற்பாக்கள் எதுகையோடு தொடக்கம் பெறுமாறு அமைந்துள்ளன. தெய்வப் பெயர்த்தொகுதியில் நான்கு திக்குகளினின்றும் வருங் காற்றைக் கூறுகின்றவர், வடக்கு அதன் எதிராகிய தெற்கு, கிழக்கு அதன் எதிராகிய மேற்கு என்ற முறையினையோ, வடக்கு அதன் எதிராகிய தெற்கு, மேற்கு அதன் எதிராகிய கிழக்கு என்ற முறையினையோ, வடக்கு கிழக்கு தெற்கு மேற்கு என்ற முறையினையோ, வடக்கு மேற்கு தெற்கு கிழக்கு என்ற முறையினையோ பின்பற்றாமல், ஒரு நெறிப்படாது வடக்கு மேற்கு, கிழக்கு, தெற்கு என்னும் முறையில் கூறுதற்கு வடகாற்று வாடை, மேற்காற்று கோடை எனக் கூறப்படுவதில்[32] உள்ள சொற்களாகிய வாடை, கோடை என்பவற்றின் எதுகை நோக்கியே எனக் கொள்ள இடந் தருகின்றது. விலங்கின் பெயர்த் தொகுதியில் நாய், பெண்ணாய், உடும்பு, அணில், ஒந்தி ஆகியவற்றின் பெயர்கள் குறிக்கப்படுகின்றன.[33] இவற்றுள் பெயரெல்லாம் முன்னால் அமைவதால், நாய், பெண்ணாய், அணில், ஓந்தி, ஆகியன அவற்றின் பின் அமைகின்றன. உடும்பு மட்டும் முன்னால் உள்ளது. அதற்குக்காரணம் இந்நூற்பாவிற்கு முன் நூற்பாவாகிய பெண்ணாய் பற்றிய, நூற்பா 'முடுவல்' எனத் தொடங்குதற்கு எதுகையாக 'உடும்பே' எனத் தொடங்கப்பட்டது எனக் கொள்ளலாம். இடப் பெயர்த்தொகுதியில் நிலங்களும் ஊர் களும் பேசப்படுகின்றன.[34] இவற்றுள் குறிஞ்சி நிலப்பெயர் குறிக்கும் நூற்பாமட்டும் முற்று வினையை முதலாகக்கொண்டு 'அறைவர்' எனத் தொடங்குகிறது. அதற்குக் காரணம் முன்னைய முல்லை நிலம்பற்றிய நூற்பா 'புறவம்' எனத் தொடக்கம் பெறுவதற்கு எதுகையாகவே அறைவர் எனத் தொடங்கப்பட்டது எனக் கொள்ளக்கிடக்கின்றது. எனவே, பதினோராந்தொகுதி மட்டுமின்றிப் பிறதொகுதிகளிலும் எதுகை நோக்கம் ஆங்காங்கே படிந்து கிடக்கின்றது கண்கூடு.

பிங்கல நிகண்டின் பத்தாவது தொகுதியாகிய ஒருசொற் பல்பொருள் வகை அகரவருக்கம், ககரவருக்கம், சகரவருக்கம் என்றின்ன வாறு சொற்களின் முதலெழுத்தினையொட்டி அவைபற்றி விளக்கும் நூற்பாக்கள் தொகுக்கப்பட்டிருப்பதால் எதுகையமையும் வாய்ப்புக் குறைவு. இவ்வகையான நூற்பாத் தொகுப்பு ஆசிரியருடையதன்றென்றும் பதிப்பித்தோர் தொகுத்ததென்றும் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை கருதுவர்.[35] அவர்தம் கைக்குக்கிட்டிய பிரதி எதிலும் இம்முறை காணப்பெறவில்லையென்று கூறி, அவர்க்குக் கிட்டிய ஒரு பிரதியின் பத்தாம் தொகுதியின் தொடக்கத்தில்,

1. துங்க மலையுந் நிலையுந் தூணுஞ்
சங்கரன் பெயருந் தாணு வாகும்

2. இரவியு மெனையா ளீசன் பெயரும்
ஒருநாள் மீனு மொழியுஞ் சோதி

3. ஆதி பழைமையு மானது நாமமு
முதலுநே ரோட்டமு மொழியப் படுமே.

என்ற முறையில் அமைந்திருப்பதாகக் காட்டுகிறார். இந்நூற்பாக்களில் கூறப்படும் தாணு, சோதி, ஆதி முதலிய சொற்கள் வானவர் வகையில் முன்னரே விளக்கப் பட்டுள்ளன. இவற்றை நோக்க 10-ஆம் வகைக்குரிய சொற்களை முன்னுள்ள ஒன்பது தொகுதிகளிலும் குறித்தவொரு முறைபற்றித் தெரிந்தெடுத்து அமைத்துள்ளாராதல் வேண்டும். 10-ஆம் வகையில் உள்ள நூற்பாக்கள் எதுகை நயம்பெற அமைந்துள்ளனவேனும் பல் பொருள் சொற்கள் எதுகை நெறியில் அமைய வில்லையாதலின் அம்முறை பயனுடையதாயில்லை எனக் கூறுவர்.[36]

பொருள் விளக்கப்படவேண்டிய சொற்கள் எதுகை நயமுற அமைக்கப்படவில்லையெனினும் அவைபற்றிய நூற்பாக்கள் திவாகரம் போலவே எதுகை பெற அமைந்தும் அமையாமலும் இருக்கின்றன. வானவர் வகையில் கங்கையினை விளக்கும் 'வரநதி'[37] எனத் தொடங்கும் மூவடிகளாலாய நூற்பா மூவடிகளிலும் எதுகையுற உளது. அரியின் அவதாரம் பற்றிய 'மச்சம்'[38] எனத் தொடங்கும் நான்கடிகளாலாய நூற்பாவில் எதுகை அமையவில்லை. அறுமுகக் கடவுள் பெயர்களைச் சுட்டும், 'குமரன்'[39] எனத் தொடங்கும் அடிகளாலாய நூற்பாக்களில் ஈரடிகளிலேயே எதுகையுள்ளது: திவாகர நூற்பாக்களை ஆளுங்கால் அம்முறையிலேயே எதுகை பெற அமைக்கப்பட்டுள்ளன. வாடை கோடை, திதியே மதியே, அறையே பொறையே, முதைப்பும் இறைப்பும், துற்றி திற்றி போன்றவை[40] அதற்குச் சான்றுகளாம். புதிதாகப் படைக்கப்பட்ட சில நூற்பாக்கள் பொருட்டொடர்பு காரணமாக ஒன்றுக்கொன்று எதுகையுற அமைந்துள்ளன. சுப்பியோகம் விப்பிரயோகம், சோகம் மோகம், நாடக சாலை ஆடவிடம் பாடல் பயிலிடம், ஏடி சேடி, சுட்டி பட்டம், பாதசாலம் பாதகடகம், அத்திரம் சத்திரம் போன்றன[41] அவ்வகைப் பட்டவை. இவற்றுள் விளக்கப்பட வேண்டிய சொற்களே எதுகைகளாய் அமைந்துள்ளன. சில நூற்பாக்களை நோக்க எதுகையை மட்டும் சிறப்பாகக் கொள்ளாது பொருளிற்கே சிறப்பளித்த தன்மை விளங்குகிறது, காட்டாக, காரீயம் துத்தநாகம் இரண்டனையும் நாகம் என்னுஞ் சொல் குறிக்கிறது. அவற்றை விளக்க, 'நாகங் காரீயம்', 'நாகந் துத்த நாகம்' என்னும் இருவேறு நூற்பாக்கள் ஆளப்படுகின்றன.[42] இரண்டும் அடுத்தடுத்து அமையின் எதுகை பெறும். அவ்வாறன்றி இரண்டற்குமிடையே தாராவினை விளக்கும்

வேறொரு நூற்பா இடம் பெறுகிறது. எனவே உலோக வகைகளில் பொன், வெள்ளி, செம்பு, வெள்ளீயம், காரீயம், தாரா, துத்தநாகம், பித்தளை, வெண்கலம், இரும்பு என்னும் முறையை அவர் கொண்டிருந் தாரன்றி எதுகையைக் கருத்திற் கொண்டிலர் எனத் தெரிகிறது. அவ்வாறே, கச்சின் தலைப்பினை விளக்கவரும் நூற்பா, 'கஞ்சகம்' என்றும் சட்டையை விளக்கும் நூற்பா 'கஞ்சுகம்' என்றும் தொடக்-கம் பெறுகின்றன[43] இரண்டும் அடுத்தடுத்து அமையின் எதுகையாம். அவ்வாறன்றி, மேற்கட்டியைக் குறிக்கும், 'விதானம்' என்பதைக் கொண்டு தொடங்கும் நூற்பா இடம் பெறுகிறது. எனவே, அதற்கு முன்னர்க் கூறிவரும் முகபடாம், கம்பளிப்படாம், செம்படாம், முலைக்கச்சு ஆகியவற்றையொட்டிக் கச்சின் தலைப்பு மேற்கட்டி எனக் கூறிச் சட்டைபற்றிக் கூறுகிறாரன்றி எதுகை நோக்கினைச் சிறப்பாகக் கொள்ளவில்லை எனத் தெரிகிறது. இம்முறைக்கு மாறாகச் சில விடங்களில் எதுகையைச் சிறப்பாகக் கொண்டு சொற்களைப் படைத்தளித்திருப்பதும் காணக்கிடக்கின்றது. வானவர் வகையில் இந்திரனுக்குரியவை நிரல்படக் கூறப்படுங்கால் 'ஆங்கவன் திருநகர் அமராவதியே' எனக் கூறியடுத்து அவன்றன் யானையை 'ஓங்கிய வூர்தி வெள்ளையயி ராவதம்' எனக் கூறியிருக்கிறார்[44] இவற்றுள் ஆங்கவன் என்பதற்கு எதுகையாகவே ஓங்கிய என்னும் அடை ஊர்திக்கு முன் படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. ஏனெனில் அப்பகுதியில் அமைந்துள்ள பிற நூற்பாக்கள் அடையின்றியே அமைந்துள்ளன. இவ்வாறே இந்திரன் குதிரையைக் குறிக்க, ''மெச்சிய பரிமா உச்சைக் கிரவம்'' என்னும் நூற்பாவை அடுத்து ''வச்சிரப் படையே வண்கொடி இடியாம்'' என்னும் நூற்பா இடம் பெறுகிறது.[45] முன் நூற்பாவில் உள்ள மெச்சிய என்னும் அடை அந் நூற்பாவில் உள்ள உச்சை என்னுஞ் சொல்லுக்கு எதுகையாயுள்ள-தோடன்றி அடுத்த நூற்பாவில் வரும் வச்சிரம் என்பதற்கும் எதுகையாகவே அமைக்கப்பட்டதாகக் கருதுதற்கு இடந்தருகின்றது. ஐயர்வகையில் 'புத்தர் சாக்கியர் தேரர் பௌத்தர்' என்னும் நூற் பாவையடுத்து 'வைத்த சீவக ரத்தவத் தோரே' என வரும் நூற் பாவிலுள்ள வைத்த என்னும் அடை புத்தர் என்பதற்கு எதுகைக்கு ஆகவே அமைந்துள்ளதெனலாம்.[46]

நிகண்டுகளுள் முதலில் எதுகைத் தொடைக்குத் தனிச் சிறப் பளித்து அதற்கெனத் தொகுதிகளுள் ஒன்றனை வகுத்தது சூடாமணி-யேயாகும். அந்நிகண்டு தோன்றிய காலத்தில் விருத்தப்பாக்கள் பெருவரவிற்றாக வழங்கின. அதனால் அந்நூலும் விருத்தப்பா யாப்பால் அமைந்தது. விருத்தப் போக்கிற்கு எதுகைத் தொடை வேண்டற்பாலது. எனவே எதுகைச் சொற்களின் செல்வாக்கை உணர்ந்து தொகுத்து ஓரிடத்தில் அமைத்தார் எனலாம்.

சூடாமணியின் பதினோராம் தொகுதியில்இடம் பெறும் 1575 சொற்களையும் பதினெட்டு மெய்களின் எதுகைகளாகப் பகுத்து, ககர எதுகை, தகர எதுகை, நகர எதுகை, பகர எதுகை, மகர எதுகை, யகர எதுகை, ரகர எதுகை, லகர எதுகை, வகர எதுகை, ழகர எதுகை, ளகர எதுகை, றகர எதுகை, னகர எதுகை எனப் பெயரிட்டார். ஒவ்வோரின எதுகை முறை பயனுடையது. பிறதொகுதிகளை அவ்வவற்றின் பொருட்டொடர்பால் ஓரளவேனும் நினைவிற்கொள்ள இடனுண்டு. ஒரு சொல் பல்பொருட்டொகுதியில் அவ்வாய்ப்புக் குறைவு. அதனை உணர்ந்த மண்டலபுருடர் நன்கு நினைவிருத்தத் துணைபுரியும்எதுகைத் தொகையைத் தேர்ந்து சொற்களை அவற்றுள் வகைப்படுத்தி அடக்கிப் பொருள் கூற முனைந்தது நிகண்டுகளின் வரலாற்றில் ஒரு புதுப் போக்கைக் காட்டியதெனலாம். மேலும் ககர முதல் னகர வீறாக நிரற்படுத்திக் கூறியது மெய்யெழுத்தின் நிரன் முறையைக் குறிப்பாக சுட்டிச் செல்கிறது.

எதுகையை இனவாரியாகப் பிரித்து மண்டலபுருடன் தம் முயற்சியில் முழுமை பெற்றார் எனக் கூறுதற்கில்லை. ஓரெதுகைச் சொற்களில் பிற எதுகைச் சொற்களும் விரவிக்கிடக்கின்றன. எடுத்துக்காட்டாகக் ககர எதுகைப் பிரிவில் வசி, மாய்வு, கடவுள், குடங்கர், மெய், தபனன், அருள், சமம், புன்கண், பயோதரம், நுதல், புலிங்கம், அறல், அரிப்பம், இடுத்தல், அந்தம், ஞாட்பு, ஈரம், வரைதல், சூத்திரம்[47] ஆகிய பிற எதுகைச் சொற்கட்கும் பொருள் கூறப்படுகின்றது. இக்கலப்பிற்கு ஆசிரியர் மேற்கொண்ட யாப்பே காரணமெனக் கருதுவர். அப்பாவில் எதுகையைப் போன்றே மோனைக்கும் சிறப்பளிக்கக் கருதி, மோனைக்காகப் பிற எதுகைச் சொற்களைக் கலந்தாராகலாம் என அமைதி கூறுவர்.[48] மோனைக்-காக மட்டும் அவ்வாறு கொண்டார் எனக் கொள்ளல் பொருத்தமாகத் தோன்றவில்லை. ஏனெனில் மோனையமையாமலேயே அடிகள் சிலவற்றை ஆசிரியர் ஆள்கிறார். ககரவெதுகைப் பிரிவில், 'எகினமே புளிமா ஞானி கவரிமா நீர்நாயன்னம்'[49] என்னும் அடியில் எகரத்திற்கு மோனை யமையவில்லை. அவ்வாறே, 'யூகமே கருங்குரங்கோடும் பொருளுணர்த்த றுக்கம்'[50] என்னும் அடியில் யகரத்திற்கு எதுகை யின்றாம். மேலும் மோனைக்காகவெனில் அடைமொழிகளைப் புணர்த்தி மோனையழகு பெறுமாறு செய்திருப்பாரல்லரோ? ழகர வெதுகையில் தொடக்கத்தில் விழவு என்னும் சொற் பொருள் கூறுங்கால், 'விழவென்பது மிதுனராசி விளங்கு முற்சவமுமாகும்'[51] எனக் கூறும் அடியில் விளங்கும் என்னும் சொல்லை உற்சவத்திற்கு அடையாக விழவு என்பதற்கு மோனையாகப் பயன்படுத்தியுள்ளா ரல்லரோ? எனவே முழுதும் எதுகை இனத்தின் அடக்கமுயன்றார் என்ற அளவிற்கு அவரைப்போற்றலே தக்கது. அடைச் சொற்புணர்த்திப் பெயர்களைக் கூறியிருப்பது பொருளடைகளைப் பிரித்து

உணர்த்துதற்கண் மயக்கம் ஏற்படக் காரணமாகலாமென்றும், இத்தொகுதி 310 செய்யுட்கள் அடங்கிய சிறு தொகுதியாயிருப்பதால், நநாநார்த்பதங்களனைத்தும் கூறப்பெறாமை குறையாகலாமென்றும் கூறுவர்.[52] எனினும், எதுகைக்கென்று தனித்தொகுதி யொதுக்கிய முதல்வராம் மண்டலபுருடரின் அரிய உழைப்பும் சீரிய சிந்தனையும் பாராட்டற்பாலன.

தமிழ்ச் செய்யுளில் இன்றியமையா இடத்தைப் பிடித்திருக்கின்ற எதுகையின் சிறப்பினை உணர்ந்தும் அவை பயிலும் சொற்களை யெல்லாம் மிகுதியாகத் தொகுத்ததோடன்றி, நிகண்டுகளிற் காணப்படும் குறைபாடுகளைக் களைந்து எதுகைத் தொகுதியை முழுமைபெறச் செய்தவர் அடிகளாராவர். ''தமிழகராதியின் சரித்திரத்தில் இந்நூல் ஒரு முக்கியஸ்தானம் பெற்று விளங்குகின்ற தென்று மட்டும் கூறி அமைகின்றேன்''[53] எனப் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை ஓரிடத்திற் குறிப்பிடுவது போன்று, எதுகையின் வரலாற்றில் சதுரகராதியின் ஒரு பிரிவாகிய தொடையகராதியும் அமையும் எனக் கூறி ஈண்டு அமையலாம்.

3 தொடையகராதி

செய்யுட்குச் சொன்னயங் கூட்டும் எதுகை அமையுஞ் சொற்களை நிரற்படி அமைத்துப் பொருள்தரும் தொடையகராதியின் தொடக்கப் பாடல் சில குறிப்புக்களைத் தருகிறது. முதலெழுத்து ஒலியளவான் ஒத்து நிற்கப் பிற எழுத்து ஒன்றி அமையும் எதுகைச் சொற்கள் கூறப்படும் என்றும், அவற்றுள்ளும் முதலெழுத்துக் குறிலாக அமைவன முன்னரும், நெடிலாக அமைவன பின்னரும் தரப்படும் என்றும், ஒரே சீரில் கூறப்படும் சொற்கள் இடம் பெறு மென்றும், அடிதொடையாக அமைவனவும், தலையாகு எதுகையாதச் சிறப்புப் பெறுவனவும் கூறப்படும் என்றும் அக்குறிப்புக்களாற் பெறப்படுகின்றன.

அடிகளார் தம் தொன்னூல் விளக்கத்தில் எதுகையின் தன்மையினையும் தலையாகு எதுகையின் சிறப்பினையும் விளக்கிக் காட்டுகிறார். ''இரண்டாமெழுத்தொன்றி வரத்தொடுப்பததெுகை எனப் படும். ஆயினும் முதலெழுத்துத் தானே வாராமல் முதலெழுத் தெல்லாந்தம்முன் மாத்திரையளவோ டொத்தனவாதல் வேண்டும். ''முதலெழுத் தளவோ டொத்தது முதலா, வஃதொழித் தொன்றி னாகு மெதுகை'- என்றார் பல்காயனார். ஆகையிற் கட்டென்பதற்குப் பட்டென்ப தெதுகை யல்லது பாட்டென்ப தெதுகை யாகாது. ஆதலின் ஐகார ஔகாரங்க ணெட்டெழுத்தாயினு மடிமுதல் வருங்கால், ய, வ, என்று மொற்றடுத்து வந்த

குற்றெழுத்தாக வெண்ணப்படும் (வ-று) ஔவைக்குறள்- 'மெய்யகத் துள்ளே விளங்கச் சுடட்த்காணிற், கையகத்து ணெல்லிக் கனி' ,குறள்- ''அவ்வித் தழுக்கா றுடையவனைச் செய்யவ, டௌவையைக் காட்டி விடும்'' கையிரண்டு என்பதற்கு மெய்யிரண்டு எ-ம், ஔவிய மென்பதற்குச் செவ்வியல் எ-ம், எதுகையாம்''[54] என எதுகையைக் காட்டித் தலையாகு எதுகையை, ''முதலெழுத்தொன்றலலாது முதற் சீரெழுத்தெல்லாந் தாமே மீண்டு வருவது தலையாகெதுகை எனப்படும். அங்ஙனங் கருவி யென்றதற்கு மருவி, அருவி, உருவி, குருவி என வந்தொருசீர் முழுதொன்றுவ தரிதாயினும் புகழப்படும் சிறப்புடைய தலையாகெதுகையாம்''[55] என விளக்குகிறார்.

அடிகளார் கூறியதற்கேற்பக் குறிலை முதலாகக் கொண்ட எதுகைச் சொற்களனைத்தையும் ஒன்றாகத் தொகுத்துக் குறிற்கீழெதுகை என முன்னர்க் கூறி, நெடிலை முதலாகக் கொண்ட எதுகைச் சொற்களனைத்தையும் நெடிற் கீழெதுகையெனப் பின்னர்த் தொகுத்துக் கூறுகிறார். ஒவ்வொரு பிரிவிலும் மெய்யெழுத்துக்களின் நிரன்முறையினையொட்டிக் ககரவெதுகை, ஙகரவெதுகை, சகர வெதுகை என்ற முறையிற் கூறிச் செல்கிறார். அகர நிரன் முறையில் எதுகைக்கு முதலிடந்தந்து இரண்டாமிடத்தை மூன்றாம் எழுத்து, நான்காம் எழுத்து என்றின்னவாறு தந்து இறுதியில் முதலெழுத் திற்குச் சிறப்பளித்து நிரன்முறையினை அமைக்கிறார். சான்றாகக் ககர வெதுகைச் சொற்களின் தொடக்கமாக அகடம், சகடம், விகடம், அகடு, சகடு, தகடு, பகடு, முகடு, அகண்டம், இகண்டம், அகண்டி, சிகண்டி, சகண்டை, பகண்டை முதலிய சொற்கள் அமைந்துள்ளன.[56] இரண்டாவதாகிய ககரத்தை அடுத்துள்ள மூன்றாம் எழுத்து டகரம் - அகடம், சகடம், விகடம் ஆகியவற்றில் இடம் பெறுகிறது. டகரத்தோடு அகரம் சேர்ந்த சொற்கள் முடிந்த பின் உகரம் சேர்ந்த அகடு, சகடு, தகடு, பகடு, முகடு ஆகியன அமைகின்றன. மூன்றாம் எழுத்தில் டகர வருக்கம் முடிந்தபின் ணகரம் இடம் பெறுகிறது. அகண்டம், சிகண்டம், அகண்டி, சிகண்டி, சகண்டை, பகண்டை ஆகிய அனைத்திலும் ணகரம் இடம் பெற்றாலும் நான்காம் எழுத்தாக உள்ள டகரத்தோடு அகரம் சேர்ந்த அகண்டம், சிகண்டம் ஆகிய சொற்கட்குப்பின் டகரத்தோடு இகரம் சேர்ந்த அகண்டி, சிகண்டி என்னுஞ் சொற்களும், அவற்றிற்குப்பின் டகரத்தோடு ஐகாரம் சேர்ந்த சகண்டை, பகண்டை ஆகிய சொற்களும் அமைதுள்ளன. பிறவெழுத்தெல்லாம் ஒத்திருந்து முதலெழுத்து மட்டும் மாறுபட்டிருக்கிற சொற்களை நிரலாக அமைக்கும்பொழுது முதலெழுத்து நிரன்முறைப்படி அமைக்கப்படுகின்றன. அகடம், சகடம், விகடம் ஆகியவற்றில் முதலெழுத்துத் தவிரப் பிறவெல்லாம் ஒத்திருப்பதால் முதலெழுத்துக்களாகிய அ, ச, வி ஆகியவற்றின் அகர நிரன்முறைக்

கேற்றவாறு சொற்கள் இடம் பெறுகின்றன. சொற்கட்கான பொருளை விளக்குங்கால் அகர நிரன் முறையே பின்பற்றப்படுகிறது. காட்டாகப் பகடு என்னுஞ் சொல்லுக்குக் கூறப்படும் பொருள்கள் ஆண்யானை, இடபம், எருமைக்கடா, ஓடம், தெப்பம், பெருமை, பொரியெருது என ஆ,இ,எ,ஓ,தெ,பெ,பொ எழுத்துக்களின் நிரன்-முறையில் உள்ளன.

ஐகார ஔகாரங்கள் நெட்டெழுத்தாயினும் அடி முதல் வருங்கால் ய,வ என்னும் ஒற்றடுத்து வந்த குற்றெழுத்தாக எண்ணப்படுமாதலின் ஐ,சை,கை, போன்றன அய், கய், சய் என்றாற் போல் கருதப்பட்டு ஐ,கை,சை,தை,பை,மை,எய்,குய்,துய்,நெய், பொய், மெய்,மொய் ஆகியன ஓரெதுகை பெற்றனவாக அமைக்கப் பட்டுள்ள.[57] இவை போன்றே, பௌ, கௌ, தௌ, மௌ, வௌ, போன்றன பவ்,கவ் தவ்,மவ்,வவ் என்றாற்போல் கருதப்பட்டு எவ்வம், யௌவம் என்றும், கௌவல், துவ்வல், தௌவல்,மௌவல், வௌவல் என்றும் ஓரெதுகை பெற்றனவாக அமைந்துள்ளன.[58]

அகண்டம், சிகண்டம், அகண்டி, சிகண்டி, சகண்டை, பகண்டை என இரண்டே தலையாகு எதுகைச் சொற்கள் அமைந்தனவும் உண்டு.[59] அடி, இடி, கடி, கிடி, குடி, கெடி, கொடி, செடி, தடி, துடி, தொடி, நடி, நெடி, நொடி, படி, பிடி, பொடி, மடி, மிடி, முடி, வடி, விடி, வெடி ஆகிய 23 சொற்கள் ஓரெதுகையில் அமைந்தும் காணப் படுகின்றன.[60] அம், உம், கம், சம், தம், நம், நும், பம், என நேரசைச் சொற்களே[61] எதுகைகளாகவும் அதி, உதி, ஓதி, கதி, குதி, சதி, சுதி, ததி, திதி, துதி, நதி, நுதி, நொதி, பதி, பொதி, மதி, யதி, வதி, விதி என நிரை யசைச் சொற்களே[62] எதுகைகளாகவும் அமைந்துள்ளன. அவ், இவ், உவ், எவ், தெவ் போன்ற ஓரசைச் சொற்களும்[63] தறுகணாளர். உறுகணாளர் போன்றமூவசைச் சொற்களும் உள்ளன.[64] ஒரு பொருள்மட்டும் கூறப்படுகின்ற சடகம் போன்றனவும் உண்டு. 55 பொருள் கூறப்படுகின்ற அரி என்னும் சொல்லும் உண்டு.[65]

அல்லகண்டம், புல்லகண்டம் ஆகிய ஏழெழுத்துச் சொற்கள் உள்ளன. உ, கு, து போன்ற ஓரெழுத்துக்களும் சொற்கள் போல் உள்ளன.[66] எதுகைத் தொடைச்சொற்கட்குரிய பகுதியில் தனி எழுத்துக்கள் இடம் பெறுதல் பொருந்துமா என்பது கேள்வியாகிறது. ஐ என்னும் எழுத்து அய் என ஈரெழுத்துடை யதாகக் கருதப்படுவதால் உரிய இடத்தில் அமைவது பொருந்துகிறது. ஆயின் உ, கு, து போன்றன பொருந்தா. மேலும் தனி எழுத்துக்களைக் குறிற்கீழெது கையின் தொடக்கத்தில் கூறிப்பின்னரே க, ங, ச என்னும் மெய்ந்நிரன் முறையாகச் சொற்கள் கூறப்படுகின்றன. அவ்வாறே நெடிற்கீழெது-

கையின் தொடக்கத்தில் ஆ, கா, சா, நா, பா, மா, யா, ஈ, கீ, சீ, தீ, பீ, வீ, ஊ, கூ, தூ, பூ, மூ, ஏ, சே, தே, நே, பே, வே, ஓ நெடில் ஓரெழுத்து ஒருமொழிச் சொற்கள் இடம் பெற்றபின்னர் ககர எதுகைச்சொற்கள் அமைகின்றன.

உ என்னும் எழுத்திற்கு, 'ஓரெழுத்து, சுட்டு, உ-ம் உக்கொற்றன் உவன் என்றே' பொருள் கூறப்படுகின்றன. அவற்றைக்கொண்டு பார்த்தால், உ தனித்தியங்கும் ஆற்றலற்றது போல் தோன்றுகிறது. து என்பதற்கு ஓரெழுத்து, துவ்வவன்னேவல் என்று கூறப்படுவதால், ஏவல் வினை எனப் பெறப்படுகிறதன்றிப் பிறபொருள் அவ்வெழுத்தின் பொருளாக விளக்கப்படவில்லை. கு என்பதற்கு, 'நான்கனுருபு உ-ம் அறத்திற்குப் பொருள், பூமி' எனப் பொருள்கள் கூறப்படுவதால் தனித்து நின்று 'பூமி' என்றும் பொருள் தரும் எனக் கொள்ளலாம். சுட்டு என்னுங் காரணத்தால், உ, என்பதனைக் கூறி அவற்றோடு எதுகை பெறும் தகுதியினவாகிய கு, து, ஆகியவற்றைக் கூறியிருப்பாராவெனில் 'அ' என்னும் சுட்டையும் விளக்கியிருக்கலாம். அவ்வாறின்றி து என்பது குற்றெழுத்து ஓரெழுத்தொருமொழி எனக் கருதியதால் அதனோடு தகுதியாகும் உ, கு ஆகியவற்றைக் கூறியிருக்கலாமெனின் து என்பதோடு ஒருங்கிணைத்துக்கூறப்படும் நொ என்னுங்குற்றெழுத்து ஓரெழுத்தொருமொழியைக் கூறி[67] அவற்றிற்கு எதுகை பெறும் தகுதி-யுடையவற்றையும் சேர்த்திருக்கலாமன்றோ என்று வினவுதற்குரித்தாகின்றது.

தொடையகராதி படைத்ததின் நோக்கம் சொற்களின் பொருள்களைப் புரிந்து கொள்ள வேண்டுமென்பது மட்டுமன்று; செய்யுளில் தொடையமைக்கத்துணையாகும் சொற்களை அறிந்து கொள்ளவேண்டுமென்பதுமாம். எதுகைத் தொடை என்னுங்கால் இரண்டாமெழுத்து மட்டுமன்றி முதலெழுத்திலும் சிந்தனையிருத்தல் வேண்டும் என்பது அடிகளாரது கருத்தாயிருந்திருத்தல் சாலும். அதனாற்றான் தொடக்கப் பாடலில், ''சார்முத லெழுத்தொலித் தொருங்கொன்றித் தருமருந் தொடை—''[68] எனக் குறிக்கிறார். எழுத்-தொலி ஒன்றுவ தெவ்வாறு என்பதனை விளக்கிக் காட்டவே அ, உ, கு, து ஆகியவற்றைக் கூறுகிறார். முதலெழுத் தொன்றுவதெனின் உ, கு, து என்றவாறு எனக் குறிப்பாற் காட்டிப் பின்னர் எதுகைச் சொற்களை மெய்யெழுத்து வாரியாகக் கூறிச் செல்கிறார்.

அவ்வாறாயின் அ, இ, எ போன்றவற்றை ஏன் கூறவில்லை என்னும் வினா எழும். எடுத்தாளும் எழுத்துக்களும் பொருள் பொதிந்தனவாக அமையுமெனில் சிறப்பாகும் என அடிகளார் கருதி இருப்பார். ஓரெழுத்தொருமொழிகளாகும் எழுத்துக்கள் அத்-தகைய சிறப்புடையன. அடிகளார் தம் தொன்னூல் விளக்கத்தில், ஓரெழுத்தொரு மொழியாகும் குற்றெழுத்துகளாக நொ, து ஆகிய-

வற்றைச் சுட்டுவதோடன்றி உரையில், 'கு, கௌ, வெள, பீ எனச் சிறப்பில்லனவுங் கொள்க,[69] எனக் கூறுவதால் கு என்னும் எழுத்தையும் ஓரெழுத்தொரு மொழியாகக் கொள்கிறார் என்பது தெரிகிறது. எனவே குறில் ஓரெழுத்தொரு மொழியாக நொ, து, கு, ஆகியவை உள்ளன. நொ என்னும் எழுத்துடன் இவற்றுள் ஒலி-யொன்றுகின்ற து, கு ஆகியவற்றை எடுத்துக் கொண்டார் எனலாம். நொ என்னும் எழுத்து மாத்திரையளவால் ஒன்றினாலும் ஓசைவகை யான் சிறிது வேறுபடுவதால் விடுத்தார். து, கு என்னும் இரண்டனை மட்டும் கூறாமல் அவற்றோடு எகரத்தையும் சேர்த்ததற்குக் காரணம் என்னவெனில் து, கு போன்றன (த், + உ, க், + உ) உயிர்மெய்யாயினும் எதுகைத்தொடையின் முதலெழுத்தாயமையுங்கால் அம்மெய்யின் மீதேறியுள்ள உயிரெழுத்தின் ஒலிக்கு நிகரெனக் கருதி உயிரினையும் அளவில் ஒன்றியதாகக் கொள்ள வேண்டும் எனத் தெளிவித்தற்கேயாம் என உணரலாம்.

இக்கருத்து நெடிற்கீழ் எதுகையின் தொடக்கத்தில் நெட்டெழுத்தொரு மொழிச் சொற்களை எடுத்தாளுவதாலும் உறுதிப்படுகின்றது. தொன்னூல் விளக்கவுரையில், நெட்டெழுத்தொருமொழிச் சொற்களாகக் குறிப்பிடும் 40சொற்களுள் நெடிற்கீழ் எதுகையின் தொடக்கத்தில்[70] 31 சொற்கள்இடம் பெறுகின்றன. மற்றவற்றுள் ஐ,மை,தை, பை,கை,வை, போன்றன அய்,மெய்,தய்,பய்,கய்,வய் என்பன போன்று கருதப்படுவதால், யகர, வெதுகையின் கீழ் இடம் பெறுகின்றன.[71] அகராதியில் இடம் பெறாதவை மே,நீ,நை,வா, ஆகியனவே. நீ, வா என்பன எல்லோராலும் எளிதில் விளங்கிக் கொள்ளக் கூடிய சொற்களாயினமையின் விடுத்தார். போ,தா போன்றனவும் எளிய சொற்கள் தாமேயெனின் அவைபோதல் தருதல், ஆகியவற்றோடு வேறுபொருள்-களும் உடையவையானமையின் அப்பொருள்களை விளக்க எடுத்-தாண்டார். மே,நை, போன்றவை ஏவல் பொருள் மட்டுமே உடைத்-தானமையின் விடுத்தார். புதிதாக வழங்கியதால் கீ என்னும் ஓரெழுத்தொருமொழியையும் சேர்த்து அமைத்துக்கொண்டு நிரற்பட நெடிற்-கீழ் எதுகையின் தொடக்கத்தில் கூறினாரெனலாம்.

ஓரெழுத்தொரு மொழிகளை மனத்திருத்தித்தான் அவ்வாறு கூறினாரென்பதற்குத் தொன்னூல் விளக்கஉரையும் சான்றாகும். அவ்வுரையில் ஓரெழுத்தொரு மொழிகள்யாவை என்பதோடமையாமல் ''ஆ-பசு, ஈ-வண்டு,ஊ-ஊன்,ஏ-அம்பு,ஐ-அரசன், ஓ-மடையடைக்கும் கதவு, மா-அழகு, மீ-மேல், மூ-மூப்பு மே-ஏவல், மை-கறுப்பு, மோ-மோவென்னேவல், தா-பகை, தீ-நரகம், து-சுத்தம், தே-கடவுள், தை-பூசநாள், பா- வெண்பா, பூ-பூமி, பே- நுரை, பை-நிறம், போ-ஏவல், நா-நாக்கு, நீ-முன்னிலை, நெ-அன்பு, நை-ஏவல்,

நோ-நோய், கா-சோலை, பூமி, கை-சிறுமை, கோ-கண், சா-ஏவல், சீ-இலக்குமி, சே-எருது, சோ-மதில், வா-விளித்தல், வீ-சாவு,வே-ஏவல், வை-வைக்கோல், யா-அஃறிணைப் பன்மை வினா, நொ-ஏவல், து-உண்''[72] என அவற்றிற்குரிய பொருள்களையும் கூறுகிறார். அகராதியில் இடம்பெறும் சொற்கட்கான பொருள்கள் பலவற்றுள் இவ்வுரையில் காணப்படும் பொருள்களும் இடம்பெறுகின்றன.

சூடாமணி நிகண்டு, எதுகைச் சொற்கட்கு முன் ஓரெழுத்தொரு-மொழிச் சொற்கள் இடம் பெறுதற்கு வழி காட்டியிருக்கலாமோ-வென ஐயுற இடமளிக்கிறது. எதுகைக்கு முன்னருள்ள முதலெழுத்து ஓரெழுத்தொரு மொழியாய் ஒலியளவில் ஒன்றியமைந்து அவற்றின் பொருள் விளக்கப்படும் அடிகள் சூடாமணி நிகண்டில் பதினோராம் தொகுதியின் விருத்தங்களில் சில விடங்களில் காணப்படுகின்றன.[73] சான்றாக வகரவெதுகைப் பகுதியில் ஒரு விருத்தத்தின் நான்கு அடிகளிலும் ஆ, கா, பா, தா என்னும் ஓரெழுத்தொரு மொழிகள் முதலெழுத்தாக இடம் பெற்று அவற்றின் பொருள்கள் கூறப்படு கின்றன.[74] இவற்றை உணர்ந்த அடிகளாருக்கு எதுகைக்கு முன்னரமையும் எழுத்துக்களைப் பற்றியும் தெளிவுப்படுத்துதல் இன்றியமையாதது என்னும் எண்ணத்தைத் தூண்டியிருக்கலாம்.

நிகண்டுகளுள் எதுகைத் தொடைக்குத் தனித் தொகுதியளித்த சூடாமணியினும், அகராதி சில சிறப்புக்களையுடையது. சூடாமணி நிகண்டு மெய்யெழுத்துவாரியாக எதுகைச் சொற்களையமைத்துப் பொருளை விளக்கியிருப்பினும் இவ்வெதுகையில் தலையாகு எதுகை கொண்டன மிகக் குறைவே. பதினோராம் தொகுதியில் காப்புப் பாடல் நீங்கிய, சொற்பொருள் விளக்கும் 309 விருத்தங்களில் பட்டமே, விண்டனென்ப, உரமென்ப, ஆவென்ப, கூழென்ப, எனத் தொடங்கும் விருத்தங்கள் மட்டுமே நான்கடிகளிலும் தலையாகு எதுகை கொண்ட சொற்கள் அமைத்து பொருள் விளக்குகின்றன.[75] அவற்றுள் நான்கில் என்ப என்னுஞ் சொல் சேர்வதால் தலையா கெதுகைகளாய் அமைகின்றன. அடிகளாரோ,அமைந்த அத்தனையும், தலையாகெதுகைகளாய் அமையுமாறு படைத்திருக்கிறார். அதனாற்றான் இரண்டே சொற்கள் உள்ள எதுகைத் தொடையை உடையவை பல இடம் பெறுகின்றன.

தலையாகெதுகையமைந்த சொற்கள் எண்ணிக்கையிலும் பொருளிலும் சூடாமணியினும் அகராதி விரிவுடையது. டகர-வெதுகையில் பட்டம், புட்டம், குட்டம், வட்டம் ஆகிய நான்கே தலையாகு எதுகை கொண்டனவாகச் சூடாமணியில் அமைய[76] அகராதியில் அட்டம், இட்டம், ஒட்டம், கட்டம், சிட்டம், குட்டம், கொட்டம், சட்டம், தட்டம், திட்டம், துட்டம், நட்டம், பட்டம்,

பிட்டம், புட்டம், மட்டம், முட்டம், வட்டம், விட்டம் எனப் பத்தொன்பது சொற்கள் அமைந்துள்ளன.[77] இரண்டிலும் பொதுவாயமைந்த சொற்பொருள்களிலும் கூட விரிவுண்டு. பட்டம் என்னுஞ் சொல்லுக்குச் சூடாமணி குளம், வஸ்திரம், பதனி, வாள், கவரிமா என்னும் ஐந்து பொருள்களைக் கூற[78] அகராதி மேலும் சிலவற்றைச் சுட்டி, ஆயுதம், கவரிமா, குளம், சீலை, நெற்றிப்பட்டம், பதனி, மனிதர்படுக்கை, வழி, விலங்கின் படுக்கை, வினைமுற்று என மேலும் சில பொருள்களைச் சேர்த்துக் கூறுகிறது[79]. வட்டம் என்பதற்குப் பரிசை, நீர்ச்சால், வட்டம், கைம்மணி, சீலை, பரிவேடம் முதலிய ஆறுபொருள்களைக் கூற[80] அகராதி - குளம், கேடகம், கைம்மணி, கொள்கலம், சக்கரம், சீலை, தாழ்வு, திரிகை, நீர்ச்சால், பரிவேடம், பீடம், பொற்காசு முதலியவற்றின் வட்டம், வளைதடி, ஆகிய பதின்மூன்று பொருள்களைக் கூறுகிறது.[81]

ஓரின எதுகைச் சொற்கள் அகரநிரலில் அகராதியில் இடம் பெறச் சூடாமணியில் அகர நிரன்முறை பின்பற்றப்படவில்லை. அச்சொற்களுக்குள்ள அகரநிரன் முறை பின்பற்ற ஆசிரியர் முயலவில்லை. முயன்றிருப்பின் இருக்கின்ற விருத்தங்களை அடிமாற்றி அமைத்து அகரநிரல் அமையுமாறு செய்திருக்கலாம். ஏனெனில், பெரும்பாலான விருத்தங்களில் ஒவ்வோர் அடிக்குள்ளேயே அதன் தொடக்கத்தில் உள்ள சொற்களின் பொருள் முற்றுப் பெற்று விடுகின்றன. சான்றாக,

பட்டமே யோடை தூசு பதவிவாள் கவரி மாவாம்
புட்டமே காக மாகும் புடைவையு நிறைவு முட்பேர்
குட்டமே தொழுநோ யாழங் குளமெனப் பெயர்முழு பாற்றே
வட்டமே பரிசை நீர்ச்சால் வலயங்கை மனிது குர்கோள்''[82]

என்னும் விருத்தத்தில் பட்டம், புட்டம், குட்டம், வட்டம் ஆகியவற்றின் பொருள்கள் அவ்வவ்வடியிலேயே அமைந்துள்ளன. எவ்வடியை எங்குப் போட்டாலும் பொருளோ தொடர்போ மாறாது. எனவே எதுகைச்சொற்களைப் பட்டமே (1) புட்டமே (2) குட்டமே (3) வட்டமே (4) என அமைத்ததற்கு மாறாகக் குட்டமே (1) பட்டமே (2) புட்டமே (3) வட்டமே (4) என அமைந்திருப்பின் அகர நிரலில் முறையாக அமைந்திருக்கும். இவ்வாறு அகரநிரலில் முறையாக அமைவதற்குப் பெரும்பான்மையான விருத்தங்கள் இடம் தரும். எனவே, எதுகைத்தொடையிலும் தெளிவான அகர நிரன் முறையினை முதலில் பின்பற்றியவர் அடிகளாரே என்பது தெளிவு.

தொடையகராதியில் அமைந்துள்ள சொற்கள் புதிதாக அடிகளால் காணப்பட்டவையுமல்ல. முன்னை அகராதிப்பிரிவாம் பெயர-

கராதியில் உள்ளனவே. அதில் காணப்பட்ட சொற்களையெடுத்து எதுகைக்கேற்றவாறு வகைப்படுத்தி உரிய நிரன்முறையில் தொடையகராதியில் அமைத்திருக்கிறார் எனலாம். எனினும் ஒரு சில புதுச் சொற்களும் பொருள் மாற்றங்களும் ஆங்காகே காணப்படுகின்றன.

காட்டாக, ககர எதுகைப் பகுதியில் மட்டும் பெயரகராதியில் இல்லாத அகடம், நிகம், தகர்தல், சுக்கு போன்ற சொற்கள் காணப்படுகின்றன.[83] பெயரகராதியில் கூறப்பட்ட சொற்பொருளினும் அதிகமாகத் தொடையகராதியில் அமைந்திருப்பதைக் காணலாம். பெயரகராதியிற் கூறப்பட்ட பொருள்களிற் சில தொடையகராதியில் விடப்பட்டிருக்கின்றன. சகடம் என்னும் சொல்லுக்குரிய பொருள்களுள்[84] பாண்டில் - பண்ட ஊர்தி, நகரம் என்பதற்குரியவற்றுள்[85] இராசமனை, தகர், என்பதற்குரியவற்றுள்[86] யாளியினாள், மிகை என்பதற்குரியவற்றுள்[87] வருத்தம், உகுத்தல் என்பதற்குரியவற்றுள்[88] விடுத்தல் ஆகியன தொடையகராதியில் விடப்பட்டிருக்கின்றன. பொருளில், முறையில் சிறு மாற்றங்களோடு தொடையகராதியில் அமைந்தனவும் உண்டு. அகழ் என்பதற்கு அகழி, தொண்டென்னேவல் எனப் பெயரகராதியில் அமைந்தனவும் உண்டு. அகழ் என்பதற்கு அகழி, தொண்டென்னேவல் எனப் பெயரகராதியிற்[89] பொருள் அமையத்தொடையகராதியில் அகழி, அகழென்னேவல் என அமைந்திருக்கிறது.[90] எதுகைக்காகச் சில மாற்றத்தோடு தொடையில் அமைக்கப்பட்ட சொல்லும் உண்டு. நிகாதன் என்னுஞ் சொல் வஞ்சனையாளன் என்னும் பொருளில் பெயரகராதியில் உள்ளது.[91] பின்னர்த்தொடையகராதியில், அகாதம், விகாதம் ஆகிய சொற்களுக்கிடையே தலையாகெதுகையாக அமையுமாறு நிகாதம் என மாற்றியமைக்கப்பட்டு வஞ்சனை எனப் பொருள் தரப்பட்டிருக்கிறது.[92]

தொடையகராதிச் சொற்களின் எண்ணிக்கையோடு ஒப்பிடுங்கால் வேறுபாடுகள் உள்ளவை மிகக் குறைந்தனவாதலின், பெயரகராதிச் சொற்களே எதுகையுடையனவாகப் பகுக்கப்பட்டு நிரற்பட அமைக்கப் பட்டனவெனப் பொதுப்படக் கொள்ள இடனுண்டு.

4. சிறப்புத் தொடைப்பதம்

தொடையகராதியின் இறுதியில், நெடிற்கீழெதுகைச் சொற்களைக் கூறிமுடித்த பின்னர்ச் சிறப்புள்ள தொடைப்பதங்களாக 11 சொற்றொகுதிகளைக் காட்டுகிறார். அச்சொற்களைக் கூறுமுன், "ஈண்டுக் காட்டியபற்பல தொடைப்பதமன்றியடைமொழியாலுமீரெச்சத்தாலு மறுதொகையாலு முற்று வினையாலும் முற்றுவினையாம் வினைக் குறிப்பாலும் வேற்றுமை முதலிய விகுதியுருபாலுஞ் சங்கிருத முதலிய

வெழுத்துத் திரிபாலு மோரளவின்றிச் சிறப்புள தொடைப்பதமாக வேண்டுவனவெல்லாங் கூட்டிக் கொள்க. அங்ஙனம் சிந்தாமணி முதற் பலவிலக்கியங்களில் வரும்படி'' எனக் குறிப்புத் தருகிறார்.

இக்குறிப்பினின்று, அடைமொழியோடு சேர்ந்தமைந்த சொற்களையும், தொகையாயமைந்த சொற்களையும் இலக்கியங்களினின்று கண்டுணர்ந்து அவற்றில் அமைந்த தொடைநயத்தை உணரவேண்டும் எனப் பெறப்படுகிறது. அதற்கு எடுத்துக்காட்டாகச் செந்நீர்ப் பவளம் முந்நீர்ப்புணரி, அந்நீர்ப்பதுமம், பைந்நீர்க் கதலி, வெந்நீர்க் கடமா ஆகிய தொடைப்பதங்களை முதலிற் காட்டுகிறார், இவற்றுள் செந்நீர் முந்நீர், அந்நீர், பைந்நீர், வெந்நீர் ஆகியவை குணத்தொகையாகவும் அடைமொழியாகவும் அமைந்து எதுகைத் தொடைகளாவன. அவற்றின் பின்வரும் பவளம், புணரி, பதுமம், கதலி, கடமா ஆகியவை எதுகையாய்அமையாவிடினும் அடையும்பெயருங்கலந்த அச்சீர்களை எதுகைத் தொடையுடையனவாய்க் கருதவேண்டும் என்பதே கருத்தாகும். முன்னர்க் குறிற்கீழெதுகை, நெடிற்கீழ் எதுகையில் குறிப்பிட்டனவெல்லாம் ஒரு சொல் ஒருசீராய் அமைவனவாதலின் இரு சொற்கள் ஒரு சீராயமையினும் ஒரு சொல்லிலமைந்த எதுகை கொண்டு அச்சீரினை எதுகைத் தொடை நயமுடையதாய்க் கொள்ள வேண்டுமெனச் சுட்ட அவற்றைத் தனிப்பட்டத் தொடைப்பதம் என்னுந் தலைப்பிற் காட்டினார் எனலாம்.

இரு சொற்கள் சேருங்கால் புணர்ச்சிவிகாரங்கள் ஏற்படுமாயின் அதன் பின்சொல்லிலுள்ள எழுத்தைக் கொண்டு எதுகையாகக் கொள்ள வேண்டுமென்னும் குறிப்பைக் காட்ட இரண்டாவதாகத் தேனிலை மாலை, நூனிலை மார்பன், பானிலைமொழி வேனிலைவிழி ஆகிய சொற்களைக் காட்டியுள்ளார். இவற்றுள் தேன் + நிலை = தேனிலை, நூல் + நிலை = நூனிலை, பால் + நிலை = பானிலை, வேல் + நிலை = வேனிலை எனப் புணருங்கால் முதற்சொல் புணராத நிலையிலுள்ள ன், ல், பற்றிக் கருதாமல் புணர்த்தபின் இரண்டாம் எழுத்தாக அமையும் 'னி' என்னும் எழுத்தை மனத்திருத்தி ஒரெதுகையாகக் கொள்ள வேண்டும் எனக் காட்டிப் புணர் மொழியாயினமையின் தனியே தொடைப்பதத்தின் கீழ்க் காட்டினார் எனலாம்.

வடசொற்களின் புணர்ச்சியால் திரிபுற்றாலும் எதுகை கொண்டனவாகக் கொள்ள வேண்டும் என்பதைப் பெற வைக்க அரன் + அம்பரம் - அரனாம்பரம் என்னுஞ் சொல்லின் எதுகையாய் அமைந்த இரனாம்பரம், கிரனாபரம், சரனாம்பரம் போன்றவற்றையும் சிரம் + அங்கம் - சிராங்கம் என்னுஞ் சொல்லின் எதுகையாய் அமைந்த தராங்கம், பராங்கம், வராங்கம் போன்றவற்றையும் அடுத்துக் கூறுகிறார்.

பல்வகைத் திரிபுகள் பற்றிக் கருதாமல் எழுத்துக்கள் பற்றி எதுகைத் தொடையாய்க் கருதுவது போன்றே, பல்வகைச் சொற்கள் பற்றி எண்ணாமல் எழுத்தை நோக்கி எதுகையாகக் கொள்ள வேண்டும் என்பதற்காகச் சில எதுகைசொற்களை, வினைக்குறிப்புப் பெயரெச்சத்தால் அமைந்த சுனைய நீலம், சினைய சண்பகம், நனைய நாகம், அனயயாவும் ஆகியவற்றையும் வினைக் குறிப்பினாலும், முற்றுவினையாலும் அமைந்த காவிற்றாக, தீவிற்றாக, நாவிற்றாக, நீவிற்றாக, மேவிற்றாக போன்றவற்றையும் காட்டுகிறார்.

பின்னர், சொல்லொடு பகுபத விருத்தியால் அமைந்த சாலி போன்றவை, ஐ வேற்றுமை உருபு சேர்ந்த குரவை போன்றவை, இன் சாரியையும் வேற்றுமையுருபு ஐயும் சேர்ந்த செந்தினை போன்றவை, ஐகாரவீறுடைய இறந்த கால முன்னிலை சேர்ந்த தடிதி போன்றவை, புண்ணியவுடல் போன்ற சொற்களில் அடையாகும் பெயரெச்ச அமைப்புடையவை, கன்னி போன்ற வினையெச்ச விகுதி கொண்டவை ஆகியவற்றைக் கூறி முடிக்கிறார். இவ்வாறு காட்டு-வதன் அடிப்படை ஈற்றெழுத்தின் தன்மை, பொருள் பற்றி எண்ணாமல் இரண்டாம் எழுத்தின் வடிவம் பற்றியே எதுகையெனக் கொள்ள வேண்டும் என்பதேயாம்.

தொடைப்பதம் என்னும் பகுதியை இறுதியில் படைத்துக் காட்டியதன் நோக்கம் பொருள் அறியச் செய்ய வேண்டும் என்ப-தன்று; செய்யுள் இயற்றுவோர்க்குத் துணைபுரிய வேண்டும் என்பதே போலும். ஏனெனில் இப்பகுதியில் கூறப்பட்ட சொற்களுள் 18 சொற்கட்கே பொருள் கூறப்பட்டுள்ளன. 5 சொற்கட்குப் பொருள் கூறப்படவில்லை. 6-ஆம் எதுகைச் சொற்றொகுதியிலிருந்து 11-ஆம் எதுகைச் சொற்றொகுதி முடிய இன்ன சொற்கு இன்னின்ன சொற்கள் தொடைப்பதமாக அமைந்துள்ளன எனக் காட்டப்படுகிற தன்றிப் பொருள் கூறப்படவில்லை. எனவே ஒவ்வொரு தொகுதி-யிலுமுள்ள சொற்களை ஒன்றற்கொன்று எதுகைத் தொடையாகச் செய்யுள் இயற்றுவோர் அமைத்துக் கொள்ளலாம் என்பதே உட் கருத்தாகப்படுகிறது. அடிகளார் இப்பகுதியின் தொடக்கத்தில் சுட்டியிருப்பது போன்று இச்சொற்களுள் சுனைய நீலம், குரவை, சிந்தனை போன்றன சீவக சிந்தாமணியிலும்[93] மற்றவை வேறுபல இலக்கியங்களிலும் ஆளப்பட்டவை.

தொடைப்பதங்களைத் தொகுப்பின் அளவின்றிப் பெருகும் ஆதலின் சிலவற்றை எடுத்துக் காட்டிப் பிறவற்றைக் கண்டுணர வேண்டுமென வலியுறுத்த இறுதியில், ''இங்ஙன மீண்டுக் கூறிய வற்றைப் பற்றுக் கோடாகக் கொண்டு புத்தி வழியாற் கூறாதனவு முணர்வதறிவோர் கடனே'' எனக் கூறுவது தமிழ்ச் சொற்பரப்பின்

மிகுதியைப் புலப்படுத்துகிறது. மேலும் அடிகளாரது தன்னடக்கமும் வெளிப்படுகிறது. தாம் இயற்றிய காப்பியப் பாடல்களில் அமைந்த எதுகைத் தொடைகளைச் சான்றாகக் காட்ட முயலாது, தமிழ் முன்னோர்களுடைய பாக்களையே காட்டுவது அடிகளாரது தன்-அடக்கத்தைக் காட்டுவதோடு, தமிழ்ச்சான்றோர் மீது கொண்டுள்ள பற்றையும் காட்டுகிறது. இப்பகுதியில் உள்ளவற்றுள் சுனைய நிலம் [94], தீவிற்றாக [95] ஆகிய இரு சொற்களே தாம் அகராதிக்குமுன் இயற்றிய தேம்பாவணிக் காப்பியத்துள் எதுகைகளாய் உள்ளவையாகும் [96]. அதிலும் தீவிற்றாக என்னும் சொல் தீவிற்றாய் எனக் காணப்படுகிறது.

சான்றோர்தம் செய்யுட்களில் அடிகளார் கொண்டிருந்த ஈடுபாட்டினை அச்சொற்றொடைகள் அமைந்திருக்கும் நிரன்-முறைகளும் உணர வைக்கின்றன. முதலாவதாக அமைந்த தொகுப்பில் உள்ள தொடைகள் அகர நிரன்முறைப்படி அமைய வேண்டுமாயின் வெந்நீர்க்கடமா, பைந்நீர்க்கதலி, அந்நீர்ப்பதுமம், செந்நீர்ப்பவளம், முந்நீர்ப்புணரி என்னும் முறை பெறவேண்டும். அவ்வாறே நான்காவது தொகுப்பில் உள்ளவை சினைய சண்பகம், சுனைய நீலம் நனைய நாகம், அனையயாவும் எனவும் பதினோராம் தொகுப்பில் உள்ளவை, மண்ணிய கோயில், நண்ணிய பொருள், எண்ணியமுறை, கண்ணியவிடம் எனவும் முறைபெற வேண்டும். அம்முறைக்கு மாறாக அச்சொற்கள் செந்நீர்ப்பவளம், முந்நீர்ப்புணரி அந்நீர்ப்பதுமம், பைந்நீர்க்கதலி, வெந்நீர்க்கடமா எனவும் [96], சுனைய நீலம், சினைய சண்பகம், நனைய நாகம், அனையயாவும் எனவும் [97], எண்ணியமுறை, நண்ணிய பொருள், கண்ணியவிடம், மண்ணியகோயில்எனவும் [98] அமைந்ததற்கு அவைஅமைந்த சான்றோர் செய்யுட்களில் அடிகளில் உள்ள முறையை மாற்றலாகாதெனக் கொண்டிருந்த எண்ணமே காரணம் எனக் கொள்ளக் கிடக்கின்றது.

இவ்வாறு எதுகைச் சொற்கள், புணருங்கால் ஏற்படும் திரிபுகள் பெறும் சொல்லிலக்கணவகைகள் ஆகியவற்றால் எதுகைத் தொடை-தாமோ என ஐயம் ஏற்படாவகையில் மயக்கமறுக்கத் தக்க எடுத்துக் காட்டுகளைத் தனியே நிறுத்திக் காட்டி அகராதியை முடித்திருப்பது அடிகளது தெளிந்த அறிவையும், செறிந்த புலமையையும் வெளிப்-படச் செய்வதாய் உள்ளது. பொருள் விளங்கப் படைக்கப்பட்ட அகராதியில் பிறமயக்கங்கள் புகுத்துவிடக் கூடாதென நுண்ணிதின் உணர்ந்து ஆக்கிய அடிகளது முன்னுணர்வு கருத்திற் கொள்ளத் தக்கது.

மேற்கோள்கள்

1 தொல்காப்பியம், நூற்பா, 1345–1348, 1358.
2 ...., 1359.
3 ... ..., 1315.
4 தொல்காப்பிய யாப்பு, பக், 46,.
5 தொல்காப்பியம், நூற்பா, 1355,
6 ... ., உரை.
7 ...., 1349-1351
8 .... 1600.
9 ....,2069.
10 பின்னிணைப்பு-19.
11 பின்னிணைப்பு-20.
12 பின்னிணைப்பு-21.
13 தொல்காப்பியம், நூற்பா, 783, 800, 873.
14 ...., 866, 872, 879.
15 ...., 785.
16 ...., 787,788.
17 ...., , 796 797.
18 ... ..., 798, 799
19 ... ..., 802, 803,
20 ...., 821, 822.
21 ... ., 834, 835, 836.
22 ... ..., 840, 841.
23 ...., 865, 866.
24 பின்னிணைப்பு-22.
25 ஆத்திசூடி, கொன்றைவேந்தன், பக். 3.
26 ...., 6.
27 கொன்றைவேந்தன், 12, 30, 43, 52, 73, 78, 91.
28 ....- 9, 10, 13, 14, 35.
29 திவாகரம், பக். 8, 11, 25
30 ...., 5, 10 12, 20, 21, 37, 53, 63, 70, 80, 92, 98, 98, 100, 101, 105, 106, 106.
31 அரும்பொருள் விளக்க நிகண்டு பக். 3.
32 திவாகரம், பக். 5.
33 ...., 30.
34 ... ., 57.
35 அரும்பொருள் விளக்க நிகண்டு, பக். 3.
36 ...., 4.
37 பிங்கலம், நூற்பா, 108.

38 ...., 139.
39 ....,110.
40 ...., 26, 27, 286, 287, 499. 500, 540, 541, 1155 1156.
41 ...., 151, 152, 153, 154, 661, 662, 663, 934, 935 1180, 1181, 1187, 1188, 1586 1587
42 ...., 1237; 1239.
43 ...., 1291, 1293.
44 ...., 163, 164.
45 ...., 165, 166.
46 ...., 320 321.
47 சூடாமணி, பதினோராம் தொகுதி, ககரவெதுகை, பாடல், 1, 2, 3, 6, 9,10, 10, 11, 13, 13, 14, 14, 14, 16, 16, 16, 17, 17, 17, 19,
48 சுந்தர சண்முகம், பக். 208
49 சூடாமணி, பதினோராம் தொகுதி, ககரவெதுகை பாடல் 5.
50 ...., 4.
51 ...., தகரவெதுகை, பாடல், 1.
52 அரும்பொருள் விளக்க நிகண்டு, பக். 6.
53 ...., 16.
54 தொன்னூல் விளக்கம், நூற்பா, 214. உரை.
55 ...., 215.
56 சதுரகராதி-, தொடை, பக். 1.
57 ...., 44.
58 ...., 73.
59 ...., 1.
60 ...., 12, 13.
61 ...., 39.
62 ...., 27, 28.
63 ...., 73.
64 ...., 87.
65 ...., 9,51, பிற்சேர்க்கை, 1.
66 ...., 68, 1.
67 தொன்னூல் விளக்கம், நூற்பா, 48.
68 சதுரகராதி-1, தொடை. பக். 1.
69 தொன்னூல் விளக்கம், நூற்பா, 48. உரை.
70 சதுரகராதி-1, தொடை. பக். 97, 98.
71 ...., 44.
72 தொன்னூல் விளக்கம், நூற்பா, 48. உரை.

73 சூடாமணி, பதினோராம் தொகுதி, மகரவெதுகை, பாடல். 2, யகர, வெதுகை, பாடல். 11, வகரவெதுகை, பாடல். 11.
74 .... –, வகரவெதுகை, பாடல், 13.
75 ...., டகரவெதுகை, பாடல்13, ணகரவெதுகை, பாடல். 9 , ரகரவெதுகை, பாடல்3, வகரவெதுகை, பாடல், 13. ழகரவெதுகை, பாடல் 8.
76 ...., டகரவெதுகை, பாடல் 13.
77 சதுரகராதி-1, தொடை. பக். 16, 17.
78 சூடாமணி, பதினோராம் தொகுதி, டகரவெதுகை, பாடல் 13.
79 சதுரகராதி-1, தொடை. பக். 17.
80 சூடாமணி, பதினோராம் தொகுதி, டகரவெதுகை, பாடல்,13.
81 சதுரகராதி-1, தொடை. பக். 17.
82 சூடாமணி, பதினோராம் தொகுதி, டகரவெதுகை, பாடல்,13
83 சதுரகராதி-1, தொடை. பக். 1, 2, 4,
84 ...., 1.
85 ...., 2.
86 ....
87 ...., 3.
88 ....
89 ...., பெயர், பக். 1.
90 ...., தொடை, பக். 2.
91 ...., பெயர், பக். 19.
92 ...., தொடை பக். 3.
93 சீவகசிந்தாமணி, பாடல், 1608, 1099, 1196.
94 தேம்பாவணி, மூன்றாம் காண்டம், புரோகிதப்படலம், பாடல்,11.
95 மீட்சிப் படலம், பாடல் 2.
96 சதுரகராதி1, தொடை, பக். 137.
97 ...., 138.
98 ...., 139.

இயல் 8

சதுரகராதியின் சிறப்பியல்புகள்

1. இலக்கணக் கொள்கை

இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பல் இயல்பு.[1] இலக்கியத்தில் பழுத்த புலமை கொண்ட அடிகள் இலக்கணத்திலும் ஈடுபடலானார். அவர்க்கு முன்னர் இலக்கணங் கண்ட அயலார் சிலருளரெனினும், அடிகளே விரிந்த அளவில் வரைந்துள்ளமையால் அவருள் சிறந்தாராவர்.[2] அவர் கண்டு காட்டிய இலக்கணக் கோட்பாடுகள் அவரது அகராதி உருவாக எவ்வகையில் பயன் பட்டிருக்கின்றன என தெளிதற்கு, அவர் தம் இலக்கணச் சிந்தனைகளை அகராதியோடு ஒருங்கிணைத்துக் காண்டல் துணையாகும்.

வழங்கிவரும் தமிழ் இலக்கணங்களுள் முன்னூலாம் தொல்காப்பியம் ஒழியப் பின்னூல் பலவினுள் நன்னூலே சிறந்தது.[3] அதற்குப் பின்னரெழுந்த நூல்களுள் நன்னூல் எனத்தக்கது அடிகளாருடைய தொன்னூல் விளக்கம் எனலாம். ஐம்பிரிவுகளாய தமிழ் இலக்கணத்தை ஆயிரத்து அறுநூற்றுக்கும் மேற்பட்ட நூற்பாக்களில் தொல்காப்பியம் கூறுகிறது. எழுத்து, சொல் ஆகிய இரு பிரிவுகளை மட்டும் நன்னூல் 462 நூற்பாக்களில் பகர்கிறது. தொன்னூல் விளக்கமோ ஐந்திலக்கணங்களையும் திட்ப நுட்பம் செறிந்தனவாகிய முந்நூற்றெழுபது நூற்பாக்களில் காட்டுகிறது.

தொன்னூல் விளக்கத்தின் நோக்கத்தைச் சிறப்புப்பாயிரத்தில் அடிகள், ''ஒளிவிடா மூடின தீபத்தாற் பயனிலை யென்றது போல முன்னோர் தந்த விலக்கண நூலெலாஞ் செந்தமிழ்ச் சிறந்த மொழியோடு மூடிக் கிடப்பவிக்காலத் தவ்விளக்கொளியைக் காண்பாரில்லாத தற்கொரு பயனுமில்லை. தென்மொழியார்க்கு வடமொழியைத் தானுணர்த்தக் கருதியவர் முன்னறிந்த தமிழ்ச்சொற் கொண்டலவோ வடமொழிப் பயனை யுரைத்தல் வேண்டுமாகையான் மூத்தோர்

புதைத்த நூனலம் விளங்கவும் கல்லாதவரும் பயன் கொண்டுணரவும் நானே யதன்மேற்கவித்த போர்வை நீங்கி யறிஞர்முன் கொழுத்தின தீபமெவர்க்கு மெறிப்பக்கையிலேந்தினாற் போல வவர்முன் செந்தமிழ் மொழியான் மறைந்த விலக்கண நூலை யினத்தமிழுரையால் வெளிப் பொருளாக்க நினைத்தேனாயினும் முன்னோர் தந்த யாவையும் விரித்துரைத்தாலிந் நூலும் பெருகிக் கண்டன ரஞ்சித் துணியாரென்று கருதி முனமிகவறிய வேண்டுவதொன்றைத் தெரிந்து தருவேன்''[4] எனத் தெளிவாக்குவதினின்று பழந்தமிழ் இலக்கணங்களை அனைவரும் உணருமாறு செய்தலே அவரது தலையாய நோக்கம் என்பது தெளிவு. அந்நோக்கத்தை நிறைவேற்ற அகராதியையும் ஒரு கருவியாகக் கொண்டார்.

முன்னோர் நூலின் முடிபொருங் கொத்துப் பின்னோர் வேண்டும் விகற்பங் கூறித்[5] தொன்னூல் விளக்கம் எழுதப்பட்டது. எழுத்திலக்கணத்தில் தோன்றல், திரிதல், கெடுதல் எனப் புணர்ச்சி விகாரங்களை மூவகையாக முன்னோர்[6] குறிக்க, அடிகளார் திரட்டு என்ற ஒன்றையுஞ் சேர்த்து நாலாக்கி, தீர்க்கசந்தி, குண சந்தி, விருத்தி சந்தி ஆகிய வடசொற்புணரியல்கள் திரட்டெனப் படும் என்பதனைத் தக்க எடுத்துக் காட்டுகளோடு[7] விளக்குகிறார்.

செந்தமிழ்க்கெனப்படைத்த அகராதியில் திரட்டு என்னும் வடமொழிப்புணரியல்பு கொண்ட அகண்டாகண்டன், அத்தியயனம், சரணாயுதம், தேவாலயம், பலனாசனம், வேதாந்தம், வேதார்த்தன் போன்ற சொற்கட்குப் பொருள் கூறப்பட்டுள்ளன[8]. இச்சொற்களுள் எதுவும் தொன்னூல் விளக்கத்தில் எடுத்துக்காட்டாகக் கொடுக்கப்பட்டிலது. தம்மால் இலக்கணத்தில் காட்டப் படாது தமிழில் வழங்கும் சொற்களைத் திரட்டி அவற்றை உரிய நிரலில் நிறுத்திப் பொருள் விளக்குவது தாம் கொண்ட திரட்டு என்னும் புணர்ச்சி விகாரவலிமையால் எனலாம்.

புணர்ச்சி விகாரமன்றிப் பிற விகாரங்களை விளக்குங்கால், அடிகளாரின் இலக்கணப்புலமை, இலக்கியப் பயிற்சி புலனாகின்றன. செய்யுள் விகாரம் ஒன்பதே யன்றியும் புணர்ச்சி விகாரமும், புணர்ச்சியில் விகாரமும் சிலவுள எனக் கூறித் தோன்றல், திரிதல், கெடுதல், நீளல், நிலைமாறுதல், மருவி வழங்குதல், ஒத்து நடத்தல் ஆகியவற்றை விளக்குகிறார்.[9]

தோன்றல் விகாரத்திற்கு அடிகளார் 'செல்வுழி' என்பதனை எடுத்துக்காட்டாகத் தருகிறார். அவர் தம் கருத்துப்படி செல் + உழி ஆகியன இடையில் வகரம் பெற்று, செல் + வ் + உழி > செல்வுழி என ஆயின. இத்தொடரை நச்சினார்க்கினியரும், அடிகளுக்குப்

பிந்தியவர்களான ஆறுமுக நாவலர், சடகோப ராமாநுஜாசாரியார் போன்றோரும் மேற்கோளாக ஆளுகின்றனர். நச்சினார்க்கினியர் உடம்படுமெய்யாக வகரம் சிறுபான்மை புள்ளியீற்றோடு உயிர் சேருங்கால் வரலாம் என, 'விண்வத்துக் கொட்கும்' என்ற எடுத்துக் காட்டால் விளக்கி, ''செல்வுழி என்பன வினைத்தொகையென மறுக்க''[10] என்கிறார். அதனின்று, சிறுபான்மை புள்ளியீற்றோடு உயிர் சேருங்கால் உடப்படுமெய்யாக வரும் வகரம் வினைத் தொகையில் மட்டும் வாராதென்பது நச்சினார்க்கினியரது கருத்தாகத் தெரிகிறது.

அடிகட்குப் பின்னர் வந்த ஆறுமுகநாவலர், சடகோபராமாநு ஜாசாரியார் ஆகியோர் தம் காண்டிகை உரைகளில்,[11] "நெறி என்ற மிகையான் உடம்படு மெய்யல்லாத வகரம் பெறுதலுங் கொள்க" எனக் கூறிச் 'செல்வுழிச் செல்க' என எடுத்துக் காட்டுகின்றன ரெனினும், புணர்ச்சியில் விகாரமாகச் 'செல்வுழி' என்பதைக் கொண்டிலர். ஆறுமுக நாவலர், புணர்ச்சியில் விகாரம் ஆறெனக் கூறி அவற்றுள், தோன்றல் விகாரத்திற்கு யாது (யா + வ் + அது) என்னுஞ் சொல்லையே காட்டுகிறார்.[12] அச்சொல்லில் யா + அது > யா + வ் + அது > யாவது என வகர உடம்படு மெய் தோன்றிய தாகக் கொள்ளற்குஇடனுண்டு.

வகர உடம்படுமெய் பற்றிய கருத்தில் நச்சினார்க்கினியர் குறிப்பு மனநிறைவளித்திலது. புணர்ச்சியில்விகாரம் பற்றியதில் ஆறுமுக நாவலர் கருத்தும் காட்டும் சிறந்தில. வகர உடம்படுமெய், புணர்ச்சியில்விகாரம் இரண்டனையும் வேறுபடுத்தித் தெளிந்து, 'செல்வுழி' என்னும் சொல்லின் இடையில் வரும் வகரம் தோன்றல் விகாரமென அடிகள் குறிக்கிறார். அதனை உறுதிப் படுத்துவான்-போன்று, செல்+அப்பால்>செல்+வ்+அப்பால்>செல்வப்பால் எனக் கொண்டு, ''கழித்தன நெடுஞ்செல் வப்பால் கவரிமா புரத்திற் சேர்ந்தார்''[13] எனப் பாடியுள்ளார்.

அடிகளார் அகராதியில் புணர்ச்சியில்விகாரமாக வழங்கிவரும் சொற்களையெல்லாம் உரிய நிரலில் அமைத்துப் பொருள் கூறுகிறார். 'புயகம்–பாம்பு' எனப் பொருள் விளக்கந் தந்ததற்கடுத்துப் 'புயங்கம்-பாம்பு' எனத் தருகிறார்.[14] புயகம், புயங்கம் என்பனவற்றுக் கிடையே பொருள் வேறுபாடின்றெனினும் புயகம் என்னுஞ்சொல் ஙகரத்தை யிடையே தோன்றல் விகாரமாகப் பெற்றுப் புயங்கம் என அமைந்து அதே பொருளைத் தருகிறதென்பதனைக் குறிப்பால் உணரலாம். பிலவகம்-குரங்கு, தேரை எனவும், பிலவங்கம்-குரங்கு, தேரை, மான் எனவும் அடுத்தடுத்துப் பொருள் விளக்கப்பட்-டிருக்கின்றன.[15] இவற்றிடையே பொருள்வேறுபாடு மிகுதியாக

இன்மையால் ஙகரத்தைத் தோன்றல் விகாரமாகப் பெற்று பிலவகம், பிலவங்கம் ஆயிற்றெனலாம். தோன்றல் விகாரத்திற்கு அடிகளார் குன்று>குன்றம் என்னுமோர் எடுத்துக்காட்டைத் தருகிறார், அகராதியில் இடம் பெற்றிருக்கும் தளவு>தளவம் போன்ற சொற்கள் பல உள.[16]

புணர்ச்சியில் விகாரத்தின் திரிதல் விகாரத்திற்கு மாகி>மாசி, கெடுதல் விகாரத்திற்கு யார்>ஆர், யாவர்>யார் போன்றன, நீளலுக்குப் பொழுது>போது, பெயர்>பேர் போன்றன, நிலை மாறுதலுக்கு வைசாகி>வைகாசி, நாளிகேரம்>நாரிகேளம், தசை> சதை, ஞிமிறு>மிஞிறு, சிவிறி>விசிறி, மருவி வழங்குதலுக்கு என்றந்தை>எந்தை, ஒத்து நடத்தலுக்கு நண்டு>ஞண்டு, நெண்டு> ஞெண்டு, நமன்>ஞமன் போன்றன தொன்னூல் விளக்கத்தில் எடுத்துக்காட்டுகளாக இடம் பெறுகின்றன.[17] அகராதியில், பூசை> பூஞை[18] (திரிதல்), வாருண்டகம்>வாருண்டம்[19] (கெடுதல்), சிற்றூர்> சீறூர்[20] (நீளல்), சிற்றாலவட்டம் என்னும் பொருளில் விசிறி>சிவிறி[21] (நிலைமாறுதல்), எந்தை>என்றந்தை[22] (மருவிவழங்குதல்) சேடகம்> கேடகம் (ஒத்துநடத்தல்) போன்ற சொற்கள் இடம் பெறுகின்றன. பல்வேறு விகாரங்களாக வழங்கிய சொற்களை ஆய்ந்து இலக்கணத்தில் கூறியதோடமையாது அவற்றின் பொருள் விகாரங்களானமையின் மாறுபடவில்லை எனத் தெளிவுறுத்த அகராதியிலும் இடம் பெறச் செய்தது இலக்கண நோக்கின் பொருளினைப் புலப்படுத்த வேண்டும் என்பதனால் எனலாம் ஆயினும் இவ்விகார மாற்ற வழக்குகள் தற்கால மொழியியல் நோக்கிலும் பொருத்தமுடையனவாகத் தோன்றில.

அகராதி முன்னுரையில் வடசொற்கள் பலவற்றை அம்மொழி வல்லாரிடம் முயன்று தெரிந்து அறிந்து இடம்பெறச் செய்ததாக அடிகளார் குறிக்கிறார்.[23] தொன்னூல் விளக்கத்தில், வடநடைப் பகுபதங்களாமாறுணர்த்துதும் எனக்கூறி, அவற்றின் பகுதியாகிய பகாப்பதங்கள் எவ்வெவ்வாறு திரியும் என எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குகிறார்.[24] அவ்வகைத் திரிபுடைய வடசொற்களை அகராதியிலும் இடம் பெறச் செய்கிறார். பகுதியாக நிற்கும் பகாப்பதம் முதற்கண் உயிராயினும் உயிர்மெய்யாயினும் வரின் நிலைமொழி இ, எ, எனவிரண்டும் ஐயாகத் திரிந்து பகுபதங்களாகும் எனக் கூறி, எடுத்துக்காட்டுகளாக இந்திரனிருக்கும் திசை - ஐந்திரி, கிரியி-லுள்ளன - கைரிகம், சிலையாலயமலை - சைலம். மிதுலையுட் பிறந்தாள்- மைதுலி, நியாய நூலுணர்ந்தோன் - நையாயிகன், வியாகரணமுணர்ந்தோன் - வையாகரணன் ஆகியவற்றைக் காட்டு-கிறார் இச்சொற்களை அகராதியில் ஐந்திரி-கிழக்கு, கைரிகம்-பொன், சைலம்-மலை, மைதுலி-சீதை, வையாகரணன்-வியாகரணம்படித்தோன் என இடம்பெறச் செய்கிறார்.[25] தொன்னூல் விளக்கத்தில் காட்டப்-

படுவனவற்றுள், நியாய நூலுணர்ந்தோன்-நையாயிகன் என்பது இடம் பெறவில்லையாயினும் அவ்வகைத்தாய நிருத்தித் திசையைக் குறிக்கும் நைருதி என்னுஞ் சொல் இடம் பெறுகிறது.[26] மேலும் ஓரோவிடத்து இ, ஔவாகத் திரியும் என்பதற்குக் கிரியிற் பிறந்தாள் கௌரி எனவும், ஏ ஐயாகத் திரியும் என்பதற்கு வேதவழி நின்றொழுகுவர்-வைதிகர் எனவும், ஊ, ஓ ஔவாகத் திரியும் என்பதற்குச் சூரனென்றும் சூரியன் மகனாஞ்சனி-சௌரி, கோசலையிடத்துப் பிறந்தாள் கௌசலை, சோமன் என்னுஞ் சந்திரன் மகனாம் புதன்-சௌமன்எனவும், ஐயாகத் திரிவன வெல்லாம் அயி என ஆகும் என்பதற்குக் கயிரிகம், சயிலம், சயிலன் எனவும், ஔவாகத் திரிவன வெல்லாம் அவு என ஆகும் என்பதற்குக் கவுரி, சவுரி, கவுரவர் எனவும், அ ஆவாகத் திரியும் என்பதற்கு அதிதியின் மக்கள்-ஆதித்தியர், தசரதன் மகன் ராமன்-தாசரதி, சனகன் மகளாஞ் சீதை சானகி, தனுவின் மக்களிராக்கதர் தானவர், சகரன் மக்கட்டோண்டின கடல்-சாகரம் எனவும், ஐயீற்றுப் பகாப்பதங்களில் ஐயொழிந்து விகுதியாக ஏயன் என்று முடிந்தால் ஈன்ற மகனென்று காட்டும் பகுபதங்களாம் என்பதற்குக் கார்த்திகையின் மகன்-கார்த்திகேயன், தாரையின் மகன்-தாரேயன், கங்கையின் மகன்-காங்கேயன், விந்தையின் மகன்-வைநதேயன் எனவும், பிறவென்னும் மிகைக்கு வேதமுரைப்போன்-வேதியன், பங்கத்துள்ளும் அம்புள்ளும் ஆகிய தாமரை-பங்கயம், அம்புயம், சிபியின் மகன்-சேம்பியன், சல்சலன்-சலாசலன், சர்சரன்-சராசரன், பத்பதன்-பதாபதன் எனவும் எடுத்துக்காட்டுகள் தொன்னூல் விளக்கத்தில் தரப்படுகின்றன.[28] இவற்றுள் கௌரி, வைதிகர், சௌரி, சௌமன், ஆதித்தர், சானகி, தானவர், சாகரம், கார்த்திகேயன், காங்கேயன், வேதியர், பங்கயம், அம்புயம், செம்பியன் போன்ற சொற்கள் அகராதியில் காட்டப்பட்டுள்ளன-[28] மற்றவற்றுள் சிலதிரிந்த வடிவங்களில் இடம் பெறுகின்றன.

அன்றியும் தொன்னூல் விளக்கத்தில் வட சொற்களுக்கு முதலடுத்து வெவ்வேறு பொருளை விளக்கி வரும் உபசர்க்கங்களாக பிர, பரா, அப, சம், அநு, அவ, நிர், துர், வி, ஆ, நி, அதி, அபி, சு, உற், பிரதி, பரி, உப ஆகியவற்றை எடுத்துக்காட்டுகளுடன் குறிக்கிறார்.[29] அவ்வுபசர்க்கங்களைக் கொண்ட பிரதானம், பராபரம், அபவாதம், சம்போகம், அநுசிதம், அவரோகனம், நிராயுதன், துர்க்கந்தம், விமலம், ஆசங்கை, நிதானம், அதிகுணன், அபிநவம், சுகந்தம், உற்பவம், பரிவாதம், உபநயனம் போன்ற பல சொற்கள் அகராதியில் காணப்படுகின்றன.[30]

வடமொழிக்கேயுரிய சிறப்பெழுத்துக்களைக் கொண்ட தற்பவம் எனப்படும் வடசொற்கள் தமிழில் வழங்குங்கால் அவ்வட-வெழுத்துக்கள் தமிழில் எவ்வெவ்வெழுத்துக்களாகத் திரியும் என

நன்னூல் கூறுகிறது. வடமொழியுள் அச்சென்று வழங்கப்படும் உயிருள் ஏழாமுயிர் தமிழில், இடபம், மிருகம் என்னும் சொற்களில் அமைந்தாற்போன்று இகரமும் இருவும் ஆகும். அல் என வழங்கப்படும் செய்யுள் ஐந்து வருக்கத்திலும் இடை நின்ற மூன்றெழுத்தும் அவ்வவ்வருக்கத்தில் முதலெழுத்துக்களாக நகம், நாகம், மேகம், சலவாதி, விசயம், சருக்கரை, பீடம், சடம், கூடம், தலம், தினம், தரை, பலம், பந்தம், பாரம் என்னும் சொற்களில் உள்ளன போன்று அமையும். எட்டாம் மெய் பங்கயம் என்னுஞ் சொல்லில் உள்ளது போன்று யகரமாகும். முப்பதாம் மெய் சங்கரன், பாசம், தேயம் என்ற சொற்களில் காணப்படுவது போன்று முதலிற் சகரமும், இடையில் சகரமும் யகரமுமாகும். முப்பத்தோராம் மெய் முதலிற் சகரமும் இடையிலும் கடையிலும் டகரமுமாக, சண்முகன், விடம், படை. வாசம், மாதம் போன்ற சொற்களில் உள்ளன போன்று முதலில் சகரமும் இடையிற் சகரமும் தகரமுமாகும். முப்பத்து மூன்றாம் மெய்-அரன், மோகம், மகி ஆகிய சொற்களிற் காணப்படுவது போன்று முதலில் அகரமும், இடையிலும், கடையிலும் ககரமாக மாறும். முப்பத்தைந்தாம் மெய் மொழியிடையில் பக்கம் என்பதில் உள்ளது போன்று இரண்டு ககரமாகும். மாலை என்பது போன்று அகாரவீறு ஐகாரவீறாகவும். புரி என்பது போன்ற ஈகாரவீறு, இகரவீறாகவும் மாறும். உரையிற் கோடலால் முப்பத்தைந்தாம் மெய் கீரம் என்னுஞ் சொல்லிற் கண்டாற்போன்று மொழிமுதலில் ஒரு ககரமுமாகும் என்பர்.[31] இவ்வாறு எழுத்துத் திரிபடைந்த சொற்களாக இலக்கணங்கள் கொள்கின்றன வெல்லாம் சலவாதி, சருக்கரை, சபை, என்பன தவிர அகராதியில் அவ்விலக்கண நெறிப்படியே திரிபுற்று அமைந்திருக்கின்றன.[32] சலவாதி, சருக்கரை போன்ற சொற்கள் காணப்படவில்லையெனினும், அவ்வகையில் திரிபுற்ற சவராசி, சருவேச்சுரன்[33] போன்றன காணப்படுகின்றன. சபை இல்லையெனினும் சவை எனக் காணப்படுகிறது.[34]

ஒலி மரபில் மொழிக்கு மொழி வேறுபாடுண்டு, வடமொழியில் மொழி முதலாகும் தன்மைபெற்ற ர, ல, ய ஆகியன தமிழில் மொழி முதலாகா. அவ்வகைச் சொற்களைத் தமிழில் வழங்கும் பொழுது தமிழ் மரபு மாறாதிருக்க அ, இ, உ ஆகியவற்றை முதலிற் சேர்த்து அரங்கம், இராமன், உரோமன், இலாபம், உலோபம், இயக்கன் என வழங்கவேண்டும் என நன்னூல் கூறுகிறது. அவ்வாறே வடமொழியில் இரண்டெழுத்து இணைந்து ஒரெழுத்தைப்போல நடக்கும்பொழுது, தியாகம், வாக்கியம், கிரமம், வக்கிரம், கிலேசம், சுக்கிலம், பதுமம், பக்குவம், அரதனம், அருத்தம் என்பனவற்றுள் அமைந்தாற் போன்று பின்னின்ற யகர ரகர வகரங்கட்கு இகரமும் நகரத்திற்கு அகரமும்

மேலே வரும். இணைந்து முன் நின்னின்ற ரகரத்திற்குப்பின் உகரம் வரும். பிறவென்னும் மிகையால் சக்தி, சட்சி, காப்பியம், பருப்பதம், முதலாகிய திரிபும், தூலம், அத்தம், ஆதித்தன் முதலாகிய கேடும் மற்றும் விகாரத்தில் வருவனவும் கொள்ள வேண்டும் என்பர்.[35] தொன்னூல் விளக்கத்தில் இவ்வகை ஒலிமரபு பற்றிய குறிப்புக்கள் இடம் பெறவில்லையெனினும், மேற்கண்டாற்போன்ற பலசொற்களை ஒலிமரபு மாறாமல் அகராதியில் ஆக்கி வழங்கியிருக்கிறார்.[36]

அடிகளாரது இலக்கண நூல்களுள் முதன் முதல் எழுதப்பட்டது-மன்றி முதற்சிறப்பிற்குரியதும்கொடுந்தமிழ் இலக்கண நூலேயாம். அடிகள் வாணாளிலேயே அவரோடு கருத்துமுரண்பாடு கொண்ட தரங்கம்பாடிச் சமயத்தொண்டரால், மைலாப்பூர் ஆயரின் 1737-ஆம் ஆண்டு நவம்பர் 2-ஆம் நாளிட்ட அனுமதி பெற்றுப் பதிக்கப்-பட்டிருப்பதே அதன் சிறப்பினைக் காட்டும்.[37] அந்நூலின்கண் அடிகளால், 1728-ஆம் ஆண்டு சனவரி 4ஆம் நாளிட்டு எழுதிய முன்னுரையமைந்திருப்பதால் அதற்குமுன் எழுதப்பட்டதென்பது உறுதி.[38] பரம்பரை இலக்கண, இலக்கியப்பயிற்சியினைப் புலப்படுத்தும் குறிப்புக்கள் அதில் நிரம்ப இருக்கின்றன.

அல், இல் என்னும் இரண்டும் எதிர்மறை உணர்த்தும் இடைச் சொற்களே. எனினும் இரண்டனுக்கும் நுணுக்கமான வேறுபாடுண்டு. பழந்தமிழ் இலக்கணங்களில் உடம்பொடு புணர்த்தலாகலன்றிக் காட்டப்படவில்லையெனினும் சான்றோர் இலக்கிய வழக்காறுகளும் அவ்வேறு பாட்டைத் தெளிவுறுத்தும் என அபிரகாம் அருளப்பன் விளக்கிக் காட்டுவார்.[39] அடிகளார் அல், இல், ஆகியவற்றுக்-கிடையேயான நுணுக்க வேறுபாட்டைத் தெள்ளிதின் உணர்ந்து கொடுந்தமிழ் இலக்கணத்தில் அவற்றை அடிப்படையாகக் கொண்ட இல்லை, அல்ல என்னும் வினைகளின் பொருட்டன்மை வேறுபாட்டினைப் புலப்படுத்துகிறார்.[40] இரண்டும் இன்மையை உணர்த்தினும் இல்லை என்பது உண்டென்னும் நிலைமையை மறுப்-பதாகவும் (Denying the Existence) அல்ல என்பது உள்ள நிலைமையின் தன்மையை மறுப்பதாகவும் (Denying the essenee) கூறி, இல்லை என்பதற்கு எதிர்ச்சொல் உண்டு அல்லது இருக்கிறது என்றும், அல்ல என்பதற்கு எதிர்ச்சொல் ஆம் அல்லது ஆயிருக்கிறது என்றும் விளக்குகிறார்.

அகராதியில் அவ்விரு இடைச் சொற்களும் இடம்பெறுகின்றன.[41] வினைப் பொருளில் அல்லெனேவல், இல்லையெனல் எனவும் பெயர் கூறியதோடமையாது அவற்றையடியாகக் கொண்டு அன்மை இன்மை ஆகிய பெயர்ச்சொற்களையும் காட்டி முறையேஅல்லாமை, இல்லாமை எனப் பொருள் தரப்பட்டிருக்கின்றன.[42] பொருள் நுணுக்க வேறு-

பாட்டினைத் தெளிவுறுத்துவது அகராதியின் இன்றியமையாக் கூறெனினும் அதற்கு அடிப்படை முன் படைக்கப்பட்ட இலக்கண நூற்கொள்கைகளேயாம் என்பது புலனாகுகிறது.

தொன்னூல் விளக்கத்தைச் சுருக்கி லத்தீன் மொழியில் திறவுகோல் என்னும் பெயரில் எழுதினார். சேசு சபை சமயத்தொண்டர்கட்காக எழுதப்பட்டமையான் பொருள் இலக்கணச் செய்திகளை மிகவும் சுருக்கி உரைத்துள்ளார். தமிழில் முன்னோர் கூறியுள்ள நெறிகளை மாணவர்கட்குப் பயன்படும் வண்ணம் திறந்து வெளிப்படுத்துவதே இத்திறவுகோலின் நோக்கம்.[43] நன்னூலுக்கு இருக்கும் மதிப்பினையும், அது போன்ற நூல்களை ஆய்ந்துணர்ந்தோர் அருகிப் போனதையும் சுட்டுகிறார்.[44] நூலின் இறுதியில், யாப்பறி புலவர்களைக் காண்டல் அரிதாகியும், யாப்பு நெறிகளை முறையாக உணராமல், 'வாய்க்கிசைந்ததுபாட்டுக் கிசையும்' எனச் சொல்லிக்கொண்டு கவிதைகள் இயற்றுவோர், உள்ளதையும்கண்டு குறைப் படுவது[45] அவருக்கிருந்த இலக்கண நாட்டத்தைக் காட்டவல்லது.

யாப்பு நெறி செழித்தோங்க உதவுவதற்கே தொடையகராதி படைக்கப்பட்டதெனலாம். சார்முத லெழுத்தொலித் தொருங் கொன்றித் தருமருந் தொடைத்தலை யாவெதுகைகளாற்[46] படைத்த தன் நோக்கமும், இறுதியில், ''ஈண்டுக் காட்டிய பற்பல தொடைப்பத மன்றி யடைமொழியானு மீரெச்சத்தாலும் மறுதொகையானு முற்று வினையானும்வினைக்குறிப்பாலும்வேற்றுமைமுதலியவிகுதியுருமாறுஞ் சங்கிருத முதலிய வெழுத்துத் திரிபாலு மோரளவின்றிச் சிறப்புள தொடைப்பதமாக வேண்டுவனவெல்லாம் கூட்டிக் கொள்க. அங்ஙனம் சிந்தாமணி முதற் பல விலக்கியங்களில் வரும்படி.[47] எனக் கூறிச் சான்றோர் பாடல்களில் அமைந்த தொடைகளைக் காட்டுவதன் நோக்கமும் இலக்கண யாப்பு நெறி ஒழுங்குபட அமைய வேண்டும் என்னும் ஆர்வமேயாகும்.

இலக்கிய மொழி, பேச்சுமொழி என்னும் இருவேறு வடிவங்களையும், செந்தமிழ் கொடுந்தமிழ் எனக் கொண்டு அவற்றின் இலக்கணங்களை உணர்த்தத் தனித்தனி இலக்கண நூல்களை அடிகள் எழுதினர். தொன்னூல் விளக்கம் செந்தமிழ் மொழிக்காயினும் தமிழ் நாட்டாருக்காக எழுதப்பட்டது. திறவுகோல் சமயத்தொண்டர்கட்காக வழங்கப்பட்டது. செந்தமிழ் இலக்கணம் என்னும் நூல் தமிழ் இலக்கியப் பரப்பினை மேலும் அறிய விரும்புவோருக்காக லத்தீனில் எழுதப்பட்டது.[48]

தொன்னூல் விளக்கத்திற்குப் பிற்பட்டதாதலின், அதனின்று வேறுபடும் விதிகளும் இடம்பெறுகின்றன. தொல்காப்பியமும்

நன்னூலும் மொழியீறாகும் மெய்களாகசுட்டும் ஞ ண ந ம ன யரலவழள[49] ஆகியவற்றைக் கூறுகின்றன, தொன்னூல் விளக்கம் ணமனயரலவழள ஆகிய ஒன்பதனைச் சுட்டினும், அதன் உரையில் பிறவுமன்ன என்னும் மிகையான் உரிஞ், பொருந் என்னுஞ் சொற்கள் கூறப்படுகின்றன.[50] ஞ,ந, ஆகியவற்றை ஈறாகவுடைய சொற்கள் இருப்பினும் அருகி வழங்கியதால் நூற்பாவில் அவற்றை இணைத்துக் கூறவில்லை, தொன்னூல் விளக்கத்தில் குறிக்கப்பட்டனவற்றுள் வகரத்தை நீக்கி ஏனை எட்டனை மட்டுமே செந்தமிழ் இலக்கணத்தில் கூறுகிறார்.[51] அதற்கு வகர ஈறு அருகி வழங்கியதே காரணமாகலாம். ஏனெனில், தொல்காப்பியர் காலத்தில் நான்மொழி ஈற்றதாகவே அது வழங்கிற்று.[52]

ஆகராதியில் அவ்வீறுகள் அருகிவழங்கும் தன்மை தெற்றெனத் தோன்றுகிறது. உரிஞ், பொருந் என்னும் குகர, நகர ஈற்றுச் சொற்கள் உரிஞ்சு, பொருந்து என ஆகிப்பின் அல் ஈற்றைப் பெற்று உரிஞ்சல், பொருந்தல் என்றே காட்டப்படுகின்றன.[53] வகர ஈற்று அவ், இவ், உவ், தெவ் ஆகிய நான்மொழிகளே இடம் பெறுகின்றன.[54] தம் இலக்கண நூல்கட்குப் பின்னர் அகராதியில் அவ்விலக்கணக் கோட்பாடுகட்கு ஏற்றவாறு சொற்களைத் தொகுத்து தன்மையை இச்சொற்கள் தெளிவிக்கின்றன.

தமிழ் இலக்கண நெறிகட்கு அடிகள் புதுவதாகத் தந்த கருத்துக்கள் சிந்தனைக்குரியன. மொழிமுதலாகாத ய, ர, ல போன்றவற்றை முதலாகக் கொண்ட பிறமொழிச் சொற்களைத் தமிழில் வழங்க வேண்டுமாயின் அ, இ, உ போன்றவற்றை அச்சொற்களின் முன்னர்ச் சேர்த்தல் வேண்டும் என நன்னூல் கூறுகிறது.[55] அடிகளார் அவற்றோடமையாது ஆகாரத்தோடிணைந்த யகரத்தை முதலாகக் கொண்ட செந்தமிழ்ச் சொற்களுக்குக்கூட இகரத்தை முதலிற் சேர்த்தல் அழகியது என, யானை இயானை (யாத்திரை, இயாத்திரை) முதலானவற்றை எடுத்துக் காட்டுகிறார். 'ஆவோடல்லது யகர முதலாது'[56] எனத் தொல்காப்பியம் கூறுகிறது. யகரம் உயிர்களுள் ஆகாரத்தோடு மட்டும் சேர்ந்து மொழி முதலாகும் எனப் பெறப்படுவதினின்று பிற உயிர்களோடு சேர்ந்து முதலாக வராதென்பது தெளிவு. எனவே மொழிமுதலாந்தன்மை கொண்ட பிற மெய்களை நோக்க மொழி முதலாந்தன்மை குறைவென்பதனை மனத்திருத்தி ஆகாரத்தோடிணைந்த யகரத்தின் முன்னும் இகரத்தைச் சேர்க்கக் கருதியிருத்தல் கூடும்.

நெடிலோடிணைந்த யகரத்தின் முன் இகரத்தை இணைப்பதற்குக் குற்றியலிகரம் பற்றி அவர் கொண்ட சிந்தனையும் ஏதுவாகியிருக்கலாம். பிறமெய்களின் முன் யகரம்வரக் குற்றியல் இகரம் தோன்றி

ஒலிப்பதும் யகரம் வரக்குற்றியலுகரம் திரிந்து குற்றியல் இகரமாவதும் இலக்கணிகள் கொண்டனர்.[57] அவற்றால், யகரத்திற்கும் இகரத்திற்கும் உள்ள இயைபு பெறப்படுகிறது. இ, ஈ என்பன ஓசைநயத்தில் ஒருவகையான் யகரத்தோடு ஒத்துள. ஐகாரத்தோடு கூடிய மெய்யை ஐகாரத்தை விடுத்து யகரத்தோடு ஒலித்தால், பொருள் வேறுபாடு தோன்றாது. அதனாற்றான், இ, ஈ, ஐ என்பனவற்றிற்கு யகரம் உடம்படுமெய்யாக அமையும் இயல்பு ஏற்பட்டதெனலாம்.[58] எனவே யகரத்தின் முதலாக இகரம் தோன்றுதல் பொருத்தம் என எண்ணினர் போலும். அவ்வடிப்படையில், புணர்மொழியிற்றான் குற்றியலிகரம் அமையும் எனக்கொள்வதைக் காட்டிலும் மொழி முதலில் இகரம், சேர்ந்தாலும் குற்றியலிகரமேயாம் எனக் கொண்டு, இயானை, இயாத்திரை, இயாமம் ஆகியவற்றில் வரும் இகரத்தைக் குற்றியலிகரம் எனக் காட்டினார்.[59]

அகராதியில், இலக்கணத்தில் மேற்கோளாக ஆளப்பட்ட சொற்களில் எதனையும் இகரமுதலாகக் கொண்டு அமைக்காமல் யாகார முதலாகவே கொண்டு அமைத்துள்ளார்.[60] குற்றியலிகர இயல்பைக் கொண்டிருப்பினும் வழக்கில் யானை, யாத்திரை, யாமம் என வழங்கும் தன்மைக்குச் சிறப்பளித்து அவ்வாறு ஆண்டுள்ளார் எனினும் குற்றியலிகரக் கோட்பாட்டினை நினைவூட்ட இயாதம்-யானைத் தோட்டியின் பிடர் என்னும் சொல்லை மட்டும் ஆள்கிறார்.[61] இவ்வாறு, இலக்கணக்கோட்பாடுகளை விளக்குங்கால் முன்னோர் கருத்துக்கட்கும் வழக்குக்கும் உரிய சிறப்பளித்துத் தம் கருத்தினை வலியுறுத்த முற்படும் அடிகளாரின் போக்கு அகராதியின் சிறப்பிற்கு ஒளி கூட்டுகிறது. லா, ரா முதலிய பிற மொழிச்சொற்கட்கு முதலாகும் இகரம் குற்றியலிகரமெனக் கொள்ளுதல் தற்கால மொழியியற்கொள்கைகட்கு உடன்பாடன்று. அவற்றை மொழி முதற்றோற்றமாகவே கொள்வர்.

தாம் முன்னர்க்கண்டகொள்கை தவறுடையதெனக் காலப் போக்கில் உணர்வாராயின், அதனைப் புலப்படுத்தும் கருவியாக அகராதியை அடிகளார் கொண்டிருக்கிறார். 'ஓர்' என்னும் வடிவைப் பெயரடையாகப் பயன்படுத்திய தன்மை அதனைக் காட்டுகிறது.

ஒன்று என்னும் எண்ணுப் பெயர் பெயரடையாக வரும்பொழுது ஒரு, ஓர் என்னும் இருவேறு வடிவங்களைப் பெறுமெனவும் அவற்றுள் முன் வரும் மொழி முதல் உயிராயிருப்பின் ஓர் என்னும் வடிவமே அமையும் என்றும் பழந்தமிழ் இலக்கண நூல்கள் கூறா நிற்பது கொண்டு, வருமொழிமுதல் மெய்யாயிருப்பின் ஒரு என்னும் வடிவம் மட்டுமே அமைதல் வேண்டுமெனவும், ஓர் என்னும் வடிவம் அமைதல் கூடாதெனவும் கருதிப் பிற்காலத்தே எழுதத் தொடங்கிவிட்டனர்.

இலக்கண நூல்கள் வகுக்கும் விதிகளின் பொருள், வருமொழிமுதலாக உயிர் இருப்பின் ஒரு என்னும் வடிவம் அமையக் கூடாதென்பதே தவிர, வருமொழி முதல் மெய்யாக இருப்பின் ஓர் என்னும் வடிவம் வரக்கூடாதென்பதன்று.

தொல்காப்பியம் சுட்டும்,

''முதலீ ரெண்ணின் ஒன்று ரகரமாகும்
உகரம் வருதல் ஆவயினான''[62]

என்னும் நூற்பாவின் பொருள் ஒன்று, இரண்டு என்பன ஒரு, இரு என வரும் என்பதேயாம்.

''முதலீ ரெண்ணின்முன் உயிர்வரு காலைத்
தவலென மொழிப உகரக் கிளவி
முதனிலை நீடல் ஆவயி னான''[63]

என்னும் நூற்பாவின் பொருள் உயிர் முதன் மொழி வரும்பொழுது ஒரு, இரு என்பன ஓர், ஈர் என நிற்கும் என்பதேயாம்.

இக்கருத்துக்களையே, நன்னூலில் இடம் பெறும்,

''எண்ணிறை யளவும் பிறவு மெய்தின்
ஒன்று முதலெட் டீறா மெண்ணுள்
முதலீ ரெண்முதல் நீளும் மூன்றா
றேழ்குறு கும்ஆ றேழ்அ லவற்றின்
ஈற்றுயிர் மெய்யும் ஏழ னுயிரும்
ஏகும் ஏற்புழி யென்மனார் புலவர்''[64]

''ஒன்றன் புள்ளி ரகர மாக
இரண்ட னொற்றுயி ரேகவும் வருமே''[65]

ஆகிய நூற்பாக்களும் உறுதிப்படுத்தும்.

ஆயினும், ஆறுமுக நாவலர் போன்றோர் நன்னூற் சூத்திரத்தில் வருகின்ற ஏற்புழி என்னும் மிகையால், முதலிரண்டெண்ணும் முதல் நீள்வது உயிர் வருவழி எனவும், மெய்வருவழி நீளா எனவும் வருவித்-துரைக்கின்றனர். மெய்வருவழி நீளா எனபதே இலக்கண ஆசிரியர்கள் கருத்தாயின், அதற்கு மாறாகத் தம் நூற்பாக்களை யாத்திருக்க இயலாது.

''ஒன்றாத் தமரினும், பருவத்தும் சுரத்தும்,
....
காவற் பாங்கின் ஆங்கோர் பக்கமும்
....''[66]

வேறுவினைப் பல்பொருள் தழுவிய பொதுச்சொல்லும்
வேறவற் றெண்ணும்ஓர் பொதுவினை வேண்டும்''[67]

ஆகிய நூற்பாக்களில் ஓர் என்னும் வடிவத்தை மொழிமுதல் மெய் வரும்பொழுது வழங்கியிருக்கின்றனர். இவ்வடிவத்தை வழங்கியிருப்பதற்குத் தளை தட்டாமல் இருப்பான் வேண்டியோ, சீர் நிறைவிப்பான் வேண்டியோ ஆசிரியர்கள் கையாண்டனர் என எண்ணுவதற்கு இங்கு இடமின்று. அன்றியும் சூத்திரங்கள் எனப்படுகின்ற நூற்பா வடிவினுக்குச் சீர், தளைக் கட்டுப்பாடுகள் இல்லை. "சூத்திரம் பாட்டெனப் படாவோவெனின் படா, பாட்டும் உரையும் நூலுமென வேறொதினமையின்''[68] என்னும் பேராசிரியர் கூற்றும் இதனை உறுதிப்படுத்தும்.

இலக்கண எண்ணெய்க்கு எள்ளாம் இலக்கியங்களிலும் இவ்வாட்சி வழக்கில் உள்ளதைச் சான்றோர் பாடல்களில் காணலாம். அகவற் பாக்களாலாய அகப்புறப் பாடல்களில் ஓர் தொலைவில்,[69] ஓர்தேர்,[70], ஓர்புறம்,[71] ஓர்குறமகள்,[72] ஓர்தலைப்பாடு,[73] ஓர்வல்வில் வேட்டுவன்,[74] ஓர்வேண்டுவர்,[75] ஓர்வாணிகப் பரிசிலன்,[76] ஓர்காலை,[77] ஓர்கரம்பைச் சீறூர்,[78] ஓர்தோல்,[79] ஓர்பெருங்களிறு[80] என்பன இடம் பெறுகின்றன. அவற்றிற்கு மாறாக ஒருதொலைவில் ஒருதேர், ஒருபுறம், ஒருகுறமகள், ஒருதலைப்பாடு, ஒருவல்வில் வேட்டுவன், ஒருவேண்டுவர், ஒருவாணிகப்பரிசிலன், ஒருகாலை, ஒருகரம்பைச் சீறூர், ஒருதோல், ஒருபெருங்களிறு என அமைத்திருப்பினும் அப்பாக்கள் ஏற்கும். இருப்பினும் ஓர் வடிவ அமைப்பினை மெய்ம்முதல் வரும்பொழுது எடுத்தாண்டிருக்கின்றனர். இவற்றைப் பாடியோர் ஒருவரல்லர். கயமனார், உலோச்சனார், பெருஞ்சித்திரனார், பொத்தியார், அரிசில்கிழார், ஔவையார், கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனார் போன்ற பல சான்றோர்கள் பாடியுள்ளனர். இவையெல்லாம் மெய்ம்முதல் மொழி வருங்கால்ஓர் என்னும் வடிவைக் கையாள்வது தவறின்று என்பதனையே காட்டுகின்றன.

இவை போன்றே சிலப்பதிகாரத்தில், ஓர் திருமாபத்தினி, ஓர் வாணிகன், பிறனோர் கள்வன், நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள் எனப் பதிகத்தில் மட்டும் நான்கு இடங்களிலும், உரைபெறுகட்டுரையில் இரு இடங்களிலும் நூலின் உள்ளே முப்பதுக்கு மேற்பட்ட இடங்களிலும் ஓர் என்னும் வடிவம் கையாளப்படுகிறது.

"சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து''[81]

என்று கூறும் திருவள்ளுவர்க்குச் சொல்லின் தன்மை தெரியாதென எண்ணற் கிடமின்று. இக்குறளில் ஓர் சொல் என ஓர் வடிவினைக் கையாண்டு உள்ளார், அதுபோன்றே,

''உரனென்னும் தோட்டியான் ஓரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து''[82] என்னும் குறளில்

ஓர் ஐந்து என உயிர்முதன்மொழி வருமிடத்தும், ஓர்வித்து என மெய்ம்முதல்மொழி வருமிடத்தும் ஆளப்பட்டுள்ளது. ஓர்நோய், ஓர் துன்பம் என்னுந் தொடர்களும் திருக்குறளில் ஆளப்படுகின்றன.[83] அணுவைத்துளைத்தேழ் கடலைப் புகுத்தும் ஆற்றல்மிகு திருவள்ளுவர் தளைதட்டக் கூடாதென்பதற்காகவே அவ்விடத்துக் கையாண்டார் என எண்ணுதற்கிடமில்லை. மெய்ம்முதல்மொழி வரும்பொழுது ஓர் அமையக் கூடாது எனக் கருதியிருப்பாரேல், அவ்வடிவம் வாராதொழித்து, 'பிறிதோர்ச்சொல் அச்சொல்லை' என்பதற்கு மாறாக, 'பிறிதொரு சொல்லதை' என்றோ 'வரனென்னும் வைப்பிற்கோர் வித்து' என்பதற்கு மாறாக,'வரனாம்வைப் பிற்கொரு வித்து' என்றோ சொல்லமைப்பை மாற்றித் தளைகெடாதியற்றி-யிருத்தல் சாலும், எனவே, மெய்ம்மொழி வருங்காலை ஓர் அமைதல் தவறின்று என்பதே அவர் எண்ணமெனக் கொள்ளலாம்.

இதனை உணர்ந்தே பேராசிரியரும், ''நகையே யழுகை......... ....''[84] என்னும் நூற்பாவுரையில் ''.......... தானினி வந்து பிறிதோர் பொருளை வியக்குமாதலின்'' என்றும் ''.......... அதற்கு ஓர் விகாரமின்மையின் ஈண்டுக் கூறியதிலனென்பது'' என்றும் ஓர் பொருள், ஓர் விகாரம் என மெய்ம்முதன்மொழி வரும்பொழுது ஓர் வடிவினைப் பயன்படுத்தியுள்ளார்.

இதுகாறும் கூறியவற்றால், ஒரு என்னும் வடிவம் உயிர்முதன் மொழி வருங்கால் வரக்கூடாதென்பதும், ஓர் என்னும் வடிவம் உயிர் முதன்மொழி வந்தால் மட்டுமன்றி, மெய்ம்முதன்மொழி வந்தாலும் வரலாம் என்பதும் புலப்படும். உயிர் வருங்கால், ஒரு வருதல் தகாது என்னும் மாத்திரையானே, அருத்தாபத்தியான் மெய்வருங்கால் 'ஓர்' வரக்கூடாதன்றோ எனக் கருதுதல் இயலும். 'பகலுண்பான் பருத்-திருப்பான்' என்புழி இரவில் ஒளித்துண்பான் என உணர்தல் அருத்தாபத்தி.[85] அதற்கேற்ப உயிர் முதன்மொழி வருங்கால் 'ஓர்' வரவேண்டும் என விதிவகுப்பின் ஒரு வரக்கூடாது என்பது பெறப் படுமன்றி, மொழிமுதல் மெய்க்குமுன் ஓர் வரக்கூடாது என்று வலிந்து பொருள் கோடற்கிடமின்று.

அடிகளார் தொன்னூல் விளக்கம் எழுதியகாலை இந்நுணுக்க மான வேறுபாட்டினை உணர்ந்திலர் போலும். எனவே, ''எண்ணின்

பெயரே தம்மொடு தாமும், பிறவும் வரவே தொக்கு நிற்குமாறு உணர்த்தும், ஒன்றும், இரண்டும், உயிர்வரின் ஓர், ஈர், எனலாம்; மெய்வரின் ஒரு, இரு எனலாம். (உ-ம்) ஒன்று-ஆயிரம்: ஓராயிரம், இரண்டு-ஆயிரம்: ஈராயிரம், எ-ம் ஒன்று-பொருள்: ஒருபொருள், இரணடு-கலம்: இருகலம் எ-ம் வரும்"[86] எனக்கூறுகிறார். தொன்னூல் விளக்கத்தின்பின் நான்காண்டுகள் கழித்தும், இலக்கண நூல்கள் அனைத்தையும் எழுதிமுடித்த பின்னரும் அகராதியைப் படைத்த அடிகளார், இவ்வடிவ வழக்கை ஆழ்ந்து சிந்தித்தார். அதற்கு, ''அரிவையென்ப தோர்பருவ மாதரும்''[87] ''அன்றில் தானேயோர் புள் மூலநாள்''[88] போன்ற அகராதி நிகண்டு நூற்பாக்கள் மெய்ம் முதல் ஓர்வடிவைப் பெற்றமைந்திருத்தல் தூண்டுகோலாய் அமைந்திருக்கலாம்.

அகராதி படைக்குங்கால், ஓர் என்னும் வழக்கை நன்கு ஆய்ந்த அடிகளார், தாம் தொன்னூல் விளக்கத்தில் கூறியிருந்த கருத்திற்கு வேறுபட, வருமொழிமுதல் உயிராயினும், மெய்யாயினும் வேறுபாடு இன்றி ஒன்று என்பதன் பெயரடை வடிவமாக 'ஓர்' என்பதனை எல்லா விடத்தும் ஆளுகிறார். அகண்டி-ஓர் வாக்கியம், அத்தம்-ஓர்நான், அநீகம்-ஓர்படையின் தொகை, அநுமானம்-ஓர் பிரமானம், அந்தாதி-ஓர்தொடை, ஓர் பந்தம் என்றின்னவாறு மெய்ம்முதல் மொழிகட்கு முன்னர் ஆண்டிருக்கிறார்.[89] ஒரு என்னும் வடிவம் அகராதியில் யாண்டும் ஆளப்படவில்லை.

அவ்வாறாயின் 'ஒரு' என்னும் வடிவம் கூடாதென்பது அவர் நோக்கமாயிருத்தல் சாலுமோ என்னும் எண்ணம் தோன்றுகிறதே யெனில், இருவேறு வடிவங்களை யமைத்துத் தடுமாறுவதிலும் உயிர் முதன்மொழிக்கும் மெய்ம்முதன்மொழிக்கும் பொதுவாய் ஓர்என்னும் வடிவத்தை அமைத்துக் கொள்ளல் எளிதாகுமே என்பது அவர் எண்ணமாகலாம். அடிகளார் இறுதிக் காலத்தில் வெளியிட்ட தமிழ்-லத்தீன் பேச்சு மொழி அகராதி முன்னுரையில் அவ்வெண்ணம் புலப்படுகிறது. ''யகரம், ரகரம், லகரம் முதலியவற்றை முதலாகக் கொண்டு தொடங்குகிற சொற்களை யோகம்-இயோகம், ரா - இரா, லாபம்-இலாபம் என்னும் இருவகைகளாக எழுதுதற்கிடனுண்டு..... என்னும் சொற் சுருக்கத்திற்காக ஒருமுறையினையே ஆளுகிறேன்'' என்று கூறுகிறார்.

இலக்கணக் கொள்கைகளைச் சொற்களில் வடிவங்களில் ஆண்ட-தோடன்றிச் சொற்கட்கான பொருள் விளக்கங்களில் இலக்கணச் செய்திகளை விரித்துரைத்திருப்பது அகராதியை ஓர் இலக்கண நூல் நோக்கில் படைத்தாக எண்ண இடந்தருகிறது. பழந்தமிழ் இலக்-கணங்கள் முற்றுத்தொடர் எவ்வாறு அமைதல் வேண்டுமெனக் கூற-

வில்லை. அகராதி, 'வாக்கியம்-வினைமுதல் செயப்படுபொருள் பய-னிலையோடு முடிந்தசொல்'[90] என விளக்கந்தருகின்றது. பெருங்காப்பியத்தின் உட்பிரிவுகள் தண்டியலங்காரம் கூறுவது போன்றே சருக்கம், இலம்பகம், பரிச்சேதம் எனக் கூறி, ''சருக்கமெனினு படலமெனினு மொக்கும். இவற்றுள், தொடுத்த பொருள் பலவாகப் பிரித்துத் தருவன சருக்கம் படலம் முதலாயின. அங்ஙனங் கம்பன் சீதை மணக்கதை மிதுலைகாண் படலத்திற்றொடங்கிப் பல பிரிவாக வகுத்துப் பதினைந்-தாம் படலத்தின் முடிந்தவாறு காண்க. இலம்பகமோவெனிற்றொடுத்த பொருள் பிரிவின்றி யொன்றாய்த் தருமெனக் கொள்க. அங்ஙனஞ் சிந்தாமணியிற் காந்தருவதத்தை முதலெண்மர் மணக்கதை யொவ்வோரிலம்பகத்திற்றொடுத்து முடிந்தது காண்க''[91] என எடுத்துக் காட்டித் தொன்னூல் விளக்கத்தில் கூறுகிறார். பரிச்சேதப் பிரிவுடைய நூலொன்றும் கிட்டிலையாதலின் அதற்கு எடுத்துக்காட்டுக் கூற வில்லை போலும். அகராதியில் அவற்றின் பொருள்களாக இலக்கியச் செய்யுட் கூறுபாடு என்கிறார்.[92] ஆனால் அத்தியாயம் என்னும் உட்பிரிவுகளை உடைய இலக்கியங்களிருத்தலை யுணர்ந்து இலம்பகம்-அத்தியாயம் என்றும்,[93] அதன் பொருள் ''முனிவருரைத்த இலக்கியச் செய்யுட் கூறுபாடு, வேதநூலை விரித்த இலக்கியத்தின் கூறுபாடு, வேதம்''[94]எனவும் காட்டுகிறார்.

சில சொற்களின் பொருளை விளக்குங்கால் இலக்கணக்குறிப்பு-கட்கே முதலிடம் தந்திருப்பது போன்று தோன்றுகின்றன ''அ- முதலெழுத்து, அஃறிணைப் பன்மை யீறு, உதாரணம்: வாழ்ந்தன ஆறாவதன் பன்மையுருபு உ - ம் நின தாள்கள்; சாரியை, உ - ம், க, நினக்கு; சுட்டு, உ - ம் அவன்'' எனப்பொருள் விளக்கப்படுகிறது.[95] இலக்கணச் சொற்களைத் தெளிவுபெறப் பொருளுணர்த்த வேண்டு-மாயின் இலக்கியங்களில் அமைத்துக் காட்டல் வேண்டற்பாலதென அடிகளார் கருதியுள்ளார். அதனால் இடைச்சொல் போன்ற இலக்கணச் சொற்கள் அனைத்தும் இலக்கிய மேற்கோள்களோடு விளக்கப்படுகின்றன.[96] சான்றாகக் ''கொன் - அச்சம், உ - ம் கொன் முனையிரவூர்; காலம், உ-ம் கொன்வரல் வாடை, பயனின்மை உ - ம் கொன்னே கழிந்தன்றிளமை பெருமை உ - ம் கொன்னூர் துஞ்சினும் யாந்துஞ்சிலமே''[97] என்பதற்கான விளக்கத்தைக் கொள்ளலாம்.

தமக்குமுன் யாரும் தொகுத்துக் கூறாதிருந்தநிலையில், பிர-பந்தங்களைத் தொகையகராதியில்[98] தொகுத்துத் தந்ததோடமையாது, ஒவ்வொன்றன் இலக்கணத்தையும் உரை நடையில் தந்தமையான் எல்லா இலக்கிய வகைகளின் இலக்கண நெறிகளையும் ஓரிடத்தில் அறிந்துணர வாய்ப்பாயிற்று. அவ்வகை-யிற் சிறந்த பாட்டியல் நூல் என்று கூற இடமிருக்கிறது.

இவ்வாறாகப் பொருள் விளக்கத்தோடிணைத்து இலக்கணத்தையும் விளக்கிக் காட்டும் நூலாகப் படைத்திருக்குஞ் சிறப்பு அடிகளாரது படைப்பாற்றலின் தகுதியை மிகுத்துக் காட்டுகிறதெனலாம்.

2. இலக்கியத்தன்மை

செய்யுள் போன்று இலக்கியச் சிறப்புறுந்தன்மை அகராதிக்கு இன்றெனினும், நூலின் தொடக்கத்திலமைந்த ஆக்கியோன் பாயிரம், நான்கு உட்பிரிவுகளின் தொடக்கத்திற் காணப்படும் காப்புப் பாடல்கள், இறுதியில் அமைந்த ஆக்கியோன் வரலாறு ஆகியவற்றுள் அவ்விலக்கியக் கூறுகள் ஓரளவு பொருந்தி அகராதி அமைந்துள்ளதைக் காட்ட முயல்வதே இத்தலைப்பின் நோக்கமாகும்.

செய்யுள் வெளிப்படும் வடிவங்கள் பலவற்றிலும் காப்பிய யாப்பு ஒப்புயர்வற்றது. கவிதைகளை யாத்தோர் கணக்கிலராகவும், காப்பியம் படைத்தோர் ஒரு சிலராகவும் விளங்குதலே அஃதனை இயற்றற்குரிய ஆற்றற் சிறப்பினைக் காட்டும். தாய்மொழியன்றிப் பிறமொழியொன்றில் கவிதைகளைப் படைப்பின் சிறப்புப் பலபடப் பெருகும்.[99] அப்பெருமையினைக் காப்பியப் படைப்பிலும் பெறுதற் குரியராகத் தமிழ் இலக்கிய வரலாற்றில் திகழும் ஒரே பிறநாட்டார் அடிகளாராவர்.

புலவர் ஒருவர் இயற்றுங் காப்பியம் இதர காப்பியங்கட்கு நிகரெனத் திகழுமாயின், உலகோர் புகழ்வர். அவிச் சுவை யன்றிப் பிறசுவையுணரா வாயுணர்வினரைக் கவிச்சுவை காட்டி வாய்மை யுணர்வினராக்கும் பெற்றியதாயின் கற்றோர் போற்றுவர். அடிகளார்தம் படைப்பாற்றலால், மற்றெல்லா வற்றினின்றும் நல்லனவற்றைப் பெற்றதோடன்றித் தமக்கேயுரிய தனியாற்றலையும் அவற்றோடிணைத்து உருவாக்கிய உயர்தனிப் படைப்பே தேம்பாவணியாம்.[100] இந்நூலைப் பயிலுங்கால், தன்னேரில்லாத தமிழ்க் காப்பியக் கருத்துக்களைத் தன்னகத்தே யடக்கி, நூன்முறை வழுவாது, தொல்லோர்களியற்றியவாறே அரும் பொருள்களைப் பொற்றகட்டிடையே வயிரமணிகள் போலொளிர இயற்றியிருத்தலைக் காண்கிறோம்.

தேம்பாவணி யெனத் தம் காப்பியத்திற்குப் பெயரிட்டதோடன்றி, அத்தலைப்பை மனத்திருத்தி அடிகளார் ஆங்காங்கு நுட்பமாகக் காட்டிச்செல்கிறார். தேம்பாவணி யெனில், தேம்பாத அணி...அஃதாவது வாடாத மலர்களால் தொடுக்கப்பட்ட மாலையெனவும் தேன்போலும் பாக்களாலாகிய அணியெனவும் பொருள்படும். அடிகள் காப்பியத் தலைவராம் சூசை முனிவரை, இறையோன்

விண்வழிக்குரலெழுப்பித் தம் மார்பில் துலங்குகின்ற வாடாத அருள் மைந்தராகிய தேம்பாவணி[101] எனக் கூறுவதாகக் காட்டுகிறார். உறவினர்கள் சூழ்ந்து தலைவரைத் தேம்பாவணி எனப்போற்றி மகிழ்ந்து அணிமிக்கு அம்பூண் சேர்த்தினர்[102] எனக் கூறுகிறார். தலைவரை மட்டுமன்றித் தலைவியையும் நம்பியோடு தேம்பாவணி பூங்கொடி சேர்த்தேன்[103] என இறைவன் புகன்றதாகச் சொல்கிறார். அத்தகையோரைத் தலை மாந்தராகக் கொண்ட இந்த தமிழ்க் காப்பியத்தைத் தேம்பாவணியெனப் பிணித்தல் செய்தது[104] முழுதும் பொருத்திச் சிறக்கிறது. நூற்கெய்தும் பெயராக நன்னூலார் சுட்டும் வகையில் தன்மை [105] காரணமாக இது பெயர் பெற்றுளதெனலாம்.

சொற்பொருள் விளக்க எழுந்த முன்னை நூல்களெல்லாம் நிகண்டுகள் எனவும், அவற்றின் உட்பிரிவுகளெல்லாம் தொகுதிகள் எனவும் பெயர் பெற்றன. பின்னர் அகரத்தை முதலாகக் கொண்டு எழுத்து வைப்பு முறையில் பொருள் விளக்கப் புகுந்த நூல் அகராதி நிகண்டெனப் பெயர்பெற்றது. செய்யுள் வகையானன்றிச் சொற்சொல்லாக அகர நிரலிற்பொருள் கூற முனைந்த அடிகளார் அகராதி எனப் பெயர் கூற நினைத்து உடபிரிவுகட்கெல்லாம் பெயரகராதி, பொருளகராதி, தொகை அகராதி, தொடைஅகராதி எனவும் நால்வகைப் பிரிவுகளையும் உள்ளடக்கிய தம் நூலினுக்குச் சதுரகராதியெனவும் பெயர் தந்தது சிறப்பெனலாம். நன்னூலார்தம் கருத்துப்படி,[106] அளவு என்னும் வகையான் இந்நூற்குப் பெயர்ப்பொருத்தம் அமைகிறது. உட்பிரிவுகள் ஒவ்வொன்றும் தன்மையாற் பெயர் பெற்றொளிர்கிறது. பாயிரத்தில்,

> பெயர்பொரு டொகைதொடை பிரித்த நான்முகத்
> துயர்பொரு டொடர்பத முரைத்துநூல் வழங்க
> மதுர வனாதி வளந்தரச்
> சதுரக ராதி சாற்றுது மன்றே"[107]

எனக் கூறியவாறு ஆதி வளந்தரப் படைத்த நான்முக நூலினுக்குச் சதுரகராதிப் பெயரமைந்தது செய்வித்தோன் காரணமாகவும் ஒருவகையான் அகராதி நிகணடு முன்னூலமைந்ததான் முதனூல் காரணமாகவும் வந்ததாகக் கொள்ளலாம்.[108] உட்பிரிவுகள் ஒவ்வொன்றினுக்குத் தொடர்புள்ள என்பதனை உயர் பொருள் தொடர் பதமுரைத்து என்பதால் உணரலாம். தேம்பாவணியை மாலையெனக் கருதி உரைத்திருத்தல் போன்றே ஒன்றற்கொன்றுள்ள இயல்பினை உளங்கொண்டு 'தாராய் முடித்த சதுரகராதி'[109] யென ஆக்கியோன் வரலாறு என்றும் இறுதியில் அமைந்த பாடலிற் குறிக்கிறார்.

ஸ்பெயின் நாட்டு ஆகிர்த நகரில் 1665-ஆம் ஆண்டில், தவவொழுக்கத்தில் தவறாத கன்னியொருத்தி கன்னிமரியாவிடத்தே அன்பு பூண்டு ஒழுகினள். அவட்கு மரியன்னை தோன்றி அவளது பெருமையைப் புலப்படுத்தும் வழியாக மரியா என்னும் திருப்பெயரை யருளியதோடன்றித் தன் காவலராய சூசை முனிவரின் வரலாற்றை யாவரும் அறிந்துணர விரித்துரைக்கப் பணித்தாள். அதற்கேற்ப ஆகிர்த மரியா வரைந்ததே காப்பியத்திற்கு மூலநூலாகும். இதனைக் ''கன்னித்துணைவி களித்திசைத்த தேம்பாவணி இஃது''[110] என இறுதிப்படலத்தில் நினைவூட்டுகிறார் அடிகளார்.

அகராதிக்கு மூலம் யாதெனப் பாயிரப் பனுவலிற் புகன்றில ரெனினும் அதற்குத் தனியாக எழுதியுள்ள முன்னுரையில் விளக்குகிறார். திவாகரம், நிகண்டு, பிங்கலந்தை போன்ற முன்னோர் நூல்களைப் பல்வேறு பிரதிகள் கொண்டு ஒப்புநோக்கித் தெளிந்து[111] அகராதி வடிவில் ஆக்கியதாகக் கூறுவதால் முன்னூற்றெளிந்து முன்னர் தந்த தொன்னூல் விளக்கம்[112] துதித்துக் கொள்ளப் பட்டாற்போல் அகராதி நூலும் அனைவராலும் ஏற்கப்பட்ட தெனலாம்.

காப்பியத் தலைவரது திருக்கரத்துக் கொடி பூத்த 3615 நறுமலர்களால் தொடுக்கப்பட்ட மாலைகள் 36[113] எனக் குறித்தவாறே 36 படலங்களில் 3615 பாடல்களால், தமிழ்க் காப்பிய நெறிக்கேற்ப மூலப் பொருளைச் சிறிது திருத்தியும் புதுக்கியும் படைத்திருககிறார். தமிழொடு பிறந்து, தமிழொடு வளர்ந்து, தமிழ் மரபு அறிந்து பாடிய பண்டைத்தமிழ்புலவர் பெருமக்களின் நூல்கட்கு, இந்நூல் பின்னடைவதன்று என்பது, நடுநின்று ஆராய்ந்தவர் வெள்ளிடைவிலங்கலெனத் தெள்ளிதிற் கண்டது.[114]

காப்பியத்தின்கண் தமிழ் மரபினை அடிகள் போற்றிய திறந் தெரிதற்குப் பாயிரத்துள் ஒரு பாடலை - முதற்பாடலைப் படித்தலே போதும். நூலினை மங்கலச் சொல்லை முதலாகக் கொண்டு தொடங்குவது மரபு. தொன்னூல் விளக்கத்தில் இம்முறை சுட்டப் படுகிறது.[115] 'உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு' எனத் திருமுருகாற்றுப்படையும்' 'உலகம் யாவையும் தாமுளவாக்கலும்'' எனக் கம்பராமாயணமும், 'உலகெலா முணர்ந்து ஓதற் கரியவன்' எனப் பெரியபுராணமும் 'உலகம்' என்னும் மங்கலச் சொல்லாற் றொடக்கம் பெறுகின்றன.

உலகத்தோடு அடைமொழிகூட்டித் தொடக்கம் பெறுவனவும் உண்டு. 'நவந்தலை யுலகம்' என முல்லைப் பாட்டும், 'மூவா முதலா உலகம்' எனச் சிந்தாமணியும் தொடங்கப்பட்டன. அந்நெறியிலேயே

'சீரிய உலகம்'[116] எனத் தேம்பாவணியைத் தொடங்குகிறார். அவ்வாறே 'மூவுல கனைத்து முயன்றடியேத்த'[117] என அகராதிப் பாயிரத்தையும் தொடங்கியருளினார்.

வாழ்த்து, வணக்கம், வருபொருள் முன்வர வியன்றதாகக் காப்பியம் அமைய வேண்டும்.[118] தேம்பாவணியின் பாயிர முதற் பாடலிற் 'உலக மூன்றும் செய்தளித் தழிப்ப வல்லாய்' என்பது கடவுள் வாழ்த்தாகும். 'வினையறப் பணிந்து போற்றி' என்பது வணக்கமாகும். 'ஆசிய வளன்றன் காதை' எனல் வருபொருளாம். அகராதிப் பாயிரத்தில், 'நான் சூடிய பதமலருலகெலாம் பணிந்து வாழ்த்து' என்பது வாழ்த்து. 'யாவுல கனைத்து மேந்தியான் கடவுளைப் பணிநது' என்பது வணக்கம். 'சதுரகராதி சாற்றுது மன்றே' என்பது வருபொருள்.

அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நாற்பொருள் பயத்தலே நூலின் பயனாம்.[119] தேம்பாவணியில், 'அறமுதல் விளக்கச் சொல்வாம்' என்னும் பகுதியில் அறமுதல் நான்கினையும் குறிக்கின்றார். அகராதியில், 'உயர் பொரு டொடர்பத முரைத்துநூல் வழங்க' என்னும் குறிப்பாற் பெற வைக்கிறார்.

வாழ்த்தும் வணக்கமும், மனம், வாக்கு, காயம் ஆய முக்கரணத் தூய்மையுடன் அமைந்தாலன்றிச் சிறந்த பயனிலவாம். காப்பியத்துள் வினையற அறமுதலை நோக்குதல் மனத்தூய்மைக்கு அறிகுறி; போற்றி எனக் கூறல் வாக்கின் பங்கு; பணிந்து போற்றல் கரணத்தின் தொழில். காயம் என்னுங்கால், ஐம்புலமடங்கிய ஈடுபாடும் இன்றியமையாதது. பணிதல் மெய்ப்புல ஈடுபாடு; போற்றல் வாயது தொழில்; கமலபாதத்தைக் காண்டல் கண்ணுறு செயல்; வேரிய கமல பாதத்தை நுகர்தல் மூக்கியன் பணி. போற்றும்பொழுதும் விளங்கச் சொல்லும் பொழுதும் கேட்டலில் நாட்டங்கொளல் செவிப்புலத் தொழிற்பாடு.

அகராதிப்பாயிரத்திலும் முக்கரண சுத்தியும் ஐம்புலத் தொழிற் பாடும் காணப்பெறல் சிந்தனைக்குரியது. முயன்றடி யேத்த முற்படுவது மன மொன்றும் செயல்; வாழ்த்த விரும்புவது வாக்கின் பங்கு; முயல்தல், பணிதல், பதமலர் சூடல் காயக்குறிப்பு. அவற்றுள்ளும் பணிந்து சூடல் மெய்ப்புலத் தொழிலென்றும், வாழ்த்தல் வாயது தொழிலென்றும், பதமலர் சூடுங்கால் அதனைக் காண்டல் கண்ணுறுபணியெனவும், அம்மலர் மணம் நுகர்வது மூக்கின் தொண்டென்றும், ஏத்துங்காலும், வாழ்த்துங்காலும் கேட்டின்புறல் செவியின்பம் எனவும் கொள்ளக் கிடக்கின்றன.

காப்பியத் தலைவரை ஈன்றெடுத்த தாய், 'அறத்தொகையில் பீடத்து உயர் வளர்க'[120] எனத் தொழுங்கால், அறத்தொகையின் புகழினைக் 'கற்றோர் அருந்தொடைப்பா ஓசைமிக்க அறத்தொகை' எனப் புகழ்வதினின்று அடிகட்குப் பாவில்தொடையிலும்ஓசையிலுமுள ஈடுபாடு புலப்படும் அவ்வீடுபாட்டினைக் காப்பியப் பாயிர முதற் பாடலின்கண்ணமைந்த சீரிய, நேரிய, வேரிய, ஆரிய என்னும் எதுகைத் தொடைச் சொற்களும், 'செய்தளித்தழிப்ப' 'நேரிய எதிர் ஒப்புஇன்றி' ஆகிய முரண்தொடை நயங்களும் காட்டும்.

அகராதிப் பாயிரத்தில்,

''மூவுல கனைத்தும் முயன்றடி யேத்த
யாவுல கனைத்தும் ஏந்தியான்''

என்னும் பகுதியில் உலகனைத்தும் ஏத்தப்பெறுபவன், உலக்னைத்தும் ஏந்தியாளாந்தன்மை பெறுதலைக் குறிக்கும் தொடை நயச் சொற்களும், 'யாப்புற மறையுற மென்றுணர்ந்த தொனிபெற' எனவும், 'தொகைவரும் பலபொருள் வகைவர விளக்கியும்' எனவும் முரண் தொடை யியைபுகளும் அமைந்து நயமூட்டுகின்றன.

காப்பிய முதற்பாயிரப் பாடலில் பல்வகைத் திறத்தை நன் முறை பொதிந்த அடிகள், பிறவற்றிலும் பல்லாற்றாலும் சுவை மிளிரத் தொடர்ந்து சென்று இறுதியில் 'திருவாய் மணித்தேன் மலர் சேர்த்த தேம்பாவணி'[121] எனப் போற்றும் வண்ணம் முடிக்கிறார். 'அகராதிப்பாயிரம், மதுரவன் ஆதி வளந்தரச் சதுரகராதி சாற்றுதும்' என முடிவு பெறுகிறது.

கவிதைத் திறனைக்கணக்கிடும் அளவுகோலாகக் காப்பியப் படைப்பேயன்றிப் பிறவகை இலக்கிய வடிவங்களையும் கொள்ளற் கிடனுண்டு. அதனாற்றான் ஒட்டக் கூத்தர், சயங்கொண்டார், குமர குருபரர், சிவப்பிரகாசர் போன்றோரும் போற்றப்படுகின்றனர். அடிகளாரது அளப்பிலாக் கவியாற்றல் மற்றைச் சிற்றிலக்கியப் படைப்புக்களிலும் தெள்ளெனப் புலப்படுகிறது.

சிற்றிலக்கியப் படைப்புகளில் சிறப்புற்றுத் திகழ்வது கித்தேரி யம்மாள் அம்மானையாம். நாட்டுப்பாடல், அம்மானை வகையில் அமைந்ததெனினும், சிறுகாப்பியம் எனப் புகழ்தற்குரியது ''தேம்பாவணியில் சிலப்பதிகாரச் சாயல் உண்டெனில், கித்தேரியம்மாள் அம்மானையில் மணிமேகலையின் சாயல் உண்டு. தேம்பாவணி செந்தமிழ் நடைகொண்ட கலைக் காப்பியம் என்றால், கித்தேரியம்மாள் அம்மானை பொதுமக்களுக்கு விளங்கும் நடை கொண்ட மக்கள் காப்பியம்'' என்பர் ஞானப்பிரகாசம் அடிகளார்.[122]

''பேதையர்க்கும் ஓர் 'அம்மானை பேதை நான் பாடிடுவேன்'' என்று கூறுவது புலவரின் அவையடக்கம்; இந்த அம்மானை பேதையர்க்-கல்லாது, பெரும்பாலும் பேரறிஞர்களுக்கே அறிவு விருந்தாக உள்ளது'' என்பர் ரம்போலா மாஸ்கரனேஸ்.[123] அகராதியும் மதுர வனாதி வளந்தரச் சாற்றியதாகக் கூறினும், மதுரமொழிக்கு வளந் தரச் சாற்றியதாகவே தோன்றுகிறது.

அடிகள் தாம் பூண்ட திருப்பெயர்ப் பாதுகாவலராம் சூசை முனிவரைத் தலைவராக்கிக் காப்பியம் படைத்தாரெனின், அவரது துணைவியாம் மரியாவை தலைவியாக்கிச் சிற்றிலக்கியங்களைப் படைத்தருளினார். ஏனெனில்

''தெளித்தேற்ற எவருமுனைத் தினமெவணும் உன்றயை நான்
களித்தேற்றல் என்றன் கடன்''

என்பதே அவரது குறிக்கோள்.[124]

அகராதி ஆக்கியோன் வரலாறு குறித்த பாடலில், அதனைப் படைத்தற்குத் துணை நின்றவர் அம்மரியே என்பதனை மறந்தா-ரல்லர்.

''மருக்காவ னீழற்கீழ் வதித்தன வாழுந்
திருக்காவ லூரிற் றேவதாய் துணைசெய''[125]

எனப் பாடி நன்றியறிவுப் பெருக்கினைப் படைக்கிறார்.

திருக்காவலூரகத்துத் திகழொளி மணிக்கோவில் அருட்காவல் இயற்றியளித்து வந்த அடைக்கலத்தாய் மீது பாடியருளிய நூல் திருக்-காவலூர்க் கலம்பகமாகும். பலசுவை நிரம்பிய பாடல் வகைகள் விரவி வரும் அமைப்பைக் கொண்டதனால், புலவர் தந் திறமுணரக் கலம்பகம் என்னும் இலக்கியமே சிறந்த விளக்கமாகும்.

கலம்பகக் காப்புச் செய்யுளில், கன்னிமரியைச் சங்காக உரு-வகிக்குந் திறம் வியத்தற்பாலது சங்கு முத்தினை ஈனுதல் இனச் சேர்க்கையால் அன்று; நீரினுள் உறங்குஞ் சங்கினுள் மழைத்துளி வீழு-மாயின் அரியதொரு முத்தாக உருப்பெறுகிறது. அன்னை மரியும் தன் வாழ்க்கைத் துணைவராம் சூசை முனிவரோடு, மெய்க்கூட்டின்பங் காணாமல், வானிறைவன் திருவருளால் கருத்தரித்து ஒளிமகனாம் சேசுவை உலகிற்களித்தாள் என்பதனை,

''உருவில்லான் உருவாகி உலகிலொரு மகனுதிப்பக்
கருவில்லாக் கருத்தாங்கிக் கன்னித்தாய் ஆயினையே''[126]

எனப் போற்றும் வரிகளால் அறியலாம். இவ்வுருவகச் சிறப்பிற்கு இலக்காகும் பெருமை இலக்கிய வரலாற்றில் மரியா ஒருத்திக்கன்றி

வேறு உண்டோ? அதனை நினைத்து ''பாற்கடல்கன்னிச்சங்கிங்க ணரிதிப்ப யந்தளித்த''[127] எனப் பாடிப் பரவிய புலவர் திறம் பாராட்டற் பாலது.

அகராதியில் ஆக்கியோன் வரலாற்றில் இறைவனைப் பயந்த தன்மையினை விளக்காவிட்டாலும், அகராதியை முடித்த நாளைக் கணக்கிடுங்கால், ''அத்திருக் கன்னிதா னாதியை யீன்ற''[128] எனக் குறித்து, கன்னியான ஒருத்தி தன்னைப் படைத்த ஆதியை யீன்ற சிறப்பினைப் புலப்படுத்துந் திறம் போற்றற் பாலது.

சொற்சுவைப் பெட்டகமென அடிகளாற் சுட்டப்பட்ட அடைக்கலமாலை அமைந்துள்ளது.

''அடைக்கல மாலை அடைக்கல மாதா
அடைக்கலமாய் வைத்த அணி''[129]

எனச் சூடிய மாலையில் தாயின் திருவடிகளைப் பணிந்து, பாடல்கள் புனைந்து பெருவாழ்வைப் போற்றி, இடியென வெற்றி முழக்கமிட்டு, வலி புகழ்ந்து, மனங்களித்து ஆசிமொழிகள் கூறியது பற்றிய,

''பதங்கள் பணிந்து பதங்கள் நவின்று
சதங்கள் வியந்து சதங்கள் – அதிர்ந்து
சதங்கள் குயின்று சரங்கள் குவிந்து
வயங்கள் புகழ்ந்து மனங்கள் - நயந்து''[130]

என்னும் வரிகள் சொற்சுவைக்கு ஓர் எடுத்துக்காட்டு.

அகராதியில், முதலாவதான பெயரகராதி அகரத்தை முதலாகக் கொண்டு தொடங்குகிறது. அவ்வகரத்திற்குக் கொடுக்கப் படும் முதற்பொருள் முதலெழுத்து என்பதாகும். அதற்கேற்ப அப்-பகுதிக் காப்புச் செய்யுள் நான்கடிகளிலும், நம்முதல், தம்முதல், அம்முதல், இம்முதல் என எதுகைத் தொடைச் சொற்களைப் பெற்று உள்ளது. மூன்றாவது அகராதி அருட்டொகை, இருட்டொகை, மருட்டொகை, பொருட்டொகை என எதுகைத் தொடர்களைத் தொகையகராதி என்னும் பெயருக்கேற்பப் பொருத்தி உள்ளது. இவை சொற்சுவைச் சிறப்புடன் மிளிர்வன.

அடைக்கல நாயகிமேல் வெண்கலிப்பா அடிகளாரது பொரு-ணோக்கைப் புலப்படுத்தும் தகையது.

''செறிவிச்சை பொய்களவு தீதனைத்தும் புடைநெருங்க
அறிவச்சம் நிறைநாணம் அவையெல்லாம் அகன்றனவே''[131]

என்னும் பகுதி அதற்குத் தக்க சான்றாகும்.

பொருளகராதியின் காப்புச் செய்யுளில்,

> "அருளகத் தனைத்துமே யாளு நாதனை
> மருளகத் தகற்றிட வணங்கி
> ...."

நூலில் தெளிவு பெறப் பொருளகராதியைப் புகலுவம் என்பதும், அகராதியின் முடிவில்,

> "எந்நூற் சூட்டிலு மெத்துறை காட்டிலும்
> அந்நூற் கெல்லா மறிவாதி யெனவே"

எனக் கூறி முடிப்பதும் அடிகளாரது பொருணோக்கினைப் புலப்படுத்த வல்லன.

தமிழ்ப் பாடல்களில் இசை மணங் கமழும் புதுப்புது வண்ணங்களை விருத்தங்களிற் காட்டி மகிழ்ந்தார். செந்தமிழ் இலக்கணத்தில், "12,016 பாடல்களுடைய இராமாயணத்தில் கம்பன் 87 வண்ணங்களை அறிமுகப்படுத்தியிருக்க 3615 பாடல்களைக் கொண்ட தேம்பாவணியில் எளிதாக 90 வண்ணங்களைக் காட்டியிருக்கிறேன். வேண்டுமாயின் ஒவ்வொரு பாடலுக்கும் ஒரு வண்ணங் காட்ட இயலும்"[182] எனக் கூறுகிறார். முருகப் பெருமானை அருணகிரியார் வழுத்திப் பாடிய வண்ணக்கவிகளைப்போல இறைமகன் சேசுவைக் கிறித்தவர்கள் பாடிப் புகழச் சந்தங்கமழ் பாடல்களை 'வண்ணம்' என்னும் பெயரால் ஆக்கித் தந்துள்ளார். இறுதிப் பாடல்கள் நான்கனுள் கிறித்தவப்புனிதையர் இடம்பெறுகின்றனர். சைவசமயக் குரவர்கள் பாடியது போன்று பன்னிரண்டு பாடல்களைத் தேவாரம் என்னும் பெயரால் பாடினார். இவற்றுள் 6, 7 பாடல்கள் நீங்கலாக மற்றவை இறந்தோரைக் கல்லறைக்கு எடுத்துச் செல்லும்போது இக்காலத்தில் பாடப்பெறும் கருணாம்பரப் பதிகம் எனவும் வழங்கப் பெறும்.[183]

அகராதியில் அமைந்த ஆறு பாடல்களுள் பாயிரமும் வரலாறும் நேரிசை ஆசிரியப்பாவாலானவை. பெயர், பொருளகராதிகளில் காப்புச் செய்யுட்கள் கலி விருத்தத்தாலமைந்தவை. தொகை, தொடை அகராதிகளின் காப்புச் செய்யுட்கள் அறுசீர் விருத்தத்தாலமைந்தவை. அகராதி இறுதி நூற்பா ஒன்றால் முற்றுப் பெறுகிறது. பாயிரப் பாவின் முதற்சீர் கூவிளத்தில் தொடங்க, வரலாற்றுப் பாவின் முதற்சீர் கருவிளத்தில் தொடங்குகிறது. 19 அடிகளைக் கொண்ட பாயிரப் பனுவலில் மூவகைச் சீர் எதுவும் இடம் பெறாதிருக்க, 14 அடிகளைக் கொண்ட வரலாற்றுப்பாவில் 9 மூவகைச் சீர்கள் இடம் பெறுகின்றன. பெயரகராதிக் காப்புச் செய்யுள் 'கூவிளம், கருவிளம், புளிமா,

கூவிளம்' என்னும் முறையில் முதலடி அமையப் பொருளகராதிக் காப்புச் செய்யுள், 'கருவிளம், கருவிளம், தேமா, கூவிளம்' என்னும் முறையில் அமைந்துள்ளது. தொகையகராதிக் காப்புச் செய்யுள், 'புளிமாங்காய், கருவிளம், கருவிளம், கருவிளங்காய், கூவிளம், கூவிளம், கருவிளங்காய்' என்னும் முறையில் முதலடி அமையத் தொடையகராதிக் காப்புச் செய்யுள், 'கூவிளம், கருவிளம், புளிமாங்காய், கருவிளம், கருவிளம் புளி மாங்காய்' என்னும் முறையில் அமைந்துள்ளது. இவ்வாறு, பல்வேறு வகைகளில் பாடற் சந்தங்கள் அமையப் பாடியிருப்பது அடிகளார்க்கு அவ்வகைச் சந்தவழக்கில் உள்ள ஈடுபாட்டினை நாமுணர வழிகாட்டி யாகிறது.

பிரபந்த வகைகளுள் பலவற்றைப் பாட வேண்டுமென்பது அடிகளாரது குறிக்கோள் எனலாம்; இயன்றவற்றை முயன்றுள்ளார் திருமைந்தருடைய பாடுகளை நினைந்து அன்னைமரி புலம்புவதை அந்தாதி வடிவில், 'அன்னை அழுங்கல் அந்தாதி' என்னும் நூல் ஆக்கினார்; கல்லுங் கரைந்துருகும் வகையான் கலியாக வரைந்து உள்ளார். தொகையகராதியில் பிரபந்தங்களின் வகைகளை விளக்குவது அவற்றில் அடிகளார் கொண்டிருந்த விருப்பினைக் காட்டும்.

அகராதியில் உரிய இடங்களில் இலக்கியத்தின் இயல்புகளையும் வகைகளையும் நூல்களையும் அடிகளார் காட்டுகிறார். நூல் எனில் இலக்கணவிலக்கிய நூல்கள் எனக் கூறுகிறார்.[134] இலக்கியம் என்பதற்கு, இலக்கண நூற்படி முன்னோர் தந்த செய்யுள் உதாரணம் என்கிறார்.[135] சுத்தியம் என்பது இலக்கணமின்றி இலக்கணப் பாட்டுப்போற் செய்வது எனப் புகல்கிறார்.[136] தற்காலத்தே புதுக்கவிதை எனக் கருதப்படுவனவற்றை அவ்வகை-யிற் கொள்ளலாம். சந்தாப்பா, இருபத்தாறெழுத்து நான்கடியாக வரும் பா என்கிறார்.[137]

பலவகையான நூல்களைக் குறிக்கிறார். அவிநயம், ஓர் நூல் நாடகங்கம் என்பர்.[138] பிடகம் புத்த நூல் என்பர்[139] மிருதி, தரும நூல் என்பர்.[140] கூத்தினூல் பரதம் என்பர்.[141] சோதிடநூல் எண் கணிதம் என்பர்.[142] தொட்டியம், ஓர் கருநூல் என்பர்[143] பத்ததி ஒழுங்கு கருமங்களை விதிக்கிற வொரு நூல் என்பர்.[144] இதிகாசம் பூர்வகதை என்பர்.[145]

இலக்கியங்களைப் படைத்தருளிய கீரன், கம்பன் ஆகியோர் சுட்டப்படுகின்றனர்.[146] தமிழ்ப்புலவர்களால் ஆளப்பட்ட தொடர்-களை ஆங்காங்கு நிறுத்திப்பொருள் கூறப்பட்டிருப்பது அவற்றில் அடிகளார்க்கிருந்த பயிற்சியை அறிய வாய்ப்பாகிறது. சான்றாக,

அறவாழி அந்தணன், சொல்லேருழவர், பொருட்பெண்டிர் போன்றன திருக்குறட்டொடர்களே.[147] எண்குணன், சேர்ந்தார்க்கொல்லி, நிறைமொழியாளர் ஆகியன திருக்குறட்டொடர்களையொட்டியன.[148] அடிகளாரது பரந்த இலக்கியப்பயிற்சிக்கு இவைகளனைத்தும் விளக்கங்களாய் அமைகின்றன. எனவே, வெளிநாட்டாருள்ளே பெஸ்கி அடிகள் தமிழ்க் கவிதை வரலாற்றில் நிலையான இடத்தைப் பெற்றுவிட்டார்[149] என்பதனை அகராதியாலும் உறுதிபெறலாம்.

3. மொழியியல் நுண்மை

''ஞால மெங்கணும் வாழ்கின்ற மக்கள் பல்வகை அறிவியற் கூறுகளைக் கண்டுணர ஆங்காங்குச் சென்ற சமயத்தொண்டர் காரணரானமையின், அவர்களே அறிவியல் முன்னோடிகளாவர்"[150] என்னும் மாக்ஸ் முல்லரது கருத்தை மொழியியற்றுறையில் சமயத்தொண்டர் ஆற்றியுள்ள பணியினைக் கணிப்போர் ஒப்புவர். தமிழ்ப்பணியாற்றி உள்ள பிறநாட்டுச் சமயத் தொண்டருள் தலைமையிடம் பெறத் தக்கவர் அடிகளார் என ஜி. டபிள்யூ. மாகோன் குறிப்பிடுவது போன்று சிறந்த மொழியியல் வல்லுநர்.[151]

அடிகளாரது மொழியியற் சிந்தனை அவர் தம் படைப்புக்கள் அனைத்திலும் விரவிக் கிடப்பினும் அவற்றுள் ஒன்றாகக் கொடுந்தமிழ் இலக்கணத்தில் பரக்கக் காணப்படுகின்றமையான், அஃதொன்றே மொழியியல் திறத்தைத் தெளிவுபடக் காட்டவல்லது. எனவே, இலைமறை காயென உள்ளுறைபோல் திகழ்ந்து அகராதியின்கண் ஊடுருவியிருக்கின்ற மொழியியற் குறிப்புக்களைக் காண்டற்குக் கொடுந்தமிழ் இலக்கண வழி அடிகளாரது மொழியியற்றிற மறிந்த பின்னர், அகராதியின் மொழியியற் கூறுகளைக் காண்பது தக்கதாகும்.

அறிவியல் நோக்கில் மொழியியல்பை ஆயத்தலைப்படும் மொழியியலார்க்கு மொழித்தன்மைகளைப் பழுதற உணருந்திறம் இன்றியமையாதது. அவ்வடிப்படையில் நோக்கின், அடிகளிடம் படிந்திருந்த அளவற்ற மொழியாற்றலே அவரை இந்தியச் சமயத் தொண்டருள் ஒருவராகும் தகுதியாளராக்கிற்று.[152] பொதிந்திருந்த வியத்தகு மொழிவளம் சந்தாசாகிப்பால், ''இசுமாத்தி சந்தியாசி'' என்னும் பட்டம் பெறத் துணையாயிற்று. இத்தாலி, ஹீப்ரு, கிரீக், லத்தீன், போர்த்கீஸ், ஸ்பானிஷ், பிரெஞ்ச் ஆகிய ஐரோப்பிய மொழிகளில் மட்டுமன்றி, தமிழ் சமஸ்கிருதம், தெலுங்கு, இந்துஸ்தானி, பெர்ஷியன் போன்ற இந்திய மொழிகளிலும் புலமைபெற்றிருந்தார்.

கொடுந்தமிழ் இலக்கணத்தில், தமிழில் வழங்கும் ஞகரம் போர்த்கீஸின், 'nh' ஒலிக்கும், ஸ்பானிஷின் 'n' ஒலிக்கும், பிரெஞ்ச், இத்தாலி மொழிகளின் 'gn' ஒலிக்கும் இணையானதெனக் குறிக்கிறார்.[153] பிற மொழியாளருக்கு விந்தையாயும் கடினமாயும் உள்ள குறில் நெடில் ஒலி வேறுபாட்டை விளக்குமுகத்தான் ஒலி நுட்பங்களை எடுத்துக் காட்டுகையில், ''லத்தீன் மொழியில் பலவகைகளைக் கொண்ட சொற்களில், அசைகளுள் ஈற்றயலைத் தவிரப் பிறவெல்லாம் ஒலியால் மட்டும் குறிலென்றும், நெடிலென்றும் பாகுபாடு செய்யப் பெறுவதில்லை. பிரெஞ்ச் தவிரப் பிற ஐரோப்பிய மொழிகளுள்ளும் ஈற்றசை தவிரப் பிறவெல்லாம் ஒலியை மட்டும் கொண்டு பாகுபாடு செய்யப்படுவதில்லை. ஆனால், தமிழில் ஒவ்வோர் அசையும் ஒலியைக் கொண்டே முறையாகப் பாகுபாடு செய்யப்பெறுகின்றது"[154] எனச் சுட்டுகிறார். ஒப்புமைப் பொருண்மையுடைய இல் என்னும் உருபு, உயர்வொப்புமைப் பொருண்மையில் எவ்வாறு வழங்குகிறதெனச் செல்வங்களில் செல்வம், அபத்தங்களில் அபத்தம், நன்மைகளில் நன்மை என்னுந் தொடர்களை எடுத்துக்காட்டி, அவற்றிற்கு இணையாகப் பெயர்களை இரட்டித்து இடையில் உடைமைப் பன்மையை அமைத்து, மிக உயர்ந்த கடவுள் எனக் காட்டும் கடவுளருடைய கடவுள், மிக உயர்ந்த பாடல் எனக் காட்டும் பாடல்களுடைய பாடல், புனிதங்களுடைய புனிதம் என வரும் விவிலியத் தொடர்களைக் கொண்ட ஹீப்ரு மொழியமைப்பினை எடுத்துக் காட்டுகிறார்.[155] ''சமஸ்கிருதத்தில் திணையை லிங்கம் எனவும், ஆண்பாலைக் குறிக்கப் புலிங்கம் எனவும், பெண்பாலைக் குறிக்க ஸ்திரீலிங்கம் எனவும், பொதுப்பாலைக் குறிக்க நபுஞ்சகலிங்கம் எனவும் கூறத் தமிழர்கள் உயர்திணை, அஃறிணை என இரு வகையாகப் பாகுபாடு செய்வர்''[156] எனக் கூறுகிறார்.

கொடுந்தமிழ் இலக்கணத்தில் வரும் இவ்வகைய விளக்கங்களும் ஒப்புமைகளும் அடிகளாரது பன்மொழிப் புலமையைக் காட்டவல்லன. மேலை நாட்டுச் சமயத்தொண்டரை மனத்துட் கொண்டு கொடுந்தமிழ் இலக்கணம் எழுதப் பட்டதாதலின், இலக்கண நெறிகளை ஒப்பிடுங்கால், அவர்களறிந்த மேலை நாட்டு மொழிகளை ஒப்பிட வேண்டியதாயிற்று. செந்தமிழ் உணர்ந்தோரையும் தமிழக மக்களையும் கருத்திற் கொண்டு எழுதப்பட்ட அகராதியில் மேலைநாட்டு மொழிகள் பற்றிய குறிப்புக்கட்கு இடமின்று. எனவே இந்நாட்டு மொழிக்குறிப்புகள் மட்டுமே இடம் பெறுகின்றன.

அகராதியில், பாகதம் என்பதற்கு எல்லாநாட்டு மொழி எனப் பொருள் தருகிறார்.[157] அங்கம், அருணம், கலிங்கம், கௌசிகம்,

காமபோசம், கொங்கணம்,கோசலம், சாவகம், சிங்களம், சிந்து, சீனம், சோனகம், திரவிடம், துருவம், பப்பரம், மகதம், மராடம், வங்கம், ஆகியவற்றைப் பதினெண்பாடைகள்[158] எனத் தொகை-யகராதியில் காட்டுவதோடு அவற்றைத் தனித்தனியே பெயரகராதி-யில், அவற்றிற்குரிய அகரநிரலில் அமைத்துப் பாடை எனப் பொருள் கூறுகிறார். வடமொழி இதிகாசங்களைப் படைத்தருளிய வான்மீகி, வியாசன் ஆகியோர் சுட்டப்படுகின்றனர்.[159] வட-மொழியில் வழங்கும் வையாகரணம் என்னுஞ் சொல்லுக்கு வையாகரணம் படித்தோன்[160] எனப் பொருட் காட்டுகிறார். சுலோகம் என்பது ஆரியச் செய்யுள் என்கிறார்.[161] அமரம் வட மொழியிலோர் நிகண்டு எனச் சுட்டுகிறார்.[162] அட்டகம் வட-மொழியிலோர் பிரபந்தம் எனக் குறிக்கிறார்.[163] தண்டகம்-தண்டகாரணியம், வடமொழியிலோர் செய்யுள் என வரைகிறார்.[164] இவ்வாறு, அகராதியில் காணப்படும் பொருட்குறிப்புக்க ளனைத்தும் அடிகளாரது வடமொழியறிவினை விளக்க வல்லன. அடிகளார் காலத்துத் தமிழகத்தில் பிற மொழியெனில் தமிழொடு வேறுபட்ட வடமொழியே என்னுங் கருத்து நிலவியிருந்தமையின் அம்மொழிக் குறிப்புக்களே இடம் பெற்றிருக்கின்றன எனக் கோடலே சால்புடைத்தாம்.

பண்பட்ட மொழிகள் எழுத்துமொழி, பேச்சுமொழி என இரு வகைகளையுடையன. பேச்சுமொழி, மாந்தர் அனைவராலும் வழங்கப்படுகின்றமையான், மொழியியல் ஆய்வில் சிறப்பிடம் பெறற்-குரித்து. இஃதனை உணர்ந்த அடிகளார், கொடுந்தமிழ் இலக்கண முன்னுரையில், "தமிழில் இருவகை மொழிகள் வழங்குகின்றன. ஒன்றனை உயர்ந்த தமிழென்றும், பிறிதொன்றனைப் பொதுத் தமி ழென்றும் யான் கருதுகிறேன். சிலர் பொதுத் தமிழினின்றும் மாறு பட்டதனைச் செய்யுள் மொழியெனக் கூறுதல் சாலாது. ஏனெனில் அடிவரையறையோடு பயன் படுத்தப்பெறும் அவ்வகை உயர்ந்த மொழியை உரைநடையிலும், குறிப்பாகச் செய்யுட்களின் உரை களிலும் பயன் படுத்துகின்றனர். எனவே, செய்யுள் மொழி என்பதைக் காட்டிலும் உயர்ந்த மொழி என்பதே பொருந்தும். எவ்வாறாயினும் தமிழர்கள் உயர்ந்த மொழியைச் சிறந்ததமிழ் என்னுங் கருத்தில் செந்தமிழ் என்றும் பொதுத் தமிழைக் கொச்சைத்தமிழ் என்னுங் கருத்தில் கொடுந்தமிழ் என்றுங் கூறுவர்"[165] என்பதினின்று புலனா-கிறது.

அண்மைக்காலத்தே மொழியியல் பல கிளைகளாகப் பிரிந்து வளர்ச்சியுற்றிருக்கிறது. இலக்கணங்களெல்லாம் விளக்கமுறை மொழி-யியலாகக் கருதப்பெறுகின்றன. ஏனெனில், அந்நூல்கள் எழுந்த

காலத்தில் அவ்வப்பகுதியின்கண் வழங்கிய மொழியியல்பினை அவை விளக்கிக் காட்டுகின்றன. செய்யுள் வழக்கு, பேச்சுவழக்கு ஆகியவற்றை ஆய்ந்து எழுதப்பட்டதாக மதிக்கப்படும்[166] தொல்காப்பியம் போன்ற சிறந்த இலக்கணங்களில் பேச்சுமொழி முழுவதும் ஆயப்பட்டதாகத் தெரியவில்லை. பழைய இலக்கணங்களின் அவ்வகைக் குறைவுகளை அடிகளாரது கொடுந்தமிழ் இலக்கணம் நிறைவு செய்து, மொழியியல் நோக்குக்கு மிகுந்தபயன் நல்குகிறது. அவ்வாறே, செந்தமிழ் மொழியெனக் கருதிச் செய்யுளில் ஆளப்பெறும் சொற்களின் பொருளைத் தெளிவுபடுத்துவதில் சதுரகராதி சிறப்பிடம் பெறுகிறது.

விளக்க மொழியியலார் ஆய்கின்ற ஒலியனியல், உருபனியல், தொடரியல் ஆகியவற்றை மட்டுமன்றி, வரலாற்று மொழியியல், ஒப்பியன் மொழியியல், ஒப்புமை மொழியியல் ஆகிய மொழியியல் துறைகளின் அனைத்துக் கூறுகளையும் தாம் அறியாமலேயே அடிகளார் தொட்டுக்காட்டியுள்ளார் எனலாம்.

ஒலியியல், ஒலியனியலின் ஒரு கூறாகும்; பல்வேறுபட்ட ஒலிகளையெழுப்ப ஒலியுறுப்புக்கள் எவ்வாறு தொழிற்படுகின்றன என்பதனை விளக்கும் கொடுந்தமிழ் இலக்கணம் அயல்மொழியாளருக்கென எழுதியதாதலின், அவர்களது மொழிகளிலமைந்த ஒலிகளே தமிழில் இருப்பின் அவற்றின் ஒலிப்பு முறைகளை விளக்கிக் கொண்டிருத்தல் வீண் காலக்கழிவு என எண்ணி, அவற்றுக்கு இணையானவற்றை மட்டும் 'க' என்பது 'K' என்பதற்கும் 'ம' என்பது 'M' என்பதற்கும் 'ர' என்பது 'r' என்பதற்கும் 'ல' என்பது 'L' என்பதற்கும் நிகரானவை எனச்சுட்டுகிறார்.[167]

பிற மொழி ஒலிகளினின்று வேறுபடுகின்ற ட,ண,ள,ழ ஆகிய தமிழொலிகளின் பிறப்பு முறைகளை மட்டும் கொடுந்தமிழ் இலக்கணத்தில் தெளிவு படுத்த முற்படுகிறார். "இயன்ற அளவு நாவைப் பின்னோக்கி வளைத்து உள்ளிருக்கும் அண்ணத்தின் மிக உயரமான பகுதியைத் தொடுமாறு முன்னோக்கித் தள்ளி, 'da'வுக்கும் 'ra'வுக்கும் இடைப்பட்டவாறு ஒலி எழுப்பின் 'ட்' பிறக்கும், டகரம் இரட்டையாக 'ட்ட' என்றாற் போன்று வருமாயின், டகரத்தை ஒலிப்பது போன்றே நாவை வளைத்து முன்னோக்கித் தள்ளுங்கால் அதிரச் செய்ய வேண்டும். பிறிதொரு மெய்ம்முன் 'நட்பு' என்னுஞ் சொல்லில் அமைந்தது போன்ற டகரம் வருமாகில் 't'-ஐஒலிப்பது போன்று ஒலிக்க வேண்டும். ஆங்கிலத்தில் இவ்வாறு ஒலிக்க கூடிய எழுத்துள்ளதாகக் கூறுகின்றனர். ணகரம் 'n'-ஐப் போன்று ஒலிக்கப்பட வேண்டும். நா அப்பொழுது டகரத்திற்குள்ளது போன்ற நிலையில் அமைய வேண்டும். பிற நகர னகரங்கட்கு நாவில் நிலை டகரத்தைப் போன்றதன்று. ளகரம் 'l' -இல் ஒருவகை. அண்ணத்தின் நடுவில் நா

படுமாறு மிருதுவாக மடித்து ஒலிக்கவேண்டும். ழகரம் மற்றொருவகையான 'l' ஆகும். நாவை அண்ணத்தின் உட்பகுதியைத் தொடுமாறு வளைத்து அழுத்தமான ஒலியெழுமாறு உச்சரித்தல் வேண்டும்[168] எனக் குறிக்கிறார். ஆய்தவொலியைக்குறிக்க மறந்திலர். திணைகளைப் பற்றிக் கூறுங்கால், உயர் தமிழுக்குரிய இஃதனை ஆய்தவெழுத்து என்பர். 'g'-ஐப் போன்று மிடற்றொலியாக ஒலிப்பர்[169] எனக்கூறும் குறிப்புக்களெல்லாம் ஒலியியல் அடிப்படை கொண்டனவெனலாம்.

அகராதியில் எழுத்திலா ஒலிகளும் உண்டு என்பதனை மனத்துட்கொண்டு 'முழைத்தல்' என்னுஞ் சொல்லுக்கு 'எழுத்திலா ஓசை'[170] எனப் பொருள் தருகிறார். எழுத்தாற் குறிப்பிடாத சொற்களும் வழங்கியிருக்கின்றன என்பதனைப் புலப்படுத்துவது போன்று வடமொழியில் வழங்கும் 'வேதம்' என்னும் பொருள் தந்து எழுதாக் கிளவியைச் சுட்டுகிறார்.[171]

மொழியின் மிகச் சிறு கூறாகிய எழுத்து ஒலி வடிவு, வரி வடிவு என்னும் இருவகைத் தன்மைகளைப் பெறும் என இலக்கணங்கள் காட்டும்.[172] அகராதியில் 'சொல்' என்பதற்குப் பொருளாக, 'எழுத்தினோசைச் சொல்' [173] எனக் குறிக்கிறார். அவ்வாறே 'அறை'[174] என்பதற்கும் கூறுகிறார். அவை, சொல்லெனில் எழுதப்படுகின்ற எழுத்தின் வடிவும் ஒலிக்கப்படுகின்ற ஓசையின் வடிவும் இரண்டறக் கலந்ததே என்பதைப் பெற வைக்கின்றன. மொழியியலார் ஒலியியலின் தன்மைகளாக இவ்விரு வடிவங்களையும் கொள்வர். அ, இ. உ ஆகியவற்றிற்குப் பொருள் தருங்கால் ஓரெழுத்து என முதலிற் கூட்டி விட்டுப் பின்னரே அவை தருகின்ற பிறபொருள்களைக் கூறுவர்.[175] இக் குறிப்புககளெல்லாம் மொழியியலார் மொழியின் பிரித்தறியக் கூடிய மிகச் சிறிய ஒலிக்கூறு என ஒலியனுக்குக்கூறும் வரையறையை யொட்டியன.

மானிட உறுப்புக்கள் பல விருப்பினும் ஒலியெழுப்பப்பயன்படும் பகுதிகள் பொருட்குறிப்புக்களாகப் பலவிடங்களில் அகராதியில் இடம் பெறுகின்றன. அணம், அணரி-மேல்வாய், அணல்-கீழ்வாய், மிடறு; அண்ணம்-உண்ணா, மேல்வாய்; வாயினுட் கீழ்வாய் அணல், மேல் வாயின் பெயர் அணம், அணரி, அண்ணம் என்றிவ்வாறு வாய், அண்ணம் ஆகியவற்றின் நுண்பகுதிகளைச் சுட்டிப் பொருள் விளக்கம் தருவது[176] மொழியை ஒலிக்கும் உறுப்புக்களைப்பற்றிய தெளிவினைப் புலப்படுத்தவேண்டும் என்னும் உணர்வைக் காட்டுகிறது. பிறவுறுப்புகள் இந்த அளவிற்குப் பலவிடங்களிலும் நுண்பிரிவுகளாகவும் விளக்கம் பெறவில்லை. மொழியியலாரின் ஒலியியற் பகுதியுள் ஒலியுறுப்புக்களும் அடங்கும்.

பேராசிரியர் தெ. பொ. மீனாட்சி சுந்தரம் அவர்கள் அடிகளாரைச் சிறந்த அறிஞரென்றும், அவரது கொடுந்தமிழ் இலக்கணத்தைச் சிறப்பாகக் கூறுதல் மிகையானதன்றென்றும், அதில் கூறப்படும் விளக்கங்கள் போற்றற்குரியன வென்றும் புகழ்வர்.[177] அடிகளார் கூறும் எழுத்துக்களின் வரி வடிவங்கள் பற்றிச் சிந்திப்பார்க்கு அக்கூற்று முற்றிலும் உண்மையே எனத் தெரிய வரும் வரிவடிவம். மொழியியலின் ஒலிக்குறியீட்டடிப் படையைச் சாரும்.

ஓர்எழுத்தைக் குறிக்க இருவிதக் குறியீடுகள் வழங்குமாயின் மொழியினைக் கற்பார்க்குக் குழப்பமேற்படலாம். அடிகளார் காலத்தில் குழப்பமேற்படுத்தும் வகையான் வழங்கிவந்த உயிர்மெய் எழுத்துவடிவக் குறியீடுகளை இருவகையாகப் பகுக்கலாம். ஒரே குறியீடு ஈரெழுத்துக்களைக் குறிப்பது ஒரு வகை. மெய், உயிர்மெய் ஆகிய இரண்டனுக்கும் பயன்படுத்தப்பட்ட க,ச,த போன்றவை, நெடில், ரகரம் இரண்டனுக்கும் வழங்கிய 'ா' குறியீடு, ஔகாரம், ளகரம் இரண்டனுக்கும் பயன்படுத்தப்பட்ட 'ள' கரக் குறியீடு ஆகியன அவ்வகைப்பட்டவை. ஓரெழுத்தைக் குறிக்கப் பல குறியீடுகளைப் பயன்படுத்துவது பிறிதொருவகை.

ஐகாரத்தைக் குறிக்க கை, தை போன்றவற்றில் அமைந்த 'ை' குறியீடு, ணை, ணை, போன்றவற்றில் அமைந்த 'ɛ' குறியீடு, உகரத்தைக் குறிக்க 'கு' வில் அமைந்த '' குறியீடு, 'லு' வில் அமைந்த 'ப' குறியீடு, 'யு'வில் '|' குறியீடு, ஊகாரத்தைக் குறிக்க மூ,ழூ ஆகியவற்றில் அமைந்த குறியீடு, தூ' வில் அமைந்த 'ா' குறியீடு, 'கு' வில் அமைந்த 'டு' குறியீடு ஆகியவற்றை அவ்வகையிற் கொள்ளலாம் இவை மட்டுமன்றி, டகரத்தோடு உகரம் சேரும்பொழுது 'டு' வடிவும், ககரத்தோடு ஊகாரம் சேருப் பொழுது 'கூ' வடிவும் பெறுகின்றன. அடிகள், இக்குறியீட்டுக் குழப்பங்களைக் கண்டு, "இலக்கணிகளால் முன்னரே சுட்டப்படும் குறியீடுகளைக் கற்றறிந்தோரும் பின்பற்றிலர்"[178] எனக் கூறுகிறார்.

ஓரெழுத்திற்கு இருகுறியீடுகளை மொழியியலார் ஒவ்வார். அதனாற்றான், ஒலிக் குறியீடுகளைப் படைத்துள்ளனர். அடிகளும் குறியீட்டுக் குழப்பத்தைத் தவிர்ப்பான் வேண்டிச் சில குறியீடுகளை உள்ளனவற்றைக் கொண்டு அமைத்துக் காட்டுகிறார். ஓரெழுத்திற்கு ஒரு குறியீடு என்னும் வகையில் அவை அமைந்திலவெனினும் குறியீடு பற்றிய அவர் தம் எண்ணத்தைத் தெளிவாக்குகின்றன.

அகராதியில் ஒவ்வொரு மொழிக்கும் தனித்தனிக் குறியீடு உண்டென்பதை நினைவிலிருத்தி, நாகரம் என்பதற்கு ஒரு லிபி எனப் பொருள் விளக்கம் தருகிறார்.[179] தமிழ் எழுத்துக்களுள் வரி வடிவம்

பற்றியும் ஒலி வடிவம் பற்றியும் இன்றுவரை கருத்து வேறுபாடுகட்கு இடனாயது ஆய்தம் என்னும் எழுத்தாகும்.[180] ஏனெனில் இலக்கணிகள் அவ்வடிவைத் தெளிவுபடுத்திலர். தொல்காப்பியர் சார்ந்துவரல் மூன்றாகிய குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் ஆகிய மூன்றனையும் சேர்த்துப் புள்ளி பெறும் எழுத்துக்கள் என்னும் தலைப்பில் முப்பாற் புள்ளி என்றாரா அன்றி ஆய்தத்தை மட்டும் கூறினாரா எனப் பலர் மயங்குவர்.[181] மயக்கம் போக்குவது போன்று தம் தொன்னூல் விளக்கவுரையில் ''இதனுருவோவெனில் முப்புள்ளி வடிவு''[182] எனக் கூறுவதற்கேற்ப அகராதியிலும் 'முப்புள்ளிஆய்த-வெழுத்து'[183] எனக் கூறி ஆய்தத்தின் வரிவடிவினைக் காட்டுகிறார். பிறவற்றின் வடிவங்கள் பற்றி மயக்கமின்மையின் அவைபற்றி விளக்குதலோ, பொருள் கூறுதலோ தேவையன்று என விட்டார் போலும்.

'ஒலிகளுள் ஒரொலி வழங்குமிடத்தில், மற்றோர் ஒலி வராது ஒவ்வோர் ஒலியும் குறித்ததோர் இடவரையறை பெற்ற மாற்று வழக்காய் அமைவனவற்றை மாற்றொலிகள் என்பர்.[184] தற்கால மொழியியலார் குறிப்பிடுவதுபோல், தெளிவுபெற மாற்றொலிகளைக் குறிக்காவிட்டாலும், அவைபற்றிய சிந்தனை அடிகளாரிடத்தே யுண்டென்பதனைக் கொடுந்தமிழ் இலக்கணத்தால் உணரலாம். ''ஒரு சொல்லின் முதலில் வரும் 'க' ஒலி 'K' ஒலிக்கு இணையானது இடையில் தனியாக வரும்பொழுது 'காகம்' என்பதில் அமைந்தாற் போன்று 'g' ஒலியைப் பெறுகிறது. காகம் என்பதன் வேறொரு பெயராக காக்கை என்பதில் அமைந்தாற்போன்று இரட்டையாகக் ககரம் வருமாயின், K ஐ இரட்டித்தாற்போன்று அமையும். சகரம் மொழிமுதலிலும், இடையில் ஒற்றையாயும் 'சுசி' என்றாற்போன்று வருங்கால் 'S' ஒலியைப் பெறும் 'அச்சம்' என்பதில் வருவதுபோன்று இரட்டையாக வருமாயின் போர்த்கீஸில் உள்ள 'cha' ஒலி போன்றமையும், தகரம் சொல்லின் முதலிலும், இடையில் இரட்டிக்கும் பொழுதும் 't' ஒலியும் ஒற்றையாக இடையில் வரும் பொழுது 'd' ஒலியும் 'துதித்தான்' என்னுஞ் சொல்லில் அமைந்தாற் போன்று பெறும். பகரம் மொழி முதலிலும், இடையில் இரட்டை-யாக வரும் பொழுதும் 'பகைப்பான்' என்பதில் அமைந்தாற்போன்று 'P' ஒலியு, இடையில் ஒற்றையாக வரும்பொழுது 'சபை' என்பதில் அமைந்தாற் போன்று 'b' ஒலியும் பெறும்''[185] என்பர். இவ்விளக்-கங்களில், குறித்ததோர் எழுத்தின் இடவரையறைக்குட்பட்ட வேறுபட்ட ஒலிகளைக் குறித்துக்காட்டல் ஒலியன்களில் மாற்றொலி-களைப் போன்றதேயன்றோ!

கொடுந்தமிழ் இலக்கணத்தில், உச்சரிப்பில் வகையொலிகள் என்னுந் தலைப்பில் கூறும் விளக்கங்கள் வகையொலி பற்றிய சிந்தனையும் அடிகளாரிடத்தே உண்டு எனக் காட்டுகின்றன. றகரத்தின் முன் வரும் இகரம் அவ்விடத்தில் இல்லாதது போன்று ஒலிக்கப்படுகிறது எனக் கூறி, 'க்கிறது' அல்லது 'கிறது' என்னும் வினையீறுகள் 'cradu' அல்லது 'gradu' என்பன போலவும் பிரகாசம், சீக்கிரம் என்பன 'pragasam' 'sicram' என்பன போலவும் ஒலிக்கப் பெறுகின்றன வென்றும் சான்றுகள் காட்டுகிறார்.[186] செய்யுட்களிலும் இவ்வாறமைந்த இகரம் ஓராற்றான் கணக்கிடப்படுவதில்லை என்று விளக்கம் தருகிறார்.

அகராதியில் வண்டு, நண்டு, செப்பு போன்ற சொற்களுக்குப் பொருள் கூறுங்கால் அச்சொற்களையே பொருள்களாகவும் வண்டு, நண்டு, பிண்டம், முடம், செப்பு என மீண்டும் கூறுகிறார்.[187] ஒரு சொல்லுக்கு, அச்சொல்லே பொருளாகக் கூறவேண்டுவதன் நோக்கம் ஒலியில் சிறு வேறுபாடு கொண்டு வழங்கியமையால் போலும். அச் சொற்களில் உள்ள டகரம் ' d ' ஒலியாகவும் ' t ' ஒலியாகவும் பகரம் 'P' ஆகவும் ' b ' ஆகவும் இரு வகையொலிகளாக வழங்கியிருத்தல் கூடும். அதனாற்றான், அவ்வாறு நுண்ணிய ஒலி வேறுபாட்டுடன் வண்டு (d) -வண்டு (t), செப்பு (P) -செப்பு (b) என வழங்கினாலும் அப்பொருளையே காட்டும் என விளக்குவதற்காகக் கூறினார் எனக் கொள்ளல் ஏற்புடைத்து. எனவே வகையொலி என மொழியியலார் போன்று தனி விளக்கம் தரவில்லையெனினும் இக்குறிப்பு வகையொலிச் சிந்தனை எனத்தெளியலாம்.

ஒலியில் குறித்த அடிகளார் சிந்தனைகள் தற்கால ஒலியியற் கொள்கைகட்கு முற்றிலும் நிகரனவாகக் கொள்ளற்கு இடமின்றெனினும், தற்காலத்தில் கிட்டியிருப்பது போன்ற திறன் வாய்ந்த ஒலிக்கருவிகள், மொழியியற் குறியீடுகள் ஏதும் இல்லாதிருந்த அக் காலத்தில் ஒலி நுட்பங்களை உணர்வதிலும், அவற்றைத் தக்கவாறு விளக்குவதிலும் அடிகளார் மேற்கொண்ட உழைப்பினைப்பாராட்டாதிருக்க வியலாது. ''படித்தறியும் விதிகளால் மட்டும் ஒலிகளைப் பிரித்தறிய இயலாது. கேட்டறியும் ஒலியால்தான் இயலும். தமிழர்கள் ஒலிப்பது போன்று, நன்கு கற்றறிந்து ஒலிப்பவர்களைக் காணும் வாய்ப்பற்றவர்களின் விருப்பினை நிறைவேற்ற முயல்கிறேன்''[188] எனக் கொடுந்தமிழ் இலக்கணம் காட்டும் அடிகளாரது உயரிய நோக்கம் சிந்தையிற் கொள்ளற்குரியது.

தமிழ் மொழியின் தற்கால மொழியியற் கொள்கைகளைக் கூர்ந்து நோக்கின், அடிகளாரைத் தமிழ் மொழியியல் முன்னோடி எனக் கூறுவதற்கான வாய்ப்புக்கள் உள. ஏனெனில் சில ஒலியியற்

குறிப்புக்களை முதலிற் றெளிவு பெற விளக்கியவர் அவரே எனலாம். டாக்டர் கால்டுவெல் உயிர்ப்பொலி ஒலிப்பொலி மாற்றுவிதி என ஒன்றை அறிமுகப் படுத்தியுள்ளார். க, ச, த, ப ஆகியன இட வருகைக்கேற்ப மாறுபடுவதாக முன்னர்க் குறிக்கப்பட்ட ஒலி பற்றியதே அவ்விதியாகும். ''இது வட்டாரக் கிளை மொழிகளில் ஏற்பட்ட சிறப்புக் கூறே; சூழ்நிலையால் ஏற்பட்ட மாற்றமோ, இலக்கணிகளால் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டதோ அன்று; மொழியொடு தொடக்கத்திலிருந்தே இருந்து வந்திருக்கும் கூறாகும்[189] என்பர் டாக்டர் கால்டுவெல்.

இவ்வொலி மாற்றக் கூற்றினை அடிகட்கு முன்னர் பதினேழாம் நூற்றாண்டைச் சார்ந்த பல்தேயுசும், சீகன்பால்கு போன்றோரும் குறித்திருக்கின்றனர்.[190] ஆயினும் ''சகரத்தை இணை உரசொலியாகச் சீகன்பால்கு காட்டுகிறார். சூத்ர என்பதனை க்ஷூத்ர என எழுதியுள்ளார்'' எனக் கால்டுவெல் குறித்து அவர்தம் கோட்பாடு மனநிறைவு தருவதாக இல்லை என்பர்.[191] இம்மாற்றத்தை அடிகளார் கொடுந்தமிழ் இலக்கணத்தில் காட்டியுள்ளார் என்னுங் குறிப்பினை, டாக்டர் கால்டுவெல் கூறாவிட்டாலும், அவரது பிற கொள்கைகளைப் பல விடங்களில் தம் ஒப்பியல் நூலில்[192] மேற்கோள்காட்டுவது கொண்டு இக்கருத்தினையும் அவரிடமிருந்து கொண்டிருப்பர் என்று எண்ண இடமுண்டு. அதனின்றும் மேலே சென்று, திராவிட மொழிகளில் அம்மாற்றைக் கால்டுவெல் கண்டு தெளிவாக்கினார்.

பழந்தமிழ் சகரம் அ, ஐ, ஔ ஆகியவற்றுடன் கூடி மொழி முதலாகாமல் நின்றது எனத் தொல்காப்பியம் சுட்டும்.[193] தற்கால மொழியியல் அறிஞர்கள் சகரம் திராவிட மொழிகளில் மொழிமுதலாகா தெனினும் முன்னைத் திராவிடத்தில் மொழிமுதலாகிற்றென்றும் பின்னர் அத்தன்மையை இழந்துவிட்டதென்றும் கூறுவர்.[194] தமிழில் மொழிமுதல் இழக்குந்தன்மை வலுப்பெற்றது என ஆராய்வர். இவ்வறிஞர்களின் ஆய்விற்கு வழிகாட்டி அகராதி எனலாம். அமணர்-சமணர், அமண்-சமண் மதம்[195] எனப் பொருள் விளக்கம் செய்வதில் சமணர், சமன் என்பவற்றின் சகரம் இழந்த வடிவங்களாக அமணர்-அமண் ஆகியனவிளங்கி அத்தன்மையைக் குறிப்பாற் புலப்படுத்துகின்றன அவ்வாறே ஆன்றோர் சான்றோர்[196] ஆகிய சொற்களை அடுத்தடுத்து நிறுத்தி இடையில் னகர எதுகையுடைய வேறு சொற்களைக் கூறாமல் விடுத்தலும், அவற்றிற்குக் கூறப்படும் பொருள்களும் பெரும்வேறுபாடு கொள்ளாதிருத்தலும் சகரம் இழக்குந்தன்மையினை நினைவூட்டுவன. மொழிமுதற் ககரம் சகரமாக மாறும் முன்னைத் திராவிட மொழி இயல்பினை அண்ணச்சாயல் பெறல் என மொழியிய-

லார் ஆய்வர்.[197] கமித்தல் சமித்தல் ஆகிய இரு சொற்கட்கும் பொருள் பொறுத்தல் என்றே கூறப்பட்டுள்ளது.[198] எனவே, இரண்டு சொற்கட்கும் மூலம் ஒன்றாக இருந்து பின்னர் ஒரொலி மற்றோர் ஒலியாக, அஃதாவது ககரம் சகரமாக மாறியிருக்கலாம். அச்சொற்களும் அடுத்தடுத்து நிறுத்தப்பட்டிருக்கின்றன. இச்சொற்கள் அனைத்தும் திராவிடக் குடும்ப மொழிகளைச் சார்ந்தவையாயினும், அன்றித் தமிழுக்கே உரியவையாயினும் திராவிடமொழிச் சொற்கட்கான பொதுவியல்பினைப்பெற்று, அக்குடும்ப மொழிகளுள் ஒன்றான தமிழில் வழங்குவதாகக் கொள்ளலாம். அவ்வாறே காலூரம்,[199] சாலூரம், காலேகம், சாலேகம்[200] போன்றனவும் பெரும்பொருள் வேறுபாடின்றிக் கூறப்பட்டுள்ளன. இச்சொற்களை ஒருங்கே நிறுத்திக் காட்டியிருத்தல் ககரம், சகரமாகமாறியிருக்குந் தன்மையை அடிகளார் உணர்ந்திருப்பதையும் படிப்போரை உணரவைக்கும் நோக்கம் கொண்டிருந்ததனையும் விளக்குகிறது. சேடகம் என்னுஞ் சொல்லுக்குக் கேடகம் என்றே பொருள் கூறவதால்[201] அவ்வகை மாற்றம் பெற்றதாகவே கருத இடமுண்டு.

கொடுந்தமிழ் இலக்கண நூலின் 4, 5- ஆம் பிரிவுகள் சொற்சேர்க்கையில் எழுத்துக்கள் திரிதலையும் மிகுதலையும் கூறுகின்றன. கற்போர்க்குக் கடினமாகா வகையில், தம் செந்தமிழ் இலக்கண நூலிற் காட்டிய புணர்ச்சிவிதிகளைக் காட்டிலும குறைவானவற்றையே 11 முதல் 32–ஆம் விதிகள் முடியக் காட்டுகிறார். நான்காம் பிரிவின் மூன்றாம் பகுதியில், "க, ச, ம, ப ஆகியவற்றின் பின்னர் வரும் லகரம் றகரமாகத் திரியும்; தகரம் வருமாயின் அதுவும் றகரமாகத் திரியும். விடாமல்ச் செய்த தவத்தினால்த் தப்பாமல்க் கதியில் பலனாகும் என எழுதாமல் விடாமற் செய்த தவத்தினாற் றப்பாமற் கதியிற் பலனாகும் என எழுதுவார்"[202] என எடுத்துக் காட்டுவதினின்று சொற்கள் பேச்சு மொழியில் எவ்வாறு உச்சரிக்கப் படுகின்றன வென்பதனையும், எழுத்துவடிவில் எவ்வாறு வேறுபடுகின்றன வென்பதனையும் கூர்ந்து கவனித்த தன்மை புலப்படுகிறது. நூலெங்கணும் புறா பிறா (உ>இ), முடிகிறது முகிகிறது (ட்>க்) தீர்ந்தேன் >தீந்தேன் (ர்>) என்றாற் போன்று மாற்றமடைந்த சொற்கள குறிக்கப்படுகின்றன. ஓரிடத்தில் றகரம், டகரம் போன்று ஒலிக்கப்படுவதைச் சுட்டுகிறார். "றகரம் தனியாக வருமாயில், இரு ரகரங்களைப் போல ஒலிக்க வேண்டும். இரட்டையாக வருமாயின் இரு டகரங்களைப் போல ஒலிக்க வேண்டும்" என்று கூறுகிறார்.[203] சான்றாக, திறம் என்பது திர்ரம் என்றும், குற்றம் என்பது குட்டம் என்றும் ஒலிக்கப்படும் என்கிறார்.[204] தற்காலத்தில் சிலர் இதிலமைந்த 'ற்ற' என்னும் ஒலியினைத் தனியதோர் ஒலியனாகக் கொள்வதற்கு இக்குறிப்புக் காரணமாயிற்றோ

என எண்ண வேண்டியு ளது.[205] இவையெல்லாம் ஒலியனியலின் உருபொலி மாற்றப்பகுதியினை ஒட்டியனவாகும்.

அகராதியில் ஒலி மாற்றம் பெற்று வழங்கிய பல சொற்கள் இடம் பெறுகின்றன. நாஞ்சில்>ஞாஞ்சில், நாலுதல்>ஞாலுதல், நேயம்>ஞேயம், நண்டு>ஞெண்டு, நமன்>ஞமன் போன்ற நகர >ஞகர (ந>ஞ) மாற்றமடைந்த சொற்கள்,[206] ஞாயிறு>நாயிறு, ஞாயில்>நாயில் போன்ற ஞகர<நகர (ஞ>ந) மாற்றங்கண்ட சொற்கள்,[207] விந்து>பிந்து (வ்>ப்), பிச்சு>பித்து (ச்சு>த்து) வென்றி>வெற்றி (ன்>ற்) பழக்கம்>புழக்கம் (அ>உ) போன்ற மாற்றங்கொண்ட சொற்கள் ஆகியன அகராதியெங்கணும் பரந்து கிடக்கின்றன.[208] அம்மனை>தம்மனை என மொழி முதற் றகரம் தோன்றல்[209], பூடு>பூண்டு என மொழியிடை ணகரம் தோன்றல்[210], போன்றனவும், குமணன்>கமுணன் போன்ற ஒலிநய ஒரினத்திரிபுகளும்[211], விசிறி>சிவிறி என ஒலி இடம் மாறலும்[212]. தலைவன்>தலைவி என்பது போன்ற சிறுவன்>சிறுவி[213] என அடைந்த ஒப்புமை நோக்கத் திரிபுகளும் கொண்ட பல்வகை ஒலி மாற்றக் கூறுகள் அடங்கிய சொற்கள் அகராதி முழுவதும் பரந்து கிடைக்கின்றமையான், அடிகளார் ஒலி மாற்றத்தின் அனைத்துக் கூறுகளையும் உணர்ந்து இது மொழியின் ஒலிக்கூறு பற்றிய நூலன்றாதலில் விளக்கம் தாராமல் சொற்களை மட்டும் சுட்டிச் சென்றுள்ளார் எனலாம்.

உருபனியலிற்காக, ஒரு சில பக்கங்களே கொடுந்தமிழ் இலக்கணத்தில் ஒதுக்கப்பட்டிருப்பினும் இலக்கணிகள் அணுகாத முறையில் மொழியியற் சிந்தனையால் அடிகள் உருபனியலை நுணுகி அணுகியிருக்கிறார். 'ஓ' வென்னும் இடைச் சொல்லுக்குரியனவாக ஆறுபொருள்களைத் தொல்காப்பியரும் எட்டுப் பொருள்களை நன்னூலாரும் கூறுவர்.[214] தொன்னூல், விளக்கத்தில் இலக்கண நோக்கில் எட்டுப் பொருள்களையே கூறியிருந்தாலும், கொடுந்தமிழ் இலக்கணத்தில் மொழியியல் நோக்கில் பொருள்வேறுபாடு தருவதாகக் காட்டுகிறார். இலக்கணிகள் ஓகார இடைச்சொல் ஒரே சொல்லில் அமையும் பொழுது ஏற்படும் பொருள் வேறுபாட்டினையே குறிக்க, அடிகள் ஒரு சொற்றொடரில் வெவ்வேறு சொற்களில் ஓகார இடைச் சொல்லை யமைத்துப் பொருள் வேறுபாட்டினைப் புலப்படுத்துகிறார். "நீயெனக்குப் பத்துப்பணந் தந்தாயோ, நீயெனக்குப் பத்துப்பணமோ தந்தாய், நீயெனக்கோ பத்துப்பணந்தந்தாய், நீயோ எனக்குப் பத்துப் பணந் தந்தாய்"[215] என எடுத்துக்காட்டுகள் தந்து வினாப் பொருள் தரும் ஓகார இடைச் சொல் சேருகின்ற சொல்லுக்கியைய பொருள் வேறுபடுத்தும் தன்மையை விளக்குகிறார். மேற்கண்ட எடுத்துக்

காட்டுகளில், ஓகாரம் வருமிடங்களில் அதனை நீக்கிவிட்டு அவ்விடங்களை அழுத்தி ஒலித்தாலே அப்பொருளைப் பெறலாம். அவ்வகைப் பொருட்டன்மை தரும் அழுத்தம் மேலொட்டு, ஒலியழுத்தம் ஆகியவற்றை இற்றைய மொழியியலார் ஏற்கும் வண்ணம் முழுமையாகக் காட்டாவிட்டாலும் ஓரளவு கோடு காட்டிவிட்டதாகக் கொள்ளலாம்.

அகராதியில் உருபனின் வடிவங்களில் ஒன்றாகிய முன்னொட்டைப் பெற்று, வடமொழியினின்று தமிழில் வழங்கும் சொற்கள் இடம் பெறக் காண்கிறோம். சொல்லின் முன்னாற் சேரும் உருபு முன்னொட்டாகும்.[216] அவ்வாறு சேர்வது தமிழுக்கு இயல்பின்று. எனினும் காலப்போக்கில் தற்சமம், தற்பவம் ஆகிய வடிவங்களில் செந்தமிழ் கலந்த வடசொற்களை அடையாளம் காட்டுவது போல் அச்சொற்கள் அகராதியில் இடம் பெறுகின்றன. அஃதோடன்றியும் முன்னொட்டுந்தன்மையினை மொழியியல் நோக்கில் உணர்ந்து கொள்ளவும் வழியாகின்றன. அதிரிசன் போன்றன 'அ' என்னும் முன்னொட்டையும், அதிகுணன் போன்றன 'அதி' என்னும் முன்னொட்டையும் அபவாதம் போன்றன 'அப' என்னும் முன்னொட்டையும் அவரோகணம் போன்றன 'அவ' என்னும் முன்னொட்டையும், அநாதி போன்றன 'அந்' என்னும் முன்னொட்டையும், நிரம்பரன் போன்றன 'நிர்' என்னும் முன்னொட்டையும் பெற்று நிற்கின்றன.[217] முன்னொட்டுக்கள் பற்றிய இச்சிந்தனை மொழியியலாரின் உருபனியற் கோட்பாட்டில் அடங்கும்.

தொடரியலின் சிறப்பினை யுணர்ந்த அடிகள், ''ஒரு செயல் கலைமேம்பாட்டால் எவ்வாறு மேலும் சிறக்கிறதோ, அவ்வாறே ஒரு செய்தி சிறப்புறுவது அதனைக் கூறும் சொற்கள் தொடரும் முறை யானன்றிச் சொற்களாலன்று'' எனக் கூறுகிறார்.[218] தொடரியலுக்காக ஒரு பகுதியைக் கொடுந்தமிழ் இலக்கணத்தில் ஒதுக்கியிருக்கிறார்.

அகராதியில் இலக்கணச் சொற்களுக்குப் பொருள் கூறுங்கால், அச்சொற்கள் இடம் பெறும் தொடருக்கேற்ப, பொருள் வேறுபாடு கொள்ளும் என்பதனைப் புலப்படுத்த அவற்றைத் தொடர்களில், அமைத்துக் காட்டுகிறார். ''கொன்-அச்சம் உ-ம் கொன்முனையிரவூர்; காலம் உ-ம் கொன்வரல் வாடை; பயனின்மை உ-ம் கொன்னே கழிந்தன்றிளமை; பெருமை உ-ம் கொன்னூர் துஞ்சினும் யாந்துஞ் சலமே''[219] எனக் 'கொன்' என்னும் இடைச் சொல்லுக்குக் கூறுவது போன்று பிறவற்றிற்கும் கூறுகிறார் இவை தொடரியல் பகுதியில் அடங்குவன.

கொடுந்தமிழ் இலக்கண ஒன்பதாம் பகுதியில், குறைவினைகள் சிலவற்றைக் கூறும்பொழுது வேண்டாம், மாட்டேன் போன்றவற்றையும் கூறுகிறார். இவைகட்கிடையே உள்ள பொருள் வேறுபாட்டை விளக்குவது சொற்பொருளியற் பகுதியைச் சாரும். "விருப்பமற்ற ஒன்று மரியாதைக் குரியதாயின் அதனை மறுக்க, 'வேண்டாம்' என்றும், மரியாதையற்றதாயின், 'மாட்டேன்' என்றும் கூற வேண்டும்" என்பார்.[220] இது வரலாற்று மொழியியலின் பொருளியற் கூறாகும்.

வரலாற்று மொழியியல் சொற்களின் வரலாற்றையும் ஆயும். சொற்களின் முன்னை வரலாற்றை அறியும் முறைகளுள் அகநிலை ஒப்பீட்டு முறையும் ஒன்று.[221] அகராதியில் இடம் பெறும் சொற்களை அம்முறையில் அணுகினால் அவற்றின் பொருட்டன்மையினை விளங்கிக் கொள்ள ஏதுவாகிறது. பிலவகம்-பிலவங்கம், பதகம்-பதங்கம், புயகம்-புயங்கம் எனக் காணப்படும் சொற்களைக்[222] கொண்டு மூக்கொலியை ஈறாகவுடைய சொற்களில் ஈற்றயலாகவுடைய ககர உயிர்மெய் முதலிலும் அகரவொலியைக் கொண்டிருக்குமாயின் அவ்வகரத்தை யடுத்து தன்னின மூக்கொலியைப் பெறும் எனக் கருதலாம். அகநிலை ஒப்பீட்டாய்வு அடிகளாருடைய நோக்கன்றாயிலும் பொருட்களையும் அவ்வாறு காட்டியிருப்பது நாம் அம்முறையான் ஆய வழிகோலுவதால் வரலாற்று மொழிகளின் ஆய்வு முறைகட்கும் அடிகளார் ஓரளவில் துணையானார் எனலாம்.

ஒப்பின் மொழியியலில் வட்டார மொழியியல் சிறப்பிடம் பெறுகிறது. ஒரே மொழி, இடத்திற்கு இடம் உச்சரிப்பில், சிறு சிறு வேறுபாடுகளுடன் வழங்குவது இயல்பேயாகும். அடிகள் இஃதனை உணர்ந்து, "இந்நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு வகையான பேச்சுமுறை அமைந்துள்ளது. ஒருபகுதியினரின் பேச்சினை, வேறொரு பகுதியினர் வெறுக்கலாம். படித்தவர் எங்கும் பேசிக்கொண்டிருக்கும் பேச்சு, ஒரு மூலையில் கீழ்நிலையில் உள்ளோருக்குத் தேவையற்றதாகலாம்" எனக்கூறுகிறார்.[223] அத்தகைய வட்டாரமொழிகளைக் கொடுந்தமிழ் இலக்கணத்தில் அடிகள் இயன்ற அளவில் ஆங்காங்கே காட்டுகிறார்.

மூவிடப் பன்மைப் பெயர்களை விளக்குகையில், "பிராமணர்கள், இவர்கள் அவர்கள் என்பதற்குப் பதில் 'இவாள்' 'அவாள்' என எவ்விதிக்கும் உட்படாத பன்மைகளைக் கூறுகின்றனர்" என்கிறார்[224]. வினைகளின் இறந்தகால வடிவங்கட்கான விதிகளைக் கூறும்பொழுது, 'தாழ்ந்த வகுப்பினர் 'அது வந்தது' என்பதற்கு மாறாக 'அது

வந்துச்சு' எனக் கூறுவர்" என்பார்.[225] உறவுப் பெயர்களிற்கூட அன்னையைக் குறிக்கும் தாய், ஆயி, அம்மா போன்றனவற்றையும், உடன்பிறந்து மூத்தாளைக் குறிக்க அக்காள், தமக்கை, ஆச்சி போன்றனவற்றையும், கணவனைக் குறிக்கப் புருஷன், பத்தா, ஆம்புடையான் ஆகியவற்றையும், மனைவியைக் குறிக்கப் பெண்சாதி, பெண்டாட்டி,இஸ்திரி ஆகியவற்றையும் சுட்டுகிறார்.[226]

அகராதியில், பூனை என்பதனைக் குறித்துப் பூசை, பூஞை, பூனை, விடருகம், வெருகு ஆகிய சொற்கள் கூறப்படுவதும்,[227] பலாவினைக் குறிக்க, பலவு, வருக்கை எனக் சொல்லப்படுவதும்,[228] அனைத்தும் என்னும் பொருளில் முழுது, முழுதும், முழுமை, எல்லாம், எல்லாமும் எனக் காட்டப்படுவதும், [229] மாதளையைச் சுட்ட மாதுலுங்கம், மாதுளங்கம், மாதுளம் எனப்படுவதும், [230] காலன் என்னும் பொருள்பட இயமன், சமன், ஞமன், நமன், நாசன் ஆகியவற்றைக் காட்டுவதும்[231] நட்பினைக் குறிக்க சிநேகம், நேசம், ஞேயம், நேயம், ஆகியவற்றைக் கூறுவதும், [232] பிறவும் சொல்மாறுபாடு முழுவதும் கொண்டனவல்ல; ஒரு சிலவற்றை நீக்கிப் பிறவெல்லாம் ஒலி மாறுபாடு கொண்டனவே. எனவே இவையெல்லாம் கிளை மொழிகளாகத் தமிழகம் எங்கணும் ஆங்காங்கு வழங்கி வந்தனவாக இருத்தல் வேண்டும். கிளை மொழியியல் என்ற அடிப்படையில் விரிவாக ஆராயப்படாவிட்டாலும், பல பகுதிகளிலும் வழங்கிய சொற்களைக் கண்டு தொகுத்த பெருமை அடிகளாருக்கு உண்டு.

ஒப்புமை மொழியியலின் பகுதியாக, இந்தோ ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்த லத்தீன் மொழியைத் திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்த தமிழோடு கொடுந்தமிழ் இலக்கணத்தில் ஒப்புமைப்படுத்திக் காட்டுகிறார்.[233] பிரெஞ்சு, போர்த்கீஸ், ஹீப்ரு போன்றவற்றையும் ஆங்காங்கே தமிழோடு ஒப்புமைப்படுத்துகிறார்.[234]

பொருள் அகராதியில் தமிழ் என்பதற்குத் திரமிடம், திரவிடம், திராவிடம், திராமிடம் எனப் பொருள் காட்டுகிறார்.[235] பின்னர், திரவிடம்-ரு: திரவிடம், ஆந்திரம், கன்னடம், மகாராட்டிரம், கூர்ச்சரம் எனக் குறிக்கிறார்.[236] நிகண்டுகள், இலக்கியங்களைக் குறிக்கும் பொழுது திராவிடக்குடும்பத்துத் தமிழ்மொழி, இந்தோ ஐரோப்பியக் குடும்பத்து வடமொழி ஆகியவற்றில் உள்ளவற்றை மட்டுமே காட்டுகிறார்.[237] இக்கருத்துக்களெல்லாம் ஒப்புமை மொழியியல் அடிப்படை கொண்டனவேயாம். இவற்றை நோக்கி

அகராதி ஆசிரியராய அடிகளார் தம் அகராதிக் குறிப்புக்களால் தற்கால மொழியிலார், தமிழைத் தம் நோக்கில் அணுகுவதற்குரிய சிந்தனைகளை வழங்கியிருக்கிறார் என உணரலாம்.

மேற்கோள்கள் :

1 நன்னூல், நூற்பா, 141.
2 Meenakshisundarm, K., P. 168.
3 பொன்னரசு, இரா., பக். 119.
4 தொன்னூல் விளக்கம், நூற்பா, 1, உரை.
5 நன்னூல், நூற்பா, 7.
6 தொல்காப்பியம், நூற்பா, 109; நன்னூல், நூற்பா, 154.
7 தொன்னூல் விளக்கம், நூற்பா, 38, உரை.
8 சதுரகராதி, பெயர், பக். 1, 5, 72, 102, 121, 177, 178.
9 தொன்னூல் விளக்கம், நூற்பா, 37,உரை.
10 தொல்காப்பியம், நூற்பா, 140, உரை.
11 நன்னூல், நூற்பா, 163, உரை.
12 ...., 156, உரை.
13 தேம்பாவணி, படலம், 15, பாடல், 187.
14 சதுரகராதி-1, பெயர், பக். 131, 132.
15 ....,129.
16 ....,92.
17 தொன்னூல் விளக்கம், நூற்பா, 37, உரை.
18 சதுரகராதி ..1, பெயர், பக். 134.
19 ...., 168.
20 ....,79, 80.
21 ...., 169, 78.
22 ...., தொடை, பக். 36.
23 பின்னிணைப்பு-4
24 தொன்னூல் விளக்கம், நூற்பா, 86, உரை.
25 சதுரகராதி-1, பெயர், பக். 36, 64, 86; பிற்சேர்க்கை, பக். 30 பெயர் பக். 179.
26 ...., 104.
27 தொன்னூல் விளக்கம், நூற்பா, 86, உரை.
28 சதுரகராதி-1, பெயர், பக். 68, 179, 87, 105, 76, 94, 73, 52, 50, 178, 105, 7, 84.
29 தொன்னூல் விளக்கம், நூற்பா, 86, உரை.

30 சதுகராதி-1, பெயர், பக். 127, 120, 6, 72, 6, 11, 100; பிற்சேர்க்கை, 19, 172, 14, 100, 4, 7, 80, 32, 120, 28.
31 நன்னூல், நூற்பா 147, ஆறுமுகநாவலர், காண்டிகையுரை.
32 சதுரகராதி- 1, பெயர், பக். 19, 150, 105, 156, 169, 130, 70, 61, 91, 96, 91, 121, 109, 125, 69, 123, 102, 70, 170, 124, 166, 147, 9, 158, 140, 105, 149, 132 65.
33 சதுரகராதி-1, பெயர், பக். 73, 72.
34 ……… ……, 73.
35 நன்னூல் நூற்பா, 148, 149, ஆறுமுக நாவலர், காண்டிகையுரை.
36 சதுரகராதி-1 பெயர், பக். 8, 22, 30, 24, 30, 21, 95, 166, 54, 160, 55, 80, 108, 105, 8, 10, 70, 41, 51, 121, 101, 5, 15..
37 Grammatica Latino-Tamulica p. 2.
38 ………………,5.
39 ஆபிரகாம் அருளப்பன், பக். 51.
40 A grammar of the common Dialect of Tamilan Language, p. 82
41 சதுரகராதி-1, பெயர், பக். 24; பிற்சேர்கை, பக். 2.
42 …… ………,14, 25.
43 Clavis, p. 120.
44 ………………,1, 82, 83.
45 ………………,160, 161.
46 சதுரகராதி-1, தொடை, தொடக்கச் செய்யுள்.
47 …… ……., பக். 137.
48 A grammar of High Tamil, p.3.
49 தொல்காப்பியம், நூற்பா, 78 நன்னூல், நூற்பா, 107
50 தொன்னூல் விளக்கம், நூற்பா, 10, உரை.
51 A grammar of High Tamil p. 17.
52 தொல்காப்பியம், நூற்பா. 81.
53 சதுர்கராதி — 1, பெயர், பக். 29, 138.
54 ………………, 12, 24, 31, 101
55 நன்னூல், நூற்பா, 148.
56 தொல்காப்பியம், நூற்பா, 65.
57 ………………, 34, 35, 411; நன்னூல், நூற்பா, 93, 206.
58 நன்னூல். நூற்பா, 162.
59 A grammar of High Tamil p.18.
60 சதுரகராதி — 1, பெயர், பக், 159.
61 ……… … …, 21.
62 தொல்காப்பியம், நூற்பா, 438.

63 ...., 455.
64 நன்னூல், நூற்பா, 188.
65 ...., 189.
66 தொல்காப்பியம், நூற்பா, 987.
67 நன்னூல், நூற்பா, 389.
68 தொல்காப்பியம், நூற்பா, 1429, உரை.
69 அகநானூறு, 7—11.
70 ...., 20—16.
71 ...., 86—22.
72 ...., 96 –10.
73 புறநானூறு, 70.
74 ....150 —7.
75 ....152 —23.
76 ....206 —6.
77 ....217 —6.
78 ....285 —16.
79 ....311 —6,
80 ....394—14.
81 திருக்குறள், 188.
82 ...., 24.
83 ...., 429, 848, 1307.
84 தொல்காப்பியம், நூற்பா, 1197.
85 சதுரகராதி—1, தொகை, பக். 3.
86 தொன்னூல் விளக்கம், நூற்பா, 94 உரை
87 அகராதி, நிகண்டு, நூற்பா, 102.
88 ...., 109.
89 சதுரகராதி —1, பெயர். பக். 1,5,5,6,6.
90 .... 166.
91 தொன்னூல் விளக்கம், நூற்பா, 256, உரை.
92 சதுரகராதி—1, பெயர், பக். 120.
93 ...., 23.
94 ...., 5.
95 ...., 1
96 பின்னிணைப்பு-23.
97 சதுரகராதி-1, பெயர், பக். 66
98 ...., 66.
99 Meenakshisundaram, K., P. 317.
100 ...., 335.
101 தேம்பாவணி, வளன் சனித்த படலம், பாடல், 57.
102 ...., 59.

103 .... திருமணப்படலம், பாடல், 106.
104 .... பாயிரம், பாடல், 13.
105 நன்னூல், நூற்பா, 49.
106 ....
107 சதுரகராதி 1, பாயிரம்.
108 நன்னூல், நூற்பா., 49.
109 சதுரகராதி—1, ஆக்கியோன் வரலாறு.
110 தேம்பாவணி, முடி சூட்டு படலம், பாடல், 132,
111 சதுரகராதி-1, முன்னுரை.
112 ...., பாயிரம்.
113, தேம்பாவணி, முடி சூட்டு படலம், பாடல், 131.
114 சாமா, ஜி. வி. ஐ., பக். 40.
115 தொன்னூல் விளக்கம், நூற்பா,
116 தேம்பாவணி, பாயிரம், பாடல், 1.
117 சதுரகராதி-1, பாயிரம்.
118 தண்டியலங்காரம், நூற்பா, 3.
119 ....
120 தேம்பாவணி, வளன் சனித்த படலம், பாடல், 55.
121 .... முடிசூட்டு படலம், 133.
122 ஞானபிரகாசம், வி. மி, பல்கலைக்கழகச் சொற்பொழிவு,பக். 300
123 ரம்போலோ மாஸ்கரனேஸ், பக்.93.
124 திருக்காவலூர் அ டை க் க ல நாயகிமேல் வெண்கலிப்பா, கண்ணி, 50.
125 சதுரகராதி-1, ஆக்கியோன் வரலாறு.
126 திருக்காவலூர் கலம்பகம், பாடல் 1, முதற்றரவு, வரி 3- 4.
127 ...., காப்புச் செய்யுள், வரி. 1.
128 சதுரகராதி – 1, ஆக்கியோன் வரலாறு.
129 அடைக்கலமாலை, கண்ணி, 60.
130 .... 51. 52.
131 அடைக்கல நாயகிமேல் வெண்கலிப்பா, கண்ணி, 50.
132 A grammar of High Tamil, p. 124.
133 திருப்பாடல்கள், பக். 50.
134 சதுரகராதி – 1, பொருள், பக். 50.
135 .... பெயர், பக். 23.
136 .... தொடை, பக். 32.
137 .... பெயர், பக். 71.
138 .... 12.
139 .... 126.
140 ...., 150.
141 ...., பொருள், பக். 28.

142 ……………… , 38.
143 ……………… , பெயர் , பிற்சேர்க்கை, பக். 20.
144 ………………… , 24.
145 …………… , பெயர் , பக். 20.
146 ……………… , தொடை, பக். 121 , 39.
147 திருக்குறள் , 8 , 872 , 913.
148 ……………… , 9 , 306 , 28.
149 Meenakshisundaram, K., p. 318.
150 Joseph Dahlman, p. 2.
151 A grammar of the common dialect of the Tamil Language, P. V
152 ……………… ,p. III.
153 ……………… , p. 9.
154 ……………… , p. 11.
155 ………………,
156 ………………,
157 சதுரகராதி-1, பெயர், பக். 123.
158 ………………, தொகை,பக். 20.
159 ……………… ,பெயர், பக். 169, 172.
160 ………………,179.
161 ………………,தொடை,பக் .67
162 ………………,பெயர், பக். 7,
163 ………………,பெயர்,பிற்சேர்க்கை, பக். 1.
164 ………………,பெயர்,………………, 17.
165 A grammar of the common dialect of the Tamil Language, p. 2.
166 தொல்காப்பியம், பனம்பாரனார் பாயிரம்,
167 A garmmar of the common dialect of the Tamil Language, p. 10.
168 A grammar of the common dialect of the Tamil Language, p. 10
169 ………………
170 சதுரகராதி-1, பெயர், பக்.154,
171 ………………,35.
172 இன்னாசி, சூ.1,பக். 9
173 சதுரகராதி-1, பக். 86
174 ………………,13.
175 ………………,1,19,26
176 ………………,4-
177 Meenakshisundaram, K. p. 6.
178 A grammar of the common dialect of the Tamil Language, p.6-7

179 சதுரகராதி-1, பெயர், பக். 108.
180 இன்னாசி, சூ. 1, பக். 97, 98.
181 ....,
182 தொன்னூல் விளக்கம், நூற்பா, 13, உரை.
183 சதுரகராதி-1, பெயர், பக். 153
184 மூடநயனடி......Gleason Jr. P. 263.
185 A grammar of the common dialect of the Tamil Language, p. 9-10.
186 A grammar of the common dialect of Tamil Language, p.14.
187 சதுரகராதி-2, பெயர், பக். 162, 105, 84.
188 A grammar of the common dialect of the Tamil Language, p. 11
189 Caldwell, Dr. P. 139.
190 Meenakshisundaram, T. P. p.,146.
191 Caldwell, Dr., P. 141.
192 Caldwell, Dr., P., 130, 215, 224, 474, 478.
193 தொல்காப்பியம், நூற்பா, 62.
194 இன்னாசி, சூ 2, பக். 162.
195 சதுரகராதி-1 பெயர், பிற்சேர்க்கை, பக். 2.
196 .... தொடை, பக். 137.
197 இன்னாசி, சூ. 2, பக். 160.
198 சதுரகராதி -1, தொடை, பக். 38.
199 .... , 127.
200 ....
201 ....பெயர், பக். 85.
202 A grammar of the common dialect of the Tamil Language, p. 15
203 .... ,
204 .... , 10.
205 முத்துச்சண்முகம், பக். 35.
206 சதுரகராதி-1. பெயர், பக். 108 87.
207 ....
208 ....பெயர் பக். 176, பிற்சேர்க்கை, பக். 25, 24 26.
209 ....பெயர், பக். 8, 90.
210 ...., 134.
211 ...., 58.
212 ....,169, 78.
213 ...., 78, 79.
214 தொல்காப்பியம், நூற்பா, 741: நன்னூல், நூற்பா, 423.
215 A grammar of the common dialect of the Tamil Language, p. 102,
216 இன்னாசி, சூ, 2. பக். 13

217 சதுரகராதி-1, பெயர், பக்., 5, 4, 6, 11. 5, 100.
218 A grammar of the common dialect of the Tamil Language, p. 68.
219 சதுரகராதி-1, பெயர், பக்., 66.
220 A grammar of the Common dialect of Tamil Language, p. 62.
221 இன்னாசி, சூ., 2, பக். 172
222 ...., 129, 108, 131-132.
223 A grammar of the common dialect of Tamil Language, p. 143.
224 ...., 35.
252 ...., 49.
226 ...., 131.
227 சதுரகராதி...1, பெயர், பக். 134, 170, 176.
228 ...., 121, 163.
229 ...., பிற்சேர்க்கை, பக். 29.
230 ...., 148.
231 ...., 53, 21, 71, 87, 106, 108.
232 ...., பிற்சேர்க்கை, பக். 23.
233 A grammar of the Common dialect of Tamil Language, p. 54
56, 58, 68-74, 97, 116.
234 ...., 12, 73, 75.
235 சதுரகராதி-1, பொருள், பக். 39.
236 ...., தொகை, பக். 106.
237 பிங்கலந்தை (தமிழ்), அமரம் (வடமொழி)

இயல் 9

அடிகளார் அகராதிகளுள் சதுரகராதி

1. அடிகளார் படைத்த அகராதிகள்

சதுரகராதி தவிர வேறு சில அகராதிகளைப் படைத்துள்ளார். அவை இருமொழி, மும்மொழி அகராதிகளாய் உள்ளன. அவ்வகை அகராதிகளுள் எவ்வெவற்றை அடிகளார் படைத்துள்ளார் என்பதில் உறுதி கூற இயலவில்லை. ஏனெனில், அகராதிகள் பற்றிக் குறிப்பிடுவோர் ஒவ்வொருவரும் அடிகளாருடைய அகராதிகளின் எண்ணிக்கையில் வேறுபடுகின்றனர்.

கா. மீனாட்சிசுந்தரம் சதுரகராதி தவிர, தமிழ்—லத்தீன் பேச்சுமொழி அகராதி, போர்த்கீஸ்—லத்தீன்—தமிழ் அகராதி, தமிழ்—லத்தீன் அகராதி, லத்தீன் பேச்சுமொழி அகராதி, தமிழ்—பிரெஞ்ச் அகராதி, லத்தீன்—தமிழ் அகராதி, தமிழ்—ஆங்கில அகராதி ஆகியவற்றைச் சுட்டுகிறார்.[1] சுந்தரசண்முகனார் தமிழ்—லத்தீன் அகராதி, லத்தீன்-தமிழ் அகராதி, தமிழ் - பிரெஞ்ச் அகராதி, போர்த்கீஸ்— தமிழ்—லத்தீன் அகராதி, தமிழ்—ஆங்கில. அகராதி, வட்டார வழக்குத் தமிழ் அகராதி ஆகியவற்றைக் குறிக்கிறார்.[2] பெஸ்அடிகள் தமிழ்-லத்தீன்—பேச்சுமொழி அகராதி, தமிழ்—பிரெஞ்ச் அகராதிகள் மூன்று, தமிழ்—ஆங்கில அகராதி, தமிழ்—லத்தீன் பேச்சுமொழி அகராதியின் இரண்டாவது பாகமாக அமைந்துள்ள போர்த்கீஸ்—லத்தீன்—தமிழ் அகராதி ஆகியவை[3] பற்றிக் குறிப்பிடுகிறார். அகஸ்தியலிங்கமும் சக்திவேலும் 'A Bibliography of Dravidian Linguistics' என்னும் நூற்பட்டியலின் அகராதிகள் என்னும் பகுதியில், 3721 முதல் 3728 முடிய 8 அகராதிகளைச் சுட்டுகின்றனர். அவை அனைத்தும் முன்குறிப்பிடப்பட்டவற்றுள் அடங்குவனவே.

பெஸ் அடிகள் குறிப்பிடும் தமிழ்—பிரெஞ்ச் அகராதிகள் மூன்றனுள் இரண்டு அவர் பெயரில் வழங்கப்பட்டாலும் அவரால் படைக்கப்பட்டனவல்ல என்றும், அவரது தமிழ்-லத்தீன், போர்த்கீஸ்—லத்தீன்—தமிழ் அகராதிகளிலிருந்து சமயத்தொண்டர்களால் தொகுக்கப்பட்டனவென்றும் வின்சான் கூறுவதை ஏற்றுக் கொள்கிறார்.[4] எனவே, அடிகளாரது அகராதிகளாக பெஸ் அடிகள் கருதுவன தமிழ்—லத்தீன் பேச்சு மொழி அகராதி, தமிழ்—பிரெஞ்ச் அகராதி, தமிழ்—ஆங்கில அகராதி, போர்த்கீஸ்—லத்தீன்—தமிழ் அகராதி ஆகியனவே.

கா. மீனாட்சி சுந்தரம் பெஸ் அடிகள் கூறியதிலும் அதிகமாக பொதுத் தமிழ் அகராதி, லத்தீன் பேச்சுமொழி அகராதி, லத்தீன்-தமிழ் அகராதி ஆகியனவற்றைக் குறிக்கிறார். சுந்தர சண்முகனார் பெஸ் அடிகள் குறிப்பிடாத லத்தீன்-தமிழ் அகராதி, வட்டார வழக்குத் தமிழ் அகராதி ஆகியவற்றைக் காட்டுகிறார். சுந்தர-சண்முகனார் நூல்களில் அவ்வகராதிகளின் பெயர்களை மட்டும் சுட்டு-கின்றனரன்றி வேறொன்றும் கூறவில்லை. எனவே அவை வழக்கில் இல்லை எனத் தெரிகிறது. மீனாட்சி சுந்தரம் அடிகளாரது பொதுத் தமிழ் அகராதி பற்றி விளக்குகிறார்.[5] அப்பொதுத்தமிழ் அகராதி தமிழ்-லத்தின் அகராதியேயாம். பொதுத் தமிழ் எனக் கருதப்படு-கின்ற பேச்சுமொழிச் சொற்களே அதில் இடம் பெறுகின்றன ஆதலின் லத்தீன் பேச்சுமொழி அகராதி என்பதும் அஃதேயாம் எனப் பெறப்படுகிறது. எனவே மீனாட்சிசுந்தரம் கூறுகிற அகராதிகளுள் லத்தீன்-தமிழ் அகராதி மட்டும் பெஸ் அடிகள் குறிப்பிடாததாகும். சுந்தரசண்முகனார் தம் நூலில் வட்டாரவழக்குத் தமிழ் அகராதி பற்றி விளக்கம் ஏதுமின்றிப் பெயர்மட்டுமே தந்துள்ளார். வட்டார வழக்குத் தமிழ்ச் சொற்கள் அடங்கியது தமிழ்-லத்தீன் பேச்சுமொழி அகராதியேயாம். எனவே, அவர் அதிகமாகக் காட்டுவதும் லத்தீன்-தமிழ் அகராதியேயாம். அதுவும் கிடைக்கவில்லை எனக் கூறுகிறார்.[6]

லத்தீன் தமிழ் அகராதியும், தமிழ் ஆங்கில அகராதியும் வேதியரொழுக்கம் என்னும் நூல் முன்னுரையில் முத்துச்சாமி பிள்ளையால் குறிப்பிடப்படுகிறதன்றி வழக்கில் இல்லை என கா. மீனாட்சி சுந்தரம் குறிப்பிடுகிறார்.[7] எனவே, லத்தீன்...தமிழ் அகராதியை நேரில் கண்டதாக யாரும் குறிப்பிடவில்லை. தமிழ் ஆங்கில அகராதி பற்றிச் சுந்தரசண்முகனார் பெயர் குறிப்பிடுவது தவிர வேறொன்றும் கூறவில்லை.[8] பெஸ் அடிகளும் வேதியர் ஒழுக்கம், 1844—ஆம் ஆண்டு பதிப்பு முன்னுரையில், 17 ஆம் எண்ணாக மறைத்திரு எலிஜா ஹலால் குறிக்கப்படுகிறது[9] என்று மட்டுமே கூறுவதால் அந்நூலினையும் யாரும் கண்டதாகத்

தெரியவில்லை. எனவே அனைவரது குறிப்புக்களின்படி சதுரகராதி, தமிழ் - லத்தீன் பேச்சுமொழி அகராதி, போர்த்கீஸ் - லத்தீன் - தமிழ் அகராதி, தமிழ் – பிரெஞ்ச் அகராதி ஆகிய நான்கே வழங்கி வருவது உறுதியாகிறது.

தமிழ்—பிரெஞ்ச் அகராதி அடிகளார் பெயரால் வழங்கப்படுவது ஆயினும் அஃது அடிகளாரால் படைக்கப்பட்டதுதானா என்பதில் ஐயம் உண்டாகிறது. இவ்வகராதியில் தமிழ்ச் சொல்லுக்குப் பிரெஞ்ச்சுச் சொல்லால் பொருள் விளக்கம் செய்யப்படுகிறது. ஆசிரியர் அடிகளார் என்றும், ஆக்கப்பட்ட ஆண்டு கி. பி. 1744 என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த அகராதி மிகவும் அழகாகக் கையால் எழுதப்பட்டு 1866-ஆம் ஆண்டில் எழுதியதை அப்படியே படியெடுக்கும் 'சைகிளோஸ்டைல்' பொறி மூலம் பதிப்பிக்கப்பட்டுள்ளது.[10]

தமிழ்-லத்தீன் அகராதியே பிரெஞ்ச் மொழி பெயர்ப்பாக வந்துள்ளது.[11] பிரெஞ்ச் மொழிபெயர்ப்பில் சில வேறுபாடுகள் உள்ளன. அடிகளார் எழுதிய லத்தீன் முன்னுரையில் லத்தீன் மொழியின் பயன் பற்றிக் குறிப்பிடப்படும் பகுதி பிரெஞ்ச் மொழி பெயர்ப்பில் விடுபட்டுள்ளது. கூர்ந்து ஆராய்ந்தால் மூலத்தில் உள்ள விளக்கங்கள் சிலவும் மொழிபெயர்ப்பில் காணப்பட்டில. அவ்வகராதியின் செல்வாக்கு மூலமாகிய தமிழ்-லத்தீன் அகராதி வெளியிடப்பட்ட ஆண்டாகிய 1744-இல் பிரெஞ்ச் மொழி பெயர்ப்பும் வெளிவரக் காரணமாயிருந்திருக்கலாம். பின்னர் மொழிபெயர்ப்பு நிகழ்ந்திருந்தாலும் மூலம் வெளியான ஆண்டைக் குறிப்பதே தக்கது எனக் கருதியும் குறித்திருக்கலாம்.[12]

எவ்வாறேனும் அம்மொழி பெயர்ப்பு அடிகளாருடைய தனிப்பட்ட படைப்பு எனக் கருதுதற்கில்லை. ஆதலின் அடிகளார் படைத்த அகராதிகள் பலவாறாகக் கூறுப்பெறினும் அவர்தம் படைப்புக்கள் என உறுதிபெறத் தக்கவை சதுரகராதி, தமிழ்-லத்தீன் பேச்சுமொழி அகராதி, போர்த்கீஸ்- லத்தீன்- தமிழ் அகராதி ஆகிய மூன்றேயாகும்.

2. சதுரகராதியும் தமிழ்- லத்தீன் பேச்சுமொழி அகராதியும்

அடிகளார் படைத்தஅகராதிகளுள், செந்தமிழ் மொழிக்கெனப் படைக்கப்பட்ட சதுரகராதி முதல் அகராதியெனில், பேச்சு மொழிக்கெனப்படைக்கப்பட்ட தமிழ் – லத்தீன் பேச்சுமொழி அகராதியும் அதனையொட்டிய போர்த்கீஸ்-லத்தீன் - தமிழ் அகராதியும் இறுதி

அகராதிகளாகும். இருபதாம் நூற்றாண்டில் அகராதியில் பெற்றுள்ள பெருவளர்ச்சிக்கு அடிகோலியது சதுரகராதியெனில், அகராதிகளில் பல்வேறு வகைகளுக்குக் கால்கோல் இட்டது தமிழ்-லத்தீன் பேச்சு மொழி அகராதியெனலாம். ஏனெனில், சொற்பிறப்பகராதி, ஒலிக் குறிப்பகராதி, உவமையகராதி, பழமொழியகராதி என இன்னோ-ரன்ன வகைகளில் தோன்றியுள்ள வற்றிற்குத் தோற்றுவாயாகத் தமிழ் லத்தீன் பேச்சுமொழி அகராதி அமைந்திருத்தல் சாலும்என்பதற்கான குறிப்புக்கள் அவ்வகராதி எங்கணும் பரந்துகிடக்கின்றன.

இவ்வகராதி முன்னுரையில் 30 ஆண்டுகள் அடிகளார் மதுரை மிஷனரியில் பணியாற்றியிருப்பதாகக் குறிப்பிடப்படுகிறது. அடிகளார் மதுரை மிஷனுக்கு 1711- ஆம் ஆண்டு. மே, 8-ஆம் நாள் வந்து சேர்ந்தார் என அவரது கடிதத்தால் தெரியவருகிறது.[13] அதிலிருந்து 30 ஆண்டுகளைச் சேர்த்தால் 1741, அல்லது 1742- இல் இவ்வகராதி வெளிவந்திருக்கலாம் என பெஸ் அடிகள் கருதுகிறார்.[14]

இவ்வகராதியில் தமிழ் ஆண்டுகள் எனக் கருதப்படுகின்ற 60 ஆண்டுகளில் ஒன்றன் பெயர் அகராதியில் இடம் பெறுமேல் அதற்-கிணையான கிறிஸ்தவ ஆண்டும் குறிப்பிடப்படுகிறது. துந்துபி[15] என்னுஞ் சொல்லுக்குத் தமிழ் ஆண்டுகள் அறுபதில் 56வது ஆண்டு, 1742- இல் வந்தது, 1802- இல் வரும் எனக் குறிப்பிடப்படுகிறது. ருத்திரோற்காரி[16] என்னும் சொல்லுக்கு 57-வது ஆண்டு, அது இவ்வாண்டு எனக் குறிப்பிடப்படுகிறது. ரத்தாஷி[17] என்னுஞ் சொல்லுக்கு 58- வது ஆண்டு, 1744- இல் வரும் எனக் கூறப்படுவதால் அகராதி 1743- இல் இயற்றப்பட்டதெனக் கொள்ள இடமிருக்கிறது.

ஆயின், தமிழ் - லத்தீன் பேச்சுமொழி அகராதி படைத்த ஆண்டு கி. பி. 1744 என்பதற்கு அவர்தம் கைப்பட எழுதிய குறிப்புச் சான்றாக அமைகிறது. அவ்வகராதியின் கையெழுத்துப்படி பிரிட்டீஷ் பொருட்காட்சியில் உள்ளதென்னக் கூறுகிறார் ஆல்பர்டின் காவுர்.[18] அப்படியின் முதற்பக்கத்தில் ஆசிரியர் பெயரும் ஆக்கிய ஆண்டும் அடிகளார்தம் கைப்பட எழுதப்பட்டு உள்ளன. அதன் புகைப்படம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. மேலும் பம்பாயில் உள்ள இந்திய வரலாறும் பண்பாடும் பற்றிய ஹீராஸ் அடிகள் பெயர் கொண்ட ஆராய்ச்சி நிறுவனம் இண்டிகா என்னும் வெளியீட்டில்.[19] அண்மையில் கண்டெடுக்கப்பட்ட கையெழுத்துப்படியில் தலைப்புப்-பக்கம் என ஓர் அகராதியின் பக்கத்தை வெளியிட்டிருக்கிறது. இது அடிகளாரது மூலப்படியினின்று படியெடுத்ததெனத் தெரிகிறது. ஏனெனில் தலைப்பின் இறுதியில் ஆண்டைக் குறிக்கும்பொழுது 'A.D. MDCCXLLV' எனப் பிரிட்டீஷ் பொருட்காட்சிப்படியில் இருக்க,

ஹீராஸ் ஆராய்ச்சிப்படியில் 'Dni MDCCXLIV' என உள்ளது. ஆக்கியோன்பெயர் பொருட்காட்சிப் படியில் மூன்று வரிகளில் இருக்க ஆராய்ச்சி நிறுவனப்படியில் இரண்டு வரிகளில் உள்ளது. தாம் சார்ந்த சபையைக் குறிக்க 'Societatis' என முழுச்சொல் ஆராய்ச்சி நிறுவனப்படியில் காணப்படப், பிரிட்டீஷ் பொருட்காட்சிப்படியில் 'soc' எனச் சுருக்கமாகக் காணப்படுகிறது. எவ்வாறாயினும் இவற்றால் அடிகளார் தமிழ் - லத்தீன் பேச்சுமொழி அகராதியை ஆக்கிய ஆண்டு கி. பி. 1744 என்பது உறுதியாகிறது. எனவே அகராதியில் ருத்திரோற்காரி என்னும் சொல்லுக்கு இவ்வாண்டு எனக் குறிப்பது 1743- ஆக இருப்பினும் அவ்வகராதி அவ்வாண்டில் முடிவு பெறும் நிலையில் தயாராகிக் கொண்டிருந்து 1744 - இல் வெளியிடப் பட்டிருக்கும்.

கொடுந்தமிழ் இலக்கண முன்னுரையால் செந்தமிழ், கொடுந்தமிழ் ஆகியவற்றுக்குத் தனித்தனியே அகராதி படைக்க வேண்டும் என்னும் அவா தெரிய வருகிறது. சதுரகராதியின் முன்னுரையால் அவற்றை வெளியிடத் தாமதமாயிற்றென உணர்ந்தது தெரிகிறது. அவற்றைக் கொண்டு கொடுந்தமிழ்ப் பேச்சு மொழி அகராதிப் பணியில் பல ஆண்டுகள் ஈடுபட்டிருந்திருக்க வேண்டும். எனினும் பயன் 1744 - இல் தான் கிட்டியது. இதனினின்று, அடிகளார் இவ்வகராதி படைக்க மேற்கொண்ட முயற்சி தெளிவாகிறது. அதனை அடிகளாரே அவ்வகராதி முன்னுரையில், ''இப்பணி அயராத பளுவான பணியாக இருந்தது'' எனக் குறிப்பிடுகிறார்.

சதுரகராதிக்கு நிகண்டுகளை ஆதாரமாய்க் கொண்டதுபோல இவ்வகராதிக்குப் பிறிதொரு தமிழ் - லத்தீன் அகராதியைப் பயன் படுத்திக் கொண்டார். அவ்வகராதியாசிரியராகிய ஓரயிஸ் நோபல் டி போர்சிஸ் என்பாரை நன்றியுணர்வோடு தம் அகராதி முன்னுரையில் புகழ்கிறார். வயதான காலத்தில் கடவுளின் மகிம்மைக்காகத் தம் பணியைச் செய்யத் துணிவாக இறங்கியதாகவும், தம்மீது இப்பளுவைச் சுமத்திய கடவுள் அதற்குரிய பலத்தை அருளினர் எனவும், அவர்தம் சிறப்பான வரத்தால் மட்டுமே இப்பணி முடிந்ததெனவும் இறைவனையும் நன்றியுணர்ச்சியோடு நினைக்கிறார்.

தமிழ்-லத்தீன் பேச்சுமொழி அகராதியில் முதலில் தமிழ்ச் சொற்கள் தமிழ் அகர நிரன்முறையில் நிறுத்தப்பட்டு அவற்றிற்குரிய பொருள்கள் லத்தீன் மொழியில் கூறப்படுகின்றன. சில விடங்களில் பிரெஞ்சிலும், போர்த்துகீஸிலும் பொருளுக்கு விளக்கம் தரப்படுகின்றது. ஏறத்தாழ 9000 சொற்கள் இடம் பெறுகின்றன. ''கொடுந்தமிழ்ச் சொற்களுக்கான அவ்வகராதியில் உள்ள சொற்கள் பேச்சிலும் எழுத்திலும் அடிக்கடி பொதுமக்களால் பயன்படுத்தப்படுவனவே'' என முன்னுரையில் கூறியிருப்பதற்கேற்பப் பேச்சு மொழிச் சொற்கள்

நிறைய இடம் பெறுகின்றன. எனினும் அவை வெறும் கொச்சைச் சொற்கள் அல்ல.

தமிழ் இலக்கணங்கள் கூறுகின்ற ஒலிமரபினையொட்டி மொழி முதல் எழுத்துக்களைக் கொண்ட சொற்கள் சதுரகராதியில் இடம் பெறத் தமிழ்-லத்தீன் பேச்சு மொழி அகராதியில் இலக்கண நெறிக்கு மாறாக மொழி முதல் எழுத்துக்களைக் கொண்ட சொற்கள் இடம் பெறுகின்றன. டகரத்தை முதலாகக் கொண்ட டக்கியம், டமானம், டம்பக்கம், டாக்கு, டாப்பு, டாப்புகிறது, டால், டாவால், டீடீ, டொக்கு, டோம்பர், டோல், ட்டவனி போன்ற சொற்கள் இடம் பெறுகின்றன.[20] அவ்வாறே ரகரத்தை முதலாகக் கொண்ட ரகசியம், ரசதாளிக்கரும்பு, ரசம், ரசவாதம், ரசனை, ரா, ரீதி, ருசி, ரெம்ப, ரேகை, ரொக்கம், ரோந்தை போன்ற சொற்களும்[21] லகரத்தை முதலாகக்கொண்ட லகு, லகுடு, லங்கணம், லஞ்சம் போன்ற சொற்களும்[22] இடம் பெறுகின்றன. சதுரகராதியில் மொழி முதலாகா எழுத்துக்களைக் கொண்ட வடசொற்கள் இடம்பெறின் தமிழ் ஒலி மரபினுக்கியைய அகர இகர உகரங்களை மொழி முதலிற் சேர்த்துச் சொல்லை அமைத்துக் கொள்கின்ற முறை இவ்வகராதியில் இடம் பெற்றிலது.

ஒவ்வோர் உயிர் எழுத்தும் மெய்யெழுத்தும் அவ்வவற்றை முதலாகக் கொண்ட சொற்களைக் கூறுமுன் நிறுத்தி விளக்கப் படுகின்றன. ற, ன போன்ற எழுத்துக்களையுடைய சொற்கள் எதுவும் இல்லையெனினும் அவ்வெழுத்துக்கள் மட்டும் இடம் பெறு கின்றன. சதுரகராதியில் ஓரெழுத்தொரு மொழிகள் மட்டுமே விளக்கப்படுகின்றன. மெய்யிறுதியாகிய எகரத்தின் பின் வடமொழி எழுத்தாகிய 'ஸ்' முதலாகும் ஸ்கலனம், ஸ்கம்பம் போன்ற 25 சொற்களும்[23], 'க்ஷ' முதலாகும் க்ஷணம், க்ஷத்திரியர் போன்ற 12 சொற்களும்[24] இடம் பெறுகின்றன. இடையிடையே வடமொழி எழுத்துக்களையுடைய 'ரிஷி'[25] போன்ற சொற்களும் இடம் பெறு-கின்றன. சதுரகராதியில் யாண்டும் வடவெழுத்துக்களோடு வட சொற்கள் இடம் பெற்றில. தமிழ்-லத்தீன் பேச்சுமொழி அகராதியில் சிலவிடங்களில் மட்டும் வடவெழுத்துக்களைத் தமிழ் எழுத்து முறைக் கேற்ப மாற்றி யமைத்தும் இடம்பெறச் செய்துள்ளார். இட்டம், இயமன் போன்றவை அத்தகையன. அவற்றின் மாற்று வடிவங்கள் இஷ்டம், யமன் எனவும்[26] குறிக்கப்படுகின்றன.

தமிழில் வழங்கும் சொற்களையும் பொருள்களையும் விளக்குவதே சதுரகராதியின் இயல்பாயிருக்க அச்சொற்களைக் கொண்டுள்ள மரபுத் தொடர்களையும் நிரற்படுத்திப் பொருள் விளக்கத் தமிழ்-லத்தீன் பேச்சுமொழி அகராதி முற்படுகிறது. கை,

கைகண்டது, கைகலக்கிறது, கைகாட்டுகிறது, கைகுவிக்கிறது, கை கெட்டுப்போறது, கைகொட்டுகிறது, கைக்கறடு, கைக்காணிக்கை, கைக்கிட்டி, கைக்கிறது, கைகூடுகிறது, கைக்கூலி, கைக்கொள்ளல், கைக்கொள்ளுகிறது, கைக்கோல், கைச்சங்கிலி, கைச்சாத்து, கைதை, கைத்நாய், கைத்தாளம், கைத்தோக்கு, கைப்பற்றுகிறது, கைப்பாடு, கைப்பிடி, கைப்படிவேலை, கைமணி, கைமரம், கைமாறு, கைமை, கைம்பெண் கூறு கையடை, கையம்பு, கையரிவாள், கையறிகிறது, கையாடுகிறது, கையாந்த கரை, கையாளிக்கிறது, கையாள், கையிணக்கம், கையேறல், கையேறுகிறது, கைலாகு, கைலாசம், கைவசம், கைவருகிறது, கைவாளை, கைவிடுகிறது ஆகியவனைத்தும்[27] கை என்னும் ஓரெழுத்தொரு மொழியடிப்படையில் எழுந்தனவாம்

சொற்கள் மொழியில் பயன்படும் முறையைத் தெளிய அவற்றை முழுவாக்கியங்களில் பயன்படுத்துகிறார் ஓரளவு தமிழ் மொழியை அறிந்தவர்க்கெனப்படைக்கப்பட்டதால் சதுரகராதியின் சொற்பொருள்களை வாக்கியத்தில் அமைத்துக்காட்டாவிட்டாலும் புரிந்து கொள்ள இயலும். எனவே, அதில் சொற்கள் வாக்கியத்தில் அமைத்துக் காட்டப்பட்டில. சொற்களுடைய வாக்கியங்கள் மக்கள் வாக்கில் அடிக்கடி பயில்வதாயிருப்பின் மிக்க பயன் நல்கும். இதனையறிந்த அடிகளார் சொல்லாட்சியை விளக்க அவை பயின்று வரும் பழமொழிகளை எடுத்துக் காட்டுவதை முன்னுரையில், ''அன்றாடப் பேச்சு மொழிக்கு அப்பாற்பட்டதாயிராத பழமொழிகளையும் கருத்துரைகளையும் அடிக்கடி எடுத்துக்காட்டுவேன்'' எனக் கூறுகிறார்.

தமிழகத்தில் வழங்கிவரும் பழமொழிகள அளவிறந்தன. அறிவினில் தெளிந்த ஆன்றோர் தம் பொருள்மொழிகளைப் போன்றே, ஆய்ந்தறியாப் பாமரரின் வாய்மொழியாக வெளிப்படும் பழமொழிகள் ஆற்றல் சான்றன. அன்றாடப் பேச்சு வழக்கில் அவை மிகுதியும் வெளிப்படுவனவாதலின், பேச்சுமொழிச் சொற்களுக்குப் பொருள் கூற வந்த அகராதியில், சொற்பொருளைத் தெளிவுபெற விளக்குமுகத்தான் எண்பதுக்கு மேற்பட்ட பழமொழிகள் மேற்கோளாக ஆளப்பட்டுள்ளன பழமொழிகள் அனைத்தும் ஒருநெறிப்பட்டவையல்ல. பொருளிலும் சுவையிலும் முறையிலும் வகையிலும் பன்னெறிப்பட்டவை; பல்வகை யாப்பமைதி கொண்டவை; எதுகை நயம், மோனை நயம் கொண்டவை; முரண்தொடை, திறன் நடை அமைந்தவை.

'ஆனை அண்டாதால் அழுகையும் அண்டாது.' 'ஈரமுண்டானால் ஒர முண்டாம்', 'ஏழையைக் கண்டால் மோழையும் பாயும்', 'கரணம் தப்பினால் மரணம் தட்பாது', 'துஞ்சி நின்றான் மிஞ்சி உண்ணான்' போன்றன[28] எதுகை நயம் அமைந்தவை. 'பகைவரை முதலாய்ப் பரிவது கடன்', 'கள்ளனுக்குப் போகும் கள்ளப்புத்தி', 'கூறியது கூறல்

குற்றமாகும்', 'நரையுடை யாரெல்லாம் நம்பியாரல்லர்',' பல நாட் பழகினும் பாசிவேர் கொள்ளாது', 'பிரியமில்லாச் சோறு பிண்டச்சோறு', 'பெற்றோரைப் பேணாதார் பின்வீடு வாழார்' முதலியவை[29] மோனை யழகுடையவை. 'அண்டத்திற் குள்ளது பிண்டத்திற் குண்டு', 'இருளோ டொளியைப் பொருத்துவாரில்லை', 'பிள்ளை மனம் கல்லு பெற்றோர் மனம் பித்து', 'புதுப்பஞ் சாரத்திற்குப் பழையசாணி', 'பேரின்பம் வேண்டின் சிற்றின்பம் ஒழிக்க', 'முதற்கோணல் முற்றும் கோணல்', 'வெள்ளைக்குக் கறுப்புப் பகை' போன்றவை[30] முரண்தொடை யுடையன. 'சொல்லழகு மிகுதியால் சுவை பயக்கும்,' 'எண்ணித் துணிந்தவன் எண்ணப் படுவான்', 'ஐயமிடா தடைந்தபொருள் ஐயமிடா தழியும்', 'ஒருமிப்பில்லாத குடி ஒருமிக்க கெடும்', 'பிறரழக் கொண்டபொருள் தானழக்கெடும்' போன்ற பழமொழிகளும்[31] உள.

ஒரே பழமொழியை வெவ்வேறிடங்களில் எடுத்துக்காட்டுவதனையும் காணமுடிகிறது 'வானஞ் சுருங்கத் தானஞ் சுருங்கும்'. 'எறும்புந் தன்கையால் எண் சாண்' என்பன[32] அவ்வகைத்தானவையே. ஒருபொருள் பயப்பன வெவ்வேறு வடிவங்களிலும் காணப்படுகின்றன. 'திருவாக்குக்கு மறுவாக்கில்லை' என்றும் ஓரிடத்தில் காணப்படும் பழமொழி பிறிதோரிடத்தில், 'திருவாய்க்கு மறுவாயில்லை' என்று கூறப்படுகிறது.[33] 'பேரின்பம் வேண்டின் சிற்றின்பம் ஒழிக்க, என ஓரிடத்தில் உள்ள பழமொழி வேறொரிடத்தில், 'சிற்றின்ப மென்னார் மற்றின்பம் கண்டார்'[34] எனக் காட்டப்பட்டிருக்கிறது.

திருக்குறட்டொடர்களே பழமொழி வடிவில் இவர் காலத்தில் வழங்கியதைச் சிலவற்றால் அறிய முடிகிறது. 'கற்க கசடற', 'எண்ணித்துணிக' 'நெறிநின்றார் நீடு வாழ்வார்', 'தவஞ்செய்வார் தம் கருமஞ் செய்வார்' போன்றன[35] முறையே 391,467,6 266-ஆம் திருக்குறட்பாக்களிலமைந்த தொடர்களேயாம். அவ்வாறன்றித் திருக்குறட்கருத்துக்களை உள்ளடக்கி அமைந்தனவும் உண்டென்பதனை, 129,401,505,429 -ஆம் திருக்குறட்கருத்துக்களை முறையே, 'நாவினாற் சுட்ட வடுவாறாது', 'அரங்கின்றி விளையாடலும் அறிவின்றிப் பேசலு மொன்று', 'சிறுமை பெருமை செய்வினையால் வரும்', 'பின்வருவதறிந்து முன் விலகுவதறிவு' போன்ற மொழிகளால் உணரலாம்', 'மோக்கக் குழையும் அனிச்ச மது போல நோக்கக் குழையும் கற்பு' என்றாற் போன்று[36] திருக்குறளை யொத்தும் பொருள் வேறுபாட்டுடன் அமைந்தனவும் உண்டு. உவமைத் தொடர்கள் பழமொழிகள் போல் வழங்கப்பட்டிருத்தலை, 'ஆயோதன முகத்தில் ஆயுதந் தேடல்', 'உப்புக் கண்டம் போக்கடித்த பாப்பாத்தி போல' போன்றவற்றால்[37] அறியலாம்,

ஊர்வன, நீந்துவன, தத்துவன, பறப்பன, நடப்பனவாய பல்வகை உயிரினங்களைத் தொடர்புபடுத்தி வழங்கப்பட்டனவற்றை, 'ஆயிரம் பாம்புக்குள்ளே நானொரு தேரை', 'உள்ளதை விற்று உல்லத்தைக் கொள்ளு', 'இறக்கும் காலம் வந்தால் ஈசற்கு இறகு', 'முக்கால் முழுகினும் காக்கை கொக்காகுமோ', 'பனங்காட்டுநரி சலசலப்புக்கு அஞ்சாது', 'குலையாத நாய் குதிகாலைக் கடிக்கும்' போன்றவற்றால்[38] தெளியலாம்.

தமிழ்ப் பழமொழிகட்கு இணையான பிறமொழிப் பழமொழிகளும் சிலவிடங்களில் சுட்டப்படுகின்றன. 'அகங்கையில் மயிரைத் தேடுகிறான். என்னும் பழமொழி, இலத்தீன் பழமொழியோடு ஒப்பிடப்படுவதை, 'Correspondent Proverbio Latino, "Nodum in scripo Quaerit" என்னும் தொடரால்[39] அறியலாம். இவ்வாறே, 'கலாபமானாற் புளுகாததுபாவம், என்னும் பழமொழிக்கு "Mentiras na querra, por mare por terra, குறிப்பாலும்,[40] 'ஆமணக்கு விரைச்சால் ஆச்சா விளையுமோ' என்னும் பழமொழிக்கு "quee. quis Seminet, haecet melet, Acquivalet dicto,, எனக் காட்டும் குறிப்பாலும்[41] பிறமொழிகளோடு ஒப்பிட்டுக் காட்டுவதை உணரலாம். எனவே, தமிழ் – லத்தீன் பேச்சுமொழி அகராதி, பல்வகைப்பழமொழிகள் நிறைந்துள்ள களஞ்சியமாக அமைந்துள்ளது.

பொருட்டெளிவைத் தொடர்களிலமைத்துப் புலப்படுத்துங்கால் பழமொழிகளோடன்றிப் புலவோர் பொருள் மொழிகளும் பெரியோர் அறவுரைகளும் நிறைந்த கருத்துக் குவியலாக இவ்வகராதி காட்சியளிக்கின்றது.

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு"
"ஊனுடை யெச்ச முயிர்க்கெல்லாம் வேறல்ல
நாணுடைமை மாந்தர்ச் சிறப்பு"

போன்ற திருக்குறட்பாக்கள்[42] குறிக்கப்படுகின்றன.

"ஈயார் தேட்டம் தீயார் கொள்வார்", "அறஞ்செய விரும்பு", "உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கழகு", "ஐயமிட்டுண்", "நட்போல் வளை", "சனி நீராடு", எனப்பதினைந்துக்கும் மேற்பட்ட இடங்களில் ஔவையின் அமுத மொழிகள்[43] காணப்படுகின்றன.

வாழ்விற்குப் பயன் நல்கும் நல்ல கருத்தடை மொழிகள் பல கையாளப்படுகின்றன. "இளமையிலே புண்ணியத்தோடே பழகு", "உன் மனத்தில் அழுக்கில்லாத போனால் ஒன்றுக்கும் பயன்படாதே"

''எந்தெந்தவார்த்தையானாலும்எண்ணாமல் உச்சரிக்கவேண்டாம்'', ''கிளம்பின தூசியடங்கத் தண்ணீர் தெளி'', ''மட்டுத் தப்பினால் சங்கீதமும் பொருந்தாது'' என்பன[44] அவற்றுள்சில. தம் துறவற நெறிக்கேற்ற அறவுரைகளையும் இடையிடையே பயன்படுத்தத் தவறவில்லை. ''துணிந்தவரை ஆண்டவர் உதவுவார்'', ''பாவத் தொடர்ச்சி சாவு'', ''மனுஷனை நம்பின மனுஷன் சபிக்கப்பட்டவன்'' ''புண்ணியத்துக்கு விக்கினமாயிருக்கிற தெல்லாத்தையும் அகற்று'' போன்றவை[45] அடிகளது சமய உணர்வை வெளிக்காட்டுவன. இவ்வாறு அகராதியாயமைந்தும் நிறைமொழி மாந்தர் தம் மறைமொழிகள் கருத்துக் குவியலாகத் திகழ்கிறது.

பெரியோர்தம் பொன்மொழிகளை எடுத்தாண்டதோடு மட்டுமின்றித் தமிழகப் புலவர்கள் சிலரின் பெயர்களும் சுட்டப்படுகின்றன. அடிக்கடி மேற்கோள் காட்டுகின்ற மொழிகளைக் கூறிய திருவள்ளுவர், ஔவையார் போன்றோர்[46] சுட்டப்படுகின்றனர். சிந்தாமணி, சிலம்பு, இனியவை நாற்பது, மூதுரை போன்ற நூல்கள்[47] காட்டப்படுகின்றன. புலவர் தம் காப்பியப் பாத்திரப் பெயர்கள் பல இவ்வகராதியில் அமைத்து விளக்கம் கூறப்படுகின்றன. தசரதன், கோசலை, சீதை, சுமித்திரை ராமன், விபீஷணன், விசுவாமித்திரன், இரணியன், அகலிகை, போன்றன[48] கம்பன் காப்பியப் பாத்திரங்களே. ஆனால் சதுரகராதியில் இந்த அளவிற்கு அடிகளால் மதித்த புலவர்களோ, நூல்களோ இடம் பெறவில்லை. காப்பியப் பாத்திரங்களின் பெயர்களும் சுட்டப்படவில்லை. செந்தமிழை ஓரளவு அறிந்தோர் இவற்றையெல்லாம் முன்னரே அறிந்திருத்தல் கூடுமென எண்ணிச் சதுரகராதியில் விடுத்திருத்தல் கூடும்.

அடிகளின் பழுத்த அறிவு மொழித்துறையில் மட்டுமன்று; மருத்துவத் துறையிலும் புலனாகின்றது. கணபாடம், நவகாண்டம், சிந்தாமணி முதலிய நூல்கள் அவரால் எழுதப்பட்டவை என்னுங் குறிப்புக்கள் ஆங்காங்கே காணக்கிடக்கின்றன.[49] அவர்தம் பெயர் சூட்டி விற்கப்படும் மருந்துவகை[50], திருப்பெயரால் நிறுவப்பட்டிருக்கும் மருத்துவவிடுதி[51] ஆகியன அடிகள் மருத்துவ நூல்கள் எழுதியுள்ளாரென்றும், அவ்வடிப்படையிலேயே மருத்துவ முறைகள் மேற்கொள்ளப் படுகின்றனவென்றும் வெளிப்படுத்துகின்றன. செவி வழிச் செய்திகளும் அடிகள் சிறந்த மருத்துவராய் விளங்கினார் எனத் தெரிவிக்கின்றன. மருத்துவத் துறையிலும் வித்தகராய் அடிகள் விளங்கினாரெனினும், அத்துறையில் நூல்கள் யாத்துள்ளார் என்பது ஐயத்திற்கிடமாயது. ஏனெனில், அடிகள் வரலாற்றை முறைப்படத் தொகுத்துத் தகுந்த சான்றுகளோடு வரைந்துள்ள பெஸ் அடிகள்[52] போன்றோர் மருத்துவ நூல்கள்,

எவற்றையும் குறித்தாரல்லர். ஆயின், அடிகளது தமிழ்-லத்தீன் பேச்சு மொழி அகராதியில் மருத்துவக் குறிப்புக்கள் விரவிக் கிடக்கின்றன.

சதுரகராதியிலும் மருத்துவத்துறைச் சொற்கள் ஆங்காங்கே சில காணக்கிடக்கின்றனவெனினும், அவை பெரும்பாலும் நிகண்டு, களிற் காணப்படுவனவேயாம். திவாகரம் புல், மரம், புதல், பூடு, வல்லி என்பன மருந்தெனப் படுமென்றும், அத்திரசத்திரநதைத்த புண்ணாற்று மருந்தின் பெயர் சல்லியகரணி என்றும், விரணமும் தழும்பும் நீக்கக்கூடிய மருந்தின் பெயர் சமணியகரணி என்றும், உயிர் தருமருந்தின் பெயர் மிருத சஞ்சீவிணி என்றும் கூறுகின்றது.[53] பிங்கலம் இவற்றோடு உயிர் தரும்மருந்துகளாக அதகம், அமுது, சீவணி ஆகிய-வற்றையும், உறுநோய் தீர்க்கும் மருந்தாக உறை என்பதனையும், உறை, குளியம், ஒடதி, ஔடதம், அதகம், யோகம் ஆகிய முறை-களையும் கூறுகிறது.[54] சூடாமணி இவற்றுள் சிலவற்றையே கூறுகிறது.[55] சதுரகராதியின் பெயரகராதியில் புல், புதல், பூடு, வல்லி போன்றவை இடம் பெறினும் மருந்து என்னும் பொருள் தரப்படவில்லை.[56] பொருளகராதியில் மருந்து என்னும் பெயருக்குரியனவாகச் சமானகரணி, சல்லியகரணி, சந்தான கரணி, சஞ்சீவகரணி போன்றவை கூறப்படுகின்றன.[57] பெயரகராதியிலும் இவை இடம் பெறுகின்றன.[58] எனினும் இவை போன்ற மருத்துவக் குறிப்புக்கள் மிகவும் குறைவான-வையேயாம்.

அடிகளின் நூல்களுள் தமிழ்-லத்தீன் பேச்சுமொழி அகராதி-யிலேயே மருத்துவக் குறிப்புக்கள் மிகுதியாய் உள்ளன. சதுரகராதிக்குப் பின்னர் பன்னிரெண்டு ஆண்டுகள் கழித்தே தமிழ்-லத்தீன் பேச்சுமொழி அகராதி எழுதி முடிக்கப்பட்டது. இவ்விடைக்காலச் சூழ்நிலை முன்னிலையினை நோக்க ஓரளவு அமைதி தருவதாகவே அடிகள் வாழ்க்கையில் அமைந்தது. தமிழகம் முழுவதும் சுற்றியிருந்த பரந்த அனுபவமும் அவ்வகைத்தாய அறிவிற்கு உரமூட்டியது. மருத்துவ நூல்கள், மருத்துவ அறிவு படைத்தோரின் நட்புறவு ஆகியவை அடிகளுக்குக் கிட்டியிருக்கலாம். அதனாற்றான், சதுரகராதியிற் காணப்பெறாத அளவினுக்கு மிகுதியான மருத்துவக் குறிப்புக்கள் தமிழ்-லத்தீன் பேச்சுமொழி அகராதியில் அடங்கியுள்ளன.

நோய்களைச் சுட்டும் சொற்களுக்குப் பொருள் கூற முற்படுங்கால், அவற்றின் வகைகளையும் பலவிடங்களில் குறிப்பிடுகிறார். சான்றாகக் காய்ச்சல்,[59] என்னுஞ் சொல்லுக்குப் பொருள் கூறவந்த அடிகள், விடும் காய்ச்சல், விடாக்காய்ச்சல், நாலாமுறைக் காய்ச்சல், மூன்றாமுறைக்காய்ச்சல், குளிர் காய்ச்சல், சுரக்காய்ச்சல், வறைக்

காய்ச்சல், உட்காய்ச்சல், அஸ்திக்காய்ச்சல், பித்தக்காய்ச்சல், மந்தாரக் காய்ச்சல், கடும் காய்ச்சல், அகோரக் காய்ச்சல் தோஷக் காய்ச்சல், பெருவாரிக் காய்ச்சல் எனப் பத்தொன்பது வகையினைக் குறிப்பதோடன்றிப் பின்னர்க் கொள்ளைநோய் எனப் பொருள்தரும் கொள்ளைக் காய்ச்சல்[60] என்ற ஒன்றையும் சுட்டுகிறார். வலிப்பு[61] என்னுஞ் சொல்லுக்குப் பொருள் சுட்டுங்கால், உள்வலிப்பு, புறவலிப்பு, முசல் வலிப்பு என விரிக்கிறார். காயத்தைச்[62] சாவுக்காயம், பிழைக்காயம் எனப் பிரிக்கிறார். கன்னம்[63] என்பதற்குப் பொருள் காண முற்பட்டவர், அதில் தோன்றும் புண்களாய கன்னக் கிரந்தி, கன்னப் பிளவை, கன்னப் புற்று என்பனவற்றைக் காட்டுகிறார். பிளவை[64] என்பதனைக் கூறும்பொழுது கன்னப் பிளவை, பணிச்சைப் பிளவை, மயிப்பிளவை, ராசப்பிளவை என்னும் வகைகளைப் புலப்படுத்துகிறார். அவற்றுள்ளும் மயிப்பிளவை என்பது புத்து[65] என்கிறார். சிறு நீர்த்தொடர்பாக நீடரைப்பு, நீரெரிப்பு, நீரழிவு,[66] நீர்க்கடுப்பு[67] போன்றனவும், உரோகம் தொடர்பாகப் பாண்டுரோகம்,[68] காசரோகம்[69], வாதரோகம்[70] போன்றனவும் கரப்பான் தொடர்பாகக் கண்டக் கரைப்பான், கபாலக்கரைப்பான் போன்றனவும்[71] காட்டப்படுகின்றன. வாதம்[72] என்னுங்கால், வாத சரீரம், வாத சுரம், திமிர்வாதம் போன்றன குறிக்கப்படுகின்றன. இவையேயன்றி, மூலம்,[73] மூலக் கிராணி,[74] வயிற்றுக் கடுப்பு,[75] வெட்டை,[76] கிறந்தி,[77] சிரங்கு,[78] நரம்புச் சிலந்தி[79] போன்ற பல்வகை நோய்கட்கும் பொருள் கூறப்படுகின்றன.

நோய்கள் போக்கும் மருந்துவகைகளையும் இவ்வகராதியில் குறிக்கிறார். மூலிகை,[80] கொட்டைக் கிரந்தி,[81] கருஞ்சீரகம்,[82] கோரோசனை,[83] சாதிலிங்கம்,[84] சீனிமிளகு,[85] சேங்கொட்டை,[86] தூதுவளை[87] போன்ற பல மருந்துகள் காட்டப்படுகின்றன மருந்துக்குப் பயன்படக் கூடியவற்றின் வகைகளும் ஆங்காங்கே விரித்துரைக்கப்படுகின்றன. கள்ளிக்குப்[88] பொருள் கூறுங்கால், கொடிக் கள்ளி, சதுரக்கள்ளி, திருகு கள்ளி, பலகைக்கள்ளி, இளைக் கள்ளி, எனவும், சீரகம்[89] என்பதனைக் கூறுங்கால் நற்சீரகம், கருஞ்சீரகம், நாட்டுச்சீரகம் எனவும், திரிகடுகு[90] என்பதனைக்கூறும்பொழுது சுக்கு, திப்பிலி, மிளகு எனவும் விரித்துரைப்பது அடிகளின் நுண்ணறிவைக் காட்டுகிறது.

சூரணம்,[91] சூரியபுடம்[92] போன்ற மருந்து தயாரிக்கும் முறைகளைக் குறிக்கும் சொற்கட்கும் பொருள் சுட்டப்படுவதைக்காணலாம். 'புண்ணிலே காரச் சீலை வைத்தாள்'[93] என்றாற்போன்று கையாளப்பட்டிருக்கும் தொடர்கள், புண்ணை ஆற்றுவதற்குக் காரச் சீலையை

வைக்கும் மருத்துவக் குறிப்பினை உணர்த்துவன. 'ஆறின புண்ணிலும் அசறு நிற்கும்'[94] என்னும் பழமொழிக்குறிப்பும் புண்பற்றி உணரத் தக்கதே. 'கடுக்காயிலக்கணி நஞ்சு சுக்கில புரணி நஞ்சு'[95] என்னும் மருத்துவத் தொடர்பான பழமொழியை விளக்கும் பொழுதில், மருந்து தயாரிப்பதில் கடுக்காயில் விதையையும், சுக்கின் தோலையும் நீக்குவர் என்கிறார். என்ன தின்றாலும் அதுக்குமேல் நாலு பேரித்தம்பழத்தைத் தின்னவே யெல்லாமடிப்படும்'[96] என்று கூறும் அறிவுரை சீரணமா-தற்குக் கூறும் குறிப்பே. 'லங்கணம் பரமாவுஷ்தம்'[97] என்னும் பழமொழிப் பொருளும் அவ்வகைத்தாயதேயாகும். இன்னோரன்ன மருத்துவக் குறிப்புக்கள் அடிகளின் பிற நூல்களிலோ அகராதிகளிலோ காணப்பட்டில. இவற்றை நோக்க, அடிகளுக்கு மருத்துவத்துறை ஈடுபாடு வாழ்வின் இறுதிக் காலத்திலேயே மிகுந்திருக்கிறது என எண்ண இடமிருக்கிறது. அவ்வீடுபாட்டினைப் புலப்படுத்தும் இடமாகத் தமிழ்-லத்தீன் பேச்சு மொழி அகராதியினைக் கொண்டார் போலும்.

தமிழ்-லத்தீன் பேச்சுமொழி அகராதி முன்னுரையால் அது சமயத் தொண்டருக்கென்றே படைக்கப்பட்டதென்பது தெளி-வாகிறது. ''பாவத்தால் அழிந்து படுகின்ற மனிதனிடத்து வேதபோதக ஓவியர்கள் கடவுளின் வடிவத்தைப் பதிய வைக்கத் தக்க வண்ணத்-தையும் சொற்களையும் அளிக்க வல்லேனாயின் அதுவே எனக்குப் போதுமானது. அவர்கள் கொடுத்த மகிமையை அடைகிறேன். அதன் பயனை அறுவடை செய்யப் போகிறவர்கள் நான் உழைக்காமல் விதைக்கவில்லை என்பதைஉணரட்டும்" என்னும்முன்னுரை வரிகளால் கிறிஸ்தவச் சமயம் பரப்பும் பணிக்குத் துணையாவதற்கென்பதும், அப் பணியில் ஈடுபட்டோர் பயன் பெறுவதற்கென்பதும் அடிகளார் நோக்கம் என வெளிப்படுகிறது. சதுரகராதியோ கிறிஸ்துவச் சமயத் தொண்டருக்காகவும் படைக்கப்பட்டது.

சமய நோக்கம் மட்டும்கொண்ட தமிழ்—லத்தீன் பேச்சுமொழி அகராதியில் சமயத் தொடர்பான சொற்கள் நிறைய இடம் பெறுகின்றன. பிற சமயத்தார் அறியாத, கிறிஸ்தவ சமயத்தினர் மட்டுமே அறிந்துகொள்கின்ற கபாலமலை, சம்மனசு, சாவான பாவம், திருச்சபை, தேவதிரவிய அனுமானம், நற்கருணை போன்றனவும்,[98] கிறிஸ்தவக் கோட்பாடுகளடங்கிய சிலுவையிலே அறைகிறது. தாய்க் கன்னிமையளித்த குமாரன், மனுஷனாகத் திருவுளமானார் போன்ற தொடர்களும், [99] கிறிஸ்தவர்கள் வழிபாட்டிற்குப் பயன்படுத்திய செபங்களில் வருகின்ற, அர்ச்சிக்கப்பட்ட வருமாமே, உம்முடைய சரணமாக ஓடி வந்தோம், சத்துருக்களிலே நின்று, மரித்தவர்களிடத்-தெழுத்தருளினார், வியர்த்தமாய் சுவீகரியா திருப்பாயாக போன்ற தொடர்களும்[100] காணப்படுகின்றன. சில சமயத் தொடர்பான

தொடர்களைக் காட்டும் பொழுது, அச்சொல் யாரால் தமிழ் மொழியில் ஆளப்பட்டது எனக் குறிப்புக் காட்டப்படுகிறது. அற்சீயசிஸ்ட, ஆக்கிரிஷ்ட சூரனம், ஆங்காரம், சுதன், நாத சீர்த்தியர், பத்திசுவாலையர் போன்ற சொற்களுக்கு ராபர்ட்டி நோபிலி காட்டப்படுகிறார்.[101] தூஷனதிக்காரம் என்னும் அவர்தம் நூலும் சுட்டப்படுகிறது.[102] சதுரகராதியிலோ தொகையகராதிப் பகுதியில் மட்டும் கிறிஸ்தவ சமயத் தொடர்பான சில விளக்கங்கள் இடம் பெறுகின்றன.

மக்களின் பேச்சுமொழி இடத்திற்குஇடம் மாறுபடும். அம் மொழியை மையமாகக் கொண்டு படைக்கப்பட்ட அகராதியில் தமிழகத்தின் பல பகுதிகளிலும் வழங்கிய சொற்கள் இடம் பெற்றுள்ளன. இளையதம்பிரான், கட்டளை, கெற்பு, கோயிற்கால் போன்ற சொற்களைக் கூறுங்கால் திருவாங்கூர் வழக்கு பற்றியும்,[103] இடுவந்தி என்னுஞ் சொல்லுக்கு மறவ நாட்டு வழக்கு பற்றியும்.[104] மாப்பிள்ளைமார் என்னுஞ் சொல்லைக் கூறும் பொழுது மலபாரில் புனித தோமைக் கிறிஸ்தவர்களிடை நசரேனி மாப்பிள்ளைமார் யூதர்களிடை யூத மாப்பிள்ளைமார், முகமதியரிடை சோனக மாப்பிள்ளைமார் என்னும் வழக்குகள் உள்ளவை பற்றியும்,[105] ஆஞி, ஆஞா ஆகிய சொற்கள் தந்தையைக் குறிக்கும் வெள்ளாளர்கள் வழக்குஎன்பதுபற்றியும்[106] குறிப்பது கிளைமொழி பற்றிய அடிகளார் அறிவைக் காட்ட வல்லன.

வட்டார மொழிகள், கிளை மொழிகள் பற்றிய பரந்த அறிவு அடிகளாருக்கு ஏற்படுவதற்கு அடிகளார் தமிழகமெங்கணும் அலைந்துதிரிந்து பணியாற்றியதே காரணமெனலாம். தமிழகமெங்கணும் உள்ள அழகர் கோயில், கீழக்கரை, சாலைகிராமம் தரங்கம்பாடி, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, திருப்பதி, திருவனந்தபுரம். திருவாழங்கோடு, பூண்டி, புன்னைக்காயல், பொன்மலை, மலையடிக்கட்டி, ராமனாதபுரம், வந்தவாசி போன்ற ஊர்கள்[107] பற்றிக் குறிப்பதும் அவ்வறிவைக் காட்ட வல்லன. தமிழகம் அல்லா யாழ்ப்பாணம், லண்டன் போன்றவை காட்டப்பட்டு-உள்ளன.[108] சதுரகராதியில் இவ்வாறு தமிழகத்தின் பல பகுதிகளிலும் உள்ள ஊர்கள் இடம் பெறவில்லை. முன்னை நிகண்டுகள் குறித்த அவந்தி, உறையூர், கருவூர் போன்ற ஊர்களே[109] இடம் பெற்றுள்ளன.

இலக்கணம், மொழியியல்பற்றிய நுண்மையான கொள்கைகள் சதுரகராதியில் வெளிப்படையாகக் கூறப்படவில்லை. தமிழ்-லத்தீன் பேச்சு மொழி அகராதி பிற மொழியாளருக்கென்றே எழுதப்-பட்டமையான், மொழிபற்றிய அறிவைத் தெளிவுறுத்த வெளிப்படை-யாக இலக்கணச் சொற்கள் எடுத்துக் காட்டப்படுகின்றன. ஆண்பாலுக்குரிய பெண்பால் பற்றிய சொற்கள் அவ்வச்

சொற்களிலேயே தீர்க்கதெரிசி-தெரிசினி, தோழன்-தோழி, தொண்டன்-தொண்டி என்றாற்போன்று[110] காணப்படுகின்றன. நல்வினை + தீவினை, புஞ்சை + நஞ்சை போன்ற எதிர்ச் சொற்கள்[111] ஆக்கு, இசை, இடி, இரங்குகிறது போன்றவற்றிற்கு[112] பல காலங்களைக் குறிக்கும் வினை வடிவங்கள் காட்டப்படுகின்றன. எழுத்தின் வரிவடிவம் கூட எ, ஏ ஆகியவற்றின் வேறுபாட்டினை எரி, ஏரி என்னும் சொற்களைக் கொண்டு, குளம் குறுகினால் நெருப்பாரும் என எடுத்துக்காட்டி விளக்கப்படுகிறது.[113] முகியாது, சுதந்திரம், சக்கரை, பால்ச்சோற்றி போன்ற பேச்சு மொழி வடிவங்களே இடம் பெறுகின்றன.[114] சதுரகராதி இலக்கண அமைப்புகளையோ, பேச்சு-மொழி வடிவங்களையோ நேரடியாக விளக்கிக்கூறவில்லை. சொல், பொருள் என்ற அளவோடு சதுரகராதி அமைய, அவற்றோடு வழக்கு வடிவம், இலக்கணம் முதலிய பல கூறுகளையும் பேச்சுமொழி அகராதி அடக்கிக் கொண்டுள்ளது. முதன் முதல் படைத்த அகராதியாகச் சதுரகராதியும் இறுதிக்கால அகராதியாக தமிழ்-லத்தீன் பேச்சுமொழி அகராதியும் அமைந்தமையால் அடிகளார்தம் விரிந்த சிந்தனை எளியோருக்குப் புரியவைக்கச் சதுரகராதியில் அமையாத அந்நெறிகளைச் சேர்த்துக் கொண்டதெனலாம்.

தமிழ்—லத்தீன் பேச்சுமொழி அகராதி இருபாகங்களையும் நான்கு அனுபந்தங்களையும் கொண்டதாக அமையவேண்டும் என்பது அடிகளார் எண்ணம்.[115] முதல் பாகம், தமிழ்—லத்தீன் பேச்சுமொழி சொற்கள் 9000 உள்ள அகராதியாய் அமைந்தது. இரண்டாவது பாகம், போர்த்கீஸ்—லத்தீன்— தமிழ் அகராதியாயிற்று. முதலாம் அனுபந்தத்தில் ந, ண, ன ஒலி வேறுபாடுடைய அந்தி, அண்டி, அன்றி போன்ற சொற்கள், ல, ழ, ள ஒலி வேறுபாடுடைய அலி, அழி, அளி போன்ற சொற்கள், ட்ட, த்த, ற்ற, ஒலி வேறுபாடுடைய அட்டை, அத்தை, அற்றை போன்ற சொற்கள், குறில் நெடில் வேறுபாடுடைய உன், ஊன் போன்ற ஓரசைச் சொற்கள், அசை ஆசை போன்ற ஈரசைச் சொற்கள், பலிக்கிறது, பாலிக்கிறது போன்ற பலவசைச் சொற்கள் ஆகியன இடம்பெறுகின்றன. இரண்டு, மூன்று, நான்காம் அனுபந்தங்களாகப் பரமார்த்த குருவின்சரித்திரம், வாமன் சரித்திரம், இந்தியக் காலக்கணக்கீடு அல்லது தமிழ் மாதங்கள் பற்றிய குறிப்பு ஆகியவற்றை அமைக்க அடிகளார் எண்ணங் கொண்டிருந்தார் போலும்.

இவற்றுள் போர்த்கீஸ்—லத்தீன்—தமிழ் அகராதி தனியகராதியாகவே கருதத்தகும். 2, 3, 4— ஆம் அனுபந்தங்கள் ஆகியன அகராதித் தொடர்புடையனவல்ல. அவற்றை நீக்கின் ஒலி வேறுபாட்டினைப் புலப்படுத்தும் சொற்களடங்கிய முதலாம் அனுபந்தத்-

தினைத் தமிழ்—லத்தீன் பேச்சுமொழி அகராதியின் ஒரு கூறாகவே கொள்ள வேண்டும். அவ்வனுபந்தத்தில் ஒவ்வோர் இன ஒலி வேறுபாட்டுச் சொற்கள் தனித்தனியே அகர நிரன்முறைபெற்று அமைந்திருக்கின்றன. சான்றாக, ந, ண, ன ஒலி வேறுபாடுடைய சொற்கள் அந்தம், அண்டம் எனத் தொடங்கி வேரு, வேறு என முடிகிறது. குறில் நெடில் வேறுபாடுடைய பலவகைச் சொற்கள் ஆசனம், ஆசனம் எனத் தொடங்கி மானியம், மானியம் என முடிகிறது. இவ்வனுபந்தம் சதுரகராதியின் இறுதிப்பகுதியாகிய தொடையகராதியோடு ஓரளவு ஒத்துள்ளதெனலாம். குறில் நெடில் வேறுபாடு ஒவ்வொரு தனிச் சொல்லுக்குமிடையே தமிழ்-லத்தீன் பேச்சுமொழி அகராதி காட்டச் சதுரகராதி குறிலையுடைய சொற்களை ஒருங்கே தொகுத்துக் குறிற் கீழெதுகை என்னுந் தலைப்பிலும், நெடிலையுடைய சொற்களை ஒன்றாகத் தொகுத்து நெடிற் கீழெதுகை என்னுந் தலைப்பிலும் காட்டுகிறது. அத்தொகுப்புக்களுள் அடங்கும் சொற்களனைத்தும் ஓரொலி வேறுபாடுடையனவேயாயினும், ந, ண, ன, ல, ழ, ள, ட, ர, ற போன்ற இயைபொலி வேறுபாடு மட்டுமே கொண்டனவென்று சொல்வதற்கில்லை. சதுரகராதியின் தொடைத்தொகுப்பின் நோக்குச் செய்யுள் நோக்கு. இவ்வொலி வேறுபாட்டுச் சொற்றொகுப்பின் நோக்கு ஒலிக்கேற்ப பிழையறப் பொருளுணர வேண்டும் என்பதாகும். அகராதி என்னும் முறையில் இரு அகராதிகளும் ஒன்று போலமையினும் சொன்னிலையால், வடிவத்தால் ஒலிக்கூறுகளால், இலக்கணத்தை வெளிப்படுத்தும் சொன்முறைகளால் வேறுபட்டனவாகும்.

3. சதுரகராதியும் போர்த்கீஸ்-லத்தீன்-தமிழ் அகராதியும்

தமிழ்-லத்தீன் பேச்சுமொழி அகராதியோடிணைந்த பகுதியாக அமைந்திருப்பினும் தனியகராதியாகக் கருதத்தக்கது போர்த்கீஸ்-லத்தீன்- தமிழ் அகராதி. செண்பகனூரில் உள்ள பழங்சுவடிகள் காப்பிடத்தில் உள்ள இரண்டு போர்த்கீஸ்-லத்தீன்- தமிழ் அகராதிக் கையெழுத்துப்படிகளில் ஒன்று, தமிழ் - லததீன் பேச்சுமொழி அகராதியோடு இணைந்து காணப்படுகிறது. முதலிரண்டு பாகங்கள், முதலிரு அனுபந்தங்கள் ஆகியவை, தமிழ்-லத்தீன் பேச்சுமொழி அகராதியோடு காணப்படுகின்றன. அதனால் இரண்டாவது பாகமாகிய போர்த்கீஸ்-லத்தீன்-தமிழ் அகராதியும் அதனோடிணைந்துள்ளது. பிறிதொரு சுவடியில் போர்த்கீஸ்-லத்தீன்- தமிழ் அகராதி மட்டுமே காணப்படுகிறது.

போர்த்கீஸ்-லத்தீன்-தமிழ் அகராதி மட்டும் கொண்ட கையெழுத்துச்சுவடியில் முதற்பக்கமும், இறுதிப்பக்கமும் இல்லை. அதன் மேற்புரத்தில் ஒரு குறிப்புக் காணப்படுகிறது. ''முதற் பக்கத்தில் 44

சொற்களும் இறுதிப் பக்கத்தில் 29 சொற்களும் விடுபட்டிருக்கின்றன. இவ்வகராதியில் 4353 சொற்கட்குப் பொருள் கூறப்படுகின்றன'' என்னும் அக்குறிப்பு பெஸ் அடிகளாருடையதென அதன் கீழுள்ள பெயர் குறிப்பிடப்படாத மற்றொருவர் குறிப்பால் அறியலாம். அவர் ''பெஸ் இம்முடிவுக்கு எவ்வாறு வந்தார் எனத் தெரியவில்லை. அவர் கருத்துப்படி 4353 சொற்கட்கு இவ்வகராதி பொருள் கூறியிருக்குமாயின், 284 சொற்கள் அல்லவா விடுபட்டிருக்கவேண்டும்'' என்கிறார்.

அக்கையெழுத்துப்படியில் ஒவ்வொரு சொல்லுக்கும் எண் குறிக்கப்பட்டுள்ளது. இரண்டாம் பக்கத்தில் உள்ள சொல் 45 எனத் தொடங்கிறது. எனவே முதற் பக்கத்தில் 44 சொற்கள் விடுபட்டிருக்கின்றன என பெஸ் அடிகள் கூறுவது சரியாக இருக்கிறது. அச்சுவடியில் தற்பொழுது உள்ளபடி இறுதி சொல் 4073 முடிகிறது. பெஸ் கூறுகிறபடி இறுதிப்பக்கத்தில் 29 சொற்கள் விடுபட்டிருக்க வேண்டுமாயின் மொத்தம் 4073 + 29 = 4102 சொற்களாகவேண்டும். மற்றொருவர் கருத்துப்படி 284 சொற்கள் விடுபட்டிருக்க வேண்டுமெனில், அக்குறிப்பில் உள்ள சொற்களாகிய 45 முதல் 4073 முடிய உள்ள 4029 சொற்களோடு அவற்றையும் சேர்த்தால் மொத்தம் 4029 + 284 = 4313 சொற்களாக வேண்டும். அப்படியின் இறுதிச் சொல்லாகிய 4073-ஆம் சொல்லிற்குப் பின் உள்ள சொற்களைப் பிறிதொரு படியில் உள்ளவற்றோடு ஒப்பிட்டால் ஏறத்தாழ 320 சொற்கள் காணப்படுகின்றன. அவற்றையும் சேர்த்தால் அப்படியில் கணக்குப்படி எண்குறியீட்டின்படி உள்ள 4073 சொற்களோடு அவற்றையும் சேர்த்தால் 4073 + 320 = 4393 ஆகின்றன. எனவே, போர்த்கீஸ்-லத்தீன்-தமிழ் அகராதி மட்டும் காணப்படும் படியில் உள்ள சொற்களைப் படியெடுத்தோர் புதிதாகச் சிலவற்றைச் சேர்த்திருத்தல் கூடும். அப்படியை ஆதாரமாகக் கொள்ளாவிடினும் தனியகராதியாகக் கருதப்பட்டது என்பதற்கு அது சான்றாகிறது தமிழ்-லத்தீன் பேச்சுமொழி அகராதியின் கையெழுத்துப்படியில் இணைந்து இரண்டாவது பகுதியாக அமைவதே ஆதாரமாகக் கொள்ளத்தகும்.

அகராதியின் அமைப்பும் அதனைத் தனியகராதியெனக் காட்டுகிறது. அதற்கெனத் தனித்தலைப்புப்பக்கம் பின்வருமாறு அமைந்து உள்ளது.

A. M. D. C

VULGARIS TAMULICAE LINGUAE

DICTIONARIUM

PARS SECUNDA,

MQUA
LUSITANIS VOCIBUS
Lattine' Explicatis
Vulgaris Idiomatis
TAMULICA VERBA
Ajunguntur
AUCTORE
P. CONSTANTION JOSEPHO BESCHIO
Soc : JESU
MISSIONARIO

அதற்கெனத் தனி முன்னுரையும் லத்தீன் மொழியில் அடிக-ளாரால் பின்வருமாறு கொடுக்கப்படுகிறது. "இந்த இரண்டாம் பகுதியில் ஏறத்தாழ இந்தியாவில் உள்ள அனைவரும் அறிந்த மொழி-யாதலின் போர்த்கீசியச் சொற்களை முதலில் அமைத்திருக்கிறேன். எனினும், பலவற்றை அனேகரால் சரிவரப் புரிந்து கொள்ள முடியா-தென்பதனை நான் மறுக்கவில்லை ஆதலால் அக்குறையை நிறை விக்கப் போர்த்கீசியச் சொற்களோடு லத்தீன் சொற்களையும் சேர்த் திருக்கிறேன். எனவே அகர நிரன்முறைப்படி போர்த்கீசியச் சொற்-களை மட்டும் பார்க்க இயலும் எனினும் அவற்றின் பொருள்கள் எல்லா வற்றிற்கும்இலத்தினிலும் கொடுக்கப் பட்டிருக்கின்றன. அனைவரும் காட்டுகின்ற ஆர்வத்தினின்று இரண்டு கனிகளைப் பெறவேண்டும் என்பதனால் இந்த இரட்டை வேலையை நான் தவிர்க்கவில்லை. எவ்வளவு குறைவான சொற்களைத் தேர்ந்தெடுக்க இயலுமோ அவ்-வளவு குறைவானவற்றை நான் தேர்ந்தெடுத்திருப்பதால் இது அளவில் பெரிதன்று. போர்த்கீசிய மொழியில் ஒரு சொல்லுக்குப் பல பொருள்கள் இருக்கும்பொழுது அவை அனைத்தும் கொடுக்கப்-படவில்லை அவற்றுள் மிக அதிகமாகப் பயன்படுவதும் மிக அவசிய-மானதுமாகிய ஒன்றிரண்டே கொடுக்கப்பட்டிருக்கின்றன. சாதாரண-மாக வினைச் சொற்கள் பெயர்ச்சொற்களுடனோ அல்லது முன்னும் பின்னுமாகவோ கொடுக்கப்பட்டிருக்கின்றன தனித்த சொற்களுக்-குரிய பெயரடைகள், வினையடைகள், அவற்றோடு முன்னும் பின்னும் சேர்ந்தமைகின்ற பெயர்கள் ஆகியவற்றைக் காணலாம். எனவே, ஒருவர் மனத்தில் உள்ளதை மற்றொருவர் புரிந்து கொள்வதற்குத் தேவையான அனைத்தையும் தரவேண்டும் என்னும் நோக்கத்தை இவ்வகராதி நிறைவேற்றுகிறது. அதேபோல, போர்த்கீசியச் சொற்கட்கு இணையான எல்லாத் தமிழ்ச் சொற்களும் கொடுக்கப்-படாமல். அவற்றுள் எவை மிக அதிகமாகப் பயன்படுகின்றனவோ அச்சொற்கள் மட்டும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. வினைச் சொற்-

களின் அமைப்புக்களோ, வடிவங்களோ காட்டப்படவில்லை. அவற்றை ஒவ்வொருவரும் முதற் பகுதியிலிருந்து அறிந்திருப்பர். இவ்விரண்டாம் பகுதியின் நோக்கம், பேசத் தொடங்குகின்ற சிறுவர்கட்கு உதவும்வண்ணம் மிகவும் பொதுவான சொற்களைக் கொடுப்பதும் அவற்றினின்று கடினமானவற்றிற்கு வழியமைத்துக்கொடுப்பது மாகும். முன்னெச்சரிக்கையாக முதற்பகுதியில் அருவருக்கத்தக்கன வற்றைக் கவனித்து நீக்கி விட்டேன், இங்கும் ஓர் உயர்ந்த மனிதனுக்கு அவை தேவையில்லை என எண்ணி ஒதுக்கியிருக்கிறேன். ஏனெனில் பிறரால் வெளிப்படும் பொழுது நாம் புரிந்து கொள்ள வேண்டும் எனினும் அவை நம்பேச்சில் ஒரு பொழுதும் பயன்படுத்தப்படக்கூடாது இவ்வளவு சுருக்கமாக இருப்பதற்காக யாரும் என்னைக் குறை கூற மாட்டார்கள். புதிதாக வருபவர்கள் விடாமுயற்சியோடு நான் கூறியுள்ளவற்றையெல்லாம் படித்துப்பார்த்து அவர்கள் மனதிற் பதியவைத்துக்கொண்டு ஊக்கத்தோடு பயன்படுத்த வேண்டும். விருப்பங்கொள்ளச் செய்வதற்கென்று எதுவும் இல்லை என்பதை அவர்கள் விரைவில் உணர்வார்கள்.''

இவ்வகராதியின் அமைப்புமுறை தனியகராதி என்பதனை வெளிக் காட்டுகிறது. சதுரகராதியில் அகரநிரன்முறையில் முதலில் நிறுத்தப்படும் சொற்கள் தமிழ்ச்சொற்களாகும். தமிழ்-லத்தீன் பேச்சுமொழி அகராதியில் முதலில் அகரநிரன் முறையில் அமைக்கப்படுவனவும் தமிழ்ச் சொற்களே. இவ்வகராதியிலோ அகர நிரன் முறை கொண்டு முதலில் அமைவன போர்த்துக்கீசியச் சொற்களாகும். சதுரகராதியில் ஒரு சொல்லின் அனைத்துப் பொருள்களும் தரப்படுகின்றன. இவ்வகராதியில் இன்றியமையாத சில பொருள்களே காட்டப்படுகின்றன. சதுரகராதி தமிழினை ஓரளவு கற்றார்க்கு மேலும் வழிகாட்டப் பயன்படும் நோக்கத்தில் அமைக்கப்பட்டது. இவ்வகராதி தொடக்க நிலையில் உள்ளோர்க்குப் பயன்படும் நோக்கத்தில் ஆக்கப்பட்டது சுருங்கக் கூறின் சதுரகராதி தமிழறிந் தோர்க்காகவும், இவ்வகராதி தமிழையறியாதோர்க்காகவும் இயற்றப் பட்டனவெனலாம். சதுரகராதியில் ஏறத்தாழ நான்கில் ஒரு பகுதி அளவிலேயே இவ்வகராதி அமைந்துள்ளது. கையெழுத்துப்படி 103 பக்கங்களைக் கொண்டிக்கின்றது.

அகரநிரன் முறையில் நிறுத்தப்பட்ட சொற்கள் போர்த்துகீஸாதலின் போர்த்துக்கீசிய அகரநிரன் முறையில் Aba Abe Abo Abr Abs Abu என்றவாறும் இவ்வாறே Ac, Ad, Ag, Ah, Ai, Am, An, Ao, Ap Ar, At, Ax, Az.— ஐ முதலாகக் கொண்ட சொற்களைக் கூறி, முடித்தபின், Ba, Be, Bc, முதலாகவுடைய சொற்களும் இன்னபிறவும் கூறப்படுகின்றன. Aba எனத் தொடக்கம் கொண்ட

சொற்கள் முதலில் அமைகின்றன. Abada animal காண்டாமிருகம், Aba famento iecitus குறுக்கம் புழுக்கம், Abafar neut i Rstuare குறுக்கமாயிருக்கிறது, Abainhar i plicare, et suere firmbiram மடிச்சுத் தைக்கிறது, Abayxar i deprimere தாழ்த்துகிறது போன்ற 19 சொற்கள் அப்பகுதியில் உள்ளன. அப்பகுதியின் இறுதிச்சொல் A.B.C. அக்ஷர வரி Ordo Literarum அகராதி giua incipit A B A என இடம் பெறுகிறது. அடுத்து Abe என்பனவற்றைத் தொடக்கமாகக் கொண்ட சொற்கள் Abetha i Apis தேனீய் hujus filij குஞ்சு என்பதினின்று தொடங்கி 6 சொற்கள் இறுதிச் சொல்லாக Abaspa i vesga குழவி என்பது இடம் பெறுகிறது. இவ்வாறு A-ஐ முதலாகக் கொண்ட சொற்கள் மட்டும் அறுநூற்றுக்கு மேற்பட்டன. இறுதியில் Z முதலாகக் கொண்ட சொற்கள், Zamba i Mater நார்த்தங்காய் Lamboleria i certa asbor cujus fructus comedunt நாவல், நவ்வல் சம்பு, Zenit உச்சி Zombaria i Irrisio, Jocus பரிகாசம், பரியாசம், சரசம், அசங்கதம் cum செய்கிறது. jocaria, seu irridere, Zomlaya - V - Reverncial வணக்கம், Lurzir i Fustigare வீசுகிறது மாறுகிறது என அமைந்து அகராதி முடிகிறது.

சதுரகராதிக்கு நிகண்டுகளைப் போலத் தமிழ் - லத்தீன் பேச்சு மொழி அகராதிக்கு லூயிஸ் நோபல் டி போர்சஸ் அவர்களது தமிழ்-லத்தீன் அகராதியைப் போன்று, இவ்வகராதிக்கு அண்டோனி டி புரொயென்சாவின் தமிழ் - போர்த்கீஸ் அகராதி ஓரளவு வழிகாட்டியிருத்தல் கூடும். எனினும் இரண்டனுக்கும் வேறுபாடுண்டு. அது தமிழ்ச் சொற்களை முதலில் நிறுத்திப் போர்த்கீசுச் சொற்களில் பொருள் தருகிறது. இது போர்த்கீசுச் சொற்களை முன்னர் நிறுத்தித் தமிழில் பொருள் கூறுகிறது. அது தமிழ்ச் சொற்களைத் தமிழ் அகர நிரன் முறையில் அமைக்கா ல் போர்த்கீஸ் அகரநிரன் முறையைப் பின்பற்றுகிறது. இது போர்த்துக்கீசுச் சொற்களை முறையாக அதற்குரிய நிரன் முறையிலேயே அமைத்திருக்கிறது.

ஒரு சிலவற்றிற்குப் பல பொருள்கள் இருப்பின் சிலவற்றையே கையாண்டிருக்கிறேன் என அடிகளார் கூறியிருப்பினும், சில சொற்-களுக்கு வழக்கில் பரவலாக உள்ள அனைத்தும் கூறப்பட்டிருக்கின்றன. afflicus என்னும் சொல்லுக்கு ஆகுலம், வியாகுலம், கலித்தி, கிலேசம், சஞ்சலம், சலிப்பு, பீடை, தாபம், பரதாபம், துயர், துயரம், துக்கம், துன்பம், துரிதம், அயர்வு, சிந்தை, யாதனை. வாதை, வேதனை, ஆகிய 19 பொருள் கூறப்படுகின்றன.[116] போர்த்கீஸியச் சொற்கள் அனைத்திற்கும் லத்தீன் சொற்கள் அமையவில்லை. சிலவற்றிற்குப் போர்த்கீஸியச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்கள் மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளன. 'A doora ccas' என்னுஞ் சொல்லுக்கு

ஆராதனை, அர்ச்சனை, வணக்கம், வழிபாடு ஆகிய தமிழ்மொழிப் பொருள்கள் கொடுக்கப்பட்டுள்ளன.[117]

சிலவற்றிற்குப் பொருள் கூறுங்கால் தமிழ்-லத்தீன் அகராதியைப் போன்று வாக்கியங்களில் அமைத்துக் காட்டியும் பொருள் விளக்கப்படுகிறது. "Achar i காண்கிறது எல்லாம் பார்த்தாலும் காணவில்லை. Licet aspexerim, examinaverim omnia, non inveni sic composita கண்டுபிடிக்கிறது. கண்டுகொள்ளுகிறது. கண்டெடுக்கிறது. இதைக் கண்டெடுத்தல்லாமல் நான் திருடவில்லை",[118] "Acontecer i Accidere சம்பவிக்கிறது ஆகிறது Sic ஒரு வருஷத்திலாகாதஹொரு க்ஷணத்திலாகுது. Accidit it puncto, guod non conningint in an"[119] போன்ற வாக்கிய விளக்கங்கள் பல காணப்படுகின்றன. இவ்வாக்கிய விளக்கங்களுக்குத் திருக்குறள் போன்றவற்றை எடுத்தாளுகின்ற இடங்களும் உண்டு. "Aldrada i Pespulus தாப்பாள் alrguando தாள் unde illud "அன்புக்கு முண்டோ வடைக்குந்தாழ்"[120], Alem precter அல்லாமல் அல்லாத அல்லாதே. அன்றி அன்றியே நீங்கலாக தவிர் time illud "இல்லற மல்லது நல்லற மல்ல"[121], போன்றன அதற்குச் சான்றுகளாகும்.

சில சொற்கட்குக் காட்டப்படுகின்ற தமிழ்ப் பொருள்கள் காரண காரியப் பொருத்தமமைந்து திகழ்கின்றன. "Aranha i Arameue சிலந்திப் பூச்சி, நூலான் பூச்சி, வலைப்பூச்சி"[122], "Areuga i forno Long'e Protracties நெடுங்கதை, வீண்கதை, முகியாதகதை"[123] "Adagis i Proverturn சாதுரிய வார்த்தை, பழமொழி"[124] போன்றவை அத்தகையன மருத்துவத் தொடர்பானவையும் "Alpondre i struma கண்டமாலை", "Alquimia are curi fica ரசவாதம், ரசவாத வித்தை, Alguimix புடம்"[125] என்றாற் போன்று ஆங்காங்கே காணப்படுகின்றன. தன்வினை, பிறவினை அமைப்புக்கள்" "Acabar i, asovere, Perficere முகிக்கிறது, நிறைவேற்றுகிறது" "Acabarse i absobi, perfici முகிகிறது, முடிகிறது, தீருகிறது, நிறைவேறுகிறது, ஒழிகிறது, ஒய்கிறது, ஆகிறது, அவ்வாறாகிறது"[126] என்றவாறு காணப்படுகின்றன. பேச்சு வழக்குச் சொற்கள் பொருள்களாகக் காணப்படுகின்றன. Altura 'Celsithindo' என்னுஞ் சொல்லுக்குக் கூறப்படும் பொருள்களுள் வருகின்ற உசரம், உசத்தி, உசப்பு[127] ஆகியவை அவ்வகையானவை சில தமிழ்ச்சொற்கள் மேனாட்டார் உச்சரிப்பின்படி தமிழ் எழுத்துக்களில் காணப்படுகின்றன. டகரம் ககரமாக ஒலி பெற்று, முகிக்கிறது[128] முகியாத கதை[129] என்னுஞ் சொற்களில் காணப்படுகின்றன. இவற்றை நோக்கித் தமிழ்-லத்தீன் அகராதி முறையினை ஓரளவு தழுவியே இவ்வகராதி அமைக்கப்பட்டதென்பது தெளிவாகிறது.

சதுரகராதி, ஒருமொழி அகராதி; தமிழ்– லத்தீன் பேச்சு மொழி அகராதி இருமொழி அகராதி; போர்த்கீஸ் - லத்தீன் - தமிழ் அகராதி மும்மொழி அகராதி. சதுரகராதி ஓரளவு தமிழறிந்தோர்க்காகவும் சமயத் தொண்டருக்காகவும் படைக்கப்பட்டது. தமிழ் - லத்தீன் பேச்சுமொழி அகராதி சரிவரத் தமிழறியாத சமயத் தொண்டருக்காகவென்றே இயற்றப்பட்டது. போர்த்கீஸ் - லத்தீன்– தமிழ் அகராதி, தமிழைக் கற்றுக் கொள்ளத் தொடங்குகின்ற பிறநாட்டார் அனைவருக்காகவும் படைக்கப்பட்டது. ஏனெனில் அடிகளார் காலத்தில் இந்நாட்டில் வாழ்ந்த பிறநாட்டாரில் பெரும்பான்மையர் அரசியற் சூழ்நிலையின் பயனாகப் போர்த்கீஸ் அறிந்தவர்களாயிருந்தனர்.

மேற்கோள்கள்

1 Meenakshisundaram, K., p. 256-257.
2 சுந்தர சண்முகம், பக். 307 - 308.
3 Besse, Fr., p., 22-231.
4 .... 229.
5 Meenakshisundaram, K., p. 257.
6 சுந்தர சண்முகம், 2 பக். 162.
7 Meenakshisundaram, K., p. 257.
8 சுந்தர சண்முகம், பக். 308.
9 Besse, Fr., p. 229.
10 சுந்தர சண்முகம், பக். 308.
11 Besse, Fr., p. 227.
12 Gnanapragasam, Fr., V.M., p. 390.
13 Besse, Fr., p. 16.
14 ...., 226.
15 தமிழ்-லத்தீன் பேச்சுமொழி அகராதி, பக். 356.
16 ...., 533.
17 ...., 530
18 Albertine Gaur, p. 232.
19 Vol, 10, September, 1973, No, 2, p. 72.
20 தமிழ்-லத்தீன் பேச்சுமொழி அகராதி, பக். 318, 319.
21 ...., 530.
22 ...., 534,535.
23 ...., 589, 590

24 ...., 590
25 ...., 532
26 ...., 80, 83.
27 ...., 229, 230, 231, 232.
28 ...., 21, 97, 526, 166, 354, 505, 296.
29 ...., 155, 177, 225, 381, 434, 444, 395.
30 ...., 21, 476, 445, 409, 471, 242, 407.
31 ...., 125, 138, 144, 451.
32 ...., 296, 561, 107, 270.
33 ...., 554, 349.
34 ...., 471, 287.
35 ...., 148, 355, 401, 332.
36 ...., 540, 36, 286, 453, 526.
37 ...., 69, 106.
38 ...., 368, 111, 95, 508, 264, 213.
39 ...., 3.
40 ...., 461.
41 ...., 63.
42 ...., 2, 285.
43 ...., 95, 569, 466, 35, 246, 64.
44 ...., 91, 48, 126, 12, 129.
45 ...., 355, 371, 380, 5.
46 ...., 2, 47.
47 ...., 280, 282, 95, 519.
48 ...., 323, 241, 289, 294, 532, 576, 533, 34, 5.
49 (1) இராயர். பக். 6. (11) சாமா, ஜி. வி இபக். I (அ)
50 வீரமாமுனிவர் பற்பொடி, மூலிகை.
51 மதுரை, அரசரடி, வீரமாமுனிவர் மருத்துவ நிலையம்.
52 Fr. Beschi and Bis Times,
53 திவாகரம், பக். 44.
54 பிங்கலம், நூற்பா 2781 -2789.
55 சூடாமணி, பெயர்ப்பிரிவு, பக். 97.
56 சதுரகராதி-1, பெயர், பக். 133, 131, 134, 134.
57 ...., பொருள் பக். 68.
58 ...., பெயர், பக்.71, 73, 71, 70.
59 தமிழ்-லத்தீன் பேச்சுமொழி அகராதி, பக். 1
60 ....,240.
61 ....,547,
62 ....,189.
63 ....,183.

64 ....,448.
65 ....,490.
66 ....,595.
67 ....,157.
68 ....,436.
69 ....,184.
70 ....,557.
71 ....,170.
72 ....,520.
73 ....,520.
74 ....,520,
75 ....,157,
76 ....,579.
77 ....,235.
78 ....,200,
79 ....,381.
80 ....,520.
81 ....,235.
82 ....,168.
83 ....,243.
84 ....,271.
85 ....,291.
86 ....,309.
87 ....,362.
88 ....,179.
89 ....,179.
90 ....,346.
91 ....,302.
92 ....,302.
93 ....,191.
94 ....,9.
95 ....,3.
96 ....,15.
97 ....,535
98 ....,164, 260, 276, 347, 56, 168.
99 ....,53, 50, 113.
100 ....,68, 262, 394, 129, 298.
101 ....,53, 62, 62, 293, 386, 417.
102 ....,343.
103 ....,92, 158, 227, 243.

104 ....,79.
105 ....,500.
106 ....—........,64.
107 ....,48, 204, 275, 330, 429, 340, 348, 349, 464, 340,
478, 493, 458, 542.
108 ....,528, 535.
109 சதுரகராதி-1, பெயர், பக். 11, 32, 46.
110 தமிழ்—லத்தீன் பேச்சுமொழி அகராதி, பக். 353, 375, 374,
111 ...., 382, 455.
112 ...., 62, 76, 78, 84.
113 ....,127.
114 ....,286, 293, 248, 440.
115 ....   ,
116 போர்த்கீஸ்—லத்தின்—தமிழ் அகராதி, பக். 5.
117 ...., 4.
118 ...., 3.
119 ...., 3.
120 ... ., 7.
121 ...., 7.
122 ...., 12.
123 ...., 12.
124 ...., 4.
125 ...., 8.
126 ...., 2.
127 ...., 8.
128 ...   ., 2.


AUCTORE
P. CONSTANTIO
BESCHIO
SOC. JESU
A. D.

இயல் 10

சதுரகராதியின் செல்வாக்கு

1. நிகண்டுகளிற் செல்வாக்கு

செய்யுள் நடையில் பொருள் விளக்கும் நிகண்டுகளினின்று மாறி உரையிற் பொருள் கூறும் நூலாகச் சதுரகராதி தோற்றம் பெற்ற பின்னும் முன்னைப் போக்கில் நிகண்டுகள் தோன்றுவது தடைப்படவில்லை. ஆயின் அவற்றில் சதுரகராதியின் சொற்பொருள் தாக்கம் காணப்படுகிறது. அதனைச் சதுரகராதியின் உட்பிரிவுகளுக்கேற்ப நிகண்டுகளின் தொகுதிகளில் ஒப்பிட்டுக் காணலாம்.

சதுரகராதியின் நாற்பிரிவுகளுள் தொடையகராதிக்கெனத் தனித் தொகுதியை நிகண்டுகள் கைக்கொண்டில. சூடாமணியின் பதினோராம் தொகுதி எதுகைத் தொடை கொண்டிருத்தல் போன்றே பின்னை நிகண்டுகளிலும் ஒரு சொல் பல்பொருட்டொகுதிச் சொற்கள் அமைந்துள்ளன. எனவே, பெயர், பொருள், தொகை ஆகிய பிரிவுகட்கியைவதாய தொகுதிகளைக் கொண்ட நிகண்டுகளும், ஏதேனும் ஒரு பிரிவுக்குமட்டும் உரிய தொகுதியே தனியொரு நூலாக அமைந்த நிகண்டுகளும் தோன்றின.

சாமினாதக் கவிராயர் இயற்றிய பொதிகை நிகண்டு என்னும் நூல் 18–ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றியது எனக் கருதப்படுகிறது.[1] எனவே, சதுரகராதியை யடுத்துத் தோன்றிய நிகண்டுகளுள் பெயர், பொருட்பிரிவுகட்கு இயைவதாய தொகுதிகளைக் கொண்டவற்றுள் அதுவே முதலிடம் பெறுவதற்குரியது; இரண்டு பகுதிகளால் ஆகியது.

இரண்டாம் பகுதி அகராதி நிகண்டைப்போல் நூற்பா யாப்புக் கொண்டது. அகராதி நிகண்டினும் சிறப்பு மிக்கது. ஏனெனில் அகராதி நிகண்டில் சொற்களின் முதலெழுத்துக்கள் மட்டும் அகரநிரன்

முறையினைப் பின்பற்றி யிருக்கப் பொதிகை நிகண்டின் இரண்டாம் பகுதி ஒருபடி மேலாகச் சொல்லின் முதலிரு எழுத்துக்களும் அகர நிரன் முறையினைத் தழுவியிருக்கின்றன. அகர வருக்கத்தில் அகரம் முதலாவதாகவும் ககரவினம் இரண்டாவதாகவும் உள்ள சொற்கள் 1 முதல் 12 நூற்பாக்களில் காணப்படுகின்றன. ஙகரம் இரண்டாவதாக உள்ள சொற்கள் 13 முதல் 17 ஆம் நூற்பா முடிய உள்ளன. 18 முதல் 29 முடிய சகரவினம் இரண்டாவதாகவுடைய சொற்களும், 30 முதல் 34 முடிய ஞகரத்தை இரண்டாவதாகவுடைய சொற்களும், இவ்வாறே பிறமெய்களும் நிரன்முறைப்படி இடம் பெறுகின்றன. இரண்டாவதாக அமைந்துள்ள மெய்களின் இனவெழுத்துக்கள் க, கா, கி, கீ, கு, கூ என்றாற்போல் நிரன்முறையாக அமையவில்லையெனினும் முதலெழுத்தோடு அகர நிரன்முறை நின்ற அகராதி நிகண்டின் நிலைமாறி, இரண்டாம் எழுத்துக்களான மெய்களும் ஒரளவான நிரன்முறை பெற்று விளங்கின. இம்முன்னேற்றத்திற்குச் சதுரகராதிச் சொற்கள் முழுவதும் அகர நிரன்முறை பெற்றமைந்தது காரணமாகலாம். அவைபோல சொல்முழுவதும் உள்ள எழுத்துக்கள் அகர நிரன்முறை பெற்றுப் பொதிகை நிகண்டில் அமையாமல் போயினமைக்கு நூற்பா யாப்பினை மேற்கொண்டது தடையாயிருந்திருக்கலாம்.

சொற்கள் காட்டும் பொருள்களினாலும் பொதிகை நிகண்டில் சதுரகராதியின் தாக்கம் புலனாகிறது. திவாகரம், பிங்கலம், உரிச்சொல் போன்ற நிகண்டுகளில் ஞாங்கர் என்னுஞ் சொல் இடம் பெறவில்லை. சூடாமணியில் அச்சொல்லுக்கான பொருள்களாக வேல், பக்கம், முன், மேல் ஆகிய நான்கு கூறப்படுகின்றன.[2] பொதிகை நிகண்டு அவற்றோடு இடம் என்பதனையும் சேர்த்துக் கூறுகிறது.[3] புதிதாகக் கூறிய இடம் என்னும் பொருள் சதுரகராதியில் கூறப்படுவதாகும்.[4] ஞாட்பு என்னுஞ் சொல் திவாகரம், சூடாமணி, உரிச்சொல் போன்ற நிகண்டுகளில் இல்லை; பிங்கல நிகண்டில் உள்ளது;[5] சமர், பாரம், களம் ஆகிய மூன்று பொருள்களைக் கூறுகிறது. பொதிகை நிகண்டு படை, பூசல், கூட்டம், பாரம் ஆகிய நான்கு பொருள்களைக் கூறுகிறது.[6] இப்பொருள்கள் சதுரகராதியினின்று எடுக்கப்பட்டன எனக் கருதத்தகும்.[7]

பெயரகராதிப் பிரிவிற்கு மட்டும் இயைவதான ஒரு சொல் பல்பெயர்த் தொகுதியே தனி நிகண்டாக அமைந்தனவற்றுள் சதுரகராதியையடுத்துத் தோன்றியது அரும் பொருள் விளக்க நிகண்டாகும். கி.பி.1763இல் அருமருந்தைய தேசிகரால் இயற்றப்பட்டது என்பதைப் பாயிரப்பகுதி உணர்த்தும். அதில் முதற் சொல்லாக இடம் பெறும் அகவல் என்னும் சொல்லுக்குரிய பொருள்கள் திவாகரம், பிங்கலம்

ஆகியவற்றுள் விளக்கப்பட்டில. அகராதி நிகண்டினை அரும்பொருள் விளக்க நிகண்டு பலவிடங்களில் அடியொற்றிச் செல்கிறதென்பர்.[8] அவ்வகராதி நிகண்டில் ஓர்பா, ஆடல், என இருபொருள்கள் கூறப்படுகின்றன.[9] சூடாமணி நிகண்டில் பா, மயிற்குரல், கூத்து என்னும் பொருள்கள் கூறப்படுகின்றன.[10] அரும்பொருள் விளக்க நிகண்டில் அழைத்தல், ஆடல், ஆசிரியப்பா ஆகிய மூன்று பொருள்கள் தரப்படுகின்றன. நிகண்டுகளிற் காணப்படாத அழைத்தல் என்னும் பொருள் அச்சொல்லுக்கு அருமருந்தைய தேசிகரால் சதுரகராதியிற்[11] கண்டதன் பயனாகக் கூறப்பட்டிருக்கலாம்.

ஒருசொல் - பல்பொருட்டொகுதிக்கென்று எழுந்த பின்னைய நிகண்டுகளுள் நானார்த்த தீபிகை தனிச்சிறப்புடையது. முன்னைய நிகண்டுகளினும் மிகுதியாக, அஃதாவது 5452 சொற்களுக்கான பொருள்களைத் தருவது.[12] சென்னைப் பல்கலைக் கழகப் பதிப்பாக வெளிவந்த 1936-ஆம் ஆண்டில், பதிப்பாசிரியர், அந்நூல் தோன்றி எண்பதாண்டுகட்கு மேலாகவில்லை எனக் கூறுவதால் அது 1856-ஆம் ஆண்டிற்குப் பின்னரே தோன்றியிருத்தல் வேண்டும். திருநெல்வேலி கவிராயர் முத்துசுவாமி பிள்ளை என்பவரால் இயற்றப்பட்டுள்ளது. சதுரகராதி என்னும் பெயர் வடசொற்களாலமைந்துள்ளது போன்றே நானார்த்த தீபிகை என்னும் பெயரும் உள்ளது.

நானார்த்த தீபிகையின் பாயிரப்பகுதி பாடற் கருத்துகளும் சதுரகராதி ஆசிரியராற் கூறப்பட்ட முன்னுரைக் கருத்துக்களும் ஒன்றிற்கொன்று தொடர்புடையனவாய்க் காணப்படுகின்றன. ஆசிரியர் தமக்கு ஆதாரமான நூல்களை "முன்னோர் பன்னூலிற் சில வெவ்வேறு உரைத்தவெல்லாஞ் சேர்த்து ஒன்றாகத் திரட்டி யெனப் பொதுவகையாற் கூறினரேயன்றித் திவாகரம், பிங்கலந்தை, சூடாமணி நிகண்டு முதலாகப் பெயராற் கூறினாரல்லர்" என நானார்த்த தீபிகையின் பதிப்பு முன்னுரை கூறுகிறது. அடிகளார் முன்னூல்களாக அவற்றின் பெயர்களை முன்னுரையிற் சுட்டியுள்ளார். அந்நூற்கட்கு, சுவாமிநாதபிள்ளை இயற்றிய சிறப்புப் பாயிரத்தில், 'பற்பல நூல் கற்கினுமேன் பாடித்தானென் பயனிலவே யெழுத்தோடு சொற்பான்மை வந்த வுற்பவமோர்ந்திலராயின்'[13] என நூற்பொருள் உணரச் சொற்பொருள் இன்றியமையாதது என்கிறார். அவ் இன்றியமையாத சொற்றன்மையினைக், "கட்டடம் கட்டுவோர்க்குச் சுண்ணாம்பு செங்கற்கள் போல நூலியற்றுவோர்க்குச் சொற்பொருள் தன்மை உணரப்பட வேண்டும்" என அடிகளார்தம் முன்னுரையில் குறிப்பிடுகிறார். நானர்த்த தீபிகையின் ஆசிரியர் தற்சிறப்புப் பாயிரத்தில், "வடசொற்களையும் செந்தமிழில் பொருள் தொகுத்துச் செய்வேன்"[14] எனக் கூறியுள்ளார். அடிகளாரும் தம் முன்னுரையில்

"செந்தமிழ்ச் சொற்களோடு கிரந்தச் சொற்களைச் சேர்த்திருக்கிறேன்'' எனக் கூறுகிறார்.

நானார்த்த தீபிகையைப் பதிப்பித்த ஆசிரியர் அதில் அடங்கிய சொற்கள் எவ்வெந் நூல்களில் ஆளப்பட்டுள்ளன என்பதையும் காட்டிச் சொல்கிறார். தகவு, அகறல், சகுதி, அசந்தி, நடவை, உடைதல், ஏழை, விழுப்பம், தோன்றுதல் போன்ற பல சொற்கட்கு[15] உள்ள பொருள்களுள் ஒன்றாக முறையே உரிமை, விரிவு, நிமித்தம், பார்ப்போன், பாடை, நடவுமரம், குளித்தல், பெண், நன்மை, முளைத்தல் ஆகிய இடம் பெறுகின்றன. அச்சொற்களை-யடுத்து உள்ள அடைப்புக் குறிகளுக்குள் (அக) எனவரும் குறிப்பு, அச்சொற்கள் அகராதியில் அடைந்துள்ளன எனக் காட்டுவதாகும் என்பதனைப் பதிப்பாசிரியர் குறிப்பால் அறியலாம்.[16] உரையிற் காட்டிய மேற்கோள் நூல்கள் என்னுந் தலைப்பில் (அக) என்பது அகராதிகளைக் குறிக்கும் எனக் காட்டப்படினும் சென்னைப் பல்கலைக் கழகத்தால் 1911—இல் வெளியிடப்பட்ட தமிழ்மொழி-யகராதியைச் சிறப்பாகக் குறிக்கும் என்பதனை அவ்வடைப்புக் குறியின்கீழ் அவ்வகராதியைக் குறிக்கப்பட்டிருப்பதால் விளங்கும். ஆயின் இச்சொற்பொருள்கட்கான மூலம் சதுரகராதியே என்பது தெரிய வருகிறது. ஏனெனில் செந்தமிழ்க்கான முதல் அகராதி அஃதேயாம். அதில் இடம்பெறும் இச்சொற்கள் அதற்கு முன்னைய நிகண்டுகளில் இடம் பெற்றில. நானார்த்த தீபிகை நூல் எழுந்து பல்லாண்டுகட்குப் பின்னர் வெளியிடப்பட்ட தமிழ் மொழியகராதிக்கு இப்பொருள்களைக் கூறச் சதுரகராதியும் நானார்த்த தீபிகையும் இடந்தந்திருக்கலாம். எனினும் நானார்த்த தீபிகை இப்பொருள்—களை ஏறத்தாழ 120 ஆண்டுகட்கு முன்னர்த்தோன்றிய சதுரகராதி-யினின்றே பெற்றிருத்தல் வேண்டும். சிறப்புப் பாயிரம் பாடியவர், ''பரந்திய நிகண்டு முதலாப் பற்பலகராதிகளை யுந்திரட்டியதிலுறு பதரடைகணீத்து நன்றாம் பதங்களொடு, சிற்சில்வட பதமுஞ் செறித்து''[17] நானார்த்த தீபிகை பகர்ந்தார் எனக் குறிப்பிடுவது போன்று ஆசிரியர் சொற்களைத் திரட்டத் துணைநின்றன பல அகராதிகளெனின் தலையாயது சதுரகராதியாக இருத்தல் வேண்டும்.

ஒருசொல் பல்பொருட்பெயர்த் தொகுதி மட்டும் தனி நிகண்டு-களாக அமைந்தனவற்றுள் காலத்தால் பிற்பட்டது விரிவு நிகண்-டாகும். அதன் காலம் 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி எனக் கருதப்படுகிறது.[18] சூடாமணியின் பதினோராவது தொகுதியை முதநூலாகக் கொண்டு சொற்பொருள் விளக்கிச் செல்வதால் இந்நூல் 'பதினோராவது விரிவு நிகண்டு' என அழைக்கப் பட்ட-தென்பர்.[19] வீரவநல்லூரைச் சார்ந்த நா. அருணாசல நாவலர் இதன் ஆசிரியர் ஆவர்.

தமிழ் அகராதிக் கலை என்னும் நூலின் ககர எதுகை பகுதியிலிருந்து ஒரு பாடல் காட்டப்படுகிறது.[20] அகம் எனத் தொடங்கும் அச்செய்யுளில் அகம் என்னுஞ் சொல்லுக்கு இடம் முதலாக நெஞ்சு ஈறாக 21 பொருள்கள் கூறப்படுகின்றன. அவற்றுள் ஏழுருபு என்பதும் ஒன்று. முன்னை நிகண்டுகளில் திவாகரம் அகம் என்னும் சொல்லினை ஆளவில்லை. பிங்கலம் ஆறு பொருள்களைக் கூறினும்[21] ஏழுருபும் அவற்றுள் ஒன்றெனச் சுட்டவில்லை. சூடாமணி ஐந்து பொருள்களைக் கூறினும் ஏழுருபு பற்றிச் சுட்டவில்லை.[22] உரிச் சொல் நிகண்டில் இச்சொல் இல்லை. அகராதி நிகண்டில் எட்டுப் பொருள்கள்[23] கூறப்படினும் ஏழுருபு ஒன்றாகக் கூறப்படவில்லை. ஏழுருபு என்னும் இலக்கணப் பொருள் அகராதியில் அகம் என்னும் சொல்லுக்குரியனவற்றுள் ஒன்றாகக் காட்டப்படுகிறது.[24] எனவே விரிவு நிகண்டுக்கு இலக்கணப் பொருளாகிய ஏழுருபினையும் சேர்த்துக் கூற வழி காட்டியா யமைந்தது சதுரகராதியேயாம். இவற்றால் சதுரகராதிக்குப் பின்னரெழுந்த நிகண்டுகள் அனைத்தும் அதன் பெயரகராதிப் பகுதியில் கூறப்பட்ட சொற்பொருள்களைத் தக்கவாறு பயன்படுத்திக் கொண்டன என்பது தெளிவாகிறது.

பொருளகராதிப் பிரிவுக்கு இயைவதான தொகுதிமட்டும் தனி நூலாக விரிந்து தோன்றிய நிகண்டுகளும் பிற்காலத்தே தோன்றியுள்ளன. அவற்றுள் 12000 சொற்களுக்கான பெயர்களைத் தருகிற நாமதீபம் என்னும் பெயர்கொண்ட நிகண்டு தனித்தன்மை கொண்டது.[25] நான்கு படலங்கள் பதினாறுவர்க்கங்கள் ஆகிய பிரிவுகளைக் கொண்டது. சிவசுப்பிரமணியக் கவிராயரால் 19—ஆம் நூற்றாண்டின் முதற்பகுதியில் இயற்றப்பட்டதாகக் கருதப்படுவது.[26] சதுரகராதிபோன்று வடசொற்பெயர் கொண்டது. சதுரகராதியின் பொருளகராதிப் பிரிவின் தாக்கம் இதில் காணப்படுகிறது.

சீலை என்னும் சொல்லுக்குரிய பெயர்கள் திவாகரம், பிங்கலம், சூடாமணி ஆகிய நிகண்டுகளிற் காணப்படவில்லை. உரிச்சொல் நிகண்டில் அச்சொல்லுக்குரியனவாக 19 பெயர்களே கூறப்படுகின்றன.[27] நாமதீபநிகண்டு 41 பெயர்களைக் கூறுகிறது.[28] அகராதி கூறும் 46 பெயர்கள்[29] மற்றும் வகைகளிலிருந்து சிலவற்றை எடுத்துச் சேர்த்து முன்னை நிகண்டுகளிலும் அதிகப் பெயர்களைக் கூறியிருப்பதாகத் தெரிகிறது. வீமன் என்னுஞ் சொல் திவாகரம், உரிச்சொல் நிகண்டு முதலியவற்றில் இடம்பெறவில்லை. பிங்கலம் ஆறுபெயர்களையும்,[30] சூடாமணி ஐந்து பெயர்களையும்[31] கூறுகிறது. அகராதி பத்துப்பெயர்களைக் கூறுகிறது.[32] நமதீபநிகண்டு 13 பெயர்களைக் கூறுகிறது.[33] அவற்றுள் காரிகீசகனைக் கொன்றோன், பகனைக்

கொன்றோன் என்னும் பெயர்களைக் கூறுகிறது. அகராதி கூறும் சிககாரி, பகாகுரவயிரி முதலியவற்றினின்று படைத்துக் கொண்டதாகத் தெரிகிறது.

சதுரகராதியின் நான்கு பிரிவுகளிலும் தொடையகராதியின் செல்வாக்கே பிற்கால நூல்களில் மிகுந்து காணப்படுகிறது. தொடையகராதிப் பகுதிக்கு நிகரான நிகண்டுகளில் பல்பொருள் கூட்டத்து ஒரு பெயர்த்தொகுதியே தனி நூலாக விரிந்தனவற்றுள் பொருட்டொகை நிகண்டு குறிப்பிடத்தக்கது. புதுக்கோட்டைப் பகுதி குடுமியாமலையைச் சார்ந்த சுப்பிரமணிய பாரதியால் இயற்றப்பட்டது. இந்நூலின் காலம் அறியவரவில்லையாயினும் 18—ஆம் நூற்றாண்டாகலாம் எனக் கருதுவர்.[34] சதுரகராதிக்குப் பின்னர் இந்நூல் எழுந்ததென்பது தொகையகராதியையும் இந்நிகண்டையும் ஒப்புநோக்கின் உறுதி பெறலாம்.

தொகையகராதியை நிகண்டு வடிவில் ஆக்கித் தந்தது போன்றே இந்நிகண்டு அமைந்துள்ளது. முன்னை நிகண்டுகளிற் காணப்பெறாத தொகையகராதியில் காணப்பெறும் என் தொகைகள் அனைத்தும் இந்நிகண்டில் இடம் பெறுகின்றன. தமிழ் நாடு 13, உலகம் 14, திதி 15, சைவம் 16, முத்துச்சணிப்பு 20, மங்கலச்சொல் 22, நட்சத்திரம் 27, தேயம் 56, வருடம் 60, கலைஞானம் 64, பிரபந்தம் 96 ஆகியன[35] தொகையகராதியினின்று எடுக்கப்பட்டனவேயாம்.

தொகையகராதியினின்றுதான் இவை எடுக்கப்பட்டன என்பதற்குப் பொருட்டொகை நிகண்டின் உள்ளே அகச்சான்று உள்ளது அந்நிகண்டு தொண்ணூற்று ஆறு பிரபந்தவகைகளைக் கூறி முடித்த பின் அவற்றுள் முதலாவதாகக் குறிப்பிடப் பெறும் சாதகம் என்பதற்கு மட்டும் இலக்கணம் கூறுகிறது. இவ்விலக்கணமும் தொகையகராதியில் இடம் பெறுவதே. அவ்விலக்கணங் கூறியபின் ஏனையவற்றின் இலக்கணத் தொகையெல்லாம், "இயற்றமிழ் நூலிலும் அகராதியினும் அறைந்தன காண்கவே"[36] எனக் கூறுகிறது. அகராதி எனச் சுட்டுவது அந்நிகண்டு சுட்டும் தொகைகளையும் பொருள்களையும் அதற்கு முன்னரே கொண்டமைந்த சதுரகராதியையே என உறுதிபெறலாம்.

நிகண்டுகட்குப் பின்னாளில் வரையப்பட்ட உரைகளிலும் சதுரகராதியின் தாக்கம் காணப்படுகிறது. சூடாமணியின் பல்பெயர்க் கூட்டத்தொரு பெயர்த் தொகுதி எண்வகை மணங்களாகப் பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தருவம், அசுரம், இராக்கதம், பைசாசம் ஆகிய பெயர்களை[37] மட்டும் குறித்துச் செல்கிறதன்றி

அவற்றுக்கு விளக்கந் தரவில்லை. தொகையகராதியோ அவற்றை விளக்கிக் காட்டுகிறது. பின்னாளில் நிகண்டினைப் பதிப்பித்தோர் உரை கூறுங்கால் பிற தொகைகட்கு அவற்றின் பெயர்களை மட்டும் சுட்டி விட்டு எண்வகை மணத்திற்குப் பெயர்களோடு அவற்றின் விளக்கங்களையும் உரையாகக் கூறுவதற்குத் தொகையகராதி முன்னர் விளக்கிக் காட்டியிருப்பதே[38] தூண்டுதல் ஆகலாம். இவ்வாறே யோக அங்கம் எட்டன் பெயர்களை மட்டும் சூடாமணி மூலம் கூற,[39] உரையில் அவற்றுக்கானவிளக்கமும் சதுரகராதியையொட்டியே[40] கூறப்படுகிறது. சதுரகராதியின் தாக்கம் இன்னபிற முறைகளால் பின்னெழுந்த அனைத்து நிகண்டுகளிலும் அவ்வத் தொகுதிப் பிரிவு-கட்கேற்ப அமைந்து கிடப்பது சதுரகராதியின் செல்வாக்கினையும், அதனைப் பின்னோர் போற்றிய பாங்கினையும் காட்டவல்லதாய் இருக்கிறது.

2. அகராதிகளில் செல்வாக்கு

ஜகபிலி தமிழ்ப் பேரகராதியின் சிறப்புப் பாயிரத்தில், திரு. வி. கலியாண சுந்தரனார் இயற்றியுள்ள ஆசிரியப்பாவின் இடையில்,

“ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப் பியத்தின்
உரியியல் நிகண்டெனும் உரிய கருவியால்
மேலை முனிவன் காலைக் கண்டனன்
நூலறி கதிர வேலன் முதலோர்
எழுப்பினர் நிலையம் விழுப்ப முறவே”[41]

என்னும் பகுதி இடம் பெறுகிறது. சொற்பொருளாக்கம் என்னும் தமிழ் நிலையத்தைக் கதிரைவேற்பிள்ளை போன்றோர் பிற்காலத்துச் சிறப்புற எழுப்பக் கால்கோள் இட்டவன் மேலை நாட்டைச் சார்ந்த முனிவன் என்பது அதன் பொருளாம். மேலை முனிவன் எனக் குறிப்பிடப்படுபவர் அடிகளேயாகும்.

அடிகளார் அகராதியை அடிப்படையாகக் கொண்டே பின்னைப் பேரகராதிகள் பலவாகத் தோன்றின என்பதனை அச்சிறப்புப் பாயிரத் தலைப்பில் அமைந்த பிறிதொரு செய்யுளும் சுட்டுகிறது. சொற்பொருளுணர்வைத் துகளறப் பெறப் பல நிகண்டுகள் தோன்றியிருப்-பினும் அவற்றைக் கற்றுணர்வது அருமையென்று, இத்தாலியாவி-னின்று இங்கு வந்த செந்தமிழ் நூல்களைச் செவ்விதின் உணர்ந்து நுண்பொருள் அடங்கி நூல்கள் பல யாத்த பெஸ்கி என்னும் பெயருறு புலவன் சதுரகராதியைத் தந்தனன் என்றும், அதனிடைக் காணற்கரிய சொற்கள் ஆயிரம் ஆயிரமாக அதற்பாற்பெய்து பெருக்கிப் பேரகராதியாக அமைத்தனர் என்றும் அச்செய்யுள் விளக்குகிறது.[42]

பேரகராதிகள் தோற்றமெடுத்தது 20-ஆம் நூற்றாண்டெனி-னும், கி. பி. 1842-ஆம் ஆண்டிலேயே மானிப்பாய் அச்சகத்தில் ஓர் அகராதி வெளியாயிற்று. யாழ்ப்பாண அகராதி என்பது அதுவே. அது பண்டிதசந்திரசேகரால் தொகுக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தைச் சார்ந்த மறைத்திரு. நைட் தமிழறிஞர்கள் உதவியுடன் தமிழ் ஆங்கில அகராதி யொன்று உருவாக்குவதற்குச் சதுரகராதியில் காணப்படாத சொற்களையெல்லாம் சேர்த்து முறைப்படுத்தி வைத்-திருந்தார். அவற்றின் கையெழுத்துச் சுவடியே மானிப்பாய் அகராதி உருவாக அடிப்படையாயிற்று என்பர் டபிள்யூ. கதிரைவேற் பிள்ளை.[43] அவ்வாறாயின் சதுரகராதிச் சொற்களோடு மேலும் பல சொற்கள் சேர்ந்ததே மானிப்பாய் அகராதி எனலாம். 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வெளிவந்தது தமிழ்ப்பேரகராதியாகும். அது கி. பி. 1901-இல் நா. கதிரைவேற்பிள்ளையால் இயற்றப்பட்டது. தமிழ்ப்பேரகராதி, ''இவ்வகராதி மணி கடற் சுலவிம்மா நிலவரைப்-பில், தமிழ் மொழியைப் பயில்வோரனைவர்க்குமின்றியமையாச் சிறப்பினதாய், இதுகாறும் வெளிப்படுத்தப் பட்டிருக்கிற, சதுரகராதி, யாழ்ப்பாணத்து மானிப்பாயகராதி, விரிவகராதி முதலியவகராதிகளில் அடங்கியிருக்கிற சொற்களோடு நூதனமாக அரிய பெரிய விலக்கிய இலக்கணங்களினின்றும் எடுக்கப்பட்ட வநேகஞ் சொற்களை முறைப்-படி சேர்த்தும்''[44] எனக் குறிப்பதால் சதுரகராதி, அதனடிப்படையில் எழுந்த பிற அகராதிகளின் விரிவு தமிழ்ப் பேரகராதி என்பது தெரிகிறது.

இவ்வகராதியிற் புதிதாகச் சேர்க்கப்பட்ட சொற்கள் ஆங்காங்கு நட்சத்திரப் புள்ளிகளமைத்துக் காட்டப்படுகின்றன.[45] மேலும் இவ்-வகராதி சதுரகராதியைப் போன்றே பெயர், பொருள், தொகை, தொடை, என நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பெயர-கராதிக்கு முன்னர் உள்ள சதுரகராதிக் காப்புப் பாடல் தமிழ்ப் பேரகராதியின் பெயரகராதிக்கு முன் இடம் பெறவில்லை. தமிழ் பேரகராதிப் பொருளகராதிப்பிரிவிற்குச் செந்தமிழ்த் தெய்வவணக்கம் செந்தமிழ்ச் சிறப்பு தற்சிறப்புப் பாயிரம்என்னுந் தலைப்புகளின் கீழ் மூன்று பாடல்கள் இடம் பெறுகின்றன. மூன்றாவதாக உள்ள தற்சிறப்புப் பாயிரத்தின் கீழ் உள்ள பாடல் சதுரகராதியில் உள்ள பொருளகராதிக் காப்புச் செய்யுளே, தமிழ்ப் பேரகராதியின் தொகை-யகராதிப்பிரிவுக்குமுன் கடவுள் வணக்கம் என்னுந் தலைப்பில் இரண்டு பாடல்கள் இடம் பெறுகின்றன. இரண்டாம் பாடல் சதுரகராதியின் தொகையகராதிப் பிரிவில் அமைந்த காப்புச் செய்யுளேயாகும். தமிழ்ப் பேரகராதியின் தொடையகராதியின்முன் தெய்வவணக்கம் என்னுந்தலைப்பில் ஒரு பாடல் மட்டும் இடம் பெறுகிறது. அவ்வொரு

பாடலும் சதுரகராதியில் உள்ள தொடையகராதிச் செய்யுளாக உள்ளது.

கி. பி. 1906-இல் தமிழ்ப்பேரகராதி என்னும் பெயரில் முன்னை அகராதிகளில் உள்ளவற்றோடு, த. குப்புசாமி நாயுடுவால் அதிகம் சொற்கள் சேர்க்கப்பட்டு, ப. எதிராஜுலு நாயுடு என்பவரால் ஓர் அகராதி வெளியிடப்பட்டது.[46] சொற்களின் எண்ணிக்கை அதிக-மாயினும் பிற பகுப்புக்கள், பகுப்புக்கட்கு முன்உள்ள காப்புப் பாடல்கள் எல்லாம் முன்னைத் தமிழ்ப் பேரகராதி போன்றே உள்ளது. கி. பி. 1909-இல் இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் அகராதி ப. இராமனாதனால் இயற்றப்பட்டது. இதற்குமுன் வெளிவந்த அகராதிகள் எல்லாவற்றைக் காட்டிலும் 10,341 சொற்கள் அதிகம் உள்ளதாகப் பதிப்புரை கூறுகிறது.[47] ஆயின் சதுரகராதி போன்ற பிரிவுகள், அவற்றின் காப்புச் செய்யுட்களை ஆளுதல் போன்றவற்றில் முன்னை அகராதிகளை ஒத்திருக்கிறது.

தமிழ்ச் சொல்லகராதி ஸி. டபிள்யூ. கதிரைவேற்பிள்ளையால் இயற்றப்பட்டு மதுரைத் தமிழ்ச்சங்கத்தால் மூன்று பாகங்களாக முறையே 1910, 1912, 1923-ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்டது. அது சதுரகராதியைப் போன்ற பிரிவுகளைக் கொண்டு வெளிவர-வில்லையெனினும் அகராதிகளுக்கெல்லாம் முன்னோடியாய் அமைந்தது சதுரகராதி என அதன் ஆசிரியர் குறிப்பிடுவதால்[48] சதுரகராதியின் தாக்கம் அதனுள்ளும் உண்டு என்பது பெறப்படும். பிறவற்றினின்று அவ்வகராதி வேறுபடும் வகைகளைக் குறிக்குமிடத்து "நெடுங்கணக்குக் கிரமப்படி உயிர்மெய்க்கு முன்னை மெய்வருக்கம் எழுதப்பட்டிருக்கின்றது. ஒரு சொல்லுக்குப் பலபொருள் எழுதப் பட்டவைகளையும் மாணாக்கருடைய சௌகரியத்திற்காக முன் அகராதிகளிற் போல நெடுங்கணக்குக் கிரமமாயே எழுதினோம்"[49] எனக் கூறப்படுகிறது. உயிர் மெய்க்குப்பின் மெய்வருக்கம் அமைத்தும், பொருள்களை நெடுங்கணக்கு முறையில் அமைத்தும் பிற அகராதி-கட்கு வழிகாட்டியது சதுரகராதியேயாகும்.

கி. பி 1911-இல் தமிழ்மொழியகராதி என்னும் பெயரில், காஞ்சி, நாகலிங்க முதலியாரால் ஓர் அகராதி வெளியாயிற்று. நா. கதிரைவேற் பிள்ளை பதிப்பித்த அகராதியோடு ஆயிரக்கணக்கான சொற்களைச் சேர்த்துக் கொடுத்திருப்பதாகக் கூறப்படுகிறது.[50] சதுரகராதிபோல் நால்வகைப் பிரிவுகளைக் கொண்டிருப்பினும் முதற்பிரிவுக்குப் பெயரகராதி எனத் தலைப்பிடப்படவில்லை. பிற பிரிவுகட்கு முறையே பொருளகராதி, தொகையகராதி, தொடையகராதி எனப் பெயரிடப் பட்டிருக்கின்றன. சதுரகராதியில் அமைந்த காப்புச் செய்யுட்கள்

இடம் பெறவில்லை. ஆசிரியர் தாமே இரண்டிரண்டு வரிகளில் செய்யுட்களையியற்றி அவ்வத் தலைப்பின்முன் அமைத்துள்ளார். பொருளகராதியில் மட்டும் அவ்விருவரிச் செய்யுளோடு நான்குவரிப் பாடலொன்றையும் சேர்த்துள்ளார். எனினும் அதற்கு முன்னுரை தந்துள்ள நல்லசாமி பிள்ளை ''தென்னிந்தியாவில் உருவான அகராதிகள் அனைத்திற்கும் சதுரகராதியே அடிப்படை''[51] என்பதைச் சுட்டுகிறார்.

கி. பி. 1935-இல் எஸ் சங்கரலிங்க முதலியாரால் ஜூபிலி தமிழ்ப் பேரகராதி வெளியிடப் பெற்றது. அதன் தலைப்புப் பக்கத்தில் யாழ்ப்பாண அகராதி முதலிய பல அகராதிகளைக் கொண்டு புதுக்கியும், திருத்தியும், விளக்கியும் செம்மை செயப் பெற்றதாகக் குறிப்பிடப்படுவதால், யாழ்ப்பாண அகராதிக்கு மூலமான சதுரகராதியின் பயனையும் அது பெற்றிருப்பது தெளிவு.[52] மேலும் அதற்கு ஆங்கிலத்தில் மூன்னுரையளித்துள்ள கோட்டீஸ்வரன் என்பார், ''இவ்வகராதிக்கு முன்னோடிகளாய் விளங்கும் சதுரகராதி, யாழ்ப்பாண அகராதி, இருபதாம் நூற்றாண்டு அகராதி, காரனேஷன் அகராதி ஆகியவற்றின் ஆசிரியர்கட்குத் தமிழ் இலக்கிய உலகம் கடப்பாடுடையது[53] எனக் குறிப்பிடுகிறார். எனவே, அகராதிகளில் முதன்மை பெறும் சதுரகராதியின் தாக்கம் மிகுதியும் உண்டு என்பதில் ஐயமில்லை.

கி. பி 1937-இல் மதுரைத் தமிழ்ப் பேரகராதி இ.மா. கோபால கிருஷ்ணகோனால் வெளியிடப்பட்டது. இரண்டு பாகங்களாக அச்சிடப்பட்டுள்ளது.[54] செந்தமிழ், கொடுந்தமிழ்ச் சொற்களை உள்ளடக்கியது. அனுபந்தத்தில் போர்த்கிஸ், இந்தி, ஆங்கிலம் போன்ற மொழிகளிலிருந்து தமிழில் வழங்கிவரும் சொற்கள் இடம் பெறுகின்றன. சதுரகராதியைப் போன்றே நான்கு பிரிவுகளைக் கொண்டது. முதற் பிரிவினைத் தவிரப் பிற பிரிவுகளின் தொடக்கத்தில் சதுரகராதியின் காப்புச் செய்யுட்களைக் கொண்டிருக்கிறது.[55] இவற்றினின்று பின்னர் எழுந்த அகராதிகளில் எல்லாம் சதுரகராதியின் தாக்கம் இல்லாமல் இல்லை எனலாம்.

அகராதியின் நால்வகைப் பகுப்புக்களுள் தொகையகராதியின் தாக்கம், பெயர், பொருட் பகுதிகளைவிடச் சற்று விரிவாகக் காணப்படுகிறது. தொகையகராதிப் பகுதியே தனித்து ஓர் அகராதியாக வெளிவரத் தொடங்கியது. தொகை அகராதி என்னும் பெயர்கொண்ட நூல் அவ்வகையில் வெளிவந்ததே. அதன் பதிப்புரை அடிகளார் வெளி வந்த பிறகு அதனைப் பின்பற்றியே பலபேர் அகராதி தொகுத்து வெளியிடலாயினர் எனக் கூறுகிறது. மேலும், ''தொகையகராதியைத்

தனியாக எவரும் வெளியிட்டிருப்பதாகத் தெரியவில்லை. வீரமா முனிவர் செய்த தொகையகராதிப் பகுதி இந்நாளில் மிக வளர்ந்து பெருகியுள்ளது இப்பொழுது அவ்வகராதிக்கண் இல்லாத சொற்களில் ஆயிரத்திற்கு மேற்பட்டவைகளைத் தொகுத்து அத்தொகையகராதியில் இணைத்து இப்பொழுது இதனைத் தனியே வெளியிடுகின்றோம்"[56] எனக் கூறுவதினின்று பின் வந்தனவற்றுள் தொகையகராதி எவ்வளவில் ஆட்சி செலுத்துகிறது என்பது தெரியவரும்.

சான்றாக, அகராதி தொகைப்பிரிவிற் கூறிய பிரபந்தங்கள் 96 என்பதனைப் பின் வந்த அகராதிகள் அனைத்தும் கூறுகின்றன. சதுரகராதி வெளிவந்து 200 ஆண்டுகட்குப் பின்னர் வெளிவந்த அகராதிகளிற் கூட பிரபந்தங்களின் வகை காலப்போக்கில் விரிந்து எண்ணிக்கையில் பலவாக ஆயினும் கூட்டிக் கூறாமல், சதுரகராதியிற் கூறப் பட்டிருப்பனவற்றையே கூட்டாமற் குறைக்காமற் கூறுகின்றன. தம் சமயக் கொள்கைகட்கேற்ப வானோர் கணம்-9 என்பதனையும் அவற்றின் பெயர்களையும் அவற்றுக்கான விளக்கங்களையும் அடிகளார் கூறுகிறார். பின்வந்த அகராதிகள் அவற்றைக் கூட விடாது ஆளுகின்றன ஆயின் அவ்விளக்கங்களின் இறுதியில், "இவை போப்பு மார்க்க கிறிஸ்தவர்களாற் கூறப்படுவன"[57] என்னுங் குறிப்பைச் சேர்த்திருக்கின்றன.

காலப்போக்கில் வளர்ந்து தொகையகராதியிலமைந்த ஒன்றே ஓர் அகராதிப் பிரிவாகவும் இடம் பெற்றிருக்கிறது. தமிழ் இலக்கிய அகராதி என்னும் நூல் 1957-இல் கண்ணப்ப முதலியார் என்பாரால் வெளியிடப்பட்டது. சொல் அகராதி, தொகை அகராதி, பிரபந்த அகராதி, நூல் அகராதி, புலவர் அகராதி ஆகிய ஐந்து உட்பிரிவுகளைக் கொண்டது. இவற்றுள் தொகையகராதி என்பது சதுரகராதியின் பிரிவாகிய தொகையகராதி போன்றதே. அதனுள் அடங்கிய பிரபந்தம்-96 என்னுந் தொகையே தனியாகப் பிரபந்த அகராதி என்னும் பிரிவில் அடங்கியுள்ளது.[58] அப்பிரிவில் 96 பிரபந்தங்களும் அவற்றின் இலக்கணங்களும் தொகையகராதிப் பிரிவில் கூறப்படுவன போன்றே கூறப்படுகின்றன. புதிதாகப் பிரபந்தங்கள் ஏதும் கூறப்பட்டில. தொகையகராதியில் காணப்படும் பிரபந்த வகைகளை அகர நிரற்படுத்திக் கூறுகிறதன்றி வேறில்லை.

காலப்போக்கில் வளர்ந்துள்ள பிறதுறை அகராதிகளிலும்கூடத் தொகையகராதிப் பகுதி இடம் பெறுவது வியப்பிற்குரியதாயிருப்பினும் அதன் செல்வாக்கினை எடுத்துக்காட்டுவதாய் அமைகிறது. பதினெண் சித்தர்கள் திருவாய் மலர்ந்தருளிய வைத்திய மூலிகை விரிவகராதி என்னும் நூல் 1934-இல் பதிப்பிக்கப்பட்டுள்ளது. அதன் இறுதியில் தொகையகராதி இடம் பெறுகிறது. அதன் தலைப்பு

'மூன்றாவது' தொகையகராதி எனப் போடப்பட்டுள்ளது. இதன் முன்னமைந்துள்ள பகுதியில் முதலாவது எனக் குறிப்பிடப்பட வில்லை. 'வைத்திய மூலிகை விரிவகராதி' என்று மட்டும் குறிப்பிடப் படுகிறது. அதனையொட்டிய பிறிதொரு பகுதிக்கு அரும்பெயர் அநுபந்த அகராதி எனத் தலைப்பிடப்பட்டுள்ளது. எனவே இறுதிப் பகுதி மூன்றாவது பிரிவு என நினைவூட்டுகிறது போன்று உள்ளது. மேலும், அத்தலைப்பின் கீழுள்ள காப்புப்பாடல்[59] அடிகளார் தம் தொகையகராதியில் கூறியுள்ளதாகவே இருப்பது அதனை உறுதிப் படுத்துகின்றது. அத்தொகையகராதியில் அமைந்துள்ள சொற்களும் பெரும்பான்மை சதுரகராதியில் உள்ளவையே. மருத்துவத் தொடர்-புள்ளனவாயினும், அற்றனவாயினும் சதுரகராதியில் உள்ளவற்றோடு சிலவற்றைக் கூட்டிப் பதிப்பித்துச் சதுரகராதித் தொகையகராதி இறுதியில் முடித்திருப்பது போன்றே இலக்கத் தொகைமுறை கூறி முடிக்கப்பட்டுள்ளது.

சதுரகராதியின் தொடையகராதிப் பகுதியின் செல்வாக்குப் பிற பகுதியினைவிட அதிகமாகக் காணப்படுகிறது. ஏனெனில் சதுரக-ராதியின் பிற பகுதிகளில் அமைந்த சொற்களோடு புதிதாகச் சேர்க்கப் பட்டவை அவற்றிலும் பல மடங்கு அதிகம். தொடையகராதியிற் சேர்க்கப்பட்டவை அவற்றை நோக்க மிகக் குறைவு. தொடை-யகராதியின் இறுதியில் வகர நெடிற் கீழெதுகைப் பகுதியில் அமைந்த சதுரகராதிச் சொற்கள் 123 ஆகும்.[60] இராமனாதனது இருபதாம் நூற்றாண்டுத் தொகையகராதியில் அப்பகுதியில் இடம் பெற்ற சொற்கள் 148 ஆகும்.[61] ஜூபிலி தமிழ்ப் பெயரகராதியில் அப்பகுதி-யில் 164 சொற்கள் உள்ளன.[62] எனவே, சதுரகராதியில் உள்ளன-வற்றிலும் ஏறத்தாழ ஒன்றேகாற் பங்காகவே பின்னை அகராதிகளிற் காணப்படுகின்றன.

சதுரகராதியின் தொடையகராதி இறுதிப் பகுதியாகிய சிறப்புத் தொடைப்பதம் தொடையகராதியின் தாகத்தை நன்கு காட்டவல்லது. அப்பகுதியில் 11 சொற்றொகுதிகளைச் சதுரகராதி காட்ட 12-ஆம் தொகுதியாக, "சதுச்சந்நிதி-என்பதற்கு சதுச்சந்நிதி, புதுச்சந்நிதி என்பன இடை தொடைப் பதங்களாம்"[63] என்பதனைச் சேர்த்துப் பிற அகராதிகள் கூறுகின்றன. அப்பகுதியின் தொடக்கக் குறிப்பில், "அங்ஙனம் சிந்தாமணி முதற் பலவிலக்கியங்களில் வரும்படி"[64] எனச் சதுரகராதி கூற, பிற அகராதிகள் "சிந்தாமணி, கம்பராமாயணம், கந்தபுராணம் முதற் பலவிலக்கியங்களில் வந்-துள்ளன"[65] எனக் கம்பராமாயணம், கந்தபுராணம் ஆகியவற்றையும் சேர்த்துக் கூறுகின்றன. ஒவ்வொரு தொகுதியிலும் இரண்டொரு சொற்களைச் சேர்த்து காட்டுகின்றன. இரண்டாம் தொகுதியில் அகராதி காட்டும் நான்கு பதங்களோடு ஆனிலையிறை, வானிலைநதி

ஆகியவற்றயையும் சேர்த்துக் கூறுகின்றன. சதுரகராதியில் உள்ள நான்கு பதங்கட்கும் பொருள் கூறப்படாதிருக்கப் புதிதாகச் சேர்த்த வற்றிற்கு முறையே, திருவானிலை யென்னுந்தலத்து வீற்றிருந்தருளுஞ் சிவபெருமான், ஆகாயக்கங்கை ஆகிய பொருள்களைக் கூறுகின்றன. ஒவ்வொரு தொகுதியிலுமுள்ள சொற்கள் எவ்வெவ் விலக்கியங்களின்று எடுத்துக்காட்டப்பட்டனவோ, அவற்றில்கண்ட நிரன்முறைக்கு ஏற்ற வாறு சதுரகராதியில் அமையப் பிறவற்றில் சிலவற்றிற்கு மட்டும் அந் நிரன்முறை மாற்றப்பட்டு அகரநிரன்முறைப்படி அமைக்கப்பட்டிருக்கின்றன. சான்றாக முதற்றொகுதியில் உள்ள சொற்கள் சதுரகராதியில், செந்நீர்ப்பவளம், முந்நீர்ப்புணரி, அந்நீர்ப்பதுமம், பைந்நீர்க்கதலி, வெந்நீர்க்கடமா என அமையப் பிற அகராதிகளில் அந்நீர்ப்பதுமம், செந்நீர்ப்பவளம், பைந்நீர்க்கதலி, முந்நீர்ப்புணரி, வெந்நீர்க் கடமா என அகரநிரன் முறைப்படி அமைந்துள்ளன.[66] இப்பதங்களின் இறுதியில் கூறியவற்றைக் கொண்டு கூறாதனவற்றைத் தத்தம் அறிவாற்கண்டு கொள்ள வேண்டும் எனக் காட்டப்படும் சதுரகராதிக் குறிப்புச் சிறிதும் மாறாது பிறவற்றில் இடம் பெறுகிறது.

3. பல்வகைச் சிறப்பு அகராதிகளில் தாக்கம்

ஒரு மொழியின் சொற்பொருளை வேறுமொழியில் கூறும் அகராதிகள் தற்காலத்தில் பலவாகக் காணப்படுகின்றன. அவற்றுள் தமிழ்-ஆங்கில அகராதிகள் குறிப்பிடத்தக்கன. அடிகட்குப்பின் தோன்றிய அவ்வகராதிகளில் எல்லாம் சதுரகராதியின் தாக்கத்தைக் காணமுடிகிறது. சதுரகராதி வெளிவந்து 47 ஆண்டுகட்குப்பின், 1779-இல் முதல் தமிழ் - ஆங்கில அகராதி வெளியிடப்பட்டது. ஜோஹன் பிலிப் பேபிரியுஸ், கிறிஸ்டியன் பிரெதாப்ட் ஆகியோரால் தொகுக்கப்பட்டது; ஏறத்தாழ 9000 சொற்களைக் கொண்டது; 'தமிழும் இங்கிலேசுமாயிருக்கிற அகராதி' எனத் தமிழிலும் 'A Malabar and English Dictionary' என ஆங்கிலத்திலும் தலைப்புப் பக்கத்தைக் கொண்டுள்ளது.[67]

அவ்வகராதியின் மூன்றாம் பதிப்பில், முதலிரு பதிப்புரைகள் இடம் பெறுகின்றன. இரண்டாம் பதிப்பின் பதிப்புரை அப்பதிப்பின் சிறப்புக்களைக் கூறுகின்றது.[68] ஒன்றுக்கு இணையான பெயர்கள் இருப்பின், அவற்றை முன்னைப் பொருள்களோடு இணைத்துக் கூறியிருப்பதாகவும், ஓர்வித மரம், மரப்பொது போன்று வெற்று விளக்கங்களே பொருள்களாக உள்ளவற்றை நீக்கியிருப்பதாகவும் அப்பதிப்புரை தெரிவிக்கிறது. அக்குறிப்பால் முன்னைப் பதிப்பில் ஓர்விதமரம், மரப்பொது ஆசியவை பொருள்களாக இருந்தன என்பது உறுதி. அவ்வாறு பொருள்களை அமைத்திருத்தல் சதுரகராதியில் காணப்படுகிறது.[69] எனவே, அப்பொருளுக்குரிய பெயர்களை முதலில்

அவ்வகராதியினைத் தொகுத்தோர் சதுரகராதியினின்று எடுத்தாண்டமை தெரிகிறது.

இரண்டாம் பதிப்புரை குறிப்பிடுவது போன்று, அத்தி என்னும் பெயருக்குரிய பொருள்களாக எலும்பு, ஓர்மரம், கடல், கொலை, யானை போன்றவற்றைச் சதுரகராதி கூற[70] பின் வந்த பதிப்பு அவ்வாறு கூறவில்லை எனத் தெரிகிறது. மூன்றாம் பதிப்பில் புதிய சொற்கள் சேர்க்கப்பட்டனவன்றி இவ்வகை மாற்றங்கள் எதுவும் செய்யப்பட்டதுபோல் மூன்றாம் பதிப்புரை குறிப்பிடவில்லை.[71] எனவே மூன்றாம் பதிப்பில், அத்தி என்னும் பெயருக்குரியனவாகச் சதுரகராதி கூறும் பொருள்களில் ஓர் மரம் என்பதனை விடுத்து அத்தி மரம் என்றே கூறிப்பிற பொருள்களாகச் சதுரகராதி கூறுவனவற்றோடு மேலும் சிலவற்றைச் சேர்த்துக் கூறுவது[72] இரண்டாம் பதிப்பில் உள்ளனவே எனக்கருத இடமளிக்கிறது. அவ்வாறே, இரண்டாம் பதிப்புரை சமஸ்கிருதச் சொற்கள் உடுக் குறியிட்டு காட்டப்பட்டு இருப்பதாகக் குறிப்பிடுகிறது.[73] மூன்றாம் பதிப்புரை அது பற்றி எதுவும் குறிப்பிடாமையின், மூன்றாம் பதிப்பில் உடுக் குறியிட்டுக் காட்டப்பட்டிருப்பவை இரண்டாம் பதிப்பில் உள்ளவையே எனக் கொள்ள இடமளிக்கிறது. அகி, அகிலம் போன்ற உடுக் குறியிட்ட சொற்களும்[74] அவற்றுக்கான பொருள்கள் பலவும் சதுரகராதியிற் காணப்படுவனவே.[75]

மூன்றாம் பதிப்புரை பல சொற்களைச் சேர்த்துள்ளதாகக் குறிப்பிட்டாலும் அப்பதிப்புச் சில பகுதிகளில் அதிகமாகச் சேர்க்கவில்லை. ஞிகரத்தை முதலாகவுடைய சொற்பகுதியில் ஞிமிர், ஞிமிறு ஆகிய இரண்டும்,[76] ஞொகரத்தை முதலாகவுடையபகுதியில் ஞொள்கு என்பதும் அமைந்திருக்கின்றன. சதுரகராதியிலும் அவ்வெழுத்துக்களை முதலாகவுடைய பகுதிகளில் அவையே இடம் பெறுகின்றன.[77] அவற்றுக்கான பொருள்களும் ஏறத்தாழ நிகரானவையே. இவற்றினின்று, முதல் தமிழ்—ஆங்கில அகராதியிலும், அதன் பின்னைப் பதிப்புக்களிலும் சதுரகராதியின் தாக்கம் நிறைந்து காணப்படுவதை உணரலாம்.

கி.பி. 1830-ஆம் ஆண்டினை யொட்டி டாக்டர். ஜே. பி. ராட்லரால் தமிழ்-ஆங்கில அகராதி யொன்று உருவாகத் தொடங்கியது. அதன் 2, 3, 4 – ஆம் பாகங்கள் டபிள்யூ. டெய்லர்., டி. வெங்கடாசல முதலியார் ஆகியோரால் வெளியிடப்பட்டன. நான்கு பாகங்களும் சேர்த்து 1425 பக்கங்களில் அமைந்த அவ்வகராதியின் சொற்களும் பொருள்களும் பெருமளவில் சதுரகராதியினின்று எடுக்கப்பட்டன.[78] 1862–ஆம் ஆண்டில் ராட்லர் அகராதியிலும் விரிந்த அளவில் வின்ஸ்லோவின் தமிழ்-ஆங்கில அகராதி உருவாயிற்று. ராட்லர் அகராதி

யில் 36,901 சொற்கள் உள்ளன. அவற்றிலும் அதிகமாக 30,551 சொற்களைக்கொண்டு மொத்தம் 67,452 சொற்களோடு இவ்வகராதி வெளிவந்தது.[79] ராட்லர் அகராதியில் உள்ள சொற்களெல்லாம் இதன்கண் உள்ளதெனலாம் அவ்வாறாயின் ராட்லர் அகராதி எடுத்தாண்ட சதுரகராதிச் சொற்களும் அவற்றுள் உண்டெென்பது உறுதி.

பள்ளிகளின் உபயோகத்திற்கென 'உயர்நிலைத் தமிழ்-ஆங்கில அகராதி' என்னும் பெயரில் ஓர் அகாாதி 1870-இல் பொதுக்கல்வி இயக்குநரின் ஆணைப்படி ஹெச். டபிள்யூ. லாரி என்பாரால் அச்சிடப் பட்டுள்ளது.[80] அதன் தலைப்புப் பக்கத்தில் பெஸ்கியின் தமிழ் அகராதியின் முதற் பிரிவினைத் தழுவி அமைக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. அ, அகக்காழ், அகங்காழ், அகங்கை, அகடு, அகணி, அகணிதம், அகண்டம், அகண்டாகண்டன், அகத்தி, அகநிலை, அகப்பா, அகப்பு, அகமம், அகமலர்ச்சி, அகம், அகம்மியம், அகரம் முதலியன தொடக்கத்தில் இடம் பெறுகின்றன. இவையனைத்தும் சதுரகராதியில் இடம் பெறுவன. இவற்றின் பொருள்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் கொடுக்கப் பட்டிருக்கின்றன. தமிழ்ப் பொருள்கள் அனைத்தும் சதுரகராதியில் உள்ளவையே. சிறு வேறுபாடுகூடக் காணப்படவில்லை.

தமிழ்ச் சொற்களுக்கு லத்தீனில் பொருள் கூறிப் பிற்காலத்தில் தோன்றியவற்றிலும் சதுரகராதியின் தாக்கம் உள்ளது. 'திக்ஷினேரியம் தமுலிகோ-லத்தீனம்' என்னும் பெயரில் நாகப்பட்டினத்தில் 1852இல் ஓர் அகராதி வெளியாயிற்று. எஸ். கிரே என்பார் அதனைத் தொகுத்துள்ளார்.[81] 254 பக்கங்களைக் கொண்டுள்ளது பெஸ்கி, ராட்லர் ஆகியோரது அகராதிகளினின்றும் சொற்கள் தொகுக்கப்பட்டது என்னும் குறிப்புக் காணப்படுகிறது. இறுதி இரண்டு பக்கங்களில்,[82] பெஸ்கி அடிகள் அகராதிகளின்று தொகுக்கப்பட்ட பழமொழிகள் இடம் பெறுகின்றன.[83] இவை அடிகளது தமிழ்-லத்தீன் பேச்சு மொழி அகராதியினின்று எடுக்கப்பட்டவை என்பதால் அவ்வகராதியின் தாக்கம்மட்டும் இவ்வகராதியில் உள்ளது எனக்கொள்ள இடம் உண்டெனினும், முன்னுரையில் சதுரகராதிச் சொற்கள், ராட்லரின் தமிழ்-ஆங்கில அகராதியின் சொற்கள் அனைத்தும் பயன்படுத்தப்பட்டிருப்பதாகக் குறிப்பிடப்படுகிறது. அதனையொட்டியே செந்தமிழ், கொடுந்தமிழ் என இருவேறு வகையாக, பெஸ்கி அடிகள் காட்டிய சொற்கள் ஒருங்கே இவ்வகராதியில் தொகுக்கப்பட்டதாகக் கருதுகின்றனர்.[84]

பிரெஞ்சு சமயத்தொண்டர் கழகத்தைச் சார்ந்த முசேது, பெய் ஆகியோரால் தமிழ்-பிரெஞ்சு அகராதி தொகுக்கப்பட்டுள்ளது. அதன் முன்னுரையில், ''ராட்லர் அகராதி, யாழ்ப்பாண அகராதி, பெஸ்கியின்

சதுரகராதி, கிரே அடிகளது தமிழ்-இலத்தீன் அகராதி முதலியவற்றி-னின்று அடிப்படையான சொற்களைப் பெற்றதால் அவற்றிற்கு நன்றி செலுத்துகிறோம்'' என ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.[85] அதனின்று சதுரகராதியின் தாக்கம் அதன்கண் படிந்திருப்பது வெளிப்படை. இவ்வாறு, சதுரகராதிக்குப் பின்னர், இருமொழி அகராதிகள் படைக்க எண்ணியோர் அனைவரும் சதுரகராதியை அடிப்படையாகக் கொண்டு செயல்பட்டுள்ளனர்.

அகராதிகளுள் சென்னைப் பல்கலைக்கழகத்தின் சார்பில் வெளியிடப்பட்ட தமிழ் லெக்ஸிகன் தனிச்சிறப்பு வாய்ந்தது. முன்னைய அகராதிகள் அனைத்திலும் அது ஒருபடி முன்னேறியுள்ளது.[86] பல அகராதிகளுள் தனித்தனியே காணக் கிடக்கும் சிறப்புக் கூறுகள் அனைத்தும் ஒருங்கே அமையப்பெற்ற அகராதியாக உருவாகிறது ஆங்கிலத்திலும் தமிழிலும் விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளன; தக்க மேற்கோள்கள் காட்டப்பட்டுள்ளன; சொற்பிறப்பில்கூடக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இவ்வகராதியிலும் சதுரகராதியின் தாக்கம் இருத்தல் சாலும் என்பதற்கு அவ்வகராதிக்குரிய ஆதாரங்களைக் குறிக்குமிடத்தில், ''வின்ஸ்லோவின் அகராதி மட்டுமின்றி, இதற்குமுன் வெளிவந்த சதுரகராதி, பேப்ரிசியுஸ் அகராதி, ராட்லர் அகராதி, யாழ்ப்பாண அகராதி, சங்க அகராதி போன்றவையனைத்தும் பயன்படுத்தப்பட்டன''[87] என்று சுட்டப்படுவதால் உணரலாம்.

அவ்வகராதி சில சொற்களுக்கு ஆதாரங்களாக வேறு நூல்களை காட்டினும் உண்மையில் அச்சொற்களுக்குச் சதுரகராதியே ஆதார மெனலாம், சான்றாக அனுபந்தமாக வெளிவந்த முதற் பகுதியில் 'அண்ணல்' என்னும்சொல்லுக்குரிய பொருள்களுள் ஒன்றாக அருகன் என்பதனைக் குறித்து நாநார்த்த திபிகையையும்[88] அரிணைக்குரிய 'கள்' என்பதற்கு வைத்திய மூலிகை அகராதியையும்[89] ஆதார நூல்களாகக் கொள்வதிலும் சதுரகராதியை அச்சொற்கட்கு[90] ஆதார நூலாகக் கொள்வதே தக்கதெனலாம்.

யாழ்பாணத்தைச் சார்ந்த ஞானப்பிரகாச அடிகளால் வெளி யிடப்பட்ட சொற்பிறப்பு-ஒப்பியல் அகராதி பிறவற்றினின்றும் வேறு பட்டது. அதன் முகவுரை, ''இதுகாறும் பல அகராதிகள் வெளிவந்-திருப்ப, நாம் புதிதாய் ஓர் அகராதி வெளியிடுவது யாதுக்கு என்றல் இப்போது தெளிவாகும். இதன் முன் தமிழ் அகராதி செய்தோர் எல்லாம், ஒவ்வோர் சொல்லிற்கும் உரிய பொருட்களை ஆராய்ந்து மேலும் மேலும் சிறப்புற விளக்கினாரே அன்றிச் சொற்களுக்குப் பிறப்பிடமாய் நின்ற அடிகளை முறைப்படி தேடிக் கண்டு அவ்வவற்றின்கீழ் அவ்வவற்றின் கிளைச்சொற்கள் கூட்டங்களை அமைத்தார் அல்லர்''[91] எனக்கூறி அக்குறை போக்கவே அவ்வகராதி

எழுந்ததாகக் கூறுகிறது. அவ்வகராதி எவ்வெவற்றை ஆதார நூல்களாகக் கொண்டது என்னும் நூற்பட்டியலில் சதுரகராதியும் இடம்பெறுகிறது.[92] அகர முதலாகவுள்ள சொற்களில் அவ்வகராதி ஆளும் அகடு, அகண்டி, அகணி, அகரு போன்ற சொற்களும்[93] அவற்றுக்கான பொருள்களும் சதுரகராதியில் உள்ளனவாகக் காணப்படுகின்றன.[94]

சிறப்புப் பெயரகராதி என்னும் பெயரில், 1908-இல் ஈக்காடு, இரத்தினவேலு முதலியாரால் ஓர் அகராதி வெளியாயிற்று. உலகு புகழ் கருவி நூற்றொகையுள் ஆய்ந்தோர் உய்த்துரைத்த புங்கவர், புலவர், மன்னர், நகர், கிரி, நதிகளில் இலங்கும் நூல்கள் இவை போன்ற பெயர்களைச் சரிதச் சீரோடு மாணவர்க்குத் தொகுத்து அருஞ் சிறப்புப் பெயரகராதி எனத்தந்திருப்பதாக முகவுரையில் இறுதியிலமைந்த விருத்தப்பாவில் ஆசிரியர் குறிப்பிடுகிறார். அதில் சதுரகராதியின் தாக்கத்தைப் பிரபந்தங்கள் என்னும் பெயருக்குக் கொடுக்கப்படும் விளக்கத்தால் தெளியலாம். தொகையகராதியில் அடிகள் சுட்டும் பிரபந்தம்-96 என்பவை யாவையெனச் சுட்டி அவற்றுக்கான இலக்கணங்களையும் காட்டுகிறார்.[95] தொடக்கத்தில், இது புலவர்களால் அலங்கார கற்பனை நயங்கள் பொருந்தச் செய்தன எனச் சொல்லுவதும், 96 பிரபந்தங்களின் பெயர்களையும் தொகுத்து முன்னர்ச் சொல்லிவிட்டுப் பின்னர் அவற்றின் இலக்கணங்களைக் கூறுவதும் சொல்லும் முறையில் இவ்வகராதி ஆசிரியர் மேற்கண்ட சிறு முறை மாறுபாடின்றி, வகைகளிலோ, இலக்கணங்களிலோ எவ்வித வேறுபாடும் காணப்படவில்லை.

அகராதி சுருங்கிய அளவில் சொல்லின் விளக்கம் மட்டுமே தரும். கலைக்களஞ்சியம் அறிவிற்கு எட்டிய முழுப் பரப்பையும் வாரிக் கொணர்ந்து விளக்குவதே நோக்கமாகக் கொள்ள வேண்டும்.[96] அவ்வாறிருக்கச் சதுரகராதியின் சுருங்கிய விளக்கம் கலைக்களஞ்சியத்திலும் ஆளப்பட்டிருத்தல் அதன் செல்வாக்கைக் காட்டும். தமிழில் கலைக்களஞ்சியத்தின் முன்னோடியெனச் சிங்காரவேலு முதலியாரால் இயற்றப்பட்ட அபிதான சிந்தாமணியைக் குறிக்கலாம். அதனுள் அமைந்த பிரபந்தங்கள் பற்றிய விளக்கம் சதுரகராதியில் உள்ளதாம்.[97] செம்மையான தமிழ்க் கலைக்களஞ்சியம் தமிழ் வளர்ச்சிக் கழகத்தால் உருவாக்கப்பட்டது. பிரபந்தம் பற்றிய விளக்கங்கள் இல்லையெனினும் எண்ணிக்கை சதுரகராதியில் உள்ளவாறு அதனுள்ளும் காணப்படுகிறது.[98] இவ்வாறாகச் சதுரகராதிக்குப் பின்னர் பொருள் விளக்க நோக்கத்தில் தமிழ்மொழித் தொடர்பாக எழுந்த அனைத்து நூல்களிலும் அதன்தாக்கம் காணப்படுவது அதன் சிறப்பினை எடுத்துக் காட்டுகிறது.

அடிக்குறிப்பு

1 சுந்தரசண்முகம், பக். 268.
2 சூடாமணி, பதினோராம் தொகுதி, ஙகரவெதுகை, பக். 7.
3 பொதிகை நிகண்டு, இரண்டாம் பகுதி, நூற்பா, 1154.
4 சதுரகராதி. 1, பெயர். பக். 87.
5 பிங்கலம், நூற்பா, 3591.
6 பொதிகை நிகண்டு, இரண்டாம் பகுதி, நூற்பா, 1153.
7 சதுரகராதி-1, பெயர், பக். 87.
8 அரும்பொருள் விளக்க நிகண்டு, பதிப்புரை, பக். 27.
9 அகராதி நிகண்டு, அகராதி போர்த்தொகுதி, நூற்பா., 93.
10 சூடாமணி, பதினோராம் தொகுதி, ககரவெதுகை, பக். 5.
11 சதுரகராதி–1, பெயர், பக். 1.
12 நானார்த்த தீபிகை, முன்னுரை, பக். viii.
13 ………………, பக். xvi.
14 ………………, தற்சிறப்புப்பாயிரம், பக். 3.
15 ………………, செய்யுள், 9, 15, 18, 145, 204, 207, 967, 970.
16 ………………, பக். xii.
17 ………………, சிறப்புப்பாயிரம், பக். xv.
18 சுந்தரசண்முகம், பக். 443.
19 ………………, 284.
20 ………………,
21 பிங்கலம், நூற்பா, 3032.
22 சூடாமணி, பதினோராம் தொகுதி, ககரவெதுகை, பக். 3.
23 அகராதி நிகண்டு, அகராதிப் போர்த்தொகுதி, நூற்பா, 218.
24 சதுரகராதி-1, பெயர், பக். 1.
25 சுந்தரசண்முகம், பக். 273.
26 ………………, 443.
27 உரிச்சொல் நிகண்டு, பக். 57.
28 நாமதீப நிகண்டு, செய்யுள், 451, 452
29 சதுரகராதி-1, பொருள் பக்., 35
30 பிங்கலம், நூற்பா, 742
31 சூடாமணி, பெயர்ப்பிரிவு, பக். 35
32 சதுரகராதி–1, பொருள் பக். 84
33 நாமதீப நிகண்டு, செய்யுள், 144
34 சுந்தரசண்முகம், பக். 265.
35 பொருட்டொகை நிகண்டு, நூற்பா, 892, 894, 896, 915, 919, 944, 952, 971, 972, 973, 975.
36 … ………………, 976.
37 சூடாமணி, பல்பெயர்க்கூட்டத்தொரு பெயர்த்தொகுதி, பக். 29

38 சதுரகராதி-1, தொடை, பக். 1
39 சூடாமணி, பல்பெயர்க் கூட்டத்தொருபெயர்த் தொகுதி, பக். 27
40 சதுரகராதி-1, தொடை, பக். 1.1.
41 ஜூபிலி தமிழ்ப் பேரகராதி, பக். 1. i.
42 ...., iii.
43 தமிழ்ச் சொல்லகராதி, முதற்பாகம், பக். 5
44 தமிழ்ப்பேரகராதி, சூசிபத்திரம்.
45 ....
46 தமிழ்ப் பேரகராதி-2. தலைப்புப் பக்கம்.
47 20 ஆம் நூற்றாண்டுத் தமிழகராதி, பதிப்புரை.
48 தமிழ்ச் சொல்லகராதி, முதற்பாகம், பக். 6
49 ...., 7
50 தமிழ்மொழியகராதி, தலைப்புப் பக்கம்.
51 .... ஆங்கில முன்னுரை.
52 ஜூபிலி தமிழ்ப் பேரகராதி, தலைப்புப் பக்கம்.
53 ...., ஆங்கில முன்னுரை.
54 சுந்தரசண்முகம், பக். 342.
55 Gnanapragasam, V. M., p , 389.
56 தொகையகராதி, பதிப்புரை.
57 தமிழ்ப் பேரகராதி-2, தொகையகராதி, பக். 249
58 தமிழ் இலக்கிய அகராதி, பக். 432.
59 வைத்திய மூலிகை விரிவகராதி, பக். 271.
60 சதுரகராதி-1, தொடை, பக்., 135-147.
61 20-ஆம் நூற்றாண்டுத் தமிழ் அகராதி தொடை, பக், 366-368.
62 ஜூபிலி தமிழ்ப்பேரகராதி, தொடை, பக். 1382-1384.
63 தமிழ்ப்பேரகராதி-1 தொடை, பக். 118
64 சதுரகராதி-1, தொடை, பக், 137.
65 தமிழ்ப் பேரகராதி, தொடை, பக். 117
66 20-ஆம் நூற்றாண்டுத் தமிழ் அகராதி, தொடை. பக். 623.
67 Tamil Lexicon p , xxxvii.
68 A Dictionary of Tamil and English, p., iv
69 சதுரகராதி-1, பெயர், பக். 5
70 ....
71 A Dictionary of Tamil and English, p. iv, v.
72 19
73 ....
74 ...., 3
75 சதுரகராதி-1, பெயர் பக். 2
76 A Dictionary of Tamil and English, p. 468
77 சதுரகராதி-1, பெயர், பக். 88.

78 Tamil Lexicon, p, xxxix.
79 ... . - ...
80 Classical Tamil-English Dictionary, Title Page.
81 DICTIONARIUM TUMULICO-LATINUM, Title Page.
82 ...., P. 253, 254.
83 பின்னிணைப்பு-24.
84 Meenakshisundaram, K., p. 271.
85 ... ...
86 Tamil Lexicon, P., xiv.
87 ...., lii.
83 ...., Supplement I Part, p. 30.
89 ...., 63.
90 சதுரகராதி-1, பெயர், பக்.4, 9.
91 சொற்பிறப்பு-ஒப்பியல் தமிழ் அகராதி, I, P. xxv.
92 ...., xxxiv.
93 ....,
94 சதுரகராதி-1, பெயர், பக்., 1.
95 சிறப்புப் பெயரகராதி, பக். 465.
96 Fung and Wagnulls, p. 705.
97 அபிதான சிந்தாமணி-1, பக். 683.
98 கலைக்களஞ்சியம், தொகுதி, 7, பக். 287.


தொகையகராதி

முடிவுரை :

மேனாட்டு மொழிகள் கண்டிருக்கிற பல்துறை வளர்ச்சிக்கூறுகளும் தமிழ் மொழிபெற ஐரோப்பிய அறிஞர்களே காரணராயினர். அவர்களுள் பெஸ்கி அடிகள் தலைமையிடம் பெறக் காரணமானவற்றுள் சதுரகராதி முன் நிற்கிறது. அதற்குமுன் தமிழகத்தில் தோன்றியிருந்த சொற்பொருட்கூறு கொண்ட நூல்களின் சிறப்பியல்புகளையெல்லாம் ஒருங்கே தன்னுள் அடக்கிக் கொண்டு, அவற்றோடு மேனாட்டு அகராதியியற் சாயலையும் சேர்த்துப் பின்னர்ப் பொருள் விளக்கும் நோக்கில் எழுந்த அனைத்து நூல்களுக்கும் தந்துதவிய பெருமைக்குரியதாகச் சதுரகராதி திகழ்கிறதெ ன இவ்வாய்வு முயற்சியால் உணரலாம்.

இவ்வாய்வில் ஈடுபட்டகாலை அறியவந்த இன்றியமையாத கண்டுபிடிப்புக்கள், உண்மைகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

(அ) அடிகளது வாழ்வு பற்றியன.

(i) விரமாமுனிவர் என்னும் பட்டம் பெஸ்கி அடிகட்குத் தமிழ்ச் சங்கத்தாரால் வழங்கப்பட்டதாகத் தெரிந்திலது.

(ii) சுப்பிரதீபக் கவிராயர் பெஸ்கி அடிகளின் ஆசிரியர் எனக் கருதுதற்கு இடமில்லை.

(ஆ) அகராதியியல் பற்றியன.

(i) தொல்காப்பியம் எழுத்துக்களின் அகரநிரன் முறையினைக் குறிப்பாகக் காட்டி நிற்கிறதெனக் கொள்ளலாம்.

(ii) பிங்கல நிகண்டின் பத்தாம் தொகுதி 1,077 சொற்கட்குப் பொருள் கூறுகிறது.

(இ) சதுரகராதி பற்றியன.

(i) பெயரகராதியில் 12187 சொற்கள் உள்ளன.

(ii) சதுரகராதி இதுகாறும் பத்துப் பதிப்புக்களைக் கண்டிருப்பதாகக் கொள்ளலாம்.

(ஈ) தமிழ் வரலாற்றுக்குரியன.

(i) ஓர் என்னும் வடிவத்தின் முன் மெய்யும் வரலாம் என்பதே பழந்தமிழ் ஆசிரியர்களின் கருத்தாகும்.

(ii) பிரபந்தங்கள் 96 என வரையறை கண்டதற்கு அடிப்படை உண்டு.

(உ) முதன்முறையாகக் காட்டப்படுவன.

(i) பெஸ்கி அடிகளை மொழியியல் முன்னோடிகளுள் ஒருவராகக் கொள்ள இடமுண்டு.

(ii) ஆங்கில அகராதியியலின் முழுமை பெற்ற நிலையினைத் தமிழ் அகராதியியல் பெஸ்கி அடிகளால் முதலிற் பெற்றது.

இலக்கிய வரலாற்றில் சிறுபடைப்புக்கள் சிலவற்றைத் தந்தாரேனும் அவற்றின் சிறப்பு நோக்கி அறிஞர்கள் பாராட்டப்படுவது உண்டு; ஒரே படைப்பாயினும் அஃதன் அருமை கண்டு வியந்து அப்படைப்பாளரைப் புகழ்வதும் உண்டு. பெஸ்கி அடிகள் தமிழுக்குப் படைத்தளித்த பல்வகைப் படைப்புக்கட்காகப் பாராட்டுப் பெறும் தகுதியினராயினும், சதுரகராதிப் படைப்பு ஒன்று மட்டும் அத்தகுதியைப் பெறக் கருவியாய் அமையப் போதுமானது என இவ்வாய்வாற் புலப்படலாம்.

தமிழ் - பிறமொழிச் சொற்பட்டியல்

அகநிலை ஒப்பீடு — Internal Reconstruction
அகரநிரன் முறை — Alphabetical Order
அகராதி — Dictionary
அகராதியியல் — Lexicography
அடிகள் — Father
அட்டிக் — Attic
அணிக்கலை — Art of Rhetoric
அந்தோணி டி பிரெயென்ஸா — Antony De Proenca
அபிதான ரத்னமாலா — Abidhanaratnamala
அப்பல்லோனியஸ் — Appollonius
அமரஸிம்ஹா — Amarasimha
அம்பலக்காடு — Ambalaccat
அரிச்சுவடி — Abecedarium
அரிஸ்டோபேன்ஸ் — Aristophanes
அலெக்ஸாண்டிரியா — Alexandria
ஆக்ஸ்போர்டு — Oxford
ஆங்கிலம் — English
ஆங்கிலோ சாக்ஸன் — Anglo - Saxon
ஆண்டுக் கடிதங்கள் — Annual Letters
ஆயர் — Bishop
இங்கிலாந்து — England
இத்தாலி — Italy
இந்திய மொழித் தொகை — Linguistic Survey of India
இஸ்மாத்தி — Ismatti Sanyasi
ஈற்றயல் — Penultionate
உயர்தமிழ் — Classical Tamil
உயர்வுப்பன்மையொருமை — Honorific Singular
உயர்வொப்புமைப்பொருண்மை — Superlative Degree
உருபனியல் — Morphology
உருபொலித் தெளிவியல் — Morpho - Phonemice
எலிஸபெத் — Elizabeth
எலிஜா ஹூல் — Elijah Hoole
எல்லீஸ் — Ellis
ஐரோப்பியர் — Europeans
ஒப்பியன் மொழியியல் — Comparative Linguistics
ஒப்புமைப் பொருண்மை — Ablatives
ஒப்புமை மொழியியல் — Contrastive Linguistics
ஒலித்தெளிவியல் — Phonemics

ஒலியணியல் — Phonology
ஒலியன் — Phoneme
ஒலியியல் — Phonetics
கத்தோலிக்கர் — Catholics
கவுண்ட் கொண்டல்போ — Count gandolfo
கார்கம் — Gargum
கார்டோஸ் — Courdoux
கால்டுவெல் — Caldwell
கான்ஸ்டன்ட் ஜோசப் — Constant Joseph
காஸ்திக்கிளியோனே — Castiglione
கிரியர்ஸன் — Grierson
கிரீக் — Greek
கிரீஸ் — Greece
கிரே — Grey
கிரேக்க மொழிக் கருவூலம் — Thesaurus Graccae Vocabulorum
கிறிஸ்டியன் பிரெதாபட் — Christian Breithaupt
குருத்துவம் — Priesthood
குருமடம் — Seminary
குறியீடு — Script
கையடக்கச் சொற்கள் — Manipulus Vocabulorum
கொச்சி — Cochin
கொடுந்தமிழ் — Common Tamil
கோவா — Goa
சமயத் தொண்டர் — Missionaries
சமஸ்கிருதம் — Sanskrit
சாமுவெல் ஜான்ஸன் — Samuel Johnson
சீகன்பால்கு — Zieganbalg
சூத்ர — Sudra
செக்ஸ்டஸ் பாம்பேயூஸ் — Sextus Pompeius
செந்தமிழ் — High Tamil
செம்மொழி அகராதி — Lexicon
சேசு சபை — Society of Jesus
சொற்கருவூலம் — Thesaurus
சொற்கிடங்கு — Promptorium
சொற்றேன் கூடு — Alvearie
சொற்றொகுதி — Dictionary
சொற்றோட்டம் — Ortus Vocalbulorum
ஞானஸ்நானம் — Baptism
டி போர்ஸிஸ் — De Bourzes

டெய்லர் — Taylor
டொமினிக் மெடைரா — Dominic Medira
தமிழ்மொழிக் களஞ்சியம் — Thesaurus of the Tamil Language
தமிழ் — லத்தீன் பேச்சுமொழி அகராதி — Vulgaris Tamulicee Linguae Dictionorium Tamilice/Latinum
தமிழ் லெக்ஸிகன் — Tamil Lexicon
தரங்கம்பாடி — Tranquebar
திக்ஷினேரியம் தமுலிகோ லத்தீனம் — Dictionarium Tamulico - Latinum
திராவிடம் — Dravidiam
திறவுகோல் — Clavis
தூபெய் — Dupuis
தூய சவேரியார் — Saint Xavier
தேசிய நூலகம் — National Library
தொடரியல் — Syntax
த்ரிகண்டசேஷா — Trikandasesha
நாமலிங்கானுசாசனா — Namalinganusasana
நிருக்டா — Nirukta
நிலப்படம் — Map
நைட் — Knight
பதினான்காம் லூயி — Lui IV
பல்தேயுஸ் — Baldaus
பாரீஸ் — Paris
பிமெண்டல் — Pimental
பிராட்டஸ்டன்ட் — Protestant
பிராஸ்பர் கியுஸியானி — Prosper Cueceani
பிரெஞ்ச் — French
பிரெஞ்ச் அகாடமி — French Academy
பிரெஞ்ச் நிறுவனம் — French Institute
பிரெடரிக் வான் ஷ்லெகெல் — Frederich Von Schlegel
பீட்டர் லாலேன் — Peter Lalen
பீட்டர் லெவின்ஸ் — Peter Levins
புருஷோத்தம தேவா — Purushottamadeva
பெட்ரண்ட் — Betrand
பெர்சிவல் — Percival
பெஸ்கி — Beschi
பேப்ரிசியுஸ் — Fabricius
பொருளியற்கூறு — Semantics

போர்த்கீஸ்-லத்தீன்-தமிழ் அகராதி— Vulgarie Tamulicae Linguae
— Dictionarium, Par Secunda,
— mque Lusitanis Vocilres Latine
— explicatis
போலோக்னா — Bologna
மகோன் — Mahon
மக்டாலென் — Magdalen
மங்ககோஸா — Mankhakosa
மங்கா — Mankha
மஹேஸ்வரா — Maheswara
மதுரை மறைபரப்புப் பகுதி — Madu.a Mission
மலபார் மறைபரப்புப் பகுதி — Malabar Mission
மலேயா — Malaya
மார்க்குஸ் டெரின்டஸ் வேரோ — Marcus Terintius Verro
மாற்றுவழக்கு — Contrastive Distribution
முசெ — Mousset
மாற்றொலி — Allophone
முற்று வழக்கு — Complementary Distribution.
முன்னைத்திராவிடம் — Proto - Dravidiam
முன்னொட்டு — Prefix
மேலைநாடு — Western Countries
மைலாப்பூர் — Mylapore
மொழியியலார் — Linguists
யாதவப்பிரகாஸா — Yadavaprakasa
யாஸ்கா — Yaska
ரம்போலா மாஸ்கரனேஸ் — Ramboia Muscharanhas
ராச்சால் — Rachol
ராட்லர் — Rottler
ராபர்ட் ஈன்ஸ்டீன் — Robert Einstine
ராபர்ட் காட்ரே — Robert Gawdrey
ராபர்ட் டி நோபிலி — Robert De Nobile
ரிச்சர்டு கிளார்க் — Richard Clarke
ரேவன்னா — Ravenna
ரோமன்சபை — Roman Catholic Mission
ரோம் — Rome
லத்தீன் — Latin
லத்தீன் சொற்கருவூலம் — Thesaurus Linguae Latinae
லாரி — Lawrie
லிஸ்பன் — Lisbon
லூத்தரன் சபை — Lutheran Mission

லோக்மன் — Logman
வட்டாரவழக்கு — Dialect
வரலாற்று மொழியியல் — Histroical Linguistics
வரிப்படம் — Tree Diagram
வரைகோடு — Diagram
வரைபடம் — Graph
விளக்க மொழியியல் — Descriptive Linguistics
வின்சான் — Vinson
வின்ஸ்லோ — Winslow
விஸ்வப்ரகாஸா — Visvaprakasa
வெக்காபுலெரியோ டிக்லி — Vacabulario degli Academici
அக்கடமிஸி டில்லா க்ருஸ்கா — della crusca
வெரியூஸ் பிளாக்கஸ் — Verrius Flaccus
வெளிக்காட்டி — Expositor
வெனிஸ் — Venice
வைஜயந்தி — Vaijayanti
ஸ்மித் — Smith
ஸ்பானிஷ் — Spanish
க்ஷீத்ர — Tshudira
ஜூலியஸ் போலக்ஸ் — Julius Pollux
ஜெர்மன் — German
ஹலாயுதா — Halayudha
ஹேமச்சந்திரா — Hemachandra
ஹாங்ஸ்லெண்டன் — Hanxlenden
ஹீப்ரு — Hebrew
ஹென்றி ஈன்ஸ்டீன் — Henry Ensteen
ஹென்றிச் ரோத் — Henrich Rodh
ஹோமரிக் லெக்ஸிகன் — Homer'c Lexicon

கருவி நூற்பட்டியல்

(அ) தமிழ்

1 அகநானூறு, மர்ரே அண்டு கம்பெனி, சென்னை 1, 1959.

2 அகராதி நிகண்டு, நாராயணையங்கார் (பதிப்பு). தமிழ்ச் சங்கம். மதுரை 1921.

3 அடியார் வரலாறு. இராசமாணிக்கம் சே. ச. (பதிப்பு) தமிழ் இலக்கியக் கழகம், தூத்துக்குடி. 1967.

4 அடைக்கலநாயகிமேல் வெண்கலிப்பா (திருப்பாவணி), புதுவை மாதாக் கோவில் அச்சுக்கூடம், 1929.

5 அடைக்கலமாலை (திருப்பாவணி), புதுவை மாதாக்கோவில் அச்சுக்கூடம் 1929.

6 (i) அபிதான சிந்தாமணி 1, சிங்காரவேலு முதலியார், ஆ., தமிழ்ச் சங்கம், மதுரை, 1910.
(ii) .... 2, சிவப்பிரகாச முதலியார் (திருத்தம்), ஸி. குமாரசாமி நாயுடு சன்ஸ், சென்னை, 1934.

7 அரும்பொருள் விளக்க நிகண்டு S. வையாபுரிப்பிள்ளை (பதிப்பு), தமிழ்ச்சங்கம், மதுரை. 1931.

8 அறவாணன், க. ப. (கட்டுரை) இந்தியப்பல்கலைக்கழகத் தமிழ் ஆசிரியர் மன்ற நான்காவது கருத்தரங்குமலர், 1972.

9 ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நமச்சிவாயன், கா. (பதிப்பு), தமிழ்க்கடல் ஆபீஸ், சென்னை, 1930.

10 ஆபிரகாம் அருளப்பன், சில இலக்கண ஆய்வுக்கட்டுரைகள், அருள் அச்சகம், பாளையங்கோட்டை, 1971.

11 இராசமாணிக்கனார், மா., மேனாட்டுத் தமிழறிஞர், எம்பர தாழ்வார் அப்பாத்துரை அண்டு கம்பெனி, சென்னை - 1, 1950.

12 இராயர், வீரமாமுனிவரின் இன்னிசைப்பா, இலக்கிய நூலகம், கட்டனூர், 1975.

13 இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் அகராதி, இராமனாதன், P, தி. கோபால் நாயக்கர் வெளியீடு, சென்னை, 1909.

14 இன்னாசி, சூ. 1, எழுத்தியல். தமிழரசன் பதிப்பகம், பாளையங்கோட்டை, 1975.

15 ....2 சொல்லியல் தமிழரசன் பதிப்பகம், 1976.

16 ....3 திருமொழியுள் ஒருமொழி (தமிழரசன் பதிப்பகம், பாளையங்கோட்டை), 1975.

17 இலக்கணத்தொகை (எழுத்து) சுப்பிரமணியன், டாக்டர். ச. வே. ஜெயகுமாரிஸ்டோர்ஸ், நாகர்கோவில், 1967.

18 இலக்கணத்தொகை (சொல்) சுப்பிரமணியன், டாக்டர். ச. வே., ஜெயகுமாரிஸ்டோர்ஸ், நாகர்கோவில், 1971.

19 இறையனாராகப்பொருள், பவானந்தப்பிள்ளை, ச. (பதிப்பு), சென்னை-1916.

20 உரிச்சொல் நிகண்டு, சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், 1971.

21 கலித்தொகை, புலியூர்க்கேசிகன் (பதிப்பு), பாரி நிலையம், சென்னை-1. 1965

22 கலைக்களஞ்சியம், தொகுதி 5, தமிழ் வளர்ச்சிக்கழகம், சென்னை, 1958.

23 ....தொகுதி7, தமிழ் வளர்ச்சிக்கழகம், சென்னை.

24 குமாரசாமிப்புலவர், சுன்னாகம், அ., தமிழ்ப்புலவர் சரித்திரம், சிவராமலிங்கையர், ச. இ. (பதிப்பு) நள வருஷம், கார்த்திகை மாதம்.

25 (i) சதுரகராதி - 1, தாண்டவராய முதலியார், இராமச்சந்திர கவிராயர் (பதிப்பு) சென்னைச் சங்கம், 1924.

(ii)............ 2, இஸ்மித், ஜே. (பதிப்பு) E. Gordon's Press, Madras, 1835.

(iii)..............................3,.......................................

Commericial Advertiser's Office-Madras, 1845.

(iv).......................4. Public Instruction Press, Madras 1860.

(V)....................... 5, ... Foster and Co (Printers). Vepery, Madras, 1876.

(VI)................................ 6, கிருஷ்ணசாமி நாயுடு, நா. (பதிப்பு) இ. மா. கோபால கிருஷ்ண கோன் வெளியீடு, மதுரை, 1928.

26 சாமா சுவாமிகள் (பதிப்பு), சுவாமி வீரமாமுனிவர் நினைவுமலர், கத்தோலிக்க சேவா சங்கம், மதுரை, 1944.

27 சிலப்பதிகாரம், சாமிநாதையர், டாக்டர். வே. (பதிப்பு), தியாகராச விலாச வெளியீடு, சென்னை, 1968

28 சிறப்புப் பெயரகராதி, இரத்தினவேலு முதலியார், ஈக்காடு பண்டித மத்திர யந்திரசாலை, 1908.

29 சிறுபாணாற்றுப்படை, பெர். வே. சோமசுந்தரனார் (பதிப்பு) சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், 1970

30 சின்னக் குறிப்பிடம், தமிழ் இலக்கியக் கழகம், திருச்சிராப்பள்ளி,

31 சீவகசிந்தாமணி, (2பகுதிகள்) அரசு, சோமசுந்தரம் (உரை), சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்.

32 வேங்கடசாமி, மயிலை. சீனி., கிருத்துவமும் தமிழும், சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், 1948

33 சுந்தரசண்முகனார். தமிழ் அகராதிக்கலை, சைவசித்தாந்த நூற் பதிப்புக்கழகம், 1971.

34 சுந்தரம், ஜே. ஜி. தமிழ்த் தொண்டர், தமிழ் இலக்கியக் கழகம், தூத்துக்குடி, 1950

35 ...., தமிழ் இலத்தீன் பாலம், பாரிநிலையம், சென்னை 1970.

36 சுப்பிரமணியபிள்ளை, கா. இலக்கியவரலாறு, இரண்டாம் பாகம் ஆசிரியர் நூற்பதிப்புக்கழகம், சென்னை, 1970

37 (i) சூடாமணி - 1, ப. கணேச முதலியார் (பதிப்பு), பூமகள் விலாச அச்சுக்கூடம், சென்னை, 1939.
(ii) ....2, அம்பலவாண உபாத்தியாயர் (பதிப்பு) கோல்டன் அச்சுக்கூடம், சென்னை, 1913.
(iii) ....3, ஸ்ரீ பத்மநாப விலாசம் அச்சுக்கூடம், சென்னை, 1909.
(iv) ....4, (11, 12, தொகுதிகளின் மூலமும் உரையும், நா. கதிரைவேற்பிள்ளை (பதிப்பு), விசுவாவசு வருஷம்.
(v)........................5, (பதினோராவது நிகண்டு), முனிசாமி முதலியார் (பதிப்பு), கிரோன்மணிவிலாச அச்சுக்கூடம், 1898.

38 செந்தமிழ்ச்செல்வி (திங்களிதழ்), சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், டிசம்பர், 1975.

39 செயராமன், ந. வி., சிற்றிலக்கியச் செல்வங்கள், மணிவாசகர் நூலகம், சிதம்பரம்.

40 சேதுப்பிள்ளை.ரா.பி., கிறிஸ்த்தவத் தமிழ்த்தொண்டர், எஸ்ஆர். சுப்பிரமணியபிள்ளை பப்ளிஷர்ஸ், திருநெல்வேலி, 1956.

41 சொக்கலிங்கம், இராய. (பதிப்பு), விறலிவிடுதூது, 1949

42 சொற்பிறப்பு-ஒப்பியல்தமிழ் அகராதி, தொகுதி-1, ஞானப்பிரகாச அடிகள் ஓ. எம். ஐ. யாழ்ப்பாணம் எஸ்.

43 சோமசுந்தரம் தேசிகர், தமிழ்ப்புலவர்கள் வரலாறு, 17 - ம் நூற்றாண்டு, 1951.

44 ஞானப்பிரகாசம், ஸி. மி. வீரமாமுனிவர் (கட்டுரை) பெருங்காப்பியச் சிற்றிலக்கியப் பெருந்தமிழ் நூல், சென்னைப் பல்கலைக் கழகம்.

45 தண்டியலங்காரம், கொ. இராமலிங்கத் தம்பிரான் (பதிப்பு), சைவச் சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், 1969.

46 தமிழ் இலக்கிய அகராதி, பாலூர் கண்ணப்ப முதலியார், சென்னை – 1957.

47 தமிழ்ச் சொல்லகராதி (முதற்பாகம்), கதிரைவேற்பிள்ளை, ஸி. டபிள்யூ., தமிழ்ச்சங்கம், மதுரை, 1910.

48 ... . — (இரண்டாம் பாகம்), கதிரைவேற்பிள்ளை, ஸி. டபிள்யூ, தமிழ்ச்சங்கம், மதுரை, 1912.

49 .... (மூன்றாம் பாகம்), கதிரைவேற்பிள்ளை, ஸி. டபிள்யூ, தமிழ்ச்சங்கம், மதுரை 1923.

50 தமிழ்ப்புலவர் வரிசை, 6-ஆம் தொகுதி, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1955.

51 தமிழ்ப் பேரகராதி-1, கதிரைவேற்பிள்ளை, நா. நமசிவாய முதலியார் (பதிப்பு) சென்னை, 1901.

52 .... 2, குப்புசாமி நாயுடு, எதிராஜுலு நாயுடு (வெளியீடு), சென்னை, 1906.

53 தமிழ்மொழியகராதி, நாகலிங்க முதலியார், நமசிவாய முதலியார் PV (வெளியீடு), 1918.

54 தமிழாய்வு, தொகுதி-3, (பருவ வெளியீடு) சென்னைப்பல்கலைக் கழகம், 1974.

55 திருக்காவலூர்க்கலம்பகம், ரம்போலா மாஸ்கரனேஸ் (உரை), தமிழ் இலக்கியக்கழகம், திருச்சி, 1975.

56 திருக்குறள், வரதராசனார், மு., (தெளிவுரை) சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்.

57 திருப்பாடல்கள், தமிழ் இலக்கியக் கழகம். திருச்சி. 1972.

58 (i) திவாகரம்-1, (சேந்தன் திவாகரம்), தாண்டவராய முதலியார் (பதிப்பு). சென்னை, 1923
(ii) ... ... 2, சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், 1958.

59 (i) தேம்பாவணி, 1-ஆம் காண்டம், சன்மவிராக்கினி மாதா கோவிலைச் சேர்ந்த அச்சுக்கூடம், புதுவை, 1891.
(ii) .... 1-ஆம் காண்டம், ஆரோக்கியம்பிள்ளை ரா. லே., (பதிப்பு) தமிழ் இலக்கியக்கழகம், தூத்துக்குடி, 1961.,

60 .... 2, ... –1964

61 .... 3, ... 1964.

62 தொகையகராதி, இராமசாமிப்புலவர், சு. அ., சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், 1969.

63 தொல்காப்பிய மூலம் (கையடக்கப்பதிப்பு) இளவழகனார், (குறிப்புரை) சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், 1967.

64 (i) ....எழுத்து. இளம்பூரணர் உரை, சுந்தரமூர்த்தி, கு., (பதிப்பு) திருப்பனந்தாள், 1969.

(ii) ....நச்சினார்க்கினியர் உரை, சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்.

65 .... (சொல், சேனாவரையர் (உரை) சுந்தரமூர்த்தி. கு., திருப்பனந்தாள், 1970.

66 ....பொருளதிகாரம், பேராசிரியர், (உரை) பவானந்தம் பிள்ளை, ச., (பதிப்பு) லாங்க்மென்ஸ் க்ரீன் அண்ட் கம்பெனியார் சென்னை, 1917

67 தொல்காப்பிய யாப்பு, ஆபிரகாம் அருளப்பன், (பதிப்பு) அருள் அச்சகம், பாளையங்கோட்டை, 1968

68 தொன்னூல் விளக்கம், மெக்கன்ஜி காபன் அய்யர், ஜி. (பதிப்பு), சென்னை 1891

69 நவநீதப் பட்டியல், உ.வே.சா. நூல் நிலைய வெளியீடு, கலாக்ஷேத்திரம், அடையாறு, 1944

70 நன்னூல் மூலம், (கையடக்கப்பதிப்பு) சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1962

71 i) .... சங்கர நமச்சிவாயர் உரை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1956

ii) ....மயிலைநாதர் (உரை), சாமிநாதையர் (பதிப்பு) வைஜயந்தி அச்சுக்கூடம், சென்னை 1918

72 நாகசாமி, இரா., (கட்டுரை) தினமணிசுடர் அனுபந்தம், 13-7-1975

73 நாமதீப நிகண்டு, எஸ். வையாபுரிப்பிள்ளை (பதிப்பு) சென்னைப் பல்கலைக்கழகம், 1930

74 நானார்த்த தீபிகை, அனவரத விநாயகம் பிள்ளை, (பதிப்பு) சென்னைச் சர்வகலாசாலை, 1936

75 நீதி நூற்கொத்து, வேங்கடசாமி நாட்டார், ந.மு., (உரை) சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்

76 பண்டாரம் நம்பியார், தமிழ் வளர்த்த தைரியநாதர், ஜெயகுமாரி ஸ்டோர்ஸ், நாகர்கோவில்

77 பதிற்றுப்பத்து. உ.வே.சா. (பதிப்பு), ஸ்ரீ தியாகராச விலாச வெளியீடு, சென்னை, 1957

78 பரந்தாமனார் அ, கி., மதுரை நாயக்கர் வரலாறு, பாரிநிலையம் சென்னை, 1971

79 பரந்தாமனார் அ. கி., மதுரை நாயக்கர் வரலாறு, பாரிநிலையம் சென்னை, 1971.

80 பரமார்த்த குருகதை, வீரமாமுனிவர் ஆய்வுக்கழகம், அருள் ஆனந்தர் கல்லூரி, கருமாத்தூர், 1975.

81 பன்னிருபாட்டியல், இராகவையங்கார், ரா., (பதிப்பு), தமிழ்ச் சங்கம், மதுரை, 1904.

82 பிங்கல நிகண்டு, சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், 1968.

83 புறநானூறு, மர்ரே அண்டு கம்பெனி, சென்னை, 1958.

84 பொதிகை நிகண்டு, வையாபுரிப் பிள்ளை, எஸ்., (பதிப்பு) சென்னைப் பல்கலைக்கழகம், 1934

85 பொருட்டொகை நிகண்டு, சே. ரா. சுப்பிரமணியக் கவிராயர், (பதிப்பு) தமிழ்ச்சங்கம், மதுரை.

86 பொன்னரசு, இரா., தமிழ் இலக்கிய வரலாறு, இளங்கோ இல்லம் பாளையங்கோட்டை, 1969.

87 மணிமேகலை, சாமினாதய்யர், உ, வே., (பதிப்பு) 1921.

88 முத்துச்சண்முகம், இக்காலத் தமிழ், சீயோன் பதிப்பகம், மதுரை, 9, 1967.

89 முத்துச்சாமி பிள்ளை, அ., வீரமாமுனிவர் அருளிச் செய்த திருக்காவலூர்க் கலம்பகமும் .... வீரமாமுனிவர் சரித்திரமும், 1843.

90 ரம்போலோ மாஸ்கரனேஸ், கிறித்தவத் தமிழ்த் தொண்டர்கள், தமிழ் இலக்கியக் கழகம், திருச்சி. 1970.

91 வெண்பாப்பட்டியலும் வரையறுத்த பாட்டியலும், கொ. இராமலிங்கத் தம்பிரான் (உரை). சைவசிந்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1936.

92 வைத்திய மூலிகை விரிவு அகராதி, வித்தியரத்நாகரம் பிரஸ், சென்னை, 1934.

93 ஜுபிலி தமிழ்ப் பேரகராதி, சங்கரலிங்க முதலியார், எஸ்., அரங்கசாமி நாயகர், B., (வெளியீடு) சென்னை, 1935.

(ஆ) ஆங்கிலம்

1 A Bibliography of Dravidian Linguistics, Agasthialingam, Dr. S. Sakthivel, S., Annamalai University, 1975.

2 A Dictionary Tamil and English, Evangelical Lutheran Mission Publishing House, 1933.

3 A grammar of High Tamil, Babington, B. G., (Translater), Besse, Fr. L. (Editor), St. Joseph's Industrial School Press, Trichinopoly, 1917.

4 (i) A grammar of the common dialect of the Tamulian Language called (கொடுந்தமிழ்), george William Mahon, A. M., (Translator) Christian knowledge Press, Vepery, 1848.

(ii) ……………………………………
Christopher Henry Horst (Editor) Vepery, 1806,

5 Albertin Gaur (Essay), European Missionaries and the Study of Dravidian Languages, Proceedings of the First International conference Seminar of Tamil Studies, Vol. II April, 1966.

6 Bernard Groom, A Short History of English Words, Machmillan & Co. Ltd, London, 1957.

7 Besse, S. J., Rev. L. Father Beechi St. Joseph's Industrial School Press, Trichinopoly, 1918

8 ………….. Chanda Sahibe and Beschi, 1909.

9 Caldwell, Comparative grammar of the Dravidian Languages, Madras University, 1956.

10 Chamber's Encyclopaedia, Vol. IV, George Newnes Limited, London, 1950.

11 Classical Tamil and English Dictionary, The Christian knowledge Society's Press, Vepery, 1870.

12 Encyclopaedia Britannica, Volume, 7.

13 Every man's Encyclopaedia, Volume IV, Bozman, E. F., (Editor) J. M. Dent & Sons Ltd, London 1967.

14 Feroli, S. J. D. Jesuits in Malabar, Volume II, The National Press, Bangalore, 1924.

15 Funk and Wagnulls, New Standard Dictionary of the English Language; Funk and Wagnalls Company, New York, 1952.

16 Gleason, Jr. H. A. An Introduction to Descriptive Linguistic Oxford & IBH Publishing Company, New Delhi. 1974.

17 Gnanapragasam Fr. V. M. Unpublished Ph. D Thesis, Madras University, 1965

18 Indica, (Journal) Heras Institute or Indian History and Culture Bombay, September, 1973

19 Israel, M., The System of Parts of Speech in Tamil (Essay) Proceedings of the First International conference Seminar of Tamil studies, Volume II, April, 1966.

20 Joseph, Dalhman, Missionary Pioneers and Indian Languages, The Catholic Truth Society of India, Trichinopoly. H. O. 1940.

21 Katre, S. M. Lexicography, Annamalai University, 1965.

22 Kunjunni Raja, K, Indian Theories of Meaning, the Adyar Library and Research Centre, Madras, 1969.

23 Mathews, M. M. A Survey of English Dictionaries, Oxford University Press; London, 1933.

24 Meenakehisundram, K.,, The Contribution of European Scholars Madras University, 1974.

25 .... T. P, A History of Tamil Language, Deccan college, Poona, 1965.

26 Murray, A. M. The Oxford Dictionary. (Editor), A New English Dictionary on Historical Principles, Vol. III, part I, Oxford, 1897.

27 Oxford Junior Encyclopaedia Volume, IV, Oxford, University 1957.

28 — ...., V, Oxford University, 1955.

29 Pope, Rev. G. U. A. Handbook of the ordinary dialect of the Tamil Language, Oxford at the clarenton Press, 1904.

30 Richard Chenevix Trench, D. O. English Past and Present, John N. Pasker and Son, West Strand London, 1859.

31 Sathianatha Aiyar, R, History of the Nayaks of Madurai, Oxford University Prees, 1924.

32 Dr. Sethu Pillai, R. P., works and their significance, University of Madras, 1974.

33 Subramania Aiyar, A. V., Tamil Studies, First Series, Tirunelveli 1, 1969.

34 Subramanian, S. V., Studies in Tamil Language and Literature National Research Publishing company, Trivandrum, 1973.

35 Sundara Shanmuganar, History of Tamil Lexicography, Puthuvai Painthamizh Pondicherry – 1, 1967

36 Tamil Lexicon Volume, VI, Part II, University of Madras, 1934

37 .... supplement, Part I, University of Madras, 1938

38 Thaninayagam Rev, The First Printed Books in Tamil, (Essay) Tamil Culture, July, 1958

39 The Columbia Encyclopaedia, Columbia University

40 The World Book Encyclopaedia, Field Enterprises Educational Corporation, Chicago, 1966

41 Vasudeva Sarma, R. A., Manual of Classical Sanskrit Literature, Murugavilas Jananukoola Press, Trichinopoly. 1931

42 Vincent Cronin, A Pearl to India, E P. Dutton & Company, New York, 1959

43 William Bridgewater, (Editor) The Columbia Viking Desk Encyclopaedia, Columbia University, 1964

(இ) பிரெஞ்சு

1 Julien Vinson, M., Congress Des Orientalists, Stockholm, 1889

(ஈ) லத்தீன்

1 Clavis, Evangelical Lutheran Mission Press, 8876.

2 Dictionarium Tamulico-Latinum, Nagapatam, A. N. 1852.

3 Gramatica Latino - Tamulico (கொடுந்தமிழ்இலக்கணம்) Abide Vulgaris Tamulica Linguae IniomateD M D CC XXVIII, Trangaml bariae, Typis Missions Denicr.

4 i) Vulgaris Tomulicae Linguae Dictionarium, Tamulico Latinum (Manuscript) (தமிழ்-லத்தின் பேச்சுமொழி) Archieves Sacred Heart's College, Shenbaganur

(ii) Excudebt Pakkiam Pilley, Filius Vethanayagam Pilley, Trichinopoly, 1882.

(உ) போர்த்கீஸ்

1 Thaninayagam, Xavier., (Editor), Antao De Proenca's Tamil-Portuguese Dictionary, A. D. 1679, University of Malaya, 1966

2 (i) Vulgaris Tamulicae Linguae Dictionarium Pars Secunda, mqua Lusitanis Vocibus Latine explicatis (Manuscript) (*போர்த்கீஸ்- லத்தின்-தமிழ் அகராதி*) Archieves Sacred Heart's College, Shenbaganur.

(ii) Manuscript No. A.S.5. Archieves, Sacred Heart's College, Shenbaganur.

பின்னிணைப்பு

பின்னிணைப்பு - 1

(அ) இடையியலிற் பொருள் கூறப்படும் சொற்கள்

எண்	சொல்	நூற்பா எண்	எண்	சொல்	நூற்பா எண்
1	அந்தில்	752	24	ஓ	741
2	அந்தோ	767	25	ஔ	766
3	அம்ம	761	26	கா	764
4	அரோ	764	27	குரை	757
5	அன்றே	767	28	கொல்	753
6	அன்னோ	767	29	கொன்	739
7	ஆக	765	30	சின்	759
8	ஆகல்	765	31	தஞ்சம்	751
9	ஆங்க	762	32	தில்	738
10	ஆர்	755	33	நன்றே	757
11	இக	759	34	பிற	764
12	இகும்	759	35	பிறக்கு	764
13	உம்	740	36	போ	764
14	எல்	754	37	மதி	759
15	எற்று	748	38	மற்று	747
16	என	743, 779	39	மற்றையது	749
17	எனா	774	40	மன்	737
18	என்பது	765	41	மன்ற	750
19	என்றா	774	42	மா	758
20	என்று	744, 779	43	மாது	764
21	ஏ	742, 757	44	மியா	759
22	ஒடு	779	45	மோ	759
23	ஒப்பில்போலி	769	46	யா	764

பின்னிணைப்பு—2
(ஆ) இடையியலிற் கூறப்படும் பொருள்கள்.

எண்	பொருள்	நூற்பா எண்	எண்	பொருள்	நூற்பாஎண்
1	அசைநிலை	742,747,752	15	காலம்	738,739
		756,757,753	16	குறிப்பு	743,766,767
		759,762,763	17	கேண்மின்	761
		764	18	சிறப்பு	740,741
2	அச்சம்	739	19	சுட்டியதற்கினம்	749
3	ஆக்கம்	737,740	20	தெரிநிலை	740,741
4	இசை	743,757	21	தேற்றம்	742,750
5	இடப்பொருள்	752	22	பண்பு	743
6	இலக்கம்	754	23	பயமின்மை	739
7	இறந்தபொருள்	748	24	பிரிநிலை	741,742
8	எச்சம்	740	25	பிரிவிலசைநிலை	765
9	எண்.	740,742,743.	26	பெயர்	743
		774,779	27	பெருமை	739
10	எதிர்மறை	740,741	28	முற்று	740
11	எளிமை	751	29	விழைவு	738
12	ஐயம்	740,753	30	வினா	741,742
13	ஒழியிசை	737,738,741	31	வினை	743
14	கழிவு	737	32	வினைமாற்று	747

பின்னிணைப்பு - 2

(அ) ஒருசொல் ஒருபொருள்

(சொற்கள் நூற்பா முறையினின்று மாற்றப்பெற்று அகரநிரன் முறையில் அமைக்கப்பட்டிருக்கின்றன)

சொல்	பொருள்	நூற்பா எண்.	சொல்	பொருள்	நூற்பா எண்.
அரி	ஐம்மை	839	நன்று	பெரிது	826
அமர்தல்	மேவல்	863	பசப்பு	நிறன்	791
இசைப்பு	இசை	793	பயப்பு	பயன்	790
இயைபு	புணர்ச்சி	792	பழுது	பயனின்மை	807
உகப்பு	உயர்தல்	789	புரை	உயர்வு	785
உசா	சூழ்ச்சி	853	புலம்பு	தனிமை	814
உயா	சூழ்ச்சி	852	புனிறு	ஈன்றணிமை	858
உரு	உட்கு	785	பொற்பு	பொலிவு	818
உவப்பு	உவகை	789	மல்லல்	வளன்	788
எய்யாமை	அறியாமை	825	மாதர்	காதல்	811
எறுழ்	வலி	871	மாலை	இயல்பு	796
ஏ	பெற்று	788	முரஞ்சல்	முதிர்வு	816
ஐ	வியப்பு	868	முழுது	எஞ்சாமை	809
கமம்	நிறைவு	838	முனைவு	முனிவு	869
கருவி	தொகுதி	837	யாணர்	புதிது	862
கவர்வு	விருப்பு	845	யாணு	கவின்	864
கவவு	அகத்திடுதல்	840	வம்பு	நிலையின்மை	810
கழுமு	மயக்கம்	834	வய	வலி	849
சாயல்	மென்மை	808	வயா	வேட்டைப் பெருக்கம்	854
கீர்த்தி	மிகு புகழ்	796	வறிது	சிறிது	816
சேர்	திரட்சி	846	வாள்	ஒளி	850
துயவு	அறிவின் திரிபு	851	வியல்	அகலம்	847
துவன்று	நிறைவு	815	வெம்மை	வேண்டல்	817
தெவு	கொளல்	828	வை	கூர்மை	870
தெவ்வு	பகை	829			

பின்னிணைப்பு—2

ஒரு சொல் பல பொருள்

(ஆ) (சொற்களும் பொருள்களும் அகரநிரல் முறைக்கு ஏற்ப நூற்பாமுறையினின்று மாற்றப்பெற்றிருக்கின்றன.)

சொல்	பொருள்	நூற்பா எண்.
அழுங்கல்	அரவம், இரக்கம், கேடு	832, 833
இரங்கல்	இசைப்பொருள், கழிந்தபொருள்	841, 842
ஏற்றம்	துணிவு, நினைவு	820
கடி	கரிப்பு, காப்பு, கூர்மை, சிறப்பு, புதுமை மிகுதி, அச்சம், ஐயம், முன்தேற்று, வரைவு, விரைவு, விளக்கம்	866, 867
கய	பெருமை, மென்மை	803, 805
கறுப்பு	நிறம், வெகுளி	855, 856
சிவப்பு	நிறம், வெகுளி	855, 856
செழுமை	கொழுப்பு, வளன்	835
தட	கோட்டம், பெருமை	803, 804
தா	வருத்தம், வலி	827
நனி	செறிவு, பெருமை	803, 806
நனவு	அகலம், களன்	859
படர்	உள்ளல், செலவு	823
பனை	பிழைத்தல், பெருப்பு	822
மதவு	மடன், மிகுதி, வலி, வனப்பு	861
விழுமம்	இடும்பை, சிறப்பு, சீர்மை	836
விறப்பு	செறிவு, வெரூஉ	

பின்னிணைப்பு—2

(இ) பல சொல் ஒரு பொருள்

(பொருளும் அவற்றுக்கான சொற்களும் நூற்பாமுறையில் அல்லாமல் அகர நிரன் முறைக்கு ஏற்ப மாற்றி அமைக்கப்பட்டிருக்கின்றன).,

சொற்கள்	பொருள்	நூற்பா எண்
உரும், நாம், பேம்	அச்சம்	848
அழுங்கல், கம்பலை, கலி, சும்மை	அரவம்	832
இரங்கல், இயம்பல், இலைத்தல், துவைத்தல்	இசைப்பொருட் கிளவி	841
குழவு, மழவு	இளமை	795
இன்னல், செல்லல்	இன்னாமை	787
கழிவு, கூர்ப்பு	உள்ளது சிறத்தல்	797
அலமரல், தெருமரல்	சுழற்சி	794
உறப்பு, விறப்பு, வெறிப்பு	செறிவு	830
நம்பு, மேவு	நசை	812
அதிர்வு, விதிர்ப்பு,	நடுக்கம்	799
குரு, கெழு	நிறன்	786
கமம், துவன்று	நிறைவு	815, 838
ஒழுகல், போகல், வார்தல்	நீட்டம்	800
ஆய்தல், ஓய்தல், சாஅய், நிழத்தல்	நுணுக்கம்	813
நுணங்கு, நுழைவு, நொசிவு	நுண்மை	857
வார்தல், போகல், ஒழுகல்	நெடுமை	800
ஒழுகல், போகல், வார்தல்	நேர்பு	800
சிறுமை, பையுள்	நோய்	824
ஞெமிர்தல், பாய்தல்	பரத்தல்	844
பிணை, பேண்	பெட்டி	821
கய, தட, நளி	பெருமை	903
உறு, தவ, நனி	மிகுதி	784
இலம்பாடு, ஒற்கம்	வறுமை	843
பரவு, பழிச்சு	வழுத்து	865
செழுமை, மல்லல்	வளன்	788, 835
தீர்தல், தீர்த்தல்	விடல்	801
கதழ்வு, துணைவு	விரைவு	798
கெடவரல், பண்ணை	விளையாட்டு	802
கறுப்பு, சிவப்பு	வெகுளி	855

பின்னிணைப்பு - 3

தொல்காப்பியம் – திவாகரம் ஒப்புமை நூற்பா பகுதிகளில் சில

தொல்காப்பியம் நூற்பாப் பகுதி	எண்	இயல்	திவாகரம் நூற்பாப் பகுதி	பக்கம்
அ இ உ அம்மூன்றும் சுட்டு,	31	நூன்மரபு	அ இ உ இம்மூன்றுச்சுட்டே.	120
அவைதாம், இன்னே வற்றே அத்தே அம்மே, ஒன்னே ஆனே அக்கே இக்கே, அன்னென் கிளவி உளப்படப் பிறவும், அன்ன என்ப சாரியை மொழியே.	119	புணரியல்	இன்னே வற்றே அற்றே யம்மே, ஒன்னே யானே அக்கே யிக்கே, அன்னென் கிளவி உளப்படப்பிறவும், அன்ன வென்ப சாரியை மொழியே.	120
ஆ ஏ ஓ அம்மூன்றும் வினா.	32	நூன்மரபு	ஆ ஏ ஓ இம்மூன்றும் வினா	120
ஐ ஒடு கு இன் அது கண் என்னும் அவ்வா றென்ப வேற்றுமை யுருபே.	113	புணரியல்	ஐ யொடு கு இன் அதுகண் ணென்னும், அவ்வாறென்ப சாரியை மொழியே.	120
மாற்றருங் கூற்றம் சாற்றிய பெருமையும், கழிந்தோர் ஒழிந்தோர்க்குக் காட்டிய முதுமையும்,			கழிந்தோ, ரனைவரும் ஒழிந் தோர்க்கு காட்டிய, முறையாகும் முதுமொழிக் காஞ்சி.	123
நனிமிகு சுரத்திடைக் கணவனை இழந்து, தனிமகள் புலம்பிய முது பாலையும்,	1025	புறத்திணை இயல்	நனிமிகு சுரத்திடைக் கணவனை யிழந்து, தனிமகள் புலம்பல் முது பாலையாகும்.	123
வினைபயன் மெய்உரு என்ற நான்கே, வகைபெறவந்த உவமைத் **தோற்றம்.**	1222	உவமையியல்	வினையுவமம் பயனுவமம் மெய்யுவமமுருவுமம், என நான்கு வதைத்தே உவமத்தியல்பே	102

பின்னிணைப்பு—4

(அ) தலைப்பு

Voici un fac-simile du titre qui est encadre d'un double filet noir. On remarquera a la ligne 6 une veritable coquille, quntuor pour quatuor :

THESAURUS
LINGUAE TAMULICAE
Ad Pleniorem Planioremque
SCRIPTORUM TAMULENSIUM
in Telligentiam
collegit, ac quntuor in partes digeftit

CONSTANTIUS JOSEPHUS
BESCHIUS
E' SOCIETATE JESU.
in Regno Madurensi
MISSIONARIUS
AD USUM
e jusdem Societatis
MISSIONARIORUM
(Fleuron.)
A. D
M. DCC. XXXII.

Le verso due feuillet est blanc; a la troisieme page vient la preface qui tient deux feuillets, retos et versos. et que je reproduis fidelement ci apres :

THESAURUS
Lingua Tamulicae
ad pleniorem pleaioremque
Scriptorum Tanulensium
Intelligentiam.
A D.
M. D. CC. XXXII

Praefatio.

Quamquam in omni sane disciplina primum et praecipuum sit, cujuscumque artis praecepta ordine digesta tradere; nil tamen proderit tradidisse, nisi et materiam suggeras et instrumenta, quibus ad praxim redigentur praecepta. Quod autem Pictoribus colores, militibus arma, opera extruentibus calx, saxa et hujusmodi plura, hoc plane sunt peregrino sermoni studentibus verba. Nihil propterea praestasse me crediderim cum Vulgaris simul ac elegantioris Tamulici idiomatis artes fuse scripserim, nisi et verborum copiam per Dictionaria tradam: quod profecto animadvertens in vtriusq dialectus Grammatica et Lexicon promiseram: sero nunc quidem, sed cum fauore promissa reddo, siquidem praeter vulgaris linguae Lexicon, vbi quaslibet dictiones Latine, Gallice ac Lusitane explico; hic insuper 1° Dictionarium trado, vbi anceps ac multiplex verborum omnium, prout ab elegantioris Idiomatis scriptoribus plerumque, sumuntur, vis ac potestas constabit; 2° Synonyma vbi quae nomina, potissimu ac perifrases cuique rei ab iisdem auctoribus tribuantur, expono. Praeterea, cum plura in hoc idiomate per summam expreimuntur, vt duo bona, tres mundi, quatuor arces, quinque sensus, sex sapores, septem maria, octo maria octomontes, et hujusmodi quamplura, quae passim apud auctores inveniunture;horum quoque explantionem tertio loco invenies. Tandem vt Poesi inserviant voces, quae prima tantum modo mutata littera, iisdem syllabis eodemq. sono terminautur, in vnum collectas exhibeo. Quamobrem volumen hoc Thesaurum Linquae vocare placuit. Quae omnia cum Tamulici alphabeti ordine digestasint, ac quadruplici portione confletur opus, Tamulice சதுரகராதி inscripsimus. Vt autem et indigenis inserviirent tamulica verba Tamulice explico; ita tamen, vt in explicatione communibus vulgaris linguae vocibus, quantum licuit, vsus sim: ac semper vulgari voce proponam ea, quorum synonymo ac periphrases tradere intendo : quo Europeis inutile non enim ignarus linguae vulgaris ad elegantiorem assultim transiliendo accedere, vt censeo, praesumet.

Vbi vero aequivoco locus esset, vsus sum signis ad exprimandas seu breves, seu consonantes, juxta regulam, de qua in Gramatica vulgari : praeterea vt e, et o longum, adhuc clarius pateret, placuit signum addere litterae ெ, கொம்பு dictae ita vt si simplici notetur forma, brevis sit, si inflectatur in fine, loga e. g. செடி, சேடி—கொடி கோடி et alia hoc modo.

Cum autem haec lingua, vt aiunt, mortua sit, non ex sermone hominum recenti, sed ex firmiore voluminum vetustate eruenda est

verborum vis, ac potestas, quare nullo modo hujus temporis hominibus fidendum censui, sed majori, qua potui diligentia antiquorum volumina percurri - திவகாரம் - நிகண்டு – பிங்கலந்தை – உரிச்சொல் கையாகாடி et similia; quae omnia synonyma, non Dictionaria sunt. Praeterea sapientissimos scriptorum Interpretes studiose legendos consului; et cum amanuensium negligentia plures irrepserint errores, diversa many exaratos libros inter se contuli tandem cum quamplurima Vocabula a linqua Grandoni caaccersita fuerint, et Grandonicos auctores accurate perlegens, ad veritatis normam forte irreptos errores emendare atque ex eodem aerario quamplura hauriens verba, thesaurum hunc magis odhuc locupletare conatus sum

Opus autem hoc, quod majori, qua potui, diligentia nec minori labore confectum Jesus-Christi missionaries offero; qua ipsis vtilitate futurum sit, facile noverint omenes, si paullsper animadverterint in his regionibus, monumenta Deorum, Fabularum figmenta, scientiaru praccepta, Poetarum carmina. astronomioe calculos, medicinae leges, musices, choreaeq. regulas, omnia deniq. vel ipsa prima Grammaticae rudimenta, elegantiori hoc idimomate ob antiquis scripta fuisse. Quare nil omnino de eorum diis ac fabulis, de eorum artibus et scientiis radicitus, ac sine animi haesitatione quis scire possit, si hoc idioma penitus ignoret. Tunc enim fidendum erit Indigenis, qui, et Bragmenes praecipue, ne quid ignorare se fateantur, nil haesitando turgentia verba tr-ntinantes, quae primum menti occurrunt, figmenta ex cathedra proferre non dubitant; quae passim ecrum auctores legenti, quam falsa sint, manifeste patet. Praeterea si quam rationi dissona forent, quae de Deorum fabulis narrant, ostenderem; percepta rationis vi. false ea omnio ac vulgi figmenta dicere non dubitabant; si vero eadem prolata ex antiquorum libris texta, objicerem; nec semel negare ausi, silentic, ac pudore vna mecum eadem reprobare cogebantur. Ac profecto cum Indi omnes auctoritati magis, quam rationi assentiantur; ratio non dubia, qua quilibet convinci possit, erit sane antiquorum scripta proferre. Vbi revera non inepte de Deo ac virtute locuti sunt antiqui Tamulenses. Sed qui poteris, cum eleqantius tamnlicae Idioma quo omnia prorsus scripta sunt, omnino ignores? Ex his satis aperte constant quam vtile futurum sit hoc opus, et quam necessarium Jesu-Christi missionariis, Caterisq. omnibus, qui vel Indos ab antiquo errore ad Christi fidem revocare, vel saltem antiqua ecrum figmenta funditus indegari desiderant. Deus Optimus Max., qui labore ae que ac fastidio plenum opus, ad majorem ejus gloriam inchoatum, singulari ejusdem ope and exitum perduci concessit; mentem quoque et animum exteris omnibus, quo vberrimos ejus jucundiss imosque fractus percipere velint, addere nondedignetur.

பின்னிணைப்பு - 5

பிங்கலத்தின் ஒரு சொற்பல்பொருள்வகைச் சொற்கணக்கீட்டுப் பட்டியல்

உயிர் / மெய்	அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ	ஏ	ஐ	ஒ	ஓ	ஔ	மொத்தம்
	86	37	29	2	30	4	7	9	3	6	12	...	225
க்	81	25	10	2	38	10	...	4	1	10	19	2	202
ச்	27	23	23	7	18	4	12	8	...	1	2	1	126
ஞ்	...	2	...	...	...	...	2	...	...	...	...	...	4
த்	28	14	8	2	17	7	4	8	...	8	7	...	103
ந்	18	8	7	4	1	...	2	3	...	1	...	...	44
ப்	62	23	14	5	28	12	...	3	1	10	7	...	165
ம்	40	15	2	2	19	4	2	4	1	3	1	1	94
ய்	...	3	...	...	...	2	...	...	...	...	...	...	4
வ்	37	15	25	4	...	...	8	18	3	...	...	...	110
									மொத்தச் சொற்கள்				1077

குறிப்பு : 1) எழுத்துக்கள் சொற்களின் முதனிலையைக் குறிக்கும்

2) மெய்யெழுத்துக்கள் அவ்வக்கட்டங்களின் மேலுள்ள உயிர்களோடிணைந்து மொழி முதலாகியுள்ளன.

பின்னிணைப்பு - 6

பெயரகராதிச் சொற் கணக்கீட்டுப்பட்டியல்

உயிர் / மெய்	அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ
	808+79−6	282+24−1	433+40−4	40+7−0	375+59—0	47+7—0	115+30−2
க்	635+84—2	216+27—1	199+22—1	25+9−0	317+45−0	6[illegible]+9—1	15+4—1
ச்	327+60−3	151+19—0	214+27−1	51+10—0	163+29−0	60+11−0	117+21−0
ஞ்	4+1—0	19+1—0	2+0—0	— —	— —	— —	12+0−0
த்	254+45—0	98+15—0	126+39−0	37+4−0	175+21−1	55+ 9—0	52+16—0
ந்	167+24−0	92+14—0	142+36−0	53+9−0	38+9−0	16+3−0	31+14−0
ப்	469+61—1	194+21−0	227+25—0	27+0−0	237+33−0	87+11−0	57+7−0
ம்	395+64−1	176+14—0	77+5−1	224+2−0	236+35—2	49+13−0	24+6−0
ய்	13+2—0	41+2—0	... ...	— —	11+0−0	7+0−0	--
வ்	365+34−1	158+14—1	399+40−0	48+4—0	— —	—	80+21−0

உயிர் / மெய்	ஏ	ஐ	ஒ	ஓ	ஔ	மொத்தம்
	72+14—1	24+ 3—0	81+16—0	54+0-0	3+0—0	2334+279-14
க்	40+ 4—0	46+ 1—0	105+15-0	118+14—0	22+2-0	1706+236-6
ச்	66+ 4—0	13+ 3—0	14+5-0	27+11—0	13+0—0	1216+200-4
ஞ்	1+ 0—0	......	1+0—0	— —	— —	39+2—0
த்	50+10—0	8+1—0	66+10—0	39+8—0	4+0-0	964+178-1
ந்	22+ 4-0	5+2—0	21+3-0	14+4-0	— —	601+122—0
ப்	36+ 5—0	17+0—0	101+17—0	48+2—0	13+1-0	1513+183-1
ம்	47+ 6—0	13+3-0	16+2-0	21+2—0	6+0—0	1082+152—4
ய்	......	— —	— =	9+0—0	2+0—0	83+4—1
வ்	92+15—0	51+3-0	— —	— —	2+0-0	1195+131-2
						10733 + 1487 − 33 =

மொத்தச் சொற்கள் = 12, 187

குறிப்பு : 1 கூட்டற்குறியை யடுத்திருப்பது பெயரகராதியின் பிற்சேர்க்கைப் பகுதியில் இடம்பெறும் சொற்களின் எண்ணிகையாகும்.

2 கழித்தற் குறியை யடுத்திருப்பது பெயரகராதியின் பிற்சேர்க்கைப் பகுதியில் உள்ள தள்ளல் என்னும் குறிப்பின்படி நீக்கவேண்டிய சொற்களின் எண்ணிக்கையாகும்.

3 எழுத்துக்கள் சொற்களின் முதனிலையைக் குறிக்கும்.

4 மெய்யெழுத்துக்கள் அவ்வக்கட்டங்களின் மேலுள்ள உயிர்களோடிணைந்து மொழி முதலாகியுள்ளன.

பின்னிணைப்பு-7

கடி என்னும் சொற்பொருட் பட்டியல்

எண்	தொல் காப்பியம்	நேமி நாதம்	நன்னூல்	முத்து வீரியம்	தொன்னூல் விளக்கம்	திவாக-ரம்	பிங்க-லம்	சூடா மணி	அகராதி நிகண்டு	சதுர-கராதி
1	வரைவு	வரைவு	வரைவு	—	வரைவு	வரைவு	வரைவு	வரைவு	வரைவு	—
2	கூர்மை	கூர்மை	கூர்மை	கூர்மை	கூர்மை	கூர்மை	கூர்மை	கூர்மை	கூர்மை	கூர்மை
3	காப்பு	காப்பு	காப்பு	காப்பு	காப்பு	காப்பு	காப்பு	காப்பு	காப்பு	காப்பு
4	புதுமை	புதுமை	புதுமை	—	புதுமை	புதுமை	புதுமை	அதிகம்	புதுமை	புதுமை
5	விரைவு	விரைவு	விரைவு	விரைவு	விரைவு	விரைவு	விரைவு	விரைவு	விரைவு	சீக்கிரம்
6	விளக்கம்	விளக்-கம்	விளக்கம்	விளக்கம்	விளக்கம்	விளக்கம்	விளக்-கம்	விளக்-கம்	விளக்கம்	விளக்கம்
7	மிகுதி	மிகுதி	மிகுதி	மிகுதி	மிகுதி	மிகுதி	மிகுதி	—	—	—
8	சிறப்பு	சிறப்பு	சிறப்பு	—	சிறப்பு	சிறப்பு	சிறப்பு	—	சிறப்பு	சிறப்பு
9	அச்சம்	அச்சம்	அச்சம்	—	அச்சம்	அச்சம்	அச்சம்	அச்சம்	அச்சம்	அச்சம்
10	முன்-றேற்று	முன்-றேற்று	—	—	—	—	—	—	—	—
11	ஐயம்	ஐயம்	—	—	—	ஐயம்	ஐயம்	ஐயம்	ஐயம்	—
12	கரிப்பு	கரிப்பு	கரிப்பு	—	கரிப்பு	கரிப்பு	கரிப்பு	—	கரிப்பு	கரிப்பு
13	—	—	விரை	—	விரை	—	—	—	—	—
14	—	—	ஆர்த்தல்	—	ஆர்த்தல்	—	—	—	—	—
15	—	—	மன்றல்	—	மன்றல்	—	—	—	—	—
16	—	—	—	—	—	தோற்றம்	—	—	—	—

எண்	தொல் காப்பியம்	நேமி நாதம்	நன்னூல்	முத்து வீரியம்	தொன்னூல் விளக்கம்	திவாகரம்	பிங்கலம்	சூடாமணி	அகராதி நிகண்டு	சதுரகராதி
17	—	—	—	—	—	—	மணத்தொழில்	திருமணம்	திருமணம்	புதுமணம்
18	—	—	—	—	—	—	நாற்றம்	மணம்	நாற்றம்	வாசனை
19	—	—	—	—	—	—	காலம்	காலம்	காலம்	காலம்
20	—	—	—	—	—	—	பேய்	பேய்	பேய்	பிசாசம்
21	—	—	—	—	—	—	வடிவு	—	—	—
22	—	—	—	—	—	—	—	—	கடிதல்	—
23	—	—	—	—	—	—	—	—	வாசம்	—
24	—	—	—	—	—	—	—	—	கருதும் மணம்	—
25	—	—	—	—	—	—	—	—	புணர்தல்	—
26	—	—	—	—	—	—	—	—	கண்ணிடம்	—
27	—	—	—	—	—	—	—	—	சிறுகொடி	—
28	—	—	—	—	—	—	—	—	ஐயமேற்கும்	—
29	—	—	—	—	—	—	—	—	விம்மிதம்	—
30	—	—	—	—	—	—	—	—	—	திதம்பம்
31	—	—	—	—	—	—	—	—	—	நந்தவனம்
32	—	—	—	—	—	—	—	—	—	கைப்பற்றல்
33	—	—	—	—	—	—	—	—	—	இன்பம்
34	—	—	—	—	—	—	—	—	—	ஏவல்
35	—	—	—	—	—	—	—	—	—	களிப்பு
36	—	—	—	—	—	—	—	—	—	ஒளி
37	—	—	—	—	—	—	—	—	—	பொழுது
மொத்தம்	12	12	13	5	13	12	15	13	22	20

பின்னிணைப்பு - 8

பொருளகராதிச் சொற்கணக்கீட்டுப் பட்டியல்

மெய் உயிர்	அ	ஆ	இ	ஈ	உ	ஊ	ஒ
	125+1—0	48+0-0	77+0-0	9+0-0	84+0-9	14+0-0	35+0-0
க்	129+0-0	62+0-0	19+0-0	6+0-0	87+0-0	18+0-0	5+0-0
ச்	47+0-0	18+0-0	48+0-0	7+0-0	22+0-0	14+0-0	31+0-0
ஞ்	—	2+0-0	—	—	—	—	—
த்	55+0-0	21+0-0	24+0-0	7+0-0	24+0-0	11+0-0	10+0-0
ந்	22+0-0	25+0-0	28+0-0	15+0-0	6+0-0	6+0-0	25+0-0
ப்	105+0-2	48+0-1	23+0-0	4+0-0	35+1-0	26+0-0	13+0-0
ம்	114+0-2	21+0-0	11+0-0	6+0-0	62+0-1	11+0-0	6+0-0
ய்	—	36+0-0	—	—	1+0-0	—	—
வ்	69+0-4	34+0-1	61+0-5	16+0-0	—	25+0-0	23+0-0

பின்னிணைப்பு-8 தொடர்ச்சி

பொருளகராதி சொற்கணக்கீட்டுப் பட்டியல்

உயிர் / மெய்	ஏ	ஐ	ஒ	ஓ	ஔ	மொத்தம்
	7+0 -0	4+0-0	19+0 - 0	9+0 - 0	—	430+ 1 - 0
க்	6+0-0	9+0-0	34+2-0	23+1-0	—	398+ 4 - 1
ச்	6+0-0	—	4+0-0	10+0-0	—	207+ 0 - 0
ஞ்	—	—	—	—	—	2+ 0 - 0
த்	23+0-0	3+0-0	5+0-0	19+0-0	—	202+ 1 -3
ந்	—	—	3+0-0	2+0-0	—	132+ 0 - 0
ப்	5+0-0	—	22+0-0	5+0-0	1+1-0	287+ 2 - 4
ம்	7+0-0	—	3+0-0	3+0+0	1+0-0	245+ 2 - 2
ய்	—	—	—	2+0-0	—	39+ 0 - 0
வ்	4+2-0	—	—	—	0+1-0	232+ 3 - 9
						2174+13-19 =

மொத்தச் சொற்கள் = 2,168

குறிப்பு :
1) கூட்டற்குறியை யடுத்திருப்பது பொருளகராதியின் பிற்சேர்க்கைப் பகுதியில் உள்ள சொற்களின் எண்ணிக்கையாகும்.
2) கழித்தற்குறியை யடுத்திருப்பது பொருளகராதியின் பிற்சேர்க்கைப் பகுதியில் நீக்கல் என்னும் குறிப்புக் கொண்ட சொற்களின் எண்ணிக்கையாகும்.
3) எழுத்துக்கள் சொற்களின் முதனிலையைக் குறிக்கும்.
4) மெய்யெழுத்துக்கள் அவ்வக்கட்டடங்களின் மேலுள்ள உயிர்களோடிணைந்து மொழி முதலாகியுள்ளன.

பின்னிணைப்பு 9

ஆகாயம் என்னும் சொற்பொருட் பட்டியல்

எண்	திவாகரம்	பிங்கலம்	சூடாமணி	சதுரகராதி
1	அந்தரம்	அந்தரம்	அந்தரம்	அந்தரம்
2	ஆசினி	ஆசினி	ஆசினி	ஆசினி
3	அம்பரம்	அம்பரம்	அம்பரம்	அம்பரம்
4	மங்குல்	மங்குல்	மங்குல்	மங்குல்
5	அண்டம்	அண்டம்	அண்டம்	அண்டம்
6	வானம்	வானம்	வானம்	வானம்
7	ககனம்	ககனம்	ககனம்	ககனம்
8	மீ	மீ	மீ	மீ
9	வெளி	வெளி	வெளி	வெளி
10	விண்	விண்	......	விண்
11	நாகம்	நாகம்	......	நாகம்
12	மாகம்	மாகம்	மாகம்	மாகம்
13	விசும்பு	விசும்பு	விசும்பு	விசும்பு
14	தலை	......	......	......
15	உம்பர்	உம்பர்	......	உம்பர்
16	இடம்	இடம்	......	இடம்
17	குடில்	குடில்	குடிலம்	குடிலம்
18	......	வேணி	வேணி	வேணி
19	......	கோ	கோ	......
20	......	மண்டிலம்	......	......
21	......	கம்	கம்	கம்
22	......	புடகரம்	புடகரம்	புடகரம்
23	......	வான்	......	வான்
24	......	குண்டலம்	குண்டலம்	......
25	......	உலகம்	உலகம்	உலகம்
26	......	குழை	......	......
27	......	அகலம்	......	......
28	......	வியோமம்	வியோமம்	வியோமம்
29	......	......	காயம்	காயம்
30	......	......	அநந்தம்	அநந்தம்
31	......	......	நபம்	நபம்
32	......	......	விண்டலம்	விண்டலம்
33	......	......	......	சேண்
34	......	......	......	மாதிரம்
35	......	......	......	மேல்
மொத்தம்	17	27	23	29

பின்னிணைப்பு - 10

எண்டொகைக் குறிப்படங்கிய தொல்காப்பிய நூற்பாப்பட்டியல்

தொகை எண்	தொல்காப்பிய நூற்பா எண்கள்	மொத்த இடங்கள்
1	76, 172, 984, 1523, 1526.	5
2	42, 75, 76, 85, 95, 96, 107, 117, 133, 151. 156, 188, 192, 193, 223, 195, 340, 430, 433, 438, 455, 464, 484, 486, 507, 512, 512, 513, 514, 535, 555. 585, 628, 629, 642, 643, 645, 646, 657, 660, 664, 676, 686, 704, 707, 711, 728, 732, 747, 752, 757, 774, 794, 802, 843, 882, 900, 919, 950, 957, 963, 966, 687, 999, 1006, 1017, 1022, 1025, 1039, 1042, 1053, 1055, 1060, 1061, 1061, 1092, 1092, 1126, 1142, 1142, 1171, 1227, 1250, 1263, 1316, 1323, 1342, 1351. 1364, 1374, 1311, 1384, 1388, 1396, 1404, 1430, 1432, 1454, 1522, 1526, 1555, 1577, 1589, 1593.	105
3	1, 12, 23, 31, 32, 45, 48, 62, 64, 99, 108, 136, 158, 229, 231, 328, 375, 485, 492, 509. 511, 645, 647 684, 685, 686, 691, 695, 696, 707, 709, 712, 715, 716, 725, 737, 738, 765, 784, 800, 848, 894, 900, 910, 922, 927, 949, 980, 982, 987, 1018, 1021. 1034, 1037, 1051, 1060, 1073, 1087, 1090, 1142, 1258, 1336, 1363, 1428, 1526, 1558.	67
4	63, 81, 108, 429, 511, 660, 660, 660, 661, 662, 663, 687, 739, 813 832, 886, 887, 902, 910, 975, 997, 998, 1036, 1051, 1145, 1145, 1170, 1182, 1191, 1198, 1199, 1200, 1201, 1202, 1203, 1204, 1205, 1206, 1207, 1208, 1209, 1210, 1211, 1212, 1222, 1225, 1336, 1337, 1345, 1362, 1360, 1378, 1387, 1397, 1423, 1429, 1412, 1526, 1538, 1596.	60
5	3, 44, 61, 86, 87, 482, 493, 646, 710, 742, 948, 1000, 1021, 1038, 1052, 1188, 1226, 1245, 1307, 1309, 1311, 1346, 1514, 1526, 1589,	25
6	36, 38, 92, 100, 113, 173, 406, 703, 719, 741, 743, 759, 895. 900, 910, 1006. 1021, 10 1, 1027, 1420, 1445, 1526, 1542.	23

தொகை எண்	தொல்காப்பிய நூற்பா எண்கள்	மொத்த இடங்கள்
7	4, 26, 43, 547, 688, 764. 947, 1021. 1153, 1336, 1420, 1441.	12
8	547, 596, 687, 740, 1012, 1013, 1021, 1022 1026, 1038, 1048, 1057, 1060, 1142, 1196, 1197, 1217, 1233, 1235, 1236, 1239, 1240, 1259, 1461.	24
9	82, 170, 653, 713, 1500.	5
10	541, 705, 866, 913, 1025, 1210, 1598.	7
11	78, 493.	2
12	859, 84, 883, 1014, 1018, 1050.	7
13	1009, 1061.	2
14	1002. 1004,	2
15	647, 648, 652.	3
16	1195.	1
17	1307.	1
18	540, 022, 9, 22 540, 1022	4
20	1468.	1
21	1006.	1
22	103.	1
23	693.	1
24	103.	1
26	1259.	1
30	1.	1
32	1060, 1195, 1598	3
32	103, 1092.	2
70	1307.	1
625	1307.	1
13708	1358.	1
	மொத்த இடங்கள்	370

குறிப்பு: ஒரே நூற்பா எண்ணில் பல முறை எண் தொகை இடம் பெறுமெனில் அவை பல முறை காட்டப்பட்டுள்ளன.

பின்னிணைப்பு - 11

முன்னர் வகை காட்டிப் பின்னர்த் தொகையாய் எடுத்தாண்ட சில சொற்களின் பட்டியல்

சொல்	நூற்பா எண்	வகை	பின்னர்த்தொகை-யாய் எடுத்தாண்ட நூற்பா எண்கள்
திணை-2	484	உயர்திணை, அஃறிணை	646, 659, 707
காலம்-3	685	இறப்பு, நிகழ்வு, எதிர்வு	725, 982, 1021
சொல்-4	880	இயற்சொல், திரிசொல் திசைச்சொல், வடசொல்	886, 1337.
பால்-3+2 =5	485 486	ஆடூஉ, மகடூஉ, பல்லோர்+ ஒன்று, பல.	493. 646, 710
வல்லெ முத்து-6	19	க, ச, ட, த, ப, ற	36, 38
நெட்டெ ழுத்து-7	4	ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ	43
மெய்ப் பாடு-8	1197	நகை, அழுகை, இளிவரல் மருட்கை, அச்சம், பெருமி-தம், வெகுளி, உவகை.	1240

பின்னிணைப்பு-12

ஒரே எண் தொகை பலபொருள்களைச் சுட்டுவதைக் காட்டும் நூற்பாக்கள் சிலவற்றின் பட்டியல்

எண் தொகை	சுட்டும்பொருள்	நூற்பாஎண்கள்
2	எழுத்து, புணர்நிலை, புணர்ச்சி, திணை, மொழி, எண், கிளவி, திரிசொல், பாசறை.	85, 107, 112, 117, 133, 438, 513, 832, 1022.
3	சார்பெழுத்து, எழுத்து, சுட்டு, வினா, மொழிநிலை, பால், காலம், கிளவி, நிலை, பொருள், மேலோர், வண்புகழாளர், முதற்பொருள், உறுப்பு.	12, 23, 31, 32, 45, 485, 685, 716, 1018, 1037, 1090, 1336, 1362. 1428, 1526.
4	மொழி, சொல், கிளவி, திணை-மாந்தர், பொருள், வகை, நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை, பண்பு, பெயர், நெறி, பா.	429, 511, 687, 975 1182, 1191, 1198, 1199, 1200, 1201, 1202, 1203, 1204, 1205, 1225, 1336, 1345, 1362
5	குற்றெழுத்து, பால், ஏகாரம், திணை வகை, நிலம், உள்ளுறை, உவமப்போலி, அடி, தொடை, அறிவு, பூதம்.	3, 646, 742, 948, 1021, 1052, 1188 1245, 1309, 1346. 1526, 1589.
6	வல்லெழுத்து, மெல்லெழுத்து, இடையெழுத்து, வேற்றுமையுருபு, குற்றியலுகரம், பொருள், ஔகாரம், கிளவி, முன்னிலைஅசைச்சொல், தொகைமொழி, மரபு, கூற்று நிகழ்த்துவோர், அறிவு, பிறப்பு.	19, 20. 21, 113, 406, 719, 741, 743, 750, 895, 1021, 445, 1526, 1542.

பின்னிணைப்பு - 13

எண் தொகைகளைப் பல்வகைகளாகக் கூட்டிக் காட்டும் தொல்காப்பிய நூற்பா எண்களின் பட்டியல்

எண் தொகை	கூட்டிக் காட்டும் முறை	நூற்பா எண்
4	ஈரிரண்டு	910
6	இருமூன்று, மூவிரண்டு	406, 703
8	இருநால்வகை, நாலிருவகை, நாலிரண்டு, இருநான்கு	1012, 1013, 1026, 1048.
10	ஈரைந்து	541
12	நான்மூன்று	1014
14	ஈரேழ்	1002, 1004.
16	நானான்கு	1195
18	மூவாறு, இருபாற்பட்ட ஒன்பது	22, 1022
20	நாலைந்து	1468.
21	எழுமூன்று	1006
22	இரண்டு தலையிட்ட முதலாகிருபஃது	103
23	நாலைந்தும் மூன்று தலையிட்ட	693
·24	அறுநான்கு	103
26	ஆறுதலையிட்ட அந்நான்கைந்து	1259
32	நாலெட்டு, எண்ணான்கு	1060, 1195.
33	மூன்று தலையிட்ட முப்பது	33
13, 708	ஐயீ ராயிரத் தாறைஞ் ஞூற்றொடு தொண்டுதலை யிட்ட பத்துக்குறை எழுநூற்றொன்பது.	1358

பின்னிணைப்பு - 14

திருக்குறளில் காணப்படும் எண்தொகைப் பட்டியல்

எண் தொகை	அறம்	பொருள்	காமம்	மொத்தம்
	குறட்பா எண்கள்			
2	5, 23, 374	392, 455, 581, 662, 674. 992, 1022.	1091, 1196, 1247.	13
3	41, 360.	383, 682, 684, 688, 737. 941, 952.	1985	10
4	35, 146.	382, 390, 501, 513, 605, 743, 766, 953,	......	10
5	6, 24, 25, 27 43, 126, 271, 343.	632, 675, 738, 939.	1101	13
6	......	381.	......	1
7	62, 107, 126,	835	......	4
8	9	......	......	1
மொத்தம்	19	28	5	52

பின்னிணைப்பு - 15

திவாகரம், பிங்கலம் ஆகியவற்றின் தொகைப்பொருள் ஒப்பீட்டுப் பட்டியல்

எண் தொகை	திவாகரம் எண்ணிக்கை	திவாகரம் பக்கம்	பிங்கலம் எண்ணிக்கை	பிங்கலம் நூற்பா எண்
1	1	150	3	323, 903, 1092
2	10	150	12	325, 326, 327, 328, 329, 330, 331, 332, 333, 1093, 1098, 2762.
3	17	150 151,	17	55, 105, 140, 274, 334, 335, 336, 337, 338, 339, 340, 341, 345, 350, 774, 1099, 1100.
4	12	152, 153.	26	101, 102, 308, 355, 356, 359, 360, 361, 371, 373, 374, 375, 376, 377, 378, 379, 722, 939, 1095, 1308, 1375, 1401, 1468, 1476, 2087, 2782.
5	17	154, 155.	36	56, 99, 133, 148, 149, 150 380, 381, 382, 383, 384, 385, 386, 388, 389, 390, 391, 392, 393, 394, 395, 396, 397, 398, 399, 400, 401, 493, 769, 771, 1070, 1096, 1220, 1244, 2650, 2651.
6	15	155, 156, 157.	16	301, 303, 402, 403, 404, 405, 406, 407, 408, 729, 736, 758, 759, 767, 778, 1097.
7	11	157.	20	2, 127, 128, 129, 409, 411 412, 413, 414, 452, 453, 454, 456, 585, 755, 757, 768, 776, 941, 1402.

பின்னிணைப்பு-15 (தொடர்ச்சி)

திவாகரம், பிங்கலம் ஆகியவற்றின் தொகைப்பொருள் ஒப்பீட்டுப்பட்டியல்

எண் தொகை	திவாகரம் எண்ணிக்கை	பக்கம்	பிங்கலம் எண்ணிக்கை	நூற்பா எண்
8	19	158, 158, 160	18	12, 19, 20, 21, 22, 71, 72, 98, 182, 417, 418, 419, 429, 431, 432, 435, 779, 1333,
9	6	160, 161	6	440, 450, 770, 1101, 1604, 1605.
10	6	161	3	32, 189, 781.
11	1	161	1	1448
12	2	162	1	442
15	—	—	1	140
16	—	—	1	1384
18	8	162, 163	6	92, 443, 444, 446, 447, 772
25	1	163	1	1091
28	1	163	1	1370
32	1	162	1	109
33	1	164	1	178
96	1	164	—	—
மொத்தம்	130		மொத்தம் 171	

குறிப்பு : 1 திவாகரத்தில் பல் பொருட் கூட்டத்து ஒரு பெயர்த்-தொகுதி மட்டும் கணக்கிடப்பட்டது

2 பிங்கலத்தில் அத்தொகுதி தனித்துக் காணப் படாமையின் நூலெங்கணும் தொகையும் வகையும் இணைத்து விளக்கப்படுவன மட்டும் கணக்கிடப்பட்டன.

பின்னிணைப்பு - 16

நிகண்டுகள் அகராதி கண்ட தொகைப்பொருள்களின் எண்ணிக்கை

எண் தொகை	திவாகரம்	பிங்கலம்	சூடாமணி	அகராதி
1	1	3	1	1
2	10	12	9	15
3	17	17	19	38
4	12	26	19	43
5	17	36	34	55
6	15	16	16	23
7	11	20	15	29
8	19	18	22	27
9	6	6	7	10
10	6	3	9	15
11	1	1	...	3
12	2	1	2	5
13	...	—	...	1
14	—	...	...	4
15	...	1	...	2
16	—	1	—	3
18	—	6	3	5
20	...	...	...	1
21	...	...	1	3
22	...	...	...	1
25	1	1	1	2
28	1	1	1	1
31	1	1	1	1
32	1	1	1	4
33	1	1	...	1
35	...	...	—	1
56	...	...	...	1
60	...	—	—	1
64	...	...	...	1
96	1	...	—	2
மொத்தம்	130	171	160	299

பின்னிணைப்பு - 17

அகராதி சுட்டும் அறுபத்தி நான்கு கலைகள்

எண்	கலை	எண்	கலை
1	அக்கரவிலக்கணம்	33	பூமிபரிட்சை
2	இலிகிதம்	34	சங்கிரமவிலக்கணம்
3	கணிதம்	35	மல்லயுத்தம்
4	வேதம்	36	ஆகருடணம்
5	புராணம்	37	உச்சாடனம்
6	வியாகரணம்	38	வித்துவேடணம்
7	நீதி சாத்திரம்	39	மதன சாத்திரம்
8	சோதிடசாத்திரம்	40	மோகனம்
9	தருமசாத்திரம்	41	வசிகரணம்
10	சிற்பாசாத்திரம்	42	இரசவாதம்
11	மந்திரசாத்திரம்	43	காந்தருவ வாதம்
12	சகுணசாத்திரம்	44	பைபீலவாதம்
13	சிற்ப சாத்திரம்	45	கவுத்துகவாதம்
14	வைத்தியசாத்திரம்	46	தாதுவாதம்
15	உருவசாத்திரம்	47	காருடம்
16	இதியாசம்	48	நட்டம்
17	காவியம்	49	முட்டி
18	அலங்காரம்	50	ஆகாயப்பிரவேசம்
19	மதுரபாடனம்	51	ஆகாயகமனம்
20	நாடகம்	52	பரகாயப்பிவேசம்
21	நிருத்தம்	53	அதிரிசயம்
22	சத்தப்பிரமம்	54	இந்திரசாலம்
23	வீணை	55	மயேந்திரசாலம்
24	வேணு	56	அக்கினித்தம்பம்
25	மிருதங்கம்	57	சலத்தம்பம்
26	தாளம்	58	வாயுத்தம்பம்
27	அத்திரபரிட்சை	59	திட்டித்தம்பம்
28	கனகபரிட்சை	60	வாக்குத்தம்பம்
29	இரதபரிட்சை	61	சுக்கிலத்தம்பம்
30	கசபரிட்சை	62	கன்னத்தம்பம்
31	அசுவபரிட்சை	63	கட்கத்தம்பம்
32	இரத்தினபரிட்சை	64	அவத்தைப்பிரயோகம்

பின்னிணைப்பு - 18

அடிகளாரது இலக்கணம், உரை, அகராதி ஆகியன காட்டும்
பிரபந்தப்பட்டியல்

எண்	பிரபந்தம்	தொன்னூல் விளக்க நூற்பா காட்டுவன	தொன்னூல் விளக்க உரைக் குறிப்புச் சுட்டுவன	தொகையகராதி காட்டுவன	குறிப்பு
1	காப்பியம்	√		√	
2	பெருங்காப்பியம்	”		”	
3	பிள்ளைக்கவி	”		”	
4	கலம்பகம்	”		”	
5	பரணி	”		”	
6	உலா	”		”	
7	மடல்	”		”	
8	அங்கமாலை	”		”	
9	பாதாதிகேசம்	”		”	
10	கேசாதிபாதம்	”		”	
11	சின்னப்பூ	”		”	
12	தசாங்கம்	”			அகராதியில் விடப்பட்டது
13	ஒருபாவொருபது	”		”	
14	இருபாவிருபது	”		”	
15	ஆற்றுப்படை	”		”	
16	வருக்கமாலை	”		”	
17	தானைமாலை	”		”	
18	வஞ்சிமாலை	”			அகராதியில் விடப்பட்டது
19	வாகைமாலை	”		”	
20	புகழ்ச்சிமாலை	”		”	
21	நாமமாலை	”		”	
22	செருக்களவஞ்சி	”		”	
23	வரலாற்று வஞ்சி	”		”	
24	நான்மணிமாலை	”		”	
25	விருத்த விலக்கணம்	”		”	
26	அட்டமங்கலம்	”		”	
27	நவமணிமாலை	”		”	
28	பலசந்தமாலை	”		”	
29	ஊசல்	”		”	
30	கோவை	”		”	
31	இரட்டைமாலை	”		”	
32	மணிமாலை	”		”	
33	பன்மணிமாலை	”		”	

பின்னிணைப்பு - 18 தொடர்ச்சி

எண்	பிரபந்தம்	தொன்னூல் விளக்கநூற்பா காட்டுவன	தொன்னூல் விளக்க உரைக் குறிப்புச் சுட்டுவன	தொகையகராதி காட்டுவன	குறிப்பு
34	மும்மணிக்கோவை	√		√	
35	மும்மணிமாலை	”		”	
36	இணைமணிமாலை	”		”	
37	அலங்காரபஞ்சகம்	”		”	
38	தொகைநிலைச்செய்யுள்	”		”	
39	ஐந்திணைச்செய்யுள்		√	”	
40	வருக்கக் கோவை		”	”	
41	அநுராகமாலை		”	”	
42	பெருமகிழ்ச்சிமாலை		”	”	
43	மெய்க்கீர்த்திமாலை		”	”	
44	காப்புமாலை		”	”	
45	வேனின்மாலை		”	”	
46	வசந்தமாலை		”	”	
47	தாரகைமாலை		”	”	
48	உற்பவமாலை		”	”	
49	தண்டகமாலை		”	”	
50	வீரவெட்சிமாலை		”	”	
51	வெற்றிக்கரந்தை மஞ்சரி		”	”	
52	போர்க்கெழுவஞ்சி		”	”	
53	காஞ்சிமாலை		”	”	
54	நொச்சிமாலை		”	”	
55	உழிஞைமாலை		”	”	
56	தும்பைமாலை		”	”	
57	வாதோரணமஞ்சரி		”	”	
58	எண்செய்யுள்		”	”	
59	ஒலியலந்தாதி		”	”	
60	பதிற்றந்தாதி		”	”	
61	நூற்றந்தாதி		”	”	
62	வளமடல்		”	”	
63	கண்படைநிலை		”	”	
64	துயிலெடைநிலை		”	”	
65	பெயரின்னிசை		”	”	
66	ஊரின்னிசை		”	”	
67	பெயர்நேரிசை		”	”	
68	ஊர்நேரிசை		”	”	
69	ஊர்வெண்பா		”	”	
70	விளக்குநிலை		”	”	
71	புறநிலை		”	”	
72	கடைநிலை		”	”	

பின்னிணைப்பு - 18 தொடர்ச்சி

எண்	பிரபந்தம்	தொன்னூல் விளக்க நூற்பா காட்டுவன	தொன்னூல் விளக்க உரைக் குறிப்புச் சுட்டுவன	தொகை யகராதி காட்டுவன	குறிப்பு
73	கையறுநிலை		√	√	
74	தசாங்கப்பத்து		”	”	
75	தசாங்கத்தயல்		”	”	
76	அரசன் விருத்தம்		”	”	
77	நயனப்பத்து		”	”	
78	பயோதரப்பத்து		”	”	
79	கைக்கிளை		”	”	
80	மங்கலவள்ளை		”	”	
81	தூது		”	”	
82	நாற்பது		”	”	
83	குழமகள்		”	”	
84	தாண்டகம்		”	”	
85	பதிகம்		”	”	
86	சதகம்		”	”	
87	செயவிறிவுறா உ		”	”	
88	பவனிக்காதல்		”	”	
89	குறத்திப்பாட்டு		”	”	
90	உழத்திப்பாட்டு		”	”	
91	கடிகைவெண்பா		”	”	
92	முதுகாஞ்சி		”	”	
93	இயன்மொழிவாழ்த்து		”	”	
94	பெருமங்கலம்		”	”	
95	சாதகம்			”	அகராதியிற் புதிது
96	வாயுறைவாழ்த்து			”	அகராதியிற் புதிது
97	புறநிலைவாழ்த்து			”	அகராதியிற் புதிது
98	எழுகூற்றிருக்கை			”	அகராதியிற் புதிது
	மொத்தம்	38	56	96	

பின்னிணைப்பு-19

தொல்காப்பியச் செய்யுளியல் நூற்பாக்களின் அடி விவரப்பட்டியல்

அடிவிவரம்	நூற்பா எண்கள்	மொத்தம்
ஓரடியால் ஆய நூற்பாக்கள்	1263, 1264, 1265, 1271, 1272, 1274, 1275, 1278, 1279, 1281, 1283, 1286, 1289, 1290, 1291, 1292, 1298, 1299, 1302, 1303, 1304, 1305, 1306, 1309, 1310, 1312, 1317, 1318, 1322, 1323, 1326, 1327, 1328, 1329, 1330, 1333, 1334, 1338, 1339, 1340, 1341, 1343, 1344. 1346, 1349, 1350, 1351, 1352, 1353, 1354, 1356, 1359, 1360, 1366, 1373, 1382, 1383, 1384, 1388, 1393, 1396, 1399, 1400, 1401, 1402, 1404, 1407, 1415, 1419, 1423, 1430, 1437, 1438, 1439, 1444, 1447, 1455, 1468, 1470, 1473, 1474, 1475, 1476, 1477, 1479, 1482, 1483, 1484, 1485, 1486, 1488, 1490,	92
ஈரடியால் ஆய நூற்பாக்கள்	1260, 1266, 1267, 1268, 1269, 1270, 1273, 1276, 1277, 1280, 1282, 1284, 1285, 1287, 1288, 1293, 1294, 1295, 1296, 1297, 1300, 1301, 1308, 1311, 1313, 1314, 1315, 1316, 1319, 1320, 1321, 1324, 1325, 1331, 1332, 1337, 1342, 1345, 1347, 1348, 1355, 1357, 1361, 1362, 1363, 1365, 1368, 1372, 1374, 1376, 1379, 1381, 1385, 1386, 1387, 1389, 1390, 1391, 1392, 1394, 1395, 1403, 1405, 1408, 1409, 1410, 1412, 1413, 1414, 1420, 1427, 1428, 1431, 1434, 1435, 1436, 1440, 1441, 1448, 1449, 1450, 1451, 1452, 1453, 1454, 1457, 1459, 1460, 1461, 1462, 1463, 1467, 1470, 1471, 1478, 1480, 1481, 1487, 1489, 1492, 1493, 1495, 1496,	103
இரண்டிற்கு மேற்பட்ட அடிகளைக் கொண்ட நூற்பாக்கள்	1259, 1261, 1262, 1307, 1335, 1336, 1358, 1364. 1367, 1369, 1370, 1371, 1375, 1377, 1378, 1380, 1397, 1398, 1406, 1411, 1416, 1417, 1418, 1421, 1422, 1424, 1425, 1426, 1429, 1432, 1433, 1442, 1443, 1445, 1446, 1456, 1458, 1464, 1465, 1466, 1469, 1491. 1494, 1497, 1498, 1499,	46
	மொத்த நூற்பாக்கள்	241

குறிப்பு : 1260, 1388, 1396, 1422, 1425, 1469, 1470, ஆகிய நூற்பாக்களின் தொடக்கமாக வருகின்றவற்றுள், அதுவே, அவைதாம் ஆகியவற்றைத் தனிச் சொற்களாகக் கருதி நூற்பாவின் ஓர் அடியாகக் கணக்கிடப்படவில்லை.

பின்னிணைப்பு -20

தொல்காப்பியச் செய்யுளியல் நூற்பாக்களில் அமைந்துள்ள மோனை எதுகை விவரப்பட்டியல்.

தொடை அடிவிவரம்	மோனையமைந்த நூற்பா எண்கள்	மொத்தம்	எதுகையமைந்த நூற்பா எண்கள்	மொத்தம்
ஓரடி நான்கு சீர்கட் கிடையே	1263, 1264, 1274, 1278, 1279, 1281, 1305, 1309, 1312, 1323, 1327, 1330, 1338, 1346, 1352, 1353, 1354, 1356, 1366, 1396, 1399, 1400, 1407, 1415, 1419, 1472, 1473, 1474, 1475, 1476, ,1482 1484, 1485.	34	1265, 1271, 1275, 1290, 1310, 1318, 1326, 1334, 1354, 1356, 1359, 1383, 1399, 1404, 1407, 1472. 1473, 1475, 1477, 1483, 1484, 1488.	22
ஈரடிகளின் முதற் சீர்கட் கிடையே	1260, 1277, 1294, 1301, 1357, 1431, 1436.	7	1266, 1276, 1269, 1280, 1282, 1284, 1287, 1295, 1301, 1311, 1314, 1315, 1317, 1321, 1325, 1331, 1332, 1345, 1389, 1390, 1392, 1394, 1403, 1408, 1410, 1428, 1431, 1434, 1436, 1440, 1449, 1451, 1452, 1453, 1457, 1460, 1461, 1462, 1463.	40
(அடித் தொடை)	1259, 1364, 1377, 1378, 1406, 1417, 1421, 1426, 1429, 1446, 1456, 1464, 1465, 1469, 1497, 1498.	16	1259, 1307, 1358, 1367, 1370, 1377, 1380, 1411, 1417, 1425, 1426, 1429, 1432, 1433, 1445, 1446, 1456, 1458, 1464, 1465, 1499.	21
	மொத்தம்	57	மொத்தம்	83

குறிப்பு: *1280, 1287, 1345, 1403, 1461* போன்ற நூற்பாக்களில் ண, ன, ந ஆகிய இனவெதுகைகள் அமைந்துள்ளனவாகக் கணக்கிடப்பட்டுள்ளன.

பின்னிணைப்பு - 21

தொல்காப்பிய உரியியல் நூற்பாக்களின் அடிவிவரப்பட்டியல்

அடிவிவரம்	நூற்பா எண்கள்	மொத்தம்
ஓரடி கொண்டன	785, 786, 787, 788, 789, 790, 791 792. 793, 794, 795, 796, 797, 798, 799, 801, 802, 803, 804, 805, 806, 807, 808, 809, 810, 811, 812, 814, 815, 816, 817, 818, 819, 820, 821, 822, 823, 824, 825, 826, 827, 828, 829, 830, 831, 833, 834, 835, 836, 837, 838, 839, 840, 842, 843, 844, 845, 846, 847, 849, 850, 851, 852, 853, 854, 855, 856, 857, 858, 859, 860, 861, 862, 863, 864, 865, 867, 868, 869, 870, 871, 874, 875, 876, 877, 878.	86
ஈரடிகளைக் கொண்டன	783, 784, 800, 813, 832, 841, 848, 873.	8
ஈரடிகட்கு மேற்பட்ட-வற்றைக் கொண்டன	782, 866, 872, 879.	4
	மொத்தம்	98

குறிப்பு: 784, 804, 831. 842, ஆகிய நூற்பாக்களின் தொடக்கமாக வருகின்ற அவைதாம், அவற்றுள் ஆகியவற்றைத் தனிச் சொற்களாகக் கருதி நூற்பாவின் ஓர் அடியாகக் கணக்கிடப் படவில்லை

பின்னிணைப்பு-22

தொல்காப்பிய உரியியல் நூற்பாக்களில் அடுத்தடுத்து மோனை எதுகைத் தொடைகள் அமைந்த நூற்பாப்பட்டியல்

எண்	மோனைத் தொடர்புடைய அடுத்தடுத்த நூற்பா எண்கள்	மொத்தம்	எண்	எதுகைத் தொடர்புடைய அடுத்தடுத்த நூற்பாக்கள்	மொத்தம்
1	784 - 785	2	1	785 - 786	2
2	792 - 793	2	2	787 - 788	2
3	803 - 804	2	3	796 - 797	2
4	821 - 822 - 823 - 824	4	4	798 - 799	2
5	827 - 828 - 829	3	5	800 - 801	2
6	830 - 831	2	6	802 - 803 - 804	3
7	841 - 842	2	7	821 - 822	2
8	849 - 850	2	8	830 - 831	2
9	852 - 853	2	9	833 - 834 - 835 - 836	4
10	860 - 861	2	10	840 - 841	2
11	867 - 868	2	11	851 - 852	2
			12	855 - 856	2
			13	858 - 859	2
			14	874 - 875	2
			15	877 - 878	2
	மொத்தம்	25			33

குறிப்பு : 784, 804, 831, 833, 842, ஆகிய நூற்பாக்களின் தொடக்கமாக வருகின்ற அவைதாம், அவற்றுள், ஆகியவற்றைத் தனிச்சொற்களாகக் கருதி நூற்பாவின் ஓரடியாகக் கணக்கிடப்படவில்லை.

பின்னிணைப்பு 23

பெயரகராதியிற் காணப்படுகின்ற தொல்காப்பிய இடைச்சொற்கள்

எண்	சொல்	பக்கம்	எண்	சொல்	பக்கம்
1	அந்தில்	6	19	கொள்	66
2	அந்தோ*	—	20	சின்	79
3	அம்ம	8	21	தஞ்சம்*	89
4	அரோ	10	22	தில்	96
5	அன்றே	14	23	நன்றே*	107
6	அன்னோ*	14	24	பிற	129
7	ஆங்க	14	25	பிறக்கு	129
8	இக	19	26	போ	139
9	இகும்	19	27	மதி	143
10	உம்*	28	28	மற்று	146
11	எற்று*	35	29	மற்றயது	146
12	என*	35	30	மன்	146
13	ஏ*	35	31	மன்ற	146
14	ஒடு	37	32	மா	147
15	ஓ	38	33	மாது	148
16	கா	50	34	மியா	150
17	குரை	59	35	மோ	158
18	கொல்	65	36	யா	158

குறிப்பு : *உடுஉக் குறியிடப்பட்டவைகட்குப் பொருள் மட்டும் காட்டப்படுகின்றன. பிறவற்றிற்குப் பொருள்களுடன் மேற்கோள்களும் காட்டப்படுகின்றன.

பின்னிணைப்பு - 24

திக்ஷினேரியம் தமிலிகோ ... லத்தீனத்தின் இறுதியில் காணப்படுகின்ற அடிகள் அகராதிகளினின்று தொகுக்கப்பட்ட பழமொழிகள்

எண்	பழமொழிகள்
1	கடுக்காயில் அகணி நஞ்சு, சுக்கிலே புறணி நஞ்சு
2	ஆண்டவர் அகமும் புறமும் அறிந்து இருக்கிறார்.
3	அசக சாந்தாரம் அறியேனோ?
4	ஆறின புண்ணிலும் அசறு நிற்கும்.
5	கோவில் பூனை தேவர்க்கு அஞ்சாது.
6	என்ன தின்னாலும் அதுக்குமேல் நாலு பேர் ... ஈச்சம்பழத்தைத் தின்னவே எல்லாம் அடிப்படும்.
7	வெள்ளத்துக்கு முன்னே அடிப்போட வேணும்.
8	அண்டத்துக்குள்ளது பிண்டத்துக்கும் உண்டு.
9	ஆசை அண்டாதால் அழுகையும் அண்டாது.
10	குடல் கூழ்க்கு அழ உனக்குக் கொண்டை பூவுக்கு அழுகுதோ?
11	அய்யமிட்டுண்.
12	காலிலே அறிவித்தால் அசீர்ணம் தீரும்.
13	நல்லவன் ஒருவன் நடுவே நிற்க அற்றுப்போண வழக்கே இல்லை
14	சொல்லுஞ்சொல் ஆக்கமும் கேடுந்தரும்.
15	ஈயார் தேட்டம் தீயார் கொள்வார்.
16	உப்புக்கண்டம்போக்கடித்த பாப்பாத்திபோல.
17	நான் உழைத்த உடைமை தின்றேன்.
18	முந்தினால் பின்னூற் கடுக ஓடினான்.
19	தொட்ட அளவு ஊறும் மணல் கேணி., மாந்தர்க்குப் பட்ட அளவு ஊறும் அறிவு.
20	எண்ணித் துணிந்தவன் எண்ணப்படுவான்.
21	ஆற்றில் எறிந்தாலும் அளந்தெறி.
22	எறும்பு நடக்க நடக்கக் கல்லும் குழியாகும்.
23	எறும்புந் தன் கையால் எண்சாண்.
24	சீரைத் தேடின் ஏரைத் தேடு.
25	ஐயமிடாதடைந்த பொருள் ஐயமில்லாதழியும்.
26	மர்த்தனங் குணவர்த்தனம்.
27	தரித்திரருக்கு விஷம் கோஷி?
28	சங்கோசமில்லாமல் சங்கையுமில்லை.
29	அபலமாய் வாழ்வான் சபலமாய் சாகான்.
30	பனங்காட்டு நரி சலசலப்புக் கஞ்சாது.
31	சார்பில்லார்க்கு இல்லை நிலை.
32	குற்றம் பார்க்கில் சுற்றமில்லை.
33	கிண்ட கிண்ட நரகல் நாறும்.
34	இன்பம் எண்ணார் பின்பழி நாணுவர்.
35	நாலுதலை ஒரு முகம்.
36	பிரியமில்லாத சோறு பிண்டச்சோறு.
37	கைப்பொருள் தன்னில் மெய்ப்பொருள் கல்வி.
38	தன்மேனியை மினுக்குதல் சவத்துக்கு ஒப்பனை செய்தல்.
36	பணமே ஆங்காரத்தின் மூலம்.
40	திருவாக்குக்கு மறுவாக்கில்.
41	முன்வலித்த விசையினாலேவலி யாமதும் தோணி நடக்கும்.

அகத்தியம் - 71
அகத்தியன் – 119, 121.
அகப்பொருள் விளக்கம் - 71
அகராதி நிகண்டு - 49, 50, 51, 93, 94, 100, 102, 105, 205, 208, 263, 265
அகஸ்டஸ் - 42
அகஸ்தியலிங்கம் - 237
அடியார்க்கு நல்லார் - 11
அடைக்கல நாயகி - 10, 26
அடைக்கல நாயகி மேல் வெண் கலிப்பா-21, 22, 23, 25, 213
அடைக்கலமாலை-21, 22, 23, 25, 26, 213.
அட்டகம் - 218.
அட்டமாலை - 127.
அட்டிக் - 52
அணிக்கலை - 52
அதிவீரராம பாண்டியர் - 17
அந்தோணி டி பிரோயன்ஸா - 54, 256
அபிதான சிந்தாமணி-17, 36, 279
அபிதான ரத்னமாலா - 36
அப்போல்லோனியஸ் - 42
அமரகோசம் -37
அமரஸிம்ஹா - 36
அமுதசாகரம் - 71
அம்பலக்காடு-9, 10, 54, 55, 56, 73
அய்யம்பட்டி - 9
அரிசில்கிழார் - 203
அரிஸ்டோபேன்ஸ் - 52
அருஞ்சிறப்புப் பெயரகராதி–277
அருஞ்சொற்காட்டி - 37
அருணகிரியார் - 214
அருணாசல நாவலர் - 266
அரும்பொருள் விளக்க நிகண்டு - 264, 265
அரும்பொருள் விளக்கம் - 37
அருளானந்தர் - 10
அலெக்ஸாண்டிரியா - 42, 52
அவந்தி - 250
அவிநயம் – 215
அழகர்கோயில் - 250
அனதாரி - 17
அன்னை அழுங்கல் அந்தாதி 21,22 23, 25, 26, 215
ஆகிர்த நகர் - 209.
ஆக்ஸ்போர்டு - 49.
ஆங்கிலம் - 6,7,42,43, 58,272,278.
ஆங்கிலோ - சாக்ஸன் - 36,48.
ஆங்குவெட்டில் - 64.
ஆசிரிய நிகண்டு - 71.
ஆத்திசூடி - 51.
ஆந்திரம் - 56, 229.
ஆபிரகாம் அருளப்பன் - 198.
ஆல்பர்டின் காவுர் - 240.
ஆவூர் - 39,26,27.
ஆறுமுக நாவலர் - 194, 202,
இங்கிலாந்து - 36, 48.
இசுமாத்திய சந்நியாசி - 10, 1',216
இண்டிகா - 2,240.
இத்தாலி - 1, 9, 53, 216, 219.
இந்தியக் காலக் கணக்கீடு - 251.
இந்தியமொழித் தொகை - 74.
இந்தியா - 9,37.
இந்துஸ்தானி - 28, 2 6, 272
இரத்தினச் சுருக்கம் - 24.
இரத்தினவேலு முதலியார் – 279
இரத்தினாகரம் - 37.
இராசமாணிக்கனார் - 86.
இராமச்சந்திர கவிராயர் - 75.
இராமநாதன் - 274.
இருபதாம் நூற்றாண்டு அகராதி - 272, 274

இருமொழி மாலை - 71.
இரேவண சித்தர் - 50,51, 94.
இலக்கண விளக்கம் - 71,
இலக்கணத் திரட்டு - 71.
இலக்கணத் திறவுகோல் - 22.
இலண்டன் மிசியோன் - 79.
இளநாகனார் - 171.
இளம்பூரணர் - 168.
இறையனாரகப் பொருள் - 147.
இறையனார் களவியல் - 11
இனியவை நாற்பது - 246.
இஸ்மித் - 79.
ஈக்காடு – 279.
ஈன்ஸ்டீன் – 52.
உண்மைக் கிறித்துவம் – 24.
உமறுப்புலவர் - 17,
உயர்நிலைத் தமிழ் ஆங்கில அகராதி – 277
உரிச்சொல் நிகண்டு - 264,267.
உரிச்சொற்பனுவல் - 37, 45
உரோமை - 26.
உலோச்சனார் - 203.
உவமையகராதி - 240.
உறையூர் - 250.
எகிப்து – 42
எட்டுத்தொகை – 159,171.
எண்கணிதம் - 215.
எதிராஜுலு நாயுடு - 271.
எலிஜா ஹூல் - 238.
எலிஸபெத் - 9
ஏலாக்குறிச்சி - 9, 10, 12, 26
ஐம்பெருங்காப்பியங்கள்-159
ஓட்டக்கூத்தர் - 211
ஓலீக்குறிப்பகராதி – 240
ஔவை - 16, 51, 172, 203, 245
ஔவைக்குறள் - 179
கண்ணப்பமுதலியார் - 273
கதிரைவேலன் - 269
கதிரைவேற்பிள்ளை, நா-269, 271
கதிரைவேற்பிள்ளை, டபிள்யூ- 270, 271
கத்தியம் - 215
கத்தோலிக்கர் - 12, 26
கந்தபுராணம் - 274
கம்பராமாயணம் - 71, 82, 209, 214, 274
கம்பன் - 14, 16, 214, 215, 246
கயத்தாறு - 9
கயமனார் - 171, 203
கயாதரம் 45
கருணாம்பரப்பதிகம் - 21, 22, 23, 24
கருவூர் - 148
கலித்தொகை - 171
கலைக்களஞ்சியம் - 6, 17, 19, 279
கலைக்கோட்டுத்தண்டு - 46
கவுண்ட்கொண்டல்போ - 9
கன்னடம் – 37, 93, 229
காக்கைபாடினியார் - 71
காங்கேயர்-70
காசிகாண்டம் - 71
காஞ்சி - 271
காப்பியம் - 198
காமநாயக்கன்பட்டி - 9
காரனேஷன் அகராதி - 272
கார்கம் - 12
கார்டோஸ் - 64
கால்டுவெல்-40, 224
காவிரி - 10, 18
கான்ஸ்டண்ட் - 9, 11, 13
காஸ்திக்கிளியோனே - 9
கித்தேரியம்மாள் – 26, 211
கித்தேரியம்மாள் அம்மானை - 21 22, 25, 26
கிரியர்சன் - 74
கிரீக் - 9, 34, 43, 53,216
கிரீஸ் - 36, 42
கிருஷ்ணசாமிநாயுடு - 82
கிரிஸ்டியன் பிரதாப்ட் – 275
கிரே – 277, 278
கிரேக்கம் – 42
கிரேக்க மொழிக் கருவூலம் – 52

கிரேக்கர் - 52
கீரன் - 215
கீழக்கரை - 250
குடுமியாமலை - 268
குணபத்திரர் - 49
குணபாடம் - 246
குப்புசாமி நாயுடு - 271
குமரகுருபரர்-211
குமரப்ப முதலியார்-79
குமாரசாமி புலவர்-16
குருக்கள்பட்டி-9, 27
குறள்-179, 204
குறுந்தொகை - 171
கூட்டம்-37, 45
கூளப்ப நாயக்கன்-18
கூளப்ப நாயக்கன் காதல்-17, 18.
கேம்பிரிட்ஜ்-50
கையடக்கச் சொற்கள்-37
கையடக்கச் சொற்றொகுப்பு-49
கையடனார்-71
கையாகாடி-65, 70
கொச்சி-9
கொடுந்தமிழ்-54, 199, 272, 277
கொடுந்தமிழ் இலக்கணம்-2, 5, 22, 28, 65, 67, 69, 198, 217, 218, 221, 222, 225, 227, 228, 229, 241
கொடுந்தமிழ்நாடு-148
கொழுனை-17
கொன்சால்வஸ்-24
கொன்றைவேந்தன்-51, 172
கோட்டீஸ்வரன்-272
கோபால கிருஷ்ண கோன்-272
கோவா-9, 55, 56
கோனான்குப்பம்-26
சக்திவேல்-237
சங்க அகராதி-278
சங்கர நமச்சிவாயர்-46
சங்கரலிங்க முதலியார்-272
சடகோபராமாநுஜாசாரியார் -194
சதுரகராதி- 1, 3, 4, 5, 6, 7, 13, 19, 22, 25, 41, 42, 51, 52, 54, 63, 71, 72, 73, 75, 79, 80, 82, 84, 85, 86, 93, 108, 119, 120, 121, 203, 210, 219, 237, 239, 240, 241, 242, 243, 247, 249, 250, 251, 252, 255, 256, 258, 263, 264, 265, 266, 267, 268, 269, 270, 271, 272.
சந்தாசாகிப்- 10, 11, 28, 216,
சப்தார்த்தம்-37
சமஸ்கிருதம்- 216, 217, 218, 276,
சயங்கொண்டார்- 211
சாமிநாத கவிராயர்- 263
சாமினாதபிள்ளை - 8
சாமுவேல் ஜான்ஸன்-52
சாலை கிராமம்- 250
சிங்காரவேலுமுதலியார்-279
சிதம்பர முதலியார்-92,
சிந்தாமணி-16, 18, 71, 81, 82, 172, 186, 187, 209, 246, 274
சிலப்பதிகாரம்-7, 172, 203, 211, 246
சிவகங்கை-17
சிவஞான முனிவர்-2, 39
சிவந்தெழுந்த பல்லவராயன் உலா -161
சிவபுராணம்-155
சிவப்பிரகாசர்-211
சிறுபாணாற்றுப்படை-171
சிற்பநூல்கள்-156
சின்னக்குறிப்பிடம்-2
சீகன்பால்கு-224
சுந்தரசண்முகம்-2, 237, 238
சுப்பிரதீபக்கவிராயர்-3, 15, 16, 17, 18, 19, 284
சுப்பிரமணியபிள்ளை-18
சுமேரியா-42
சுவாமிநாதபிள்ளை-265
சுன்னாகம்-16
சூசை-207, 209, 212

சூடாமணி-172
சூடாமணிநிகண்டு-2, 3,6, 46, 49, 50, 70, 84, 85, 92,94,100, 102, 109, 117, 119, 120, 121, 124, 125, 139, 140, 143, 144, 145, 146, 153, 155, 176, 183, 184, 247, 264, 265, 266, 267
செக்ஸ்டஸ் பாம்பேயூஸ்-53
செந்தமிழ்-54, 93, 199, 265, 266, 272, 277
செந்தமிழ் இலக்கணம்-15, 18,19, 22, 25, 28, 67, 199, 214, 225
செந்தமிழ்த்தேசிகர்-10, 11
செந்தமிழ்நாடு-148
செம்மொழிஅகராதி-37
செயராமன்-161
சென்னை-2, 74, 79, 265, 266,278
சென்னைச்சங்கம்-75
சென்னைப்பல்கலைக் கழக அகராதி-74, 84, 85, 101
சேசுசபை-8, 9, 15, 55, 56, 63, 67
சேசுசமயம்-66
சேந்தன்-46,93
சேனாவரையர்-89
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்-7, 16
சைனா-42
சொக்கலிங்கம் 17, 18
சொற்கருவூலம் 37
சொற்கிடங்கு 37
சொற்பிறப்பகராதி 240
சொற்பிறப்பு ஒப்பியல் அகராதி- 278
சொற்றேன் கூடு - 37.
சொற்றொகுதி - 37.
சொற்றோட்டம் - 37.
ஞான அஞ்சனாயா – 24.
ஞானக்கண்ணாடி 21, 22, 24
ஞானம் உணர்தல் 21, 22, 24
ஞானம் உணர்த்துதல் 24
ஞானப்பிரகாசம் 1, 85, 211, 278
ஞான முயற்சி 24
ஞான விளக்கம் 24
டிபோர்ஸிஸ் 12
டெய்லர் 276
டொமினிக் மைடைரா 13
தஞ்சாவூர் 9, 28
தண்டகம் 218
தண்டி 149
தண்டியலங்காரம் 71,149,150,206
தத்துவ போதகர் 10, 28
தமிழகம் 250
தமிழ் 43. 55, 65, 152, 216, 229, 256, 257, 277
தமிழ் அகராதிக்கலை 2, 267
தமிழ் ஆங்கில அகராதி 239, 270, 275, 276
தமிழ் இலக்கிய அகராதி 273
தமிழ்ச்சங்கம் 3, 11, 12, 13, 14, 75, 93, 271, 284,
தமிழ்ச்சொல்லகராதி 271
தமிழ் பிரெஞ்சு அகராதி 23, 237 239, 277
தமிழ்ப்புலவர்கள் வரலாறு 17
தமிழ்ப்புலவர் சரித்திரம் 16
தமிழ்ப்பேரகராதி 270, 271, 272,
தமிழ் போர்த்கீஸ் அகராதி 54, 256
தமிழ்மொழிக்களஞ்சியம் 63, 64
தமிழ் மொழியகராதி 266, 271
தமிழ் லத்தீன் அகராதி 237, 241, 278
தமிழ் லத்தீன் பேச்சுமொழியகராதி 5, 6, 22, 24, 25. 205, 237, 239, 240, 241 242, 245, 247, 250, 251, 252, 256, 258
தமிழ் லெக்ஸிகன் 278
தமிழ்வளர்ச்சிக்கழகம் 279
தரங்கம்பாடி 12, 13, 26, 53, 57, 198, 250,
தனிநாயகம் அடிகள் 26, 54

தாண்டவராயமுதலியார் 75, 79
தாவிதன் சங்கீதம் 25
திக்ஷினேரியம் தமுலிகோ லத்தீனம் 277
திரிகடுகம் 71, 127,
திருக்கடவூர் நாட்டுத்திருச் சபைக்குஎழுதிய நிருபம் 21, 22
திருக்காவலூர் 3, 26, 212
திருக்காவலூர்க் கலம்பகம் 21, 22, 25, 26, 212
திருக்குறள் 35, 71, 105, 109, 128, 137, 172, 216, 244, 245, 257
திருக்குறள் மொழிபெயர்ப்பு 21, 22, 28
திருச்சபைக் கணிதம் 21, 22, 25,
திருச்சபை பேதகம் 26
திருச்சிராப்பள்ளி 3, 9, 250
திருச்சிற்றம்பலய்யர் 75
திருச்சீரலைவாய் 154
திருத்தக்க தேவர் 14
திருநெல்வேலி 2, 9, 250, 265
திருப்பதி 250
திருப்பாடல்கள் 23
திருப்பாவணி 24
திருமங்கலம் 17
திருமலைநாயக்கர் 17, 18
திருமுருகாற்றுப்படை 209
திருவரங்கம் 18
திருவள்ளுவர் 204, 206
திருவனந்தபுரம் 250
திருவாவினன்குடி 154
திருவாழங்கோடு 250
திரு. வி. கலியாணசுந்தரனார் 269
திருவிளையாடற் புராணம் 17
திவாகரமுனிவர் 70, 138
திவாகரம் 3, 46, 47, 48, 49, 50, 51, 65, 70, 90, 91, 92, 93, 100, 101, 102, 105, 107, 109, 116, 117, 119, 120, 121, 124, 125, 137, 138, 139, 140, 141, 143, 144, 145, 146, 153, 155, 160, 161, 162, 172, 173, 174, 209, 247, 264, 265, 267
திறவுகோல் 199
தினமணிசுடர் 2
தீபிகை 37
தூத்துக்குடி 9, 10
தூயசவேரியார் 55, 57
தெலுங்கு 37, 56, 93, 216
தேசியநூலகம் 63, 78,
தேம்பாமாலை 24
தேம்பாவணி 10, 11, 12, 13, 14, 16, 21, 22, 25, 26, 42, 188, 207, 208, 209, 210, 211, 214
தேவமாதாஅந்தாதி 21, 22, 23,
தேவாரப்பதிகம் 21, 22, 23, 24
தைரியநாதசாமி 13
தைரியநாதர் 10, 11, 12, 14
தைரியநாதன் 73
தொல்காப்பியம் 4, 5, 6, 7, 35, 37, 38, 41, 43, 45, 46, 48, 71, 89, 97, 99, 100, 101, 105, 115, 123, 126, 137, 151, 168, 169, 171, 192, 199, 200, 202, 219, 269, 279
தொல்காப்பியர் 38, 40, 41, 43, 109, 222, 226
தொன்னூல்விளக்கம் 14, 22, 71, 94, 95, 97, 147, 148, 149, 151, 159, 160, 161, 178, 181, 182, 192, 193, 195 196, 198, 199, 200, 204, 205, 206 209, 222, 226
த்ரிக்ண்டசேஷா 36
நச்சினார்க்கினியர் 38, 45, 46, 169 193, 194
நடராச சுவாமி 92
நத்தத்தனார் 71
நயநப்ப முதலியார் 92
நல்லூர் ஞானப்பிரகாச சாமிகள் 74
நவகாண்டம் 22, 246

நவநீதப்பாட்டியல் 160, 162
நற்றிணை 171
நன்னூலார் 226
நன்னூல் 38, 45, 46, 71, 89, 97, 99, 147, 192, 199, 200, 202, 208
நாகப்பட்டினம் 277
நாகலிங்கமுதலியார் 271
நாடகத்தமிழ் 152, 153
நாமகூளப்ப நாயக்கன் 18
நாமசங்கரகம் 37
நாமசேசம் 37
நாமதீபம் 37, 267
நர்மலிங்கானு சாசன 36
நாயக்கர் வரலாறு 17
நாலடியார் 71
நானார்த்த சங்கிரஹ 51
நானார்த்த தீபிகை 37, 265, 266, 278
நானார்த்தானவ சங்க்ஷேப 51
நிகண்டு 4, 5. 37, 41, 45, 46, 47, 48, 50, 51, 56, 84, 85, 90, 93, 94, 99, 99, 100, 101, 105, 106, 107, 109, 115, 116, 117, 118, 119, 120, 124, 125, 137, 140, 141, 143, 147, 148, 149, 156, 172, 176, 177, 178, 183, 209, 229, 247, 256, 263, 265, 267, 268, 269
நியாய சூடாமணி 72
நேமிநாதம் 71
நைடதம் 71
நைட் 270
பஞ்சபாண்டவர் 127
படிக்காசுப்புலவர் 161
பண்டாரம் நம்பியார் 86
பண்டித சந்திரசேகரர் 270
பதிகம் 25
பதினான்காம்லூயி 56
பதினெண்கீழ்க் கணக்கு 159, 171
பதினெண்சித்தர்கள் 273
பதினோராவது நிகண்டு 92, 266
பத்ததி 215
பத்துப்பாட்டு 159, 171
பம்பாய் 240
பரஞ்சோதி முனிவர் 17
பரதம் 215
பரந்தாமனார் 17, 18
பரமார்த்தகுருகதை 19, 21, 22, 25, 28, 54
பரிபாடல் 171
பலபட்டடைச் சொக்கனாதர் 18
பல்காயனார் 71, 178
பல்தேயுஸ் 224
பல்பொருள் சூடாமணி 37
பவணந்தியார் 39, 41
பழமொழியகராதி 240
பழனி 17
பழையனூர் 17
பன்னிருபாட்டியல் 162
பாகதம் 217
பாட்டியல் 71
பாண்டிச்சேரி 2, 64, 73
பாண்டித்துரைத்தேவர் 12
பாண்டியர் 135
பாரசீகம் 28
பாரதம் 71
பாரிஸ் 63, 64
பாளையங்கோட்டை 3
பாஷார்னவம் 37
பிங்கலந்தை 65, 70, 102, 209, 265
பிங்கலம் 3, 45, 48, 49, 70, 91 94, 100, 101, 105, 109, 117, 119, 120, 121, 124, 125, 126, 138, 139, 140, 141, 143, 144, 146, 153, 154, 155, 156, 160, 247, 264, 267, 284.
பிடகம் — 215.
பிமெண்டல் — 56.
பிரபந்தம் — 158, 159, 160, 161

பிராஞ்சிஸ் - உவைத்து - எல்லிச துரை 75
பிராஸ்பர் குயுஸியாணி 12, 57
பிரிட்டீஷ் பொருட்காட்சியகம் 240, 241,
பிரெஞ்ச் 3, 9, 42, 53, 56, 64, 68, 216, 217, 229, 239, 241, 277,
பிரெஞ்ச் அகெடமி 42, 53, 56,
பிரெடரிக் வான்ஷ்லெகெல் 55
பீட்டர் லாலேன் 56
பீட்டர் லெவின்ஸ் 49
புதிய நுட்பம் 72
புதுக்கோட்டை 268
புதுச்சேரி 10
புதுப்பட்டி 9
புத்தன் 125
புருஷோத்தும் தேவா 36
புறநானூறு 171
புறப்பொருள்வெண்பாமாலை 71
புன்னைக்காயல் 250
பூண்டி 250
பூஜோ 3
பெட்ராண்ட் 15
பெண்பே 57
பெய் 277
பெரிய நாயகி 26
பெரியபுராணம் 209
பெருங்கதை 172
பெருஞ்சித்திரனார் 203
பெரோலி 86
பெர்ஷியன் 216
பெஸ் 1, 23, 24, 28, 74, 237, 238, 240, 246, 253,
பெஸ்கி 1, 3, 8, 9, 11, 12, 13, 216, 277, 284, 285
பேதகமறுத்தல் 21, 22, 25, 26,
பேரகத்தியம் 71
பேராசிரியர் 203, 204
பொதிகை நிகண்டு 263, 264
பொதுத்தமிழ் அகராதி 23, 238
பொத்தியார் 203
பொருட்டொகை நிகண்டு 268
பொருத்தவியல் 71
பொன்மலை 250
பொன்னம்பல முதலியார் 80
போப்பு 273
போர்த்கீஸ் 3, 53, 54, 64 68, 216, 217, 222, 229, 241, 254, 255, 256, 272
போர்த்கீஸ் - தமிழ் - லத்தின் - அகராதி - 237
போர்த்கீஸ் - லத்தின் - தமிழ் அகராதி 5, 6, 9, 22, 25, 237, 238, 251, 252, 258
போலோக்னா 9
மக்டாலென் 49
மங்கா 36
மங்கோஸா 36
மணப்பாடு 10
மணிமேகலை 147, 172, 211
மணிலா 26
மண்டலபுருடர் 49, 177, 178
மதுரை 9, 11, 12, 13, 14, 15, 17, 63, 74, 240, 271, 272
மதுரைக்குமரனார் 203
மயிலைநாதர் 45, 159
மயேச்சுரர்யாப்பு 71
மரியா 209, 212
மருதயாறு 148
மருவூர் 148
மலபார் 55, 56
மலையடிப்பட்டி 250
மலையாளம் 37, 55, 56
மலேயா பல்கலைக்கழகம் 54
மறவநாடு 9, 10
மறைமலையடிகள் 2
மஹேஸ்வரா 36
மாகோன் 216
மாக்ஸ்முல்லர் 216
மார்க்குஸ் டெரின்டஸ் வேரோ 52
மானிப்பாய் அகராதி 277
மிருதி 214

மீனாட்சிசுந்தரம், கா - 2.85, 237, 238
மீனாட்சிசுந்தரம், தெ. பொ 221.
முசெது 277
முத்துசாமி பிள்ளை 8, 13, 84, 238 265
முத்து வீரியம் 100
முல்லைப்பாட்டு 171, 209
முனிசாமி முதலியார் 93,
மூதுரை 246.
மெய்ம்மறையாசாரியனார் 72
மேகனாதி எண்ணை 24
மைலாப்பூர் 198
யாதவப்பிரகாஸா 36
யாப்பருங்கலக் காரிகை 71
யாப்பருங்கலம் 71
யாப்பருங்கலவிருத்தி 172
யாழ்ப்பாண அகராதி 270, 272, 277, 278
யாழ்ப்பாணம் 24, 250, 278,
யாஸ்கா 36
யூசோப் கதைகள் 19
யூவனல் 19
ரம்போலோமாஸ்கரனேஸ்86, 212
ராச்சால் 55
ராட்லர் 276
ராட்லர் அகராதி 276, 277, 278
ராபர்ட் ஜன்ஸ்டீன் 53
ராபர்ட்காட்ரே 52
ராபர்ட் டி நோபிலி 9, 11, 53. 54, 250
ராமனாதபுரம் 250
ரிச்சர்டு கிளார்க் 75
ரேவண்ணா 53
ரோம் 36, 55
லண்டன்–250
லத்தீன்-3, 4, 9, 19, 36, 42, 43, 48, 52, 53, 54,63, 64, 68,199, 216, 217, 229, 241, 245, 254
லத்தீன் - தமிழ் - அகராதி 23, 238 237
லத்தீன் பேச்சுமொழி அகராதி 237 238
லாரி - 277
லிஸ்பன் - 9
லூத்தரன்சபை - 12, 26
லூத்தரினத்தியல்பு - 21, 22, 25 26,
லூயிஸ்நோபல் டி போர்சீஸ் - 241 256
லோக்மன் - 15
வடசொற்கள் -186, 195, 265, 267
வடமொழி - 55, 56, 69, 73, 107, 127, 196, 197, 218, 220, 229
வடுகர்பட்டி - 10
வட்டாரவழக்கு அகராதி-237,238
வண்ணக்கலைகள் - 21, 22
வண்ணம் - 22, 25, 214
வந்தவாசி - 250
வாமன்கதை - 21, 22, 25
வாமன் சரித்திரம் - 251
வான்மீகி-16,218
விசயரங்க சொக்கநாதர் - 17
விசாகப் பெருமாளய்யர் - 80
விசுவாமித்திரன் - 142
விட்டுணுபுராணம்155
வியாசர் 16, 218
விரிவகராதி - 270
விரிவுநிகண்டு - 266
விருத்தப்பாட்டியல் - 71
விருத்தாச்சலம் - 26
வில்சன் - 52
விறலிவிடுதூது - 17, 18, 19
வின்சான் - 63, 72, 73, 74,78, 238
வின்ஸ்லோ - 43, 278
விஸ்வப்ரகாஸா - 36
வீரஆரியன் – 10, 11, 3, 14, 73
வீரசோழியம் - 71
வீரமாமுனிவர் - 3, 10, 11, 13, 14

19, 20, 23, 28, 73, 75,79,80,82,
84, 86, 273, 284
வீரமெழுகு - 24
வீரவநல்லூர்-266
வெகாபுலேரியா டிக்ஸி அக்கடமி
டில்லாக்ருஸ்கா - 42
வெங்கடாசலமுதலியார் 276
வெண்பாப்பட்டியல் - 71, 160, 162
வெரியூஸ் பிளாக்கஸ் - 52
வெளிக்காட்டி – 37
வெனிஸ் - 10
வேங்கடசாமி - 24
வேதநாயகர் - 23
வேதவிளக்கம் -21, 22, 24,25,26
வேதாங்கநிருக்தா - 36
வேதியரொழுக்கம் -21, 22, 25,
238
வைகை - 148
வைத்தியமூலிகை விரிவகராதி-273
274
வையாபுரிப் பிள்ளை-2, 84, 173,
174, 178
வைஜயந்தி - 36
ஜான்ஸன் - 7
ஜூபிலி தமிழ்ப்பேரகராதி 269,272
247
ஜூலியஸ் போலக்ன் - 52
ஜெர்மன் - 42, 43
ஜோசப் - 9, 11, 28, 63, 84
ஜோஹன் பிலிப் பேபிரியுஸ் - 275,
278
ஸ்பானிஷ் - 216, 217
ஸ்பெயின், 209
ஸ்மித் - 74
ஷீல்ஸ் - 24
ஷெண்பகனூர் - 2, 3
ஹலாயுதா - 36
ஹாங்ஸ்லெண்டன் - 56
ஹியாசித்த் - 3
ஹீப்ரு - 53, 216, 217, 229
ஹீராஸ் - 240
ஹென்றி ஈன்ஸ்டீன் - 53
ஹென்றிக்கஸ் - 55
ஹென்றிச் ரோத் - 55
ஹேமச்சந்திரா - 36
ஹோமரிக் லெக்ஸிகன் - 42